UNIVERSAL
LIBRARY
OU_208099
UNIVERSAL
LIBRARY

தொல்காப்பியம்

எழுத்ததிகாரம்

நச்சினார்க்கினியம்

கழக வெளியீடு - கஎ

தொல்காப்பியம்

எழுத்ததிகாரம்

★

நச்சினார்க்கினியர்

உரை

★

புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள் B.O L.

அடிக்குறிப்புடன்

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.

Copy-right

PUBLISHED BY
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.
TIRUNELVELI & MADRAS

May 1944.

Printed at the Rajen Electric Press, Madras.

பதிப்புரை

கல்வி, இருவகைப்படும்; ஒன்று, எண்ணும் ஆற்றலைப் பெறுதல்; மற்றொன்று பல்வேறு கருத்துக்களை அறிந்துகொள்ளுதல். மக்கட்குத் தாய்மொழியே இயல்பான கருவியாதலால், இவ் விருவகைக் கல்விக்கும் எளிதாக அது பயன்படும்; மேலும், எண்ணும் ஆற்றலைப் பெருக்குதற்குத் தாய்மொழிக் கல்வியே சிறப்பின் உரித்தாகின்றது. அதனிலும், இலக்கணப் பயிற்சியால் அவ் வன்மை மிகச் செழித்து நுணுகிக் கொழுந்தோடி வளர்கின்றது.

தமிழ்மொழியில் இலக்கண அமைப்பு இணையற்ற ஆற்றலோடும் அழகுகளோடும் அமைந்திருக்கின்றது. தமிழ்மக்கள் அவ்வகையில் தவப்பேறுடையரென்றே கூறுதல் வேண்டும். இனிய இயற்கை நெறிகளோடு தமிழ் இலக்கணத்தைத் திறப்பட விளக்கும முழுமுதல் நூல் தமிழில் தொல்காப்பியமாகும். இஃதொன்றே பழமைமையும் முதன்மையும் வாய்ந்து, சிக்கலின்றித் தெளிந்து, ஐந்திலக்கணமும் விளக்கும் அரும்பெரு நூலாகத் திகழ்கின்றது. இதனைப் பன்முறை கற்று ஆழ்ந்து பயில்வோர், எண்ணும் ஆற்றலும், பல்வேறு கருத்துக்களை அறிந்துகொள்ளுதலுமன்றி, மெய்யுணர்வுப்பேறும் எளிதின் எய்திச் சான்றோராவர்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களாக வகுக்கப்பட்டுள்ளது. இந்நூலின் நுட்பநிட்பம், பெருமை, பயன் முதலியவற்றாலேயே இதற்கு உரையாசிரியன்மாரும் பலர் அமைந்தனர் அவர் பலர் எழுதிய உரையுள்ளும், எழுத்ததிகாரத்திற்கு நச்சினார்க்கினியருரையும, சொல்லதிகாரத்திற்குச் சேனாவரையருரையும் பொருளதிகாரத்தின் இறுதி நான்கியல்களுக்குப் பேராசிரியருரையும் பெருவழக்காகப் பயிலப்பட்டு வருகின்றன. இவ்வருமை கருதிக் கழகத்தில் இதற்குமுன், தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியருரையுடன் இருமுறை பதிக்கப்பெற்று வெளிவந்திருக்கின்றது. இப்போது மூன்றும் பதிப்பாக இதனை, உரிய தலைப்புகள் உட்பிரிவுகள் முதலியவற்றுடன் மிகத் திருத்தமாக வெளியிடுகின்றனம்.

பயில்வோரது ஆர்வத்துக்கு ஏற்ற உதவியாயிருக்கும்படி, இப் பதிப்பு, மேலும் சில நலன்களைப் பெற்றுள்ளது. தொல் காப்பிய நூற்பாக்களிலும், அவற்றிற்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரைகளிலும் மாணாக்கர் நன்முக விளக்கம் பெற வேண்டிய பகுதி களின்மேல், தக்க ஆராய்ச்சிக் குறிப்புக்களும் விளக்கங்களும் மேற்கோளிடங்களுடன், அவ்வப்பக்கத்தின் அடிக்குறிப்பாகத் தெளிவாய்த் தரப்பட்டிருக்கின்றன. நூலின் இறுதியில், 'குற்றியலுகரம் உயிரே' என்னும் பொருள்மேல் ஓர் அரிய ஆராய்ச்சி நிகழ்த்தப்பட்டிருக்கின்றது. அன்றியும், நச்சினார் கினியர், தமக்கு முன் தொல்காப்பியம் முழுவதற்கும் உரையெழுதி உரையாசிரியர் என்னுஞ் சிறப்புப்பெயரால் வழங்கப்பெற்று வரும் 'இளம்பூரண அடிக'ளோடு கருத்து மாறுகொள்ளும் இடங்கள் முழுவதும், நூற்பாக்களோடும் அவரவருரைகளோடும் தொகுத்துச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவையனைத்தும் இப் பதிப்புக்கு மிக்க உழைப்போடும் அன்போடும் எழுதிச் சேர்த் துதவிய ஆசிரியர், **வித்துவான் ஞா. தேவநேயப் பாவாணர் பி.ஓ.எல். அவர்களாவர்.** அவர்கள் அரிய செயலுக்குக் கழகம் தன் அக மருவிய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது.

இதன் முற்பதிப்புகளைப் போலவே, முகப்பில், பேராசிரியர் **திருமிகு கா. சுப்பிரமணிய பிள்ளை எம் ஏ., எம்.எல்.** அவர்களது அரிய ஆராய்ச்சி முன்னுரை முதலியனவும் இப் பதிப்பில் உள்ளன. ஆராய்ச்சியாளர்க்கும் மாணவர்க்கும் இப் பதிப்பு தகுதியாகப் பயன்படுமென்று நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

			பக்கம்
க.	முகவுரை	...	1
உ.	சிறப்புப் பாயிரம்	...	க
ங.	நூன் மரபு	...	கங
ச.	மொழி மரபு	...	ஙசு
ஞ.	பிறப்பியல்	...	சுo
சு.	புணரியல்	...	சுஅ
எ.	தொகை மரபு	...	சுஉ
அ.	உருபியல்	...	ககச
கூ.	உயிர்மயங்கியல்	...	கஉகூ
கo.	புள்ளிமயங்கியல்	...	களஉ
கக.	குற்றியலுகரப் புணரியல்	...	உஉo
கஉ.	நாற்பா முதற்குறிப்பு அகரவரிசை	...	1
கங.	அருஞ்சொற்பொருள் விளக்கம்	..	7
கச.	குற்றியலுகரம் உயிரீறே	...	12
கஞ.	நச்சினார்க்கினியர் இளம்பூரணரொடு மாறுபடுப் இடங்கள்	...	19

திருச்சிற்றம்பலம்

தமிழ்ப் பேராசிரியர்

திருவாளர் கா. சுப்பிரமணிய பிள்ளை

எம். ஏ., எம். எல்., அட்வகேட்

அவர்கள் எழுதிய

முகவுரை

தொல்காப்பியம் என்னும் இவ்வியல நூலானது தமிழ் நூல்கள் யாவற்றுள்ளும் பழமையானதாய்த் தமிழிலக்கண முழுமுதனூலாக அமைந்துள்ளது. தமிழ் நூல்கள் யாவற்றினும் தொன்மையாலுஞ் சிறப்பாலும் முதன்மைபெற்ற இந்நூல் இலக்கண நூலாக அமைந்தது யாவரும் உற்றுநோக்கத் தக்கதே. இதற்கு முற்பட்ட இலக்கியங்கள் இப்பொழுது வெளிவரவில்லை. புறநானூறு முதலியவற்றில் சிறுசில பாட்டுகளே இந்நூற்கு முற்பட்டனவாகக் கருதக் காரணமுண்டு. இதனாகு முன்னேயே அளவற்ற இயல் இசை நாடக நூல்கள் தமிழில் இருந்தன வென்பதை இந்நூலே நன்கு விளக்குகிறது. இந்நூற சிறப்புப் பாயிரத்தில் தமிழ் நிலத்துச் செய்யுள் வழக்கும் உலக வழக்குமாய்ந்து இந்நூல் செய்யப்பட்டதென்று கூறப்படுதலால் செய்யுள் வழக்கை அறிதற்குரிய நூல்கள் பல இருந்தன வென்பது தெளிவே. 'முந்துநூல் கண்டு' என்றமையானும் அது விளங்கும். செய்யுளியலில் தமிழ் நூல்களே ஆசிரியர் எழுவகையாகப் பகுத்து ஓதுதலினாலும் அது தெளியப்படும். அவ்வெழு வகையுள் நிறைமொழி மாந்தரது மறைமொழியையும் ஒன்றாக அவர் கொண்டமையானும் "அளவிற் கோடல் அந்தணர் மறைத்தே" என்று எழுத்ததிகாரம் 400-வது சூத்திரத்தில் அவர் கூறியதானும், மறைமொழிகளடங்கிய மறை என்னும் நூல்வகை தமிழில இருந்ததென்பது இனிது விளங்கும். "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்" என்பதனாலே நாடகநூல்கள் பல விருந்தன வென்பதுவிளங்கும்.'இசையொடு சிவணிய நாற்பான் மறைய என்மனார் புலவர்' என்றதனாலே இசை நூல்கள் அக்காலத்திற்கு முன்னே நன்கு வழங்கின வென்பது விளங்கும். தமது நூலுள் ஒவ்வொரு பகுதியினும் தமிழ் வழக்கினை விதந்தோதுமிடங்களில் 'என்மனார் புலவர்' என்று சுட்டுதலால் புலவர்கள் பலர் தமக்குமுன் இயல்நூல் இயற்றியுள்ளார் என்பதையும் அவர் விளக்கக் கருதினர் என்பது வெளிப்படை.

'முந்துநூல்' ஆய்ந்து இந்நூல் செய்தாரென்று சிறப்புப்பாயிரத்துள் கூறப்பட்டுள்ளது. 'முந்துநூல்' இன்னவென்று சுட்டுதற்

குரிய அகச்சான்று யாதும இல்லை. ஐந்திரத்தின் ஆராய்ச்சி இந் நூலாசிரியர்க்கு எவ்வாறு பயன்பட்டதென்று காட்டுதற்கும நூலுள் அகச்சான்று யாதும் இல்லை. 'முந்துநூல்' என்றது அகத்தி யத்தை என்பதற்கு,

> "ஓதுப் பெருமை யகத்திய னென்னு
> மருந்தவ முனிவ னுக்கிய முதனூல்
> பொருந்தக் கற்றுப் புலைதபு வுணர்ந்தோர்
> நல்லிசை நிறுத்த தொல்காப்பியனும்"

எனப் பன்னிருபடலத்துப் பாயிரச் சூத்திரத்துட் காணப்படுவதே சான்றாகும்.

> "கூறிய குன்றினு முதனூல் கூட்டிய
> தோமின் றுணர்த்த தொல்காப்பியன்ற
> னேணை யில்லுமி முறிந்தோர்க்குக் கடனே"

என்ற பல்காப்பியர் புறனடைச் சூத்திரமும் இதற்குச் சான்று பகரும்.

சிற்றகத்தியம், பேரகத்திய மென்ற இரு நூலும் இப்போது வெளி வராமையால் இந்நூலை முதனூலோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு இடமில்லை. ஐந்திரம் என்பது ஐந்திரனுற் செய்யப்பட்ட வடமொழி முதல் இலக்கணம் என்று பலர் கூறுப. அதைத் தமிழ் நூல என்றுஞ் சிலர் கூறுப. ஐந்திரமென்பது உபாகமங்களுள் ஒன் றெனக் கூறுவாருமுளர். 'விணையா கோமான் விழுநூல்' எனற சிலப்பதிகாரப் பகுதிக்கு இந்திரனுற் செய்த இலக்கணமென்று அடி யார்க்கு நல்லார் பொருள் கூறுகின்றார். அதற்குச் சமண நூல்களுள் ஒன்றாகிய "இந்திரகாளியம்" என்று பொருள் கொள்ளுவாரும் உளர். இப்போது வடமொழியிலும் இந்திரனுற் செய்த இலக் கணம் இருப்பதாகத் தெரியவில்லை.

அகத்திய நூலுணர்ச்சியும் தமிழ் நிலத்து இருவழக்கு உணர்ச்சியும் இந்நூல் செய்தற்குப் பயன்பட்டிருக்குமென்பது யாவர்க்கும் தெளிவு. ஒரு மொழிக்கு இயல் நூல் செய்வார் பிறிதொரு மொழி இயல்நூலையும் ஆராய்தல் நூலமைப்பிற்குப் பயன்படுதலேயன்றி நூலுட் கூறப்படும் பொருளாராய்ச்சிக்கு அத்துணைப் பயன் றருதல் அரிது. 'ஐந்திரமோ' 'ஐந்திறமோ' வென் றையுறுவாருமுளர். ஐந்திர வியாகரண மென்பது வட மொழியில் முதன்முதற் றோன்றிய ஓர் இலக்கண நூலாதலே யன்றி இந்திரனுற் செய்த இலக்கணம் என்பதொன்று கிடையா தென்று 'தமிழ் வரலாறு' எழுதிய தஞ்சை திருவாளர் ராவ் பஹதூர். K. சீனிவாச பிள்ளை யவர்கள் கருதுகின்றார்கள். ஐந் திரமென்பது வடமொழியென்றே கருது மிடத்து அந்நூலுள் வேற்றுமை எட்டு என்று கொண்டவாறே இந்நூலாசிரியரும் கொள்ளுதலின் அவ்வடமொழி இயல் நூலாரோடு ஒத்த கருத் துடையார் இவ்வாசிரியர் என்பதனை விளக்கக் கருதி 'ஐந்திர

நிறைந்த தொல்காப்பிய'னெனச் சிறப்புப் பாயிரமுடையார் கூறினு ரென்பர். அங்ஙனம் சிற்சில கொள்கைகளில வடமொழி ஐந்திர நூற்கருத்தும் இவ்வாசிரியர் கருத்தும் ஒருவாறு ஒத்திருத்தல் கூடுமென்பதே யூகிக்கற்பாலது.

ஆசிரியர் நூல் செய்கின்ற காலத்து வழங்கிய வடமொழி இலக்கணம் ஐந்திரமெனப்படுதலாலும் 'பாணினீயம்' கேட்கப் படாமையாலும் வடமொழிக்கு முதலிலக்கணம் ஐந்திரமெனவும் அதற்குப் பின்னேயே பாணினீயம் தோன்றிய தெனவும் வட மொழியாளர் கொள்ளுதலாலும தொல்காப்பிய நூலானது வட மொழிப் பாணினீயத்திற்கு முற்பட்ட தென்பது தானே போதரும். வடசொற்கள் தமிழுட் பயிலுதற்கு இந்நூலுள் விதி வகுத்திருப்பதால் ஆரியரொடு தமிழர்க்குத் தொடர்பு இவ் வாசிரியர் காலத்தே ஏற்பட்டிருத்தல் கூடுமென்பது யூகிக்கப் படும்.

"வட வேங்கடந் தென்குமரி" என்று ஆசிரியர் காலத் திருந்த தமிழ் நாட்டெல்லை குறிக்கப்பட்டது. குமரி என்பது யாதேர மலையோ என்ற ஐயப்பாட்டிற்கு இடமாக நிற்பது; அதனை உரை யாசிரியர்கள் யாவரும் யாறு என்றே கொள்கின்றனர். காலஞ் சென்ற அரசஞ் சண்முகனார் அதனை மலை என்கின்றனர். புறநானூற்று சூ-வது பாட்டுள்,

"வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்
குணாஅது கடற்பெரு மண்டிணி ஞாலத்
திடைநாடு முதாஅ யிருமுந் நீரின் நடுநாட்"

என்ற அடிகளுள் இரண்டாவது அடியிற்கண்ட குமரி என் பதற்குக் கடல் என்று பொருள்கொள்ளல் இடமில்லை. அதனை யாதென்று அச்செய்யுள் உரையிலே காட்டப்பட்டுள்ளது. புறநா னூற்று கஎ-வது பாட்டில்,

"தென்குமரி வடபெருங்கல்
குணகுடகட லாவெல்லை"

என்றவிடத்தும் குமரி என்ற சொல் ஓர் யாற்றைக் குறிப்ப தாகவே தெரிகின்றது. குமரியாற்றைக் கடல் கொண்டபின்னர் குமரி என்ற பெயராலே தென் எல்லையாகிய கடல் சுட்டப்பட்டி ருத்தல் தெள்ளிது. சிறுகாக்கை பாடினியார் தெற்குங் கடலெல்லை கூறியது,

"வடதிசை மருங்கின் வெருவரும் பாஅத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்
வரைமருள் புணரியொடு பொருது கிடந்த
நாட்டியல் வழக்க நான்மையின் கடலுட்கண்
ணாப்பின திலங்கை மறைந்துவன் முறையே"

என்பதனால் விளங்கும். 'தொடியோள் பௌவம்' என்ற சிலப்பதிகாரமுங் காண்க. புறநானூற்று சூ-வது பாட்டில் 'குமரியும்

பெருந்துறை யயிரை மாந்தி' என்ற அடிக்கு 'குமரியாற்றினது பெரிய துறைக்கண்ணே' என்று அதனுரையில் பொருள் கூறப் பட்டுள்ளது. சிலர் அதற்குக் குமரிக் கடற்றுறை என்று பொருள் சொல்லுகின்றார்கள், யாறு என்று பொருள் படுஞ் சொல் ஆண்டில்லாமையால். குமரி யென்ற சொல் வழங்கும் செய்யுட்களில் பெரும்பான்மையும பொதுச் சொல்லாகவே அது காணப்படுகின்றது. அப்பெயருடைய யாறு ஒன்று இருந்திருத் தல்கூடு மென்பதைத் தமிழ் நூலோர் யாவரும் ஒப்புக்கொள்ளு கின்றார்கள். மலையும் இருந்ததென்பது 'குமரிக்கோடும்' என்ற சிலப்பதிகார அடியால் விளங்குகின்றது.

ஆசிரியர் தொல்காப்பியர்காலத்தே குமரி யாறே அல்லது குமரி மலையோ தமிழ் நாட்டிற் கெல்லை யென்னுங் கேள்விக்கு விடை ஆயத்தக்கது. குமரிமலை கடல்கொண்ட நாட்டில் எவ்வாறு அமைந்திருந்தது என்று ஆயுமிடத்து அந்நாட்டின் பகுதிகளை நன் கறிந்து எழுதியுள்ள 'மறைந்த குமரிக்கண்டம்' (Lost Lemuria*) என்னும் ஆங்கில நூலுட் போந்த படத்தினாலே ஒரு பெருமலை யானது மேலைக்கடலில் தொடங்கி வடக்குந் தெற்குமாகக் குமரிக் குத் தென்பகுதியிலுள்ள நிலப்பகுதியிலே நெடுத்தூரஞ் சென்று பின் தென்மேற்காகத் திரும்பி 'மடகாஸ்கர்' (Madagascar) என்ற ஆப்பிரிக்கத் தீவுவரை சென்றதாகத தெரிகின்றது. அம்மலைக் குக் கீழ்ப்பக்கம் உள்ளநாட்டில் பெருமலை ஒன்று மிருந்ததாகத் தெரியவில்லை. இந்த மலையானது தென்கிழக்கு முதல் வடமேற்கு வரை செல்லுகின்ற இமயமலையைப் போல வடமேற்குத் தொடங் கித் தென்கிழக்கிற் செல்லுகின்ற ஒரு பெருமலைத் தொடராக இருந்திருப்பதாகத் தெரிகின்றது. இம்மலையைத் தமிழிற் குமரி யென்றும் வடமொழியில் மகேந்திர மென்றும் முன்னோர் கூறினு ரென்பதற்குக் காரண முண்டு. சிவதருமோத்தரம் என்னுஞ் சைவ வுபாகமத்தில் பொதியிற்குத் தென்பால் மகேந்திர முண்டென்றும் அந்நூலுரையுள் தெற்கு முதல் வடக்கு ஈறாக அமைந்து இருந்த தென்றும கூறப்பட்டுளது. அதனடிவாரத்துள்ள தேசம் பொன் மயமான இலங்கை யென்றும் குறிக்கப்படுகின்றது ;

"தாங்கமலி பொதித்தென்பாற் முடர்ந்த வடிவாரத்தி
னாங்கனக விலங்கையுமேழ் வரைச்சார லடித்தேசம்"

என்றதனால் அது உணரப்படும் ;

"உன்னதத் தென் மயேந்திரமே"

என்ற அடியுங் காண்க.

பஃறுளியாறு என்பது ஓர் பெரியயாறாகவும் அது நெடியோ னென்னும் பாண்டியனுடைய தென்றும் புறநானூற்றுள்ளே குறிக் கப்பட்டுள்ளது ;

* Scott Elliot.

"முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே"

என்றது காண்க.

"அடியிற் றன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொருது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மியைமுட னாண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி"

என்ற சிலப்பதிகார அடிகளினாலே குமரிமலையும் பஃறுளியாறும் இமயமும் கங்கையும் போன்றிருந்தன வென்பது கருதப்படும். 'பன்மலை யடுக்கத்துக் குமரிக்கோடு' என்றதனாலும் குமரிமலையின் பெருமை விளங்கும். நெடியோனுக்குரிய மொழி தமிழ் மொழி யாதலாலும் தமிழ் வழங்கும் நாட்டிலுள்ள யாற்றினையே நெடி யோனைப் புகழும் புலவனும் குறித்தல் இயைபுடைமையானும் கடல்கொண்ட நாட்டின் ஒரு பகுதியாதல் தமிழ் நாடென்றே கருதற்பாலது.

பஃறுளியாறும் குமரிக்கோடும் கடல்கொள்ளப் பட்டன வென்ற விடத்து குமரியாற்றை ஆசிரியர் குறியாமையும் நோக் குக. குமரியாறு பஃறுளியாற்றின் வேறுகவே இருந்ததென்று தெரிகிறதால் இரண்டிற்கும் நடுவே நாடுகளிருந்தன வென்று யூகித்தல கூடும். சிலப்பதிகாரவுரையின் அடியார்க்கு நல்லார் இவ்விரண் டாற்றிற்கு மிடையிலே 49 நாடுகள் இருந்தன வென்று கூறி யுள்ளார். அவர் கூறியுள்ளதற்குச் சான்று காட்டாத போதினும் அவரதனைப் புனைந்துரையாகக் கூறினர் எனறு கருத இடமிலலை. பெரும்பான்மையும் பண்டைத் தமிழுரையாசிரியர்கள் நூற்பிர மாண மில்லாமல் யாதுங் கூறுவதிலலை. சரித்திர ஆராய்ச்சி மிக்கில்லாத அக்காலத்தில, கால முறைமையைக் கருதாமல முன் நடந்ததைப் பின்னுகவும் பின் நடந்ததை முன்கைவும் அவர்கள் தொகுத்துக் கூறியிருத்தல் கூடுமேயன்றிப் புதுவதாகப் புனைதல் கிடையாது. மேற் கூறிய புறநானூற்றுட் போந்த 'நெடியோன்' என்னும் பாண்டியனே தொலகாப்பியப் பாயிரத்துட் சுட்டிய 'நிலந்தருதிருவிற் பாண்டியன்' என்று சிலர் யூகிக்கின்றார்கள். அவர்கள் 'நிலந்தந்த பேருதவிப் பொலந்தார் மார்பின் நெடி யோனும்பல்' என்ற மதுரைக்காஞ்சியை (கலித்தொகை) மேற் கோளாக உரைக்கின்றனர். நிலந்தருதிருவிற் பாண்டியன் என்னுஞ் சொற்றொடரின் பொருள்,

"மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வௌவலின்
மெலியின்றி மேற்சென்று மேவார் நாடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ் பொறித்த கிளர்பொன் படை
வலியினன் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்"

என்னும் முல்லைக் கலி கூறுவது பாட்டினடிகளின் வைத்து யூகிக்

கற்பாலது. தன்னுட்டைக் கடல் கொள்ள பிற அரசர் நாட்டைத் தன் குடிகட்கு வென்று தந்த சிறப்புடைய பாண்டியன் காலத்தே தொல்காப்பியம் அரங்கேற்றியதாக அறிகின்றோம் இப்பாண்டியனை 'தென்னவன்' என்று கலித்தொகை ஆசிரியர் கூறிய வாறே இளங்கோவடிகளும் கடல் கொண்ட செய்தி கூறுமிடத்து 'தென்னவனை' என்று விளிக்கின்றார். இத் தென்னவனும் பஃறுளியாற்றையுடைய மொழியோனும் ஒரே அரசன் என்று கொள்ளின் மன்னன் ஒருவனே கடல்கோட்கு முன்னும் பின்னும் நெடுங்காலமாக அரசாண்டான் என்பது முடியும். தென்னவன் காலம் கடல்கோள் நடந்த காலமாகத் தெரிதலால் தொல்காப்பியர் காலமும் அக்காலமே யென்பது தெளிவு. 'நிலந்தருதிருவிற் பாண்டியன்' எனப் பாயிரத்துள் விதந்தோதுதலின் அங்ஙனம் நிலந்தந்த பேருதவிக்குப் பின்னையே தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்ட தென்று கொள்ளுதல் இயைபுடையதே; அதற்கு முன னெனக் கொள்வாரு முளர். கடல்கோட்குப் பின் நூல் இயற்றப் பட்ட தென்று கொள்ளுமிடத்து 'குமரி' என்பதற்கு 'குமரியாறு' என்றே பொருள்கொள்ளுதல வேண்டும். கடல்கோள் முடிந்து பிற நாடுகள் கைக்கொள்ளப்பட்டு பாண்டியன் அரசு நிலைத்த பிறகே நிலந்தருதிருவிற்பாண்டியனென்ற பெயர் ஏற்பட்டிருத்தல் வேண்டும். அப்பெயர் பிறப்புப் பாயிரத்துட் கூறப் படுதலின் ஆசிரியர் நூல் செய்த காலமும் கடல்கோட்குப் பின்னே யாதல் வேண்டும். ஆதலால் அக்காலத்தே 'குமரியாறு' தமிழ் நாட்டுத் தென் எல்லையாக விருந்த தென்று கொள்ளுதல் பெரிதும் பொருத்தமானது. கடலகோட்குப் பின் முதன்முதற் செய்யப்பட்ட முழுமுதல் நூல் தொல்காப்பியம் என்பது தெளிவு. கடல்கோட்கு முன இருந்த நூல்கள் யாவும் இலவாகி யொழிய அதற்குப் பின் செய்யப்பட்ட முதல் நூலாகிய தொல்காப்பியம் இன்றும் நின்று நிலவுகின்றது.

வான்மீகியார் இராமாயண காலத்திலே பாண்டியர் தலைநகர் பொருநையாறு கடலொடு கலக்கின்ற இடத்திற்கு அருகிலிருந்த தென்று குறித்துள்ளார். அக் காரணம் பற்றித்தான் அதனை அலைவாய் என்று தற்கால ஆராய்ச்சிக்காரர்கள் கருதுகின்றார்கள். கடல் கொள்ளப்படுமுன் பாண்டியர்க்குத் தலைநகர் தென்மதுரை யென்று தெரிதலால் தென்மதுரையினின்றும் அலைவாய்க்குத் தலைநகரைப் பாண்டியர் மாற்றிக்கொண்டது அதனைக் கடல்கொண்ட பின்பு என்பது ஊகிக்கப்படும். 'கபாடம்' என்ற வான்மீகி இராமாயணச் சொற்குக் கதவென்றும், கபாடபுரமாய வூர் என்றும் இருவகைப் பொருள் கொள்ளப்படும். கபாடபுர மென்ற உரையே இயைபுடைத்து; அப்பெயரால், இறையனாரகப்பொருளுரையில் இடைச் சங்கமிருந்த நகர் சுட்டப்படுதலின். இடைச் சங்கத்திற்கு நூல் தொல்காப்பியம் என்றும் களவியலுட் கூறப்பட்டது. அதனுள் முதற்சங்கமிருந்தார்க்கு நூல் தொல்காப்பிய மென்று கூறப்படவில்லை அதனைக் கருதுமிடத்துத்

தொல்காப்பியம் கடற்கோளுக்குப் பின்னே இயற்றப்பட்டிருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது. ஆசிரியர் தொல்காப்பியர் ஜமதக்கினியின் புதல்வராய் பரசுராமர்க்கு உடன் பிறப்பென்று கருதுவார்க்கு இது மிகவும் ஒத்ததே. அங்ஙனம் கொள்ளுமிடத்து தமிழ் நாட்டிற்குத் தென் எல்லை 'குமரியாறு' என்பவர்களுடைய கொள்கையும் வலியுறுகின்றது. அஃதெவ்வாறெனில் பஃறுளியாற்றைக் கடல் கொண்ட காலத்துக் குமரிமலையின் பெரும் பாகமும் அழிந்து போயது, குமரியாறு தொடங்கும் பகுதியும் குமரியாறும் கடல் கொள்ளப் படாதிருந்தது. சிவதருமோத்தர உரையுள்ளும்,

"மகேந்திர மலையின் அடிவாரத்துள்ள கனகாலயமான இலங்கையின் பகுதி கடலுள் மறைந்ததென்று கூறப்பட்டுள்ளது." இராமாயணகாலத்தில் மகேந்திரமிருக்கும் இலங்கைக்கும் நடுவே கடல் இருந்ததென்பது தெரிகிறது. அந்தக் காலமானது தென் மதுரையைக் கடல்கொண்ட காலத்திற்குப் பின்னுதல் வேண்டும். இக்காரணங்களால் முதற் கடற்கோளுக்குப்பின் மகேந்திர மென்ற குமரிமலையின் ஒருபகுதியும், குமரியாறும், இவற்றிறகும் இலங்கைக்கும் நடுவே கடலும், குமரியாற்றிற்கும் பொருநையாற்றிற்கும் இடையே நாடும் இருந்ததாகக் கொள்ளுதல் வேண்டும்.

வான்மீகி இராமாயணத்திலே சேர சோழ பாண்டிய என்ற தமிழ்நாட்டு மூவேந்தரும் கூறப்படுகின்றார்கள். அந் நூலுள் சோழநாட்டிற்கு வடபால் ஆந்திரம் புண்டரம் முதலிய தேசங்கள் சொல்லப்பட்டமையால் அக்காலத்துத் தமிழ்நாட்டு வடவெல்லை 'வேங்கடம்' என்பது யூகிக்கக்கடவது. வியாசபாரதத்தால அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கத்தில் பாண்டியர் மணலூர் என்னுமிடத்தில் அரசாண்டதாகத் தெரிகிறது. பாண்டவர் சேனைக்குச் சோறளித்த சேரமான் பெருஞ்சேரலாதனின் சேலாதனை, முரஞ்சியூர் முடிநாகராயர் என்னும் புலவர் பாடியிருப்பதாகத் தெரிகின்றது. இராம சரிதம் பாரத சரிதத்திற்கு முந்தியுள்ள தாதலால் பாரத சரித காலத்திற்கு முன்னே பாண்டியர் அலைவாயில் அரசாண்டதாகக் கருதவேண்டும். கபாடபுரமுங் கடல் கொள்ளப்பட்டதாக அறிகிறபடியால் அக்கடல்கோட்குப் பின்னர் பாண்டியர் மணலூரில் நுழைந்ததாகக் கருதுவதற்கு இடமுண்டு. முடிநாகராயர் செய்யுளுள் இமயத்தையும் பொதியத்தையுமே கூறினமை காண்க. அவர் செய்யுளால் பாரதகாலத்தே தமிழரசர்க்கும் பாண்டவர்க்கும் தொடர்பு ஏற்பட்டதாகத் தெரிகின்றோம். திருவிளையாடற் புராணத்துள்ளும் மணலூர் பாண்டியர் தலைநகரெனக் கூறப்பட்டுள்ளது.

பாரதகாலத்திற்கு முன்னேயே தொல்காப்பியர் நூல்செய்தனர் என்பது தெளிவு. அகத்தியர் தொல்காப்பியர் என்னும் இரு பேராசிரியர் காலத்தைப்பற்றிய முடிபுகட்கு அவ்விருவரும் யாவர் எவ்வகையார் என்பதைப்பற்றி ஒரு சிறிது ஆராயத்தக்கது.

எழுத்ததிகாரம்

அகத்திய முனிவர் வரலாற்றினைத் தமிழறிவுசான்ற திருவாளர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் ஆராய்ச்சி செய்துவருகின்றார் கள். இவண் அதனைச் சுருக்கிக் கூறுவாம். அகத்தியர் என்ற பெயர் தமிழ்ச்சொல் எனறு சிலரும், அகஸ்தியர் என்ற வடமொழிச் சொல்லின் மொழிபெயர்ப்பென்று வேறு சிலரும் கருதுகின்றார்கள். அவர் வரலாறு இருமொழிப் பண்டைப் பனுவல்கள் பலவிலும் காணப்படுகின்றது. அவரைத் தமிழ் முனி யென்று கந்தபுராண முடையார் அழைக்கின்றார். கந்தபுராண அகத்தியப்படலத்தில் 'வண்டமிழ் மாமுனி' 'மூதுரைத்தமிழ் முற் றுணர் மாமுனி' 'சந்தநறுந் தமிழ்த் தாபதன்' என்றும், திருக் கல்யாணப் படலத்தில் 'மறையொன்று நீடுசொற்றமிழ் மாமுனி' என்றும் அவரை ஆசிரியர் கச்சியப்ப சிவாசாரியர் விதந்தோதினர். விந்தத்தை யடக்குவதற்கு முன் கடல் குடித்த கதை கேட்கப் படுகின்றது; அது மேறகூறிய அகத்தியப்படலத்தில்,

> "தென்னற் றிசையிற்க மறைக்காவினைச் சென்ற மீன்போ
> லள்ளற் கடலை யொருகீயகன் மகய டக்கிக்
> கள்ளத் தவுண ரிலகாட்டிகய கணணில் வைத்த
> கொள்ளக் குருணை யுலகெயகணு கொண்ட தெத்தாய்"

என்றமையால் விளங்கும். கடலைக்குடித்தது விருத்திர னென் னும அசுரனை இந்திரன் கொல்லுதற்பொருட்டு என்று திருவிளை யாடற் புராணத்துட் கூறப்பட்டுளது. இந்திரன் பிரமனிடம் விருத்திர னை வெல்லும் வழி யாதென்று வினவ, அப்பிரமன் அகத் தியரிடம் அவனைக் குறையிரக்கும்படி கட்டளையிட்டார். அங்ங னமே அகத்தியரை வேண்டிக்கொள்ள, அவர் கடலையுண்டு விருத் திரனைக் காட்டினர் என்று திருவிளையாடற் புராணங் கூறுகின் றது. இந்திரன் குறை நேர்ந்தது பொதியின் மலையில் என்பது 'சந்த வெற்படைந்தான் வானோர் தலைவனை' என்ற திருவிளையாடல் இந்திரன் பழிதீர்த்த படலச் செய்யுளடியால விளங்கும். எனவே விந்தமடக்குதற்கு முன்னரே பொதியிலில் அகத்தியர் இருந்தனர் என்பது பேதருதும். இராமாயணத்துள் "என்றுமவ னுறைவிடமா மாதலினால்" என்று பொதியிலைக் கம்பர் சிறப்பித் தனர். விந்தமடக்கிய பின்னும் பொதிகையில் அகத்தியர் தங்கி யிருந்ததாக அறிகிறோம். அதற்குபின் சிவபெருமானது திரு மணத்திற்காக இமயஞ் சென்று மீண்டனர். மீண்ட கதையைச் சொல்லுமிடத்துக் கந்தபுராணத்துள் அகத்தியர் இறைவனைத் தமி முறிவு ஈதல் வேண்டு மென்று கேட்டதாகக் குறிக்கப்படவில்லை. காஞ்சிப்புராணத்துள் அவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது அங்ஙனம் குறித்த போதும், தனக்குத் தமிழ்மொழி அன்னியமென்று அவர் சொன்னதாகச் சரித்திரமில்லை. ஆனால் திருவிளையாடற் புராணத்தில் தனக்குத் தமிழ் நன்கு தெரியாததாகக்கூறிய குறிப்பு முதன் முதற் காணப்படுகின்றது. இப்புராணம் கந்தபுராணத்தோடு மாறுபடும் இடங்களிலெல்லாம் பின்னையதே சிறப்பாகக் கொள்ளற்பற்று. ஆதலால் திருவிளையாடற் புராண முடையார் கூற்று தமிழ் முனிவரைக் குறித்ததாகக் கருதப்படா.

"மன்னு மாமலை மகேந்திர மதனிற்
சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்" என்றும்,

"மற்றவை தம்மை மகேந்திரத் திருத்து
உற்றவைம் முகங்க ளாற்பணித் தருளியும்"

என்றும் வரும் திருவாசக அடிகளாலே 'மகேந்திர மலையில் ஐம் முகங்கொண்டெழுந்தருளி, இறைவர் ஆகமங்களைத் தோற்று வித்தார் என்பது போதரும். 'மகேந்திரம்' பொதியத்திற்குத் தென் பாலுள்ள ஒரு பெருமலை என்பது முன் குறிக்கப்பட்டது. அம் மலையுள்ள நாடு தமிழ் வழங்கிய நாடாதலால் ஆகமங்களைக் கேட்டவர்கள் தமிழர்களாதல் வேண்டும். கேட்ட ஐவருள் ஒருவர் அகத்தியராகவும், ஏனை நால்வருள் ஒவ்வொருவரும் ஐந்து ஆகமங்கள் கேட்டதாகவும் அகத்தியர் மாத்திரம் எட்டு ஆகமங்கள் கேட்டதாகவும் சிவாகமம் கூறுகின்றது. அவ்வைவருடைய கோத் திரமும் ஆரிய கோத்திரமாகக் காணப்படவிலலை. அவை முறையே சிவகோசரம், சிகாகோசரம், சோதிகோசரம், சாவித்திரி கோசரம், வியோம கோசரம் என்பன. இதனால் அகத்தியர் தமிழ் முனிவர் என்பதும் அவர் குமரி மலையைக் கடல்கொள்வதற்கு முன்னேயே ஆகமம் பெற்றவர் என்பதும் விளங்கும். அவர் கடல்கோட்குமுன் தமிழைச் செமமைப்படுத்திய பேராசிரியராக விருந்திருத்தல்கூடும். அருந்தவமுனிவராதலால் நீண்ட ஆயு ளுடையராய் வாழ்ந்திருந்து கடல்கோட்குப் பின்னும் இராமாயண காலத்தில் இராமருக்குக் காட்சி கொடுத்திருக்கலாம். அகத்தியர் அனுமதியின்றி பொருநையாற்றைக் கடத்தல் அரிதென்னும் குறிப்பு வான்மீகத்தில் காணப்படுகின்றது; சில பிரதிகளில் காணப் பட்டதாகக் கூறுந் தண்டகந்திருத்திய அகத்திய ரென்பவர் தமிழ் முனியின் வேறாய் ஆரியர் தலைவராய் குறுமுனிவர் பெயரைக் கொண்டவராகிய மற்றொருவரென்று ஊகிகவேண்டியதா யிருக் கிறது. அவரையே நச்சினார்க்கினியர் பாயிர உரையிற் கூறுவதாயுங் கருதலாம். அகத்தியருடைய மனைவியை புலத்தியருடைய உடன்பிறப்பென்று அவர் கூறுகின்றார். ஆனால் கந்தபுராண முடையார் தமிழ்முனிவர் மனைவி விதர்ப்ப நாட்டரசன் புதல்வி யென்று மொழிந்தனர். இதனாலும் அகத்தியப் பெயருடைய இரு வருக்கும் வேறுபாடு காண்க. இந்திரனது சிவிகை சுமந்ததாகக் கூறப்படும் அகத்தியர் தமிழ்முனிவர் அன்று. இந்திரனே தன்னை யடைந்து உதவிவேண்டி நின்ற தமிழ் முனிவர் அவன் சிவிகை சுமத்தல் யாங்ஙனம்? இருக்கு வேதப்பாட்டுகளுட் சிலவற்றைக் கூறிய அகத்தியர் தமிழ்முனிவர் என்று கருத இடமில்லை. அப் பாடல்கள் பாரதகாலத்தில் நான்மறைகளை வகுத்த வியாசர் இருக்குவேதத்துட் சேர்த்தவைகளாக இருக்கலாம். நாரதர்க்குக் கும்பத்திற் பிறந்ததாகக் கூறப்படும் அகத்தியர் தமிழ் முனிவ ரென்று கொள்ள இடமில்லை. அக்கதை தமிழ் முனிவரைப்பற்றி ஆரியர் கட்டிய கதையாக விருத்தல் வேண்டும். அல்லது அப் பெயருடைய ஆரியமுனிவரொருவரைப் பற்றியதாதல் வேண்டும்.

தமிழ் முனிவர்களின் பெயரையும் ஆரியமாக்கித் தமிழ்ப்பெயர் விளங்காவண்ணஞ் செய்தல் ஆரிய நூலோரது வழக்கம்போலும். அகத்தியர் என்ற சொல்லினைத் தமிழ்ச் சொல்லாகவே கருதலாம். அது தமிழுக்கு இன்றியமையாதவர் என்ற பொருளுடையது. 'என்றுமுள தென்றமிழை' என்றலால், என்றும் பொதியில் இருந்து வளர்த்தல் அவரது கடமைபோலும்.

ஜமதக்கினியின் புதல்வராகத் தொல்காப்பியரைக் கருதினால் அவர் காலம் இடைச்சங்கமிருந்தகாலம் என்றெண்ண இடமுண்டு. ஆனால் பரசுராமரைப்பற்றிக் கூறும் நூல்களுள் தொலகாப்பியரை அவரது உடன்பிறப்பாகக் கூறக்கண்டிலம். சில தமிழ்ப் புலவர்கள் கூறுவதாவது :—" பலராலும் விரும்பப்படும் மேம்பாட்டினையுடைய பண்டைக்காலத்துத் தமிழ்ப் பழங்குடிகளாகிய குறுக்கையர், ஏயர்கோ, காப்பியன், சேக்கிழான் எனப் பெயரியவைகளுள் இவர் பாதுமைமிக்க காப்பியக் குடியிற் பிறந்தவர் " என்பது. அங்ஙனந் தமிழ் முனிவராகத் தொல்காப்பியரைக் கருதுமிடத்து, இந்நூல் ஆதியூழியின் அந்தத்தேதிய செய்யப்பட்டிருத்தல் கூடும். இந்நூலுட் சில பகுதிகள் பிற்காலத்துச் சேர்க்கப்பட்டனவாகக் கருத இடமுண்டு. அவைகளிற்பல ஆரியக் கலப்பு மிகுந்த பின்னரே சேர்க்கப்பட்டனவென்று கொள்ளவேண்டும்.

இந்நூல் எழுத்ததிகாரம் முழுவதிலும் இரண்டு முன்று சொற்களே தமிழோ வடமொழியோவென்று ஐயுறுவதற்கு இடந்தருவன. அது வடமொழித் தொடர்பு முதன்முதல் அக்காலத்து ஏற்பட்டமைக்கு ஒரு சான்றாகும்.

பரசுராமர் காலத்திலேயே வடநாட்டில் பிராமணருக்கும் ஏனையோர்க்கும் கலகம் விளைந்ததாகத் தெரிதலால் அக்காலத்திலேயே வெவ்வேறு காரணங்கள் யாக்கப்பட்டிருத்தல் கூடும். இன்னொரு முறையாகக் கருதுமிடத்து மனுஸ்மிருதிகள் முதலியவை எழுந்தபின் ஜாதியையும் காரணத்தையும் பற்றிய சூத்திரங்கள் தொல்காப்பியத்திற் சேர்க்கப்பட்டிருத்தல் கூடுமென்று தெரிகிறது. எவ்வாறாயினும் பாரதகாலத்திற்முன் தொல்காப்பிய நூல் இயற்றப்பட்டதென்று கோடலே பொருத்தமுடைத்து. ஒரு சாரார் சூத்திரமென்ற செய்யுள்வகை வடநாட்டிலே அமைந்தபின்னர் தொல்காப்பியர் தமது இலக்கண நூலைசூத்திரயாப்பால் இயற்றினர் என்று கூறுகின்றார்கள். கல்ப சூத்திரங்களும் தரும சூத்திரங்களும் உபநிடத காலத்திற்குப்பின் எழுந்தனவென்று கொள்கின்றார்கள். வடமொழிச் சூத்திரயாப்பால் தமிழ் நூல் செய்யப்பட்டதென்று கொள்வதினும் தமிழிலேயே எழுவகைச் செய்யுளுள் ஒன்றாகிய நாலீக்கு மும்பாவினம் அமைந்திருத்தல் கூடுமென்று கொள்ளுதலே இயைபுடைமை காண்க. அது நூற்பா வென்று பெயர் பெறும். எழுவகைச் செய்யுளைத் தம்மகத்துக் கொண்ட தமிழானது அவற்றை இயற்றுதற்குரிய யாப்பு வகைகளை உடைத்தாயிருத்தலிலே யென்று கூறுவது பொருத்த

மில்லாததொன்றே. தொல்காப்பியத்துள் சில இடங்களில் சூத்திர மென்ற சொல் வழங்குவதை வைத்து வடமொழிச் சூத்திரம் ஏற் பட்டதன் பின்னரே இந்நூல் இயற்றப்பட்டதென்று கொள்ளு தற்கு இடமில்லை. தொலகாப்பியத்துட் சில பகுதிகள் ஆரியர் காலத்துக்குப்பின் சேர்க்கப்பட்டவைகள். மரபியலுட் பெரும் பான்மையும் அவ்வாறே. சூத்திரம் என்ற சொல் வருகின்ற செய் யுட்கள் மரபியலிலேயே காணப்படுகின்றன. அவை ஆசிரியரது செய்யுட்களல்ல வென்பது ஒருதலை.

ஆசிரியர் திருவள்ளுவரது வரலாறு கூறும் தெளிவு நூல் யாதும் இல்லாததுபோல, ஆசிரியர் தொல்காப்பியரது வரலாறு கூறு நூல் யாதுமில்லை. அகத்தியரது மாணாக்கர் தொல்காப்பியர் என் பது மாத்திரம் பல்காப்பியர் உரை, சிகண்டியார் உரை முதலியவற்றால் தெரிகின்றது. புறப்பொருள் வெண்பாமாலையில் அகத்தியரது பன்னிரு மாணாக்கர்களுள் தொல்காப்பியர் தலைவர் என்பதனைக் கூறும் அடி. களுள்ளன. அவையாவன :—

> "மன்னிய சிறப்பின் வாலெர் வேண்டத்
> தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்
> தன்பாற் றண்டமிழ் தானின் றுணர்ந்த
> துன்னருஞ் சீர்த்திக் தொல்காப் பியன்முதற்
> பன்னிரு புலவரும் " என்பன.

ஆசிரியர் காப்பியக் குடியைச் சேர்ந்தவரென்று உரையாசிரியர் கள் கூறுகின்றார்கள். ஐமதக்கினியார் புதல்வர் ஆசிரிய ரென்ப தற்கு ந்ச்சினார்க்கினியர் பிரமாணம் யாதுங் காட்டவில்லை. தொல் காப்பியரது இயற்பெயர் தீரணதூமாக்கினி என்பதற்கும் உரை யளவை இன்னும் வெளிப்படவில்லை. ஜமதக்கினி புதல்வர் என்று கொண்டால் தொல்காப்பியர் ஆரியரென்பது வலியுறும். அதற் குப் பிராமண மின்மையின் அதனை வற்புறுத்தவை யிடமில்லை. ஐந் திரமென்ற வடமொழி வியாகரணத்தை யறிந்தா ரென்பதனாலே அவர் ஆரியராயிருத்தலவேண்டு மென்பது துணிபல்ல. தமிழாசிரி யர் பிற பல மொழிகளையும் கற்றல் புதுமையன்று. ஆசிரியரது சம யம் தமிழரது கடவுட் கொள்கையே யன்றி வேறல்ல. திருவள்ளு வர்க்கு யாது சமயமோ அஃதே தொல்காப்பியர்க்கும் என்று கொள் வதற்கு இரு பேராசிரியரது பெருநூற் பொருளொருமையே சிறந்த காரணமாதல் காண்க. ஆசிரியர் காலத்தே சமணம், புத் தம் முதலியன கிடையா. வைணவம் ஒரு சமயமாகப் பரிணமிக்க வில்லை. மால்வழிபாடு மாத்திரமிருந்தது. ஆசிரியர் அகத்தியனாரது சமயம் சைவம் என்பது தெளிவாதலால தொல்காப்பியரது சமய மும் அஃதேயென்று கொள்ளுதல் பொருத்த முடைமை காண்க. திருவள்ளுவரையர் கொள்கையும் அதுவே. தொல்காப்பியர், திருவள் ளுவர் முதலியோரது சமயத்தொடர்பான சொற்களை சமணர் புத் தர் தம்நூலுட்கொண்டு வழங்கினமையால் பலர் இருபேராசிரி யரும் சமணரா யிருக்கலாமென்று எண்ணுகின்றார்கள். அது எவ்வளவோர் அறியாமை! சமண நூலாசிரியராகிய திருத்தக்க

தேவர் முதலியோர் சமணரது முத்திநிலையைச் 'சிவகதி' என்கின்றனர். அருகனைச் 'சிவபரமுத்தி' என்கின்றனர். அக்காரணம் பற்றிச் சமணரைச் சைவரென்று யாராவது கூறுவாரா ?

புறநானூறு கூ-வது பாட்டு, பாண்டியன் பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதியைக் காரிகிழார்பாடியது. முது குடுமிப் பெருவழுதி பஃறுளியாற்றையுடைய நெடியோன வழிவந்தன னென்பது, அவனைக் குறித்து நெட்டிமையார் பாடிய பாட்டால் விளங்கும். அம்முதுகுடுமி காலத்தே குமரியாறு தெற்கிலிருந்த தென்பது தெளிவு. அக்காலத்தே அவ்வழுதியினது குடை முக்கட் செல்வரது கோயிலை வலம் வருவதற்குமாத்திரமே தாழும் என்பது கூறப்பட்டது ;

"பணியிய ரத்தைகின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகாவலஞ் செயற்கே
யிறைஞ்சுந" என்பது காண்க.

இதனாற் போந்தது யாதெனின் இராமாயண காலத்திலேயே தென்னாட்டில முக்கட்செல்வர் வழிபாடு சிறந்திதாங்கியதென்பது புலனும். அக்காலத்துப் பெருவழக்கிற்றாகிய முக்கட்செல்வர் வழி பாடே தொல்காப்பியர்க்கும் பல்லாற்றானும் பொருந்துவதாம். ஆரியர் கலப்பு அவர காலத்தே உணமையின் அவரது வேள்வியும் அரசர்களால் இயற்றப்பட்டன வென்பது தெரிகின்றது. ஆனல் வேள்வி வழக்கு குடிகளுள் அக்காலத்துப் பரவியதாகத் தோன்றவில்லை. ஆரியரது மாயினை அறிவர் மரபாகவே கொள்ளல் வேண்டும்.

தொல்காப்பியர் ஆரியராயினுந் தமிழராயினுமாகுக. அவர் காலமாகிய இராமயண காலத்திற்கு முன்னேயே முத்தமிழ் நூல்களும், மூவேந்தரும், முத்தமிழ்ப் புலவரும் உயர்ந்த கொள்கையும் செவ்விய அறநெறியும் உடையராய்த் தமிழ்நாட்டில் நிகழ்ந்தேறினவென்பதை யாவரும மறுக்க வொண்ணாது. வான்மீகியார் இராமயணகாலம் கி. மு. எஎ-க்குமுன் என்பது கிண்ணம். ஆதலால் புத்தம் சமணம் முதலிய மதங்கள் உண்டாவதற்கு முன்னேயும் கி. மு. நான்காம் நூற்றாண்டிற் நிகழ்ந்த பாணினி முனிவர் காலத்திற்கு முன்னேயும் தொல்காப்பியம் இயற்றப்பட்ட தென்பது தெளிவு.

தொல்காப்பியரையும் அகத்தியரையும் புத்தர் அல்லது சமண ரென்று சொல்வது உண்மைச் சரித்திரத்திற்கு முற்றும் மாறுக வுள்ள ஒரு தப்புமொழியாகும.

ஆசிரியர் நூல செய்கின்ற காலத்திலே இன்றைக்கும் மேனாட்டினரும் அறியாத பல நுண்ணூல்கள் தமிழநாடடிலே தழைத்தோங்கின வென்று யூகிப்பதற்கு இந்நூல் இடங்கொடுக்கின்றது. முத்தமிழ் நூல்களும், யோக நூல்களும் மந்திர நூலகளும், தத்துவ நூல்களும், மருத்துவ நூல்களும் மிகுதியாக இருந்தன வென்பது தொல்காப்பியத்தினுனே புலனுவதை மேலே காட்டினும்.

எழுத்ததிகார நூல்மரபாலும், பிறப்பியலாலும், எழுத்தொலி மூல நூலுணர்ச்சி தமிழ்நாட்டிற் சிறப்புற்றேங்கியிருந்த தென்பது தெரியவருகிறது. உலகத்திலே எல்லாவகை மொழிகளிலும் பயில்கின்ற எழுத்தொலிகளை வகைப்படுத்தி அவற்றுள் தனி எழுத்தொலிகள் இன்னவெனவும், கலப்பொலிகள் எழுவதற்குக் காரணமாக அத் தனியொலிகளோடு ஒன்றுதல் பலவாதல் முன்னுதல் பின்னுதல் உடனுதல் இயைகின்ற சார்பொலிகள் இன்ன வென்றும் பண்டைத் தமிழறிஞர் அறிந்திருந்தார்கள். தனியொலிகள் அனைத்தையும் தமிழ்மொழி நெடுங்கணக்கின் முப்பது எழுத்துக்களாக அமைத்து வைத்தனர். தனி யொலிகட்கும் சார்பொலிகட்கும் குறியீடும் அமைத்துள்ளனர். எவ்வகையான பேச்சொலியும் தனியொலி சார்பொலி அவற்றின் கலப்பொலி என்பவற்றுள் அடங்குதலால் அவற்றைத் தமிழெழுத்துகளால் எழுதும் வன்மையும் நமது முன்னோர் பெற்றுத் திகழ்ந்தனர். இவ்வரிய நூலுணர்ச்சி உலகிலுள்ள எல்லா மொழிகட்கும் மிகவுஞ் சுருங்கிய எளியவாகிய குறியீடுகளைத் தருவது. இந்நூலுணர்ச்சி உலகிற் பரவுமாயின் தமிழ் எழுத்து முறையே உலகெங்கும் பரவி பிற இலிபிகளின் இடர்ப்பாடும் பெருக்கமும் ஒய்ந்து ஒழியும். 2000 ஆண்டுகளாக மறைந்து கிடந்த இவ்வரிய நூலைத் தமது நுண்மாண் நுழைபுலமிகுதிப்பாட்டால் தொல்காப்பிய எழுத்ததிகாரத்தினின்றும வடித்தெடுத்த பேரறிஞராகத் தற்காலத்தே உதவியருளியவர் பெருங் கலைஞர் திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கரவர்கள் ஆவர். அவர்கட்குத் தமிழ் நாடும் பிறநாடும் செயக்கடவதாகிய கைம்மாறு ஒன்று மிலதாயினும் அவ்வரிய நூலைப் போற்றுதலும் பரவச் செயதலுமே நம்மவர்களின் ஒருதலையாய கடனையாகும். நமது முன்னோர் எழுத்தொலி முயற்சிக்குக் குறியீடு அமைத்தனரேயன்றி அவ்வொலிக்கு மாத்திரம் வடிவமைத்திலர். அதனால் எழுததொலி அளவிறந்து பெருகினும் குறியீடுகள் அளவுட்பட்டனவாக அமைந்துள்ளன. இதுவே பெறற்கரிய பெரும் பேறாக எழுத்துநூல் கற்பார் கடைப்பிடிக்க வேண்டியது. இவ்வாறு கொள்ளாது ஒலி ஒவ்வொன்றிற்கும் குறி ஒவ்வொன்று அமைத்தால் ஒலிகளும் பலவாய்க் குறிகளும் பலவாய் வரம்பிகந்து ஓடும். அதனால் வரி வடிவுக் கூட்டம் செப்பமடையாது வாளா விரிந்து பயனிலதாம். இதனை மேலைத் தேசத்து எழுத்து நூல் வல்லார் உற்று நோக்கற்பாலர்.

தமிழ் எழுத்தொலி கற்போர் பண்டை எழுத்து நூலுணர்ச்சியின்றி இதுவரை முயன்றமையால் சார்பெழுத்தின் தன்மை அறியாதிருந்தனர் உரையாசிரியர்களும் அவ்வாறே. திருவாளர் நாயக்கரவர்களின் பேருதவியால் சார்பெழுத்தின் தன்மை தமிழர்கட்கு விளங்குவதாயிற்று. சார்பெழுத்தாவன :— குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பன. குற்றியலிகரம் இகரக் குறுக்கமன்று. 'கேண்மியா' என்ற சொல்லின் மகரத்தின் மேல் உள்ள இகரம் நேர் இகரமாக ஒலியாது வேறுபட்டிருத்தல்

காண்க. இந்தக் குற்றியலிகரம் அகரத்திற்குப் பின் கலப்பதால் எழுகின்ற ஒலியே 'Man' என்ற ஆங்கிலச் சொல்லின் நடுவே யுள்ள உயிரொலியாம். குற்றியலுகரம் என்பது வடமொழி 'ரு' 'லு' என்னும் ஒலிகளிலுள்ள உயிரொலிகளாம். ஆய்தம் என்பது எழுத்தோசைக்குக் காரணமாகிய மூச்சொலியே யாகும். அது சார்ந்த ஒலியின் தன்மையோ டொத்தியலும். அதனைத் தகரத்தின் முன் சேர்க்கும் பொழுது தகரத்தின் ஒலி மென்மையடையும். அவ் வாறு ஆய்தமும் தகரமும் கலந்த வொலி அரபி முதலிய மொழிக ளில் மிகுதியும் வழங்குகிறது. இவ்வாறு கொள்ளாது ஆய்தத் தின் ஒலி வடிவம் அது ககரத்தின் முன் சேர்ந்தபொழுது எழு கின்ற ஒலியேயாம் என்று பிற்காலத்தார் மயங்கக் கொண்டனர். அதனால் ஆய்தத்தின் பெரும்பயனைத் தமிழர் அறியாது போயி னர். குற்றியலிகரம் உயிரொலிகளோடு கலத்தல் தமிழ் மொழி யிற் கிடையாது; பிறமொழியிலுண்டு. அவ்வாறே குற்றியலுகரம் வல்லின மெய்யின் மேல் மாத்திரம் தமிழ் இயல் நூல்களுட் குறித்த முறையில் ஊர்ந்து வரும். வடமொழியிலோ ரகர லகர மெய்களிலும் ஊர்ந்து வருகின்றது. ஆங்கில முதலிய மொழிகளி லோ அது பிற உயிரொலிகளோடுங் கலந்து வருகின்றது. ஆய்தம் தனி எழுத்தொலிகட்குப் பின் கலத்தல் தமிழிலில்லை. வடமொழி முதலியவற்றில் அது அவைகளின் உடன் கலத்தலும் பின் கலத் தலும் காணப்படும்.

தனியொலிகள் முப்பதும் தமிழ் நெடுங்கணக்காக அமைந்த சீர்மை உலகிற் பிற எம்மொழிக்குங் கிடையாது. சார்பொலிகள் கலக்கின்ற முறைகள் தமிழிலே மிகச் சுருக்கம். பிற மொழி களுள் அவை தமிழிலும் விரிவுடையன. இதனை உணராமையால் பலர் தமிழானது எழுத்தொலிகள் குறைந்த மொழியென வறிதே பிழை கூறுவர். அவர் தமது எழுத்தொலி நூல் அறியாமையைப் புலப்படுத்தினவர் ஆவர். இனியேனும் தமிழர், பிறமொழிகளி லிருந்து எழுத்தொலிகளையும் அவற்றின் வரிவடிவத்தையும் தமி ழுட் கடன் வாங்காது தமிழ் எழுத்துகளின் துணை கொண்டே பிறமொழி ஒலிகளை நுண்ணூற்கு இயைய எழுதிக்கொள்ளும் ஆற்றல்பெற் றுய்வார்களாக.

தமிழெழுத் தொலிகளின் சிறப்புகளையும் செவ்விய அமைப் பையும் பற்றித் திருவாளர் மாணிக்க நாயக்க ரவர்கள் நுணுகி யாய்ந்து மொழிந்தவை பின் வருமாறு :—

1. கூட்டொலிகளைத் தனி யெழுத்துக்களாக மற்றைய மொழிகள் எண்ணுவதுபோலத் தமிழ், தாள் தலை தெரியாது எண்ணுவதில்லை.

2. மற்றைய மொழிகள் போலாது கூட்டல் குறைத்தல் இயலாதவர்க்கு முயற்சியாலாகும் எழுத்தொலிகளினையென்றும், முயற்சி வேற்றுமையா லாக்கக்கூடிய எண்ணிறந்த எழுத்தொலிக ளினையென்றும், தமிழ் பாகுபடுத்தி யுணர்த்துகின்றது.

3. வாக்குறுப்புக்களின் கூட்டல் குறைத்தல் ஏலாத குறிப்பான முயற்சிகளால் ஒலிக்கக் கூடிய எல்லா வெழுத்துக்களும் தமிழ் மொழியில் "உயிர்கள்" என வழங்கும் பன்னிரண்டும் "உடல்கள்" என வழங்கும் பதினெட்டுமே.

4. தமிழெழுத்துக்களின் னமைப்பைவிட எளியது நினைத்தற் கெட்டாததாயினும், அதுவே எல்லா மொழிகளுக்கும் பொதுவான அமைப்பாம்.

தமிழ் நெடுங்கணக்கின் வரி வடிவம் "முத்தமிழ்" என்ற குழூஉக்குறியால் விளக்கும் பிரணவத்தின் வடிவத்தினின்றே எழுந்தன வென்பதையும் இயற்கை நிலைமைகளை இனிது விளக்கும் தமிழ் எழுத்தொலிகளின் சிறந்த தத்துவமும் அவற்றின் மந்திரப் பொருளையும் திருவாளர் நாயக்க ரவர்கள் தமது "தமிழ மறை விளக்கம்" என்ற நூலில் இனிது விளக்கியிருக்கின்றனர். அவற்றின் சுருக்கம் வருமாறு :

(1) இயற்கையில் மூலவடிவமாயுள்ள கருவின் உருவமே தமிழில் ஒகரம் அதாவது மூலப்பிரணவம். இவ்வடிவமே கடவுளுடைய அபயாஸ்த வரதாஸ்த மூர்த்தமாகக் காட்டப்பட்டுள்ளது. இவ்வடிவினின்றே தமிழின் மற்றைய வரிவடிவங்கள் கிளம்பியிருக்கின்றன. இவைகள் தந்தம் மந்திரப் பொருளை தந்தம் வடிவாலேயே நன்கு விளக்குகின்றன.

(2) எழுத்துக்களின் மந்திரப் பொருளும், மொழிபடு பொருளும் தமிழில் ஒன்றாக இருப்பது எதலினும் காணுக்காட்சி. 'தனிநிலை,' "உயிர்கள்," "உடல்கள்" என்பன தமிழெழுத்துக்களின் பகுப்புப் பெயர்களாம்.

மயிலாப்பூர்
உருத்ரோத்காரி ஐ
சித்திரை மீ 18உ

கா. சுப்பிரமணியம்

மேற்கோள் நூற்குறிப்பு விளக்கம்

அகம் - அகநானூறு

*எச்சவியல்

*எழு - எழுத்ததிகாரம்

ஐங்குறு - ஐங்குறுநூறு

குறள் - திருக்குறள்

குறு, குறுந் - குறுந்தொகை

குறிஞ்சிக்கலி - கலித்தொகை

சிந்தா - சீவகசிந்தாமணி நாமகளிலம்பகம்

சிலப் - சிலப்பதிகாரம்

*தொல்காப்பியம்

*செய், செய்யு - செய்யுளியல்

*சொ, சொல் - சொல்லதிகாரம்

நற், நற்றி - நற்றிணை

†நெடுநல்வாடை

நாலடி - நாலடியார்

†பட்டினப் - பட்டினப்பாலை

புறம் - புறநானூறு

*மரபியல்

†மலைபடு - மலைபடுகடாம்

†முல்லைப் - முல்லைப்பாட்டு

†பத்துப்பாட்டு

கடவுள் துணை

தொல்காப்பியம்

க. எழுத்ததிகாரம்

நச்சினார்க்கினியருரை

சிறப்புப் பாயிரம்

[பனம்பாரனார் இயற்றியது]

வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப்
புலந்தொகுத் தோனே போக்கறு பனுவல்;
நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்
தறங்கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட் டாசாற் கரில்தபத் தெரிந்து
மயங்கா மரபின் எழுத்துமுறை காட்டி
மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப் பியன்எனத் தன்பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே.

என்பது பாயிரம்.[1]

[பாயிரம்]

எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க என்பது இலக்கணம். என்னே?

'ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே.'

என்றாராகலின்.

---

1 இங்கே பாயிரம் என்றது, சிறப்புப் பாயிரம்.

பாயிரம் என்றது புறவுரையை. நூல் கேட்கின்றுன் புறவுரை கேட்கிற் கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செல்லுமாறுபோல[1] அந்நூல் இனிது விளங்குதலிற் புறவுரை கேட்டல் வேண்டும். என்னை ?

'பருப்பொருட் டாகிய பாயிரங்[2] கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூல்இனிது விளங்கும்.'

என்ருராகலின்.

அப் பாயிரந்தான் தலையமைந்த யானை[3]க்கு வினை[4]யமைந்த பாகன் போலவும் அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும் நூற்கு இன்றியமையாச் சிறப்பிற்ரு யிருத்தலின், அது கேளாக்காற் குன்று முட்டிய குரீஇப் போலவுங் குறிச்சி புக்க மான் போலவும் மாணுக்கன் இடர்ப் படுமென்க.

அப் பாயிரம் **பொதுவுஞ் சிறப்பும்** என இருவகைத்து.

[பொதுப்பாயிரம்]

அவற்றுட் **பொதுப் பாயிரம்** எல்லா நூன்முகத்தும் உரைக்கப்படும். அதுதான் நான்கு வகைத்து :

'ஈவோன் தன்மை ஈத லியற்கை
கொள்வோன் தன்மை கோடன் மரபென
ஈரிரண்[5] டென்ப பொதுவின் தொகையே.'

என்னும் இதனுன் அறிக.

ஈவோர் **கற்கப்படுவோரும் கற்கப்படாதோரும்** என இருவகையர். அவருட் கற்கப்படுவோர் நான்கு நிறத்தார் :

'மலைநிலம் பூவே துலாக்கோலென் றின்னர்
உலைவில் உணர்வுடை யோர்.'

இதனுள்,

'மலையே,
அளக்க லாகாப் பெருமையும் அருமையும்
மருங்ககல முடைமையும் ஏறற் கருமையும்
பொருந்தக் கூறுப பொச்சாப் பின்றி.'

'நிலத்தி னியல்பே நினைக்குங் காலைப்
பொறையுடை மையொடு செய்பாங் கமைந்தபின்
வீளுதல் வண்மையும் போய்ச்சார்ந் தோரை
இடுதலும் எடுத்தலும் இன்னண மாக
இயையக் கூறுப இயல்புணர்ந் தோரே.'

---

1 'கொழுச்சென்றவழித் துன்னூசி இனிது செலலுமாறு போல' என்பதற்கு, கலப்பைகொழுச சென்றவழி கலப்பைகுத்தி எளிதாய் நிலத்திற பதிவதுபோல என்றும், குதிரைகருவி குத்தியவழித் தையலூசி எளிதாய்த் தோலில் இறங்குவது போல என்றும், இரு வகையாயப பொருளுரைப்பர்.

2 பாயிரம் - சிறப்புப்பாயிரம்.

3 தலையமைந்த யானை - யானைக் கூட்டத்தைக காக்கும் தலைமை யானை.

4 வினை - வினைத்திறமை.

5 நன்னூலார் இவற்றொடு நூலியுங் கூடடிப் பொதுவின் தொகை ஐந்தென்பர்.

'பூவின தியல்பே பொருந்தக் கூறின்
மங்கல மாதலும் நாற்ற மூடைமையுங்
காலத்தின் மலர்தலும் வண்டிற்கு ஞெகிழ்தலும்
கண்டோ ருவத்தலும் விழையப் படுதலும்
உவமத் தியல்பின் உணரக் காட்டுப.'

'துலாக்கோ லியல்பே தூக்குங் காலை
மிகினுங் குறையினும் நில்லா தாகலும்
ஐயந் தீர்த்தலும் நடுவு நிலைமையோ
டெய்தக் கூறுப இயல்புணர்ந் தோரே.'

என நான்குங் கண்டுகொள்க.

இனிக் **கற்கப்படாதோரும்** நான்கு திறத்தார் :

'கழற்பெய் குடமே மடற்பனை மூடத்தெங்கு
குண்டிகைப் பருத்தியோ டிவையென மொழிப.'

இதனுட் கழற்பெய்குட[1]மாவது கொள்வோனுணர்வு சிறிதாயினுந் தான் கற்றதெல்லாம் ஒருங்குரைத்தல். மடற்பனை[2] என்பது பிறராற் கிட்டுதற்கு அரியதாகி இனிதாகிய பயன்களைக் கொண்டிருத்தல். மூடத்தெங்[3]கென்பது ஒருவர் நீர்வார்க்கப் பிறர்க்குப் பயன்படுவதுபோல ஒருவர் வழிபடப் பிறர்க்கு உரைத்தல். குண்டிகைப்பருத்தி[4] யென்பது சொரியினும் வீழாது சிறிது சிறிதாக வாங்கக் கொடுக்கும் அதுபோலக் கொள்வோனுணர்வு பெரிதாயினுஞ் சிறிது சிறிதாகக் கூறுதல்.

இனி,

'ஈத லியல்பே இயல்புறக் கிளப்பின்
பொழிப்பே அகலம் நுட்பம் எச்சமெனப்
பழிப்பில் பல்லுரை பயின்ற நாவினன்
புகழ்ந்த மதியிற் பொருந்தும் ஓரையில்
நிகழ்ந்த அறிவினன் தெய்வம் வாழ்த்திக்
கொள்வோ னுணர்வகை அறிந்தவன் கொள்வரக்
கொடுத்தல் மரபெனக் கூறினர் புலவர்.'

இதனுன் அறிக.

இனிக் கொள்வோருங் **கற்பிக்கப்படுவோரும் கற்பிக்கப்படாதோரும் என** இருவகையர். அவருட் **கற்பிக்கப்படுவோர்** அறுவகையர் :

அவர்தாம்,

'தன்மகன் ஆசான் மகனே மன்மகன்
பொருள்நனி கொடுப்போன் வழிபடு வோனே
உரைகோ ளாளனெ டிவரென மொழிப.'

---

1 'பெய்தமுறை யன்றிப பிறழ உடனறருஞ்
செய்தி கழறபெய குடத்தின சீரே.'

2 'தானே தரகொளி னனறித தனபால
மேவிக கொளக்கொடா இடதததது மடறபனை.'

3 'பலவகை யுதவி வழிபடு பண்பின
நலலோ ரொழித் தலலோரக களிகளுமுடத தெங்கே.'

4 'அரிதில பெயகொண டபபொருள் தானபிறாக
கெளிதி லிலலது பருதததிக குண்டிகை.'

இவர் தன்மை,

'அன்னங் கிளியே நன்னிறம் நெய்யரி
யானே யரனே [1] றென்றிவை போலக்
கூறிக் கொள்ப குணமாண் டோரே.'

இதனுன் அறிக.

இனிக் **கற்பிக்கப்படாதோர்** எண்வகையர் :

'மடிமானி பொச்சாப்பன் காமுகன் கள்வன்
அடுநோய்ப் பிணியாளன் ஆருச் சினத்தன்
தடுமாறு நெஞ்சத் தவனுள்ளிட் டெண்மர்
நெடுநூலுக் கற்கலா தார்.'

என இவர்.

இவர் தன்மை,

'குரங்கெறி விளங்காய் எருமை யாடே
தோணி [2] யென்றுங் கிவையென மொழிப.'

இதனுன் அறிக.

இவருட் **களங்கடியப்பட்டார்** :

'மொழிவ துணராதார் முன்னிருந்து காய்வார்
படிறு பலவுரைப்பார் பல்கால் நகுவார்
திரிதரு நெஞ்சத்தார் தீயவை ஓர்ப்பார்
கடியப்பட் டாரவையின் கண்.'

இனிக் **கோடன் மரபு**:

'கோடன் மரபு கூறுங் காலைப்
பொழுதொடு சென்று வழிபடன் முனியான்
முன்னும் [3] பின்னும் [4] இரவினும் பகலினும்
அகலா னுகி அன்பொடு கெழீஇக்
குணத்தொடு பழகிக் குறிப்பின் வழிநின்
றுசற உணர்ந்தோன் வாவென வந்தாங்
கிருவென இருந்தே டவிழென அவிழ்த்துச்
சொல்லெனச் சொல்லிச் செல்லெனச் சென்று
பருகுவ னன்ன ஆர்வத்த னுகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்

---

1 'பாலும் நீரும பாறபடப பிரித்தல்—அனனத தியலபென அறிந்தனர் கொளலே.'
'இளந்தவா இளததல இளியின தியலபே.'
'எநநிறந் தோயதறகு மேறப தாதல்—நன்னிறத தியல்பென நாடினர் கொளலே.'
'நல்லவை யகத்திடடு நவையுறத் திடுவது—நெயயரி மாண்பென நினைதல வேண்டும.'
'குழுவுபடூஉ புறநதருதல குஞசரத தியலபே.'
'பிறநத ஓலியின பெறறியோாந துணர்தல—சிறந்த ஆனேற்றின் செய்தி யென்ப.'
2 'கலலா லெறிநது கருதுபயன கொள்வோன—குரங்கெறி விளங்கா யாமெனக் கூறுப.'
'விலங்கி வீழ்ந்து வெணணீ ருமுகங்—கலங்கல்செய தருநதல் காரா மேறறே.'
'ஓணறிடை யார உறினுங் குளகு—சென்றுசென் றருநதல யாட்டின் சிறே.'
'நீரிடை யனறி நிலததிடை ஓடாச்—சீருடை யதுவே தோணி யெனப.'
3 முன்னும - ஆசிரியன இருகருமபோது முனனலும்.
4 பினனும - ஆசிரியன செலலும்போது பின்னலும்.

செவிவா யாக நெஞ்சுகள னுகக்
கேட்டவை கேட்டவை வல்ல னுகிப்
போற்றிக் கோடல் அதனது பண்பே.'

'எத்திறம் ஆசான் உவக்கும் அத்திறம்
அறத்தில் திரியாப் படர்ச்சிவழி பாடே.'

'செவ்வன் தெரிகிற்பான் மெய்ந்நோக்கிக் காண்கிற்பான்
பல்லுரையுங் கேட்பான் மிகப்பெரிதுங் காதலான்
தெய்வத்தைப் போல மதிப்பான் திரிபில்லான்
இவ்வாறு மாண்பு முடையாற் குரைப்பவே
செவ்விதின் நூலைத் தெரிந்து.'

'வழக்கி னிலக்கணம் இழுக்கின் றறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினுதல் வினுயவை விடுத்தலென் றின்னவை
கடனுக் கொளினே மடம்நனி இகக்கும்.'

'அனையன் அல்லோன் கேட்குவ னுயின்
வினையின் உழப்பொடு பயன்றலைப் படாஅன்.'
'அனையன் அல்லோன் அம்மர பில்லோன்
கேட்குவ னுயிற் கொள்வோ னல்லன்.'

இவற்றுன் உணர்க.

இம்மாணுக்கன் முற்ற உணர்ந்தானுமாறு,

'ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே.'

'மூக்காற் கேட்பின் மூறையறிந் துரைக்கும்.'

'ஆசா னுரைத்த தமைவரக் கொளினுங்
காற்கூ றல்லது பற்றல னுகும்.'

'அவ்வினை யாளரொடு பயில்வகை யொருபாற்
செவ்விதி னுரைப்ப அவ்விரு பாலும்
மையறு புலமை மாண்புநனி யுடைத்தே.'

'பிறர்க்குரை யிடத்தே நூற்கலப் பாகுந்
திறப்பட உணருந் தெளிவி னேர்க்கே.'

இவற்றுன் அறிக. **பொதுப்பாயிரம்** முற்றிற்று.

[சிறப்புப்பாயிரம்]

இனிச் **சிறப்புப்பாயிர**மாவது தன்னுல் உரைக்கப்படும் நூற்கு இன்றி யமையாதது. அது பதினெருவகையாம்.

ராதலின் தென்றிசையைப் பிற்கூறினர். நிலங் கடந்த நெடுமுடி யண்ணலே நோக்கி உலகந் தவஞ் செய்து வீடுபெற்ற மலையாதலானும் எல்லாராலும் அறியப்படுதலானும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினர். குமரியுந் தீர்த்த மாகலின் எல்லையாகக் கூறினர். இவ்விரண்டினையுங் காலையே ஓதுவார்க்கு நல்வினையுண்டா மென்று கருதி இவற்றையே கூறினர். இவை யிரண்டும் அகப்பாட்டெல்லை யாயின. என்னை? குமரியாற்றின் தெற்கு நாற்பத் தொன்பது நாடு கடல்கொண்டதாகலின். கிழக்கும் மேற்குங் கடலெல்லையாக முடிதலின் வேறெல்லை கூறாராயினர். வேங்கடமுங் குமரியும் யாண்டைய என்றால் வடவேங்கடந் தென்குமரி யென வேண்டுதலின் அதனை விளங்கக் கூறினர்.

உலகமென்றது பலபொருளொருசொல்லாகலின் ஈண்டு உயர்ந்தோரை உணர்த்திற்று, உலகம் அவரையே கண்ணுதவுடைமையின் என்னை?

'வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர்கட் டாக லான.' (மரபியல் - கூஉ)

என **மரபியலுட்** கூறுதலின். அவ்வுயர்ந்தோராவார் அகத்தியனுரும் மார்க் கண்டேயனுரும் தலைச்சங்கத்தாரும் முதலாயினோர். உலகத்து - உலகத்தி னுடைய என விரிக்க.

வழக்காவது சிலசொற் பிறந்த அக்காலத்து, இஃது அறத்தை உணர்த் திற்று, இது பொருளை உணர்த்திற்று, இஃது இன்பத்தை உணர்த்திற்று, இது வீட்டை உணர்த்திற்று என்று உணர்விப்பது.

செய்யுளாவது 'பாட்டுரைநூலே' (செய்யுளியல் - எஅ) என்னுஞ் செய்யு ளியற் சூத்திரத்தாற் கூறிய ஏழு நிலமும்[1] அறம் முதலிய மூன்று பொருளும் பயப்ப நிகழ்வது. முதலினென்றது முதலுகையினுலே என்றவாறு.

எழுத்தென்றது யாதனை யெனின், கட்புலனுகா உருவுந்[2] கட்புலனுகிய வடிவுந்[3]மூடைத்தாக வேறுவேறு வகுத்துக்கொண்டு தன்னையே உணர்த்தியுஞ் சொற்கு இயைந்தும் நிற்கும் ஒசையையாம். கடலொலி சங்கொலி முதலிய ஒசைகள் பொருளுணர்த்தாமையானும் முற்கு வீளை இலதை முதலியன பொருளுணர்த்தினவேனும் எழுத்தாகாமையானும் அவை ஈண்டுக் கொள்ளா ராயினர். ஈண்டு உருவென்றது மனனுணர்வாய் நிற்குங் கருத்துப்பொருளை. அது செறிப்பச் சேறலானுஞ்[4] செறிப்ப வருதலானும்[5] இடையெறியப்படுத லானும்[6] இன்பதுன்பத்தை யாக்கலானும்[7] உருவும் உருவுங் கூடிப் பிறத்த லானும்[8] உந்தி முதலாகத் தோன்றி எண்வகை நிலத்[9]தும் பிறந்து கட்புலனுந் தன்மை யின்றிச் செவிக்கட் சென்று உறும் ஊறுடைமையானும் விசும்பிற் பிறந்து இயங்குவதோர் தன்மையுடைமையானுங் காற்றின் குணமாவதோர் உரு வாம். வன்மை மென்மை இடைமை கோடலானும் உருவே யாயிற்று. இதனைக்

1 ஏழு நிலம் - பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என பன
2 கட்புலனுகா உரு - ஒலி வடிவம்.
3 கட்புலனுகிய வடிவு - வரி வடிவம்.
4 செறிப்பச் சேறல - குமிழிபோல செலுத்தச் செல்லுதல்.
5 செறிப்ப வருதல் - குடத்திற்போல செலுத்த மீண்டும் வருதல.
6 இடையெறியப்படுதல் - வெளியிடத்தில வீசப்படுதல.
7 இன்ப துன்பத்தை யாக்குதல் முறையே மென்மை வன்மையால.
8 உருவும் உருவும் கூடிப் பிறத்தல - உயிர்வடிவும் மெய்வடிவும் கூடிப் பிறத்தல்.
9 எண்வகை நிலம்-தசை, மிடறு, நெஞ்சு, பல, இதழ், நா, மூக்கு, அண்ணம் என்பன.

காற்றின் குணமேயென்றல் இவ்வாசிரியர் கருத்து. இதனை விசும்பின் குண மென்பாரும் உளர். இவ்வுரு 'உரு வுருவாகி' (எழு - கஎ) எனவும் 'உட்பெறு புள்ளி உருவா கும்மே' (எழு - கச) எனவுங் காட்சிப்பொருட்குஞ் சிறுபான்மை வரும். வடிவாவது கட்புலனுகியே நிற்கும். அது வட்டஞ் சதுரம் முதலிய மூப்பத்திரண்டனுள் ஒன்றை உணர்த்தும். மனத்தான் உணரும் நுண்ணுணர் வில்லோரும் உணர்தற்கு எழுத்துக்கட்கு வேறுவேறு வடிவங் காட்டி எழுதப் பட்டு நடத்தலிற் கட்புலனுகிய வரிவடிவம் உடையவாயின. இதற்கு விதி 'உட்பெறு புள்ளி உருவா கும்மே' (எழு - கச) என்னுஞ் சூத்திரம் முதலியன வாம். இவற்றுற் பெரும்பான்மை மெய்க்கே வடிவு கூறினர். 'எகர ஒகரத் தியற்கையு மற்றே' (எழு - கசு) என உயிர்க்குஞ் சிறுபான்மை வடிவு கூறினர்.

இனித் தன்னை உணர்த்தும் **ஓசை**யாவது தன் பிறப்பையும் மாத்திரை யையுமே அறிவித்துத் தன்னைப் பெற நிகழும் ஓசை.

சொற்கு இயையும் ஓசையாவது ஒருெழுத்தொருமொழி முதலியவாய் வரும் ஓசை.

இனிச் **சொல்**லென்றது யாதனை யெனின், எழுத்தினுன் ஆக்கப்பட்டு இருதினைப் பொருட்டன்மையையும் ஒருவன் உணர்தற்கு நிமித்தமாம் ஓசையை. இவ்வுரைக்குப் பொருள் **சொல்லதிகாரத்துட்** கூறுதும். ஈண்டு 'டறலள' (எழு - உஉ) என்னுஞ் சூத்திர முதலியவற்றுன் மொழியாக மயங்கு கின்றனவும் அவ்வாக்கத்தின்கண் அடங்கு மென்று உணர்க. எழுத்துச் சொற்கு அவயவமாதலின் அதனை முற்கூறி அவயவியாகிய சொல்லைப் பிற்கூறினர்.

இனிப் **பொருளென்**றது யாதனை யெனின் சொற்றெரடர் கருவியாக உணரப்படும் அறம்பொருளின்பமும் அவற்றது நிலையும் நிலையாமையுமாகிய அறுவகைப்பொருளுமாம். அவை **பொருளதிகாரத்துட்** கூறுதும்.

வீடு கூறுரோ எனின், அகத்தியனுருந் தொல்காப்பியனுரும் வீடுபேற் றிற்கு நிமித்தங் கூறுதலன்றி வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூறுரென் றுணர்க. அஃது,

> 'அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
> மும்முதற் பொருட்கும் உரிய வென்ப.' (செய்யு - கஅசு)

என்பதனுன் உணர்க. இக்கருத்தானே **வள்ளுவனுரும்** மூப்பாலாகக் கூறி மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறினர்.

செந்தமிழ் - செவ்விய தமிழ்.

மூன்றுநூல் **அகத்தியமும் மாபுராணமும் பூதபுராணமும் இசையுணக்கமும்.** அவற்றுட்கூறிய இலக்கணங்களாவன எழுத்துச் சொற்பொருள் யாப்பும் சந்த மும் வழக்கியலும் அரசியலும் அமைச்சியலும் பார்ப்பன இயலுஞ் சோதிட்முங் காந்தருவமுங் கூத்தும் பிறவுமாம்.

புலம் என்றது இலக்கணங்களை.

பனுவலென்றது அவ்விலக்கணங்களெல்லாம் அகப்படச் செய்கின்றதோர் குறியை. அவை இதனுட் கூறுகின்ற உரைச்சூத்திரங்களானும் மரபியலா னும் உணர்க.

பாண்டியன் மாகீர்த்தி இருபத்துநாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானுதலின் அவனும் அவன் அவையிலுள்ளோரும் அறிவுமிக்கிருத்தலின் அவர்கள்

கேட்டிருப்ப **அதங்கோட்டாசிரியர்** கூறிய கடாவிற் கெல்லாங் குற்றந்தீர விடைகூறுதலின் 'அரில்தப' என்றார்.

அகத்தியனுர் அதங்கோட்டாசிரியரை நோக்கி, 'நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க' என்று கூறுதலானும், **தொல்காப்பியனும்** பல்காலுஞ் சென்று 'யான் செய்த நூலை நீர் கேட்டல்வேண்டும்' என்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங் கூறிவிடுவ லெனக் கருதி அவர் கூறிய கடாவிற் கெல்லாம் விடை கூறுதலின், 'அரில் தபத் தெரிந்து' என்றார்.

அவர் கேளன்மினென்றற்குக் காரண மென்னை யெனின், தேவரெல்லா ருங் கூடியாஞ் சேரவிருத்தலின் மேருத் தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது, இதற்கு அகத்தியனுரே ஆண்டிருத்தற் குரிய ரென்று அவரை வேண்டிக் கொள்ள, அவருந் தென்றிசைக்கட் போதுகின்றவர் கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனுர் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத் தியனுருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரை யாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப், பெயர்ந்து, துவராபதிப் போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டு போந்து, காடுகெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனுரை நோக்கி 'நீ சென்று குமரியாரைக் கொண்டுவருக' எனக் கூற, அவரும் எம்பெருமாட்டியை எங்ஙனங் கொண்டு வருவலென்றார்க்கு, 'முன்னுகப் பின்னுக நாற்கோல் நீளம் அகல நின்று கொண்டுவருக' வென அவரும் அங்ஙனங் கொண்டு வருவழி, வையை நீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக் கொண்டு போகத், தொல் காப்பியனுர் கட்டளை யிறந்து சென்று ஓர் வெதிர்ங்கோலை முறித்து நீட்ட, அதுபற்றி யேறினுர்; அது குற்ற மென்று அகத்தியனுர் குமரியாரையுந் தொல்காப்பியனுரையுஞ் 'சுவர்க்கம் புகாப்பிர்' எனச் சபித்தார்; 'யாங் கள் ஒரு குற்றமுஞ் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெரு மானுஞ் சுவர்க்கம் புகாப்பிர்' என அவர் அகத்தியனுரைச் சபித்தார். அதனுன் அவர் வெகுண்டாராதலின் அவன் செய்த நூலைக் கேளற்க என்றாரென்க.

நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் 'நான்மறை' என்றார். அவை **தைத்தீரியமும் பௌடிகமுந் தலவகாரமுஞ் சாமவேதமு மாம்.** இனி **இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமும்** என்பாரு முளர். அது பொருந்தாது; இவர் இந்நூல் செய்த பின்னர் **வேதவியாதர்** சின் னஞ் பல்பிணிச் சிற்றறிவினுர் உணர்தற்கு நான்கு கூறுக இவற்றைச் செய்தாராதலின்.

முற்கூறிய நூல்கள் போல எழுத்திலக்கணமுஞ் சொல்லிலக்கணமும் மயங்கக் கூறாது வேறேர் அதிகாரமாகக் கூறினுர் என்றற்கு 'எழுத்து முறைகாட்டி' என்றார்.

வரைப்பின்கண்ணே தோற்றி நிறுத்த என்க.

இந்திரனுற் செய்யப்பட்டது ஐந்திரம் என்றுமியற்று.

பல்புகழாவன, ஐந்திரநிறைதலும் அகத்தியத்தின்பின் இந்நூல் வழங்கச் செய்தலும் அகத்தியனுரைச் சபித்த பெருந்தன்மையும் ஐந்தீ நாப் பண் நிற்றலும் நீர்மேல் நிற்றலும் பிறவுமாகிய தவத்தான் மிகுதலும் பிறவுமாம்.

படிமை - தவவேடம்.

'வடவேங்கடந் தென்குமரி' என்பது கட்டுரை வகையான் எண்ணெடு புணர்ந்த சொற்சீரடி.[1] 'ஆயிடை' என்பது வழியசை புணர்ந்த சொற்சீரடி.[2] 'தமிழ்கூறு நல்லுலகத்து' என்பது முட்டடி[3] யின்றிக் குறைவு சீர்த்தாய சொற்சீரடி. இங்ஙனஞ் சொற்சீரடியை முற்கூறினுர், சூத்திர யாப்பிற்கு இன்னேசை பிறத்தற்கு. என்னே? 'பாஅ வண்ணஞ், சொற் சீர்த் தாகி நூற்பாற் பயிலும்' (செய்யு - உகரி) என்றலின். ஏனை அடிக ளெல்லாஞ் செந்தூக்கு.[4]

வடவேங்கடந் தென்குமரி யெனவே எல்லையும், எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடி யெனவே நுதலிய பொருளும் பயனும் யாப்பும், முந்து நூல்கண்டெனவே வழியும், முறைப்பட எண்ணி யெனவே காரணமும், பாண்டியன் அவையத் தெனவே காலமுங் களனும், அரில்தபத் தெரிந்தெனவே கேட்டோரும், தன் பெயர் தோற்றி யெனவே ஆக்கியோன் பெயரும் நூற் பெயரும் பெறப்பட்டன.

தொல்காப்பியம் என்பது மூன்று உறுப்[5]படக்கிய பிண்டம்.[6] பொருள் கூறவே அப்பொருளைப் பொதிந்த யாப்பிலக்கணமும் அடங்கிற்று, நூறு காணங் கொணர்ந்தானென்றல் அவை பொதிந்த கூறையும் அவை யென அடங்குமாறுபோல.

இனி இவ்வாறன்றிப் பிறவாறு கண்ணழிவு கூறுவாரும் உளரா லெனின், வேங்கடமுங் குமரியும் எல்லையாகவுடைய நிலத்திடத்து வழங்குந் தமிழ்மொழியினைக் கூறும் நன்மக்கள் வழக்குஞ் செய்யுளும் என்றுற் செந்தமிழ் நாட்டைச் சூழ்ந்த கொடுந்தமிழ் நாடு பன்னிரண்டினும் வழங்குந் தமிழ்மொழி யினைக் கூறுவாரை நன்மக்க ளென்றார் என்று பொருள் தருதலானும், அவர் கூறும் வழக்குஞ் செய்யுளுங் கொண்டு எழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய் தல் பொருந்தாமையானும், அவர் கூறும் வழக்குஞ் செய்யுளுமாகிய இருகாரணத் தானும் எழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய்ந்தாரெனின் அகத்தியற்கு மாறுகத் தாமும் முதனூல் செய்தாரென்னும் பொருள் தருதலானும், அங்ஙனங் கொடுந்தமிழ் கொண்டு இலக்கணஞ் செய்யக் கருதிய ஆசிரியர் குறைபாடுடைய வற்றிற்குச் செந்தமிழ் வழக்கையும் முந்துநூலையும் ஆராய்ந்து முறைப்பட எண் ணினுளெனப் பொருள்தருதலானும் அது பொருளன்மை உணர்க. இன்னும் முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி யென்றதனுனே முதல்வன் வழிநூல் செய்யு மாற்றிற்கு இலக்கணங் கூறிற்றிலனேனும் அவன் நூல் செய்த முறைமை தானே பின்பு வழிநூல் செய்வார்க்கு இலக்கணம் என்பது கருதி

1 சொற்சீரடி - அசையாலமைந்த சீரால அடியாககாது சொலலியே சீராகககொண்டு அதனு லடியாக்குவது.

2 வழியசை புணர்ந்த சொறசீரடி - 'தனியசை யனறிப் பல அசை புணர்க்கப்பட்டு வருஞ் சொறசீரடி' எனபது நசரினுாகனியம. 'ஒரு சீர்க்கண்ணே பிறிதுமொரு சீ வரத் தொடர்வதோர் அசையைத் தொடுப்பது' எனபது இளமபூரணம்.

3 முட்டடி - தூக்குப்பட்டு முடியும நாறசீரடி.

4 செநதூககு - நாறசீரும் நிரமபி வரும அடியாலாகும் ஓசை.

5 மூனறுறுபபு - நூறபா (குதிரம), ஒத்து, படலம எனபன.

6 பிண்டம - தொகுதி அல்லது திரட்டு..

இவ்வாசிரியர் செய்யுளியலிலும் மரபியலிலும் அந்நூல் செய்யும் இலக்கணமும் அதற்கு உரையும் காண்டிகையும் கூறும் இலக்கணமுங் கூறிய அதனையே ஈண்டுங் கூறினரென்று உணர்க. அவை அவ்வோத்துக்களான் உணர்க.

'யாற்ற தொழுக்கே தேரைப் பாய்வே
சீய நோக்கே பருந்தின் வீழ்வென்று
ஆவகை நான்கே கிடக்கை முறையே.'

'பொழிப்பே அகலம் நுட்பம் எச்சம் எனப்
பழிப்பில் சூத்திரம் பன்னல் நான்கே.'

'அவற்றுள்
பாடங் கண்ணழி வுதாரணம் என்றிவை
நாடித் திரிபில ஆகுதல் பொழிப்பே.'

''தன்னூல் மருங்கினும் பிறநூல் மருங்கினுந்
துன்னிய கடாவின் புறந்தோன்றும் விகற்பம்
பன்னிய அகலம் என்மனார் புலவர்.'

'எதுவின் ஆங்கவை துடைத்தல் நுட்பம்.'

'துடைத்துக் கொள்பொருள் எச்சம் ஆகும்.'

'அப்புலம் அரில்தப அறிந்து முதனூற்
பக்கம் போற்றும் பயன்தெரிந் துலகந்
திட்ப முடைய தெளிவர வுடையோன்
அப்புலம் படைத்தற் கமையும் என்ப.'

'சூத்திரம் உரைஎன் றுயிரு திறத்தினும்
பாற்படத் தோற்றல் படைத்த லென்ப
நூற்பயன் உணர்ந்த நுண்ணி யோரே.'

இவற்றை விரித்து உரைக்க.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

தொல்காப்பியம்

க. எழுத்ததிகாரம்

நச்சினார்க்கினியருரை

க. நூன்மரபு

[எழுத்தின் இலக்கணம் என்பது இதன் பொருள்; ஆடைக்கு நூல் உறுப் பாதல் போல மொழிக்கு உறுப்பாகிய எழுத்து இங்கு நூல் எனப் பட்டது.]

எழுத்துக்களின் வகை

அவற்றின் பெயர் முதலியன

க. *எழுத்தெனப் படுப,*
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃ தென்ப;
சார்ந்துவரல் மரபின் மூன்றலங் கடையே.

என்பது சூத்திரம்.

இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ எனின் எழுத்திலக்கணம் உணர்த்தி னமை காரணத்தான் எழுத்ததிகாரம் என்னும் பெயர்த்து. எழுத்தை உணர்த் திய அதிகாரம் என விரிக்க. அதிகாரம் — முறைமை.

எழுத்து உணர்த்துமிடத்து எனைத்து வகையான் உணர்த்தினரோ வெனின் எட்டு வகையானும் எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினர் என்க.

எட்டு வகைய என்பார் கூறுமாறு :—*எழுத்து இனைத்[1]தென்றலும் இன்ன பெயரின என்றலும் இன்ன முறையின என்றலும் இன்ன அளவின என்ற லும் இன்ன பிறப்பின என்றலும் இன்ன புணர்ச்சியின என்றலும் இன்ன வடி[2]வின என்றலும் இன்ன தன்மையின என்றலுமாம். இவற்றுள் தன்மையும் வடிவும் நமக்கு உணர்த்தலாகாமையின் ஆசிரியர் ஈண்டு உரைத்திலர். ஏனைய இதனுட் பெறுதும்.*

எழுத்து இனைத்தென்றலைத் தொகை வகை விரியான் உணர்க. முப்பத்துமூன்று என்பது தொகை. உயிர் பன்னிரண்டும் உடம்பு பதி னெட்டுஞ் சார்பிற் றோற்றம் மூன்றும் அதன் வகை. அளபெடை யேழும் உயிர்மெய் இருநூற்றொருபத்தாறும் அவற்றோடுங் கூட்டி இருநூற்றைம்பத் தாறெனல் விரி.

---

11 இனைத்து - இத்தனை. 2 வடிவு - ஒலி வடிவு.

இனி எழுத்துக்களது பெயரும் முறையுந் தொகையும் இச்சூத்திரத்தாற் பெற்றும். வகை 'ஔகார இறுவாய்' (எழு - அ) என்பதனுனும் 'னகார இறுவாய்' (எழு - கூ) என்பதனுனும் 'அவைதாங், குற்றியலிகரங் குற்றிய லுகரம்' (எழு - உ) என்பதனுனும் பெற்றும். விரி 'குன்றிசை மொழிவயின்' (எழு - சக) என்பதனுனும் 'புள்ளியில்லா' (எழு - கஎ) என்பதனுனும் பெற்றும்.

அளவு 'அவற்றுள், அ இ உ' (எழு - நட) என்பதனுனும் 'ஆ ஈ ஊ' (எழு - ச) என்பதனுனும் 'மெய்யின் அளபே' (எழு - கக) என்பதனுனும் 'அவ்வியல் நிலையும்' (எழு - கஉ) என்பதனுனும் பெற்றும்.

பிறப்பு பிறப்பியலுட் பெற்றும்.

புணர்ச்சி 'உயிரிறு சொல்முன்' (எழு - கoஎ) என்பதனுனும் 'அவற்றுள், நிறுத்த சொல்லின்' (எழு - கoஅ) என்பதனுனும் பிறவாற்றுனும் பெற்றும்.

இனி **எட்டிறந்த பல்வகைய என்பார் கூறுமாறு:**—எழுத்துக்களது குறை வுங்[1] கூட்டமும்[2] பிரிவும்[3] மயக்கமும்[4] மொழியாக்கமும்[5] நிலையும்[6] இனமும் ஒன்று பல வாதலுங்[7] திரிந்ததன்றிரிபு அது என்றலும்[8] பிறிதென்றலும்[9] அதுவும் பிறிது மென்றலும்[10] நிலையிற் றென்றலும்[11] நிலையா தென்றலும்[12] நிலையிற்றும் நிலையாதும்[13] என்றலும் இன்னோரன்ன பலவுமாம்.

குறைவு 'அரையளபு குறுகல்' (எழு - கஙூ) 'ஓளபாகும்' (எழு - ஙிஅ) என்பனவற்றுற் பெற்றும்.

கூட்டம் 'மெய்யோ டியையினும்' (எழு - கo) 'புள்ளியில்லா' (எழு - கஎ) என்பனவற்றுற் பெற்றும்.

பிரிவு 'மெய்யுயிர் நீங்கின்' (எழு - கஙூ) என்பதனுற் பெற்றும்.

மயக்கம் 'டறலள' (எழு - உந) என்பது முதலாக 'மெய்ந்நிலை சுட்டின்' (எழு - நo) என்பதீறுகக் கிடந்தனவற்றுற் பெற்றும்.

மொழியாக்கம் 'ஓரெழுத் தொருமொழி' (எழு - சஙி) என்பதனுற் பெற்றும், அவ்வெழுத்துக்களே மொழியாக்கலின்.

நிலை 'பன்னீருயிரும்' (எழு - ஙிகூ) 'உயிர்மெய்யல்லன' (எழு - சுo) 'உயிர் ஒள' (எழு - சுகூ) 'ஞணநமன' (எழு - எஅ) என்பன. இவற்றுன் மொழிக்கு முதலாம் எழுத்தும் ஈறுமெழுத்தும் பெற்றும்.

---

1 குறைவு - மாத்திரைக் குறுகலம்.
2 கூட்டம - உயிரும் மெயயுங் கூடுதல்.
3 பிரிவு - கூடின உயிரும் மெய்யும் பிரிந்து நிற்றல்.
4 மயகலம - எழுத்துக்கள் அடுதது நிறறல்.
5 மொழியாக்கம - எழுதகாற சொலலாதல்.
6 நிலை - எழுதுகுகள் சொலலின் மூவிடதுமம நிற்றல்.
7 ஒனறு பலவாதல - 'செமபொனபதினபலம்' எனறுற போன்ற பல பொருட் சொறறொடரில ஒரே யெழுதது பொருள்தொறும் வேறுதல.
8 திரிந்ததன திரிபு அது எனறல - லகரம நகரமாகும என முதலிற் கூறிப் பின்பு அவலகரமே ஆயதமுமாகும எனறுறபோல, ஒரெழுத்தை மற்றேரெழுத்தாகு மெனக் கூறிப பினபு அதே மறறுமோர எழுதாகும எனக கூறல்.
9 திரிந்ததன திரிபு பிறிதென றல - மகரவீறு கெட்டு அகர வீறுனறபோல, ஓர் ஈறு பிறிதோர ஈறுகவே நினறு புணரும் என்றல.
10 திரிந்ததல திரிபு அதுவும் பிறிதும் என றல - தாம் என்பது தம (தம+அ) என்று நினறுறபோல ஓர ஈறு இயலபீறும் விதியீறும ஒருங்கே பெறறுப புணரும என்றல.
11 நிலையிறறென றல - சொறகள் பொருட் பொருதமுறப புணர்வதைக கூறல.
12 நிலையாதென றல - சொறகள பொருத்தமினறிப புணாவதைக் கூறல.
13 நிலையிறறும நிலையாதும என றல - ஒரே யீறுன சொறகளில ஒன்றறகுரிய இலக கணத்தை இனனென்று பெறுதென விலகல; எ - டு. பலாஅக்கோடு எனறுற போல இராஅகாலம என வராதென்றல.

இனம் 'வல்லெழுத்தென்ப' (எழு - ககக) 'மெல்லெழுத்தென்ப' (எழு - உ0) 'இடையெழுத்தென்ப' (எழு - உக) 'ஒளகார இறுவாய்' (எழு - அ) 'னகார இறுவாய்' (எழு - கூ) என்பனவற்றுற் பெற்றும். இவற்றுனே எழுத்துக்கள் உருவாதலும் பெற்றும். இவ்வுருவாகிய ஓசைக்கு ஆசிரியர் வடிவு கூறுமை உணர்க; இனி வரிவடிவு கூறுங்கால் மெய்க்கே பெரும் பான்மையும் வடிவு கூறுமாறு உணர்க.

ஒன்று பலவாதல் 'எழுத்தோரன்ன' (எழு - ககக) என்பதனுற் பெற்றும்.

திரிந்ததன் றிரிபது என்றல் 'தகரம் வருவழி' (எழு - நுசுக) என்பதனு னும் பிறுண்டும் பெற்றும்.

பிறிதென்றல் 'மகர இறுதி' (எழு - நுக0) 'னகார ஈறு' (எழு - நுநுஉ) என்பனவற்றுற் பெற்றும்.

அதுவும் பிறிது மென்றல் 'ஆற னுருபின் அகரக் கிளவி' (எழு - ககடி) என்பதனுற் பெற்றும்.

நிலையிற் றென்றல் 'நிறுத்த சொல்லின் ஈறுகு' (எழு - க0அ) என்பத னுற் பெற்றும்.

நிலையாதென்றல் நிலைமொழியது ஈற்றுக்கண்ணின்றும் வருமொழியது முதற்கண்ணின்றும் புணர்ச்சி தம்முள் இலவாதல். அது 'மருவின் தொகுதி' (எழு - ககக) என்பதனுற் பெற்றும்.

நிலையிற்றும் நிலையாதும் என்றல் 'குறியதன் முன்னரும்' (எழு - உஉசு) என்பதனுற் கூறிய அகரம் 'இரா வென் கிளவிக் ககர மில்லே' (எழு - உஉஎ) என்பதனுற் பெற்றும்.

இக்கூறிய இலக்கணங்கள் கருவியுஞ் செய்கையும் என இருவகைய.

அவற்றுட் **கருவி**[1] புறப்புறக்கருவியும் புறக்கருவியும் அகப்புறக்கருவியும் அகக்கருவியும் என நால்வகைத்து. நூன்மரபும் பிறப்பியலும் புறப்புறக்கருவி. மொழிமரபு புறக்கருவி. புணரியல் அகப்புறக்கருவி. 'ஏக ஒகரம் பெயர்க்கீ ருகா' (எழு - உஎஉ) என்றுற் போல்வன அகக்கருவி.

இனிச் **செய்கை**[2]யும் புறப்புறச்செய்கையும் புறச்செய்கையும் அகப்புறச் செய்கையும் அகச்செய்கையு மென நால்வகைத்து. 'எல்லா மொழிக்கும் உயிர் வருவழியே' (எழு - கசo) என்றுற் போல்வன புறப்புறச் செய்கை. 'லன எனவரூஉம் புள்ளி முன்னர்' (எழு - கசகக) என்றுற்போல்வன புறச்செய்கை. 'உகரமொடு புணரும் புள்ளி யிறுதி' (எழு - ககுஉ) என்றுற் போல்வன அகப் புறச் செய்கை. தொகை மரபு முதலிய ஒத்தினுள் இன்ன ஈறு இன்னவாறு

---

1 கருவி என்றது சொறபுணர்ச்சிகருக கருவியாகும் இலக்கணத்தை. புறப்புறம் புறம் அகப்புறம அகம் எனபன முறையே ஒனறினுனைறு ஒன்றறகு அணுகிய நிலையைக் குறிக்கும். புணர்ச்சிகருக் கருவியாய், நிலைமொழியீறு பற்றிய இலக்கணங் கூறும் நூற்பா அகக்கருவி; நிலைமொழியீறும வருமொழி முதலும் புணரசியில அடையும் பொதுவான நிலைமைகளைக கூறும புணரியல அகபபுறக் கருவி; புணர்ச்சியைக் கூருது அதனைப் பெறும் சொறகளின இயலபுகளைக கூறும மொழிமரபு புறக் கருவி; அசசொறகட்குக கருவியாகும எழுத்துகளைப்பறறிக் கூறும் நூன்மரபும் பிறப்பியலும் புறப்புறக்கருவி.

2 செய்கையாவது புணர்ச்சி. நிலைமொழியீறு புணரும் முறை அகச்செய்கை; நிலை மொழியீறு சாரியையைப் பெறுவது அகபபுறச செய்கை; வருமொழி முதல் அடையும் நிலைமை புறசசெய்கை; நிலைமொழியீறும் வருமொழிமுதலும் திரியாதும் கெடாதும் நின்று உடமபடு மெய்யை இடையிற பெறுவது புறபபுறச் செயகை.

மூடியுமெனச் செய்கை கூறுவன வெல்லாம் அகச்செய்கை. இவ்விகற்பமெல் லாம் தொகையாக உணர்க.

இவ்வோத்து என்னுதலிற்றே எனின், அதுவும் அதன் பெயருரைப்பவே அடங்கும்.

இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின் இத் தொல்காப்பிய மென்னும் நூற்கு மரபாந் துணைக்கு வேண்டுவனவற்றைத் தொகுத்து உணர்த்தினமை யின் நூன்மரபு என்னும் பெயர்த்தாயிற்று.

நூலென்றது நூல்போறலின் ஒப்பினையதோர் ஆகுபெயராம். அவ் வொப்பாயவாறு என்னே யெனின், குற்றங் களைந்து எஃகிய பன்னூனைப் பஞ்சி களை யெல்லாங் கைவன் மகடூஉத் தாய்மையும் நுண்மையுமுடையவாக ஓரிழைப் படுத்திலுற்போல 'வினையி னீங்கி விளங்கிய அறிவ' (மரபியல் - கூசு) னுலே வழுக் களைந்து எஃகிய இலக்கணங்களை யெல்லாம் முதலும் முடிவும் மாறுகோ ளின்றாகவும், தொகையினும் வகையினும் பொருண்மை காட்டியும், உரையுங் காண்டிகையும் உள் நின்று அகலவும், ஈரைந் குற்றமும் இன்றி ஈரைந் தழகு பெற, முப்பத்திரண்டு தந்திர உத்தியோடு புணரவும்,

'ஒருபொருள் நுதலிய சூத்திரத் தானும்
இனமொழி கிளந்த வோத்தி னானும்
பொதுமொழி கிளந்த படலத் தானும்
மூன்றுறுப் படக்கிய பிண்டத் தானும்' (செய் - கசுசு)

ஒரு நெறிப்படப் புணர்க்கப்படுஉந் தன்மையுடைமையான் என்க. மரபு, இலக்க ணம், முறைமை, தன்மை என்பன ஒருபொருட் கிளவி.

ஆயின் நூலென்றது ஈண்டு மூன்றதிகாரத்தினையும் அன்றே? இவ் வோத்து மூன்றதிகாரத்திற்கும் இலக்கண மாயவா றென்னே யெனின், எழுத் துக்களது பெயரும் முறையும் இவ்வதிகாரத்திற்கும் செய்யுளியற்கும் ஒப்பக் கூறியது. ஈண்டுக் கூறிய முப்பத்துமூன்றனைப் பதினெந்தாக்கி ஆண்டுத் தொகைகோடலில் தொகை வேறாம். அளவு செய்யுளியற்கும் இவ்வதிகாரத் திற்கும் ஒத்த அளவும் ஒவ்வா அளவும் உளவாகக் கூறியது. குறிற்கும் நெடிற் குங் கூறிய மாத்திரை இரண்டிடத்திற்கும் ஒத்த அளவு. ஆண்டுக் கூறுஞ் செய்யுட்கு அளவுகோடற்கு ஈண்டைக்குப் பயன் தாராத அளபெடை கூறியது ஒவ்வா அளவு. அஃது 'அளபிறந் துயிர்த்தலும்' (எழு - நஉ) என்னுஞ் சூத்திரத்தோடு ஆண்டு மாட்டெறிய மாற்றான் உணர்க. இன்னுங் குறிலும் நெடிலும் மூவகை யினமும் ஆய்தமும் வண்ணத்திற்கும் இவ்வதிகாரத்திற்கும் ஒப்பக் கூறியன. குறைவும் இரண்டற்கும் ஒக்கும். கூட்டமும் பிரிவும் மயக்க மும் இவ்வதிகாரத்திற்கே உரியனவாகக் கூறியன 'அம்மூவாறும்' (எழு - உஉ) என்னுஞ் சூத்திரம் முதலியனவற்றான் எழுத்துக்கள் கூடிச் சொல்லாமாறு கூறுகின்றமையின் சொல்லதிகாரத்திற்கும் இலக்கணம் ஈண்டுக் கூறினரா யிற்று. இங்ஙனம் மூன்றதிகாரத்திற்கும் இலக்கணங் கூறுதலின் இவ்வோத்து நூலினது இலக்கணங் கூறியதாயிற்று. நூலென்றது தொல்காப்பியம் என் னும் பிண்டத்தை. இவ் வோத்திலக்கணங்கள் எழுத்துக்களது பெயரும் முறையுந் தொகையும் அளவுங் குறைவுங் கூட்டமும் இனமும் மயக்கமும் ஆம். ஏனைய இவ்வதிகாரத்துள் வனையோத்துக்களுள் உணர்த்துப.

அற்றேல் அஃதாக, இத் தலைச்சூத்திரம் என்னுதலிற்றே எனின் எழுத் துக்களது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துதல் நுதலிற்று.

இதன் பொருள்:—எழுத்தெனப் படுப — எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன, அகரமுதல் னகர இறுவாய் முப்பஃதென்ப — அகரம் முதல் னகரம் ஈருகக் கிடந்த முப்பதென்று சொல்லுவர் ஆசிரியர், சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே — சார்ந்து வருதலேத் தமக்கு இலக்கணமாகவுடைய மூன்றும் அல்லாத இடத்து; என்றவாறு.

எனவே, அம்மூன்றுங் கூடியவழி முப்பத்து மூன்றென்ப. அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஐ-ஒ-ஓ-ஔ-க்-ங்-ச்-ஞ்-ட்-ண்-த்-ந்-ப்-ம்-ய்-ர்-ல்-வ்-ழ்-ள்-ற்-ன் எனவரும். எனப்படுப என்று சிறப்பித்துணர்த்துதலான் அளபெடையும் உயிர்மெய்யும் இத்தூணேச் சிறப்பில; ஓசையுணர்வார்க்குக் கருவியாகிய வரிவடிவுஞ் சிறப்பிலா எழுத்தாகக் கொள்ளப்படும்.

அகரம் முதலாதல் ஆரியத்திற்கும் ஒக்குமேனும் ஈண்டுத் தமிழெழுத்தே கூறுகின்றுரென்பது உணர்த்தற்கு னகர இறுவாய் என்றார்.

படுப, படுவ. படுவென்பது படுத்தலோசையால் தொழிற் பெயராகக் கூறப்படும். பகரமும் வகரமும் ஈண்டு நிற்றற்குத் தம்முள் ஒத்த உரிமையவேனும் எழுத்தெனப் படுப வெனத் தூக்கற்று நிற்குஞ் சொற்சீரடிக்குப் படுப என்பது இன்னேசைத்தாய் நிற்றலின் ஈண்டுப் படுப வென்றே பாடம் ஓதுக. இஃது அன்பெறுத அகரவீற்றுப் பலவறிசொல்.

அகர னகர மெனவே பெயருங் கூறினர்.

எழுத்துக்கட்கெல்லாம் அகரம் முதலாதற்குக் காரணம் 'மெய்யினியக்கம் அகரமொடு சிவணும்' (எழு - சசு) என்பதனுற் கூறுப. வீடுபேற்றிற்கு உரிய ஆண்மகனே உணர்த்துஞ் சிறப்பான் னகரம் பின் வைத்தார். இனி எழுத்துக்கட்குக் கிடக்கைமுறை ஆயினவாறு கூறுதும்.

குற்றெழுத்துக்களே முன்னுகக் கூறி அவற்றிற்கு இனமொத்த நெட்டெழுத்துக்களே அவற்றின் பின்னுகக் கூறினர், ஒரு மாத்திரை கூறியே இரண்டு மாத்திரை கூறவேண்டுதலின். அன்றி இரண்டை முற்கூறினுலோ வெனின், ஆகாது; ஒன்று நின்று அதனேடு பின்னரும் ஒன்று கூடியே இரண்டாவதன்றி இரண்டென்ப தொன்று இன்றுதலின். இதனுன் ஒன்றுதான் பல கூடியே எண் விரிந்த தென்று உணர்க.

இனி, அகரத்தின் பின்னர் இகரம் எண்ணும் பிறப்பும் பொருளும் ஒத்தலின் வைத்தார். இகரத்தின் பின்னர் உகரம் வைத்தார், பிறப்பு ஒவ்வாதேனும் 'அ-இ-உ அம் மூன்றுஞ் சுட்டு' (எழு - ஙக) எனச் சுட்டுப் பொருட்டாய் நிற்கின்ற இனங் கருதி. அவை ஐம்பாற் கண்ணும் பெரும்பான்மை வருமாறு உணர்க. எகரம் அதன் பின் வைத்தார், அகர இகரங்களோடு பிறப்பு ஒப்புமைபற்றி. ஐகார ஔகாரங்கட்கு இனமாகிய குற்றெழுத்து இன்றேனும் பிறப்பு ஒப்புமைபற்றி ஏகார ஓகாரங்களின் பின்னர் ஐகார ஔகாரம் வைத்தார். ஒகரம் னொ என மெய்யோடு கூடி நின்றல்லது தானுக ஒரெழுத்தொருமொழியாகாத சிறப்பின்மை நோக்கி ஐகாரத்தின்பின் வைத்தார். அ - இ - உ - எ என்னும் நான்கும் அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் எக்கொற்றன் என மெய்யோடு கூடாமல் தாம் இடைச்சொல்லாய் நின்றுயினும் மேல் வரும் பெயர்களோடு கூடிச் சுட்டுப்பொருளும் வினுப்பொருளும் உணர்த்தும்.

ஒகரம் மெய்யோடுகூடியே தன்பொருள் உணர்த்துவ தல்லது தானுகப் பொரு ளுணர்த்தாதென்று உணர்க. இன்னும் அ-ஆ-உ-ஊ-எ-ஏ-ஒ-ஓ-ஔ என்பன தம்முள் வடிவு ஒக்கும். இ-ஈ-ஐ தம்முள் வடிவு ஒவ்வா. இன்னும் இவை அளபெடுக்குங்கால் நெட்டெழுத்தோடு குற்றெழுத்திற்கு ஓசை இயையுமாற் ருனும் உணர்க. இனிச் சுட்டு நீண்டு ஆகார ஈகார ஊகாரங்களாதலானும் பொருள் ஒக்கும். புணர்ச்சி ஒப்புமை உயிர்மயங்கியலுட் பெறுதும். இம் முறை வழுவாமல் மேல் ஆளுமாறு உணர்க.

இனிக் ககார ஙகாரமும் சகார ஞகாரமும் டகார ணகாரமும் தகார நகாரமும் பகார மகாரமும் தமக்குப் பிறப்புஞ் செய்கையும் ஒத்தலின் வல்லொற் றிடையே மெல்லொற்றுக் கலந்து வைத்தார். முதல்காவும் முதலண்ணமும் இடைநாவும் இடையண்ணமும் நுனிநாவும் நுனியண்ணமும் இதழியைதலு மாகிப் பிறக்கின்ற இடத்தின் முறைமை நோக்கி அவ்வெழுத்துக்களைக் க-ச-ட-த-ப-ங-ஞ-ண-ந-ம-ன என இம்முறையே வைத்தார். பிறப்பு ஒப்புமை யானும் னகாரம் றகாரமாய்த் நிரிதலானும் றகாரமும் னகாரமுஞ் சேரவைத் தார். இவை தமிழெழுத்தென்பது அறிவித்தற்குப் பின்னர் வைத்தார். இனி இடையெழுத்துக்களில் யகாரம் முன் வைத்தார், அதுவும் உயிர்கள் போல மிடற்றுப்பிறந்த வளி அண்ணங் கண்ணுற்று அடையப் பிறத்தலின். ரகாரம் அதனேடு பிறப்பு ஒவ்வாதேனுஞ் செய்கை ஒத்தலின் அதன்பின் வைத்தார். லகாரமும் வகாரமும் தம்மிற் பிறப்பும் செய்கையும் ஒவ்வாவேனும் கல் வலிது சொல் வலிது என்ருற்போலத் தம்மிற் சேர்ந்துவருஞ் சொற்கள் பெரும்பான்மை யென்பது பற்றி லகாரமும் வகாரமும் சேர வைத்தார். ழகார மும் ளகாரமும் ஒன்ருனும் இயைபிலவேனும் 'இடையெழுத் தென்ப யரல வழள' (எழு - உக) என்ருற் சந்தவின்பத்திற்கு இயைபுடைமை கருதிச் சேர வைத்தார் போலும்.

அகரம் உயிரகரமும் உயிர்மெய் அகரமும் என இரண்டு. இஃது எனை உயிர்கட்கும் ஒக்கும். எனவே, ஒருயிர் பதினெட்டாயிற்று.

இவ் வெழுத்தெனப்பட்ட ஓசையை அருவென்பார் அறியாதார். அதனை உரு வென்றே கோடும். அது செறிப்பச் சேறலானும், செறிப்ப வருதலா னும், இடையெறியப் படுதலானும், செவிக்கட் சென்று உறுதலானும், இன்ப துன்பத்தை ஆக்குதலானும், உருவும் உருவுங் கூடிப் பிறத்தலானும் தலையும் மிடறும் நெஞ்சும் என்னும் மூன்றிடத்தும் நிலைபெற்றுப் பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உறப் பிறக்கும் என்றமையானும் உருவேயாம். அருவேயாயின் இவ்விடத்திற் கூறியன இன்மை உணர்க. அல்லதூஉம், வன்மை மென்மை இடைமை என்று ஒதினமையானும் உணர்க. உடம்பொடு புணர்த்த[1] லென்னும் இலக்கணத்தான் இவ்வோசை உருவாதல் நிலைபெற்ற தென்று உணர்க. அதற்குக் காரணமும் முன்னர்க் கூறுவும்.

இவ்வெழுத்துக்களின் உருவிற்கு வடிவு கூறுராயினர், அது முப்பத்தி ரண்டு வடிவினுள் இன்ன எழுத்திற்கு இன்ன வடிவெனப் பிறர்க்கு உணர்த்து தற்கு அரிதென்பது கருதி. அவ்வடிவு ஆராயுமிடத்துப் பெற்ற பெற்ற வடிவே தமக்கு வடிவாம், குழலகத்திற் கூறிற் குழல்வடிவுங் குடத்தகத்திற்

1 உடம்பொடு புணர்த்தலாவது, கூறும் இலக்கியத்திலேயே கூறவேண்டியதொன் றைக குறிப்பாற பெறவைத்தல. எழுத்துகட்குப் பிறப்பிடமும் இயக்கமும் வன்மை மென்மையுங் கூறியவதனுலேயே அவற்றிற்கு உருவுண்டு எனபதைப் பெறவைத்தமை உடம்பொடு புணர்த்தலாம்.

கூறிற் குடவடிவும் வெள்ளிடையிற் கூறின் எல்லாத் திசையும் நீர்த்தரங்க மும்[1] போல.

'எல்லா மெய்யும் உருவுரு வாகி' (எழு - கஎ) எனவும் 'உட்பெறு புள்ளி யுருவாகும்மே' (எழு - கக) எனவும் 'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' (எழு - கஙி) எனவுஞ் சிறுபான்மை வடிவுங் கூறுவர். அது வட்டஞ் சதுரம் முதலிய முப்பத்திரண்டனுள் ஒன்றை உணர்த்தும். மனத்தான் உணரும் நுண்ணுணர்வு இல்லோரும் உணர்தற்கு எழுத்துக்கட்கு வேறு வேறு வடிவங் காட்டி எழுதப்பட்டிருத்தலிற் சட்புலனுகிய வரிவடிவும் உடையவாயின. பெரும்பான்மை மெய்க்கே வடிவு கூறினர், உயிர்க்கு வடிவின்மையின். 'எகர ஒகரத் தியற்கையு மற்றே' (எழு - கசு) எனச் சிறுபான்மை உயிர்க்கும் வடிவு கூறினர். (க)

சார்பெழுத்துக்கள்

உ. அவைதாம்,
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோ ரன்ன.

இது மேற் சார்ந்துவருமென்ற மூன்றிற்கும் பெயரும் முறையும் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அவைதாம் - மேற் சார்ந்துவருமெனப் பட்டவை தாம், குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் - குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஆய்தம் என்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளிவடிவுமாம்; எழுத் தோரன்ன - அவையும் முற் கூறிய முப்பதெழுத்தோடு ஒரு தன் மையவாய் வழங்கும்;[2] எ - று.

முற் கூறிய இரண்டும் உம்மை தொக்கு நின்றன. இகர உகரங் குறுகி நின்றன, விகாரவகையாற் புணர்ச்சி வேறுபடுதலின். இவற்றை இங்ஙனங் குறியிட்டாலுதல் எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது. சந்தனக்கோல் குறுகினும் பிரப்பங்கோ லாகாது. அதுபோல உயிரது குறுக்கமும் உயிரே யாம். இவற் றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்றுமையும்பற்றி வேறோர் எழுத் தாக வேண்டினர்.

1 ஒரு நீர்நிலையிற கலலியிடில; வட்டமாய் அலைகள் தோனறினுறபோல, வெள் ளிடையிற கூறபபட்ட ஒலியால வட்டமான ஒலியலைகள் தோன்று மென்பதை நீததரங்கமபோல எனனும் உவமை உணாதறறு.

2 இனி, இருநூறபாவுகு இவ்வாறு பொருள் கொள்ளாது, குற்றியலிகரமும குறறிய லுகரமும ஆய்தமும என்ற முபபாற புள்ளி பெறற எழுத்துக்களும் எனறு பொருள் கூறுவர் பேராசிரியா. சிவஞான முனிவரும் இதைத் தழுவித் தொலகாப் பியச சூத்திரவிருததியுட் கூறுவா, "குறறிய லிகரமுங் குறறிய லுகரமும-மறறவை தாமே புள்ளி பெறுமே" எனனும சங்க யாபபு [யாப் - விருத்தி : 27ம பக.) நூறபாவால, குறறியலிகரமும் குற்றியலுகரமும முறகாலததில் புள்ளி பெறறு வழங்கியமை அறியபபடும. இததகைய வழக்கு இனறும் மலையாள நாட்டி லுள்ளது.

இவற்றுட் குற்றியலுகரம் நேர்பசையும் நிரைபசையு[1]மாகச் சீர்களைப் பல வாக்குமாறு செய்யுளியலுள் உணர்க.

ஆய்தம் என்ற ஓசைதான் அடுப்புக்கூட்டுப்போல மூன்று புள்ளி வடிவிற் றென்பது உணர்த்தற்கு ஆய்த மென்ற மூப்பாற் புள்ளியும் என்றார். அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டெழுதுப[2]. இதற்கு வடிவு கூறினார், னை ஒற்றுக்கள்போல உயிரேறாது ஓசை விகாரமாய் நிற்பதென்றாலின். எழுத்தியல் தழா ஓசைகள்[3]போலக் கொள்ளினுங் கொள்ளற்க என்றற்கு எழுத்தே யாம் என்றார். இதனைப் புள்ளிவடிவிற் றெனவே னை எழுத்துக்க ளெல்லாம் வரிவடிவினவாதல் பெற்றும்.

முன்னின்ற சூத்திரத்தாற் சார்ந்துவரான் மரபின் மூன்றலங்கடையே எழுத்தெனப்படுபு மூப்பஃதென்ப எனவே, சார்ந்துவரான் மரபின் மூன்றுமே சிறந்தன, னை மூப்பதும் அவ்வாறு சிறந்தில வெனவும் பொருள்தந்து நிற்றலின் அதனை விலக்கிச் சிறந்த மூப்பது எழுத்தோடு இவையும் ஒப்ப வழங்கு மென்றற்கு எழுத்தோரன்ன என்றார்.

இப்பெயர்களே பெயர். இம்முறையே முறை. தொகையும் மூன்றே. இம்மூன்று பெயரும் பண்புத்தொகை.

'அவைதாம்' 'ஆய்தமென்ற' என்பன சொற்சீரடி. (உ)

உ. மாத்திரை

ஒருமாத்திரையுடைய குற்றுயிர்

நூ. அவற்றுள்,
அ இ உ எ ஒ என்னும்
அப்பால் ஐந்தும்
ஓரள பிசைக்குங் குற்றெழுத் தென்ப.

இது முற்கூறியவற்றுட் சிலவற்றிற்கு அளவுங் குறியும் உணர்த்துதல் நுதலிற்று.

இ - ள்: அவற்றுள் — முற்கூறிய முப்ப தெழுத்தினுள், அ-இ-உ-எ-ஒ என்னும் அப்பாலைந்தும் — அகர இகர உகர எகர ஒகரம் என்று கூறப்படும் அப்பகுதிகளைந்தும், ஓரளபு இசைக்குங் குற்றெழுத் தென்ப — ஓரோவொன்று ஓரளபாக ஒலிக்குங் குற்றெழுத்து என்னுங் குறியினையுடைய என்று கூறுவர் புலவர். இக்காரணப்பெயர் மேல் ஆளுமாறு ஆண்டு உணர்க; எ - று.

தமக்கு இனமாயவற்றின்கணல்லது குறுமை நெடுமை கொள்ளப் படாமையின், அளவிற்பட்டு அமைந்தனவாங் குற்றெழுத்திற் குறுகி மெய் அரைமாத்திரை பெற்றதேனுங் குற்றெழுத்து எனப் பெயர் பெறுதாயிற்று,

---

1 காசு - நேரசை; பிறப்பு - நிரைபசை.
2 நடுவு வாங்கியிட்டெழுதலாவது மூன்று புள்ளியா யெழுதாமல் மூனறு சிறு கன்னமாக வளைத்தெழுதல.
3 எழுத்தியல் தழா ஓசைகள் கடலொலியும் சங்கொலியும்போல்வன.

ஒருமாத்திரை பெற்ற மெய் தமக்கு இனமாக இன்மையின். குற்றெழுத் தென்பது பண்புத்தொகை.

இனி இசைப்பதும் இசையும் வேறாக உணரற்க. அது பொருட் டன்மை[1].

'அவற்றுள்' 'அ-இ-உ' என்பன சொற்சீரடி.[2] (ங)

இரண்டு மாத்திரை யுடைய நெட்டுயிர்

ச. ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்னும்
அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத் தென்ப.

இதுவும் அது.

இ - ள்: ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என்னும் அப்பால் ஏழும் — ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ என்று சொல்லப்படும் அக்கூற் றேழும், ஈரளபு இசைக்கும் நெட்டெழுத்து என்ப — ஓரோ வொன்று இரண்டுமாத்திரையாக ஒலிக்கும் நெட்டெழுத்து என் னுங் குறியினையுடைய என்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

எனவே, அளவுங் காரணக்குறியும் இங்ஙனம் உணர்த்தி மேல் ஆளுப. ஐகார ஔகாரங்கள் குறிய எழுத்தின் நெடியவாதற்குக் குற்றெழுத்தாகிய இனந் தமக்கின்றேனும் மாத்திரை ஒப்புமையான் நெட்டெழுத் தென்றார்.

'ஆ ஈ ஊ' 'ஏ ஐ' என்பனவற்றைச் சொற்சீரடி யாக்குக.[3] (ச)

ஒரெழுத்தே மூன்று மாத்திரை யாகாமை

ஞ. மூவள பிசைத்தல் ஒரெழுத் தின்றே.

இஃது ஐயம் அகற்றியது; ஒரெழுத்து மூவளபாயும் இசைக்குங் கொல்லோ வென்று ஐயப்படுதலின்.

இ - ள்: ஒரெழுத்து மூவளபு இசைத்தல் இன்று — ஒரெ ழுத்தே நின்று மூன்று மாத்திரையாக இசைத்தல் இன்று; எ - று.

எனவே, பல எழுத்துக் கூடிய இடத்து மூன்று மாத்திரையும் நான்கு மாத்திரையும் இசைக்கும் என்றவாறு.

எனவே, பெரும்பான்மை மூன்று மாத்திரையே பெறும் என்றார் புலவர். பல எழுத்தெனவே, நான்கு மாத்திரையும் பெறுதல் பெற்றாம்.

---

1 பொருட்டன்மை - பொருளின தன்மை, பொருள் எழுத்து அதன தன்மை ஒலி.

2 இக்கூற்றினால்,
'அவற்றுள்,
அ இ உ
எ ஒ எனனும் அபபாலைநதும்
ஓரளபிசைககுங குறறெழுதெனப'
என அடி வகுப்பது நசசினாக்கினியா கருத்தெனத தெரிகின்றது.

3 இவவாணயால், 'ஆ ஈ ஊ
ஏ ஐ
ஓ ஔ எனனும் அப்பாலேழும்
ஈரளபிசைககும் நெட்டெழுதெனப'
என அடி வகுபபது நச்சினார்கினியர் கருதெனத் தெரிகினறது.

மாத்திரை நீளுமாறு

கூ. நீட்டம் வேண்டின் அவ்வள புடைய
கூட்டி யெழூஉதல் என்மனார் புலவர்.

இ - ள்: நீட்டம் வேண்டின் — வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் ஓசையும் பொருளும் பெறுதல் காரணமாக இரண்டு மாத்திரை பெற்ற எழுத்து அம்மாத்திரையின் மிக்கு ஒலித்தலே விரும்புவராயின்; அவ்வளபு உடைய கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் — தாங் கருதிய மாத்திரையைத் தருதற்கு உரிய எழுத்துக்களைக் கூட்டி அம்மாத்திரைகளை எழுப்புக என்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

கூட்டி யெழுப்புமாறு 'குன்றிசைமொழி' (எழு - சக) 'ஐ-ஔ என்னும்' (எழு - சஉ) என்பனவற்றுள் எழுவகைத் தெனக் கூறுப.

எடுத்துக் காட்டு: ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ எனவரும், இவை மூன்று மாத்திரை பெற்றன. இவைதாம், 'நெட்டெழுத் தேழே ஒரெழுத் தொருமொழி' (எழு - சஅ) என்ற அந்நெட்டெழுத்துக்களே அளபெடுத்தலிற் சொல்லாதல் எய்தின. இனி 'அளபெடை யசைநிலை யாகலு முரித்தே' (செய்யுளியல் - கள) என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தான் எழுத்தாந்தன்மையும் எய்திற்று.[1]

இதுதான் இயற்கையளபெடையுஞ்[2] செய்யுட்குப் புலவர் செய்து கொண்ட செயற்கை யளபெடையுமாய்ச் சொற்றன்மை எய்தி நின்று அலகு பெறுமாறுங் குற்றியலிகரக் குற்றியலுகரங்கள்போல எழுத்தாந்தன்மை எய்தி அலகு பெறுது நிற்குமாறும் அச்சூத்திரத்தான் உணர்க. எனவே, எழுத்தாந் தன்மையும் உடைமையின் அளபெடையோடு கூடி எழுத்து காற்பது[3] என்றலும் பொருந்திற்று. ஒற்றளபெடை செய்யுட்கே வருதலின் ஈண்டுக் கூறாராயினர்.

அவ்வளபுடைய எனப் பன்மையாகக் கூறியவதனான் இவரும் நான்கு மாத்திரையுங் கொண்டார். என்னை? இவ்வாசிரியரை 'முந்துநூல் கண்டு' என்றாராகலின். **மாபுராணத்து,**

> 'செய்யுட்க ளோசை சிதையுங்கால் ஈரளபும்
> ஐயப்பா டின்றி யீணையுமாம் — மைதீரொற்
> றின்றியுஞ் செய்யுட் செடிஞெற்றை யுண்டாக்கு
> குன்றுமே லொற்றளபுங் கொள்.'

என்ற சூத்திரத்தான் அவர் கொண்ட நான்கு மாத்திரையும் இவ்வாசிரியர்க்கு கோத்தல்வேண்டுதலின். அது 'செறுஅச்சு வாழிய செஞ்சு' (குறள்-கஉ00) 'தூஉத் தீம்புகைத் தொல்விசும்பு' (மலைபடு-இறுதி வெண்பா) 'பேஎஎர்த் துக்கொல்' 'இலாஅர்க்கில்லை தமர்' (நாலடி - உஅஉ) 'விராஅய்ச் செய்

---

1 அளபெடுத்த நெட்டெழுத்துகளன் எழும் தமித்துப பொருள்தரின் சொலலாம்; தராவிடின எழுதகாம.

2 இசைவிளி பண்டமாற்று முதலியவறறில நீணடொலிக்கும உலகியலளபெடையே இயறகை யளபெடையாம். இனி, மகடூஉ மருஉ எல, என்றும் அளபெடுதலே நிற் பவறறையும இயறகையளபெடை யெனபா ஒரு சார ஆசிரியர.

3 முபபதது மூனறெழுதது களுடன அளபெடுத்த நெடிலேழுங்கூட நாறபது.

யாமை நன்று' (நாலடி-உகசு) 'மீஇஇப்பின்னைப் பிரிவு' (நாலடி-உ2o) எனச் சான்றோர் செய்யுட்கெல்லாம் நான்கு மாத்திரை பெற்றுநின்றன. அன்றி மூன்று மாத்திரை பெற்றனவேல் ஆசிரியத்தளை தட்டுச் செப்பலோசை கெடுமாயிற்று. இங்ஙனம் அளபெடாதுநின்று ஆசிரியத்தளைதட்டு நிற்பன கலிக்கு உறுப்பாகிய கொச்சக வெண்பாக்கள்; இவை அன்னவன்றென உணர்க.

கோட்டுநூறும் மஞ்சளுங் கூடியவழிப் பிறந்த செவ்வண்ணம்போல நெடிலுங் குறிலுங் கூடிய கூட்டத்துப் பிறந்த பின்னர்ப் பிளவுபடா வோசையை அளபெடை யென்று ஆசிரியர் வேண்டினர். இவை கூட்டிச் சொல்லிய காலத்தல்லது புலப்படா, எள்ளாட்டியவழியல்லது எண்ணெய் புலப்படாவாறு போல என்று உணர்க. இனி அளபெடையல்லாத ஓசைக ளெல்லாம் இசையோசையாதலின் அவற்றை 'அளபிறந் தியிர்த்தலும்' (எழு - நந) என்னுஞ் சூத்திரத்தாற் கூறுப.

மாத்திரைக்கு அளவு

எ. கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே.

இது மாத்திரைக்கு அளவு கூறுகின்றது.

இ - ள்: கண்ணிமை நொடி என அவ்வே மாத்திரை — கண்ணிமை யெனவும் நொடி யெனவும் அவ்விரண்டே எழுத்தின் மாத்திரைக்கு அளவு, நுண்ணிதின் உணர்ந்தோர் கண்டவாறே — நுண்ணிதாக நூலிலக்கணத்தை உணர்ந்த ஆசிரியர் கண்ட நெறி; எ - று.

'என' எண்ணிற் பிரிந்து இரண்டிடத்துங் கூடிற்று. கண்ணிமை நொடி என்னும் பலபொருளொரு சொற்கள் ஈண்டுத் தொழின்மேலும் ஓசை மேலும் முறையே நின்றன. ஆசிரியர் எல்லாரும் எழுத்திற்கு இவையே அளவாகக் கூறலின் இவருங் கூறினர். இயற்கை மகன்[1] தன் குறிப்பினன்றி இரண்டிமையும் ஒருகாற் கூடி நீங்கின காலக்கழிவும் அ எனப் பிறந்த ஓசையது தோற்றக் கேட்டுக் காலக்கழிவும் ஒக்கும். இக்கண்ணிமையினது பாகம் மெய்க்குஞ் சார்பிற் றோற்றத்திற்கும் இதன் பாகம் மகரக் குறுக்கத்திற்குங் கொள்க. இக்கண்ணிமை இரட்டித்து வருதல் நெடிற்கும் அது மூன்றும் நான்குமாய் வருதல் அளபெடைக்குங் கொள்க. அதுபோலவே நொடித்தற் றொழிலிற் பிறந்த ஓசையது தோற்றக்கேட்டுக் காலக்கழிவும் அ எனப் பிறந்த ஓசையது தோற்றக்கேட்டுக் காலக்கழிவும் ஒக்கும். ஏனையவற்றிற்குங் கூறிய வாறே கொள்க.

இனி அவ்வளவைதான் நிறுத்தளத்தல், பெய்தளத்தல்[2] சார்த்தியளத்தல்,[3] நீட்டியளத்தல், தெறித்தளத்தல்,[4] தேங்கமுகந்தளத்தல்,[5] எண்ணியளத்தல் என ஏழுவகைத்து. அவற்றுள் இது சார்த்தியளத்தலாம்.

---

1 இயற்கைமகன் - உடல்நலத்தோடிருந்து இயல்பாய இமைப்பவன.
2 பெய்தளத்தல - எண்ணெயபோன்ற நீர்ப்பொருளைப் படியில ஊற்றியளத்தல்.
3 சார்த்தியளத்தல -{னை்றன அளவோடு மறறொனறின் அளவை ஒபபிட்டளததல்.
4 தெறித்தளத்தல - இசைக்கருவியைப் புடைத்து அதன் ஒலியைச செவியாற கேட்டு மதித்தல்.
5 தேங்கமுகந தளத்தல - அரிசிபோன்றவற்றைப் படியால் கும்ப முகந்தளத்தல.

கண்ணிமைக்கும் நொடிக்கும் அளவு ஆராயின் வரம்பின்றி ஒடுமென்று கருதி 'நுண்ணிதி னுணர்ந்தோர் கண்டவாறு' என்று முடிந்தது காட்டலென்னும் உத்தி கூறினர். இஃது ஆணை கூறுதலுமாம். எனவே, எழுத்திற்கே அளவு கூறி மாத்திரைக்கு அளவு கூறிற்றிலர். நொடியிற் கண்ணிமை சிறப் புடைத்து, உள்ளத்தான் நினைத்து நிகழாமையின். (எ)

நூ. எண்

பன்னிருயிர்

அ. ஔகார இறுவாய்ப்
பன்னீ ரெழுத்தும் உயிரென மொழிப.

இது குறிலையும் நெடிலையுந் தொகுத்து வேறோர் குறியீடு கூறுகின்றது.

இ - ள்: ஔகார இறுவாய்ப் பன்னீரெழுத்தும் — அகரம் முதலாக ஔகாரம் ஈறாகக் கிடந்த பன்னிரண்டெழுத்தும், உயிரென மொழிப—உயிரென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் புலவர்; எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கியதோர் குறி. மெய் பதினெட்டினையும் இயக்கித் தான் அருவாய் வடிவின்றி நிற்றலின் உயிராயிற்று. இவை மெய்க்கு உயிராய் நின்று மெய்களை இயக்குமேல் உயிரென வேறோர் எழுத்தின்றும் பிறவெனின், மெய்யி னிற்கும் உயிருந் தனியே நிற்கும் உயிரும் வேறென உணர்க. என்னை? 'அகர முதல' (குறள் - க) என்புழி அகரந் தனியுயிராய்க் ககரவொற்று முதலியவற்றிற்கு உயிருமாய் வேறு நிற்றலின். அவ்வகரந் தனியே நிற்றலானும் பல மெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையையுடைத்தென்று கோடும்; இறைவன் ஒன்றேயாய் நிற்குந் தன்மையும் பல்லுயிர்க்குந் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்குந் தன்மையும் போல. அது அ என்ற வழியும் ஊர என விளியேற்ற வழியும் 'அகர முதல' என்றவழியும் மூவினங்களில் எறின வழியும் ஓசை வேறுபட்டவாற்றான் உணர்க. இங்ஙனம் இசைத்துழியும் மாத்திரை ஒன்றேயாம். இஃது ஏனை உயிர்கட்கும் ஒக்கும்.

ஔகார இறுவாய் என்பது பண்புத்தொகை. உம்மை முற்றும்மை. 'அகரமுதல்' என முற்கூறிப் போந்தமையின் ஈண்டு ஈறே கூறினர். (அ)

பதினெண் மெய்

கூ. னகார இறுவாய்ப்
பதினெண் எழுத்தும் மெய்யென மொழிப.

இஃது உயிரல்லனவற்றைத் தொகுத்து ஓர் குறியீடு கூறுகின்றது.

இ - ள்: னகார இறுவாய்ப் பதினெண் எழுத்தும் — ககாரம் முதல் னகாரம் ஈறாக் கிடந்த பதினெட்டு எழுத்தும், மெய்யென மொழிப—மெய்யென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் புலவர்; எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி. என்னை? பன்னீருயிர்க்குந் தான் இடங்கொடுத்து அவற்றுன் இயங்குந் தன்மை பெற்ற உடம்பாய் நிற்றலின்.

னகார இறுவாய் என்பது பண்புத்தொகை. உம்மை முற்றும்மை. முன்னர் னகார இறுவாயென்புழி முப்பதெழுத்திற்கும் ஈருமென்றூர்; ஈண்டுப் பதினெட்டெழுத்திற்கும் ஈருமென்றூராதலிற் கூறியது கூறிற்றன்று.

உயிர்மெய்க்கு அளவு

கo. மெய்யோ டியையினும் உயிரியல் திரியா.

இஃது உயிர்மெய்க்கு அளவு கூறுகின்றது.

இ - ள்: உயிர் மெய்யோடு இயையினும் — பன்னீருயிரும் பதினெட்டு மெய்யோடுங் கூடி நின்றன வாயினும், இயல் திரியா — தம் அளவுங் குறியும் எண்ணுந் திரிந்து நில்லா; எ- று.

இது 'புள்ளி யில்லா' (எழு - கஎ) என்பதனை நோக்கி நிற்றலின் எதிரது போற்றலாம. உயிரும் மெய்யும் அதிகாரப் படுதலின் ஈண்டுவைத்தார். அ என்புழி நின்ற அளவுங் குறியும் ஒன்றென்னும் எண்ணுங் க என நின்ற இடத்தும் ஒக்கும்; ஆ என்புழி நின்ற அளவுங் குறியும் ஒன்றென்னும் எண்ணுங் கா என நின்ற இடத்தும் ஒக்கும் என்பது இதன் கருத்து. பிறவும் அன்ன. ஆயின் ஒன்றரை மாத்திரையும் இரண்டரை மாத்திரையும் உடையன ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் ஆயவாறு என்னை யெனின், நீர் தனித்து அளந்துழியும் நாழியாய் அரைநாழியுப்பிற் கலந்துழியுங் கூடி ஒன்றரைநாழியாய் மிகாதவாறு[1] போல்வதோர் பொருட் பெற்றி யென்று கொள்வதல்லது காரணங் கூறலாகாமை உணர்க. ஆசிரியன் ஆணை என்பாரும் உளர்.

'விளங்காய் திரட்டிஞ ரில்லை களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில்.' (நாலடியார் - கoங)

என்பதே காட்டினுர் உரையாசிரியரும்.

தனிமெய்க்கு அளவு

கக. மெய்யின் அளவே அரையென மொழிப.

இது தனிமெய்க்கு அளவு கூறுகின்றது.

இ - ள்: மெய்யின் அளவே அரையென மொழிப — மெய்யினது மாத்திரையினை ஒரோவொன்று அரைமாத்திரையுடைய வென்று கூறுவர் புலவர்; எ - று.

அவ் வரைமாத்திரையுந் தனித்துக் கூறிக் காட்டலாகாது, நாச் சிறிது புடைபெயருந் தன்மையாய் நிற்றலின். இனி அதனைச் சில மொழிமேற் பெய்து காக்கை கோங்கு கவ்வை யெனக் காட்டுப. மெய்யென்பது அஃறிணையியற் பெயராதலின் மெய்யென்னும் ஒற்றுமை பற்றி அரை யென்றூர். (கக)

1 ஒரு நாழி நீரில அரைநாழி யுப்பைக் கலபபில ஒனறரை நாழி யாகாவிடினும ஒரு நாழிக்குக கூடுதல திணணம. ஆதலால, இதை மெயயோடு சோநத உயிர உயிரள வாயே ஓலிபபதறகு உவமை கூறல பொருததமினறு.

சார்பெழுத்துக்கு அளவு

கஉ. அவ்வியல் நிலையும் ஏனை மூன்றே.

இது சார்பிற் றோற்றத்து மூன்றற்கும் அளவு கூறுகின்றது.

இ - ள்: ஏனை மூன்று — சார்பிற் றோற்றத்து மூன்றும், அவ்வியல் நிலையும் — முற்கூறிய அரை மாத்திரையாகிய இயல்பின் கண்ணே நிற்கும்; எ - று.

கேண்மியா நாகு எஃகு என வரும். (கஉ)

மகரக் குறுக்கம்

கஊ. அரையளவு குறுகல் மகரம் உடைத்தே
இசையிடன் அருகுந் தெரியுங் காலை.

இது மெய்களுள் ஒன்றற்கு எய்தியது விலக்குதல் நுதலிற்று.

இ - ள்: இசை இடன் மகரம் அரையளவு குறுகலுடைத்து — வேறோர் எழுத்தினது ஓசையின்கண் மகர வொற்றுத் தன் அரை மாத்திரையிற் குறுகிக் கால் மாத்திரை பெறுதலை யுடைத்து, தெரியுங்காலை அருகும் — ஆராயுங் காலத்துத் தான் சிறுபான்மை யாய் வரும்; எ - று.

எ - டு: போன்ம் வரும்வண்ணக்கன் என ஒரு மொழிக்கண்ணும் இரு மொழிக்கண்ணுங் கொள்க. இது பிறன்கோட் கூறல் என்னும் உத்தி.[1] (கஊ)

சு. வடிவு

மகரத்தின் வடிவம்

கஎ. உட்பெறு புள்ளி உருவா கும்மே.

இது பகரத்தோடு மகரத்திடை வரிவடிவு வேற்றுமை செய்கின்றது. மகரம் அதிகாரப்பட்டு நிற்றலின் ஈண்டுக் கூறினார்.

இ - ள்: உட்பெறுபுள்ளி — புறத்துப்பெறும் புள்ளியோடு உள்ளாற்பெறும் புள்ளி, உருவாகும் — மகரத்திற்கு வடிவாம்; எ - று.

எனவே புறத்துப் பெறும் புள்ளியாவது மேற்சூத்திரத்தான் மெய்கட்குக் கூறும் புள்ளி. ஈண்டு உருவென்றது காட்சிப்பொருளே உணர்த்தி நின்றது.

எ - டு: கப்பி கப்பி (கம்மி) எனவரும். இஃது எதிரது போற்றல். (கஎ)

மெய்யெழுத்தின் இயல்பு

கஏ. மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்.

---

1 தொல்காப்பியர் மகரக குறுகலத்தை ஒரு சார்பெழுத்தாகக கொண்டிலர். நன்னூலாரோ அதைச சார்பெழுத்தாகக கொண்டார். நச்சினார்க்கினியரும் அதைச் சார்பெழுத்தாகக கருதிக்கொண்டு இது 'பிறன்கோட் கூறல்' என்றார்.

இது தனிமெய்க்கும் உயிர்மெய்க்கும் ஒப்புமைமேல் வேற்றுமை செய்தல் கூறுகின்றது. என்னை? உயிர்மெய்யான ககர ஙகரங்கட்குந் தனிமெய்யான ககர ஙகரங்கட்கும் வடிவு ஒன்றுக எழுதியவற்றை ஒற்றுக்குதற்குப் பின்பு புள்ளி பெறுக என்றலின்.

இ - ள்: மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல் — பதினெட்டு மெய்களின் தன்மையானது புள்ளிபெற்று நிற்றலாம்; **எ - று.**

எனவே உயிர்மெய்கட்குப் புள்ளியின்றுயிற்று. க்-ங்-ற்-ன் என வரும். இவற்றைப் புள்ளியிட்டுக் காட்டவே புள்ளி பெறுவதற்கு முன்னர் அகரம் உடனின்றதோர் மெய்வடிவே பெற்று நின்றனவற்றைப் பின்னர் அப்புள்ளியிட்டுத் தனிமெய் யாக்கின ரென்பதூஉம் பெறுதும். இதனானே ககரம் ஙகரம் முதலியன புள்ளிபெறுவதற்கு முன்னர் இயல்பாக அகரம் பெற்றே நிற்கும் என்பதூஉம் புள்ளி பெறுங்காலத்து அவ்வகரம் நீங்கும் என்பதூஉம் பின்னர் அப் புள்ளி நீங்கி உயிரேறுமிடத்துத் தன்கண் அகரம் நீங்கியே போக வருகின்றதோர் உயிர் யாதானும் ஒன்று ஏறி நிற்கும் என்பதூஉம் பெற்றும். 'மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்' (எழு - சசு) என்னுஞ் சூத்திரத்தானும் இதுவே இதற்குக் கருத்தாதல் உணர்க. (கஞ)

எகர ஒகரங்களின் இயல்பு

கசு. எகர ஒகரத் தியற்கையும் அற்றே.

இதுவும் அது.

இ - ள்: எகர ஒகரத்து இயற்கையும் அற்றே — எகர ஒகரங்களினது நிலையும் மெய்போலப் புள்ளிபெறும் இயல்பிற்று; **எ-று.**

எனவே, எகர ஒகரங்கட்குப் புள்ளி யின்றுயிற்று.

எ்-ஒ் - என வரும்.

இஃது உயிர்மெய்க்கும் ஒக்கும்.

மகரம் ஆராய்ச்சிப்பட்டது கண்டு மகரத்திற்கு வடிவு வேற்றுமை செய்து, அதிகாரத்தான் மெய்யின் தன்மை கூறி, அதன்பின் மாட்டேற்றலின் எகர ஒகரத்தையுங் கூறினர்.

உயிர்மெய்யெழுத்தின் இயல்பு

கள. புள்ளி யில்லா எல்லா மெய்யும்
உருவுரு வாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனை உயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயி ரியல உயிர்த்த லாறே.

இது மெய்யும் உயிருங் கூடிப் புணருமாறும் ஆண்டு அவை திரியாதுந் திரிந்தும் நிற்குமாறுங் கூறுகின்றது.

இ - ள்: புள்ளி இல்லா எல்லா மெய்யும் — உயிரைப் பெறுதற்குப் புள்ளியைப் போக்கின எல்லா மெய்களும், உரு உருவாகி அகரமோடு உயிர்த்தலும் — புள்ளி பெறுகின்ற காலத்து

இயல்பாகிய அகர நீங்கிய வடிவே தமக்கு வடிவாகி நின்று பின்னர் ஏறிய அகரத்தோடுகூடி ஒலித்தலும், ஏனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும் — ஒழிந்த பதினேருயிரோடுங்கூடி அவ் வடிவு திரிந்து ஒலித்தலும், ஆயிரியல உயிர்த்தலாறே — என அவ் விரண்டு இயல்பினையுடைய அவை ஒலிக்கும் முறைமை ; எ - று.

புள்ளியில்லா மெய்யெனவே முன்பெற்றுநின்ற புள்ளியை உயிரேற்று தற்குப் போக்கினமை பெறுதும். உருவுருவாகியெனவே புள்ளி பெறுதற்காக இயல்பாகிய அகரம் நீங்கிய வடிவே பின்னர் அகரம் பெறுதற்கு வடிவாமென் பது கூறினர்.

க - ங - ய என வரும்.

உருவு திரிந்து உயிர்த்தலாவது மேலுங் கீழும் விலங்கு பெற்றுங் கோடு பெற்றும் புள்ளிபெற்றும் புள்ளியுங் கோடும் உடன்பெற்றும் உயிர்த்தலாம். கி கீ முதலியன மேல்விலங்கு பெற்றன. கு கூ முதலியன கீழ்விலங்கு பெற்றன. கெ கே முதலியன கோடு பெற்றன. கா ஙா முதலியன புள்ளி பெற்றன. அருகே பெற்ற புள்ளியை இக்காலத்தார் காலாக எழுதினர். மகரம் உட்பெறு புள்ளியை வளைத்தெழுதினர்.[1] கொ கோ ஙொ ஙோ முதலி யன புள்ளியுங் கோடும் உடன்பெற்றன. இங்ஙனந் திரிந்து ஒலிப்பவே உயிர் மெய் பன்னிருபதினெட்டு இருநூற்றிருபத்தாறுயிற்று. ஆகவே உயிர் மெய்க்கு வடிவும் ஒருவாற்றாற் கூறினராயிற்று. இதனானே மெய் தனக்கு இயல்பாகிய அகரத்தை நீங்கி நிற்பதோர் தன்மையும் பிறிதோருயிரை ஏற்குந் தன்மையும் உடைய தென்பதாயிற்று. உயிர்மெய்க்கட் புலப்படாது இயல்பாகிய அகரமாய் நிற்குந் தன்மையும் மெய் புள்ளிபெற் றழிந்தவழி அவற்றிற்குத் தக்க உயிராய்ப் புலப்பட்டு வருந்தன்மையும் உடைய தென்பதாயிற்று பெற்றும். உயிர்மெய் என்பது உம்மைத் தொகை. (கஎ)

உயிர்மெய் ஒலிக்குமாறு

கஅ. மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே.

இது மெய்யும் உயிருங் கூடியவழி அவற்றின் ஓசை நிற்கும் முறைமை கூறுகின்றது.

இ - ள்: மெய்யின் வழியது — மெய்யினது ஓசை தோன்றிய பின்னதாம், உயிர் தோன்று நிலையே — உயிரினது ஓசை தோன் றும் நிலை ; எ - று.

முன்னின்ற சூத்திரத்தான் மெய் முன்னர் நிற்ப உயிர் பின் வந்து ஏறு மென்றார். அம்முறையே ஓசையும் பிறக்கு மென்றார். இதனானே மாத்திரை கொள்ளுங்கால் உப்பும் நீரும் போல ஒன்றேயாய் நிற்றலும் வேறுபடுத்துக் காணுங்கால் விரலும் விரலுஞ் சேர நின்றாற்போல வேறாய் நிற்றலும் பெற் றாம். நீர் உப்பின் குணமேயாயவாறு போல உயிரும் மெய்யின் குணமே யாய் வன்மை மென்மை இடைமை எய்தி நிற்றல் கொள்க.

எ - டு: க - ங - ய எனக் கூட்டமும் பிரிவும் மூவகை யோசையுங் காண்க. (கஅ)

1 புள்ளி முதலாவது ஒரு சிறு நட்டுக்கோடாயிருந்து பின்பு குத்தாய்க் குறுகிற்று எனபர்.

வல்லினமெய்

கக. வல்லெழுத் தென்ப க ச ட த ப ற.

இது தனிமெய்களுட் சிலவற்றிற்கு வேறோர் குறியீடு கூறுகின்றது.

இ - ள்: க ச ட த ப ற — க ச ட த ப ற என்னுந் தனி மெய்களே, வல்லெழுத்தென்ப — வல்லெழுத்தென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

இஃது ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி. ஒழிந்த மெல்லெழுத்தையும் இடையெழுத்தையும் நோக்கித் தாம் வல்லென்றிசைத்தலானும் வல்லெனத் தலைவளியாற் பிறத்தலானும் வல்லெழுத்தாயிற்று. (கக)

மெல்லின மெய்

உ. மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன.

இதுவும் அது.

இ - ள்: ங ஞ ண ந ம ன — ங ஞ ண ந ம ன என்னுந் தனி மெய்களே, மெல்லெழுத் தென்ப — மெல்லெழுத்தென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி. மெல்லென்றிசைத்தலானும் மெல்லென்று மூக்கின் வளியாற் பிறத்தலானும் மெல்லெழுத்தாயிற்று.

இடையின மெய்

உக. இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள.

இதுவும் அது.

இ - ள்: ய ர ல வ ழ ள — ய ர ல வ ழ ள என்னுந் தனி மெய்களே, இடையெழுத்தென்ப — இடையெழுத்தென்னுங் குறியினையுடைய என்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி. இடைநிகர்த்தாய் ஒலித்தலானும் இடைநிகர்த்தாய மிடற்றுவளியாற் பிறத்தலானும் இடையெழுத்தாயிற்று.

வல்லினத்துக் க-ச-த-ப என்னும் நான்கும் மெல்லினத்து ஞ - ந - ம என்னும் மூன்றும் இடையினத்து ய - வ என்னும் இரண்டும் மொழிக்கு முதலாதல் நோக்கி இம்முறையே வைத்தார். இப்பெயரானே எழுத்தென்னும் ஓசைகள் உருவாயின. உயிர்க்குங் குறுமை நெடுமை கூடலின் அவையும் உருவாயின. இது சார்பிற் றோற்றத்திற்கும் ஒக்கும். (உக)

ங. மயக்கம்

மெய் மயங்குமாறு

உஉ. அம்மூ வாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயங்[1] குடனிலை தெரியுங் காலை.

1 (பாடம்) மெய்ம்மயக்,

இது தனிமெய் பிறமெய்யோடுந் தன்மெய்யோடும் மயங்கும் மயக்கமும் உயிர்மெய் உயிர்மெய்யோடுந் தனிமெய்யோடும் மயங்கும் மயக்கமுங் கூறுகின்றது.

இ - ள்: அம்மூவாறும் — அங்ஙனம் மூன்று கூறுகப் பகுத்த பதினெட்டு மெய்யும், வழங்கியல் மருங்கின் — வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் எழுத்துக்களைக் கூட்டி மொழிப்படுத்து வழங்குதல் உளதாமிடத்து, மெய் மயங்கும் நிலை — தனி மெய் தன் முன்னர் நின்ற பிறமெய்யோடுந் தன்மெய்யோடும் மயங்கும் நிலையும், உடன்மயங்கும் நிலை — அப்பதினெட்டும் உயிருடனே நின்று தன் முன்னர் நின்ற உயிர்மெய்யோடுந் தனி மெய்யோடும் மயங்கும் நிலையுமென இரண்டாம், தெரியுங்காலை — அவை மயங்கும் மொழியாந் தன்மை ஆராயுங்காலத்து; எ - று.[1]

எனவே, தனித்து நின்ற எழுத்துடன் முன்னின்ற எழுத்துக்கள் தாங் கூடுமாறு கூறினராயிற்று. கட்க என்றுல் இடை நின்ற தனிமெய் முன்னர் நின்ற தன்னின் வேறுய ககரவொற்றேடு மயங்கிற்று. காக்கை என்றுல் இடைநின்ற ககரவொற்று முன்னர் நின்ற தன்னெற்றேடு மயங்கிற்று. கரு என ஈரெழுத்தொருமொழியுங் கருது என மூவெழுத்தொருமொழியும் உயிர்மெய் நின்று தன்முன்னர் நின்ற உயிர்மெய்யோடு மயங்கிற்று. துணங்கை என உயிர்மெய் நின்று தன்முன்னர் நின்ற தனிமெய்யோடு மயங்கிற்று. கல் வில் என உயிர்மெய் நின்று தனிமெய்யோடு மயங்கிற்று.

தெரியுங்காலை என்றதனுன் உயிர் முன்னர் உயிர்மெய்ம்மயக்கமும் உயிர் முன்னர்த் தனிமெய்ம் மயக்கமுங் கொள்க. அவை அஃ ஆம்பல் என்றுற் போல்வன.

மெய்ம்மயக்கங்களுள் தனிமெய் முன்னர்ப் பிற மெய் நின்று மயங்குதல் பலவாதலிற் பல சூத்திரத்தாற் கூறித் தன் முன்னர்த் தான் வந்து மயங்குதலை ஒரு சூத்திரத்தாற் கூறுப. அவை மயங்குங்கால் வல்லினத்தில் டகரமும் றகரமும் மெல்லினமாறும் இடையினமாறும் பிற மெய்யோடு மயங்கு மென்றும் வல்லினத்திற் சகதபக்கள் தன் மெய்யோடன்றிப் பிற மெய்யோடு மயங்கா வென்றும் உய்த்துணரக் கூறுமாறு உணர்க.

மூவாறும் என்னும் உம்மை முற்றும்மை.

இச்சூத்திரம் முதலாக 'மெய்ந்நிலை சுட்டின்' (எழு - கூ0) ஈறுக மேற் கூறும் மொழிமரபிற்குப் பொருந்திய கருவி கூறுகின்றதென்றுணர்க; எழுத்துக்கள் தம்மிற் கூடிப் புணருமாறு கூறுகின்றதாதலின். (உ)

தனிமெய் பிறமெய்யுடன் மயங்குமாறு

உங. ட ற ல ள என்னும் புள்ளி முன்னர்க்
க ச ப என்னு மூவெழுத் துரிய.

இது தனிமெய் பிறமெய்யோடு மயங்கும் மயக்கம் உணர்த்துகின்றது.

---

1 'அம்மூவாறும்...மெயம்மயங்குடனிலை' என்று ஆசிரியர் கூறியிருப்பதால், மெய்யொடு மெய் மயங்கும் உடனிலை மெய்ம்மயக்கமுமே வேற்றுநிலை மெய்ம்மயக்கமுமே குறிக்கப்பட்டனவாம். உயிர்மெய இரட்டை யெழுத்தாதலின், அது மெய்யோடும் உயிர்மெய்யோடும் மயங்கும் எனக கூறுவது பொருந்தாது.

இ - ள்: ட ற ல ள என்னும்புள்ளிமுன்னர் — மொழியிடை நின்ற ட ற ல ள என்று கூறப்படும் நான்கு புள்ளிகளின் முன்னர், க ச ப என்னும் மூவெழுத்து உரிய — க ச ப என்று கூறப்படும் மூன்றெழுத்தும் வந்து மயங்குதற்கு உரிய ; எ - று.

எ - டு: கட்க கட்சி கட்ப எனவும் கற்க முயற்சி கற்ப எனவுஞ் செல்க வல்சி செல்ப எனவும் கொள்க. நீள்சினை கொள்ப எனவுந் தனிமெய் பிற மெய்யோடு மயங்கியவாறு காண்க. சுட்சிமூர் கற்சிமூர் என்பன இருமொழிப் புணர்ச்சியாகலின் ஈண்டைக் காகா. (உங)

உச. அவற்றுள்,
ல ளஃகான் முன்னர் ய வவுந் தோன்றும்.

இதுவும் அது.

இ - ள்: அவற்றுள் — முற்கூறிய நான்கனுள், ளஃகான் முன்னர் — லகார ளகாரமாகிய புள்ளிகளின் முன்னர், யவவுந் தோன்றும் — கசபக்களே யன்றி யகர வகரங்களும் வந்து மயங்கும் ; எ - று.

கொல்யானை செல்வம் வெள்யாறு கள்வன் என வரும்.

இவற்றுட் கொல்யானை என வினைத்தொகையும் வெள்யாறு எனப் பண்புத்தொகையும் நிலைமொழி வருமொழி செய்வதற்கு இயையாமையின் 'மருவின் பாத்திய' என்று கூறுவராதலின் இவ்வாசிரியர் இவற்றை ஒரு மொழியாகக் கொள்வ ரென்று உணர்க. இக்கருத்தானே மேலும் வினைத் தொகையும் பண்புத்தொகையும் ஒருமொழியாகக் கொண்டு உதாரணங் காட்டுதும். அன்றி இவ்வாசிரியர் நூல் செய்கின்ற காலத்து வினைத் தொகைக்கண்ணும் பண்புத்தொகைக்கண்ணு மன்றி ஒருமொழிக்கண்ணே மயங்குவனவும் உளவாதலின், அவற்றைக் கண்டு இலக்கணங் கூறினர். அவை பின்னர் இறந்தன வென்று ஒழித்து உதாரணமில்லனவற்றிற்கு உதாரணங் காட்டாமற் போதலே நன்றென்று கூறலும் ஒன்று. (உச)

உடு. ஙஞண நமன எனும்புள்ளி முன்னர்த்
தத்தம்மி னிசைகள் ஒத்தன நிலையே.

இதுவும் அது.

இ - ள்: ங ஞ ண ந ம ன எனும் புள்ளி முன்னர் — ங ஞ ண ந ம ன என்று கூறப்படும் புள்ளிகளின் முன்னர், தத்தம்மி னிசைகள — தமக்கினமாய் முன்னின்ற க ச ட த ப ற க்கள், ஒத்தன நிலையே — பின்னிற்றற்குப் பொருந்தின மயங்கி நிற்றற்கண் ; எ - று.

எ - டு: கங்கன் கஞ்சன் கண்டன் கந்தன் கம்பன் மன்றன் என வரும். தெங்கு பிஞ்சு வண்டு பந்து கம்பு கன்று எனக் குற்றுகரமுங் காட்டுப. (உடு)

உசு. அவற்றுள்,
ணனஃகான் முன்னர்க்
கசஞபமயவ ஏழு முரிய.

இதுவும் அது.

இ - ள்: அவற்றுள் — மேற்கூறிய மெல்லொற்று ஆறனுள், ணனஃகான் முன்னர் — ணகார னகாரங்களின் முன்னர், கசஞபமயவ ஏழும் உரிய — டறக்களே யன்றிக் கசஞபமயவ என்னும் ஏழெழுத்தும் வந்து மயங்குதற்கு உரிய; எ - று.

எ - டு: எண்கு வெண்சாத்து வெண்ஞாண் பண்பு வெண்மை மண்யாறு எண்வட்டு எனவும், புன்கு புன்செய் மென்ஞாண் அன்பு வன்மை இன்யாழ் புன்வரகு எனவும் வரும். எண்வட்டு வினைத்தொகை. எண்கு புன்கு பெயர். (உசு)

உஎ. ஞநமவ என்னும் புள்ளி முன்னர்
யஃகான் நிற்றல் மெய்பெற் றன்றே.

இதுவும் அது.

இ - ள்: ஞநமவ என்னும் புள்ளி முன்னர் — ஞநமவ என்று கூறப்படும் புள்ளிகளின் முன்னர், யஃகான் நிற்றல் மெய் பெற்றன்றே — யஃகான் நிற்றல் பொருண்மை பெற்றது; எ - று.

இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ் செய்தலின், அக்காலத்து ஒருமொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்றும். அவை இக்காலத்து இறந்தன.

இனி உரையாசிரியர் உரிஞ்யாது பொருந்யாது திரும்யாது தெவ்யாது என இருமொழிக்கண் வருவன உதாரணமாகக் காட்டினராலெனின், ஆசிரியர் ஒரு மொழியாமாறு ஈண்டுக் கூறி, இருமொழி புணர்த்தற்குப் புணரியலென்று வேறோர் இயலுங் கூறி, அதன்கண் 'மெய்யிறு சொன்முன் மெய்வரு வழியும்' (எழு - கஅ) என்று கூறினர். கூறியவழிப் பின்னும் 'உகரமொடு புணரும் புள்ளி யிறுதி' (எழு - ககூக) என்றும் பிறண்டும் ஈறுகடோறும் எடுத்தோதிப் புணர்ப்பர். ஆதலின் ஈண்டு இருமொழிப் புணர்ச்சி காட்டிற் கூறியது கூறலென்னுங் குற்றமாம்.[1] அதனால் அவை காட்டுதல் பொருந்தாமை உணர்க. (உஎ)

உஅ. மஃகான் புள்ளிமுன் வவ்வுந் தோன்றும்.

இதுவும் அது.

இ - ள்: மஃகான் புள்ளிமுன் — முற் கூறியவற்றுள் மகர மாகிய புள்ளி முன்னர், வவ்வுந் தோன்றும் — பகர யகரமே யன்றி வகரமும் வந்து மயங்கும்; எ - று.

இதற்கும் உதாரணம் இக்காலத்து இறந்தன. அன்றி, வரும் வண்ணக் கன் என்றாற்போல்வன காட்டின் 'வகார மிசையும் மகாரங் குறுகும்.' (எழு - ஙகூ0) என்ற விதி வேண்டாவாம். (உஅ)

1 மயக்கம் வேறு புணர்ச்சி வேறுதலிய, 'ஈண்டு இருமொழிப் புணர்ச்சி காட்டிற கூறியதுகூறலென்னுங் குறறமாம்' எனறு நசசிறாகினியர் கூறுவது பொருந்தாது.

உகூ. ய ர ழ என்னும் புள்ளி முன்னர்
முதலா கெழுத்து ஙகரமொடு தோன்றும்.

இதுவும் அது.

இ - ள்: ய ர ழ வென்னும் புள்ளி முன்னர் — ய ர ழ என்று கூறப்படும் மூன்று புள்ளிகளின் முன்னர், முதலாகெழுத்தும் — மொழிக்கு முதலாமென மேற்கூறும் ஒன்பதெழுத்துக்களும், உம்மையான் மொழிக்கு முதலாகாத பிற எழுத்துக்களும், ஙகர மொடு தோன்றும் — ஙகாரமும் வந்து மயங்கும்; எ - று.

எ - டு: ஆய்க ஆர்க ஆழ்க, ஆய்தல் ஆர்தல் ஆழ்தல், ஆய்நர் ஆர்நர் ஆழ்நர், ஆய்பவை ஆர்பவை ஆழ்பவை, வாய்மை நேர்மை கீழ்மை, எய்சிலை வார்சிலை வாழ்சேரி, தெய்வம் சேர்வது வாழ்வது, பாய்ஞெகிழி கோஞெகிழி வாழ்ஞெண்டு, செய்யாறு போர்யானை வீழ்யானை என மொழிக்கு முதலாம் ஒன்பதும் வந்து மயங்கின. செய்யாறு என யகரத்தின் முன்னர் யகரம் வந்தது தன்முன்னர்த் தான் வந்ததாம்.

இனி உம்மையாற் கொண்ட மொழிக்கு முதலாகாதவற்றின்கண்ணுஞ் சில காட்டுதும்: ஓய்வு சோர்வு வாழ்வு, ஓய்வோர் சோர்வோர் வாழ்வோர், ஆய்ஞர் சேர்ஞர் ஆழ்ஞர் என வரும். பிற எழுத்துக்களோடு வருவன உள வேனும் வழக்குஞ் செய்யுளும் நோக்கிக் கூறிக்கொள்க.

இனி வேய்ங்ஙனம் வேர்ங்ஙனம் வேழ்ங்ஙனம் என மொழிக்கு முதலா காத ஙகரம் இடைவந்த சொற்கள் அக்காலத்து வழங்கின என்று உணர்க, ஆசிரியர் ஓதுதலின். இதனை 'ஙகரமொடு தோன்றும்' எனப் பிரித்தோதினர் அக்காலத்தும் அரிதாக வழங்கலின்.

இனி வேய்கடிது வேர்கடிது வீழ்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது என்பன காட்டின் அவை இருமொழியாக நிலைமொழி வருமொழி செய்து மேற்புணர்க்கின்றன ஈண்டைக்காகா எனு மறுக்க.

தனிமெய் தன்மெய்யோடு மயங்குமாறு

ஙஙி. மெய்ந்நிலை சுட்டி னெல்லா வெழுத்துந்
தம்முற்றும் வரூஉம் ரழவலங் கடையே.

இது நிறுத்தமுறையானே தனிமெய் தன்னெற்றோடு மயங்குமாறு கூறுகின்றது.

இ - ள்: மெய்ந்நிலை சுட்டின் — பொருணிலைமையைக் கருதின், எல்லா எழுத்தும் — பதினெட்டு மெய்யும், தம்முன் தாம் வரூஉம்—தம்முன்னே தாம் வந்து மயங்கும், ர ழ அலங்கடையே— ரகார ழகாரங்களல்லாத இடத்து; எ - று.

எ - டு: காக்கை எங்ஙனம் பச்சை மஞ்ஞை பட்டை மண்ஞெத்தை வெஞ்ஞெய் அப்பு அம்மை வெய்யர் எல்லி எவ்வி கள்ளி கொற்றி கண்ணி என வரும்.

மெய்ம்மேல சுட்டின் என்றதனால் தனிமெய் மூன்னர் உயிர்மெய் வரு மென்று கொள்க. எல்லா மென்றது ரகார ழகாரங்கள் ஒழிந்தனவற்றைத் தழுவிற்று. (கூ0)

கூ. எழுத்துக்களின் பிற மரபுகள்

சுட்டெழுத்துக்கள்

கூக. அ இ உ அம் மூன்றுஞ் சுட்டு.

இது குற்றெழுத் தென்றவற்றுட் சிலவற்றிற்கு வேறோர் குறியீடு கூறு கின்றது.

இ - ள்: அ இ உ அம்மூன்றுஞ் சுட்டு — அ இ உ என்று கூறிய அம்மூன்றுஞ் சுட்டென்னுங் குறியினையுடைய; எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கியதோர் குறி, சுட்டி அறியப் படும் பொருளை உணர்த்தலின். தன்னின முடித்தல் என்பதனால் எகரம் வினாப்பொருள் உணர்த்தலுங் கொள்க.

எ - டு: அக்கொற்றன் இக்கொற்றன் உக்கொற்றன் எப்பொருள் என வரும். இவை பெயரைச் சார்ந்து தத்தங் குறிப்பிற் பொருள் செய்த இடைச்சொல். இச்சூத்திரம் ஒருதலைமொழித லென்னும் உத்தி.[1] இதுவும் மேலைச் சூத்திரமும் எழுத்தாக்கமையன்றி மொழிநிலைப்பட்டு வேறோர் குறிபெற்று நிற்றலின் மொழிமரபினைச் சேர வைத்தார். (கூக)

வினா வெழுத்துக்கள்

கூஉ. ஆ ஏ ஓ அம் மூன்றும் வினா.

இது நெட்டெழுத்தென்றவற்றுட் சிலவற்றிற்கு வேறோர் குறியீடு கூறு கின்றது.

இ - ள்: ஆ ஏ ஓ அம்மூன்றும் வினா — ஆ ஏ ஓ என்று கூறப் பட்ட அம்மூன்றும் வினா என்னுங் குறியினையுடைய; எ - று.

இதுவும் ஆட்சியுங் காரணமும் நோக்கிய குறி, வினாப்பொருள் உணர்த்தலின்.

எ - டு: உண்கா உண்கே உண்கோ என வரும். இவற்றுள் ஆகாரம் இக்காலத்து வினாவாய் வருதல் அரிது. நீயே நீயோ என்பது இக் காலத்து வரும். இவற்றுள் ஏ ஓ என்பன இடைச்சொல்லோத்தினுள்ளுங் கூறினார், ஏகார ஓகாரங்கள் தரும் பொருட்டொகைபற்றி. இது மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்த லென்னும் உத்திக்கு[2] இனமாம், யகரஆகாரமும் வினாவாய் வருதலின். (கூஉ)

---

1 ஒருதலை மொழிதல் — ஓர் அதிகாரத்திற் சொல்லவேண்டிய ஒரு பொருட்கு வேறோர் அதிகாரத்தில் இலகுகணங்கூறி அதனையே மற்றவிடத்தும் பெறவைத்தல். சொல் லதிகாரத்திற சொல்லவேண்டிய சுட்டை எழுத்ததிகாரத்திற கூறி, அதையே சொல்லதிகாரத்திற்கும் பெறவைத்தலை காண்க.

2 மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித் தல்—எடுத்துக் கூறிய பொருளிலேயே அதற்கினமானதும் எடுத்துக் கூறுதுமான பொருளைப் பெறவைத்தல். 'ஆ' வினாவில 'யா' வினாவையும் 'ஏ' வினாவில 'எ' வினா வையும் அடக்கியது காண்க.

இசைநூன் முறையில் எழுத்தொலிகள்

கூகூ. அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்.

இது பிறன்கோட் கூறலென்னும் உத்திபற்றி இசைநூற்கு வருவதோர் இலக்கணமாமாறு கூறி, அவ்விலக்கணம் இந்நூற்குங் கொள்கின்றது.

இ - ள்: அளபிறந்து உயிர்த்தலும் ஒற்றிசை நீடலும் நரம்பின் மறைய என்மனார் புலவர் — முற்கூறிய உயிரும் உயிர்மெய்யும் மாத்திரையை இறந்தொலித்தலும் ஒற்றெழுத்துக்கள் அரைமாத்திரையின் நீண்டொலித்தலும் யாழ்நூலிடத்தன என்று கூறுவர் புலவர், இசையொடு சிவணிய உளவென மொழிப — அங்ஙனம் அளபிறந்தும் நீண்டும் இசைத்தல் ஓசையோடு பொருந்திய நால்வகைச் செய்யுட்களுக்கும் உளவென்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

எழுத்துக்கள் முற்கூறிய மாத்திரையை இறந்தொலிக்குமாறு கண்டு, அஃது இறந்தொலிக்கும் இடங் கூறினர், எழுத்துஞ் சொல்லும் பொருளுங் கிடக்கும் இடஞ் செய்யுளிடமாதலின். அது மிக்கொலித்தலைச் செய்யுளியலின்கண் 'மாத்திரை யெழுத்திய லசைவகை யெனஅ' (செய் - க) என இருபத்தாறு உறுப்பிற்குஞ் சிறப்புறுப்பாக முற்கூறிப், பின்னர்

'மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.' (செய் - உ)

என இச்சூத்திரத்தோடு மாட்டெறிந்து, பின்னும்

'எழுத்தள வெஞ்சினுஞ் சீர்நிலை தானே
குன்றலு மிகுதலு மில்லென மொழிப.' (செய் - ங)

என்றுங் கூறினர். இது எதிரது போற்றலென்னும் உத்தியுங் கூறிற்று.

எ - டு: 'வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளளினி' (கலி - கக) என்புழி ழகர ஆகாரமும் ககர எகாரமும் மாத்திரை இறந்தொலித்தவாறு உணர்க. 'பிடியூட்டிப் பின்னுண்ணுங்கு களிறெனவும் உரைத்தனரே' (கலி - கக) என்புழி ஙகரவொற்று அளவிறந்தவாறு காண்க. ஒழிந்த மூவகைச் செய்யுட்கும் இவ்வாறே தத்தமக்குரிய பா என்னும் உறுப்பினை டாத்தி அளவு மிகுமாறு காண்க.

சிவணிய என்பது தொழிற்பெயர்.[1] இசையொடு சிவணிய எனவே செய்யுளாதல் பெற்றும். நரம்பு என்றது ஆகுபெயராய் யாழினை உணர்த்திற்று. மறை என்றது நூலை. மொழிப என்றும் என்மனார் புலவர் என்றும் இருகாற் கூறியவதனால், இங்ஙனம் பொருள் கூறலே ஆசிரியர்க்குக் கருத்தாயிற்று. என்னை? செய்யுளியலுட் கூறிய 'மாத்திரை யளவும்' என்னுஞ் சூத்திரத்தில் 'மேற்கிளந்தன்ன' (செய் - உ) என்னும் மாட்டேற்றிற்கு இவ்வோத்தினுள் வேறோர் சூத்திரம் இன்மையின். இவ்விலக்கணங் கூறுக்காற் செய்யுட்

1 தொழிற்பெயர் என்றது வினையாலணையும் பெயரை.

குப் பா வென்னும் உறுப்பு நிகழாது அவை உரைச்செய்யுட் போல நிற்றலின் இவ்விலக்கணங் கூறவே வேண்டுமென்று உணர்க.

'சூத்திரத் துப்பொரு ளன்றியும் யாப்புற
இன்றி யமையா நியைபவை யெல்லாம்
ஒன்ற வுரைப்ப துரையெனப் படுமே.' (மரபியல் - ஈ0நூ)

என்னும் மரபியற் சூத்திரத்தானே இவ்வாறே சூத்திரங்களே நலிந்து பொரு ளுரைப்பன வெல்லாங் கொள்க. (நூ)

நூன்மரபு முற்றிற்று.

உ. மொழிமரபு

[மொழிக்கண் நின்ற எழுத்தின் இலக்கணம் உணர்த்துவது.]

க. சார்பெழுத்துக்கள் மொழிகளிற் பயிலுமாறு
குற்றியலிகாத்திற்கு இடனும் பற்றுக்கோடும்

நூ. **குற்றிய லிகரம் நிற்றல் வேண்டும்**
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வருஉம் மகரம் ஊர்ந்தே.

என்பது சூத்திரம். மேல் எழுத்து உணர்த்திய பின்னர், அவை தம்முள் தொடருமாறும் உணர்த்தி அவ்வெழுத்தாலும் மொழியது மரபு உணர்த்து நின்றமையின், இவ்வோத்து மொழிமரபெனக் காரணப் பெயர்த்தாயிற்று. இச்சூத்திரம் முன்னர்ச் சார்த்து வருமென்ற மூன்றனுட் குற்றியலிகரத்திற்கு இடனும் பற்றுக்கோடு கூறுகின்றது.

இ - ள்: உரையசைக் கிளவிக்கு வருஉம் — தான் கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர்முக மாக்குஞ் சொல்லிற்குப் பொருந்த வரும், ஆவயின் — அம் மியா என்னும் இடைச் சொல்லைச் சொல்லுமிடத்து, யாவென் சினைமிசை மகரம் ஊர்ந்து — யாவென்னும் உறுப்பின் மேலதாய் முதலாய் நின்ற மகரவொற்றினை யேறி, குற்றியலிகரம் நிற்றல் வேண்டும் — குற்றியலிகரம் நிற்றலை விரும்பும் ஆசிரியன்; எ - று.

உ - டு: கேண்மியா சென்மியா என வரும். கேள் என்றது உரையசைக் கிளவி; அதனைச் சார்ந்து தனக்கு இயல்பின்றி நின்றது மியா என்னும் இடைச்சொல். அவ்விடைச்சொல் முதலும் அதனிற் பிரியும் யா அதற்கு உறுப்புமாம் என்று கருதி யாவென் சினை என்றார். மியா இடம்; மகரம் பற்றுக்கோடு. யாவும் இகரம் அரை மாத்திரையாதற்குச் சார்பு. இவ்விடைச்சொல் தனித்து நிற்றல் ஆற்றுமையிற் கேள் என்பதனோடு சார்ந்து ஒரு சொல்லாயே நின்றுழி இடைநின்ற இகரம் ஒருமொழி யிடத்துக் குற்றியலிகரமாய் வருதலானும் ஆண்டு உணர்த்தற்குச் சிறப்பின்மையானும் ஈண்டுப்

போத்தந்து கூறினர். ஊர்ந்தெனவே குற்றிய லிகரமும் உயிரென்பது பெற்றும், உயிர்க்கல்லது ஏறுதலின்மையின். (க)

கூடு. புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே
உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்.

இது குற்றியலிகரம் புணர்மொழியகத்தும்வருமென்கின்றது.

இ - ள்: *புணரியல் நிலையிடைக் குறுகலும் உரித்தே* — அக்குற்றியலிகரம் புணரியலுள் ஒருமொழிக்கண் ணன்றி இருமொழி தம்மிற் புணர்தலியன்ற நிலைமைக்கண்ணுங் குறுகுதலுரித்து, *உணரக் கூறின் முன்னர்த் தோன்றும்* — அதற்கு இடமும் பற்றுக்கோடும் உணரக் கூறத்தொடங்கின் அவை குற்றியலுகரப் புணரியலுள்ளே கூறப்படும்; எ - று.

குறுகலும் என்னும்மிடத்து உம்மையை நிலையிடையும் என மாறிக் கூட்டுக. 'யகரம் வருவழி' (எழு - சுகஅ.) என்னுஞ் சூத்திரத்து யகரம் இடம், உகரஞ் சார்ந்த வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

எ - டு: நாகியாது வரகியாது தெள்கியாது எஃகியாது கொக்கியாது குரங்கியாது என வரும். இது மொழிவா மென்னும் உத்தி. (உ)

தனிமொழிக் குற்றியலுகரத்திற்கு இடனும் பற்றுக்கோடும்

கூசு. நெட்டெழுத் திம்பருந் தொடர்மொழி யீற்றுங்
குற்றிய லுகரம் வல்லா றூர்ந்தே.

இஃது ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு இடமும் பற்றுக்கோடும் உணர்த்துகின்றது.

இ - ள்: *குற்றியலுகரம் வல்லாறு ஊர்ந்தே* — குற்றியலுகரம் வல்லெழுத்துக்கள் ஆறினையும் ஊர்ந்து, *நெட்டெழுத்திம்பருந் தொடர்மொழி ஈற்றும்* — நெட்டெழுத்தின் பின்னும் ஐவகைத் தொடர்மொழியின் இறுதியினும் நிற்றல் வேண்டும் ஆசிரியன்; எ - று.

நெட்டெழுத்தினது பின் தொடர்மொழியினது ஈறென நிலத்த தகலம் போல[1] ஒன்றியற்கிழமைப்பட்டுநின்றது, அம்மொழியிற் றீர்த்து குற்றியலுகரம் நில்லாமையின். வல்லாறு பண்புத்தொகை. முற்றும்மை தொக்குநின்றது. அதிகாரமுறைமை என்னும் உத்தியான் நிற்றல் வேண்டு மென்பது வருவிக்க.

எ - டு: நாகு வாகு தெள்கு எஃகு கொக்கு குரங்கு என வரும். இவ் வாறுவகையும் இடம்; வல்லெழுத்துப் பற்றுக்கோடு. எனவே, மொழிக்கு ஈறுதலும் பெற்றும். பெருமுரசு திருமுரசு என்பன இருமொழிக்கண் வந்த முற்றுகரம். பரசு இங்கு எது என்னும் முற்றுகரங்கள் வடமொழிச் சிதைவு; தருக்கு அணுக்கு என்பன வினைக்கண் வந்த முற்றுகரம். குற்றுகரத்திற்கு முன்னர் வந்த உயிரேறி முடிய அரைமாத்திரையாய் நிற்றலும் முற்றுகரத்திற்கு முன்னர்வந்த உயிரேறி முடியாமையுந் தம்முள் வேற்றுமை.[2] (கூ)

1 நிலத்த தகலம் போல — நிலத்திலொன்றும் பிரிக்கப்படாத அகலம்போல.
2 நச்சினார்க்கினியர் இங்குகூறிய குற்றியலுகர இலக்கணப்படி, பெருமுரசு திருமுரசு தருக்கு அணுக்கு எனபனவும இக்காலத்துக் குற்றுகரங்களாம்.

புணர்மொழிக் குற்றியலுகரம் தன் மாத்திரையிற் குறுகல்

நூ.எ. இடைப்படிற் குறுகும் இடனுமா ருண்டே
கடப்பா டறிந்த புணரிய லான.

இது குற்றியலுகரம் புணர்மொழிக்கண் தன் அரைமாத்திரையிற் குறுகி வரும் என்கின்றது.

இ - ள்: இடைப்படிற் குறுகும் இடனுமார் உண்டே — அவ் வுகரம் ஒருமொழியுளன்றிப் புணர்மொழி யிடைப்படின் தன் அரை மாத்திரையினுங் குறுகும் இடனும் உண்டு, கடப்பாடு அறிந்த புணரியலான — அதற்கு இடனும் பற்றுக்கோடும் யாண்டுப் பெறுவதெனின், அதன் புணர்ச்சி முறைமை அறியுங் குற்றியலுகரப்புணரியலுள்; எ - று.

'வல்லொற்றுத் தொடர்மொழி' (எழு - சூ௰ஈ) என்பதனுள் வல்லெழுத்துத் தொடர்மொழியும் வல்லெழுத்து வரும் வழியும் இடம்; ஈற்று வல்லெழுத்துப் பற்றுக்கோடு.

எ - டு: செக்குச்சீனை சுக்குக்கோடு என வரும். இவை அரைமாத்திரையிற் குறுகியவாறு ஏனையவற்றோடு படுத்து உணர்க. இடனு மெனவே இது சிறுபான்மையாயிற்று. (ச)

ஆய்தம் தனிமொழியுள் வருமாறு

நூ.அ. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.

இது நிறுத்தமுறையானே ஆய்தம் ஒருமொழியுள் வருமாறு கூறுகின்றது.

இ - ள்: ஆய்தப்புள்ளி — ஆய்தமாகிய ஒற்று, குறியதன் முன்னர் உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்து — குற்றெழுத்தின் முன்னதாய் உயிரோடுகூடிய வல்லெழுத்தாறின் மேலிடத்ததாய் வரும்; எ - று.

வல்லாறன் மிசைத்து என்றதனானும் ஈண்டுப் புள்ளி என்றதனானும் 'ஆய்தத் தொடர்மொழி' (எழு - சூ௰ஈ) என மேற்கூறுதலானும் உயிரென்றது ஈண்டுப் பெரும்பான்மையுங் குற்றுகரமேயாம். சிறுபான்மை ஏனை உயிர்களையுங் கொள்க.

எ - டு: எஃகு கஃசு கஃடு கஃது கஃபு கஃறு அஃது இஃது உஃது எனவரும். கஃறீது முஃடீது என்பனவற்றை மெய்பிறிதாகிய புணர்ச்சி என்றதனானும் ஈண்டுப் புள்ளி என்றதனானும் ஆய்தமும் மெய்யாயிற்று. அஃகாமை வெஃகாமை அஃகி வெஃகி அஃகம் எனப் பிறவுயிர்களோடும் வந்தது. கஃசியா தெனத் திரிந்ததுவுங் குற்றியலுகரத்தோடு புணர்ந்ததாம். (இ)

ஆய்தம் புணர்மொழியுள்ளும் வருமாறு

நூ.ஊ. சிறியல் மருங்கினும் இசைமை தோன்றும்.

இஃது அவ்வாய்தம் புணர்மொழியகத்தும் வருமாறு கூறுகின்றது.

இ - ள்: ஈறியன் மருங்கினும்—நிலைமொழியீறு வருமொழி முத லொடு புணர்ந்து நடக்கும் இடத்தும், இசைமை தோன்றும் — அதன் அரைமாத்திரையே இசைக்குந் தன்மை தோன்றும்; எ - று.

எ - டு: கஃறீது முஃடது என வரும். இவ்வீறு இயலுமாறு புள்ளி மயங்கியலுட் பெறுதும். ஈண்டும் இடம் குற்றெழுத்துமேல் வரும் வல்லெழுத்து. (சு)

ஆய்தத்தின் இயல்பு

சூ. உருவினும் இசையினும் அருகித் தோன்றும்
மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா
ஆய்தம் அஃகாக் காலை யான.

இஃது எதிரதுபோற்ற லென்னும் உத்தியாற் செய்யுளியலை நோக்கி ஆய்தத்திற்கு எய்தியதோர் இலக்கணம் உணர்த்துகின்றது.

இ - ள்: உருவினும் இசையினும் அருகித்தோன்றுங் குறிப்பு மொழியும் — நிறத்தின்கண்ணும் ஓசையின்கண்ணுஞ் சிறு பான்மை ஆய்தந் தோன்றும் பொருள் குறித்தலையுடைய சொல் லும், எல்லா மொழியும் — அவை யொழிந்த எல்லா மொழிகளும், எழுத்தினியலா — ஒற்றெழுத்துக்கள் போல அரை மாத்திரை யின்கண்ணும் சிறுபான்மை மிக்கும் நடந்து, ஆய்தம் அஃகாக் காலையான—ஆய்தஞ் சுருங்காத இடத்தான சொற்களாம்[1]; எ-று.

எனவே, ஈண்டு ஆராய்ச்சியின்றேனுஞ் செய்யுளியலிற் கூறும் 'ஒற்றள பெடுப்பினும் அற்றெனமொழிப' (செய்யுளியல் - கஅ.) என்னுஞ் சூத்திரத் துக் 'கண்ண்டண்ணெனக் கண்டுங்கேட்டும்' (மரபிய - நடுஉ.) என்புழிக் கண்ணெனன்பது சீர்நிலை எய்திஞெற்போலக், 'கஃஃறென்னுங் கல்லதரத்தம்' என நிறத்தின்கண்ணும் 'சுஃஃறென்னுந் தண்டோட்டுப் பெண்ணை' என இசையின்கண்ணும் வந்த ஆய்தம் ஒரு மாத்திரை பெற்றுச் சீர்நிலை யெய்துங் கால், ஆண்டுப் பெறுகின்ற ஒரு மாத்திரைக்கு ஈண்டு எதிரதுபோற்றி விதி கூறினர், ஆய்தம் அதிகாரப்பட்டமை கண்டு. 'எஃஃ கிலங்கிய கையரா யின் னுயிர்—வெஃஃ குவார்க்கில்லை வீடு' என்று எனையிடத்தும் வந்தன. ஒற்றளபெடுக்குமாறு இவ்வதிகாரத்துக் கூறிற்றிலர், அஃது உயிரளபெடை போலச் சீர்நிலை யெய்தலும் அசைநிலையாந் தன்மையு முடையவாய்ச் செய் யுட்கே வருதலின். இதனானே ஒற்றளபெடையும் ஒரு மாத்திரை பெறு மென்பது பெற்றாம்.

எழுத்தினென்ற இன் உவமப்பொருள். இயலாவென்றது செய்யா வென்னும் வினையெச்சம்.

இவ்வாறன்றி இக் குறிப்புச்சொற்கள் ஆய்தம் இரண்டிட்டு எழுதப்படா வென்று பொருள் கூறிற் செய்யுளியலோடு மாறுபட்டு மாறுகொளக் கூற லென்னுங் குற்றந் தங்கு மென்று உணர்க. (எ)

1 'மொழிகுறிப்பெலலாம்' எனபதற்கு. 'குறிப்புமொழியெலலாம் என ஒரே பொருள் கொள்ளாது' குறிப்பு மொழியும்' 'எல்லா மொழியும்' என இரு பொருள் கொள்வது அத்துணைச் சிறந்ததன்று.

உ. அளபெடை

அளபெடையின் நிலை

சஉ. குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்
நெட்டெழுத் திம்பர் ஒத்தகுற் றெழுத்தே.

இஃது எதிரது போற்ற லென்னும் உத்தி பற்றிச் செய்யுளியலே நோக்கி 'நீட்டம் வேண்டின்' (எழு - சு.) என முற்கூறிய அளபெடையாமாறு கூறுகின்றது.

இ - ள்: குன்றிசை மொழிவயின் நின்று இசை நிறைக்கும்— அளபெடுத்துக் கூருக்காற் குன்றுவதான ஓசையையுடைய அவ்வளபெடைச் சொற்கண்ணே நின்று அவ்வோசையை நிறைக்கும், அவை யாவையோ வெனின், நெட்டெழுத்திம்பர் ஒத்த குற்றெழுத்தே — நெட்டெழுத்துக்களின் பின்னுநத் தமக்கு இன மொத்த குற்றெழுத்துக்கள்; எ - று.

உ - ம்: ஆஅ ஈஇ ஊஉ ஏஎ ஓஒ என வரும். குன்றிசை மொழி என்றதற்கு இசைகுன்று மொழி என்றுமாம். இனமொத்தலாவது பிறப்பும் புணர்ச்சியும் ஓசையும் வடிவும் ஒத்தல். ஈண்டு மொழி யென்றது 'அளபெடை யசைநிலை' (செய்யுளியல் — கஎ.) என்னுஞ் செய்யுளியல் சூத்திரத்து எட்டு இயற்சீரின்பாற் படுகின்ற எண்வகை அளபெடைச் சொற்களையும். அவை ஆஅ கடாஅ ஆஅழி படாஅகை ஆஅங்கு ஆஅவது புகாஅர்த்து விராஅயது என்பனவாம். கட்டளை[1]கொள்ளா ஆசிரியர் இவற்றைத் தனிநிலை முதனிலை இடைநிலை இறுதிநிலை யென்றும் அடக்குப. இனி மொழி யென்றதற்குத் தனிநிலை எழுனேயுமே கொள்ளின், ஒழிந்த இயற்சீர்ப்பாற்படும் அளபெடை கோடற்கு இடமின்மை உணர்க. (அ)

ஐகார ஔகார அளபெடை

சஎ. ஐ ஔ என்னும் ஆயீ ரெழுத்திற்
கிகர உகரம் இசைநிறை வாகும்.

இஃது ஒத்தகுற்றெழுத்து இல்லாதன அளபெடுக்குமாறு கூறுகின்றது.

இதுவும் எதிரது போற்றல்.

இ - ள்: ஐ ஔ என்னும் ஆயீரெழுத்திற்கு — தமக்கு இன மில்லாத ஐகார ஔகாரமென்று கூறப்படும் அவ்விரண்டெழுத்திற்கு, இகர உகரம் இசைநிறை வாகும் — ஈகார ஊகாரங்கட்கு இனமாகிய இகர உகரங்களைச் சார்த்திக்கூற, அவை அக்குன்றிசை மொழிக்கண் நின்று ஓசையை நிறைப்பனவாம்; எ - று.

ஐஇ ஔஉ என நிரனிறையாகக் கொள்க. இவற்றை முற்கூறிய இயற்சீரெட்டிற்கும் வற்பனவற்றோடு உதாரணங் காட்டிக் கொள்க.

இத்தனையும் தூன்மரபின் ஒழிபு.

---

1 கட்டளை - கட்டளையடி; அதாவது எழுத்தெண்ணி வகுக்கும் அடி.

கூ. எழுத்துக்கள் தொடர்ந்து, மொழியாதல்

ஓரெழுத் தொருமொழி

சஙூ. நெட்டெழுத் தேழே ஓரெழுத் தொருமொழி.

இஃது ஓரெழுத்தொருமொழி உணர்த்துதல் நுதலியவற்றுள் நெட்டெழுத்தாஞும் மொழியாக்கங் கூறுகின்றது.

இ - ள்: நெட்டெழுத்து ஏழே — நெட்டெழுத்தாகிய உயிர்க் ளேழும், ஓரெழுத்தொருமொழி — ஓரெழுத்தாஞுகும் ஒரு மொழி யாம்; எ - று.

முற்றும்மை தொகுத்து ஈற்றசை யேகாரம் விரித்தார்.

எ - டு: ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என வரும். ஔகாரம் உயிர்மெய்க்கண் ணல்லது வராது. ஊ என்பது தசை. இஃது உயிர்க்கும் உயிர்மெய்க்கும் விதி. கா தீ பூ சே தை நோ கௌ என வரும். இவை தம்மை யுணரநின்ற வழி எழுத்தாம். இடைநின்று [1]பொருளுணர்த்தியவழிச் சொல்லாம். நெட் டெழுத் தேறிய மெய் நெட்டெழுத்தாயுங் குற்றெழுத் தேறிய மெய் குற் றெழுத்தாயும் நிற்றலேயன்றி மெய்க்கு நெடுமையுங் குறுமையும் இன்மை உணர்க. (கo)

குற்றெழுத்தின் இயல்பு

சஙு. குற்றெழுத் தைந்தும் மொழிநிறை பிலவே.

இது குற்றெழுத்து ஐந்தும் மொழியாகா. அவற்றுட் சில மொழியாகு மென்பது உணர்த்துகின்றது.

இ - ள்: குற்றெழுத்து ஐந்தும் — குற்றெழுத்தாகிய உயிரைந் தும், மொழிநிறைபு இலவே — தாமே நிறைந்து நின்று மொழியா தல் இல; சில மெய்யோடுகூடி நிறைந்து நின்று மொழியாம்; எ - று.

எ - டு: து கொ என வரும். இவை உயிர்மெய்க்கண்ணல்லது வாரா மையானும், உயிர்க்கண்ணும், ஏனை அகரமும் ஈகாரமும், அக்கொற்றன் எப் பொருள் எனத் தனித்து நின்று உணர்த்தலாற்றாது இடைச் சொல்லாய்ப் பெயரைச் சார்ந்து நின்று சுட்டுப்பொருளும் வினப்பொருளும் உணர்த்துத லானும் 'நிறைபில' வென்றார். முற்றும்மை ஈண்டு எச்சப்பட்டு[2]நின்றதென்று உணர்க. (கக)

மொழியின் பெயர் முறை தொகை

சஙூ. ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி உளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.

---

1 இடைநிற்றல் - நெட்டெழுத்துகள் தம்மை யுணர்த்தி எழுதுதற்கும் பொருளை யுணர்த்திச் சொல்லுதற்கும் இடையாக நிற்றல்.

2 ஈண்டு முற்றும்மைக்கு முற்றுப்பொருள் கொள்ளினும் குற்றமின்று.

இது முன்னர் மெய்ம்மயக்கம் உடனிலைமயக்கங் கூறலானும் ஈண்டு 'நெட்டெழுத்தேழே' (எழு - சஙூ) என்பதனானும் எழுத்தினுள் மொழியா மாறு கூறினார், அம்மொழிக்கு இச்சூத்திரத்தாற் பெயரும் முறையுங் தொகையுங் கூறுகின்றார்.

இ - ள்: ஓரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழி இரண்டிறந்து இசைக்குந் தொடர்மொழி உளப்பட — ஓரெழுத்தானுகும் ஒருமொழியும் இரண்டெழுத்தானுகும் ஒரு மொழியும் இரண்டினை இறந்து பலவாற்றான் இசைக்குந் தொடர்மொழியுடனே கூட, மொழி நிலை மூன்றே — மொழிகளின் நிலைமை மூன்றேயாம், தோன்றிய நெறியே — அவை தோன்றிய வழக்கு நெறிக்கண், எ - று.

உ - ம்: ஆ கா ஈ ஓரெழுத்தொருமொழி, மணி வரகு கொற்றன் ஈரெழுத்தொருமொழி, குரவு அரவ மூவெழுத் தொருமொழி, கணவிரி ஈரெழுத்தொருமொழி, அகத்தியனார் ஐயெழுத்தொருமொழி, நிருச்சிற்றம் பலம் ஆறெழுத்தொருமொழி, பெரும்பற்றப்புலியூர் எழெழுத்தொருமொழி.[1]

ஓரெழுத்தொருமொழியுந் தொடர்மொழியும் என்னுது ஈரெழுத் தொருமொழியும் ஒதினார், சில பல என்னுந் தமிழ் வழக்கு நோக்கி.

ஆசிரியர் ஒற்றுங் குற்றுகரமும் எழுத்தென்று கொண்டனராதலின் மா கா எனநின்ற சொற்கள் மால் கால் என ஒற்றடுத்துழி ஒற்றினுன் வேறு பொருள் தந்து நிற்றலின் இவற்றை ஈரெழுத் தொருமொழி யென்றும், ஈகு வரகு என்னுங் குற்றுகர ஈற்றுச் சொற்களிற் குற்றுகரங்கள் சொல்லொடு கூடிப் பொருள் தந்து நிற்றலின் இவற்றை ஈரெழுத்தொருமொழி மூவெழுத் தொருமொழி யென்றுங் கோடுமென்பார்க்கு, ஆசிரியர் பொருளைக் கருதாது மாத்திரை குறைத்தமைபற்றி 'உயிரி லெழுத்து மெண்ணப் படாஅ' (செய்யுளியல் - ஈசு) 'குறிலே நெடிலே குறிலிணை' (செய்யுளியல் - ங) என்னுஞ் செய்யுளியற் சூத்திரங்களால் இவற்றை எழுத்தெண்ணவும் அலகிடவும் பெறு என்று விலக்குவராதலின், அவற்றுல் ஈண்டு ஈரெழுத்தொருமொழியும் மூவெழுத் தொருமொழியுங் கொள்ளின், மாறுகொளக் கூறல் என்னுங் குற்றந் தங்கு மென்று மறுக்க.

இனி 'நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி' (எழு - சஙூ) 'குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே' (எழு - சஎ) என்பனவற்றுன் மெய்க்குக் குறுமை நெடுமை யின்மையான் உயிரும் உயிர்மெய்யுமாகிய நெடிலுங் குறிலுமே மொழியா மென்று கூறி, மீட்டும் அதனையே இச்சூத்திரத்தான் ஓரெழுத்தொருமொழி யென்றெடுத்து அதனுளேடே ஈரெழுத்தையும் இரண்டிறந்ததனையுங் கூட்டி மொழியாகக் கோடலின், ஒற்றினைக் கூட்டி எழுத்தாகக் கோடல் ஆசிரியர்க்குக் கருத்தன்மை யுணர்க. அன்றியும் 'மொழிப்படுத் திசைப்பினும்' (எழு - ஙூ) என்னுஞ் சூத்திரத்திற் கூறுகின்றவாற்றுனும் உணர்க. 'அகரமுதல் னகரவிறுவாய் மூப்பஃதென்ப' (எழு - க) னென ஒற்றினையும் எழுத்தென்றது எழுத்தின் தன்மை கூறிற்று. ஈண்டு மொழியாத் தன்மை கூறிற்று. (கஉ)

1 'இங்கு நச்சினார்க்கினியர் 'உரைநடைக் கேற்பக் கொள்ளாது செயுளியற்கேற்பக் கொண்டு பொறுக்கோக குற்றுகரமும மெயயும சேரி எழுதெண ணுவது பொருந்தாது.

ச. எழுத்துக்களின் இயக்கம்

தனிமெய் இயக்கம்

சகூ. மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும்.

இது தனிமெய்களே அகரம் இயக்குமாறு கூறுகின்றது.

இ - ள்: மெய்யினியக்கம் — தனிமெய்களினது நடப்பு, அகர மொடு சிவணும — அகரத்தோடு பொருந்தி நடக்கும்; எ - று.

எனவே ஒருவன் தனிமெய்களே நாவாற் கருத்துப்பொருளாகிய உரு வாக இயக்கும் இயக்கமும் மூவகையாற் காட்சிப்பொருளாகிய வடிவாக இயக்கும் இயக்கமும் அகரத்தோடு பொருந்தி நடக்கும் என்றவாறு.

எ - டு: 'வல்லெழுத் தென்ப க ச ட த ப ற' (எழு - ககூ) 'ககார ஙகார முதலு வண்ணம்' (எழு - அகூ) என்றாற்போல்வன நாவால் இயக்கிய வாறு காண்க. எழுதிக் காட்டுமிடத்துக் ககரம் முதலியன உயிர் பெற்று நின்ற வடிவாக எழுதிப் பின்னர்த் தனிமெய்யாக்குதற்குப் புள்ளியிட்டுக் காட்டு கின்றவாற்றான் வடிவை இயக்குமிடத்தும் அகரங் கலந்து நின்றவாறு காண்க.

இங்ஙனம் மெய்க்கண் அகரங் கலந்து நிற்குமாறு கூறினுற் போலப் பதினேருயிர்க்கண்ணும் அகரங் கலந்து நிற்கு மென்பது ஆசிரியர் கூறாராயி னும், அந்நிலைமை தமக்கே புலப்படுதலானும் பிறர்க்கு இவ்வாறு உணர்த்துதல் அரிதாகலானு மென்று உணர்க. இறைவன் இயங்குதிணைக்கண்ணும் நிலைத் திணைக்கண்ணும் பிறவற்றின்கண்ணும் அவற்றின் தன்மையாய் நிற்குமாறு எல் லார்க்கும் ஒப்ப முடிந்தாற் போல அகரமும் உயிர்க்கண்ணுந் தனிமெய்க்கண் ணுங் கலந்து அவற்றின் தன்மையாயே நிற்கு மென்பது சான்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது, 'அகரமுதல்' என்னுங் குறளான் அகரமாகிய முதலெழுத்தையுடைய எழுத்துக்களெல்லாம் அதுபோல இறைவனுகிய முதலெழுத்தையுடைத்து உலக மென வள்ளுவனுர் உவமை கூறியவாற்றானுங், கண்ணன் எழுத்துக்களில் அக ரமாகின்றேன் யானே யெனக் கூறியவாற்றானும் பிறநூல்களானும் உணர்க.

இதனுன் உண்மைத்தன்மையுஞ் சிறிது கூறினராயிற்று. இதனே நூன் மரபிற் கூறுது ஈண்டுக் கூறினுர், 'வல்லெழுத் தென்ப க ச ட த ப ற' (எழு - ககூ) என்ற இடத்துத் தான் இடைநின்று ஒன்றென்பதோர் பொருளே உணர்த்தி மொழியாந்தன்மை எய்தி நிற்றலின். (கூ)

உயிர்மெய் என்னும் பெயர்

சஎ. தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும் மெய்ந்நிலை மயக்கம் மான மில்லே.

இது முன்னர் மெய்க்கண் உயிர் நின்றவாறு கூறி அவ்வுயிர் மெய்க்கண் ஏறி உயிர்மெய்யாய் நின்றகாலத்து அம் மெய்யாற் பெயர் பெறுமாறு கூறு கின்றது.

இ - ள்: எல்லா எழுத்தும் — பன்னீருயிரும், மெய்ந்நிலை தம் இயல் மயக்கங் கிளப்பின் — மெய்யின் தன்மையிலே தம்முடைய தன்மை மயங்கிற்றுகப் பெயர் கூறின், மானமில்லை — குற்றமில்லை; எ - று.

மெய்யின் தன்மையாவது வன்மை மென்மை இடைமை, தம்மியலாவது உயிர்த்தன்மை. என்றது வல்லெழுத்து மெல்லெழுத்து இடையெழுத்தென உயிர்மெய்க்கும் பெயரிட்டாளுதல் கூறிற்று. அவை 'வல்லெழுத்தியையின் அவ்வெழுத்து மிகுமே' (எழு - ககூ) எனவும், 'மெல்லெழுத்தியையின் இறுதியோ டுறழும்' (எழு - உ0) எனவும், 'இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள' (எழு - உக) எனவும், பிறண்டும் ஆள்ப. எழுத்தை வன்மை மென்மை இடைமை யென விசேடித்த சிறப்பான் இப்பெயர் கூறினர்.

இஃதன்றிப் பதினெட்டு மெய்யுந் தன்மை கூறுமிடத்து மெய்ம்மயக்கங் கூறிய வகையானன்றி வேண்டியவாறு மயங்கு மென்று கூறி 'அவற்றுள் ளஃகான் முன்னர் (எழு - உச) என்பதனைக் காட்டில், அஃது இரு மொழிக் கண்ணதென மறுக்க. (கச)

ஈரொற்றுடனிலை

சஅ. ய ர ழ என்னும் மூன்றும் ஒற்றக்
க ச த ப ங ஞ ந ம ஈரொற் றுகும்.

இஃது ஈரொற்றுடனிலையாமாறு கூறுகின்றது.

இ - ள்: ய ர ழ என்னும் மூன்றும் ஒற்ற — ய ர ழ வென்று கூறப்படும் மூன்று புள்ளியும் ஒற்றாய் நிற்ப, க ச த ப ங ஞ ந ம ஈரொற்றுகும்—க ச த பக்களும் ங ஞ ந மக்களும் வந்து ஈரொற் றாய் நிற்கும்; எ - று.

உ - டு: வேய்க்க வாய்ச்சி பாய்த்தல் வாய்ப்பு எனவும் பீர்க்கு சேர்ச்சி வார்த்தல் ஆர்ப்பு எனவும், வாழ்க்கை தாழ்ச்சி தாழ்த்தல் தாழ்ப்பு எனவும், காய்ங்கனி தேய்ஞ்சது சாய்ந்தனம் காய்ம்புறம் எனவும், சேர்ங்கல் சேர்ஞ்சிலை சேர்ந்திலை சேர்ம்புறம் எனவும் வரும். ழகாரத்திற்கு வாழ்ந்தனம் என இக்கா லத்து நகரவொற்று வரும். ஏனைய மூன்றும் இக்காலத்து வழங்கு மெனின் உணர்க.

இனித் தாழ்ங்குலை தாழ்ஞ்சினை தாழ்ந்திரள் வீழ்ம்படை என அக்கா லத்து வழங்கு மென்று இத்தொகைச் சொற்கள் காட்டலும் ஒன்று. உரை யாசிரியரும் இருமொழிக்கட் காட்டியவற்றிற்கு அவ்வீறுகடோறுங் கூறுகின்ற சூத்திரங்கள் பின்னர் வேண்டாமை உணர்க. இஃது ஈரொற்றுடனிலையாத லின் ஈண்டு வைத்தார்.

இனி நெடிற்கீழே யன்றிப் பல வெழுத்துத் தொடர்ந்து நின்றதன் பின்னும் ஈரொற்று வருதல் கொள்க. அவை வேந்தர்க்கு அன்னைக்கு என்றாற் போல்வனவாம். (கரி)

குறிற்கீ தொற்றுகா மெய்கள்

சகூ. அவற்றுள்,
ரகார ழகாரங் குற்றெற்[1] றுகா.

இஃது எய்தியது ஒரு மருங்கு மறுத்தல் கூறுகின்றது.

---

[1] ஈண்டுக் குற்று என்றது தனிக்குறிலை.

இ - ள்: அவற்றுள் — முற்கூறிய மூன்றனுள், ரகார றகாரம் — ரகாரமும் றகாரமும், சுற்றெற்றுகா—குறிற்கீழ் ஒற்றுகா, நெடிற்கீழ் ஒற்றும், குறிற்கீழ் உயிர்மெய்யாம்; எ - று.

கீழென்னும் உருபு தொகுத்துக் கூறினர். ஆகாதனவற்றிற்கு உதாரண மின்று.

எ - டு: கார் வீழ் என நெடிற்கீழ் ஒற்றுய் வந்தன. கரு மழு எனக் குறிற்கீழ் உயிர்மெய்யாய் வந்தன. இவற்றை விலக்கவே, யகரம் பொய் என வும் நோய் எனவும் இரண்டிடத்தும் ஒற்றுய் வருதல் பெற்றும். புகர் புகழ் புலவர் என்றுற் போல்வனவோ வெனின், மொழிக்கு முதலாம் எழுத்தினைச் சொல்வனவற்றிற்கே ஈண்டு ஆராய்ச்சியாதலால் அவை வேண்டியவாறே வரு மென்று உணர்க. அன்றியுங் சுற்றெற்றென்றே சூத்திரஞ் செய்தலிற் குறி லினை யொற்றினைக் காட்டிக் கடாவலாகாமை உணர்க. இது வரையறை யின்றி உயிர்மெய்யோடு தனிமெய் மயங்குவனவற்றிற் சில வொற்றிற்கு வரை யறை ஈண்டுக் கூறியது. (சசு)

தொடர் மொழி இயல்பு

நூ0. குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்
தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத் தியல.

இஃது 'அளபிறக் குயிர்த்தலும்' (எழு - நூ.) என்னுஞ் செய்யுளியலை நோக்கிய நூன்மரபிற் சூத்திரத்திற்குப் புறனடையாய் அதன்கண் நிகழ் வதோர் ஐயம் அகற்றுகின்றது; என்னை? உயிரும் உயிர்மெய்யும் அளபிறந்து இசைக்குங்காற் குறிலோ நெடிலோ இசைப்பதென மாணாக்கர்க்கு நிகழ்வதோர் ஐயம் அறுத்தலின்.

இ - ள்: குறுமையும் நெடுமையும் — எழுத்துக்களது குறிய தன்மையும் நெடிய தன்மையும், அளவிற்கோடலின் — மாத்திரை யென்னும் உறுப்பினைச் செவி கருவியாக அளக்கின்ற அளவு தொழிலாலே செய்யுட்குக் கொள்ளப்படுதலின், தொடர்மொழி யெல்லாம் — அம்மாத்திரை தம்முள் தொடர்ந்து நிற்கின்ற சொற்களெல்லாம், நெட்டெழுத் தியல — நெட்டெழுத்து மாத் திரை மிக்கு நடக்கும் படியாகத் தொடர்ந்த சொல்லாம்; எ - று.

எ - டு: 'வருவர்கொல் வயங்கிழாஅய்' (கலி - கக) எனவும், 'கடியவே கனங்குழாஅய்' (கலி - கக) எனவுங் குற்றெழுத்துக்களெல்லாம் நெட்டெழுத் தினை மாத்திரை மிகுத்தற்குக் கூடியவாறு உணர்க. ஏனைச் செய்யுட்களையும் இவ்வாறே காண்க. எனவே, மாத்திரை அளக்குங்கால் நெட்டெழுத்தே மாத்திரை பெற்று மிக்கு நிற்கும் என்றமையான், எதிரது போற்ற லென்னும் உத்திபற்றிச் செய்யுளியலை நோக்கிக் கூறியதாயிற்று. ஈண்டுக் கூறினர், நெட்டெழுத்து இரண்டு மாத்திரையின் இகந்து வரும் என்பது அறிவித்தற்கு.

அளபென்று மாத்திரையைக் கூறுது அளவெனச் சூத்திரஞ் செய்த மையான் அளவு தொழின்மேல் நின்றது. அது செய்யுளியலுள் 'மாத்திரை யளவும்' (செய்யுளியல் - உ) என்பதனாலும் உணர்க. இயல வென்றதனைச் செயவெனெச்ச மாக்கிப் படுத்தலோசையாற் கூறுக.

இனித் தன்னின முடித்த லென்பதனுன் ஒற்றிற்கும் இவ்வாறே கொள்க. 'குரங்குகளைப் பொலிந்த கொய்சுவற் புரவி' (அகம் - ச) என்ற குறுஞ்சீர்வண்ணத்திற்கு உரிய குற்றெழுத்துக்களெல்லாம் இடையி னின்ற ஒற்றெழுத்தை மாத்திரை மிகுத்தற்குக் கூடிநின்றவாறு உணர்க. எனவே, குற்றெழுத்துக்க ளெல்லாம் ஒற்றெழுதுதற்களோடும் நெட்டெழுத்துக்களோடுங் கூடி அவற் றையே ஒசைமிகுத்து நிற்கும் என்றவாறாயிற்று. இதனுனே ஒற்றிசை நீடலு மென்ற ஒற்றிசை நீளுங்காற் குற்றெழுத்தாய் நீளு மென்றார். இனி உரை யாசிரியர் புகர் புகழ் எனக் குறிலிணைக்கீழ் ரகார ழகாரங்கள் வந்த தொடர் மொழிகளெல்லாந் தார் தாழ் என்றாற்போல ஓசையொத்து நெட்டெழுத்தின் தன்மையவாம் என்றாராயினின், புகர் புகழ் என்பனவற்றை நெட்டெழுத் தென்றே எவ்விடத்தும் ஆளாமையானும் நெட்டெழுத்தாகக் கூறிய இலக் கணத்தால் ஒரு பயன் கொள்ளாமையானுஞ் செய்யுளியலுள் இவற்றைக் குறிலிணை ஒற்றடுத்த நிரையசையாகவுந் தார் தாழ் என்பனவற்றை நெட் டெழுத்து ஒற்றடுத்த நேரசையாகவுங் கோடலானும் அது பொருளன்மை உணர்க.[1] (கள)

செய்யுளில் ஈரொற்றிலக்கணம்

நுக. செய்யுள் இறுதிப் போலி மொழிவயின்
னகார மகாரம் ஈரொற் றுகும்.

இது செய்யுட்கண் ஈரொற்றிலக்கணமாமாறு கூறுகின்றது.

இ - ள்: செய்யுட் போலி மொழி இறுதிவயின் — செய்யுட் கண் போலு மென்னுஞ் சொல்லின் இறுதிக்கண், னகாரம் மகாரம் ஈரொற்றுகும் — னகாரமும மகாரமும் வந்து ஈரொற்று உடனிலை யாய் நிற்கும்; எ - று.

எ - டு: 'அந்நூலை - முந்நூலாக் கொள்வானும் போன்ம்' (கலித்-கஅநூ) 'சிதையுங் கலத்தைப் பயிலல் திருத்தித் — திசையறி மீகானும் போன்ம்' (பரி - கஅ-நிநி) என வரும். போலும் என்னுஞ் செய்யுமென்னும் முற்று ஈற்று மிசை யுகரம் மெய்யொழித்துக் கெட்டு லகாரக் திரிந்து நின்றது. இஃது இறுதி யில் முற்று; இடையிற் பெயரெச்சமாகிய உவமவுருபு.[2] ஈண்டு முற்றென்பார் இறுதிமொழி என்றார். (கஅ)

மகரங் குறுகுமிடம்

நுஉ. னகாரை முன்னர் மகாரங் குறுகும்.

இஃது அரையளபு குறுகு மென்ற மகாரத்திற்குக் குறுகும் இடம் இது வென்கின்றது.

இ - ள்: னகாரை முன்னர் மகாரங் குறுகும் — முற் கூறிய னகரத்தின் முன்னர் வந்த மகரந் தன் அரை மாத்திரையிற் குறுகி நிற்கும்; எ - று.

---

1 இம்மறுபபு அவவளவு பொருததமாய்த் தோன்றவிலலை.

2 போலும் என்னும் சொல், உயிரோ ஒனறு கேளீர் என இடையில் நிறபின பெய ரெச்சமும், மீகானும் போலும் மீகானும் போன்ம் என இறுதியில நிறபின் வினைமுற்றும் ஆகும்.

எ - டு: போன்ம் என முன்னர்க் காட்டினும். னகாரை யென இடைச் சொல் ஈறுதிரிந்து நின்றது.

இனித் தன்னின முடித்த லென்பதனுன் ணகாரவொற்றின் முன்னும் மகாரங் குறுகுதல் கொள்க. 'மருளினு மெல்லா மருண்ம்' எனவரும். (ககூ)

மொழிக்கண்ணும் மாத்திரை வேறுபடாமை

ருஙூ. மொழிப்படுத் திசைப்பினுந் தெரிந்துவே றிசைப்பினும் எழுத்தியல் திரியா என்மனர் புலவர்.

இஃது ஒற்றுங் குற்றுகரமும் ஈண்டு எழுத்துக்களோடு கூட்டி எண்ணப் பட்டு நிற்கு மென்பதூஉஞ் செய்யுளியலுள் எண்ணப்படாது நிற்கு மென்பதூஉங் கூறுகின்றது.

இ - ள். தெரிந்து — ஒற்றுங் குற்றுகரமும் பொருள்தரு நிலை மையை ஆராய்ந்து, மொழிப்படுத்து இசைப்பினும் — சொல்லாகச் சேர்த்துச் சொல்லினும், வேறு இசைப்பினும் — செய்யுளியலுள் ஒற்றுங் குற்றுகரமும் பொருள் தருமேனும் மாத்திரை குறைந்து நிற்கும் நிலைமையை நோக்கி எழுத்தெண்ணப்படா வென்று ஆண் டைக்கு வேறுகக் கூறினும், எழுத்தியல் திரியா என்மனர் புலவர் — அவ்விரண்டிடத்தும் அரைமாத்திரை பெற்று நிற்கும் ஒற்றுங் குற்றுகரமும் முற்கூறிய எழுத்தாந் தன்மை திரியாவென்று கூறு வர் புலவர்; எ - று.

இதனுன் ஒற்றும் ஆய்தமுங் குற்றுகரமும் எழுத்தாகி நின்று பொருள் தந்தும், எழுத்தெண்ணவும் அலகிடவும் பெறு வென்பது கூறினராயிற்று. தெரிந்து வேறிசைத்தல் குற்றுகரத்திற்கு இன்றுதலின் எற்புழிக்கோடலான் ஒற்றிற்கும் ஆய்தத்திற்கும் கொள்க.[1]

எ - டு. அல் இல் உண் எண் ஒல் எனவும், கல் வில் முள் செல் சொல் எனவும், ஆல் ஈர் ஊர் ஏர் ஓர் எனவும், கால் சீர் சூல் தேன் கோன் எனவும் உயிரும் உயிர்மெய்யுமாகிய குற்றெழுத்தையும் நெட்டெழுத்தையும் ஒற்றெழுத் துக்கள் அடுத்துநின்று பொருள்தந்தவாறு காண்க. கடம் கடாம் உடையான் திருவாரூர் அகத்தியனூர் என ஈரெழுத்தையும் மூவெழுத்தையும் நாலெழுத் தையும் ஐயெழுத்தையும் இறுதியிலும் இடையிலும் ஒற்றடுத்து நின்று பொருள்தந்தவாறு காண்க. எஃகு தெள்கு கொக்கு குரங்கு என்பனவும் எழுத் தெண்ணவும் அலகிடவும் பெறுக் குற்றுகரம் அடுத்து நின்று பொருள் தந்த வாறு காண்க. 'உயிரில் எழுத்தும் எண்ணப் படாஅ - உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான' (செய்யுளியல் - சச) என்பது எழுத்து எண்ணப் பெறு மைக்கு விதி.

இனி இச்சூத்திரத்திற்கு எழுத்துக்களைச் சொல்லாக்கிக் கூறினும் பிறி தாகக் கூறினும் மாத்திரை திரியாதென்று பொருள் கூறி, அகரம் என்புழியும் அ என்புழியும் ஆலம் என்புழியும் ஆ என்புழியும் ககரம் என்புழியுங் க என்புழி யுங் காலம் என்புழியுங் கா என்புழியும் ஓசை ஒத்து நிற்குமென்றல், அது

1 இவ்வாக்கியம முன்னும் பின்னுங் கூறியவற்றிற்கு முரணுகக் காண்கின்றது.

மூன்னர்க் கூறிய இலக்கணங்களாற் பெறப்படுதலிற் பயனில் கூற்று மென்க.[1] (உ0)

ரு. போலி

எழுத்துப் போலி

ருச. அகர இகரம் ஐகார மாகும்

இது சிலவெழுத்துக்கள் கூடிச் சிலவெழுத்துக்கள்போல இசைக்கு மென எழுத்துப்போலி கூறுகின்றது.

இ - ன்: அகர இகரம் ஐகாரம் ஆகும் — அகரமும் இகரமுங் கூடிச் சொல்ல ஐகாரம்போல இசைக்கும், அது கொள்ளற்க; எ - று.

போல என்றது தொக்கது.

எ - டு: ஐவனம் அஇவனம் என வரும்.[1] ஆகுமென்றதனான் இஃது இலக்கணமன்றாயிற்று. (உக)

ருடு. அகர உகரம் ஔகார மாகும்.

இதுவும் அது.

இ - ன்: அகர உகரம் ஔகாரம் ஆகும் — அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல ஔகாரம்போல இசைக்கும், அது கொள்ளற்க; எ - று.

போல என்றது தொக்கது.

எ - டு: ஔவை அஉவை என வரும்.[2] (உஉ)

ருகூ. அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐ என் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்.

இதுவும் அது.

இ - ன்: அகரத்திம்பர் யகரப் புள்ளியும் — அகரத்தின் பின் இகரமே யன்றி யகரமாகிய புள்ளி வந்தாலும், ஐயென் நெடுஞ் சினை மெய்பெறத் தோன்றும் — ஐயெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவு பெறத் தோன்றும்; எ - று.

எ - டு: ஐவனம் அய்வனம் என வரும்.[3] மெய் பெற என்றதனான் அகரத்தின் பின்னர் உகரமே யன்றி வகரப்புள்ளியும் ஔகாரம்போல வருமென்று கொள்க. ஔவை அவ்வை என வரும்.[4] (உங)

---

1 இம்மறுப்பு பொருந்துவதன்று.

1 இனி, இருநூறபாவிற்கு வயிரம் - வைரம் என எடுத்துகாட்டலும் ஒன்று.

2 இருநூறபாவிற்கு, கவுதாரி - கௌதாரி என எடுத்துகாட்டினும் ஆகும்.

3 அயவனம அயயர் எனறுறபோலவன செயயுளில எதுகைநோகில வரும் திரிபு வடிவங்களாகும்.

4 'அவ்வை' முதலியவடிவம. 'ஔவை' அதனபோலி.

ஐ ஔ குறுகுதல்

நுஎ. ஔள பாகும் இடனுமா ருண்டே[1]
தேருங் காலை மொழிவயி னை.

இஃது அதிகாரத்தான் ஐகாரத்திற்கும் ஔகாரத்திற்கும் எதிரது போற்ற லென்பதனுற் செய்யுளியலே நோக்கி மாத்திரைச்சுருக்கங் கூறுகின்றது.

இ - ள்: மொழிவயினை — ஒரு சொல்லிடத்தே நின்ற ஐகார ஔகாரங்கள், தேருங்காலை — ஆராயுமிடத்து, ஔளபாகும் இடனு மாருண்டே — ஒரு மாத்திரையாய் நிற்கும் இடமும் உண்டு; எ - று.

உம்மையான் இரண்டுமாத்திரை பெறுதலே வலிவுடைத்தாயிற்று. இடனு மென்றது ஒரு சொல்லின் முதலிடைகடை யென்னும் மூன்றிடத்துங் குறுகும், அது செய்யுட்கண் ஓசை இடர்ப்பட் டொலிக்குமிடத்துக் குறுகு மென்றற்கு. உரையிற்கோடலால் ஐகாரம் முதலிடைகடை யென்னும் மூன்றி டத்துங் குறுகும், ஔகாரம் முதற்கண் குறுகு மெனக் கொள்க.

எ - டு: ஐப்பசி கைப்பை இடையன் குவளை என வரும். 'அடைப்பை யாய்கோரு' எனவும், 'புனையிளங் கொங்கையாய் வரும்' எனவும் பிறவாறும் வருவன செய்யுளியலுட் காண்க. ஔவை கௌவை என வரும். ஔகாரம் 'கௌவைநீர் வேலிகூற்று' எனத் தொடை நோக்கிக் குறுகினவாறுங் காண்க. தேருங்காலை யென்றதனுன் ஒரெழுத் தொருமொழியுங் குறுகும். கை பை என வரும். (உசு)

போலியில் மற்றொரு வகை

நுஅ. இகர யகரம் இறுதி விரவும்.

இதுவும் போலிகூறுகின்றது.

இ - ள்: இகரயகரம் இறுதி விரவும் — இகரமும் யகரமும ஒருமொழியின் இறுதிக்கண் ஓசை விரவி வரும், அவ்விகாரங் கொள்ளற்க; எ - று.

நாய் நாஇ எனவரும்.[2] (உடு)

கூ. மொழி முதல் எழுத்துக்கள்

மொழி முதலாகும் உயிர்கள்

நுகூ. பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்.

இது மேல் எழுத்தினுன் மொழியாமாறு உணர்த்தி அம்மொழிக்கு முதலா மெழுத்து இவை யென்பது உணர்த்துகின்றது.

இ - ள்: பன்னீருயிரும் — பன்னிரண்டு உயிரெழுத்தும், மொழி முதல் ஆகும் — மொழிக்கு முதலாம்; எ - று.

1 ஆகார ஔகாரக் குறுக மாத்திரை ஒன்றரை எனபர் நேமிநாதர். இது முதல கடையிடங்கட்கேறுமம.

2 ஒருகால, நாயி எனபது பண்டை வழக்கா யிருந்திருக்கலாம.

எ - டு : அடை ஆடை இலை ஈயம் உளை ஊர்தி எழு எணி ஐவனம் ஒளி ஓடம் ஔவியம் என வரும். (உசு)

தனி மெய் மொழிமுத லாகாமை

சுஎ. உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா.

இஃது உயிர்மெய் மொழிக்கு முதலாம் என்கின்றது.

இ - ள் : உயிர்மெய்யல்லன மொழிமுதல் ஆகா — உயிரோடு கூடிய மெய்யல்லாதனவாகிய தனி மெய்கள் மொழிக்கு முதலாகா; எ - று.

எனவே, உயிரோடுகூடிய மெய்களே மொழிக்கு முதலாவன என்றவாறும். ஈண்டு உயிர்மெய் யென்றது வேற்றுமை யயங் கருதிற்று. ஒற்றுமை யயங் கருதின் மேலைச் சூத்திரத்து உயிரோடுகூடி ஆமென்றல் பயனின்றாம். (உ எ)

பன்னிருயிருடன் மொழி முதலாதல்

சுஅ. கதநபமஎனும் ஆவைந் தெழுத்தும்
எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே.

இது மேற் பொதுவகையான் எய்துவித்த இருநூற்றெருபத்தாறு எழுத்துக்களைச் சிறப்புவகையான் வரையறுத்து எய்துவிக்கின்றது.

இ - ள் : கதநபமஎனும் ஆவைந்தெழுத்தும் — கதநபம என்று கூறப்பட்ட அவ்வைந்து தனிமெய்யும், எல்லா உயிரொடுஞ் செல்லுமார் முதலே — பன்னிரண்டு உயிரோடும் மொழிக்கு முதலாதற்குச் செல்லும் ; எ - று.

எ - டு : கலை, கார், கிளி, கீரி, குடி, கூடு, கெண்டை, கேழல், கைதை, கொண்டல், கோடை, கௌவை, எனவும் ; தந்தை, தாய், தித்தி, தீமை, துணி, தூணி, தெற்றி, தேன், தையல், தொண்டை, தோடு, தௌவை, எனவும் ; நந்து, நாரை, நிலம், நீலம் நுகம், நூல், நெய்தல், நேமி, நைவளம், நொச்சி, நோக்கம், நௌவி, எனவும் ; பனை, பால், பிடி, பீடு, புகழ், பூமி, பெடை, பேடை, பைதல், பொன், போது, பௌவம், எனவும் ; மடி, மாலை, மிடறு, மீளி, முகம், மூப்பு, மெலிவு, மேனி, மையல், மொழி, மோத்தை, மௌவல், எனவும் வரும். (உஅ)

சகர மெய் ஒன்பதுயிருடன் மொழிமுதலாதல்

சுஉ. சகரக் கிளவியும் அவற்றே ரற்றே
அ ஐ ஔ எனும் மூன்றலங் கடையே.[1]

இதுவும் அது.

1 சகரம மொழிமுதல வராதெனறு கூறுவது தமிழுகுச சிறறும பொருந்தாது. "அ ஐ ஔ எனும மூனறலங் கடையே" என்னும நூறபா அடிகளு "அவை ஔ எனனும ஒனறலங்கடையே எனறு பாடவேறுபாடும் உளளது. சகடடி, சக்கை, சகடு, சகதி, சகு, சட்டெ ன, சடடம, சடடகம, சட்டி, சடை, சட சட, சடை, சடைவு, சண்டி, சண்டு, சணடை, சணல, சதுபபு, சபபடடை, சப பெனறு, சபபாணி, சபபு, சபபை, சமபு, சமமட்டி, சமடடு, சமம, சமழ,

இ - ள்: சகரக்கிளவியும் அவற்றோரற்றே — சகரமாகிய தனிமெய்யும் முற்கூறியவைபோல எல்லா உயிரோடுங் கூடி மொழிக்கு முதலாம், அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே — அகர ஐகார ஔகாரமென்று சொல்லப்பட்ட மூன்று உயிரும் அல்லாத இடத்து; எ - று.

எ - டு: சாந்து சிற்றில் சீற்றம் சுரை சூரல் செக்கு சேவல் சொல் சோறு என வரும். சட்டி சகடம் சமழ்ப்பு என்றாற் போல்வன 'கடிசொல்லில்லை' (எச்சவியல் - நிசு) என்பதனாற் கொள்க. சையம் சௌரியம் என்பவற்றை வடசொல்லென மறுக்க. (உக)

வகர மெய் எட்டுயிருடன் மொழிமுதலாதல்

சூஉ. உஊ ஒஓ என்னும் நான்குயிர்
வ என் எழுத்தொடு வருத லில்லை.

இதுவும் அது.

இ - ள்: உ ஊ ஒ ஓ என்னும் நான்குயிர் — உ ஊ ஒ ஓ என்று சொல்லப்பட்ட நான்கு உயிரும், வ என் எழுத்தொடு வரு தலில்லை — வ என்று சொல்லப்படுந் தனிமெய்யெழுத்தோடு கூடி மொழிக்கு முதலாய் வருத லில்லை; எ - று.

எனவே, ஒழிந்தன மொழிக்கு முதலாம் என்றவாறாயிற்று.

எ - டு: வளை வாளி விளரி வீடு வெள்ளி வேட்கை வையம் வெளவுதல் என வரும். (உ0)

சமை, சரடு, சரள, சரி, சருகு, சருச்சரை, சரிலன, சலமடை, சலவரி; சலவி, சலசல, சலங்கை, சலி, சவவு, சவம, சவா, சவை, சளி, சளகென, சறுகு, சளனென, சளீர், சளீர், சற்று, சறுகு, சனாம முதலிய நூற்றுக்கு மேற்பட்ட தனித்தமிழச் சொற்கள், அடிப்படையானவும் தொன்று தொட்டவும், இன்றியமையாதனவும் வேரூன்றினவும் சீரியவழகினவுமாயிருக்க, அவற்றைப் பிற காலத்தனவென்று கொள்ளுவது பெருங்கவறாகும். சகை, சட்டி, சண்டு, சணடை, சகை, சபு, சலி, சற்று, சறுகு முதலிய சொற்கள் எத்துணை எளிமையும் இயல்புமானவை என்பது சொல்லாமலே விளங்கும் சண்டு சருகு முதலிய சில சொற்கள் பண்டு சுகர முதலனவாயிருந்திருத்தல் கூடுமெனினும், சக்கு சடாசி சோடா சரட்டு சலசல சரிலன சவவு சளகு சளார் சள் முதலிய ஒலிக் குறிப்புச் சொற்களும் அவற்றினடிப்பிறந்தவும் துலக்கந்தொட்டுச் சகர முதலனவாயே யிருந்திருத்தல் வேண்டும். சாப்பிடு என்னும உலகவழக்கு தெளிமைச் சொல சப்பு என்றும் மூலதனினாறே தோன்றியதாகும். சப்பு + இடு = சப்பிடு — சாப்பிடு. சுவை என்னும் சொல்லும் சவை என்பதன் திரிபாகவே தோன்றுகின்றது. செத்தான என்னும் இறந்தகால வினைமுற்று பண்டைக காலத்தில சதான எனற இருந்திருத்தலவேண்டும். ஒ.நோ: தாண் — தண்டான, நேர — நொந்தான். தெடுனை முதலான வினைப்பகுதி இறந்தகால முற்றில முதல் குறுகுமபோது இவற்குறிலாயக் குறுகுவதே மரபு, தெ லுங்கிலும் சசினடு (செத்தான) சசிபோயினடு (செத்துப்போனான்) எனறே சொலவர். மேலும் 'முழு முதல அரணமும்.' வருமைபோனர் ஆசிரியரும் 'அமைதலுக்கொண்ட தொல காப்பியர் காலத்தமிழர் சடடசெயபத தெரிபாரிருந்தனர் எனபது பெருமைக் கிடமானதாகும். சடடி எனபது சமையலுக்கு இனறியமையாததும், எளிமிலியானதும், மறுபெயர்றதுமான கலவகை.

"சரிசமழ்ப்புச சட்டி சருகு சவடி
சனிசகடு சட்டை சவளி — சவிசரடு
சதது சதங்கை சமுககாதி பீரிடத்தும [மேறகோள்.
வந்தனவாறு சம்முதலுமவை" எனபது நன்னூல் மயிலைநாதருரை

ஞகாரமெய் மூன்றுயிருடன் மொழிமுதலாதல்

சூசு. ஆ எ ஒ
என்னும் மூவுயிர் ஞகாரத் துரிய.

இதுவும் அது.

இ - ள்: ஆ எ ஒ எனும் மூவுயிர் — ஆ எ ஒ என்று கூறப் படும் மூன்று உயிரும், ஞகாரத்துக்கு உரிய — ஞகார ஒற்றொடு கூடி மொழிக்கு முதலாதற்கு உரிய; எ - று.

எனவே, ஏனைய உரியவல்ல என்பதாம்.

உ - டு: ஞாலம் ஞெண்டு ஞெள்கிற்று எனவரும்.

'ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பு' (பெரும்பாண்—கூஉ) என்பது திசைச் சொல். ஞழியிற்று என்றுற்போல்வன இழிவழக்கு. (கூக)

யகரம் ஆகாரத்துடனே மொழிமுதலாமெனல்

சூடு. ஆவோ டல்லது யகர முதலாது.

இதுவும் அது.

இ - ள்: ஆவோடு அலலது யகரம் முதலாது — ஆகாரத் தோடு கூடி யல்லது யகர வொற்று மொழிக்கு முதலாகாது; எ - று.

உ - டு: யானை யாடி யாமம் என வரும்.

யவனர் யுத்தி யூபம் யோகம் யௌவனம் என்பன வடசொல்லென மறுக்க. (கூஉ)

எல்லா எழுத்தும் முதலாம் இடம்

சூசூ. முதலா வென தம்பெயர் முதலும்.

இது மொழிக்கு முதலாகாதனவும் ஒரோ வழி ஆமென்கின்றது.

இ - ள்: முதலாவும் — மொழிக்கு முதலாகா என்ற ஒன்பது மெய்யும், ஏனவும் — மொழிக்கு முதலா மென்ற ஒன்பது மெய்யும் பன்னிரண்டுயிரும், தம் பெயர் முதலும் — தத்தம் பெயர் கூறு தற்கு முதலாம்; எ - று.

முதலாவும் எனவும் என்ற உம்மைகள் தொக்கு நின்றன.

உ - டு: ஙகரமும் டகரமும் ணகரமும் றகரமும் லகரமும் ழகரமும் ளகரமும் றகரமும் னகரமும் என மொழிக்கு முதலாகாத ஒன்பதும் முதலா மாறு, ங்க்ஷோத்தார் டப்பெரிது ணந்நன்று என வரும். இவ்வாறே ஏனைய வற்றையும் ஒட்டுக. இனி ஏன என்றதனான் க்க்ஷோத்தார் தப்பெரிது அக் குறிது ஆதெடிது என மொழிக்கு முதலானவற்றையுந் தம் பெயர் கூறுதற்கு முதலாமாறு ஒட்டிக் கொள்க. வரையறுக்கப்பட்டு மொழிக்கு முதலாகாது நின்ற மெய்க்கும் இவ்விதி சொள்க. அவை சகரத்து மூன்றும் வகரத்து நான் கும் ஞகரத் தொன்பதும் யகரத்துப் பதினென்றுமாம். (கூக)

குற்றியலுகரம் மொழி முதலாமாறு

சூ எ. குற்றிய லுகரம் முறைப்பெயர் மருங்கின்
ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.[1]

இஃது எழுத்துக்களே மொழிக்கு முதலாமாறு கூறி முறையே குற்றியலுகரம் மொழிக்கு முதலாமாறு கூறுகின்றது.

இ - ள்: குற்றியலுகரம முறைப்பெயர் மருங்கின் — குற்றியலுகரமானது முன்னிலே முறைப்பெயரிடத்து, ஒற்றிய நகரமிசை நகரமொடு முதலும் — தனிமெய்யாய் நின்ற நகரத்து மேனின்ற நகரத்தொடு கூடி மொழிக்கு முதலாம்; எ - று.

நுந்தை என வரும். இதனுனே முறைப்பெயர் இடமும் நகரம் பற்றுக் கோடு மாயிற்று. ஈண்டுக் குற்றியலுகரம் மெய்ப்பின்னர் நின்றதேனும் ஒற்றுமை நயத்தான் மொழிக்கு முதலென்றார். இது செய்யுளியலே நோக்கிக் கூறியதாயிற்று. (நச)

மொழிமுதற் குற்றியலுகரத்தின் இயல்பு

சூ அ. முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ
நப்பெயர் மருங்கின் நிலையிய லான.

இது மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

இ - ள்: அப்பெயர்மருங்கின் நிலையியலான — அம்முறைப் பெயரிடத்தே நிற்றலிலக்கணமான குற்றியலுகரம், முற்றிய லுகரமொடு பொருள் வேறுபடாஅது — இதழ் குவித்துக் கூறும் வழி வரும் முற்றுகரத்தோடு அவ்விடத்துக் குற்றுகரம் பொருள் வேறுபடுமாறுபோல ஈண்டுப் பொருள் வேறுபட்டு நில்லாது; எ - று.

காது, கட்டு, கத்து, முருக்கு, தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமுமாய்ப் பொருள் வேறுபட்டு நின்றுழ் போல[2] நுந்தை யென்று இதழ் குவித்து முற்றுக் கூறியவிடத்தும் இதழ் குவியாமற் குறையக் கூறியவிடத்தும் ஒரு பொருளே தருவதாக காண்க. நுந்தாய் என்பதேனெனின் அஃது இதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று. இயலென்றதனுன் இடமும் பற்றுக்கோடும் இரண்டிற்கும் வேறுபாடின்றென்று கொள்க. இதனுனே மொழிக்கு முதலாமெழுத்துத் தொண்ணூற்று நான்கென்று உணர்க. (நகி)

எ. மொழியிறுதி எழுத்துக்கள்

மொழியிறுதி உயிர்கள்

சூ கூ. உயிர்ஒள எஞ்சிய இறுதி யாகும்.

---

1 "குறறிய லுகர..... .....நகரமொடு முதலும்" என ஆசிரியர் தொலகாப்பியனுர் இவ்வாறு குறறியலுகரம மொழிக்கு முதலாமெனறுராலோ வெனின், "நுந்தையுகரங குறறிமொழி முதறகண, வநதெனனுயிர்மெய யாமகனத்துஞ் சாரிக், குயிர்முதலா வநதவியு மெயபபுணரச்சியனறி, மயலலீயு மெனறதனின மாறறு" இவறறை விரித்துரைதது விதியும் விலக்கும அறிதுகொள்க. எனபது நனனூல மயிலைநாதருரை மேறகோள (எழு. 105).

2 காது கட்டு முதலியவை முறறுகரமாயிவ ஏவல விகுபும் குற்றுகரமாயின் தொழிற பெயருமாகும்.

இஃது உயிர் மொழிக்கு ஈறுமாறு கூறுகின்றது.

இ - ன்: உயிர் ஒள எஞ்சிய இறுதி யாகும் — உயிர்களுள் ஒளகாரம் ஒழிந்தன வெல்லாம் மொழிக்கு ஈறும்; எ - று,

எனவே, ஒளகாரவுயிர் ஈறுகாதாயிற்று. இஃது உயிர்க்கும் உயிர் மெய்க்கும் பொது.

ஆ ஈ ஊ ஏ ஐ ஓ என இவை தாமே ஈறுயின. ஆஅ ஈஇ ஊஉ ஏஎ ஓஒ எனக் குறிலேக்கும் அளபெடைக்கண் ஈறுயின. கா தீ பூ சே கை கோ எனவும், விளா கிளி முழு எனவும் வரும். எகர ஒகரம் மேலே விலக்குப. 'அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்' (சொல் - கூஉ) என்பாராதலின், அளபெடைப்பின் வந்த குற்றெழுத்துங் கொள்வர் ஆசிரிய ரென்று உணர்க. நெட்டெழுத்தேழும் முதன் மொழியாம் என்னுந் துணையே முன்னுணர்த்துதலின் ஈண்டு அவை ஈறுமென்றும் உணர்த்தினர். (நூசு)

ஒள ஈறாகும் இடம்

எய். கவவோ டியையின் ஒளவு மாகும்.

இஃது ஈறுகாதென்ற ஒளகாரம் இன்னுழியாம் என்கின்றது.

இ - ன்: ஒளவும் — முன் ஈறுகாதென்ற ஒளகாரமும், கவ வோடு இயையின் ஆகும். — ககரவகரத்தோடு இயைந்த வழி ஈறும்; எ - று.

எ - டு: கௌ வௌ என வரும். எனவே, ஒழிந்த உயிரெல்லாந் தாமே நின்றும் பதினெட்டு மெய்களோடுங் கூடி நின்றும் ஈறுதல் இதனாற் பெற்றாம். இதனானே ஒளகாரம் ஏனை மெய்க்கண் வாராதென விலக்குதலும் பெற்றாம். உயிர் ஙகரத்தோடு கூடி மொழிக்கு ஈறு மென்பது இதனால் எய்திற்றேனும் அது மொழிக்கு ஈறுகாமை தந்து புணர்த் துரைத்தலான் உணர்க.[1] இது வரையறை கூறிற்று. (நூஎ)

எகர வுயிர் மெய்யோ டீறுகாமை

எக. எ என வருமுயிர் மெய்யி றுகாது.

இஃது எகரந் தானே நின்றவழி யன்றி மெய்யோடு கூடினால் ஈறுகா தென விலக்குகின்றது.

இ - ன்: எ என வரும் உயிர் மெய் ஈறுகாது — எ என்று கூறப் படும் உயிர் தானே ஈறுவதன்றி யாண்டும் மெய்களோடு இயைந்து ஈறுகாது; எ - று. (நூஅ)

ஒகரம் நகரமெய் ஒன்றுடன் ஈறுதல்

எஉ. ஒவ்வும் அற்றே நவ்வலங் கடையே.

இது விலக்கும் வரையறையுங் கூறுகின்றது.

---

1 தந்து புணர்த்துரைத்தல்—உன் பொருளலலதனை உளபோலத் தந்து கூட உணர்த்தல். இங்கு, உயிர் ஙகரத்தோடுகூடி மொழிகு ஈறுவதுபோலக கூறியது தந்து புணர்த்துரைத்தல.

இ - ள்: ஒவ்வும் அற்று — ஓகரமும் முன் சொன்ன எகரம் போலத் தானே ஈறுவதன்றி மெய்களோடு இயைந்து ஈறுகாது, நவ்வலங்கடையே — நகரவொற்றோடு அல்லாத இடத்தில்; எ - று.

எ - டு: நொ கொற்ற 'நொஅலேயனின்ஞட்டைநீ' என வரும். (நக)

ஏ, ஓ ஞகர மெய்யுட னீறுகாமை

எந. ஏ ஓ எனும் உயிர் ஞகாரத் தில்லே.

இது சில உயிர் சில உடலோடேறி முடியாதென விலக்குகின்றது.

இ - ள்: ஏஓ எனும் உயிர் ஞகாரத்தில்லே — ஏஓ என்று கூறப் பட்ட இரண்டுயிருந் தாமே நின்றும் பிறமெய்களோடு நின்றும் ஈறுதலன்றி ஞகாரத்தோடு ஈறுதலில்லே; எ - று.

எனவே, ஏனையுயிர்கள் ஞகாரத்தோடு ஈறுமென்றாராயிற்று.

எ - டு: உரிஞ, உரிஞா உரிஞி, உரிஞீ, உரிஞு, உரிஞூ இவை எச்சமும் வினைப்பெயரும் பற்றி வரும். அஞ்ஞை மஞ்ஞை இவை பெயர். ஏனையைத்தும் விலக்கப்பட்டன. உரிஞோ என்பது 'கடிசொல்லில்லே' என்பதனாற் கொள்க. (சம)

உ, ஊ நகர வகரங்களுடன் ஈறுகாமை

எச. உ ஊ காரம் நவவொடு நவிலா.

இதுவும் அது.

இ - ள்: உ ஊகாரம் — உகர ஊகாரங்கள் தாமே நின்றும் பிறமெய்களோடு நின்றும் பயில்வதன்றி, நவவொடு நவிலா — நகர வொற்றோடும் வகரவொற்றோடும பயிலா; எ - று.

எனவே, ஏனையுயிர்கள் நகர வகரங்களோடு வருமாயின.

எ - டு: நகரம் பொருந எனவினைப்பெயராகியும், நா நீ கே எனப் பெயராகியும் கை கொ கோ என வியங்கோளாகியும் வரும். பொருகை என்றுங் காட்டுப. வகரம் உவ வே என வியங்கோளாயும், உவா செவ்வி வீ வை எனப் பெயராயும் வரும். ஒருவ ஒருவா ஒருவி ஒருவீ ஒளவை என்றுங் காட்டுப. ஈண்டு விலக்காத ஏனையுயிர்களோடு வந்த நகரவகரங்கள் அக்காலத்து வழங்கினவென்று கோடும், இவ்வித்தியால் இனி நவிலா என்றதனானே வகர புகரம் கதவு துறவு குவவு புணர்வு நுகர்வு கொவ்வு கவ்வு எனப் பயின்று வருதலுங் கொள்க. (சக)

சகர வகரம் இருமொழிக்கு ஈறுதல்

எரு. உச்ச காரம் இருமொழிக் குரித்தே.

இது சகார உகாரம் பலசொற்கு ஈறாய் வாராது இருசொற்கு ஈறு மென்று வரையறை கூறுகின்றது.

இ - ள்: உச்சகாரம் — உகரத்தோடு கூடிய சகாரம், இரு மொழிக்கே உரித்து — இரண்டு மொழிக்கே ஈறும்; எ - று.

எனவே, பன்மொழிக்கு ஈறாரா தென்றவாறாயிற்று. உரித்தே யென்னும் ஏகாரம் மொழிக்கே யெனக் கூட்டுக.

எ - டு: உச; இஃது உளுவின் பெயர். முசு; இது குரங்கினுள் ஒரு சாதி. பசு என்பதோ வெனின், அஃது ஆரியச் சிதைவு. கச்சு குச்சு என்றாற் போல்வன குற்றுகரம். உகரம் எறிய சகரம் இருமொழிக்கு ஈறுமெனவே ஏனை உயிர்கள் எறிய சகரம் பன்மொழிக்கு ஈறுமாயிற்று. உச உசா விசி சே கச்சை சோ எனப் பெயராயுங், துஞ்ச எஞ்சா எஞ்சி மூசி மூசு என எச்சமாயும் வரும். அச்சோ என வியப்பாயும் வரும். இன்னும் இவை வழக்கின்கட் பலவாறாமும் உணர்க. (கஉ)

பகர வுகரம் ஒரு மொழிக்கே ஈறுதல்

எகூ. உப்ப காரம் ஒன்றெனை மொழிப
இருவயின் நிலையும் பொருட்டா கும்மே.

இஃது ஒருசொல் வரையறையும் அஃது ஒசை வேற்றுமையால் இரு பொருள் தருமெனவுங் கூறுகின்றது.

இ - ள்: உப்பகாரம் ஒன்றெனை மொழிப — உகரத்தோடு கூடிய பகரம ஒருமொழிக்கல்லது பன்மொழிக்கு ஈறுகா தென்று கூறுவர் புலவர், இருவயினிலையும் பொருட்டாகும்மே — அது தான் தன்வினை பிறவினை யென்னும் இரண்டிடத்தும் நிலைபெறும் பொருண்மைத்தாம்; எ - று.

எ - டு: தபு என வரும். இது படுத்துக் கூற நீ சா வெனத் தன் வினையாம். எடுத்துக்கூற நீ ஒன்றனைச் சாவப்பண்ணெனப் பிறவினையாம்[1]. உப்பு கப்பு என்றாற் போல்வன குற்றுகரம். உகரத்தோடு கூடிய பகரம் ஒன்றெனவே ஏனை உயிர்களோடு கூடிய பகரம் பன்மொழிக்கு ஈறாய்ப் பல பொருள் தரும் என்றாராயிற்று. மறந்தப துப்பா என எச்சமாயும், நம்பி செம்பூ பே பெதும்பை எனப் பெயராயும், போ என ஏவலாயும் வரும். இவற்றைப் பிற சொற்களோடும் ஒட்டுக. ஏனை ஈகார பகரம் இடக்கரால் வழக்காகும். (கஙூ)

ஈறுகா உயிர் மெய் இன்னவகையில் ஆமெனல்

எஎ. எஞ்சிய வெல்லாம் எஞ்சுதல் இலவே.

இது முன்னர் மொழிக்கு ஈறும் என்றவற்றுள் எஞ்சி நின்றன மொழிக்கு ஈறுமாறும் மொழிக்கு ஈறுகா என்றவை தம்பெயர் கூறுங்கான் மொழிக்கு ஈறுமாறுங் கூறுகின்றது.

இ - ள்: எஞ்சியவும் எஞ்சுதலில — 'கவ்வோடியையின்' (எழு - எ0) என்னுஞ் சூத்திரத்தாற் பதினேழுயிரும் பதினெட்டு மெய்க்கண்ணும் வந்து மொழிக்கு ஈறு மென்ற பொது விதியிற், பின்னை விசேடித்துக் கூறியவற்றை ஒழிந்தனவும் மொழிக்கு ஈறுதற்கு ஒழிவில, எல்லாம் எஞ்சுதலில — மொழிக்கு ஈறுகா தென்ற உயிர்மெய்களுந் தம்பெயர் கூறும்வழி ஈறுதற்கு ஒழிவில; எ - று.

1 இதனால், தமிழிலுள்ள பன்மைத்தமிழிலும் அசையழுத்தம் (accent) ஒரு சொல்லின் வகையையும் பொருளையும் வேறுபடுத்தாதென்பதை அறியலாம்.

எல்லா மென்றது சொல்லினெச்சஞ் சொல்லியாங் குணர்த்தல் என்னும் உத்தி[1]. உம்மை விரிக்க ஈண்டு எஞ்சிய வென்றது முன்னர் உதாரணங் காட்டிய ஞகரமும் ஙகரமும் வகரமுஞ் சகரமும் பகரமும் ஒரு மொழிக்கும் ஈறுகாத ஙகரமும் ஒழிந்த பன்னிரண்டு மெய்க்கண்ணும் எகரமும் ஒகரமும் ஔகாரமும் ஒழிந்த ஒன்பதுயிரும் ஏறி மொழிக்கு ஈறாய் வருவனவற்றை யென்று உணர்க.

எ - டு : வருக புகா வீக்கி புகீ செகு புசூ ஈங்கே மங்கை எங்கோ எனவும், சட்ட கடா மடி மடீ மடு படு படை எனவும் (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறி வருவன உளவேற் கொள்க), மண்ணை எண்ணூ கண்ணி உணீ தணூ கண்ணூ பண்ணே எனவும் (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறி வருவன உளவேற் கொள்க), அத புதா பதி வதீ அது கைதூ தந்தை அத்தோ எனவும் (இதற்கு ஏகாரம் ஏறி வருவன உளவேற் கொள்க), கம கென்மா அம்மி மீ செம்மு கொண்மூ யாமை காத்துவம்மோ எனவும் (இதற்கு ஏகாரம் ஏறிவருவன உளவேற் கொள்க), செய காயா கொய்யூ ஐயை ஐயோ எனவும் (இதற்கு இஏ ஈகார உகார ஊகாரங்கள் ஏறி வருவன உளவேற் கொள்க), வர தாரா பரி குரீ கரு வெரூ தாரை எனவும் (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறி வருவன உளவேற் கொள்க), சில பலா வலி வலீ வலு வலூ கொல்லு வல்லே கலே எனவும் (இதற்கு ஓகாரம் ஏறி வருவன உளவேற் கொள்க). தொழ விழா காழி வழீ மழு எழு தாழை எனவும் (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறி வருவன உளவேற் கொள்க), உள உள்ளா வெள்ளி குளீ உளு எள்ளூ கோ எனவும் (இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறி வருவன உளவேற் கொள்க), கற்ற கற்ரு உறி உறீ மறு உறூ கற்றை எற்ரே எனவும் (இதற்கு ஏகாரம் ஏறி வருவன உளவேற் கொள்க), ஈன கஞ வன்னி தூணீ முன்னு துன்னூ என்னே அன்னே அன்னோ எனவும் வரும். இவற்றுட் ஙகர னகரங்கள் விலக்காத ஒன்பதும் வந்தன. ஆக ஈறு நூற்றுகாற்பத்துமூன்றும் உதாரணமில்லாத பதினெட்டும் ஆக நூற்றுமுபத்தொன்று.[2] ஙகரம் மொழிக்கு ஈறாகாதென்பது பெரும்பான்மை யாதலிற் கூறிற்றிலர். இனி ஙகரமும் ஔகாரமும் எழுத மெய் பதினேழும் ஏகாரமும் ஓகாரமும் ஓகாரமும் உகரமும் ஊகாரமும் எழுத மெய்களுந் தம் பெயர் கூறுங்கான் மொழிக்கு ஈறுமாறு, ஙப்பொரி தௌஅழகு தஞ்ஞீது என வரும். ஏனையவற்றோடும் இவ்வாறே ஒட்டுக. ஙெக்குறைத்தது கொத்ஞீது ஞெவ்வழகு ஞொத்ஞீது ஙக்ஙன்று நூப்பெரி து வுச்சிறி து வூப்பெரி து என எல்லாவற்றையும் இவ்வாறே ஒட்டுக. இன்னும் எல்லாம் என்றதனானே கக்ஙன்று ஆங்ஙன்று என மொழிக்கு ஈறுவனவுந் தம்பெயர் கூறும் வழி ஆமென்று கொள்க. (சஅ)

1 "சொல்லி னெச்சஞ்சொல்லியாங் குணர்த்தல்"—சொல்லினுற்றலாற் பெறப்படும் பொருளையும் எடுத்துத்தாமியாங்குக் கொள்ள வைத்தல; அஃது, "எஞ்சியவெல்லா மெஞ்சுதலில வே" (எழு. 77) எனபுழி, எல்லாமென்பதனை எச்சப்படுத்தற்கு ஆகாதன இருபதாறு கொண்டவழியும அதனை எடுத்தோதிற சிறபபின்றென்று கொள்ளறகு என்பது" (பேராசிரியம).

2 "இதற்கு ஏகார ஓகாரங்கள் ஏறிவருவன உளவேறகொள்க" எனப் பல மெய்க்குக கூறியிருப்பதனாலும; எவ்னே அன்னே, ஐயோ எனற வடிவங்கள் காட்டாகக கொள்ளபபட்டிருபபதனாலும; அடே, வீணே, ஐயே, எறுழே, அரோ முதலிய வடிவங்கள் வழகறிலிருபபதனாலும, காட்டுக காட்டப்படாத ஏகார ஓகார உயிர் மெய்யீறுகட்கெலலாம காட்டுண்டெனல அறிக.

நச்சினாகினியர் ஈறறில மொதத்தொகை கூறுமிடத்து, "ஆக ஈறு நூற்று காறபத்து மூனறும் உதாரணமிலலாத பதினெட்டும் ஆக" என்பது, ஆக ஈறுநூற்று காறபத்தொன்றும் உதாரணமில்லாத இருபதும் என்றிருத்தல் வேண்டும்.

மொழியிரும் மெய்கள்

எ அ. ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும்
அப்பதி னென்றே புள்ளி யிறுதி.

இது முன்னர் உயிர் ஈறுமாறு உணர்த்திப் புள்ளிகளுள் ஈறுவன இவை யென்கின்றது.

இ - ள்: ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள என்னும் அப்பதி னென்றே புள்ளி யிறுதி — ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள வென்று கூறப்பட்ட பதினென்றுமே புள்ளிகளில் மொழிக்கு ஈறுவன; எ - று.

எ - டு: உரிஞ், மண், பொருந், திரும், பொன், வேய், வேர், வேல், தெவ், வீழ், வேள் என வரும். னகரம் ஈற்று வையாது மகரத்தோடு வைத்தது வழக்குப் பயிற்சியும் மயக்க இயைபுங் நோக்கி. (சடு)

நகரமெய் இருமொழிக்கு ஈறுதல்

எக. உச்ச காரமொடு நகாரஞ் சிவணும்.

இது மேற் பொதுவகையான் ஈறுவனவற்றுள் வரையறைப்படுவது இது வென்கின்றது.

இ - ள்: உச்சகாரமொடு நகாரஞ் சிவணும் — உகாரத்தோடு கூடிய சகரம் இருமொழிக் கீறுயவாறு போல நகரவொற்றும் இரு மொழிக்கல்லது ஈறுகாது; எ - று.

எ - டு: பொருந் வெரிந் என வரும். (சகூ)

ஞகரமெய் ஒரு மொழிக்கே ஈறுதல்

அம். உப்ப காரமொடு ஞகாரையும் அற்றே
அப்பொருள் இரட்டா இவணை யான.

இதுவும் அது.

இ - ள்: உப்பகாரமொடு ஞகாரையும் அற்றே — உகாரத்தோடு கூடிய பகரத்தோடு ஞகரமும் ஒத்து ஒரு மொழிக்கு ஈறும், இவணையான அப்பொருள் இரட்டாது — இவ்விடத்து ஞகாரத்தின் கண்ணன அப்பொருள் பகரம்போல இருபொருட் படாது; எ - று.

எ - டு: உரிஞ் என வரும். ஞகாரம் ஒரு மொழிக்கு ஈறுதலின் நகரத்தின் பின் கூறினர். இவணை யென்னும் ஐகாரம் அசை. (சஎ)

வகர மெய் நான்மொழிக்கு ஈறுதல்

அக. வகரக் கிளவி நான்மொழி ஈற்றது.

இதுவும் அது.

இ - ள்: வகரக் கிளவி நான்மொழி ஈற்றது — வகரமாகிய எழுத்து நான்கு மொழியின் ஈற்றதாம்; எ - று.

எ - டு: அவ் இவ் உவ் தெவ் என வரும். கிளவி ஆகுபெயர், எழுத்துக் கிளவியாதற்கு உரித்தாமாதலின். (சஅ)

அஃறிணைக்கண் னகரவிற்று மொழிகள் ஒன்பது

அஉ. மகரத் தொடர்மொழி மயங்குதல் வரைந்த
னகரத் தொடர்மொழி ஒன்பஃ தென்ப
புகரறக் கிளந்த அஃறிணை மேன.[1]

இதுவும் அது; வரையறை கூறுதலின்.

இ - ள்: புகரறக் கிளந்த அஃறிணை மேன — குற்றமறச் சொல்லப்பட்ட அஃறிணைப்பெயரிடத்து, மகரத்தொடர்மொழி மயங்குதல் வரைந்த னகரத் தொடர்மொழி ஒன்பஃது என்ப — மகர ஈற்றுத் தொடர்மொழியோடு மயங்கா தென்று வரையறைப்பட்ட னகர ஈற்றுத் தொடர்மொழி ஒன்பதென்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

ஆய்தம் விகாரம்.

எ - டு: எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான் என வரும். எகின் எகினம் என்றாற்போல வேறோர் பெயராய்த் திரிவனவுஞ் சந்தியால் திரிவனவுமாய் ஈற்றுள் திரிபுடையன கழிந்து ஒன்பதும் வருமேற் கண்டுகொள்க. நிலம் நிலன், பிலம் பிலன், கலம் கலன், வலம் வலன், உலம் உலன், குலம் குலன், கடம் கடன், பொலம் பொலன், புலம் புலன், நலம் நலன், குளம் குளன், வளம் வளன் என இத்தொடக்கத்தன தம்முள் மயங்குவன. வட்டம் குட்டம், ஓடம் பாடம் இவைபோல்வன மயங்காதன. வரையறை னகரத்தின்மேற் செல்லும். மயக்காவெனவே மயக்கமும் பெற்றும்.

மொழிமரபு முற்றிற்று.

---

1 "மகரத் தொடர்மொழி.....அஃறிணை மேன" எனற்கு, எகின, செகின், எயின், வயின, குயின, அழன, புழன, புலான, கடான என வரும் ஒன்பதும் மயங்காதன வெனக்கொள்ளின, பலியன, வலியன, வயான, கயான, அலவன, கலவன, கதுமுன, மறையன, பெருவன முதலாயின மயங்குமாறெவ்வென மறுக்க" எனபது னனூல மயிலைநாதருரை (நூ. 121).

கூ. பிறப்பியல்

[எழுத்துக்களின் பிறப்பிலக்கணம் உணர்த்துவது.]

க. எழுத்துக்கள் பொதுவாகப் பிறக்குமாறு

அகூ. உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும்[1] உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற் றமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லுங் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறுவே றியல
திறப்படத் தெரியுங் காட்சி யான.

என்பது சூத்திரம். இவ்வோத்து எழுத்துக்களினது பிறப்பு உணர்த்து தலிற் பிறப்பிய லென்னும் பெயர்த்தாயிற்று. சார்பிற் றோற்றத்து எழுத்துந் தனிமெய்யும் மொழியி னன்றி உணர்த்தலாகாமையின் அவை பிறக்கும் மொழிமரபிடை உணர்த்திப் பிறப்பு உணர்த்த வேண்டுதலின் நூன்மரபின் பின்னர் வைத்தார்.

இச்சூத்திரம் எழுத்துக்களினது பொதுப்பிறவி இத்துணை நிலைக்களத்து நின்று புலப்படு மென்கின்றது.

இ - ள்: எல்லா எழுத்தும பிறப்பின் ஆக்கஞ் சொல்லுங் காலை — தமிழெழுத்து எல்லாவற்றிற்கும் ஆசிரியன் கூறிய பிறப்பினது தோற்றரவை யாங் கூறுமிடத்து, உந்திமுதலாத் தோன்றி முந்து வளி — கொப்பூழடியாகத் தோன்றி முந்துகின்ற உதான னென்னுங் காற்று, தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ — தலையின்கண்ணும் மிடற்றின்கண்ணும் நெஞ்சின்கண்ணும் நிலை பெற்று, பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான் உறுப்புற்று — பல்லும் இதழும் நாவும் மூக்கும் அண்ணமு மென்ற ஐந்துடனே அக்காற்று, நின்ற தலையும் மிடறும் நெஞ்சுங் கூட எட்டாகிய முறைமையையுடைய தன்மையோடு கூடிய உறுப்புக்களோடு ஒன்றுற்று, அமைய — இங்ஙனம் அமைதலானே, வேறுவேறு இயல — அவ்வெழுத்துக்களது தோற்றரவு வேறுவேறு புலப்பட வழங்குதலையுடைய, காட்சி

1 எழுத்தைப பிறப்பிதத,றரு இடமும் உறுபபும் என இரண்டு வேணடும. எழுத்தின் இனத்தன்மையைத தோறறும நெஞ்சு தொணடை முதலியவை இடம; தனித தனி எழுதததைத தோறறும நா பல முதலியவை உறுபபு. மூககைத தொடகாபபி யா உறுபபெனறார; ஞனனூலா இடமெனறார. இருவரும தலையை ஓர இட மாகக கொணடனர் இஃது உடல நூலுக்கும ஒலி நூலுககும பொருநதுவதாயத தோனறவிலலை.

யான நாடி நெறிப்பட — அதனி யறிவான் ஆராய்ந்து அவற்றின் வழியிலே மனம்பட, திறப்படத் தெரியும் — அப் பிறப்பு வேறு பாடுகளெல்லாங் கூறுபட விளங்கும் ; எ - று.

சொல்லுங்காலே வளி நிலைபெற்று உறுப்புக்களுற்று இங்ஙனம் அமைதலானே அவை வழங்குதலேயுடைய ; அவற்றின் வழக்கம் அவற்றின் வழியிலே மனந் திறப்படத் தெரியுமெனக் கூட்டி உரைத்துக் கொள்க. இங்ஙனங் கூறவே முயற்சியும் முயலுங் கருத்தாவும் உண்மை பெற்றும். (க)

உ. உயிரெழுத்துக்கள் பிறக்குமாறு

எல்லா உயிர்களும் பொதுவாகப் பிறக்கும் வகை

அசை. அவ்வழிப்
பன்னீ ருயிரும் தந்நிலை திரியா
மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.

இஃது உயிரெழுத்திற்குப் பொதுப்பிறவி கூறுகின்றது.

இ - ள் : பன்னீருயிருந் தந்நிலை திரியா — பன்னிரண்டு உயிருந் தத்தம் மாத்திரை திரியாவாய், அவ்வழிப் பிறந்த — அவ்வுந்தியிடத்துப் பிறந்த, மிடற்று வளியின் இசைக்கும் — மிடற்றின் கண் நிலைபெற்ற காற்றுன் ஒலிக்கும் ; எ - று.

எனவே குற்றியலிகரமுங் குற்றியலுகரமுந் தந்நிலை திரியு மென்றாயிற்று. அவ்வெழுத்துக்களைக் கூறி உணர்க. (உ)

அ, ஆ பிறக்குமாறு

அடி. அவற்றுள்,
அ ஆ ஆயிரண் டங்காந் தியலும்.

இஃது அவ்வுயிர்களுட் சிலவற்றிற்குச் சிறப்புப் பிறவி கூறுகின்றது.

இ - ள் : அவற்றுள் — முற்கூறிய பன்னிரண்டு உயிர்களுள், அ ஆ ஆயிரண்டு — அகர ஆகாரங்களாகிய அவ்விரண்டும், அங்காந்து இயலும் — அங்காந்து கூறும் முயற்சியாற் பிறக்கும் ; எ - று.

முயற்சி உயிர்க்கிழவன்கண்ணது. அ ஆ என இவற்றின் வேறுபாடு உணர்க. (ஙு)

இகரம் முதலியன பிறக்குமாறு

அசை. இ ஈ எ ஏ ஐயெலா இசைக்கும்
அப்பால் ஐந்தும் அவ்வே ரன்ன
அவைதாம்
அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய.

இதுவும் அது.

இ - ள்: இ ஈ எ ஏ ஐ என இசைக்கும் அப்பாலிலிருந்தும் — இ ஈ எ ஏ ஐ என்று கூறப்படும் அக்கூற்று ஐந்தும், அவற்றோரன்ன — அகர ஆகாரங்கள்போல அங்காந்து கூறும் முயற்சியாற் பிறக்கும், அவைதாம் அண்பல் முதல் நா விளிம்பு உறல் உடைய — அவைதாம் அங்ஙனம் பிறக்குமாயினும் அண்பல்லும் அடிநா விளிம்பும் உறப் பிறக்கும் வேறுபாடுடைய; எ - று.

அண்பல் வினைத்தொகை. எனவே, நாவிளிம்பு அணுகுதற்குக் காரணமான பல்லென்று அதற்கோர் பெயராயிற்று. இ ஈ எ ஏ ஐ என இவற்றின் வேறுபாடு உணர்க. (ச)

உகர முதலியன பிறக்குமாறு

அஎ. உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும்
அப்பால் ஐந்தும் இதழ்குவிந் தியலும்.

இதுவும் அது.

இ - ள்: உ ஊ ஒ ஓ ஔ என இசைக்கும் அப்பாலிலிருந்தும் — உ ஊ ஒ ஓ ஔ என்று சொல்லப்படும் அக்கூற்று ஐந்தும், இதழ் குவிந்து இயலும் — இதழ் குவித்துக் கூறப் பிறக்கும்; எ - று.

உ ஊ ஒ ஓ ஔ என இவற்றின் வேறுபாடு உணர்க. (ஞ)

உயிர்க்கும் மெய்க்கும் ஒரு பொது விதி

அஅ. தத்தம் திரிபே சிறிய என்ப.

இது முற்கூறிய உயிர்க்கும் மேற்கூறும் மெய்க்கும் பொது விதி கூறிச் சிங்ஙோக்காகக் கிடந்தது.

இ - ள்: தத்தந் திரிபே சிறிய என்ப — உயிர்களும் மெய்களும் ஒவ்வொரு தானங்களுட் பிறப்பனவற்றைக் கூட்டிக் கூறினேமாயினும் நுண்ணுணர்வான் ஆராயுமிடத்துத் தம்முடைய வேறுபாடுகள் சிறியவாக உடைய என்று கூறுவர் புலவர்; எ - று.

அவை எடுத்தல் படுத்தல் நலிதல் விலங்கல் என்றவாற்றானுந் தலைவளி[1] நெஞ்சுவளி மிடற்றுவளி மூக்குவளி என்றவாற்றானும் பிறவாற்றானும் வேறுபடுமாறு நுண்ணுணர்வுடையோர் கூறி உணர்க. ஐ விலங்கலுடையது.[2] வல்லினந் தலைவளியுடையது.[3] மெல்லினம் மூக்குவளியுடையது. இடையினம் மிடற்றுவளியுடையது. எனையவும் கூறிக் கண்டு உணர்க. (சு)

ங. மெய்யெழுத்துக்கள் பிறக்குமாறு

க, ங

அஙை. ககார ஙகாரம் முதல்நா அண்ணம்.

இது மெய்களுட் சிலவற்றிற்குப் பிறப்புக் கூறுகின்றது.

1 தலைவளி எழுதலிறகுப் பயனபடுவதாயத் தெரியவிலலை.
2 விலங்கல் — நலிதலில் அடுத்த படுத்த லொலிகளைச் சோதனைக் கூறும்போது உள்ள ஒசை.
3 வலலினம நெஞ்சுவளியுடையதென்பதே பொருததமானது.

இ - ள்: ககார ஙகாரம் முதல் நா அண்ணம் — ககாரமும் ஙகாரமும் முதல் நாவும் முதல் அண்ணமும் உறப் பிறக்கும்; எ-று.

உயிர்மெய்யாகச் சூத்திரத்துக் கூறினுந் தனிமெய்யாகக் கூறிக் காண்க. முதலே இரண்டிற்குங் கூட்டுக. க ங என இவற்றின் வேறுபாடு உணர்க. (எ)

ச, ஞ

கூம். சகார ஞகாரம் இடைநா அண்ணம்.

இதுவும் அது.

இ - ள்: சகார ஞகாரம் இடைநா அண்ணம் — சகாரமும் ஞகாரமும் இடைநாவும் இடையண்ணமும் உறப் பிறக்கும்; எ-று.

இடையை இரண்டிற்கு கூட்டுக. ச ஞ என இவற்றின் வேறுபாடு உணர்க. (அ)

ட, ண

கூக. டகார ணகாரம் நுனிநா அண்ணம்.

இதுவும் அது.

இ - ள்: டகார ணகாரம் நுனி நா அண்ணம் — டகாரமும் ணகாரமும் நுனிநாவும் நுனியண்ணமும் உறப் பிறக்கும்; எ-று.

நுனியை இரண்டிற்கு கூட்டுக. ட ண என இவற்றின் வேறுபாடு உணர்க. (கூ)

மேலனவற்றிற்கு ஓர் ஐயந் தீர்த்தது

கூஉ. அவ்வா றெழுத்தும் மூவகைப் பிறப்பின.

இது மேலனவற்றிற்கோர் ஐயம் அகற்றியது.

இ - ள்: அவ்வாறெழுத்தும் மூவகைப் பிறப்பின — அக்கூறப் பட்ட ஆறெழுத்தும் மூவகையாகிய பிறப்பினை உடைய; எ-று.

எனவே, அவை ககாரம் முதல் நாவினும் ஙகாரம் முதல் அண்ணத்தினும் பிறக்குமென்று இவ்வாறே நிரனிறைவகையான் அறுவகைப் பிறப்பின அல்ல என்றார். (ஐ)

த, ந

கூங. அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம்இனி துபிறக்குந் தகார நகாரம்.

இது மெய்களுட் சிலவற்றிற்குப் பிறவி கூறுகின்றது.

இ - ள்: அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கில் — அண்ணத்தைச் சேர்ந்த பல்லின தடியாகிய இடத்தே, நாநுனி பரந்து மெய்யுற ஒற்ற — நாவினது நுனி பரந்து சென்று தன் வடிவு

மிகவும் உறும்படி சேர, தகார நகாரந்தாம் இனிது பிறக்கும் — தகார நகார மென்றவைதாம் இனிதாகப் பிறக்கும்; எ - று.

த ந என இவற்றின் வேறுபாடு உணர்க. முன்னர் உறுப்புற்று அமைய என்று கூறி ஈண்டு மெய்யுற ஒற்ற என்றார். சிறிது ஒற்றவும் வருடவும் பிறப்பன[1] உளவாகலின். (கக)

ற, ன

கூச. அணரி நுனிநா அண்ணம் ஒற்ற
றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ - ள்: நுனி நா அணரி அண்ணம் ஒற்ற — நாவினது நுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவ, றஃகான் னஃகான் ஆயிரண்டும் பிறக்கும் — றகார னகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும்; எ - று.

இது முதலாக நெடுங் கணக்கு முறை யன்றி நாவதிகாரம்[2] பற்றிக் கூறுகின்றார்.

ற ன என இவற்றின் வேறுபாடு உணர்க. (கஉ)

ர, ழ

கூடு. நுனிநா அணரி அண்ணம் வருட
ரகாரம் ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ - ள்: நுனி நா அணரி அண்ணம் வருட — நாவினது நுனி மேனோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவ, ரகார ழகாரம் ஆயிரண்டும் பிறக்கும் — ரகார ழகாரமாகிய அவ்விரண்டும் பிறக்கும்; எ - று.

ர ழ என இவற்றின் வேறுபாடு உணர்க. (கங)

ல, ள

கூசு. நாவிளிம்பு வீங்கி யண்பல் முதலுற
ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்
லகார ளகாரம் ஆயிரண்டும் பிறக்கும்.

இதுவும் அது.

இ - ள்: நா வீங்கி விளிம்பு அண்பல் முதலுற — நா மேனோக்கிச் சென்று தன் விளிம்பு அண்பல்லி னடியிலே உருமிற்க, ஆவ

1 சிறிது ஒற்றப் பிறப்பன லகார னகாரங்கள்; சிறிது வருடப் பிறப்பன ரகார முகாரங்கள்.

2 நாவதிகாரம் - நாவினுல் ஏற்பட்ட முறைமை.

யின் அண்ணம் ஒற்ற லகாரமாய் — அவ்விட்த்து அவ்வண் ணத்தை அந்நாத் தீண்ட லகாரமாயும், ஆவயின் அண்ணம் வருட ளகாரமாய் — அவ்விடத்து அவ்வண்ணத்தை அந்நாத் தடவ ளகாரமாயும். இரண்டும் பிறக்கும் — இவ்விரண்டெழுத்தும் பிறக்கும்; எ - று.

ல ள என இவற்றின் வேறுபாடு உணர்க.

இத்தீணையும் நாவதிகாரங் கூறிற்று. (கச)

ப, ம

கூஎ. இதழியைந்து பிறக்கும் பகார மகாரம்.

இதுவும் அது.

இ - ள்: இதழ் இயைந்து பிறக்கும் பகார மகாரம் — மேலீத ழுங் கீழிதழுங் தம்மிற் கூடப் பகாரமும் மகாரமும் பிறக்கும்; எ - று.

ப ம என இவற்றின் வேறுபாடு உணர்க. (கடு)

வ

கூஅ. பல்லிதழ் இயைய வகாரம் பிறக்கும்.

இது வகாரம் பிறக்குமாறு கூறுகின்றது.

இ - ள்: பல் இதழ் இயைய வகாரம் பிறக்கும் — மேற்பல் லுங் கீழிதழுங் கூட வகாரமானது பிறக்கும்; எ - று.

வ என வரும். இதற்கும் இதழ் இயைதலின் மகரத்தின் பின்னர் வைத்தார். (கசு)

ய

கூக. அண்ணம் சேர்ந்த மிடற்றெழு வளியிசை
கண்ணுற் றடைய யகாரம் பிறக்கும்.

இது யகாரம் பிறக்குமாறு கூறுகின்றது.

இ - ள்: எழுவளி மிடற்றுச் சேர்ந்த இசை — உந்தியி லெழுந்த காற்று மிடற்றிடத்துச் சேர்ந்த அதனாற் பிறந்த ஓசை, அண்ணங் கண்ணுற்று அடைய — அண்ணத்தை அணைந்து உரலாணி[1] இட்டாற்போலச் செறிய, யகாரம் பிறக்கும் — யகார மொற்றுப் பிறக்கும்; எ - று.

ஆணி — மரம். ய என — வரும். (கஎ)

1 உரலாணி - உரற்குழி பள்ளமாயொ அடியில் துளைவிழுந்தபின அதை அடைக் கும்படி செறிக்கும் மரத்துண்டு.

மெய்தெரி வளி யெனவே பொருள் தெரியா முற்கும் வீளையும் முயற்சியா ஞமெனினும் பொருள் தெரியாமையின் அவை கடியப்பட்டன. எனவே, சொல் லப் பிறந்து சொற்கு உறுப்பாம் ஓசையை இவர் எழுத்தென்று வேண்டுவ ரென உணர்க,

'நிலையும் வளியும் முயற்சியும் மூன்று
மிய ல டப்ப தெழுத்தெனப் படுமே.'

என்றாராகலின். (உ)

பிறப்பியல் முற்றிற்று.

ச. புணரியல்

[எழுத்துக்களின் புணர்ச்சி யிலக்கணம் உணர்த்துவது]

க. மொழிகளின் முதலும் ஈறும்

மொழிக்கு முதலிலும் இறுதியிலும் வரும் எழுத்துக்கள்

கஉங. மூன்றுதலை யிட்ட முப்பதிற் றெழுத்தின்
இரண்டுதலை யிட்ட முதலா கிருபஃது
அறுநான் கிற்றொடு நெறிநின் றியலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிரென் றாயீ ரியல.

என்பது சூத்திரம். மொழிமரபிற் கூறிய மொழிகளைப் பொதுவகையாற் புணர்க்கும் முறைமை உணர்த்தினமையிற் புணரிய லென்று இவ்வோத்திற்குப் பெயராயிற்று. ஈண்டு முறைமை யென்றது மேற் செய்கை யோத்துக்களுட் புணர்தற்கு உரியவாக ஈண்டுக் கூறிய கருவிகளை.

இச்சூத்திரம் என்னுதலிற்றே வெனின், மொழிமரபிற் கூறிய மொழிக்கு முதலா மெழுத்தும் மொழிக்கு ஈறு மெழுத்தும் இத்துணை யென்றலும், எல்லா மொழிக்கும் ஈறும் முதலும் மெய்யும் உயிரு மல்லது இல்லை யென்று வரையறுத்தலும், ஈறும் முதலுமாக எழுத்து நாற்பத்தாறு உளவோ வென்று ஐயுற்றார்க்கு எழுத்து முப்பத்து மூன்றுமே அங்ஙனம் ஈறும் முதலுமாய் நிற்ப தென்று ஐயமறுத்தலும் முதலிற்று.

இ – ள்: முதல் இரண்டு தலையிட்ட இருபஃது ஈறு அறுநான் காகும் மூன்று தலையிட்ட முப்பதிற்றெழுத்தினெடு — மொழிக்கு முதலா மெழுத்து இரண்டை முடியிலே யிட்ட இருபஃதும் மொழிக்கு ஈறுமெழுத்து இருபத்துநான்கு மாகின்ற மூன்றை முடி யிலே யிட்ட முப்பதாகிய எழுத்துக்களோடே, நெறிநின்று இய லும் எல்லா மொழிக்கும் — வழக்கு நெறிக்கணின்று நடக்கும் மூவகை மொழிக்கும், மெய்யே உயிரென்று ஆயீரியல இறுதியும் முதலும் — மெய்யும் உயிரு மென்று கூறப்பட்ட அவ்விரண்டு இயல்பினையுடைய எழுத்துக்களே ஈறும் முதலும் ஆவன; எ – று.

இருபத்திரண்டு முதலாவன பன்னீருயிரும் ஒன்பது உயிர்மெய்யும் மொழிமுதற் குற்றியலுகரமுமாம். இருபத்து நான்கு ஈறுவன பன்னீருயிரும் பதினொரு புள்ளியும் ஈற்றுக் குற்றியலுகரமுமாம். மெய்யை முற்கூறினுல் நால்வகைப் புணர்ச்சியும் மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழா வென்றற்கு.

எ - டு: மரம் என மெய்முதலும் மெய்யீறும், இலை என உயிர் முதலும் உயிரீறும், ஆல் என உயிர்முதலும் மெய்யீறும், விள என மெய் முதலும் உயிரீறுமாம். மொழியாக்கம் இயல்பும் விகாரமு மென இரண்டாம். உயிர் தாமே நின்று முதலும் ஈறு மாதல் இயல்பு. அவை மெய்யோடு கூடி நின்று அங்ஙன மாதல் விகாரம். (க)

மொழியுறுபி மெய்கள் புள்ளி பெறுதல்

கூச. அவற்றுள்
மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்.

இது முற்கூறியவாற்றுல் தனிமெய் முதலாவான் சென்றதனை விலக்கலின் எய்தியது விலக்கிற்று.

இ - ள்: அவற்றுள் — முற் கூறிய மெய்யும் உயிருமென்ற இரண்டினுள், மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல் — மெய் மொழிக்கு ஈறுயவை யெல்லாம் புள்ளி பெற்று நிற்கும்; எ-று.

எனவே மொழிக்கு முதலாயினவை யெல்லாம் புள்ளி யிழந்து உயிரேறி நிற்கு மென்றாராயிற்று. இன்னும் ஈற்று மெய் புள்ளிபெற்று நிற்கு மென்ற தனுனே உயிர்முதன்மொழி தம்மேல் வந்தால் அவை உயிரேற இடங் கொடுத்து நிற்கு மென்பதூஉங் கூறினராயிற்று. இவ்விதி முற்கூறியதன்றே வெனின் ஆண்டுத் தனிமெய் பதினெட்டும் புள்ளி பெற்று நிற்கு மென்றும் அவைதாம் உயிரேறுங்காற் புள்ளி யிழந்து நிற்கு மென்றுங் கூறினர்; ஈண்டு மெய்முதல் மெய்யீறெனப் பொருளுரைக்க வேண்டினமையின் மொழிமுதன் மெய்களும் புள்ளிபெறுமோ வென்று ஐயுற்ற ஐயம் அகற்றக் கூறினு ரென்று உணர்க. மரம் எனப் புள்ளி பெற்று நின்றது அரிதென வந்துழி மரமரி தென்று எறி முடிந்தவாறு காண்க. (உ)

குற்றுகரம் ஒற்றெழுத் தொத்தல்

கூடு. குற்றிய லுகரமும் அற்றென மொழிப.

இது முன்னர்ப் புள்ளியீற்றுமுன் உயிர் தனித் தியலா தென்று மெய்க்கு எய்துவிக்கின்ற கருவியை எதிரது போற்றி உயிர்க்கும் எய்துவிக்கின்ற கருவிச் சூத்திரம்.

இ - ள்: குற்றியலுகரமும் அற்றென மொழிப — ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளியீறுபோல உயிரேற இடங்கொடுக்கு[1] மென்று கூறுவர் புலவர்; எ - று.

1 "குற்றியலுகரம் .....மொழிப" எனபதற்கு, குற்றியலுகரமும் மெய்யீறுபோலப் புள்ளிபெறும் எனபதே போந்த பொருளாம். "மெயயினியற்கை புள்ளியொடு நிலையல்" "எகர ஒகரத்தியறகையும அற்ற" என்று ஆசிரியர் மாட்டிய விடத்தும் எகரஒகரம் புள்ளிபெறு மெனபதற் கருத்தாதல் தெளிவாம். ஆதலால், இளம பூரணரும் நச்சினார்க்கினியரும் குற்றியலுகரம் புள்ளியீறு போல உயிரேற் இடங்

இம்மாட்டேறு ஒருபுடைச் சேறல் புள்ளி பெறுமையின். அங்ஙனம் உயிரேறுங்காற் குற்றுகரங் கெட்டுப்போக நின்ற ஒற்றின்மேல் உயிரேறிற் றென்று கொள்ளற்க. நாகரிதென்புழி முன்னர்க் குற்றுகர வோசையும் பின்னர் உயிரோசையும் பெற்று அவ்விரண்டுங் கூடி நின்றல்லது அப்பொரு ளுணர்த்த லாகாமையின், இஃது உயிரோடுங் கூடி நிற்கு மென்றார். (கூ)

உயிர் மெய்யீறு உயிரீற்றது

கூ0கூ. உயிர்மெய் ஈறும் உயிரீற் றியற்றே.

இது 'மெய்யே யுயிரென்ருயீரியல' (எழு - கo0கூ) என்ற உயிர்க்கண் நிகழ்வதோர் ஐயம் அகற்றியது; உயிர்மெய் யென்பதோர் ஈறு உண்டேனும் அது புணர்க்கப்படாது, அதுவும் உயிராயே அடங்குமென்றலின்.

இ - ள்: உயிர்மெய்யீறும் — உயிர்மெய் மொழியினது ஈற்றின்கண் நின்றதும், உயிரீற்றியற்றே — உயிரீற்றின் இயல்பை யுடைத்து; எ - று.

உம்மையான் இடைநின்ற உயிர்மெய்யும் உயிரீற்றின் இயல்பை யுடைத்து என்ருராயிற்று. உம்மை எச்சவும்மை. ஈற்றினும் இடையினும் நின்றன உயிருள் அடங்கு மெனவே முதல் நின்றன மெய்யுள் அடங்கு மென்றார். இதனானே மேல் விள என்ருற் போலும் உயிர்மெய்க ளெல்லாம் அகர வீறென்று புணர்க்குமாறு உணர்க. வரகு இதனை மேல் உயிர்த்தொடர் மொழி யென்ப. முன்னர் 'மெய்யின் வழியது' (எழு - கஅ) என்றது ஒரெழுத்திற் கென்று உணர்க. இத்துணையும் மொழிமரபின் ஒழிபு கூறிற்று. (சு)

புணர்ச்சிக்குரிய இருமொழிகளின் இயல்பு

கூ0எ. உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும்
உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும்
மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியுமென்று
இவ்வென அறியக் கிளக்குங் காலை
நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவியென்று
ஆயிரியல புணர்நிலைச் சுட்டே.

இது மேற்கூறும் புணர்ச்சிகளெல்லாம் இருமொழிப் புணர்ச்சி யல்லது இல்லை யென்பதூஉம் அஃது எழுத்துவகையான் நான்காமென்பதூஉம் உணர்த்துகின்றது.

இ - ள்: உயிரிறு சொல்முன் உயிர்வரு வழியும் — உயிர் தனக்கு ஈறாக இறுஞ் சொல்லின்முன் உயிர் முதலாகிய மொழி வரும் இடமும், உயிரிறு சொல்முன் மெய்வரு வழியும் — உயிர்

கொடுகுமென்று உரைகூறுவது மாட்டேறறிறகு முற்றிலும் பொருந்தாது. இதுவே பேராசிரியர்க்கும் சிவஞானமுனிவர்க்கும சங்கயாப் புடையார்க்கும் கருத்தாம்." தொலலிவடிவின .....புள்ளி " எனனும் நன்னூல் நூற்பாவுரையில " ஆணடு எனற மிகையாமே.....குறறுகரக் குறறிகரங்ஙகுமேற புள்ளி கொடுபபாரும உளரெனக் கொள்க " என்று மயிலைநாதர் கூறுவதுங் காண்க.

தனக்கு ஈருக இறுஞ் சொல்லின் முன்னர் மெய் முதலாகிய மொழி வரும் இடமும், மெய்யிறு சொல்முன் உயிர்வரு வழியும் — மெய் தனக்கு ஈருக இறுஞ் சொல்லின் முன்னர் உயிர்முதலாகிய மொழி வரும் இடமும், மெய்யிறு சொல்முன் மெய்வரு வழியும் — மெய் தனக்கு ஈருக இறுஞ் சொல்லின் முன்னர் மெய் முதலாகிய மொழி வரும் இடமும், என்று புணர்நிலைச் சுட்டு — என்று சொல்லப்பட்ட ஒன்றினேடொன்று கூடும் நிலைமையாகிய கருத்தின்கண், இவ்வெனை அறியக் கிளக்குங் காலை — அவற்றை இத்துணை யென வரையறையை எல்லாரும் அறிய யாங் கூறுங்காலத்து, நிறுத்த சொல்லே குறித்துவரு கிளவி யென்று ஆயிரியல — முன்னர் நிறுத்தப்பட்ட சொல்லும் அதனை முடித்தலைக் குறித்து வருஞ் சொல்லும் என்று சொல்லப்பட்ட அவ்விரண்டு இயல்பினை யுடைய; எ - று.

எனவே, நான்கு வகையானுங் கூடுங்கால் இருமொழி யல்லது புணர்ச்சி யின்று என்றாராயிற்று.

எ - டு: ஆவுண்டு ஆவலிது ஆவிலை ஆல்வீழ்ந்தது என முறையே காண்க. விளவினைக் குறைத்தான் என்றவழிச் சாரியையும் உருபும் நிலை மொழியாயே நிற்கு மென்பது நோக்கி அதனை நிறுத்தசொல்லென்றும் முடிக்குஞ் சொல்லைக் குறித்துவரு கிளவி யென்றும் கூறினார். இதனானே நிலை மொழியும் வருமொழியுங் கூறினார். முன்னர் 'மெய்யே யுயிர்' (எழு - கஙக) என்றது ஒரு மொழிக்கு, இஃது இருமொழிக்கென்று உணர்க. (இ)

உ. புணர்தலின் இயல்பு

மொழி புணரியல்பு நான்கு

கஙஅ. அவற்றுள்
நிறுத்த சொல்லின் ஈரு கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே.

இது முன்னர் எழுத்துவகையான் நான்கு புணர்ச்சி எய்திய இருவகைச் சொல்லுஞ் சொல்வகையானும் நான்காந மென்பதூஉம் அங்ஙனம் புணர்வது சொல்லுஞ் சொல்லும் அன்று எழுத்தும் எழுத்துமென்பதூஉம் உணர்த்துகின்றது.

இ - ன்: அவற்றுள் — நிலைமொழி வருமொழி யென்றவற்றுள், நிறுத்த சொல்லின் ஈருகு எழுத்தொடு குறித்துவரு கிளவி

முதலெழுத்து இயைய — முன்னர் நிறுத்தப்பட்ட சொல்லினது ஈறு கின்ற எழுத்தோடே அதனை முடிக்கக் கருதி வருகின்ற சொல்லி னது முதலெழுத்துப் பொருந்த, பெயரொடு பெயரைப் புணர்க் குங் காலும் — பெயர்ச்சொல்லோடு பெயர்ச் சொல்லைக் கூட்டும் இடத்தும், பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும் — பெயர்ச் சொல்லோடு தொழிற்சொல்லைக் கூட்டும் இடத்தும், தொழி லொடு பெயரைப் புணர்க்குங்காலும் — தொழிற் சொல்லோடு பெயர்ச்சொல்லைக் கூட்டும் இடத்தும், தொழிலொடு தொழிலைப் புணர்க்குங்காலும் — தொழிற் சொல்லோடு தொழிற் சொல்லைக் கூட்டும் இடத்தும், மூன்றே திரிபு இடன் ஒன்றே இயல்பென ஆங்கு அந்நான்கே — திரியும் இடம் மூன்று இயல்பு ஒன்று என்று முந்து நூலிற் கூறிய அந்நான்கு இலக்கணமுமே, மொழி புணர் இயல்பு — ஈண்டு மொழிகள் தம்முட் கூடும் இலக்கணம்; எ - று.

உ - ம்: சாத்தன்கை சாத்தனுண்டான் வந்தான்சாத்தன் வந்தான் போயினனென முறையே காண்க. இவை நான்கு இனத்தோடு கூடப் பதினாறும். இடையும் உரியுந் தாமாக நில்லாமையிற் பெயர்வினையே கூறி னார். இடைச்சொல்லும் உரிச்சொல்லும் புணர்க்குஞ் செய்கைப்பட்டுழிப் புணர்ப்புச் சிறுபான்மை. பெயர்ப்பெயரும் ஒட்டுப்பெயரு மென இரண்டு வகைப்படும் பெயர். தெரிநிலைவினையுங் குறிப்புவினையு மென இரண்டு வகைப் படுந் தொழில். நிலைமொழியது ஈற்றெழுத்து முன்னர்ப் பிறந்து கெட்டுப் போக வருமொழியின் முதலெழுத்துப் பின் பிறந்து கெட்டமையான் முறையே பிறந்து கெடுவன ஒருங்குநின்று புணருமா றின்மையிற் புணர்ச்சி யென்பது ஒன்றின்றும் பிற வெனின், அச்சொற்களோக் கூறுகின்றேமாக வேட்கின்றேமும் அவ்வோசையை இடையறவுபடாமை உள்ளத்தின்கண்ணே உணர்வாதலின் அவ்வோசை கேடின்றி உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் புணர்ந்தனவே யாம். ஆகவே, பின்னர்க் கண்கூடாகப்[1] புணர்க்கின்ற புணர்ச்சி யும் முடிந்தனவேயா மென்று உணர்க. இனி முயற்கோடு உண்டென்றுல் அது குறித்துவரு கிளவி யன்மையிற் புணர்க்கப்படாது.[2] இதுதான் இன் றென்றுற் புணர்க்கப்படுமென்று[3] உணர்க. (சு)

புணர்ச்சியில் மூவகைத் திரிபுகள்

கஅகூ. அவைதாம்
மெய்பிறி தாதல் மிகுதல் குன்றலென்று
இவ்வென மொழிப திரியு மாறே.

இது முற்கூறிய மூன்று திரிபும் ஆமாறு கூறுகின்றது.

---

1 கண்கூடாக - கட்புலனாக வரிவடிவில.

2 முயற்கோடு உண்டு எனுமுல பொருளின்மையின, உண்டு என்பது முடிகருஞ் சொலலன்று

3 முயற்கோடு இன்று எனுமுல பொருளுணமையின. இன்று என்பது முடிகருஞ் சொல லாகும. ஆகவே, புணருஞ் சொறகட்கு அணமைலில மட்டும போதாது, பொருட் பொருததமும வேணடும எனபது கருதது, உரையில இது எனறது முயற கோடடை.

இ - ள்: அவைதாந் திரியுமாறு — முன்னர்த் திரிபென்று கூறிய அவைதாந் திரிந்து புணரும் நெறியை, மெய் பிறிதாதல் மிகுதல் குன்ற லென்று இவ்வென மொழிப — மெய் வேறுபடுதல் மிகுதல் குன்ற லென்று கூறப்படும் இம்மூன்று கூற்றை யுடைய வென்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

இம்மூன்றும் அல்லாதது இயல்பாமென்று உணர்க. இவை விகற்பிக்கப் பதினேறு உதாரணமாம். மட்குடம் மலைத்தலை மரவேர் இவை பெயரோடு பெயர் புணர்ந்த மூன்று திரிபு. மண்மலை என்பது இயல்பு. சொற் கேட்டான் பலாக்குறைத்தான் மரஉட்டான் இவை பெயரொடு தொழில் புணர்ந்த மூன்று திரிபு. கொற்றன் வந்தான் இஃது இயல்பு. வந்தானுற் சாத்தன், கொடாப்பொருள், ஒடுநாகம் இவை தொழிலொடு பெயர் புணர்ந்த மூன்று திரிபு. வந்தான் சாத்தன் இஃது இயல்பு. வந்தாற் கொள்ளும், பாடப் போயினான், சாஞான்றான் இவை தொழிலொடு தொழில் புணர்ந்த மூன்று திரிபு. வந்தான் கொண்டான் இஃது இயல்பு. மூன்று திரிபென்னுது இடனென்ற தனுன் ஒரு புணர்ச்சிக்கண் மூன்றும் ஒருங்கேயும் வரப்பெறு மென்று உணர்க. மகத்தாற் கொண்டான் இஃது அங்ஙனம் வந்தவாறு மகர ஈற்று 'நாட்பெயர்க் கிளவி' (எழு - நகக) என்னுஞ் சூத்திரத்தான் உணர்க. இரண்டு வருவன வுங் காண்க. (எ)

அடை மொழிகளோடு புணர்தல்

ககo. நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய.

இது நிலைமொழி அடையடுத்தும் வருமொழி அடையடுத்தும் அவ்விரு மொழியும் அடையடுத்தும் புணரு மென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியும் — நிலை மொழியாக நிறுத்தின சொல்லும் அதனைக் குறித்துவருஞ் சொல்லும், அடையொடு தோன்றினும் புணர் நிலைக்கு உரிய — தாமே புணராது ஒரோவோர் சொல் அடையடுத்து வரினும் இரண்டும் அடையடுத்து வரினும் புணர் நிலைமைக்கு உரிய; எ - று.

அடையாவன, உம்மைத் தொகையும்[1] இருபெயரொட்டுப் பண்புத் தொகை[2]யுமாம்.

எ - டு: பதினையிரத்தொன்று ஆயிரத்தொருபஃது பதினையிரத் திருபஃது என வரும். இவ்வடைகள் ஒரு சொல்லே யாம். வேற்றுமைத்

1 பனனிரண்டு கண எனனுமபோது, பனனிரண்டு எனபது பதனும இரண்டும் எனப பொருள்படுவதால உம்மைத்தொகை.

2 பதினையிரத்தொன்று எனனுமபோது, பதினையிரம என்பது பத்தாயிய ஆயிரம் எனப் பொருள்படுதலின பணபுத்தொகையாம்; ஆனல, இரு பெயரொட்டுப பண்புத் தொகையனறு. இருபெயரொடடாயின பதது ஆயிரம எனனுஞ் சொறகள் தனிததனி நினறும ஒரு பொருளை யுணாததல வேணடும். அங்ஙனம உணர்ததாமையும, பதினமரம எனனும இருபெயரொட்டுப புணபுத்தொகையில இரு சொலலும் தனிததனி ஒரே பொருளை யுணாததுவதையும் நோகுக.

தொகையும் உவமத் தொகையும் முடியப்[1] பண்புத் தொகையும் வினைத் தொகையும் பிளந்து முடியாமையின்[2] ஒரு சொல்லேயாம். அன்மொழித் தொகையுந்[3] தனக்கு வேறோர் முடிபின்மையின் ஒரு சொல்லேயாம். இத் தொகைச் சொற்களெல்லாம் அடையாய் வருங் காலத்து ஒரு சொல்லாய் வரு மென்று உணர்க. உண்டசாத்தன் வந்தான், உண்டு வந்தான் சாத்தன் என்பனவும்[4] ஒரு சொல்லே யாம். (அ)

மருஉ மொழிப் புணர்ச்சி

ககக. மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே.

இது மருஉச்சொற்களும் புணர்ச்சிபெறு மென்பதூஉம் நிறுத்த சொல்லுங் குறித்து வரு கிளவியுமாய்ப் பொருளியைபில்லனவும் புணர்ச்சி பெற்றுற் போல நிற்கு மென்பதூஉம் உணர்த்துகின்றது.

இ - ள்: மரு மொழியும் — இரு வகையாகி மருவிய சொற்களும், இன்றொகுதி மயங்கியன் மொழியும்[5] — செவிக்கினிதாகச் சொற்றிரளிடத்து நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியுமாய் ஒட்டிஞற்போல நின்று பொருளுணர்த்தாது பிரிந்து பின்னர்ச் சென்று ஒட்டிப் பொருளுணர்த்த மயங்குதல் இயன்ற சொற்களும், புணர்நிலைச் சுட்டு உரியவை உள — புணரும் நிலைமைக் கருத்தின்கண் உரியன உள; எ - று.

மொழியு மென்பதனை மருவென்பதனோடுங் கூட்டுக. இன்றொகுதி யென்றார், பாவென்னும் உறுப்பு நிகழப் பொருளொட்டாமற் சான்றோர் சொற்களைச் சேர்த்தலின்.

உ - ரு: முன்றில் மீகண் இவை இலக்கணத்தோடு பொருந்திய மரு. இலக்கணம் அல்லா மரு 'வழங்கியன் மருங்கின் மருவொடு திரிதவும்' (எழு - சஅஉ) என்புழிக் காட்டுதும். இனி,

'இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பிற்
பரல்அவல் அடைய இரலை தெறிப்ப.' (அகம் - ச)

என்புழி மருப்பினிரலை யென்று ஒட்டி இரண்டாவதன் தொகையாய்ப் பொருள் தந்து 'புள்ளி யீற்றுமுன் னுயிர்தனித் தியலா' (எழு - கஅஉ) என்று உயிரேறி முடிந்து மயங்கி நின்றது. ஆயின், மருப்பிற்பரலென்று மெய் பிறிதாய்

---

1 முடிய - இரு சொல்லாய்ப் பிளந்து முடிய. மரகதவீன எனவும் வேற்றுமைத் தொகை மரம்+கின எனவும், முத்துப்பல என்னும் உவமைத்தொகை முத்து+பல எனவும் பிளந்து முடிதல் காண்க.

2 செந்தாமரை எனவும் பணபுத்தொகையும் கொலகளிறு என்னும் வினைத்தொகையும் திடமாக அலலது தெளிவாக இரு சொலலாயப் பிளந்து முடியாமையும ஒரு சொறறனமைப்படடு நிறறல் காண்க.

3 அனமொழிததொகை என்றும வெளிப்படாத சொலலாய ஏனைத தொகைகளின் ஈறறில பிறதநிலனும ஒருசொறறனமைபபட்டு நிறறலாலும் ஒரு சொலலாம.

4 உண்ட சாத்தனை வந்தான, உண்டு வநதவனகிய சாத்தன எனப் பொருள்படும் போது இவை ஒரு சொறறனமைபபடும.

5 இநநூற்பாவின் முதலடியை மருவின் தொகுதியும் மயங்கியன் மொழியும் எனப் பிரித்துப் பொருள் கொள்வதே சிறநதது. மருமொழியும் இனதொகுதி மயங்கியல் மொழியும எனப பிரிபபது அத்துணைச் சிறநததனறு.

ஒட்டி நின்றவா றென்னே யெனின் மருப்பினையுடைய பரலென வேற்றுமைத் தொகைப் பொருள் உணர்த்தாமையின் அஃது அச்செய்யுட்கு இன்னேசை நிகழ்தற்குப் பகரத்தின் முன்னர் நின்ற னகரம் றகரமாய்த் திரிந்து நின்ற தூணேயேயாய்ப் புணர்ச்சிப் பயனின்றி நின்றது. இங்ஙனம் புணர்ச்சி யெய் திஞற் போல மாட்டிலக்கணத்தின் கண்ணும் மொழிமாற்றின் கண்ணும் நிற்றல் சொற்கு இயல்பென்றற்கு அன்றே ஆசிரியர் இன்ரொருதி யென்ற தென்று உணர்க. 'கருங்கா லோமைக் காண்பின் பெருஞ்சினே' (அகம் - உ) என்புழி ஓமைச்சினே யென்று ஒட்டி ஓமையினது சினே யெனப் பொருள் தருகின்றது இன்னேசை தருதற்குக் ககரவொற்று மிக்குக் காண்பி னென் பதனேடும் ஒட்டினேற்போல நின்றது. 'தெய்வ மால்வரைத் திருமுனி யருளால்' (சிலப் - ங) என் புழித் தெய்வவரை யென்று ஒட்டித் தெய்வத்தன்மை யுடைய வரை யெனப் பொருள் தருகின்றது இன்னேசை தருதற்கு மாலென் பதனேடும் ஒட்டினேற்போலக் குறைந்து நின்றது. மூன்று திரிபும் வந்தவாறு காண்க. இனி எச்சத்தின்கண்ணும்

'பொன்னேடைப் புகரணிதுதல்
தின்னருந்திறல் கமழ்கடாஅத்
தெயிறுபடையாக எயிற்கதவிடாஅக்
கயிறுபிணிக்கொண்ட கவிழ்மணிமருங்கிற்
பெருங்கையானே இரும்பிடர்த்தலையிருந்து
மருந்தில்கூற்றத் தருந்தொழில்சாயா' (புறம் - ங)

என மாட்டாய் ஒட்டி நின்றது[1] கயிறுபிணிக்கொண்ட என்பதனேடும் ஒட்டி னேற்போல நின்று ஒற்றடுத்தது இன்னேசை பெறுதற்கு. பிற சான்றோர் செய்யுட்கண் இவ்வாறும் பிறவாறும் புணர்ச்சி யில்வழிப் புணர்ச்சி பெற்றுற் போல நிற்பன எல்லாவற்றிற்கும் இதுவே ஒத்தாகக் கொள்க. (கூ)

இருவகைப் புணர்ச்சி

ககூ. வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்
எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணருங் காலை.

இது மூவகைத்திரிபினுள் மிக்குப் புணரும் புணர்ச்சி இருவகைய என் கின்றது.

இ - ள்: புணருங்காலை — நால்வகைப் புணர்ச்சியுள் மிக்க புணர்ச்சி புணருங் காலத்து, வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும் — வேற்றுமைப் பொருண்மையினைக் குறித்த புணர் மொழியினது தன்மையும், வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும் — வேற்றுமையல்லாத அல்வழியிடத்துப் புணரும் மொழி யினது தன்மையும், எழுத்தே சாரியை ஆயிரு பண்பின் ஒழுக்கல் வலிய — எழுத்து மிகுதலுஞ் சாரியை மிகுதலுமாகிய அவ்

1 மாட்டாய் ஒட்டி னின்றது - எயிறுபடையாக எயிறகதவிடாஅ மருந்தில கூறறத் தருந்தொழில் சாயா எனக் கொண்டு கூட்டாய் இசைருது நின்றது.

விரண்டு குணத்தினுனுஞ் செல்லுதலெத் தமக்கு வலியாகவுடைய; எ - று.

எனவே வினைப் புணர்ச்சிகளுக்கு இத்துணை வேறுபாடு இன்றென உணர்க.

ஏ - டு: விளங்கோடு இஃது எழுத்துப் பெற்றது. மகவின் கை, இது சாரியை பெற்றது. இனி அல்வழிக்கண் விளக்குறிது, இஃது எழுத்துப் பெற்றது. பனையின் குறை இது சாரியை பெற்றது. இதற்குப் பனை குறைந்த தென்பது பொருளாம். இஃது அளவுப் பெயர். ஒழுக்கல் வலிய என்றதனுன் இக் கூறிய இரண்டும் எழுத்துஞ் சாரியையும் உடன்பெறுதலுங் கொள்க. அவற்றுக் கோடென்பது வேற்றுமைக்கண் இரண்டும் பெற்றது. கலத்துக் குறை யென்பது அல்வழிக்கண் இரண்டும் பெற்றது. இதற்குக் கலங் குறைந்த தென்பது பொருளாம். இயல்பு கணத்துக்கண் இவ்விரண்டும் உடன்பெறுத லின்று. அல்வழி முற்கூறுதது வேற்றுமை யல்லாதது அல்வழி யென வேண்டுதலின். எழுத்துப்பேறு யாப்புடைமையானும்[1] எழுத்தினுற் சாரியை யாதலானும் எழுத்து முற்கூறினர். வேற்றுமை மேலச்சூத்திரத்தே கூறு கின்றார்.

அல்வழியாவன அவ்வுருபுகள் தொக்கும் விரிந்தும் நில்லாது புணர்வன. அவை எழுவாய்வேற்றுமை ஆறு பயனிலையோடும்[2] புணர்ந்த புணர்ச்சியும், விளிவேற்றுமை தன்பொருளோடு புணர்ந்த புணர்ச்சியும், முற்றுப் பெயரோ டும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், பெயரெச்சமும் வினையெச்சமும் பெயரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், உவமத் தொகையும் உம் மைத் தொகையும் இருபெயரொட்டுப் பண்புத்தொகையும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயரோடும் வினையோடும் புணர்ந்த புணர்ச்சியும், அன் மொழித்தொகை பொருளோடு புணர்ந்த புணர்ச்சியும், பண்புத்தொகையும் வினைத்தொகையும் விரிந்துநின்றவழிப் புணர்ந்த புணர்ச்சியு மென உணர்க.

கூ. உருபு புணர்ச்சி

வேற்றுமை யுருபுகள்

கஉகூ. ஐஒடு குஇன் அதுகண் என்னும்
அவ்வா றென்ப வேற்றுமை யுருபே.

இது மேல் வேற்றுமை யெனப்பட்ட அவற்றது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது.

இ - ள்: வேற்றுமையுருபு — முற்கூறிய வேற்றுமைச் சொற் களோ, **ஐ ஒடு கு இன் அது கண் என்னும் அவ்வாறென்ப** — **ஐ ஒடு கு இன் அது கண் என்று சொல்லப்படும் அவ்வாறு உருபு மென்று சொல்வர் ஆசிரியர்; எ - று.**

மேற் சொல்லதிகாரத்து எழுவாயையும் விளியையுங் கூட்டி வேற்றுமை எட்டென்பாராலெனின் ஐ முதலிய வேற்றுமையாறுந் தொக்கும் விரிந்தும்

1 யாப்பு - வலி. 2 ஆறு பயனிலை - பொருணலம் சுட்டல், வியங்கொள வருதல், வினைநிலை யுரைத்தல், விரவிநிகழ்தல், பண்புகொள வருதல், பெயர்கொள வரு தல என்பன.

பெரும்பான்மையும் புலப்பட்டுநின்று பெயர்ப்பொருளைச் செயப்படுபொருள் முதலியனவாக வேறுபாடு செய்து புணர்ச்சி யெய்துவிக்கு மென்றற்கு ஈண்டு ஆறென்றார். ஆண்டு எழுவாயும் விளியுஞ் செயப்படுபொருள் முதலியவற்றினின்றும் தம்மை வேறுபடுத்துப் பொருள்மாத்திரம் உணர்த்திநின்றும் விளியாய் எதிர்முகமாக்கிநின்றும் இங்ஙனஞ் சிறு பான்மையாய்ப் புலப்பட நில்லா வேறுபாடு உடையவேனும், அவையும் ஒருவாற்றான் வேற்றுமையாயின வென்றற்கு ஆண்டு எட்டென்றாரென உணர்க. (கக)

வலிமுதலுருபு புணருநிலை

ககச. வல்லெழுத்து முதலிய வேற்றுமை யுருபிற்
கொல்வழி ஒற்றிடை மிகுதல் வேண்டும்.

இது நான்காவதற்கும் ஏழாவதற்கும் உருபியலே நோக்கியதோர் கருவி கூறுகின்றது.

இ - ள்: வல்லெழுத்து முதலிய வேற்றுமையுருபிற்கு — வல்லெழுத்து அடியாய் நின்ற நான்காவதற்கும் ஏழாவதற்கும், ஒல்வழி ஒற்று இடைமிகுதல் வேண்டும் — பொருந்தியவழி வல்லொற்றையினும் மெல்லொற்றையினும் இடைக்கண் மிக்குப் புணர்தலே விரும்பும் ஆசிரியன்; எ - று.

வரையாது ஒற்றெனவே வல்லொற்றும் மெல்லொற்றும் பெற்றும்.

எ - டு: மணிக்கு மணிக்கண் நீக்கு நீக்கண் மனைக்கு மனைக்கண் எனவும், வேய்க்கு வேய்க்கண் ஊர்க்கு ஊர்க்கண் பூழ்க்கு பூழ்க்கண் எனவும், உயிரீறு மூன்றினும் புள்ளியீறு மூன்றினும் பெரும்பான்மை வல்லொற்று மிக்கு வரும். தங்கண் நங்கண் நுங்கண் எங்கண் என மெல் லொற்று மிக்கது. இவற்றிற்கு நிலைமொழி மகரக்கேடு உருபியலிற் கூறுப. ஆங்கண் ஈங்கண் ஊங்கண் என்பன சுட்டெழுத்து நீண்டு நின்றன. இவற்றிற்கு ஒற்றுக்கேடு கூறுதற்கு ஒற்றின்று.

இனி நான்காவுருபிற்கு மெல்லொற்று மிகாதென்று உணர்க.

இனி ஒல்வழி யென்பதனான் ஏழா முருபின்கண் நம்பிகண் என இகர ஈற்றின்கண்ணும் நங்கைகண் என ஐகார ஈற்றின்கண்ணும் தாய்கண் என யகர ஈற்றின்கண்ணும் அரசர்கண் என ரகர ஈற்றின்கண்ணும் ஒற்று மிகாமை கொள்க.

இனி மெய்பிறிதாதலே முன்னே கூறுது மிகுதலே முற்கூறிய அதனானே பொற்கு பொற்கண் வேற்கு வேற்கண் வாட்கு வாட்கண் எனத் திரித்து முடிவனவுங் கொள்க. இதனானே அவன்கண் அவள்கண் என உயர்திணைப் பெயர்க்கண் ஏழனுருபு இயல்பாய் வருதலுங் கொள்க. இவற்றிற்குக் குன்றிய புணர்ச்சி வருமேனுங் கொள்க.

கொற்றிக்கு கொற்றிகண் கோதைக்கு கோதைகண் என விரவுப் பெயர்க்கும் இதனானே கொள்க. (கஉ)

அது உருபின் அகரம் கெடும்

ககடு. ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈரு ககரமுணக் கெடுதல் வேண்டும்.

இஃது ஆறுவதற்குத் தொகைமரபை நோக்கியதோர் கருவி கூறு கின்றது.

இ - ள்: ஆறனுருபின் அகரக்கிளவி — அதுவென்னும் ஆற னுருபின்கண் நின்ற அகரமாகிய எழுத்து, ஈறுகு அகரமுகீனக் கெடுதல் வேண்டும் — நெடுமுதல் குறுகு மொழிகட்கு 'ஈறுகு புள்ளி யகரமொடு நிலையும்' (எழு - ககஉக) என விதித்ததனுல் உளதாகிய அகரத்தின் முன்னர்த் தான் கெடுதலே விரும்பும் ஆசிரி யன்; எ - று.

தமது நமது எமது நமது தனது எனது நினது என வரும். இது நிலைமொழிக்கு ஓர் அகரம் பெறுமென விதியாது உருபு அகரம் ஏறி முடியு மென விதித்தால் வருங் குற்றம் உண்டோ வெனின், 'நினவ கூறுவ லெனவ கேண்மதி' (புறம் - நடு) என்றாற்போல ஆறுவதற்கு உரிய அகர உருபின் முன்னரும் ஓர் அகர எழுத்துப்பெறு நிலைமொழிக்கண் வருதலுளதாகக் கருதினுராதலின், ஆறனுருபிற்கும் நான்கனுருபிற்கும் பொதுவாக நிலை மொழிக்கண் அகரப்பேறு விதித்து, அதுவென்னும், ஒருமையுருபு வந்தால் ஆண்டுப் பெற்று நின்ற அகரத்தின் முன்னர் அது வென்பதன்கண் அகரங் கெடுக வென்று ஈண்டுக் கூறினுராதலின் அதற்குக் குற்றம் உண்டென்று உணர்க. (கஉ)

வேற்றுமை யுருபுகள் நிற்குமிடம்

ககசு. வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே.

இது வேற்றுமை பெயர்க்கண் நிற்குமாறு கூறுகின்றது.

இ - ள்: வேற்றுமை பெயர்வழிய — வேற்றுமைகள் பெயரின் பின்னிடத்தனவாம், புணர்நிலை — அவற்றோடு புணரும் நிலை மைக்கண்; எ - று.

எ - டு: சாத்தனே சாத்தனெடு சாத்தற்கு சாத்தனின் சாத்தனது சாத்தன்கண் என வரும். மற்று இது 'கூறிய முறையின்' (சொ - சுக) என்னும் வேற்றுமையோத்திற் சூத்திரத்தாற் பெறுதுமெனின், பெயரொடு பெயரைப் புணர்த்தல் முதலிய நால்வகைப் புணர்ச்சியினையும் வேற்றுமை அல்வழி யென இரண்டாக அடக்குதலின் தொழிற் பின்னும் உருபு வருமென எய்தியதனை விலக்குதற்கு ஈண்டுக் கூறினு ரென்க. ஆயின் இவ்விலக்குதல் வினையியன் முதற் சூத்திரத்தாற் பெறுதுமெனின், அது முதனிலையைக் கூறிற்றென்பது ஆண்டு உணர்க. (கசு)

பெயர்களின் பெயர், முறை, தொகை

ககள. உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்
ருயிரண் டென்ப பெயர்நிலைச் சுட்டே.

இது முற்கூறிய பெயர்கட்குப் பெயரும் முறையுந் தொகையுங் கூறு கின்றது.

இ - ள்: சுட்டுநிலைப் பெயர் — பொருளை ஒருவர் கருதுதற்குக் காரணமான நிலைமையையுடைய பெயர்களை, உயர்திணைப் பெயரே அஃறிணைப் பெயரென்று ஆயிரண்டென்ப—உயர்திணைப் பொருளை ஒருவன் கருதுதற்குக் காரணமான பெயரும் அஃறிணைப் பொருளை ஒருவன் கருதுதற்குக் காரணமான பெயரும் என்னும் அவ்விரண்டென்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

பெயரியலுள் அவன் இவன் உவன் என்பது முதலாக உயர்திணைப் பெயரும் அது இது உது என்பது முதலாக அஃறிணைப் பெயரும் ஆமாறு அவற்றிற்கு இலக்கணங் கூறுகின்றார், ஈண்டுக் குறியிட்டாளுதல் மாத்திரையே கூறினரென்று உணர்க. இனிக் கொற்றன் கொற்றி என்றாற் போலும் விரவுப்பெயரும் கொற்றன் குறியன் கொற்றி குறியள் கொற்றன் குளம்பு கொற்றி குறிது எனப் பின்வருவனவற்றால் திணை தெரிதலின் இருதிணைப்பெயரின்கண் அடங்கும். கொற்றன்செவி கொற்றிசெவி என்பனவும் பின்னர் வருகின்ற வினைகளால் திணை விளங்கி அடங்குமாறு உணர்க.[1] இனி 'அஃறிணை விரவுப்பெயரியல்புமா ருளவே' (எழு - கஙஙி) என்றாற் போலப் பிறாண்டும் ஓதுதல் பற்றி நிலையென்றதனான் விரவுப்பெயர் கோடலும் ஒன்று. (கஙி)

ங. சாரியைப் புணர்ச்சி

சாரியை வருமிடம்

ககஅ. அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே.

இது சாரியை வரும் இடங் கூறுகின்றது.

இ - ள்: அவற்றுவழி மருங்கின் — அச் சொல்லப்பட்ட இரு வகைப் பெயர்களின் பின்னுகிய இடத்தே, சாரியை வரும் — சாரியைச் சொற்கள் வரும்; எ - று.

உ - ம்: ஆடுஉவின்கை மகடூஉவின்கை பலவற்றுக்கோடு எனப் புணரியனிலையிடைப் பொருணிலைக்கு உதவி வந்தன. சாரியை யென்றதன் பொருள் வேறுகி நின்ற இருமொழியுந் தம்மிற் சார்தற் பொருட்டு இயைந்து நின்றது என்றவாறு. (ககஙி)

சாரியைகளின் பெயரும் முறையும் தொகையும்

ககக. அவைதாம்,
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே.

இஃது அச்சாரியைகட்குப் பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது.

1 கொற்றன் செவி நெடியன் என்ற விடத்து உயர்திணை என்றும் கொற்றன் செவி நெடிது என்ற விடத்து அஃறிணை யென்றும் திணை விளங்கியமை காண்க.

இ - ன்: அவைதாம் — முன்னர்ச் சாரியை யெனப் பட்ட அவைதாம், இன்னே வற்றே அத்தே அம்மே ஒன்னே ஆனே அக்கே இக்கே அன்னென் கிளவி உளப்பட அன்ன என்ப — இன்னும் வற்றும் அத்தும் அம்மும் ஒன்னும் ஆனும் அக்கும் இக்கும் அன்னென்னுஞ் சொல்லோடு கூட ஒன்பதாகிய அத்தன்மையுடையனவும், பிறவுஞ் சாரியை மொழி என்ப — அவை யொழிந்தனவுஞ் சாரியைச் சொல்லா மென்பர் ஆசிரியர்; எ - று.

பிறவாவன தம் ஈம் தும் உம் ஞான்று கெழு ஏ ஐ என்பனவாம். இவற்றுள் ஞான்று ஒழிந்தன எடுத்தோதுவர் ஆசிரியர். 'எடுத்த நறவின் குலையலங் காந்தள்[1]' (கலி - ச0) இது வினைத்தொகை; சாரியை யன்று. இன் சாரியை வழக்குப் பயிற்சியும் பலகால் எடுத்தோதப்படுதலும் பொதுவகையான் ஓதிய வழித் தானே சேறலு[2] மாகிய சிறப்பு நோக்கி முன் வைத்தார். வற்றும் அத்தும் இன்போல முதல் திரியுமாகலானுஞ் செய்கை யொப்புமையானும் அதன்பின் வைத்தார். அம் ஈறு திரியுமாதலின் திரிபுபற்றி அதன்பின் வைத்தார். ஒன் ஈறு திரியுமேனும் வழக்குப்பயிற்சி யின்றி நான்கா முருபின்கண் திரிதலின் அதன்பின் வைத்தார். ஆன் பொருட்புணர்ச்சிக்கும் உருபு புணர்ச்சிக்கும் வருமென்று அதன்பின் வைத்தார். அக்கு ஈறு திரியுமேனும் உருபு புணர்ச்சிக்கண் வாராமையின் அதன்பின் வைத்தார். இக்கு முதல் திரியுமேனுஞ் சிறுபான்மைபற்றி அதன்பின் வைத்தார். அன் இன்போலச் சிறத்தலிற் பின் வைத்தார்.

ஆனுருபிற்கும் ஆன்சாரியைக்கும் இன்னுருபிற்கும் இன்சாரியைக்கும் வேற்றுமை யாதெனின், அவை சாரியையான இடத்து யாதானும் ஓர் உருபேற்று முடியும்; உருபாயின இடத்து வேறோர் உருபினை லொ வென்று உணர்க. இனி மகத்துக்கை என்புழித் தகரவொற்றுத் தகரவுகரமும் வருமென்று கோடுமெனின், இருளத்துக் கொண்டானென்றுல் அத்து எனவே வேண்டுதலின் ஆண்டும் அத்துகின்றே கெட்டதென்று கோடும். அக்கு இக்கு என்பனவும் பிரித்துக்கூட்டக் கிடக்கும். தாழக்கோ லென அக்குப் பெற்று நிற்றலானும் ஆடிக்கு என்புழிக் குகரம் நான்கனுருபாகாமையானும் இவை சாரியையாமாறு உணர்க. (கஎ)

கூஉம். அவற்றுள்,

இன்னின் இகரம் ஆவின் இறுதி
முன்னர்க் கெடுதல் உரித்து மாகும்.

இது முற்கூறியவற்றுள் இன்சாரியை முதல் திரியுமாறு கூறுகின்றது.

இ - ன்: அவற்றுள் — முற் கூறிய சாரியைகளுள், இன்னின் இகரம் — இன் சாரியையது இகரம், ஆவின் இறுதி முன்னர் — ஆ என்னும் ஒரெழுத் தொரு மொழி முன்னர், கெடுதல் உரித்து மாகும் — கெட்டு முடியவும் பெறும்; எ - று.

---

1 குலையலங் காந்தள் என்பது குலையலங்கு காந்தள் எனபதன் தொகுத்தல.

2 பொது வகையான் ஓதியவழி தானே சேறல் - இச் சொல்லுக்கு இன்னசாரியை என விதியாது பொதுவாகச் சாரியைப் பேறு கூறிய விடத்தும் தானே சாரியையாய் அமைதல.

உரித்துமாகு மென்றதனுற் கெடாது முடியவும் பெறும் என்றவாறு. இஃது ஒப்பங் கூறலென்னும் உத்தி.

எ - டு: ஆனை ஆவினை, ஆனொடு ஆவினொடு, ஆற்கு ஆவிற்கு, ஆனின் ஆவினின், ஆனது ஆவினது, ஆன்கண் ஆவின்கண் என வரும்.

இனி முன்னரென்றதனானே மாவிற்கும் இவ்வாறே கொள்க. மானை மாவினை, மானொடு மாவினொடு, மாற்கு மாவிற்கு என ஒட்டுக. ஆகார ஈறென்னுது ஆவினிறுதி யென்று ஓதினமையின் மா இலேசினுற் கொள்ளப் பட்டது.

இனி, ஆன்கோடு ஆவின்கோடு, மான்கோடு மாவின்கோடு என உருபிற் குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழியுங் கொள்க. (கஅ)

இன் சாரியை ஈறு திரியுமிடம்

கூஉக. அளவாகும் மொழிமுதல் நிலேஇய உயிர்மிசை
னஃகான் றஃகா னுகிய நிலேத்தே.

இஃது அவ் இன்சாரியை ஈறு திரியுமாறு கூறுகின்றது.

இ - ள்: அளவாகும் மொழி — அளவுப் பெயராய்ப் பின்னிற் கும் மொழிக்கு, முதல் நிலேஇய உயிர்மிசை னஃகான் — முன்னர் நின்ற எண்ணுப் பெயர்களின் ஈற்று நின்ற குற்றுகரத்தின்மேல் வந்த இன்சாரியையது னகரம், றஃகானுகிய நிலேத்து — றகர மாய்த் திரியும் நிலேமையை யுடைத்து; எ - று.

எ - டு: பதிற்றகல் பதிற்றுழக்கு. இவற்றைப் பத்தென நிறுத்தி 'நிறையுமளவும்' (எழு - சஉசு) என்னுஞ் சூத்திரத்தால் இன்சாரியை கொடுத்துக் 'குற்றிய லுகர மெய்யொடுங் கெடுமே' (எழு - சஉசு) என்ற தனுற் குற்றுகரம் மெய்யோடுங் கெடுத்து வேண்டுஞ் செய்கை செய்து 'முற்ற வின் வரூஉம்' (எழு - சஉசு) என்பதனுன் ஒற்றிரட்டித்து முடிக்க.

நிலேஇய என்றதனுற் பிறவழியும் இன்னின் னகரம் றகரமாதல் கொள்க. பதிற்றெழுத்து, பதிற்றடுக்கு ஒன்பதிற்றெழுத்து, பதிற்றிரண்டு, பதிற்றிரண்பது என எல்லாவற்றோடும் ஒட்டிக்கொள்க. அச் சூத் திரத்திற் 'குறையாதாகும்' (எழு - சஉசு) என்றதனுற் பொருட் பெயர்க்கும் எண்ணுப்பெயர்க்கும் இன்கொடுக்க. (கக)

வற்று முதல் கெடுதல்

கூஉஉ. வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே.

இது வற்று முதல் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள்: சுட்டு முதல் ஐம்முன் — சுட்டெழுத்தினை முதலாக வுடைய ஐகார ஈற்றுச் சொன்முன் வற்று[1] வருங்காலே, வஃகான் மெய்கெட அஃகான் நிற்றலாகிய பண்பு — அவ் வற்றுச் சாரியை

1 வற்றுச் சாரியையை நன்னூலார் அற்றுச் சாரியை எனப்.

யினது வகரமாகிய ஒற்றுக் கெட ஆண்டு ஏறிய அகரம் நிற்றல் அதற்கு உளதாகிய குணம்; எ - று.

எ - டு: அவையற்றை, இவையற்றை. உவையற்றை என வரும். இன்னும் இவற்றை, அவை இவை உவை என நிறுத்திச் 'சுட்டு முதலாகிய ஐயெ னிறுதி' (எழு - கஎஎ) என்றதனான் வற்றும் உருபுங் கொடுத்து வேண்டுஞ் செய்கை செய்க. இவ்வாறே எல்லா உருபிற்கும் ஒட்டுக. அவை யற்றுக்கோடு என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றவழியுங் கொள்க.

ஆகிய பண்பு என்றதனானே எவனென்பது படுத்த லோசையாற் பெய ராயவழி[1] எவன் என நிறுத்தி வற்றும் உருபுங் கொடுத்து வற்றுமிசை யொற் றென்று னகரங் கெடுத்து அகரவுயிர் முன்னர் வற்றின் வகரங் கெடுமெனக் கெடுத்து எவற்றை எவற்றொடு என முடிக்க. (உ0)

னகர ஈற்றுச் சாரியை திரியுமிடம்

கஉங. னஃகான் றஃகான் நான்கனுரு பிற்கு.

இஃது இன் ஒன் ஆன் அன்னென்னும் னகர ஈறு நான்குந் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள்: னஃகான் நான்கனுருபிற்கு றஃகான் — னகார ஈற்று நான்கு சாரியையின் னகரமும் நான்கா முருபிற்கு றகாரமாய்த் திரியும்; எ - று.

எ - டு: விளவிற்கு கோவிற்கு ஒருபாற்கு அதற்கு என வரும்.

இதனை 'அளவாகு மொழிமுதல்' (எழு - கஉக) என்பதன்பின் வையாது ஈண்டு வைத்தது னகர ஈறுகளெல்லாம் உடன் திரியு மென்றற்கு. ஆண்டு வைப்பின் இன் சாரியையே திரியு மென்பது படும். 'ஒன்று முதலா கப் பத்தார்ந்து வரூஉ — மெல்லா எண்ணும்' (எழு - கஙஙங) என்பதனான் ஒரு பாற்கு என்பதனை முடிக்க. (உக)

பொருட் புணர்ச்சியில் ஆன் ஈறு திரிதல்

கஉச. ஆனின் னகரமும் அதனோ ரற்றே
நாள்முன் வருஉம் வன்முதற் றொழிற்கே.

இஃது ஆனின் ஈறு பொருட்புணர்ச்சிக்கண் திரியு மென்கின்றது.

இ - ள்: நாள்முன் வருஉம் வன்முதல் தொழிற்கு — நாட் பெயர் முன்னர் வரும் வல்லெழுத்தை முதலாக உடைய தொழிற் சொற்கு இடையே வரும், ஆனின் னகரமும் அதனோரற்று — ஆன்சாரியையின் னகரமும் நான்கனுருபின்கண் வரும் ஆன்சாரியை போல றகரமாய்த் திரியும்; எ - று.

எ - டு: பரணியாற் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வரும். 'நாண்மூற் றோன்றுந் தொழினிலைக் கிளவிக்கு' (எழு - உசஎ) என்

1 எவன் என்பது படுத்தலோசையாற் பெயராகும் எனவே எடுத்தலோசையால் வினாவினைக் குறிப்பாகும் என்பதாம்.

றதனுன் ஆன்சாரியை கொடுத்துச் செய்கை செய்க. இனி உம்மையை இறந் ததுதழீஇயதாக்கி ஈளல்லவற்றுமுன் வரும் வன்முதற்றொழிற்கண் இன்னின் னகரமும் அதனோடு ஒக்கு மெனப் பொருளுரைத்துப் பனியிற் கொண்டான் வளியிற் கொண்டான் என இன்னின் னகரமும் றகரமாதல் கொள்க.

இனி, ஞாபகத்தால்[1] தொழிற்கண் இன்னின் னகரந் திரியு மெனவே பெயர்க்கண் இன்னின் னகரந் திரிதலுந் திரியாமையுங் கொள்க. குறும்பிற் கொற்றன், பறம்பிற் பாரி எனத் திரிந்து வந்தன ; குருகின் கால், எருத்தின் புறம் எனத் திரியாது வந்தன. (உஉ)

அத்து முதல் கெடுதல்

கூஉடு. அத்தின் அகரம் அகரமுனை யில்லை.

இஃது அத்து முதல் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள்: அத்தின் அகரம் — அத்துச்சாரியையின் அகரம், அகரமுனை இல்லை — அகர ஈற்றுச் சொன் முன்னர் இல்லையாம்; எ - று.

'அத்தவண் வரினும் வரைநிலை யின்றே,' (எழு - உகக) என்பதனுன் மகப்பெயர் அத்துப்பெற்று நின்றது மகத்துக்கை யென அகரங் கெட்டு நின்றது. விளவத்துக் கண்ணென்புழிக் கெடாது நிற்றல் 'அத்தே வற்றே' (எழு - கஙஉ) என்பதனுள் 'தெற்றென்றற்றே' என்பதனுற் கூறுப. (உங)

இக்கு முதல் கெடுதல்

கூஉசு. இக்கின் இகரம் இகரமுனை யற்றே.

இஃது இக்கு முதல் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள்: இக்கின் இகரம் — இக்குச் சாரியையினது இகரம், இகரமுனை அற்று — இகர ஈற்றுச்சொன் முன்னர் முற் கூறிய அத்துப் போலக் கெடும்; எ - று.

'திங்கண் முன்வரின்' (எழு - உசஅ) என்பதனுற் பெற்ற இக்கு ஆடிக் குக் கொண்டான் சென்றான் தந்தான் போயினன் என இகரங் கெட்டு நின் றது. இஃது இடப்பொருட்டு. (உச)

கூஉஎ. ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்.

இதுவும் அது.

இ - ள்: ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும் — இக்கின் இகரம் இகர ஈற்றுச் சொன் முன்னரன்றி ஐகார ஈற்றுச் சொன் முன்னரும் மேற் கூறிய கெடுத லியல்பிலே நிற்கும்; எ - று.

'திங்களு ளாரு முத்துகிளர் தண்ண' (எழு - உஅசு) என்பதனுற் சித் திரைக்குக் கொண்டான் என்புழிப் பெற்ற இக்கு ஐகாரத்தின் முன்னர்க் கெட்டவாறு காண்க. (உஙி)

---

1 ஞாபகம் - ஞாபகங் கூறல் எனவும் உரைத்தி. அதாவது, தூறபாவைச் சொற கருங்க வும் பொருள் விளங்கவும் செய்யாது அரிதும் பெரிதுமாகச் செய்து அதனல் வேறு பல பொருளுணர்தல்.

அக்கு அகரம் நிற்க ஏனைய கெடுமாறு

கஉஅ. எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி
அக்கின் இறுதிமெய்ம் மிசையொடுங் கெடுமே
குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது.

இஃது அக்கு முதல் ஒழிய ஏனைய கெடுமாறு கூறுகின்றது.

இ - ள்: எப்பெயர் முன்னரும் — எவ்வகைப்பட்ட பெயர்ச் சொன் முன்னரும், வல்லெழுத்து வருவழி — வல்லெழுத்து வரு மொழியாய் வருமிடத்து, அக்கின் இறுதிக் குற்றியலுகரம் முற்றத் தோன்றாது — இடை நின்ற அக்குச் சாரியையின் இறுதி நின்ற குற்றியலுகரம் முடியத் தோன்றாது, மெய்ம்மிசை யொடுங் கெடும் — அக்குற்றுகரம் ஏறிநின்ற வல்லொற்றுத் தனக்குமேல் நின்ற வல்லொற்றோடுங் கெடும்; எ - று.

'ஒற்றுகிலை திரியா தக்கொடு வரூஉம்' (எழு - சகஅ) என்றதனான் அக் குப்பெற்ற குன்றக்கூகை மன்றப்பெண்ணை என்பனவும், 'வேற்றுமை யாயி னேனை யிரண்டும்' (எழு - கூஉக) என்பதனான் அக்குப்பெற்ற ஈமக்குடம் கம்மக்குடம் என்பனவும், 'தமிழென் கிளவியும்' (எழு - கூஅநி) என்பதனான் அக்குப்பெற்ற தமிழக்கூத்து என்பதுவும் அக்கு ஈறுகெட்டவாறு காண்க. இங்ஙனம் வருதலின் எப்பெய ரென்றார். முற்ற வென்பதனான் வன்கண மன்றி ஏனையவற்றிற்கும் இவ் விதி கொள்க. தமிழ நூல், தமிழ யாழ், தமிழவரை யர் என வரும். இன்னும் இதனானே தமக்கேற்ற இயைபு வல்லெழுத்துக் கொடுத்து முடித்துக்கொள்க. அன்றிக் கேடோதிய ககரவொற்று நிற்கு மெனின், சகரந் தகரம் பகரம் வந்தவற்றிற்குக் ககரவொற்றுகாமை உணர்க. ()

அம் ஈறு திரியு மிடம்

கஉக. அம்மின் இறுதி கசதக் காலைத்
தன்மெய் திரிந்து ஞநந ஆகும்.

இஃது அம் ஈறு திரியுமாறு கூறுகின்றது.

இ - ள்: அம்மின் இறுதி — அம்முச் சாரியையின் இறுதி யாகிய மகரவொற்று, கசதக் காலை — கசதக்கள் வருமொழியாய் வருங்காலத்து, தன்மெய் திரிந்து ஞநந ஆகும் — தன் வடிவு திரிந்து ஞநநக்களாம்; எ - று.

எ - டு: புளியங்கோடு, செதிள், தோல் என வரும்.

இது 'புளிமாக் கிளவிக்கு' (எழு - உசச) என்பதனான் அம்முப்பெற்றது. கசதக்காலைத் திரியு மெனவே பகரத்தின்கண் திரிபின்றாயிற்று. மெய்திரிந் தென்றது தன்மெய் என்றதனான் அம்மின் மகரமேயன்றித் தம் நம் நும் உம் என்னுஞ் சாரியை மகரமுந் திரிதல் கொள்க. எல்லார் தங்கையும் எல்லார் நங்கையும் எல்லீர் நுங்கையும் வானவரி வில்லுந் திங்களும் என வரும். துறை கேழூரன் வளங்கேழூரன் எனக் கெழு வென்னுஞ் சாரியையது உகரக்கேடும் ஏகர நீட்சியுஞ் செய்யுண் முடிபென்று கொள்க. (உஎ)

அம் ஈறு கெடுமிடம்

கஉய. மென்மையும் இடைமையும் வருஉம் காலை
இன்மை வேண்டும் என்மனார் புலவர்.

இஃது அம்மீறு இயல்புகணத்து முன்னர்க் கெடு மென்கின்றது.

இ - ள்: மென்மையும் இடைமையும் வருஉங்காலை — மென் கணமும் இடைக்கணமும் வருமொழியாய் வருங் காலத்து, இன்மை வேண்டும் என்மனார் புலவர் — அம்முச் சாரியை இறுதி மகர மின்றி முடிதலே வேண்டுமென்று கூறுவர் புலவர்; எ - று.

எ - டு: புளியஞெரி நுனி முரி யாழ் வட்டு என வரும். உரையிற் கோட லென்பதனுற் புளியவிலை யென உயிர்வருவழி ஈறு கெடுதலும் புளியிலை யென அம்மு முழுவதுங் கெடுதலுங் கொள்க. புளியவிலை யென்றது 'ஒட்டுதற் கொழுகிய வழக்கு'[1] (எழு - கஉஉ) அன்று. மென்கணமும் இடைக் கணமும் உயிர்க்கணமுந் தம்மு ளொக்குமேனும் அம்மு முழுவதுங் கெட்டு வரு தலின் உயிரை எடுத்தோதாராயினர். புளிங்காய் என்பது மரு முடிபு. (உஅ)

இன் சாரியை முழுதும் கெடுமிடம்

கஉக. இன்னென வருஉம் வேற்றுமை யுருபிற்
கின்னென் சாரியை இன்மை வேண்டும்.

இஃது இன்சாரியை ஐந்தாமுருபின்கண் முழுவதுங் கெடு மென்கின்றது.

இ - ள்: இன்னென வருஉம் வேற்றுமை யுருபிற்கு — இன் னென்று சொல்ல வருகின்ற வேற்றுமை யுருபிற்கு, இன்னென் சாரியை இன்மை வேண்டும் — இன்னென்னுஞ் சாரியை தான் இன்றி முடிதலே விரும்பும் ஆசிரியன்; எ - று.

எ - டு: விளவின், பலாவின், கடுவின், தழுவின், சேவின், வெளவின் என வரும். இவற்றிற்கு வீழ்பழ மெனவும் நீங்கினு னெனவுங் கொடுத்து முடிவுணர்க. ஊரினீங்கினுன் என வினையவற்றோடும் ஒட்டுக. இனி 'அவற் றுள் இன்னினிகரம்' (எழு - கஉ0) என்றதன்பின் இதனை வையாத முறை யன்றிக் கூற்றினுன் இன்சாரியை கெடாது வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண் ணும் நிற்றல் கொள்க. பாம்பினிற் கடிது தேள், 'கற்பினின் வழாஅ நற்பல வுதவி', 'அகடுசேர்பு பொருந்தி யளவினில் திரியாது' (மலைபடு - கூஉ) என வரும். இனி இன்மையும் வேண்டுமென்னும் உம்மை தொக்கு நின்றதாக்கி அதனுன் இவை கோடலும் ஒன்று. (உக)

புணர்மொழிகளிற் சாரியை வருதல்

கஉஉ. பெயருந் தொழிலும் பிரிந்தொருங் கிசைப்ப
வேற்றுமை உருபு நிலைபெறு வரியுந்
தோற்றம் வேண்டாத் தொகுதியுங் கண்ணும்
ஒட்டுதற் கொழுகிய வழக்கொடு சிவணிச்
சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்கா

1 ஒட்டுதற் கொழுகிய வழக்கு - சாரியை பொருந்துதற் கேற்ப மடக்கு வழக்கு.

திடைநின் றியலுஞ் சாரியை இயற்கை
உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்.

இது முற்கூறிய சாரியைகளெல்லாம் புணர்மொழியுள்ளே வருமென்ப தூஉம் அம்மொழி தாம் இவை யென்பதூஉம் அவை வாராத மொழிகளும் உளவென்பதூஉங் கூறுகின்றது.

இ - ள்: பெயருந் தொழிலும் — பெயர்ச் சொல்லுந் தொழிற் சொல்லும், பிரிந்து இசைப்ப ஒருங்கு இசைப்ப — பெயருந் தொழிலுமாய்ப் பிரிந்திசைப்பப் பெயரும் பெயருமாய்க் கூடி யிசைப்ப, வேற்றுமை யுருபு நிலைபெறு வழியும் — வேற்றுமை செய்யும் உருபுகள் தொகாது நிலைபெற்ற இடத்தும், தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும் — அவ்வேற்றுமை யுருபுகள் தோற்றுதல் வேண்டாது தொக்க இடத்தும்,[1] ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணி — தாம் பொருந்துதற் கேற்ப நடந்த வழக்கோடே பொருந்தி, சொற்சிதர் மருங்கின் — சாரியை பெறும் புணர் மொழிகளைப் பிரித்துக் காணுமிடத்து, சாரியை இயற்கை வழி வந்து விளங்காது இடை நின்று இயலும் — அச்சாரியையினது தன்மை அச்சொற்களின் பின்னே வந்து விளங்காது நடுவே நின்று நடக்கும், உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும் — அச்சாரியை உண்டாதலும் இல்லையாதலும் ஒடுவுருபினிடத்து ஒத்துவரும்; எ - று.

ஒடுவிற் கொக்கும் எனவே எனைய ஒவ்வாவாயின.

உ - ம்: விளவினைக்குறைத்தான், கூழிற்குக் குற்றேவல் செய்யும் - இவை பிரித்திசைத்து உருபு நிலைபெற்றன. 'அன்னென் சாரியை' (எழு - கஙசு) என்பதனைக் 'குற்றியலுகரத்திறுதி' (எழு - கஙடி) என்பதனைச் சேர வைத்த தனால் இன்சாரியை வருதல் கொள்க. இவ்விரண்டுருபுஞ் சாரியை நிற்பப் பெரும்பான்மையுந் தொகா வென்று உணர்க. விளவினைக் குறைத்தவன். கடிசூத்திரத்திற்குப் பொன் - இவை ஒருங்கிசைப்ப உருபு நிலைபெற்றன, வானத்தின் வழுக்கி, வானத்து வழுக்கி எனச் சாரியை பெற்றுப் பிரித்திசைத்து ஐந்தாமுருபு நிலைபெற்றும் நிலைபெறுதும் வந்தது. வானத்தின் வழுக்கல், வானத்து வழுக்கல் - இவை 'மெல்லெழுத் துறழும்' (எழு - நகஉ) என்னுஞ் சூத்திரத்து 'வழக்கத்தான' என்பதனுன் அத்துக் கொடுத்து மகரங் கெடுக்க ஒருங்கிசைத்தன. விளவினது கோடு, விளவின் கோடு என ஒருங்கிசைத்துச் சாரியை பெற்றவழி ஆறனுருபு தொகாதுந் தொக்கும் நின்றது. இதற்குப் பிரித்திசைத்த லின்று. மரத்துக்கட் கட்டினுன், மரத்துக் கட்டினுன் எனப் பிரித்திசைத்தவழியும், மரத்துக்கட் குரங்கு, மரத்துக் குரங்கு என ஒருங்கிசைத்தவழியுஞ் சாரியை நின்றவழி ஏழனுருபு தொகாதுந் தொக்கும் நின்

1 இந்நூற்பாவிற்கு, பெயரும் பெயரும் பெயரும் வினையும் வேற்றுமை விரியில இரு சொல்லாயப் பிரிந்திசைக்கும் என்றும், வேற்றுமைத் தொகையில ஒரு சொல போல ஒருங்கிசைக்கும் என்றும், பொருள கொள்வா னானூலாருள்ளிட்ட ஆசிரியர் சிலர்.

றது. 'கிளைப்பெய ரெல்லாம்' (எழு - நூ0எ) என்றதனுட் 'கொள' என்ற தனுன் ணகாரம் டகார மாயிற்று. 'நிலாவென் கிளவி யத்தொடு சிவணும்' (எழு - உஉஅ) என விதித்த அத்து நிலாக்கதிர் நிலாமுற்றம் என்றவழிப் பெறுதாயிற்று, அஃது 'ஒட்டுதற் கொழுகிய வழக்கு' அன்மையின். நிலாத் துக் கொண்டான், நிலாத்துக் கொண்டவன் என்பன உருபுதொக்குழி இரு வழியும் பெற்றன. எல்லார் தம்மையும் எனச் சாரியை ஈற்றின்கண்ணும் வருதலின் இடை நிற்றல் பெரும்பான்மை யென்றற்கு இயலு மென்றார். பூவி னொடு விரிந்த கூந்தல், பூவொடு விரிந்த கூந்தல் என உடைமையும் இன்மை யும் ஒவ்வையின் ஒத்தது. இனி இயற்கை யென்றதனுன் ஒடு உருபின்கட் பெற்றும் பெறுமையும் வருதலன்றிப் பெற்றே வருதலுங கொள்க. பலவற் றொடு என வரும். (நூ0)

அத்து வற்று வருமிடத்து நிகழும் விகாரம்

நூநூ. அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்
ஒற்றுமெய் கெடுதல் தெற்றென் றற்றே
அவற்றுமுன் வருஉம் வல்லெழுத்து மிகுமே.

இஃது அத்து வற்று என்பனவற்றிற்கு நிலைமொழியது ஒற்றுக் கேடும் வருமொழி வன்கணத்துக்கண் ஒற்றுப்பேறுமாகிய செய்கை கூறு கின்றது.

இ - ள்: அத்தே வற்றே ஆயிரு மொழிமேல் ஒற்று — அத்தும் வற்றுமாகிய அவ்விரண்டு சாரியைமேல் நின்ற ஒற்று, மெய் கெடு தல் தெற்றென்றற்று — தன் வடிவு கெடுதல் தெளியப்பட்டது, அவற்றுமுன் வருஉம் வல்லெழுத்து மிகுமே — அவ்விரு சாரியை முன்னும் வரும் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: கலத்துக்குறை, அவற்றுக்கோடு என வரும் 'அத்திடை வரூ உங் கலமென் னளவே' (எழு - கசுஅ) 'சுட்டுமுதல் வகரம் ஐயு மெய்யும்' (எழு - கஅந) என்பனவற்றுன் அத்தும் வற்றும் பெற்றுவரும் மகர வகர ஈறுகட்கு ஈற்றுவல்லெழுத்துமிகி இன்மையின் அவற்றுமுன் வருஉம் வல் லெழுத்து மிகுமென்று சாரியை வல்லெழுத்து விதித்தார். வல்லெழுத்து இன்றித் நிரிந்து முடிவன ணகாரமும், னகாரமும், லகாரமும், ளகாரமுமாம். மகர ஈற்றிற்கு அத்தும், வகர ஈற்றிற்கு வற்றும் வருமென்பது அச்சூத்திரங களாற் பெற்றாம். வற்றே யத்தே யென்றதை முறையன்றிக் கூற்றினைப் புள்ளி யிற்றின் முன்னர் அத்தின்மிசை யொற்றுக் கெடாது நிற்றலுங் கொள்க.

எ - டு: விண்ணத்துக் கொட்டும், வெயிலத்துச் சென்றான், பிருளத் துக் கொண்டான் என வரும். மெய்யென்றதனுன் அத்தின் அகரம் அக மூன்னரேயன்றிப் பிற உயிர்முன்னரும் கெடும் ஒகோவிடத் தென்று கொள்க. அண்ணத்தேரி, நிட்டாத்துக்குளம் என அகாரத்தின் முன்னரும் வரும் அத்தின் அகரம் கெட்டது. ஏனவற்றை அக ஈறுக்கியும் முடிப்ப. இனித் தெற்றென்றற்றே என்றதனுன் அத்தின் அகரம் தெற்றெனக் கெடாது நிற்கும் இடமுங் கொள்க. அதவத்துக்கண், விளவத்துக்கண் என வரும். (நூக)

ரு. எழுத்துச் சாரியை

எழுத்துச் சாரியைகளின் பெயர்

கஉச. காரமுங் கரமுங் காணெடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை.

இது மொழிச்சாரியையை விட்டு எழுத்துக்கட்கு வருஞ் சாரியைகளது பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது.

இ - ள்: காரமுங் கரமுங் காணெடு சிவணி — காரமுங் கரமுங் காணெடு பொருந்தி, எழுத்தின் சாரியை நேரத் தோன்றும் — எழுத்தின்கண் வருஞ் சாரியையாதற்கு எல்லா ஆசிரியரானும் உடம்படத் தோன்றும்; எ - று.

காரமுங் கரமும் எடுத்துச் சொல்லியவழி இனிதிசைத்தலானும், வழக்குப் பயிற்சி யுடைமையானும், வடவெழுத்திற்கும் உரியவாதலானுஞ் சேரக் கூறினர். கான் அத்தன்மை யின்மையினுற் பின் வைத்தார். நேரத் தோன்று மெனவே நேரத்தோன்றுதனவும் உளவாயின. அவை ஆனம் ஏனம் ஓனம் என்க. இவை சிதைத்த வழக்கேனுங் கடியலாகாவாயின. (உஉ)

நெட்டெழுத்துக்குச் சாரியை

கஉட. அவற்றுள்,
கரமுங் காணும் நெட்டெழுத் திலவே.

இஃது அவற்றுட் சில சாரியை சில வெழுத்தோடு வாரா வென எய்தியது விலக்கிற்று.

இ - ள்: அவற்றுள் — முற் கூறியவற்றுள், கரமுங் காணும் நெட்டெழுத்தில — கரமுங் காணும் நெட்டெழுத்திற்கு வருதலின்று; எ - று.

எனவே, நெட்டெழுத்திற்குக் காரம் வருமாயிற்று. ஆகாரம் ஈகாரம் என ஒட்டுக. ஐகாரம் ஔகார மெனச் சூத்திரங்களுள் வருமாறு காண்க.

குற்றெழுத்துக்குச் சாரியை

கஉஙூ. வரன்முறை மூன்றுங் குற்றெழுத் துடைய.

இஃது ஐயம் அகற்றியது; என்னை? நெட்டெழுத்திற்குச் சில சாரியை விலக்கினுற்போலக் குற்றெழுத்திற்கும் விலக்கற்பாடு உண்டோ வென ஐயம் நிகழ்தலின்.

இ - ள்: வரன்முறை மூன்றும் — வரலாற்று முறைமையையுடைய மூன்று சாரியையும், குற்றெழுத்துடைய - குற்றெழுத்துப் பெற்று வருதலையுடைய; எ - று.

அகாரம் அகரம் மஃகான் என ஒட்டுக. 'வகார மிசையும்' 'அகர இகரம்' 'வஃகான் மெய்யிட' எனவும் பிறவுஞ் சூத்திரங்களுட் காண்க.

இஃகான் ஒஃகான் என்பன பெருவழக் கன்று. வரன்முறை யென்றதனுன் அஃகான் என்புழி ஆய்தம் பெறுதல் கொள்க. இது 'குறியதன் முன்ன ராய்தப்புள்ளி' (எழு - நஅ) என்பதனுற் பெறுதாயிற்று, மொழியாய் நில்லா மையின். (நச)

ஐ, ஔவின் சாரியை

கஙஎ. ஐகார ஔகாரங் காலெடுந் தோன்றும்.

இஃது 'அவற்றுட் காமுங் காணும்' என்பதற்கோர் புறனடை கூறு கின்றது.

இ - ள்: ஐகார ஔகாரங் காலெடுந் தோன்றும் — நெட் டெழுத்துக்களுள் ஐகார ஔகாரங்கள் முன் விலக்கப்பட்ட காலெடுந் தோன்றும்; எ - று.

ஐகான் ஔகான் என வரும். உம்மை இறந்தது தழீஇயிற்று, காரத் தைக் கருதுதலின். (நஞ)

சு. உயிரெழுத்தின் புணர்ச்சி யியல்புகள்

கஙஅ. புள்ளி சுற்றுமுன் உயிர்தனித் தியலாது
மெய்யொடுஞ் சிவணும் அவ்வியல் கெடுத்தே.

இது புள்ளி யீற்றுமுன் உயிர்முதன்மொழி வந்த காலத்துப் புணரும் முறைமை கூறுகின்றது.

இ - ள்: புள்ளி யீற்றுமுன் உயிர் தனித்து இயலாது — புள்ளியீற்றுச் சொன்முன்னர் வந்த உயிர்முதன்மொழியின் உயிர் தனித்து நடவாது, மெய்யொடுஞ் சிவணும் — அப்புள்ளியோடும் கூடும், அவ்வியல் கெடுத்து — தான் தனித்து நின்ற அவ்வியல் பினைக் கெடுத்து;[1] எ - று.

எனவே, நீரோடு கூடிய பால்போல நின்றதென்று ஒற்றுமை கூறினர். ஈண்டு இதனுனே உயிர்மெய்யெனப் பெயர்பெற்றது.

எ - டு: பாலரிது பாலாழி, ஆலிலை, பொருளீட்டம், வானுலகு, வானூடு, வேலெறிந்தான், வேலேற்றான், பொருளோடம், பொருளொன்று, காணேடிற்று, சொல்லெளவியம் என வரும்.

ஒன்றென முடித்த லென்பதனுன் இயல்பல்லாத புள்ளி முன்னர் உயிர் வந்தாலும் இவ் விதி கொள்க. அதனை அதனெடு நாடுரி என வரும். இவற் றைச் 'சுட்டுமுத லுகர மன்னெடு' (எழு - கஎசு) 'உரிவரு காலை காழிக் கிளவி' (எழு - உசம) என்பனவற்றுன் முடிக்க. புள்ளியீற்று முன்னுமென உம்மையை மாறி எச்சவும்மையாக்கிக் குற்றியலுகரத்தின் முன்னரும் என அவ் விதி கொள்க. எனவே, 'குற்றிய லுகரமு மற்று' (எழு - கஙடு) என்றதனுலேடும் பொருந்திற்றும். நாகரிது, வரகரிது என வரும். (நசு)

---

1 'அவ்வியல் கெடுத்து' எனப்பதற்கு, புள்ளி பெற்று நிற்கும் அமமெய்யின் இயலபைக் கெடுத்து எனறே பொருள் கொளவது தகுது; 'மெயயுயிர் நீங்கின் தன்னுரு வாகும்' எனறு அடுதத நூறபாவுங் கூறுதல் காண்க.

உயிர் பிரிந்த மெய்யின் இயல்பு

கங்கூ. மெய்உயிர் நீங்கின் தன்னுரு வாகும்.[1]

இஃது உயிர்மெய் புணர்ச்சிக்கண் உயிர்நீங்கியவழிப் படுவதோர் விதி கூறுகின்றது.

இ - ள்: மெய் உயிர் நீங்கின் — மெய் தன்னோடு கூடிநின்ற உயிர் புணர்ச்சியிடத்துப் பிரிந்து வேறு நின்றதாயின், தன் உருவாகும் — தான் முன்னர்ப் பெற்று நின்ற புள்ளிவடிவு பெறும்; எ - று.

ஆல் இலை அதன் ஐ என வரும்.

உயிர் இன்ன வடிவிற்றென்று ஆசிரியர் கூருமையின் உயிர்க்கண் ஆராய்ச்சி யின்று.

இனி, எகர ஒகரங்களைப் புள்ளியான் வேற்றுமை செய்தலின், தொன்று தொட்டு வழங்கின வடிவுடைய என்று கோடலுமாம். புணர்ச்சியுள் உயிர் மெய்யினைப் பிரிப்பாராதலின், இது கூருக்காற் குன்றக் கூறலாம் என்று உணர்க. (நஎ)

உடம்படு மெய் தோன்றும் இடம்

கசo. எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்.

இஃது உயிரீறும் உயிர்முதன்மொழியும் புணருமவழி நிகழ்வதோர் கருவி கூறுகின்றது.

இ - ள்: எல்லா மொழிக்கும் — நிலைமொழியும் வருமொழியுமாய்ப் புணரும் எவ்வகை மொழிக்கும், உயிர் வருவழி — உயிர் முதன்மொழி வருமிடத்து, உடம்படுமெய்யின் உருவு கொளல் வரையார் — உடம்படுமெய்யினது வடிவை உயிரீறு கோடலை நீக்கார், கொள்வார் ஆசிரியர்; எ – று.

அவை யகரமும் வகரமுமென்பது முதனூல்பற்றிக் கோடும்;

'உடம்படு மெய்யே யகார வகாரம்
உயிர்முதன் மொழிவரூஉங் காலை யான'

எனவும்

'இறுதியும் முதலும் உயிர்க்கில வரினே
உறுமென மொழிப உடம்படு மெய்யே'

எனவும் கூறினராகலின். உயிர்களுள் இகர ஈகார ஐகார ஈறு யகர உடம்படு மெய் கொள்ளும். எகரம், யகரமும், வகரமும் கொள்ளும். அல்லன வெல்லாம் வகர உடம்படுமெய்யே கொள்ளு மென்று உணர்க.

எ - டு: கிளியழகிது, குரீஇயோப்புவாள், வரையரமகளிர் எனவும்; விளவழகிது, பலாவழகிது, கடுவழகிது, பூவழகிது, கோவழகிது, கௌவடைந்

1 இவ்வியலபு ஒன்றென முடிதலை என்னும் உத்தியால குறநியலுகரத்திறகும் ஏறகும்.

தது என்வும்ஒட்டுக. 'எள யிவளொருத்தி பேடியோ வென்றார்' (சீவக - சுரிஉ) எவாடல் காண்க என எகாரத்திற்கு இரண்டும் வந்தன.

ஒன்றென முடித்த லென்பதனுன் விகாரப்பட்ட மொழிக்கண்ணும் உடம் படுமெய் கொள்க. மரவடி ஆயிருதிணை என வரும். வரையா ரென்றதனுன் உடம்படுமெய் கோடல் ஒருதலை யன்று. கிளி அரிது மூங்கா இல்லை[1] எனவும் வரும். ஒன்றென முடித்த லென்பதனுல் 'விண்வத்துக் கொட்கும்' எனச் சிறுபான்மை புள்ளியீற்றினும் வரும். செல்வுழி உண்புழி என்ப வினைத் தொகை யென மறுக்க.[2] (கூஅ)

எ. புணர்ச்சியிற் பொருள் வேறுபடுமிடம்

ஒலி வேற்றுமையாற் பொருள் வேறுபடல்

கூசக. எழுத்தோ ரன்ன பொருள்தெரி புணர்ச்சி
இசையில் திரிதல் நிலைஇய பண்பே.

இஃது எழுத்துக்கள் ஒன்று பலவா மென எய்தாத தெய்துவிக்கின்றது.

இ - ள்: எழுத்தோரன்ன பொருள் தெரி புணர்ச்சி — எழுத்து ஒருதன்மைத்தான பொருள் விளங்க நிற்கும் புணர் மொழிகள், இசையில் திரிதல் நிலைஇய பண்பு — எடுத்தல் படுத் தல் நலித லென்கின்ற ஓசை வேற்றுமையாற் புணர்ச்சி வேறுபடு தல் நிலைபெற்ற குணம்; எ - று.

எ - டு: செம்பொன் பதின்றெடி, செம்பருத்தி, குறும்பரம்பு, நாகன் றேவன்போத்து, தாமரைக்கணியார், குன்றேறுமா[3] என இவை இசையில் திரிந்தன. (கூகு)

கூசஉ. அவைதாம்,
முன்னப் பொருள புணர்ச்சி வாயின்
இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே.

இது மேலதற்கோர் புறனடை கூறுகின்றது.

இ - ள்: அவை தாம் — பல பொருட்குப் பொது வென்ற புணர்மொழிகள் தாம், முன்னப் பொருள — குறிப்பான் உண ரும் பொருண்மையினையுடைய, புணர்ச்சிவாயின் இன்ன வென்

1 இதனேடாகளால், நிழுமா ஒரு காலத்தில் ஆங்கிலத்தைப் போல புணர்ச்சியினறி எழுதப்பட்டமை ஊகிக்கப்படும.

2 இம்மறுப்பு சரியானதாய்த் தெரவதில்லை. செலவுழி உணபுழி என்பன, வினைத் தொகை யலல வாதலின் தொழிற் பெயரும் உயிரீறும் புணர்ந்த வினையெச்சங் களாதல் வேண்டும், வினைத்தொகையாயின் செலவுழி உணவுழி எனற வடிவு களே கொள்ளல் வேண்டும்; அங்ஙன மன்றிச் செலவுழி உணபுழி யென்றிருத் தலின் இவை வினைத்தொகையாகா வெனத்தே கொள்ளுதல் தகும.

3 செம்பொன்பதினெறடி = செமபொன் + பதினெறடி, செமபு + ஒனபதினெறடி; செமபருத்தி = செம + பருதி, செமபு + அருதி; குறுமபரமபு = குறும + பரம்பு, குறுமபா + அமபு; நாகனேறவனபோத்து = நாகனேறவன + போத்து, நாகனேற + வனபோத்து; தாமரைகணியார = தாமரை + கணியார், தாம் + அரைகு + அணியார; குனறெறுமா = குனறெறு + மா, குனறெறு + ஆமா.

னும் எழுத்துக் கடன் இல — புணர்ச்சியிடத்து இத்தன்மைய வென்னும் எழுத்துமுறைமையை உடையவல்ல ; எ - று.

செம்பொன்பதின்மெருடி என்றுழிப் பொன்னராய்ச்சி யுளவழிப் பொன் னெனவுஞ் செம்பாராய்ச்சி யுளவழிச் செம்பெனவுங் குறிப்பான் உணரப்பட் டது. இசையில் திரித லென்றது ஒலியெழுத்திற் கெனவும் எழுத்துக்கடனில வென்றது வரிவடிவிற் கெனவுங் கொள்க. (சஂ)

புணரியல் முற்றிற்று

ரு. தொகைமரபு

[எழுத்துப் புணர்ச்சியுள், தொகுத்துக் கூறுதற்குரிய புணர்ச்சி யிலக்கணங்களை உணர்த்துவது.]

க. உயிரீறு மெய்யீறுகளின் பொதுப் புணர்ச்சி

மெல்லினந் தோன்று மிடம்

கசஂக. கசதப முதலிய மொழிமேற் ரோன்றும்
மெல்லெழுத் தியற்கை சொல்லிய முறையான்
ஙஞநம வென்னும் ஒற்ரு கும்மே
அன்ன மரபின் மொழிவயி னான.

என்பது சூத்திரம்.

உயிரீறும் புள்ளியீறும் மேலை அகத்தோத்தினுள் முடிக்கும்வழி ஈறுக டோறும் விரித்து முடிப்பனவற்றை ஈண்டு ஒரோவோர் சூத்திரங்களால் தொகுத்து முடிபு கூறினமையின், இவ்வோத்துத் தொகைமர பென்னும் பெயர்த்தாயிற்று. மேல் மூவகை மொழியும் நால்வகையாற் புணர்வுழி, மூன்று திரிபும் ஓரியல்பும் எய்தி வேற்றுமை அல்வழி யென இருபகுதியவாகி எழுத் துஞ் சாரியையும் மிக்குப் புணருமாறு இது வென்று உணர்த்தி அவைதாம் விரிந்த சூத்திரப் பொருளவன்றியுந் தொகுப்புணருமாறு கூறுதலின், இவ் வோத்துப் புணரியலோடு இயைபுடைத்தாயிற்று. இத் தலைச் சூத்திரம் உயிர் மயங்கியலையும் புள்ளி மயங்கியலையும் நோக்கியதோர் வருமொழிக் கருவி கூறு கின்றது.

இ - ள் : கசதப முதலிய மொழிமேற் ரோன்றும் இயற்கை மெல்லெழுத்து — உயிரீறும் புள்ளியீறும் முன்னர் நிற்பக் கசத பக்களை முதலாகவுடைய மொழிகள் வந்தால் அவற்றிற்கு மேலே தோன்றி நிற்கும் இயல்பாகிய மெல்லெழுத்துக்கள், சொல்லிய முறையான் ஙஞநம என்னும் ஒற்ரு கும் — நெடுங்கணக்கிற் பொருந்தக் கூறிய முறையானே கசதபக்களுக்கு ஙஞநம வென் னும் ஒற்றுக்கள் நிரனிறைவகையானும், அன்ன மரபின் மொழி

வயினுன — அத்தன்மைத்தாகிய முறைமையினையுடைய மொழிகளிடத்து ; எ - று.

எ - டு : விளங்கோடு செதிள் தோல் பூ என வரும். இது 'மரப் பெயர்க்கிளவி' (எழு - உகள) என்பதனுன் மெல்லெழுத்துப் பெற்றது. மரங் குறிது சிறிது நீது பெரிது என அல்வழிக்கட் டிரியுமாறு 'அல்வழி யெல்லாம்' (எழு - ஙகச) என்பதனுற் பெறுதுமேனும் ஈண்டுத் தோன்று மென்றதனுல் நிலைமொழிக்கட் டோன்றி நின்ற ஒற்றுத் திரிதல் கொள்க. அன்ன மரபின் மொழியன்மையின் விளக்குறுமை[1] விளக்குறைத்தான் என்புழி மெல்லெழுத்துப் பெருவாயின, இவை எழாவதும் இரண்டாவதுந் திரிதலின். இங்ஙனம் எழுத்துப் பெறுவனவுந் திரிவனவு மெல்லாம் வருமொழியேபற்றி வருமென்று உணர்க. (க)

வருமொழி யியல்பாதல்

கசச. ஞநம யவவெனும் முதலாகு மொழியும்
உயிர்முத லாகிய மொழியும் உளப்பட
அன்றி யனைத்தும் எல்லா வழியும்
நின்ற சொன்முன் இயல்பா கும்மே.

இது முற்கூறிய நால்வகைப் புணர்ச்சியுள் இயல்பு புணருங்கால் இக் கூறிய பதினே ழெழுத்தும் வருமொழியாய் வந்த இடத்து இருபத்துநான் கீற்றின் முன்னரும் வேற்றுமையிலும் அல்வழியிலும் வருமொழி இயல்பாய் முடிக வென்கின்றது.

இ - ள் : ஞநமயவ எனும் முதலாகுமொழியும் — ஞநமயவ என்று சொல்லப்படும் எழுத்துக்கள் முதலாய் நிற்குஞ் சொற்களும், உயிர்முதலாகிய மொழியும் உளப்பட — உயிரெழுத்து முதலாய் நின்ற சொற்களுந் தம்மிற்கூட, அன்றி யனைத்தும் — அப்பதினேழாகிய வருமொழிகளும், எல்லாவழியும் — வேற்றுமையும் அல்வழியுமாகிய எல்லா இடத்தும், நின்ற சொன்முன் — இருபத்துநான்கு ஈற்றவாய் நின்ற பெயர்ச்சொன்முன்னர், இயல்பாகும் — திரிபின்றி இயல்பு புணர்ச்சியாய் நிற்கும் ; எ - று.

உயிரீற்றின்கண் எகர ஒகரம் ஒழிந்தன கொள்க.

எ - டு : விள பலா கிளி குரீ கடு பூ சே கை சோ கெளு என நிறுத்தி, ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது நுங்தையது வணு மெய்ம்முதன் மொழி வருவித்து, பொருள் தருதற்கு ஏற்பன அறிந்து கூட்டுக. சோ என்பது அரண். அதற்குச் சோ ஞொள்கிற்று எனக் கொள்க. கௌவென்பதற்குக் கௌஞகிழ்ந்தது நீடிற்று என்க. இனி இவற்றின் முன்னர் உயிர் முதன் மொழி வருங்கால் அழகிது ஆயிற்று இல்லே ஈண்டிற்று உண்டு ஊறிற்று எழுந்தது எய்ந்தது ஐது ஒன்று ஓங்கிற்று ஔவியத்தது என வரும். இவற்றுட் சோவுக்கு இடிந்தது ஈண்டையது உள்ளது ஊறிற்று என்பனவற்றோடு முற்

1 விளக்குறுமை என்பது ஆரும் வேற்றுமையுமாம்.

கூறியவற்றையும் ஒட்டுக. இனி வேற்றுமைக்கண் விள முதலியவற்றை நிறுத்தி ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை அழகு ஆக்கம் இளமை ஈட்டம் உயர்வு ஊற்றம் எழுச்சி ஏற்றம் ஐயம் ஒழிவு ஓக்கம் ஔவியம் என ஒட்டுக. எலாதனவற்றிற்கு முற் கூறியவாறுபோல ஏற்பன கொணர்ந்து ஒட்டுக.

இனிப் புள்ளியீற்று ணகாரமும் னகாரமும் மேற்கூறுப. ஏனைய ஈண்டுக் கூறுதும்.

எ - டு : உரிஞ் வெரிந் என நிறுத்தி, ஞெகிழ்ந்தது நீடிற்று அழகிது ஆயிற்று எனவும், ஞெகிழ்ச்சி நீட்டிப்பு அடைவு ஆக்கம் எனவும் வருவித்து, எல்லாவற்றோடும் ஒட்டுக. மரம் வேய் வேர் யாழ் என நிறுத்தி, ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது நுண்தையது அழகிது ஆயிற்று எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை அடைவு ஆக்கம் எனவும் வருவித்து, எல்லாவற்றோடும் ஒட்டுக. இவற்றுள் மகர ஈறு வேற்றுமைக்கட் கெடுதல் 'துவர' (எழு - நகக) என்றதனாற் கொள்க. அல்வழிக்கட் கெடுதல் 'அல் வழி யெல்லாம்' (எழு - நகச) என்றதனாற் கொள்க. நிலைமொழித் திரிபு ஈண்டுக் கொள்ளாமை உணர்க. யகர ஈறு யகரத்தின் முன்னர் இரண்டிடத்துங் கெடுதல் ஈண்டு எல்லா மென்றதனாற் கொள்க. வேல் தெவ் கோள் என நிறுத்தி ஏற்பன கொணர்ந்து இருவழியும் ஒட்டுக. ணகார லகார ளகார னகாரங்களின் முன்னர் நகரம் வருமொழியாக வந்துழி அந்நகரந் திரிதலின் அத்திரிந்த உதாரணங்கள் ஈண்டுக் கொள்ளற்க. இவற்றுள் திரிந்து வருவன வுள ; அவை எடுத்தோத்தானும்[1] இலேசானும்[2] ஏனையோத்துக்களுள் முடிக்கின்றவாற்றான் உணர்க. இனி, எல்லாமென்றதனான் உயிர்க்கணமாயின் ஒற்றிரட்டியும் உடம்படுமெய் பெற்றும் உயிரேறியும் முடியுங் கருவித்திரிபுகள் திரிபெனப்படா[3] இவ்வியல்பின்கண் ணென்று உணர்க. வரகு ஞான்றது வரகு ஞாற்சி எனக் குற்றுகரத்தின்கண்ணும் இவ்வாறே கொள்க. இருபத்துநான்கு ஈற்றிற்கும் வேற்றுமைக்கும் அல்வழிக்கும் அகத்தோத்தினுள் நாற்பத்தெட்டுச் சூத்திரங்களான் முடிவனவற்றை ஒரு சூத்திரத்தாற் றொகுத்து முடித்தார். மேலும் இவ்வாறே கூறுப. இவ்வியல்பு வருமொழி நோக்கிக் கூறிய தென்று உணர்க. இவ்வியல்பு புணர்ச்சி மெய்க்கண் நிகழுமாறு உயிர்க்கண் நிகழாமையின் மெய் முற்கூறினார். (உ)

கசடு. அவற்றுள்,

மெல்லெழுத் தியற்கை உறழினும் வரையார்
சொல்லிய தொடர்மொழி இறுதி யான.

இது முற்கூறிய முடிபிற் சிலவற்றிற்கு அம்முடிபு விலக்கிப் பிறிது விதி எய்துவித்தது.

இ - ள் : அவற்றுள் — முற்கூறிய மூன்று கணத்தினுள், **மெல்லெழுத்தியற்கை உறழினும் வரையார்** — மெல்லெழுத்து

---

1 எடுத்தோதாது — வெளிப்படையாய் எடுதது ஓதும் விதி.

2 இலேசு — நூறபாவில மிகையாயிருகுமு எழுத்தும் சொலலும்.

3 உயிர் முதற்சொல வருமொழியாயின நிலைமொழியீற்று ஒற்றிரட்டுதலும் இரு மொழிக்கும இடையில் உடம்படுமெய் தோனறுதலும், அவ்விருவகை மெய்யின் மேலும் உயிரேறி முடிதலும கருவித்திரிபுகள் ; நிலைமொழியீறும் வரு மொழியீறும திரிதலும், வருமொழி முதனமெய் தனனொறறும் இனவொறறும மிகப் பெறுதலும் செயகைத் திரிபுகள் என்பது நச்சினாக்கினியர் கருத்து.

இயல்பியல் பாதலேயன்றி உறழ்ந்து முடியினும் நீக்கார். சொல்லிய தொடர்மொழி இறுதியான — சொல்லப்பட்ட தொடர் மொழியீற்றுக்கண் ; எ - று.

உம்மை எதிர்மறை. எனவே, உறழாமை வலியுடைத்தாயிற்று. கதிர் ஞெரி கதிர்ஞ்ஞெரி நுனி முரி எனவும், இதழ்ஞெரி இதழ்ஞ்ஞெரி நுனிமுரி எனவும் வரும். வருமொழி முற்கூறியவதனால் ஒரெழுத் தொருமொழி ஈரெழுத் தொருமொழிகளுள்ளுஞ் சில உறழ்ச்சிபெற்று முடிதல் கொள்க. பூஞெரி பூஞ்ஞெரி நுனி முரி, காய்ஞெரி காய்ஞ்ஞெரி நுனி முரி எனவரும். சொல்லியவென்றதனால் ஓரெழுத் தொருமொழிகளுட் சில மிக்கு முடிதல் கொள்க. கைஞ்ஞெரித்தார் நீட்டினார் மறித்தார் என வரும். இன்னும் இதனானே ஈரெழுத் தொருமொழிக்கண் மெய்ஞ்ஞானம் நூல் மறந்தார்[1] என வரும். இவற்றை நலிந்து கூறப் பிறத்தலின் இயல்பென்பாரும் உளர். பூஞாற்றினர் என்றுற் போல்வன மிகாதன. (கூ)

ணனமுன் யாவும் ஞாவும்

கூசு. ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும்
விணையோ ரணைய என்மனார் புலவர்.

இது யகர ஞகர முதன்மொழி வந்த இடத்து நிகழ்வதோர் தன்மை கூறுகின்றது. இதுவும் புணரியலொழிபாய்க் கருவிப்பாற்படும்.

இ - ள் : ணனவென் புள்ளிமுன் யாவும் ஞாவும் — ணகார னகார மென்று கூறப்படும் புள்ளிகளின் முன்னர் வந்த யாவும் ஞாவும் முதலாகிய வினைச்சொற்கள், விணையோரணைய என்மனார் புலவர் — ஒரு வினை வந்த தன்மையை ஒக்கு மென்று சொல்லுவர் புலவர் ; எ - று.

உ - டு : 'மண்யாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே' 'மண்ஞாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே' எனவும், 'பொன்யாத்த தார்ப்புரவி பரிக்குமே' 'பொன்ஞாத்த தார்ப்புரவி பரிக்குமே' எனவும் வரும்.

வினைக்கண் ணனவே மண்யாமை மண்ஞாமை எனப் பெயர்க்கண் வாரா வாயின. ஞா முற்கூறுது யா முற்கூறியவதனால் ஞாச் சென்றவழி யாச் செல்லாது யாச் சென்றவழி ஞாச் செல்லு மென்று கொள்க. மண்ஞான்றது என்றவழி மண்யான்றது என்று வாராமை உணர்க. (சு)

ணன ஈறு அல்வழியில் இயல்பாதல்

கூசு எ. மொழிமுத லாகும் எல்லா எழுத்தும்
வருவழி நின்ற ஆயிரு புள்ளியும்
வேற்றுமை யல்வழித் திரிபிடன் இலவே.

இது ணகார ஈறும் னகார ஈறும் அல்வழிக்கண் இயல்பாய் முடியு மென்கின்றது.

---

1 மெய் நூல என்னுஞ் சொற்கண் நசினார்க்கினியர் இங்கு ஈரெழுத்தொருமொழி யாகக் கொண்டது, அவர் 'ஓரெழுத் தொருமொழி' என்னும் நூற்பாவுரையில் சொற்கள் ஓறும் குற்றுகரமும் நீக்கி யெண்ணிய முறையொடு முரணும்.

இ - ள்: மொழி முதலாகும் எல்லா வெழுத்தும் வருவழி — மொழிக்கு முதலாமெனப்பட்ட இருபத்திரண்டெழுத்தும் வரு மொழியாய் வருமிடத்து, நின்ற ஆயிரு புள்ளியும் — முன்னர்க் கூறி நின்ற ணகாரமும் னகாரமும், வேற்றுமையல்வழித் திரி பிடன் இலவே — வேற்றுமை யல்லாத இடத்துத் திரியுமிடம் இல; எ - று.

மண் பொன் என நிறுத்திக், கடிது சிறிது தீது பெரிது ஞெகிழ்ந்தது நீண்டது மாண்டது யாது வலிது நுங்தையது அடைந்தது ஆயிற்று இல்லை ஈண்டிற்று உண்டு ஊட்டிற்று எவ்விடத்தது எறிற்று ஐது ஒழுகிற்று ஓங்கிற்று ஔவையது என ஒட்டுக. வருமொழி முற்கூறியவதனுல் ணகாரத்திற்குச் சிறுபான்மை திரிபும் உண்டென்று கொள்க. சாட்கோல் என வரும்; இதற்குச் சாணுகிய கோ லென்க. இவை 'நின்றசொன்முன் இயல்பாகும்' (எழு - கசச) என்ற வழி அடங்காவாயின; அது வருமொழிபற்றித் திரியாமை கூறிய தாதலின். இது நிலைமொழிபற்றித் திரியாமை கூறியது. (கு)

அவை வேற்றுமையிலும் இயல்பாதல்

கசஅ. வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி
மேற்கூ றியற்கை ஆவயி னன.

இது முற்கூறியவாற்றுன் வேற்றுமைக்கண் திரிபு எய்திநின்றவற்றை ஈண்டு வேற்றுமைக்கண்ணும் வல்லெழுத் தல்வழித் திரியா வென எய்தியது விலக்கிற்று.

இ - ள்: ஆவயினன — அல்வழிக்கண் அங்ஙனந் திரியாது நின்ற அவ்வொற்றுக்கள், வேற்றுமைக்கண்ணும் — வேற்றுமைப் பொருட் புணர்ச்சி யிடத்தும், வல்லெழுத்தல்வழி மேற்கூறியற்கை — வல்லெழுத்தல்லாத இடத்து மேற்கூறிய இயல்பு முடிபாம்; எ - று.

எனவே, வல்லெழுத்து வந்துழித் திரியு மென்றுராயிற்று.

எ - டு: மண் பொன் என நிறுத்தி, ஞெகிழ்ச்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை நுங்தையது அழகு ஆக்கம் இன்மை என எற்பன கொணர்ந்து ஒட்டுக. இதுவுஞ் கெய்கைச் சூத்திரம். மேல் நான்கு சூத்திரத்தாற் கூறியன வல் லெழுத்து வந்துழித் திரியுமாறு தத்தம் ஈற்றுட் கூறுப. (கூ)

லன முன் த நக்கள் திரிதல்

கசகூ. லனவென வரூஉம் புள்ளி முன்னர்த்
த ந எனவரிற் றனவா கும்மே.

இது புள்ளிமயங்கியலே நோக்கியதோர் வருமொழிக் கருவி கூறுகின்றது.

இ - ள்: லன என வரூஉம் புள்ளிமுன்னர் — லகார னகார மென்று சொல்ல வருகின்ற புள்ளிகளின் முன்னர், த ந என வரின் — தகாரமும் நகாரமும் முதலென்று சொல்லும்படியாகச் சில

சொற்கள் வரின், றனவாகும் — நிரனிறையானே அவை றகார னகாரங்களாகத் திரியும்; எ - று.

எ - டு: கஃறீது கன்னன்று பொன்றீது பொன்னன்று என வரும். நிலைமொழித்திரிபு தத்தம் ஈற்றுட் கூறுப. (எ)

ணளமுன் தந மெய் டண வாதல்

கரு0. ணளவென் புள்ளிமுன் டணவெனத் தோன்றும்.

இதுவும் அது.

இ - ள்: ணளவென் புள்ளிமுன் — ணகார ளகார மென்று சொல்லப்படும் புள்ளிகளின் முன்னர் அதிகாரத்தால் தகார ங்கார ங்கள் வருமெலின், டண வெனத் தோன்றும் — அவை நிரனிறை யானே டகார ணகாரங்களாய்த் திரிந்து தோன்றும்; எ - று.

எ - டு: மண்டீது மண்ணன்று மூஃடீது மூண்ணன்று என வரும். நிலை மொழித்திரிபு தத்தம் ஈற்றுட் கூறுப. (அ)

உ. உயிரீறு மெய்யீறுகளின் சிறப்புப் புணர்ச்சி

முன்னிலை வினைச்சொல் முடியுமாறு

கருக. உயிரீ ருகிய முன்னிலைக் கிளவியும்
புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவியும்
இயல்பா குநவும் உறழா குநவுமென்
ருயீ ரியல வல்லெழுத்து வரினே.

இது முன்னிலை வினைச்சொல் வன்கணத்துக்கண் முடியுமாறு கூறு கின்றது.

இ - ள்: உயிரீருகிய முன்னிலைக் கிளவியும் — உயிரீருய்வந்த முன்னிலை வினைச்சொற்களும், புள்ளியிறுதி முன்னிலைக் கிளவியும் — புள்ளியீருய் வந்த முன்னிலைவினைச்சொற்களும், வல்லெழுத்து வரின் — வல்லெழுத்து முதலாகிய மொழி வரின், இயல்பாகுநவும் உறழாகுநவுமென்று ஆயீரியல — இயல்பாய் முடிவனவும் உறழ்ந்து முடிவனவு மென அவ்விரண்டு இயல்பினையுடைய; எ - று.

எ - டு: எறிகொற்ரு கொணகொற்ரு உண்கொற்ரு தின்கொற்ரு சாத்தா தேவா பூதா என இவை இயல்பு. ஈடகொற்ரு ஈடக்கொற்ரு ஈர் கொற்ரு ஈர்க்கொற்ரு சாத்தா தேவா பூதா என இவை உறழ்ச்சி. ஈதென்று ஓதினமையின் வினைச்சொல்லே கொள்க. இவை முன்னின்ரு ன் தொழி லுணர்த்துவனவும், அவனைத் தொழிற் படுத்துவனவு மென இருவகைய. இ ஐ ஆய் முதலியன தொழிலுணர்த்துவன.[1] ஈட வா முதலியன உயிரீறும் புள்ளியீறுந் தொழிற்படுத்துவன.[2] நில்கொற்ரு நிற்கொற்ரு எனத் திரிந்

1 தொழிலுணர்த்துவன - செய்தாய் செய்கின்ரு ய் செய்வாய் என்பன போன்ற முக் கால முன்னிலை வினைமுற்று. 2 தொழிற்படுத்துவன - ஏவல் வினைமுற்று.

துறழ்ந்தனவும், உறழாகுஞவு மென்னும் பொதுவகையான் முடிக்க. இயல்பு முறழ்வுமென் றிரண்டியல்பின என்ஞது ஆகுஞவு மென்றதனுன் துக்கொற்ரு ஞொக்கொற்ரு ஞெள்ளா ஞகா மாடா வடுகா என ஓரெழுத் தொருமொழி முன்னிலே வினேச்சொல் மிக்கே முடிதல் கொள்க. (கூ)

அதற்குச் சிறப்பு விதி

கரு உ. ஒளவென வருஉம் உயிரிறு சொல்லும்
ஞநமவ என்னும் புள்ளி யிறுதியுங்
குற்றிய லுகரத் திறுதியும் உளப்பட
முற்றத் தோன்ரு முன்னிலை மொழிக்கே.

இஃது எய்தியது விலக்கிற்று, முற்கூறியவற்றுட் சில ஆகாதனவற்றை வரைந்து உணர்த்தலின்.

இ - ள்: ஒளவென வருஉம் உயிரிறு சொல்லும் — ஒளவென வருகின்ற உயிரீற்றுச்சொல்லும், ஞநமவ என்னும் புள்ளியிறுதியும் — ஞநமவ என்று சொல்லப்படும் புள்ளியீற்றுச் சொல்லும், குற்றியலுகரத்து இறுதியும் — குற்றியலுகரத்தை இறுதியிலே யுடைய சொல்லும், முன்னிலை மொழிக்கு உளப்பட முற்றத் தோன்ரு — முன்னர் முன்னிலை மொழிக்குப் பொருந்தக் கூறிய இயல்பும் உறழ்ச்சியுமாகிய முடிபிற்கு முற்றத் தோன்ரு; எ - று.

முற்றவென்றதனுன் நிலைமொழி உகரம் பெற்று உறழ்ந்து முடிதல் கொள்க.

எ - டு: கௌவுகொற்ரு கௌவுக்கொற்ரு, வௌவுகொற்ரு வௌவுக் கொற்ரு, உரிஞுகொற்ரு உரிஞுக்கொற்ரு, பொருநுகொற்ரு பொருநுக் கொற்ரு, திருமுகொற்ரு திருமுக்கொற்ரு, தெவ்வுகொற்ரு தெவ்வுக்கொற்ரு, கூட்டுகொற்ரு கூட்டுக்கொற்ரு என வரும். (ம)

உயர்திணைப் பெயர் புணருமாறு

கரு ங. உயிரீ ருகிய உயர்திணைப் பெயரும்
புள்ளி யிறுதி உயர்திணைப் பெயரும்
எல்லா வழியும் இயல்பென மொழிப.

இஃது உயர்திணைப்பெயர் வன்கணம் மென்கணம் இடைக்கணம் உயிர்க் கண மென்னும் நான்கு கணத்தினும் இருவழியும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: உயிரீருகிய உயர்திணைப்பெயரும் — உயிரீரூய் வந்த உயர்திணைப்பெயர்களும், புள்ளி யிறுதி உயர்திணைப்பெயரும் — புள்ளியீற்றினையுடைய உயர்திணைப்பெயர்களும், எல்லாவழியும்— நான்கு கணத்து அல்வழியும் வேற்றுமையுமாகிய எல்லா இடத்தும், இயல்பென மொழிப — இயல்பாய் முடியு மென்று கூறுவர் புலவர்; எ - று.

வன்கணம் ஒழிந்த கணங்களே 'ஞ ந ம ய வ' (எழு - சசக) என்பதனுன் முடிப்பாரும் உளர். அது பொருந்தாது, இவ்வாசிரியர் உயர்திணைப் பெயரும் விரவுப்பெயரும் எடுத்ஃதாதியே முடிப்பாராதலின்.

எ - டு : ஙம்பி அவன் எனவும், ஙங்கை அவள் எனவும் நிறுத்தி, அல்வழிக் கட் குறியன் சிறியன் தீயன் பெரியன் எனவும், குறியள் சிறியள் தீயள் பெரியள் எனவும், ஞான்றான் நீண்டான் மாண்டான் எனவும், ஞான்றாள் நீண்டாள் மாண்டாள் எனவும், யாவன் வலியன் எனவும், யாவள் வலியள் எனவும், அடைந்தான் ஆயினுன் ஒளவியத்தான் எனவும், அழகியள் ஆடினுள் ஒளவியத்தாள் எனவும் ஒட்டுக. இனி வேற்றுமைக்கண் கை செவி தலை புறம் எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி எனவும், யாப்பு வன்மை எனவும், அழகு ஒளவியம் எனவும் எல்லாவற்றோடும் ஒட்டுக. ஒருவேன் எனத் தன்மைப் பெயர்க்கண்ணுங் குறியேன் சிறியேன் தீயேன் பெரியேன் எனவும், கை செவி தலை புறம் எனவும் ஒட்டுக. நீ முன்னிலை விரவுப்பெயராதலின் ஈண்டைக் காகா.

இனி, உயிரீறு புள்ளியிறுதி என்ற மிகையானே உயர்திணைப்பெயர் திரிந்து முடிவனவுங் கொள்க. கபிலபரணர், இறைவனெடுவேட்டுவர், மருத்துவ மாணிக்கர் என னகர ஈறு கெட்டு இயல்பாய் முடிந்தன. ஆசீவகப்பள்ளி நிக்கந்தக்கோட்டம் என இவை அவ் வீறு கெட்டு ஒற்று மிக்கு முடிந்தன. ஈழவக்கத்தி வாணிகத்தெரு அரசக்கன்னி கோலிரக்கருவி என இவை ஒருமை யீறும் பன்மையீறுங் கெட்டு மிக்கு முடிந்தன. குமரகோட்டம் குமரக்கோட்டம், பிரமகோட்டம் பிரமக்கோட்டம் என இவை ஈறு கெட்டு வல்லெழுத்து உறழ்ந்தன. வண்ணரப்பெண்டிர் இது மிக்கு முடிந்தது. பல்சங்கத்தார் பல்சான்றோர் பல்லரசர் என்றுற் போல்வன ரகரவீறும் அதன் முன்னின்ற அகரமுங் கெட்டுப் பிற செய்கைகளும் பெற்று முடிந்தன.

இனி, எல்லாவழியு மென்றதனுன் உயர்திணை விணைச்சொல் இயல்பாயுந் திரிந்தும் முடிவன எல்லாங் கொள்க. உண்கு உண்டு வருது சேறு உண்பல் உண்டேன் உண்பேன் என்னுந் தன்மை வினைகளைக் கொற்ற சாத்தா தேவா பூதா என்பனவற்றோடு ஒட்டுக. உண்டீர் சான்றீர் பார்ப்பீர் என முன்னிலைக்கண்ணும் உண்ப உண்டார் சான்றார் பார்ப்பார் எனப் படர்க்கைக்கண்ணும் ஒட்டுக. இவை இயல்பு. உண்டனெஞ்சான்றேம் உண்டேமாம் என்றுற் போல்வன திரிந்து முடிந்தன. பிறவும் அன்ன. (கக)

அதற்குச் சிறப்பு விதி

கருசு. **அவற்றுள்,**
இகர இறுபெயர் திரிபிட னுடைத்தே.

இஃது உயர்திணைப்பெயருட் சிலவற்றிற்கு எய்தாத தெய்துவித்தது.

இ - ள் : அவற்றுள் இகர இறுபெயர் — முற்கூறிய உயர்திணைப்பெயர்களுள் இகர ஈற்றுப்பெயர், திரிபிடனுடைத்து — இருவழியுந் திரிந்து முடியும் இடனுடைத்து ; எ - று.

எட்டி[1]ப்பூ காவிதி[2]ப்பூ ஙம்பிப்பேறு என இவ்வுயர்திணைப் பெயர்கள் வேற்றுமைக்கண் மிக்கு முடிந்தன. எட்டி காவிதி என்பன தேயவழக்காகிய

1 எட்டி - வணிகருட் சிறந்தோர்கு அரசரால கொடுக்கப்பட்ட பட்டப்பெயர்.
2 காவிதி - உழவித்துண்ணும் வேளாளருட் சிறந்தோர்க்கு அரசரால கொடுக்கப் பட்ட பட்டப் பெயர்.

சிறப்புப்பெயர். எட்டி மரம் அன்று. அஃது 'எட்டி குமர னிருந்தோன் றன்னே' (மணி. 4: 58) என்பதனுன் உணர்க. இவை எட்டியதுபூ எட் டிக்குப்பூ என விரியும். இனி நம்பிக்கொல்லன் நம்பிச்சான்முன் நம்பித்துணை நம்பிப்பிள்ளை எனவும், செட்டிக்கூத்தன் சாத்தன் தேவன் பூதனெனவும் அல் வழிக்கண் உயர்திணைப்பெயர் மிக்கு முடிந்தன. இடனுடைத்தென்றதனுன் இகர ஈறல்லாதனவும் ஈறு திரியாது நின்று வல்லெழுத்துப் பெறுதல் கொள்க. நங்கைப்பெண் நங்கைச்சானி என அல்வழிக்கண் சிறுபான்மை ஐகார ஈறு மிக்கன. இவ்வீற்றஃறிணைப்பெயர் மிக்கு முடிதல் உயிர் மயங்கியலுட் கூறுப. (கஉ)

விரவுப்பெயருள் இயல்பு

கருடு. அஃறிணை விரவுப்பெயர் இயல்புமா ருளவே.

இது விரவுப்பெயருள் இயல்பாய் முடிவனவும் உளவென்கின்றது.

இ - ள்: அஃறிணை விரவுப்பெயர் — உயர்திணைப் பெயரோடு அஃறிணை விரவிய விரவுப்பெயர், இயல்பு மாருள — இயல்பாய் முடிவனவும் உள, உம்மையான் இயல்பின்றி முடிவனவும் உள; எ - று.

உயர்திணைப்பெயரோடு அஃறிணை சென்று விரவிற் றென்ற தென்னை? சொல்லதிகாரத்து 'இருதிணைச் சொற்குமோ ரன்ன வுரிமையின்' (சொல் - கஎஉ) என்று சூத்திரஞ் செய்வாரா லெனின், அதுவும் பொருந்துமாறு கூறு தும். சாத்தன் சாத்தி, முடவன் முடத்தி என வரும் விரவுப் பெயர்க்கண் உயர்திணைக்கு உரித்தாக ஓதிய ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தி நின்ற ஈற்றெழுத்துக்களே அஃறிணை யாண்பாலும் பெண்பாலும் உணர்த்திற் றென் றல் வேண்டும்; என்னை? அஃறிணைக்கு ஒருமைப்பாலும் பன்மைப்பாலும் உணர்த்தும் ஈறன்றி ஆண்பாலும் பெண்பாலும் உணர்த்தும் ஈறுகள் உளவாக ஆசிரியர் ஓதாமையின்; அங்ஙனம் உயர்திணை இருபாலும் உணர்த்தும் ஈறு கள் நின்றே அஃறிணை யாண்பாலையும் பெண்பாலையும் உணர்த்துதலின், அஃ றிணை உயர்திணையோடு சென்று விரவிற்றென்று அவற்றின் உண்மைத் தன் மைத் தோற்றங் கூறுவான் ஈண்டுக் கூறினர். இவ்வாறே விளிமரபின்கட் 'இளந்த விறுதி யஃறிணை விரவுப் பெயர்' (எழு - கடுஅ) என்புழியும் ஆசிரி யர் உயர்திணையோடு அஃறிணை விரவிய விரவுப் பெயரென ஆண்டும் உண் மைத் தன்மைத் தோற்றங் கூறுவர். மாணாக்கன் இனிது உணர்தற்கு இவ் வாறு விரவுப் பெயரினது உண்மைத் தன்மைத் தோற்றம் இரண்டு அதிகாரத் துங் கூறி, அவ் விரவுப்பெயர் வழக்கின்கண் இருதிணைப் பொருளும் உணர்த்தி இருதிணைச் சொல்லாய் நிற்றற்கும் ஒத்த உரிமையவா மெனப் புலப் பட நிற்குமாறு காட்டினு ரென்று உணர்க.

இனி, அவை அல்வழிக்கண் இயல்பாய் நிற்குமாறு:—சாத்தன் கொற் றன் சாத்தி கொற்றி என நிறுத்திக் குறியன் சிறியன் நீயன் பெரியன் குறி யள் சிறியள் நீயள் பெரியள் எனவும், ஞான்முன் நீண்டான் மாண்டான் யாவன் வலியன் ஞான்முள் நீண்டாள் மாண்டாள் யாவள் வலியள் எனவும், அடைத்தான் ஒளவித்தான் அடைத்தாள் ஒளவித்தாள் எனவும் தான்கு கணத் தோடும் ஒட்டி உணர்க. இனி வேற்றுமைக்கண் கை செவி தலை புறம் என

வும், ஞாற்சி நீட்சி மாட்சி யாப்பு வன்மை அழகு ஒளவியம் எனவும் ஒட்டுக. இவற்றுள் னகாரம் நிற்பத் தகார நகாரம் வந்துழித் திரியும் உதாரணம் ஈண்டுக் கொள்ளற்க. இனிச் சாத்தன் குறிது சாத்தி குறிது என அஃறிணை மூடி பேற்பனவுங் கொள்க. இவற்றொடு வினைச்சொல் தலேடுபெய்ய இவை இரு திணைக்கும் உரியவாம். ஆண்டு நாற்பத்தெட்டுச் சூத்திரங்களான் முடிவதனை ஈண்டுத் தொகுத்தார். இஃது உயர்திணைக்கும் ஒக்கும். உம்மையான் இயல் பின்றி முடிவன னகார ஈற்றுட் காட்டுதும். (கஉ)

மூன்றும் வேற்றுமை முடிபு

கடுகூ. புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
வல்லெழுத்து மிகுதி சொல்லிய முறையால்
நம்மி னகிய தொழிற்சொல் முன்வரின்
மெய்ம்மை யாகலும் உறழத் தோன்றலும்
அம்முறை யிரண்டும் உரியவை உளவே
வேற்றுமை மருங்கிற் போற்றல் வேண்டும்.

இது மேல் உயிரீற்றிற்கும் புள்ளியீற்றிற்கும் வேற்றுமைக்கட் கூறும் முடிபு பெறாது நிற்கும் மூன்றும் வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

இ - ள்: தம்மினகிய தொழிற்சொல் — மூன்றுவதற்கு உரிய வினை முதற்பொருளானுளவாகிய தொழிற்சொல், புள்ளியிறுதி முன்னும் உயிரிறு கிளவி முன்னும் வரின் — புள்ளியீற்றுச்சொன் முன்னரும் உயிரீற்றுச்சொன் முன்னரும் வருமாயின், மெய்ம்மை யாகலும் உறழத்தோன்றலும் அம்முறை யிரண்டும் உரியவை உள — அவற்றுள் இயல்பாகலும் உறழத்தோன்றலுமாகிய அம் முறை யிரண்டும் பெறுதற்கு உரிய உளவாதலால், வேற்றுமை மருங்கிற் சொல்லிய முறையான் வேண்டும் வல்லெழுத்துமிகுதி — உயிர்மயங்கியலுள்ளும் புள்ளிமயங்கியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்குச் சொல்லிய முறையான் விரும்பும் வல்லெழுத்து மிகுதியை, போற்றல் — ஈண்டுக் கொள்ளற்க; எ - று.

மெய்ம்மை பட்டாங்காதலின் இயல்பாம்.[1]

எ - டு: நாய் புலி என நிறுத்திக் கோட்பட்டான் சாரப்பட்டான் தீண்டப்பட்டான் பாயப்பட்டான் என வருவித்து இயல்பாயவாறு காண்க. சூர்கோட்பட்டான் சூர்க்கோட்பட்டான், வளிகோட்பட்டான் வளிக்கோட்பட்டான், சாரப்பட்டான், தீண்டப்பட்டான், பாயப்பட்டான் என இவை உறழ்ந்தன. இவை நாற்பத்தெட்டுச் சூத்திரங்களான் முடிவனவற்றைத் தொகுத்தார்.

புள்ளியிறுதி உயிரிறுகிளவி என்றதனாற் பேஎய்கோட்பட்டான் பேஎய்க் கோட்பட்டான் என ஏகாரப்பேறும் உறழ்ச்சிக்குக் கொடுக்க. அம்முறை யிரண்டு முரியவை யுளவே என்றதனாற் பாம்புகோட்பட்டான் பாப்புக்கோட்

1 பட்ட + ஆங்கு = பட்டாங்கு - நேர்ந்த அலலது உள்ள வகை, உண்மை. உண்மை வேறுபாடனமையின இயலபாம.

பட்டான் என்னும் உறழ்ச்சியுள் நிலைமொழி யொற்றுத் திரிதலுங் கொள்க. இவ்வீறுகள் ஈய்க்கால் தேர்க்கால் கிளிக்கால் என ஆண்டு வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுமாறு காண்க. (கச)

இரண்டாம் வேற்றுமைத் திரிபு

கருஎ. மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும்
வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும்
இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும்
உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலுஞ்
சாரியை உள்வழிச் சாரியை கெடுதலுஞ்
சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலுஞ்
சாரியை யியற்கை யுறழுத் தோன்றலும்
உயர்திணை மருங்கின் ஒழியாது வருதலும்
அஃறிணை விரவுப்பெயர்க் கவ்வியல் நிலையலும்
மெய்பிறி தாகிடத் தியற்கை யாதலும்
அன்ன பிறவுந் தன்னியல் மருங்கின்
மெய்பெறக் கிளந்து பொருள்வரைந் திசைக்கும்
ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப.

இஃது இரண்டாம் வேற்றுமைத் திரிபு தொகுத்து உணர்த்துகின்றது.

இ - ள்: மெல்லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும் — 'மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே' (எழு-உகள) என்ற தனுள் விளங்குறைத்தானென மெல்லெழுத்து மிகுமிடத்து விளக் குறைத்தாமென வல்லெழுத்துத் தோன்றுதலும், வல் லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும் — 'மகரவிறுதி' (எழு-ஙகo) என்பதனுள் மரக்குறைத்தான் என வல்லெழுத்து மிகுமிடத்து மரங்குறைத்தான் என மெல்லெழுத்துத் தோன்றுத லும், இயற்கை மருங்கின் மிகற்கை தோன்றலும் — 'தாயென் கிளவி யியற்கை யாகும்' (எழு-ஙடுஅ) என்றவழித் தாய்கொலை என இயல்பாய் வருமிடத்துத் தாய்க்கொலை என மிகுதி தோன்ற லும், உயிர்மிக வருவழி உயிர்கெட வருதலும் — 'குறியதன் முன் னரும்' (எழு-உஉசு) எனவுங் 'குற்றெழுத்திம்பரும்' (எழு-உசுஎ) எனவும் 'ஏயெனிறுதிக்கு' (எழு-உஎஎ) எனவுங் கூறியவற்றுள் உயிர்மிக்கு வருமிடத்துப் பலாக்குறைத்தான் கழுக்கொணர்ந் தான் ஏக்கட்டினுள் என உயிர் கெட வருதலும், சாரியை உள் வழிச் சாரியை கெடுதலும் — 'வண்டும் பெண்டும்' (எழு-சஉ0) என்பதனாற் சாரியைப்பேறு உள்ள இடத்து வண்டு கொணர்ந் தான் எனச் சாரியை கெட்டுநிற்றலும், சாரியை உள்வழித் தன்

னுருபு நிலையலும் ---- 'வண்டும் பெண்டும்' என்பதனுற் சாரியைப் பேறு உள்ள இடத்து வண்டினைக் கொணர்ந்தான் எனத் தன் னுருபு நிற்றலும் (இதற்கு வல்லெழுத்துப் பேறு ஈற்று வகையாற் கொள்க), சாரியை இயற்கை உறழத் தோன்றலும் — 'புளிமரக் கிளவிக்கு' (எழு-உசச) எனவும் 'பனையுமரையும்' (எழு-உஅக) எனவும் 'பூல்வேலென்ரு' (எழு-ஙஎரு) எனவும் பெற்ற சாரியை பெருது இயல்பாய் நின்று புளிகுறைத்தான் புளிக்குறைத்தான் பனைதடிந்தான் பனைத்தடிந்தான் பூல்குறைத்தான் பூற்குறைத் தான் என மிக்குந் திரிந்தும் உறழ்ச்சியாகத் தோன்றலும், உயர் திணை மருங்கின் ஒழியாது வருதலும் — 'உயிரீருகிய உயர்திணைப் பெயரும்' (எழு - கருங) என்பதனுன் வேற்றுமைக்கண் இயல் பாய் வருமென்றவை நம்பியைக் கொணர்ந்தான் நங்கையைக் கொணர்ந்தான் என்றவழி இரண்டனுருபு தொகாதே நிற்ற லும், (ஒழியாதென்றதனுன் மகற்பெற்றுன் மகட்பெற்றுன் எனவும் ஆடுஉவறிசொல் 'மறவரோட்டிய' (அகம் - க) 'அவர்க் கண் டெம்முள்' எனவும் ஒழிந்தும் வருமென்று கொள்க.) அஃறிணைவிரவுப் பெயர்க்கு அவ்வியல் நிலையலும் — உயர்திணை யோடு அஃறிணை விரவும் பெயர்க்குக் கொற்றனைக் கொணர்ந்தா னென வுருபு தொகாதே நிற்றலும், (அவ்வியல் நிலையலும என்ற தனுனே மகப்பெற்றேனென விரவுப் பெயர்க்கண்ணுங் தொகுதல் கொள்க. உருபியலுள் 'தேருங்காலே' (எழு-உ0உ) என்ற இலேசான் இதற்கும் முன்னையதற்கும் வல்லெழுத்துப்பேறுங்கொள்க.) மெய் பிறிதாகிடத்து இயற்கையாதலும் - புள்ளி மயங்கியலுள் ணகார னகார இறுதி வல்லெழுத்தியையின் மெய்பிறிதாமென்ற இடத்து மெய்பிறிதாகாதுமண் கொணர்ந்தான் பொன் கொணர்ந்தான்என இயற்கையாய் வருதலும், அன்ன பிறவும் — அவைபோல்வன பிற வும், (அவை 'எக்கண்டு பெயருங் காலே யாழநின் கற்கெழு சிறு குடி' எனவும் 'நப்புணர் வில்லா நயனில்லோர் நட்பு' எனவும் வருவழி எக்கண்டு நப்புணர்வு என்னுந் தொடக்கங்குறுகும் உயர்திணைப்பெயர்கள் மெல்லெழுத்துப் பெறுதற்கு உரியன வல் லெழுத்துப் பெறுதல் கொள்க. இன்னுந் திணைபிளந்தான் மயிர் குறைத்தான் தற்கொண்டான் செறுத்தான் புகழ்ந்தான் என வரும்.) தன் இயல் மருங்கின் — தன்னையே நோக்கித் திரிபு நடக்குமிடத்து, மெய்பெறக் கிளந்து பொருள்வரைந்து இசைக் கும் — பொருள்பெற எடுத்தோதப்பட்டு ஏனை வேற்றுமைப் பொருட் புணர்ச்சியது பொதுமுடி பினைத் தான் நீக்கி வேறு முடி பிற்ருய் நின்று ஒலிக்கும், ஐகார வேற்றுமைத் திரிபென மொழிப-

இரண்டாம் வேற்றுமையது வேறுபட்ட புணர்ச்சி என்று கூறுவர் ஆசிரியர் ; எ - று.

மெய்பெற என்றதனானே சாரியையுள்வழித் தன்னுருபு நிலையாது செய்யுட்கண் வருவனவும் பிறவற்றின்கண் உறழ்ந்து முடிவனவுங் கொள்க. 'மறங்கடிந்த வருங்கற்பின்' எனவும் 'சில்சொல்லிற் பல் கூந்தல்' (புறம் - கசுசு) எனவும் 'ஆயிருதிணையி னிசைக்குமன்' (சொல் - க) எனவும் பிறவுண்டும் பெரும்பான்மையும் வருமென்று கொள்க. மை கொணர்ந்தான் மைக்கொணர்ந்தான் வில்கோள் விற்கோள் என வரும். இனி, இவ்வாறு திரியாது அகத் தோத்திற் கூறிய பொது முடிபே தமக்கு முடிபாக வருவனவுங் கொள்க. அவை கடுக்குறைத்தான் செப்புக் கொணர்ந்தான் என்றாற் போல்வன. 'தம்மிலுகிய தொழிற்சொன் முன்வரின்' (எழு - கடுசு) என்ற அதிகாரத்தான் வினைவந்துழியே இங்ஙனம் பெரும்பான்மை திரிவதென்று உணர்க. இனித் தன்னினை முடித்த லென்பதனுள் எழாவதற்கும் வினையோடு முடிவுழித்திரிதல் கொள்க. அது 'வரைபாய் வருடை' (மலைபடு - நிoக) 'புலம்புக்கனனே புல்லணற்காளை' (புறம் - உநிஅ) என்றாற்போல வரும். (கநி)

இகர ஐகார ஈற்று அல்வழி முடிபு

கநிஅ. வேற்றுமை யல்வழி இ ஐ யென்னும்
ஈற்றுப்பெயர்க் கிளவி மூவகை நிலைய
அவைதாம்
இயல்பா குநவும் வல்லெழுத்து மிகுநவும்
உறழா குநவும் என்மனார் புலவர்.

இஃது இகர ஈற்றுப் பெயர்க்கும் ஐகார ஈற்றுப் பெயர்க்கும் அல்வழி முடிபு கூறுகின்றது.

இ - ன் : வேற்றுமை யல்வழி — வேற்றுமை யல்லா இடத்து, இ ஐ என்னும் ஈற்றுப்பெயர்க்கிளவி மூவகை நிலைய — இ ஐ என்னும் ஈற்றையுடைய பெயர்ச்சொற்கள் மூவகையாகிய முடிபு நிலையை யுடைய, அவை தாம் — அம்முடிபுகடாம், இயல்பாகுநவும் — இயல்பாய் முடிவனவும், வல்லெழுத்து மிகுநவும் — வல்லெழுத்து மிக்கு முடிவனவும், உறழாகுநவும் — உறழ்ச்சியாய் முடிவனவும், என்மனார் புலவர் — என இவையென்று கூறுவர் புலவர் ; எ - று.

எ - டு : பருத்தி குறிது நாரை குறிது சிறிது நீது பெரிது என இவை இயல்பு. மாசித் திங்கள் சித்திரைத் திங்கள் அலிக்கொற்றன் புலிக்கொற்றன் காவிக்கண் குவளைக்கண் என இவை மிகுதி. கிளிகுறிது கிளிக்குறிது தினை குறிது தினைக்குறிது என இவை உறழ்ச்சி.

பெயர்க்கிளவி மூவகைநிலைய வெனவே பெயரல்லாத இரண்டுற்று வினைச் சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் இயல்பும் மிகுதியுமாகிய இருவகை நிலையவாம். ஒல்லைக்கொண்டான் என்பது ஐகார ஈற்று வினைச் சொன் மிகுதி. 'இனி யணி' (எழு - உருசு) யென்பதன்கண் இகர ஈற்று வினை

யெச்சம் எடுத்தோதுப. இவற்றிற்கு இயல்புவந்துழிக் காண்க. 'சென்மதி பாக' இஃது இகர ஈற்று இடைச்சொல்லியல்பு. மிகுதி வந்துழிக் காண்க. 'தில்லைச் சொல்லே' (சொல் - உரிஙூ) இஃது ஐகார ஈற்று இடைச்சொன் மிகுதி. இயல்பு வந்துழிக் காண்க. 'கடிகா' இஃது இகர ஈற்று உரிச் சொல்லியல்பு. மிகுதி வந்துழிக் காண்க. பணைத்தோள் இஃது ஐகார ஈற்று உரிச்சொன் மிகுதி. இயல்பு வந்துழிக் காண்க. (கசு)

இ ஈற்று ஏழாம் வேற்றுமை முடிபு

கருகூ. சுட்டுமுத லாகிய இகர இறுதியும்
எகரமுதல் வினவின் இகர இறுதியும்
சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும்
யாவென் வினவின் ஐயென் இறுதியும்
வல்லெழுத்து மிகுநவும் உறழா குநவுஞ்
சொல்லியல் மருங்கின் உளவென மொழிப.

இஃது ஏழாம் வேற்றுமை இடப்பொருளுணர்த்தி நின்ற இகர ஐகார ஈற்று இடைச்சொன் முடிபு கூறுகின்றது.

இ - ள்: சொல்லியல் மருங்கின் — இகர ஐகாரங்கட்கு முன்னர்க் கூறிய மூவகை யிலக்கணங்களுள் இயல்பை நீக்கி, சுட்டு முதலாகிய இகர இறுதியும் — சுட்டெழுத்தினை முதலாகவுடைய அவ்விகர ஈற்று இடைச்சொல்லும், எகர வினவின் முதல் இகர இறுதியும் — எகரமாகிய வினவினை முதலாகவுடைய அவ்விகர ஈற்று இடைச்சொல்லும், சுட்டுச்சினை நீடிய ஐயென் இறுதியும் — சுட்டாகிய உறுப்பெழுத்து நீண்ட அவ்வைகார ஈற்று இடைச்சொல்லும், யாவென் வினவின் ஐயென் இறுதியும் — யாவென் வினவினை முதற்கணுடைய அவ்வைகார ஈற்று இடைச்சொல்லும், வல்லெழுத்து மிகுநவும் — வல்லெழுத்து மிக்கு முடிவனவும், உறழாகுநவும் — உறழ்ச்சியாய் முடிவனவும், உளவென மொழிப — உளவென்று கூறுவர் புலவர்; எ - று.

எ - டு: அதோளிக்கொண்டான் இதோளிக்கொண்டான் உதோளிக் கொண்டான் எதோளிக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், ஆண்டைக் கொண்டான் ஈண்டைக் கொண்டான் ஊண்டைக் கொண்டான் யாண்டைக் கொண்டான் எனவும் இவை மிக்கன. அதோளி அவ்விடமென்னும் பொருட்டு. அவ்வழிகொண்டான் அவ்வழிக்கொண்டான் இவ்வழிகொண்டான் இவ்வழிக்கொண்டான் உவ்வழிகொண்டான் உவ்வழிக்கொண்டான் எவ்வழிகொண்டான் எவ்வழிக்கொண்டான் என உறழ்ந்தன. சுட்டுச்சினை நீண்டதற்கும் யாவினவிற்கும் வரும் ஐகார ஈற்றுக்கு உதாரணம் அக்காலத்து ஆயிடைகொண்டான் ஆயிடைக்கொண்டான் என்றாற்போல வேனையவற்றிற்கும் வழங்கிற்றுப்போலும். இனி, ஆங்கவை கொண்டான் ஆங்கவைக்கொண்டான் என்பன காட்டுவாரும் உளர். அவை திரிபுடையனவாம். சொல்லி

யல் என்றதனானே பிற ஐகார ஈறு மிக்குமுடிவன கொள்க. அன்றைக் கூத்தர் பண்டைச் சான்றோ ரெனவும் ஒரு திங்களைக் குழவி ஒருநாளைக் குழவி எனவும் வரும். (கள)

நெடில்முன் குறில்முன் ஒற்றுக்கள்

கசும். நெடியதன் முன்னர் ஒற்றுமெய் கெடுதலுங்
குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டலும்
அறியத் தோன்றிய நெறியிய லென்ப.

இது புள்ளிமயங்கியலை நோக்கியதோர் நிலைமொழிக் கருவி கூறுகின்றது.

இ - ள்: நெடியதன் முன்னர் ஒற்று மெய் கெடுதலும் — நெட்டெழுத்தின்முன் நின்ற ஒற்றுத் தன்வடிவு கெடுதலும், குறியதன் முன்னர்த் தன் உரு இரட்டலும் — குற்றெழுத்தின் முன் நின்ற ஒற்றுத் தன் வடிவு இரட்டித்தலும், அறியத் தோன்றிய நெறியியல் என்ப — அறியும்படி வந்த அடிப் பாட்டியலென்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

இங்ஙனம் நெடியதன் முன்னர் ஒற்றுக் கெடுவன ணகாரமும் னகாரமும் மகாரமும் லகாரமும் ளகாரமும் என ஐவகையவாம்.

எ - டு: கோணிமிர்ந்தது தானல்லன் தாகல்லர் வேனன்று தோணன்று என நகரம் வருமொழியாதற்கண் நெடியதன் முன்னர் ஒற்றுக் கெட்டது. கோறீது வேறீது எனத் தகரம் வருமொழியாதற்கண் லகாரவொற்றுக் கெட்டது. ஏனைய வந்துழிக் காண்க. இவற்றை 'லனவென வரூஉம்' (எழு - கசகூ) 'ளஞவென் புள்ளிமுன்' (எழு - கடுo.) என்பனவற்றுள் முடித்துக் கெடுமாறு காண்க. ஒற்றிட்டுவன ஞகார நகார ழகாரம் ஒழிந்தன. கண்ணழகிது பொன்னகல் தம்மாடை சொல்லழகிது எள்ளழகிது நெய்யகல் தெவ்வலன் எனக் குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டின.

மேலைச் சூத்திரத்து நான்கனுருபு பிற்கூறியவதனுன் ஒற்றிரட்டுதல் உயிர் முதன்மொழிக் கண்ணதென்று உணர்க. குறியது பிற் கூறிய முறையன்றிக் கூற்றினுல் தம்மை எம்மை நின்னை என நெடியன குறுகிநின்ற வழியுங் குறியதன்முன்ன ரொற்றுய் இரட்டுதலும், விரனன்று குரணிமிர்ந்தது எனக் குறிலிணையின் முன்னர் வந்த ஒற்றுக் கெடுதலும், வராறீது நன்று எனக் குறினெடிற்கண் நின்ற ஒற்றுக் கெடுதலும், அதுகா ரேழி எனவுங் குரிசிறீயன் எனவுந் தொடர்மொழி யீற்று நின்ற ஒற்றுக் கெடுதலும் இடைச் சொல்லோடு ஒட்டுப்பட்டு நிற்றலுங்,[1] காற்றீது எனவும் விரற்றீது எனவும் ஒற்று நிற்றலுங் கொள்க. இனி அறிய என்றதனுற் றேன்றீது நாண்டீது என்றாற்போல்வன கெடாமை நிற்றலுங், கெடுதலுந் தகாதகரங்கள் வந்துழியென்பதாஉங் கொள்க. நெறியிய லென்றதனுற் சுட்டின்முன் உயிர்முதன்

1 அது கொரேழி எனபது இடைசசொலலோடு ஒட்டுபபட்டு நினறு தொடாமொழியாகி ஈறறுநினற ஒறறுக கெட்டது; குரிசிறீயன எனபது இடைச்சொல்லோடு ஒடடுபபடாது இயலபாயத் தொடாமொழியாயிருநது ஈறறுநினற ஒறறுக் கெட்டது.

மொழி வந்துழி அவ்வடை அவ்வாடை என இடை வகரவொற்று இல்வழியும் இரட்டுதல் கொள்க. (கஅ)

குறில்முன் ஒற்று இரட்டாத இடம்

ககூக. ஆறன் உருபினும் நான்கன் உருபினுங்
கூறிய குற்றெற் றிரட்ட லில்லை
ஈறுகு புள்ளி அகரமொடு நிலையும்
நெடுமுதல் குறுகும் மொழிமுன் னான.

இஃது உருபியலை நோக்கியதோர் நிலைமொழிக்கருவி கூறுகின்றது.

இ - ள் : நெடுமுதல் குறுகும் மொழிமுன் ஆன — நெடிதாகிய முதலெழுத்துக் குறுகுமுடியும் அறுவகைப்பட்ட மொழிகளின் முன்னர் வந்த, ஆறனுருபினும் நான்கனுருபினும் — ஆறும் வேற்றுமைக்கண்ணும் நான்காம் வேற்றுமைக்கண்ணும், கூறிய குற்றெற்று இரட்டலில்லை — முன்னர் நிலைமொழிக்கு இரட்டுமென்ற குற்றெற்று இரட்டி வருதலில்லை, ஈறுகுபுள்ளி அகரமொடு நிலையும் — நிலைமொழியீற்றுக்கண் நின்ற ஒற்றுக்கள் அகரம்பெற்று நிற்கும்; எ - று.

உருபியலில் 'நீயெனொருபெயர்' (எழு - களக) எனவுந் 'தாம்காமென்னும்' (எழு - கஅஅ.) எனவுந் 'தான்யானென்னும்' (எழு - ககூஉ.) எனவுங் கூறியவற்றுற் குறுகி ஒற்றிரட்டித் தம்மை நம்மை எம்மை தன்னை நின்னை என்னை என வருவன இதனுனே தமது நமது எமது தனது நினது எனது எனவும், தமக்கு நமக்கு எமக்கு தனக்கு நினக்கு எனக்கு எனவும் ஒற்றிரட்டாது அகரம் பெற்று வந்தன. நான்காவதற்கு ஒற்று மிகுதல் 'வல்லெழுத்து முதலிய' (எழு - ககச) என்பதனுற் கொள்க. ஆறனுருபாகிய அகரம் ஏறி முடியாமைக்குக் காரணம் 'ஆறனுருபினகரக்கிளவி' (எழு - ககஙி) என்புழிக் கூறினும். ஒற்றிரட்டாமையும் அகரப்பேறும் இரண்டற்கும் ஒத்தவிதியென்று உணர்க. கூறிய வென்றதனுன் நெடுமுதல் குறுகாத[1] தம் நம் நும் என வருஞ் சாரியைகட்கும் இவ்விருவிதியுங் கொள்க. எல்லார்தமக்கும் எல்லாநமக்கும் எல்லீர்நுமக்கும் எல்லார்தமதும் எல்லாநமதும் எல்லீர்நுமதும் என வரும். (ககூ)

'நும்' என் மொழிக்கும் அவ்விதி

ககூஉ. நும்மென் இறுதியும் அந்நிலை திரியாது.

இது நெடுமுதல் குறுகாத நம்மென்கின்றதும்[2] அவ்விதி பெறுமென்கின்றது.

இ - ள் : நும்மென் இறுதியும் — நெடுமுதல் குறுகா நும்மென்னும் மகரவீறும், அந்நிலை திரியாது — மூற் கூறிய குற்

1 தாம் நாம நாம் (வழக்கற்றது) எனனும் பெயர்களே தம் நம நும எனக் குறுகிச் சாரியையாவதால், ''நெடுமுதல் குறுகாத தம நம நும'' என நச்சினார்க்கினியர் கூறுவது பொருந்தாது.

2 இது மேற கூறப்பட்டது.

ருற்று இரட்டாமையும் ஈருகுபுள்ளி அகரமொடு நிலையலும் எய்தும் ; எ - று.

எ - டு : நுமது நுமக்கு என வரும். (உo)

புள்ளி யிறுதி உகரம் பெறுத இடம்

கசுஙு. உகரமொடு புணரும் புள்ளி யிறுதி
யகரமும் உயிரும் வருவழி இயற்கை.

இது புள்ளி மயங்கியலே நோக்கியதோர் நிலைமொழிச் செய்கை கூறுகின்றது.

இ - ள் : உகரமொடு புணரும் புள்ளி யிறுதி — உகரப் பேற்றோடு புணரும் புள்ளியீறுகள், யகரமும் உயிரும் வருவழி இயற்கை — யகரமும் உயிரும் வருமொழியாய் வருமிடத்து அவ்வுகரம் பெறுது இயல்பாய் முடியும் ; எ - று.

அவ் வீறுகளாவன புள்ளி மயங்கியலுள் உகரம் பெறுமென்று விதிக்கும் பல ஈறுகளு மென்று கொள்க. உரிஞ் யாஞ அனந்தா ஆதா இகலா ஈந்தா உழுந்தா ஊரா எயிஞ ஏரு ஐயா ஒழுக்கா ஓதா ஔவியா எனவும், உரிஞ்யாது அழகு எனவும் ஒட்டுக. எனைப் புள்ளிகளோடும் எற்பன அறிந்து ஒட்டுக.

'ஞகாரை யொற்றிய' (எழு - உகசு) என்பதனுனும் 'ஞ ந ம வ வியை யினும் (எழு - உகஎ) என்பதனுனும் யகரமும் உயிரும் வந்தால் உகரம் பெறுது இயல்பாமென்பது பெறுதலின் ஈண்டு விலக்கல் வேண்டா வெனின், எடுத்தோத்தில் வழியதே உய்த்துணர்ச்சி யென்று கொள்க. (உக)

இது முதலாக அல்வழி கூறுகின்றார்.

அளவு நிறை எண்ணுப்பெயர்கள் தம்மிற் புணருமாறு

கசுச. உயிரும் புள்ளியும் இறுதி யாகி
அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி
உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும்
தத்தங் கிளவி தம்மகப் பட்ட
முத்தை வருஉங் காலந் நோன்றின்
ஒத்த தென்ப ஏயென் சாரியை.

இஃது அளவும் நிறையும் எண்ணுமாகிய பெயர்கள் தம்மிற் புணருமாறு கூறுகின்றது.

இ - ள் : உயிரும் புள்ளியும் இறுதியாகி — உயிரும் புள்ளியுந் தமக்கு ஈறாய், அளவும் நிறையும் எண்ணுஞ் சுட்டி உளவெனப் பட்ட எல்லாச் சொல்லும் — அளவையும் நிறையையும் எண்ணையுங் கருதி வருவன உளவென்று ஆசிரியர் கூறப்பட்ட எல்லாச் சொற்களும், தத்தங் கிளவி தம்மகப்பட்ட — தத்தமக்கு இனமாகிய சொற்களாய்த் தம்மிற் குறைந்த சொற்கள், முத்தை

வருஉங் காலந் தோன்றின் — தம்முன்னே வருங் காலந் தோன்று மாயின், ஏயென் சாரியை ஒத்தது என்ப — தாம் ஏயென் சாரியை பெற்று முடிதலைப் பொருந்திற்றென்பார் ஆசிரியர்; எ - று.

முத்தை முத்தை யென விகாரம்.

நாழியே யாழாக்கு உழக்கே யாழாக்கு கலனே பதக்கு என அளவுப் பெயர் ஏகாரம் பெற்றுத் தம்முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன. தொடியே கஃசு கழஞ்சே குன்றி கொள்ளே யையவி என நிறைப்பெயர் ஏகாரம் பெற்றுத் தம்முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன. ஒன்றேகால் காலே காணி காணியே முந்திரிகை என எண்ணுப்பெயர் ஏகாரம் பெற்றுத் தம் முன்னர்த் தம்மிற் குறைந்தன வந்தன. அதிகாரம்பட்ட புள்ளியீறு முற்கூறுதலனே குறுணி நாழி ஐங்நாழி யுழக்கு என ஏகாரமின்றி வருவனவுங் கொள்க. (உஉ)

அவை 'அரை' என்பதனோடு புணர்தல்

கசுடு. அரையென வருஉம் பால்வரை கிளவிக்குப்
புரைவ தன்றுற் சாரியை யியற்கை.

இஃது எய்தியது விலக்கிற்று.

இ - ள்: அரையென வருஉம் பால்வரை கிளவிக்கு — அம்மூவகைச் சொன் முன்னர் வரும் அரை யென்று சொல்ல வருகின்ற பொருட்கூற்றை உணரநின்ற சொல்லிற்கு, சாரியை யியற்கை புரைவதன்று — ஏயென்சாரியை பெறுந் தன்மை பொருந்துவ தன்று; எ - று.

ஆல் அசை.

எ - டு: உழக்கரை செவிட்டரை மூவுழக்கரை எனவும், கஃசரை கழஞ் சரை தொடியரை கொள்ளரை எனவும், ஒன்றரை பத்தரை எனவும் இவை ஏயென்சாரியை பெறுவாய் வந்தன. புரைவதன் றென்றதனாற் கலவரை யென்பதனை ஒற்றுக் கெடுத்துச் செய்கை செய்து முடிக்க. இதனானே செவிட்டரை யென்புழி டகரவொற்று மிகுதலுங் கொள்க. 'ஒட்டுதற் கொழுகிய வழக்கு' (எழு - கஙஉ) அன்மையிற் சாரியை பெறுவாயின என்றாலோ வெனின் அவை பெற்றும் பெறுதும் வருவனவற்றிற்குக் கூறிய தாகலானும் இது 'தம்மகப்பட்ட' (எழு - கஙசு) என வரைந்தோதினமையானும் விலக்கல் வேண்டிற்று.[1] (உங)

அவை 'குறை' என்பதனோடு புணர்தல்

கசுசு. குறையென் கிளவி முன்வரு காலை
நிறையத் தோன்றும் வேற்றுமை யியற்கை.

1 'ஒட்டுதறகொழுகிய வழக்கு'. . . .வேண்டிறறு - ''ஒட்டுதறகொழுகிய வழககு' என முனனர்க கூறியது சாரியை பெறறும் பெருதும் வரும் புணர்மொழிகடகு. இங்குக் கூறிய அரை யெனனுஞ் சொலலி'வருமொழியாகக கொணட புணாசசிக ளெலலாம் சாரியை பெருமலே வரும். முந்தின நூற்பாவில 'தம்மகப்பட்ட. . ஏயென் சாரியை' என அரை யென்னும் சொல்லும அடங்கக கூறினமையின் அதை இங்கு விலக்க நேர்ந்தது.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது, எயென்சாரியை விலக்கி வேற்றுமை முடிபிலோடு மாட்டெறிதலின்.

இ - ள்: குறையென் இளவி முன்வருகாலை — குறை யென்னுஞ்சொல் அளவுப்பெயர் முதலியவற்றின்முன் வருங்காலத்திற்கு, வேற்றுமை யியற்கை — வேற்றுமைப்புணர்ச்சி முடிபிற்கு உரித்தாகக் கூறுந் தன்மை, நிறையத் தோன்றும் — நிரம்பத் தோன்றும்; எ - று.

எ - டு: உரிக்குறை கலக்குறை எனவும், தொடிக்குறை கொட்குறை எனவும், காணிக்குறை காற்குறை எனவும் வரும். உரிய நெல்லுங் குறை நெல்லு மென்க.

வேற்றுமையியற்கை யெனவே இவை வேற்றுமை யன்மையின. எனவே உரிக்குறை யென்பதற்கு உரியும் உழக்கு மெனப் பொருளாயிற்று, ஏனையவும் அன்ன.

முன்வருகாலை யென்றதனானே கலப்பயறு கலப்பாகு என்றாற்போலப் பொருட்பெயரோடு புணரும் வழியும் இவ்வேற்றுமை முடிபு எய்துவிக்க. பாகென்றது பாக்கினை- நிறைய வென்றதனானே உரிக்கூறு தொடிக்கூறு காணிக்கூறு எனக் கூறென்றதற்கும் இம்முடிபு எய்துவிக்க. (உச)

அவற்றுட் குற்றுகர மொழிகட்குச் சாரியை

கசூ எ. குற்றிய லுகரக் கின்னே சாரியை.

இது வேற்றுமை முடிபு விலக்கி இன் வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ - ள்: குற்றியலுகரக்குச் சாரியை — குற்றியலுகர ஈற்று அளவுப்பெயர் முதலியவற்றிற்குக் குறையென்பதனோடு புணரும் வழி வருஞ் சாரியை, இன்னே — இன்சாரியையேயாம்; எ - று.

குற்றியலுகரக்கு, இதற்கு அதது விதித்து முடிக்க. குற்றியலுகரத்தின்னேயென்பதும் பாடம்.

உழக்கின்குறை ஆழாக்கின்குறை எனவும், கழஞ்சின்குறை கஃசின் குறை எனவும், ஒன்றின்குறை பத்தின்குறை எனவும் வரும். இதற்கு உழக்குங்குறையு மென்பது பொருள். இது வேற்றுமைக்கண்ணுயின் உழக்கிற் குறையென நிற்கும். (உடு)

'கலம்' அத்துச் சாரியை பெறுதல்

கசூ அ. அத்திடை வரூஉங் கலமென் அளவே.

இதுவும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, வேற்றுமைவிதி விலக்கி அத்து வகுத்தலின்.

இ - ள்: கலமென் அளவே — கலமென்னும் அளவுப்பெயர் குறையோடு புணருமிடத்து, அத்து இடை வரூஉம் — அத்துச் சாரியை இடை வந்து புணரும்; எ - று.

கலத்துக்குறை. இதனை 'அத்தேவற்றே' (எழு - கஙஉ) என்பதனுன் முடிக்க. இதற்குக் கலமுங் குறையு மென்பது பொருள். சாரியை முற் கூறியவதனுனே முன் இன்சாரியை பெற்றவழி வல்லெழுத்து வீழ்க்க. (உசு)

பனையும் காவும் இன்சாரியை பெறுதல்

ககூக. பனையென் அளவுங் காவென் நிறையும்
நினையுங் காலை இன்னெடு சிவணும்.

இதுவும் அது, வேற்றுமைவிதி விலக்கி இன் வருத்தலின்.

இ - ள்: பனையென் அளவுங் காவென் நிறையும் — பனை யென்னும் அளவுப்பெயருங் காவென்னும் நிறைப்பெயருங் குறை யென்பதனெடு புணருமிடத்து, நினையுங்காலை இன்னெடு சிவ ணும் — ஆராயுங்காலத்து இன்சாரியை பெற்றுப் புணரும் **எ - று.**

பனையின் குறை காவின்குறை என வரும். இவையும் உம்மைத் தொகை. நினையுங்காலை யென்பதனுன் வேற்றுமைக்கு உரிய விதி யெய்தி வல்லெழுத் துப் பெறுதலுஞ் சிறுபான்மை கொள்க. பனைக்குறை காக்குறை எனவரும். இத்துணையும் அல்வழி முடிபு. இவற்றை 'வேற்றுமை யல்வழி இஐ' (எழு - கடுஅ) என்னுஞ் சூத்திரத்திற் கூறுது வேறுநினுர், இவை அளவும் நிறையும் எண்ணுமாதலின். (உஎ)

அளவு நிறைப் பெயர்களில் மொழி முதலாம் எழுத்துக்கள்

களம். அளவிற்கும் நிறையிற்கும் மொழிமுத லாகி
உளவெனப் பட்ட ஒன்பதிற் றெழுத்தே
அவைதாங்
கசதப என்ரு நமவ என்ரு
அகர உகரமோ டவையென மொழிப.

இது முற்கூறிய மூன்றனுள் அளவிற்கும் நிறைக்கும் மொழிக்கு முதலா மெழுத்து இனைத் தென்கின்றது.

இ - ள்: அளவிற்கும் நிறையிற்கும் மொழி முதலாகி உள வெனப்பட்ட ஒன்பதிற்றெழுத்தே — அளவுப்பெயர்க்கும் நிறைப் பெயர்க்கும் மொழிக்கு முதலாயுள்ளவென்று கூறப்பட்டன ஒன்ப தெழுத்துக்கள், அவைதாங் கசதப என்ரு நமவ என்ரு அகரவுகர மோடு அவையென மொழிப — அவ்வெழுத்துக்கள்தாங் கசதபக் களும் நமவக்களும் அகர உகரமுமாகிய அவை யென்று கூறுவர் புலவர்; **எ - று.**

எ - டு: கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு இவை அளவு. கழஞ்சு நீரகம் தொடி பலம் நிறை மா வரை அந்தை இவை நிறை. நிறைக்கு உகரமுதற்பெயர் வந்துழிக் காண்க. இனி உளவெனப்

பட்ட என்றதனானே உளவெனப்படாதனவும் உள. அவை இம்மி ஓரடை இடா என வரையறை கூறுதனவுங் கொள்க. இன்னும் இதனானே தேய வழக்காய் ஒருஞார் ஒருதுவலி என்பனவுங் கொள்க. இங்ஙனம் வரையறை கூறினார், அகத்தோத்தினுள் முடிபு கூறியவழி அதிகாரத்தான் வன்கணத் தின்மேற் செல்லாது ஒழிந்தகணத்தினுஞ் செல்லு மென்றற்கு.[1] எண்ணுப் பெயர் வரையறை யின்மையிற் கூறாராயினர்.[2] (உஅ)

ங. புறனடை

இவ்வியலுக்குப் புறனடை

களக. ஈறியல் மருங்கின் இவையிவற் றியல்பெனக்
கூறிய கிளவிப் பல்லா றெல்லாம்
மெய்த்தலைப் பட்ட வழக்கொடு சிவணி
ஒத்தவை யுரிய புணர்மொழி நிலையே.

இஃது இவ்வோத்திற்குப் புறனடை; எதித்தோத்தானும் இலேசானும் முடியாதனவற்றிற்கு இதுவே ஒத்தாகலின்.

இ - ள்: *ஈறு இயல் மருங்கின் — உயிரும் புள்ளியும் இறுதி யாகிய சொற்கள் வருமொழியோடு கூடி நடக்குமிடத்து, இவற்று இயல்பு இவையெனக் கூறிய கிளவிப் பல்லாறெல்லாம் — இம் மொழிகளின் முடிபு இவையெனக் கூறி முடிக்கப்பட்ட சொற் களினது அவ்வாற்றுன் முடியாதுநின்ற பலவகை முடிபுகளெல் லாம், மெய்த்தலைப்பட்ட வழக்கொடு சிவணி — உண்மையைத் தலைப்பட்ட வழக்கோடுகூடி, புணர்மொழிநிலை ஒத்தவை உரிய — புணரும் மொழிகளின் நிலைமைக்கட் பொருந்தினவை உரியவாம்;* எ - று.

எ - டு: *நடஞெள்ளா* என உயிரீருகிய முன்னிலைக் கிளவி மென் கணத் தோடு இயல்பாய் முடிந்தது. *மண்ணுகொற்ரு மண்ணுக்கொற்ரு மன்னு கொற்ரு மன்னுக்கொற்ரு உள்ளுகொற்ரு உள்ளுக்கொற்ரு கொல்லுகொற்ரு கொல்லுக் கொற்ரு* என்பன புள்ளி யிறுதி முன்னிலைக் கிளவி உகரம் பெற்றும் உறழ்ந்தும் முடிந்தன. *உரிஞுஞெள்ளா* இஃது *'ஔவெனவரூஉம்'* (எழு - கடுஉ) என்பதன் ஒழிபு. *பதக்கஞாழி பதக்கமுஞாழி* என இவை எயென் சாரியை பெருது அக்குப்பெற்று அதன் இறுதி மெய்ம்மிசையொடுங் கெட்டுப் புணர்ந்தன. *வாட்டாளே தோற்றண்டை* என்பன தகரம் வந்துழிக் திரிந்து நெடியதன் முன்னர் ஒற்றுக் கெடாது நின்றன. *சீரகரை* என்பதனைச் சீர கம் அரை யென நிறுத்திக் ககரவொற்றின் மேலேறின அகரத்தையும் மகர வொற்றையுங் கெடுத்து அரை யென்பதன் அகரத்தை யேற்றி முடிக்க. இது நிறைப்பெயர். *ஒருமா* வரை யென்பதனே ஒரு மா அரை யென நிறுத்தி வரு

---

1 'இங்ஙனம் வரையறை. . . .செலலுமென்றற்கு' ... முந்தின நானகு நூற்பாக்களி லும் குறை யென்னும வலி முதல வருமொழியே கூறப்பட்டமையின், அதிகாரத் தால வனகணத்தினமேல மட்டும செல்லுதலே விலக்கி ஒழிந்த கணத்தின் மேலுஞ் செலலும் என்று அறிவித்தற்கு, இந்நூற்பாவில் வரையறை கூறினார்.

2 எண்ணுப்பெயர்களின் முதலெழுத்துக்கள் மிகப் பல வாதலின் கூறப்படவிலலை.

மொழி அகரங் கெடுத்து ஒருமாரை யென முடிக்க. கலவரை யென்பதனைக் கலரை என முடிக்க. அகர மகரங் கெடுத்து ஈகனை யெனப் பிறவும் வருவன வெல்லாம் இச் சூத்திரத்தான் முடிக்க. (உக)

'யாவர்' 'யாது' என்னுஞ் சொற்களின் மரூஉ

கஎஉ. பலரறி சொன்முன் யாவ ரென்னும்
பெயரிடை வகரங் கெடுதலும் ஏனை
ஒன்றறி சொன்முன் யாதென் வினைவிடை
ஒன்றிய வகரம் வருதலும் இரண்டும்
மருவின் பாத்தியின் திரியுமன் பயின்றே.

இது மரூஉச்சொன் முடிபு கூறுகின்றது.

இ - ள் : பலரறி சொன்முன் யாவ ரென்னும் பெயரிடை வகரங் கெடுதலும்—பலரை யறியும் அவரென்னுஞ் சொல்லின் முன்னர் வருகின்ற யாவரென்னும் பெயர் இடையில் வகரங் கெடுதலும், ஏனை ஒன்றறி சொன்முன் யாதென் வினை இடை ஒன்றிய வகரம் வருதலும் — ஒழிந்த ஒன்றனை அறியும் அது வென்னுஞ் சொல்லின் முன்னர் வருகின்ற யாதென்னும் வினைச்சொல் இடையிலே உயிரோடு பொருந்திய வகரம் வருதலும், இரண்டும் — ஆகிய அவை யிரண்டும், மருவின் பாத்தியின் மன் பயின்று திரியும்—மருமுடிபின் பகுதியிடத்து மிகவும் பயின்று திரியும்; எ - று.

எ - டு : அவர் யார் எனவும் அது யாவது எனவும் வரும். அவர் யாவ ரென்பது வகரங் கெட்டு அவ்யாரென நின்றவழி 'யாஅ ரென்னும் வினுவின் கிளவி' (சொ - உகo) என்று வினையியலுட் கூறும் வினைக் குறிப்புச் சொல்லாம் பிறவெனின், ஆகாது; அவ்வகரங் கெட்டாலும் ஈண்டு யாவரென்னும் பெயர்த்தன்மையாயே நிற்றலின். அது பெற்றவா றென்னை யெனின், ஈண்டுப் பலரறி சொன்முன் வந்த யாவ ரென்பதன் வகரங் கெடுமெனவே, ஏனை அவன் அவள் என்னும் இருபான் முன்னும் யாவரென்பது வாராதென்றும் அது திரிந்து மருவாய் நிற்கு மென்றுங் கூறுதலானும் 'யாவரென்னும் பெயரிடை' என்பதனானும் பெற்றும். இதனானே அவன் யாவர் அவள் யாவர் என்றுற் பால் வழுவாமென்பது பெற்றும். இதனை 'யாவன் யாவள் யாவ ரென்னு — மாவயின் மூன்றே டு' (சொ - கசஉ) எனப் பெயராக ஓதிய வாற்றான் உணர்க. அன்றியும் யாரென்னும் வினுவின் கிளவி முப்பாற்கும் உரித்தென்று யாரென்னும் வினுவினைக் குறிப்பினை அவன்யார் அவள்யார் அவர்யார் என முப்பாற்கும் ஒப்ப உரிமை கூறுதலானும் அது வேறென்பது பெற்றும். அது வினையியலுள் ஓதினமையானும் 'வினுவிற் கேற்றல்' (சொ - சுசு) எனப் பயனிலையாக ஓதினமையானும் வேறுயிற்று.

இனி 'யார்யார்க் கண்டே யுவப்பர்' எனப் பலரறி சொன் முன்னான்றி இயல்பாக வந்த யாரென்பது யாண்டு அடங்குமெனின் அதுவும் யாரை யாரைக்கண்டென உருபு விரிதலின் யாவரை என்னும் வகரங்கெட்ட பெயரே

யாம். அங்ஙனம் நிலைமொழி வருமொழியாய் நிற்றல் பயின்றென்றதனாற் கொள்க. இதனானே 'யாவது ஈன்றென வுணரார் மாட்டும்' என ஏனை ஒன்றறி சொல்லும் நிலைமொழியாய் நிற்றல் கொள்க. இன்னும் இதனானே யாரவர் யாவதது என இவ்விரு சொல்லும் நிலைமொழியாய் வருதல் கொள்க.

தொகைமரபு முற்றிற்று.

கூ. உருபியல்

[உருபெழுத்துக்களின் புணர்ச்சி யிலக்கணம் உணர்த்துவது.]

க. உயிர்முதல்

அகர ஈறு முதலியவற்றில் வேற்றுமை யுருபிற்கு இன் சாரியை

களஉ. அ ஆ உ ஊ ஏ ஒள என்னும்
அப்பா லாறன் நிலைமொழி முன்னர்
வேற்றுமை யுருபிற் கின்னே சாரியை.

என்பது சூத்திரம்.

உருபுகளோடு பெயர் புணரும் இயல்பு உணர்த்தினமையின் இவ்வோத்து உருபிய லென்னும் பெயர்த்தாயிற்று. மேற் றொகுத்துப் புணர்த்ததனை ஈண்டு விரித்துப் புணர்க்கின்றாராகலின், இவ்வோத்துத் தொகை மரபோடு இயைபுடைத்தாயிற்று. இச் சூத்திரம் அகர முதலிய ஈற்றான் வரும் ஆறு ஈற்றுச்சொற்கள் நின்று இன் பெற்று உறுப்பினொடு புணருமாறு கூறுகின்றது. உருபின் பொருள் படவரும் புணர்ச்சி மேற் கூறுப.

இ - ள்: அ ஆ உ ஊ ஏ ஒள என்னும் அப்பால் ஆறன் நிலை மொழி முன்னர் — அ ஆ உ ஊ ஏ ஒள என்று சொல்லப்படு கின்ற அக்கூற்று ஆறினையும் ஈறாகவுடைய நிலைமொழிகளின் முன்னர் வருகின்ற, வேற்றுமை யுருபிற்கு இன்னே சாரியை — வேற்றுமை யுருபுகட்கு இடையே வருஞ் சாரியை இன் சாரி யையே; எ - று.

எ - டு: விளவினை விளவினொடு விளவிற்கு விளவினது விளவின்கண் எனவும், பலாவினை பலாவினொடு பலாவிற்கு பலாவினது பலாவின்கண் என வும், கடுவினை கடுவினொடு கடுவிற்கு கடுவினது கடுவின்கண் எனவும், தழூஉ வினை தழூஉவினொடு தழூஉவிற்கு தழூஉவினது தழூஉவின்கண் எனவும், சேவினை சேவினொடு சேவிற்கு சேவினது சேவின்கண் எனவும், வெளவினை வெளவினொடு வெளவிற்கு வெளவினது வெளவின்கண் எனவும் வரும். இவ் வாறே செய்கை யறிந்து ஒட்டுக.

'இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்
கின்னென் சாரியை யின்மை வேண்டும்' (எழு - கூஉ)

எனவே, ஏனைய இன் பெறு மென்றலின், 'ஞநமயவ' (எழு - கசச) என்பதனுள் இயல்பென்றது விலக்கிற்றும். (க)

அகர ஈற்றுப் பன்மைப் பெயர்கட்கு வற்றுச் சாரியை

களச. பல்லவை நுதலிய அகர இறுபெயர்
வற்ரொடு சிவணல் எச்ச மின்றே.

இஃது இன்சாரியை விலக்கி வற்று வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருக்கின்றது.

இ - ள்: பல்லவை நுதலிய பெயரிறு அகரம் — பன்மைப் பொருளைக் கருதின பெயர்களின் இறுதி நின்ற அகரம், வற்ரொடு சிவணல் எச்ச மின்று — வற்றுச் சாரியையோடு பொருந்துதலை ஒழிதலில்லை; எ - று.

எ - டு: பல்லவற்றை பல்லவற்ரொடு பலவற்றை பலவற்ரொடு சில்ல வற்றை சில்லவற்ரொடு சிலவற்றை சிலவற்ரொடு உள்ளவற்றை உள்ளவற் ரொடு இல்லவற்றை இல்லவற்ரொடு என ஒட்டுக.

எச்சமின்று என்றதனானே மேல் இன் பெற்றன பிறசாரியையும் பெறு தல் கொள்க. நிலாத்தை துலாத்தை மகத்தை என வரும். இன்னும் இத னானே பல்லவை நுதலியவற்றின்கண் மூன்ரமுருபு வற்றுப் பெற்றே முடிதல் கொள்க. (உ)

'யா' என் வினவுக்கும் வற்றுச் சாரியை

களரு. யாவென் வினவும் ஆயியல் திரியாது.

இஃது ஆகார ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வருத்தது.

இ - ள்: யாவென் வினவும் — யாவென்று சொல்லப்படும் ஆகார ஈற்று வினப்பெயரும், ஆயியல் திரியாது — முற்கூறிய வற்றுப் பேற்றிற் றிரியாது; எ - று. (ங)

யாவற்றை யாவற்ரொடு என வரும்.

உகர வீற்றுச் சுட்டுக்கு அன் சாரியை

களசு. சுட்டுமுத லுகரம் அன்னொடு சிவணி
ஒட்டிய மெய்யொழித் துகரங் கெடுமே.

இஃது உகர ஈற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள்: சுட்டுமுதல் உகரம் அன்னொடு சிவணி — சுட்டெழுத் தினை முதலாகவுடைய உகர ஈற்றுச்சொல் அன் சாரியையோடு பொருந்தி, ஒட்டிய மெய் ஒழித்து உகரங் கெடும் — தான் பொருந் திய மெய்யை நிறுத்தி உகரங் கெடும்; எ - று.

அதனை அதனொடு இதனை இதனொடு உதனை உதனொடு என வரும். அதினை அதினொடு என்ரற் போல்வன மரு முடிப்புழி முடிந்தன.[1] ஒட்டிய

1அதினை அதினொடு என்ரற் போல்வன 'வழங்கியன் மருங்கின மருவொடு திரிதவும்' என்னும் அதிகாரப் புறனடையான முடிந்தன. அதனை அதனொடு எனபன அதினை அதினொடு என மருவின. அன சாரியையின் மருஉத் திரிபே இன என்பது கருத்து.

என்றதனாற் சுட்டுமுதல் உகரமன்றிப் பிற உகரமும் உயிர் வருவழிக் கெடுவன கொள்க. அவை கதவு களவு கனவு என நிறுத்தி அழகிது இல்லை என வருவித்து உகரங் கெடுத்து முடிக்க. இவற்றை வகர ஈருக்கி உகரம் பெற்றன வென்று கோடு மெனினின் வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண்ணும் பயின்று வரும் வகர ஈறுகளே ஒழித்து ஆசிரியர் 'வகரக் கிளவி நான்மொழி யீற்றது' (எழு - அக) என்ருற்போல வரைந்தோதல் குன்றக்கூறலாம் ஆதலின், அவை உகர ஈறென்று உணர்க. அவை செலவு வரவு தரவு உணவு கனவு என வழக்கின்கண்ணும் 'புன்கண் ணுடைத்தாற் புணர்வு' (குறள் - ககஙூ) 'பாடறியா தானே யிரவு' 'கண்ணுரக் காணக் கதவு' (முத்தொள் - சஉ) எனச் செய்யுட் கண்ணும் பயின்று வருமாறு உணர்க. (சு)

ஐகார ஈற்றிற்கு வற்றுச் சாரியை

களஎ. சுட்டுமுத லாகிய ஐயென் இறுதி
வற்றொடு சிவணி நிற்றலும் உரித்தே.

இஃது ஐகார ஈற்றிற்கு முடிபு கூறுகின்றது.

இ - ள்: சுட்டு முதலாகிய ஐயெனிறுதி — சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஐகார ஈற்றுச் சொல், வற்றொடு சிவணி நிற்றலும் உரித்து — வற்றுச் சாரியையோடு பொருந்தி நிற்றலும் உரித்து? எ - று. உம்மையான் வற்றொடு சில உருபின்கண் இன் சாரியை பெற்று நிற்றலும் உரித்து; எ - று.

அவையற்றை அவையற்றொடு இவையற்றை இவையற்றொடு உவையற்றை உவையற்றொடு என ஒட்டுக; இங்ஙனம் ஐகாரம் நிற்க வற்று வந்துழி 'வஃகான் மெய்கெட' (எழு - கஉஉ) என்பதனான் முடிக்க.

இனி, உம்மையான் அவையற்றிற்கு அவையற்றின்கண் என நான்காவதும் எழாவதும் வற்றும் இன்னும் பெற்று வந்தவாறு காண்க. இனி, ஒன்றென முடித்த லென்பதனாற் பல்லவை நுதலிய அகர ஈற்றிற்கும் இவ்விரண்டு உருபின்கண் வற்றும் இன்னுங் கொடுத்துப் பலவற்றிற்கு பலவற்றின்கண் என முடிக்க. இது மேல் வருவனவற்றிற்கும் ஒக்கும். (இ)

யாவென் வினவின் ஐக்கும் வற்றுச்சாரியை

களஅ. யாவென் வினவின் ஐயென் இறுதியும்
ஆயியல் திரியா தென்மனார் புலவர்
ஆவயின் வகரம் ஐயொடுங் கெடுமே.

இதுவும் அது.

இ - ள்: யாவென் வினவின் ஐயென் இறுதியும் — யாவென்னும் வினவினையுடைய ஐகார ஈற்றுச் சொல்லும், ஆயியல் திரியாது — முற் கூறிய சுட்டு முதல் ஐகாரம் போல வற்றுப் பெறும் அவ்வியல்பில் திரியாதென்று சொல்லுவர் ஆசிரியர், ஆவயின் வகரம் ஐயொடுங் கெடும் — அவ் ஈற்றிடத்து வகரம் ஐகாரத்தோடுகூடக் கெடும்; எ - று.

யாவற்றை யாவற்றெடு என ஒட்டுக. வகரம் வற்றுமிசை யொற்றென்று கெடுவதனைக் கேடு ஒதிய மிகையானே பிற ஐகாரமும் வற்றுப் பெறுதல் கொள்க. கரியவற்றை கரியவற்றெடு நெடியவற்றை நெடியவற்றெடு குறியவற்றை குறியவற்றெடு என எல்லாவற்றோடும் ஒட்டுக. இது கருமை நெடுமை குறுமை என்னும் பண்புப்பெயரன்றிக் கரியவை நெடியவை குறியவை எனப் பண்புகொள் பெயராய் நிற்றலின் வகர ஐகாரங் கெடுத்து வற்றுச்சாரியை கொடுத்து முடிக்கப்பட்டன. இவை 'ஐம்பாலறியும் பண்பு தொகுமொழி[1]' (எழு - சஅ) அன்மை உணர்க. (சு)

நீ என்னும் ஈகார ஈற்றுப் பெயர்க்கு னகர ஒற்று

கஎக. நீயென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்ரு கும்மே.

இஃது ஈகார ஈறு இன்னவாறு புணருமென்கின்றது.

இ - ள்: நீ என் ஒரு பெயர் நெடு முதல் குறுகும் — நீ யென்னும் ஒரு பெயர் தன்மேல் நின்ற நெடியதாகிய ஈகாரங் குறுகி இகரமாம், ஆவயின் னகரம் ஒற்ருகும் — அவ்விடத்து வரும் னகரம் ஒற்ருய் நிற்கும்; எ - று.

எ - டு: நின்னே நின்னெடு நினக்கு எனச் செய்கை யறிந்து ஒட்டுக நினக்கு என்பதற்கு 'ஆறனுருபினு நான்கனுருபினும்' (எழு - ககக) 'வல்லெழுத்து முதலிய' (எழு - ககச) என்பன கொணர்ந்து முடிக்க. நினதென் பதற்கு 'ஆறனுருபி னகரக் கிளவி' (எழு - ககஞ) என்பதனுன் முடிக்க. நின்னென்பது வேறொரு பெயரோ எனக் கருதுதலே விலக்குதற்கு ஒரு பெயரென்றர். பெயர் குறுகு மென்னுது முதல் குறுகு மென்றது அப்பெயரின் எழுத்தினுள்ளது குறுக்க மென்றற்கு. நெடுமுத லெனவே நகரங் குறுகுதலே விலக்கிற்று. உயிர்மெய் யொற்றுமைபற்றி நெடியது முதலாயிற்று. 'உடைமையு மின்மையு மொடுவயி னெக்கும்' (எழு - கஙஉ) என்றதனே நோக்கி ஒடுவிடத்துச் சாரியை பெற்றே வந்த அதிகாரத்தை மாற்றுதற்குச் சாரியைப் பேற்றிடை எழுத்துப்பேறு கூறினர். (எ)

ஓகார ஈற்றுக்கு ஒன் சாரியை

கஅo. ஓகார இறுதிக் கொன்னே சாரியை.

இஃது ஓகார ஈறு இன்னவாறு புணரு மென்கின்றது.

இ - ள்; ஓகார இறுதிக்கு ஒன்னே சாரியை — ஓகார ஈற்றிற்கு இடை வருஞ் சாரியை ஒன் சாரியை; எ - று.

கோவனே கோவெனெடு என ஒட்டுக. ஒன்னே யென்ற ஏகாரத்தாற் பெரும்பான்மையாக வருஞ் சாரியை ஒன்னே, சிறுபான்மை இன் சாரியை

---

1 'ஐம்பாலறியும் பண்பு தொகுமொழி' — ''கருமபசாப்பபான் கருமபாபபனி கரும் பார்ப்பா கருங்குதிரை கருங்குதிரைகள என வரும் இவற்றுட் கரியனுகிய பரார்ப் பான் கரியளாகிய பாரப்பனி கரியராகிய பாரபபா கரியதாகிய குதிரை கரியன வாகிய குதிரைகள் என ஐமபாலினையும் உணாதலும் பணபுகொள் பெயா தொகுக வாறு காணக'' (நச. - உரை.)

வரு மென்று கொள்க. 'ஒன்ருக நின்ற கோவினே யடர்க்கவந்த' எனவும், கோவினே கோவிஞெடு சோவினே சோவிஞெடு ஓவினே ஓவிஞெடு எனவும் வரும். (அ)

ஓவென்பது மதகுநீர் தாங்கும் பலகை.

அகர ஆகார ஈற்றுப் பெயர்க்கு அத்துச் சாரியை

கஅக. அஆ என்னும் மரப்பெயர்க் கிளவிக்
கத்தொடுஞ் சிவணும் ஏழ னுருபே.

இஃது அகர ஆகார ஈற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: அஆ என்னும மரப்பெயர்க் கிளவிக்கு — அஆவென்று சொல்லப்படும் மரத்தை உணர்த்துகின்ற பெயராகிய சொல்லிற்கு, ஏழனுருபு அத்தொடுஞ் சிவணும் — ஏழாமுருபு இன்னேடன்றி அத்தோடும் பொருந்தும்; எ - று.

எ - டு: விளவத்துக்கண் பலாவத்துக்கண் என வரும்.

'வல்லெழுத்து முதலிய' (எழு - ககச) என்பதனுல் வல்லெழுத்துக் கொடுத்து 'தெற்றென்றற்றே' (எழு - ஙஙஙு) என்பதனுல் 'அத்தினகர மகரமுனே' (எழு - கஉடு) க் கெடாமைச் செய்கை செய்து முடிக்க. (கூ)

உ. மெய்யீறுகள்

ஞ, ந, மெய் ஈற்றுக்கு இன் சாரியை

கஅஉ. ஞநஎன் புள்ளிக் கின்னே சாரியை.

இது புள்ளியீற்றுள் ஞகார ஈறும் நகார ஈறும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: ஞந என் புள்ளிக்கு இன்னே சாரியை — ஞநவென்று சொல்லப்படுகின்ற புள்ளியீறுகட்கு வருஞ் சாரியை இன் சாரியை; எ - று.

எ - டு: உரிஞினே உரிஞிஞெடு பொருஞினே பொருஞிஞெடு என ஓட்டுக. (கo)

வகர ஈற்றுச் சுட்டுக்கு வற்றுச் சாரியை

கஅங. சுட்டுமுதல் வகரம் ஐயும் மெய்யுங்
கெட்ட இறுதி யியல்திரி பின்றே.

இது நான்கு மொழிக்கு ஈறும் வகர ஈற்றுட் சுட்டுமுதல் வகர ஈற்றிற்கு முடிபு கூறுகின்றது.

இ - ள்: சுட்டு முதல் வகரம் — அவ் இவ் உவ் என்னுஞ் சுட்டெழுத்தினே முதலாகவுடைய வகர ஈற்றுச் சொல், ஐயும் மெய்யுங் கெட்ட இறுதியியல் திரிபின்று — ஐகாரமும் ஐகாரத்தான்

ஊரப்பட்ட மெய்யுங் கெட்டு வற்றுப் பெற்று முடிந்த யாவை (எழு - களஅ) என்னும் ஐகார ஈற்றுச் சொல்லியல்பில் திரிபின்றி வற்றுப் பெற்று முடியும்; எ - று.

எ - டு: அவற்றை அவற்ரொடு, இவற்றை இவற்ரொடு, உவற்றை உவற்ரொடு என ஒட்டுக. (கக)

ஏனை வகர ஈற்றுக்கு இன் சாரியை

கஅசு. ஏனை வகரம் இன்னெடு சிவணும்.

இஃது எய்தாத தெய்துவித்தது; பெயர்க்கே யன்றி உரிச்சொல் வகரத்திற்கு முடிபு கூறுதலின்.

இ - ள்: ஏனை வகரம் இன்னெடு சிவணும் — ஒழிந்த உரிச்சொல் வகரம் இன்சாரியையோடு பொருந்தி முடியும்; எ - று.

தெவ்வினை தெவ்விஞ்ஞெடு என ஒட்டுக. இஃது உரிச்சொல்லாயினும் படுத்தலோசையாற் பெயராயிற்று. (கஉ)

மகர ஈற்றுக்கு அத்துச் சாரியை

கஅடு. மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை.

இது மகர ஈறு புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: மஃகான் புள்ளிமுன் அத்தே சாரியை — மகரமாகிய புள்ளியீற்றுச் சொன்முன் வருஞ் சாரியை அத்துச் சாரியை; எ - று.

எ - டு: மரத்தை மரத்தொடு நுகத்தை நுகத்தொடு என ஒட்டுக. 'அத்தேவற்றே' (எழு - கஙக) 'அத்தினகரம்' (எழு - கஉஙி) என்பனவற்றுள் முடிக்க. (கங)

சில மகர ஈறு இன் சாரியை பெறுதல்

கஅசு. இன்னிடை வரூஉம் மொழியுமா ருளவே.

இது மகர ஈற்றிற் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருகின்றது.

இ - ள்: இன்னிடை வரூஉம் மொழியுமாருள — மகர ஈற்றுச் சொற்களுள் அத்தே யன்றி இன்சாரியை இடையே வந்து முடியுஞ் சொற்களும் உள; எ - று.

மார் அசை.

எ - டு: உருமினை உருமிஞ்ஞெடு, திருமினை திருமிஞ்ஞெடு என ஒட்டுக.

'நும்' என்னும் மகர ஈற்றுப் பெயர் சாரியை பெருமை

கஅள. நும்மென் இறுதி இயற்கை யாகும்.

இது மகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள்: நும்மென் இறுதி இயற்கை யாகும் — நும்மென்னும் மகர ஈறு மேற்கூறிய அத்தும் இன்னும் பெறுது இயல்பாக முடியும்; எ - று.

எ - டு: நும்மை, நும்மொடு, நுமக்கு, நும்மின், நு'மது, நுங்கண் என வரும்.

நுமக்கு நுமது என்பனவற்றிற்கு 'ஆறனுருபினு நான்கனுருபினும்' (எழு - கசுக) 'நும்மெனிறுதியு மஃறிலை' (எழு - கசுஉ) 'வல்லெழுத்து முதலிய' (எழு - ககச) 'ஆறனுருபி னகரக்கிளவி' (எழு - ககஞ) என்பன கொணர்ந்து முடிக்க.

நுங்கணென்பதற்கு மேலைச்சூத்திரத்து 'மெய்' என்றதனான்[1] மகர வொற்றுக் கெடுத்து 'வல்லெழுத்து முதலிய' என்பதனான் மெல்லொற்றுக் கொடுக்க. இயற்கை யென்றுர் சாரியை பெறுமை கருதி. (கஞ)

'தாம்' 'நாம்' 'யாம்' என்னும் மகர ஈறுகளும் அன்ன

கூஅஅ. தாம்நாம் என்னும் மகர இறுதியும்
யாமென் இறுதியும் அதனோ ரன்ன
ஆஎவ வாகும் யாமென் இறுதி
ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும்
ஏனை யிரண்டும் நெடுமுதல் குறுகும்.

இது மகர ஈற்றின் முற்கூறிய முடிபு ஒவ்வாதனவற்றிற்கு முடிபு கூறுகின்றது.

இ - ள்: தாம் நாம் என்னும் மகர இறுதியும் யாமென் இறுதியும் அதனோரன்ன — தாம் நாம் என்று கூறப்படும் மகர ஈறும் யா மென்னும் மகர ஈறும் நும் மென்னும் மகர ஈறு போல அத்தும் இன்னும் பெறுது முடிதலையுடைய, யாமென் இறுதி ஆ எ ஆகும் — யா மென்னும் மகர ஈற்றுச் சொல்லில் ஆகாரம் எகார மாம், ஆவயின் யகரமெய் கெடுதல் வேண்டும் — அவ்விடத்து நின்ற யகரமாகிய மெய் கெடுதலே விரும்பும் ஆசிரியன், ஏனை இரண்டும் நெடுமுதல் குறுகும் — ஒழிந்த தாம் நாம் என்னும் இரண்டும் நெடியவாகிய முதல் குறுகித் தம் நம் என நிற்கும்; எ - று.

எ - டு: தம்மை தம்மொடு நம்மை நம்மொடு எம்மை எம்மொடு என ஆறு உருபோடும் ஒட்டுக. ஆறனுருபிற்கும் நான்கனுருபிற்கும் கருவி யறிந்து முடிக்க.

---

1 'மேலைச சூத்திரம் என்றது வரும் நூறபாவை, இங்ஙனம் வரும் நூறபாவினன்று முன்னை நூறபாவிறகு இலேசு கொள்வது அத்துணைச் சிறந்ததனறு.

மெய் யென்றதனுற் பிறவயின் மெய்யுங் கெடுக்க. தங்கண் நங்கண் எங் கண் என ஏழனுருபின்கண் மகரங் கெடுத்து 'வல்லெழுத்து முதலிய' (எழு - ககச) என்பதனுன் மெல்லெழுத்துக் கொடுக்க. (கசு)

'எல்லாம்' என்னும் மகர ஈற்றிற்கு வற்றும் உம்மும்

கூஅகூ. எல்லா மென்னும் இறுதி முன்னர்
வற்றென் சாரியை முற்றத் தோன்றும்
உம்மை நிலையும் இறுதி யான.

இது மகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக் கின்றது.

இ - ள் : எல்லா மென்னும் இறுதி முன்னர் வற்றென் சாரியை முற்றத் தோன்றும் — எல்லா மென்னும் மகர ஈற்றுச் சொன் முன்னர் அத்தும் இன்னும் அன்றி வற்றென்னுஞ் சாரியை முடி யத் தோன்றி முடியும், உம்மை நிலையும் இறுதியான — ஆண்டு உம்மென்னுஞ் சாரியை இறுதிக்கண் நிலைபெறும் ; எ - று.

மகரம் வற்றின்மிசை யொற்றெனக் கெடுக்க.

எல்லாவற்றையும் எல்லாவற்றினும் எல்லாவற்றுக்கண்ணும் என வரும். முற்ற வென்றதனுன் ஏனை முற்றுகரத்திற்கும்[1] உம்மின் உகரங் கெடுத்துக் கொள்க. எல்லாவற்றொடும் எல்லாவற்றுக்கும் எல்லாவற்றதும் என வரும். முற்றுகரமாதலின் எறி முடியா. (கஎ)

உயர்திணையில் அது 'நம்' சாரியை பெறுதல்

கூஉ0. உயர்திணை யாயின் நம்மிடை வருமே.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள் : உயர்திணையாயின் — எல்லா மென நின்ற மகர ஈற்று விரவுப் பெயர் உயர்திணைப் பெயரா மெனின், நம் இடை வரும் — நம் மென்னுஞ் சாரியை இடை நின்று புணரும் ; எ - று.

மகர ஈற்றினை மேல் வற்றின்மிசை யொற்றெனக் கெடுத்த அதிகாரத் தாற் கெடுக்க. எல்லா நம்மையும் எல்லா நம்மினும் எல்லா நங்களும் என உகரம் பெற்றும் எல்லா நம்மொடும் எல்லா நமக்கும் எல்லா நமதும் என உக ரங் கெட்டும் மகரம் நிற்கும். இவற்றிற்கு எல்லாரையும் எல்லாரொடும் என் பது பொருளாக ஒட்டுக.[2] இதற்கு நம்முவகுத்தலே வேறுபாடு. ஈறுகு புள்ளி அகரமொடு நிற்றல் (எழு - ககசுக) நான்காவதற்கும் ஆறுவதற்குங் கொள்க. (கஅ)

1 இங்கு முற்றுகரம் என்றது ஒடு. கு. அது என்னும் உருபுகளை.

2 எல்லாம் எனபதில் 'ஆம்' ஈறு தனமைப பனமை யாதலாலும் அது பெற்றுவரும் 'நம்' சாரியை தனமை யிடத்திறகுரிய தாதலாலும். அடுத்த நூறபாவில எல லாரும எலலீரும என னும படாக்கை முனனிலைப பெயாகள் முறையே தம நும் என்னும் சாரியை பெறுமென்று கூறியிருபபதாலும், எலலா நமமையும எல்லா நமமொடும் எனபவறறிறகு நமமெலலாரையும் நம்மெலலாரோடும என்று தன் மைப பொருள் கொள்ளாது எலலாரையும் எலலாரொடும என்று படாக்கைப் பொருள் கொள்வது பொருநதாது.

'எல்லாரும்' 'எல்லீரும்' என்னும் மகர ஈறுகளின் முடிபு

ககக. எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும்
எல்லீரு மென்னும் முன்னிலை யிறுதியும்
ஒற்றும் உகரமுங் கெடுமென மொழிப
நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி
உம்மை நிலையும் இறுதி யான
தம்மிடை வரூஉம் படர்க்கை மேன
நும்மிடை வரூஉம் முன்னிலை மொழிக்கே.

இது மகர ஈற்று உயர்திணைப் பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

இ - ள் : எல்லாரு மென்னும் படர்க்கை யிறுதியும் — எல்லாரு மென்னும் மகர ஈற்று உயர்திணைப் படர்க்கைப் பெயரும், எல்லீரு மென்னும் முன்னிலை யிறுதியும் — எல்லீரு மென்னும் மகர ஈற்று உயர்திணை முன்னிலைப் பெயரும், ஒற்றும் உகரமுங் கெடுமென மொழிப — மகர வொற்றும அதன்முன் னின்ற உகரமுங் கெட்டு முடியு மென்று சொல்லுவர் புலவர், ரகரப்புள்ளி நிற்றல் வேண் டும் — அவ் வுகரம் ஏறி நின்ற ரகர ஒற்றுக் கெடாது நிற்றலை விரும்பும் ஆசிரியன், இறுதியான உம்மை நிலையும் — அவ்விரு மொழி யிறுதிக்கண்ணும் உம்மென்னுஞ் சாரியை நிலைபெறும், படர்க்கை மேன தம் இடை வரூஉம் — படர்க்கைச் சொல்லிடத் துத் தம்முச்சாரியை இடைவரும், முன்னிலை மொழிக்கு நும்இடை வரூஉம் — முன்னிலைச் சொற்கு நும்முச்சாரியை இடை வரும்; எ - று.

எ - டு : எல்லார்தம்மையும் எல்லார்தம்மினும் எல்லார்தங்கணும் என உகரம் பெற்றும், எல்லார்தம்மொடும் எல்லார்தமக்கும் எல்லார்தமதும் என உகரங் கெட்டும், மகரம் நிற்கும். எல்லீர்நும்மையும் எல்லீர்நும்மினும் எல் லீர்நுங்கணும் என உகரம் பெற்றும், எல்லீர்நும்மொடும் எல்லீர்நுமக்கும் எல்லீர்நுமதும் என உகரங் கெட்டும், மகரம் நிற்கும்.

முன்னர் 'மெய்' (எழு - கஅ) என்ற இலேசாற் கொண்ட மகரக்கேடு இவற்றிற்கும் மேல்வருவனவற்றிற்குங் கொள்க.

படர்க்கைப் பெயர் முற்கூறிய வதனுனே ரகர ஈற்றுப் படர்க்கைப் பெய ரும் முன்னிலைப் பெயரும் மகர ஈற்றுத் தன்மைப் பெயரும் தம் நும் நம் என் னுஞ் சாரியை இடையே பெற்று இறுதி உம்முச்சாரியையும் பெற்று முடிவன கொள்க. கரியார்தம்மையும் சான்றோர்தம்மையும் எனவும், கரியீர்நும்மை யும் சான்றீர்நும்மையும் எனவும், கரியேநம்மையும் இருவேநம்மையும் என வும் எல்லாவுருபொடுஞ் செய்கை யறிந்து ஓட்டுக. உகரமும் ஒற்றும் என்னுத னுனே இக்காட்டியவற்றிற்கெல்லாம் மூன்று உருபின்கண்ணும் உம்மின் உக ரங் கெடுதல் கொள்க. 'நிற்றல் வேண்டும் ரகரப் புள்ளி' என்றதனுனே தம் முப்பெருமை வருமவையுங் கொள்க. 'எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை' (குறள் - நிஅஉ) என வரும். (ககக)

'தான்' 'யான்' என்னும் னகர ஈற்றுப் பெயர்கள் சாரியை பெறுமை

ககூஉ. தான்யான் என்னும் ஆயீ ரிறுதியும்
மேல்முப் பெயரொடும் வேறுபா டிலவே.

இது னகர ஈற்றுட் சிலவற்றிற்கு முடிபு கூறுகின்றது.

இ - ள்: தான் யான் என்னும் ஆயீ ரிறுதியும் — தான் யான் என்று சொல்லப்பட்ட அவ்விரண்டு னகர ஈறும், மேல் முப்பெய ரொடும் வேறுபாடு இலவே — மேல் மகர ஈற்றுட் கூறிய மூன்று பெயரோடும் வேறுபாடின்றித் தானென்பது குறுகியும் யானென் பதன்கண் ஆகாரம் எகரமாய் யகர வொற்றுக் கெட்டும் முடியும்; எ - று.

தன்னே என்னே என எல்லாவுருபோடும் ஒட்டுக. செய்கை யறிந்து ஒற் றிரட்டுதல் 'நெடியதன் முன்னர்' என்பதனுள் இலேசாற் கொள்க. (உ0)

'அழன்' 'புழன்' என்னும் னகர ஈறுகள் அத்தும் இன்னும் பெறுதல்

ககஙூ. அழனே புழனே ஆயிரு மொழிக்கும்
அத்தும் இன்னும் உறழத் தோன்றல்
ஒத்த தென்ப உணரு மோரே.

இதுவும் அது.

இ - ள்: அழனே புழனே ஆயிரு மொழிக்கும் — அழன் புழன் ஆகிய அவ்விரு மொழிக்கும், அத்தும் இன்னும் உறழத் தோன் றல் ஒத்த தென்ப — அத்துச் சாரியையும் இன்சாரியையும் மாறி வரத் தோன்றுதலைப் பொருந்திற் றென்பர், உணருமோர் — அறி வோர்; எ - று.

அழத்தை அழனினை, புழத்தை புழனினை எனச் செய்கையறிந்து எல்லா வுருபினேடும் ஒட்டுக. னகரத்தை அத்தின்மிசை ஒற்றென்று கெடுத்து 'அத்தினகரம்' (எழு - கஉசி) என்பதனுள் முடிக்க. தோன்ற லென்றதனுள் எவன் என நிறுத்தி வற்றுக்கொடுத்து வேண்டுஞ் செய்கை செய்து எவற்றை எவற்றேடு என முடிக்க. எல்லாவுருபினேடும் ஒட்டுக எற்றை[1] என் புழி நிலைமொழி வகரம் இதனுற் கெடுக்க, இனி ஒத்த தென்றதனுல் எகின் என நிறுத்தி அத்தும் இன்னுங் கொடுத்துச் செய்கை செய்து எகினத்தை எகினினை என ஒட்டுக. அத்து இனிது இசைத்தலின் முற்கூறினர். (உக)

ங. முற்றுகர குற்றுகர ஈறுகள்

'எழு' என்னும் எண்ணுப்பெயர்க்கு அன் சாரியை

ககூச. அன்னென் சாரியை ஏழ னிறுதி
முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப.

1 எறறை எனபது நிலைமொழி வகரங் கெட்டதாயின பனமையாம் (எவறறை); வகரம் முனனமே அறறதாயின ஒருமையாம். (எதை).

இஃது எழென்னும் எண்ணுப்பெயர் அன்சாரியை பெற்றுப் புணர்க என்கிறது.

இ - ள்: அன்னென்சாரியை ஏழனிறுதி முன்னர்த் தோன்றும் இயற்கைத் தென்ப — அன்னென்னுஞ் சாரியை ஏழென்னும் எண்ணுப்பெயரின் முன்னே தோன்றும் இயல்பினை யுடைத்தென்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

எ - டு: எழனை எழற்கு எழனின் என்க. எனை உருபுகளோடுஞ் செய்கையறிந்து ஒட்டுக. சாரியை முற்கூறியவதனைப் பிறவும் அன் பெறுவன கொள்க. பூழனை யாழனை என எனையவற்றோடும் ஒட்டுக. மேல் வருகின்ற இன் சாரியையைச் சேரவைத்தமையான் அவையெல்லாம் இன்சாரியை பெற்று வருதலுங் கொள்க. எழினை பூழினை யாழினை என வரும். (உஉ)

குற்றுகர ஈற்றிற்கு இன் சாரியை

கஙூடு. குற்றிய லுகரத் திறுதி முன்னர்
முற்றத் தோன்றும் இன்னென் சாரியை.

இது குற்றுகர ஈற்றிற்கு முடிபு கூறுகின்றது.

இ - ள்: குற்றியலுகரத்து இறுதி முன்னர் — குற்றியலுகரமாகிய ஈற்றின் முன்னர், முற்றத்தோன்றும் இன்னென் சாரியை — முடியத் தோன்றும் இன்னென்னுஞ் சாரியை; எ - று.

எ - டு: நாகினை நாகினெடு, வாகினை வாகினெடு என வரும். ஏனைய வற்றோடுஞ் செய்கை யறிந்து ஒட்டுக.

முற்ற என்றதனானே பிற சாரியை பெறுவனவுங் கொள்க. வழக்கத்தாற் பாட்டாராய்ந்தா னெனவுங் கரியதனை எனவும் வரும். (உங)

சில குற்றுகர ஈறுகள் இரட்டி முடிதல்

கஙூசு. நெட்டெழுத் திம்பர் ஒற்றுமிகத் தோன்றும்
அப்பால் மொழிக ளல்வழி யான.

இஃது அக்குற்றிய லுகரங்களுட் சிலவற்றிற்கு இனவொற்று மிகுமென்கின்றது.

இ - ள்: நெட்டெழுத்திம்பர் ஒற்று மிகத் தோன்றும் — நெட்டெழுத்தின் பின்னர் வருகின்ற குற்றுகரங்கட்கு இனவொற்று மிகத் தோன்றுதற்கும், அப்பால் மொழிகள் அல்வழி ஆன — ஒற்று மிகத் தோன்றுத கசதபக்கள் ஈறாகிய மொழிகள் அல்லாத இடத்து; எ - று.

எனவே, டகார றகாரங்கள் ஈறான சொல்லிடைத் தோன்றுமாயிற்று.

எ - டு: யாட்டை யாட்டொடு யாட்டுக்கு யாட்டின் யாட்டது யாட்டுக்கண் எனவும், யாற்றை சோற்றை எனவும் இனவொற்று மிக்கன. இவை அப்பால் மொழிகள் அல்லன.

நாகு காசு போது காபு என்றாற் போல்வன அப்பால் மொழிகள் ; அவை இனவொற்று மிகாவாயின. (உச)

இரட்டி முடிவன சாரியை பெருமை

ககூஎ. அவைதாம்,
இயற்கைய வாகுஞ் செயற்கைய என்ப.

இஃது எய்தியது விலக்கிற்று.

இ - ள்: அவைதாம் இயற்கைய ஆகுஞ் செயற்கைய என்ப — அங்ஙனம் இனவொற்று மிகுவனதாம் இன்சாரியை பெறுது இயல்பாக முடியுஞ் செய்தியையுடைய வென்று கூறுவர் ஆசிரியர் ; எ - று.

எ - டு: முன்னர்க் காட்டியனவே கொள்க.

செயற்கைய என்ற மிகையானே உயிர்த்தொடர்மொழிகளில் ஏற்பன வற்றிற்கும் ஒற்று மிகத் தோன்றுதல் கொள்க. முயிற்றை முயிற்றொடு முயிற்றுக்கு முயிற்றின் முயிற்றது முயிற்றுக்கண் என வரும். இன்னும் இதனானே யாட்டினை முயிற்றினை என விலக்கிய இன் பெறுதலுங் கொள்க.

குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர்க்கு அன் சாரியை

ககூஅ. எண்ணின் இறுதி அன்னெடு சிவணும்.

இது குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர் முடிபு கூறுகின்றது.

இ - ள்: எண்ணின் இறுதி அன்னெடு சிவணும் — எலாவெண்ணுப் பெயர்களினது குற்றுகர ஈறு அன்சாரியையோடு பொருந்தும் ; எ - று.

எ - டு: ஒன்றினை இரண்டினை என எல்லா எண்ணினையும் எல்லா உருபினோடுஞ் செய்கை யறிந்து ஒட்டுக. முன்னர்ச் செயற்கைய என்ற இலேசானே ஒன்றினை இரண்டினை என இன் சாரியையுங் கொடுக்க. (உசு)

ஒருபஃது முதலிய குற்றுகர ஈறுகள் ஆன் சாரியையும் பெறுதல்

ககூக. ஒன்றுமுத லாகப் பத்தூர்ந்து வருஉம்
எல்லா எண்ணுஞ் சொல்லுங் காலை
ஆனிடை வரினும் மான மில்லை
அஃதென் கிளவி ஆவயிற் கெடுமே
உய்தல் வேண்டும் பஃகான் மெய்யே.

இஃது ஒன்று முதலாக எட்டு இறுதியாக நின்ற குற்றுகர ஈற்று எண்ணுப்பெயர் எழினோடும் பத்தென்னும் எண்ணுப்பெயர் வந்து புணர்ந்து ஒன்றாய் நின்ற சொற்கள் சாரியை பெற்றுத் திரியுமாறு கூறுகின்றது.

இ - ள்: ஒன்று முதலாகப் பத்து ஊர்ந்து வருஉம் எல்லா எண்ணும் — ஒன்றுமுதலாக எட்டீறாக நின்ற எண்களின் மேலே

பத்தென்னும் எண்ணுப்பெயர் ஏறி வருகின்ற ஒருபது முதலான எல்லா எண்களோயும், சொல்லுங்காலை — முடிபு கூறுங்காலத்து, ஆன் இடைவரினும் மான மில்லை — மூற்கூறிய அன்சாரியையே யன்றி ஆன்சாரியை இடையே வரினுங் குற்றமில்லை, ஆவயின் அஃதென் கிளவி கெடும் — அவ் ஆன் பெற்றுழிப் பஃதென்னும் எண்ணிடத்து அஃதென்னுஞ் சொற் கெட்டுப்போம், பஃகான் மெய் உய்தல் வேண்டும் — அவ் அகரத்தான் ஊரப்பட்ட பகர மாகிய ஒற்றுக் கெடாது நிற்றலை ஆசிரியன் விரும்பும்; எ - று.

'நின்ற பத்த னெற்றுக்கெட வாய்தம்
வந்திடை நிலையும்' (எழு - சஉஎ)

என்பதனுன் ஆய்தம் பெற்றது.

எ - டு: ஒருபஃது இருபஃது முப்பஃது நாற்பஃது ஐம்பஃது அறுபஃது எண்பஃது எனக் குற்றியலுகரப் புணரியலுள் விதிக்குமாறே நிறுத்தி அஃதென்பதனைக் கெடுத்துப் பகரவொற்றை நிறுத்தி ஆன்சாரியை கொடுத்து ஒருபானை இருபானை என எல்லா எண்ணெடும் எல்லா உருபினையுஞ் செய்கை யறிந்து ஒட்டுக. உம்மை எதிர்மறையாதலின் ஒருபஃதனை இரு பஃதனை என எல்லாவற்றோடும் ஒட்டுக.

சொல்லுங்காலை என்றதனுற் பத்தூர் கிளவியே யன்றி 'ஒன்பான் முதனிலை' (எழு - சசுஉ) 'ஒன்பாற் கொற்றிடை மிகுமே'[1] (எழு - சஎடு) என்றாற்போல வருவனவற்றின் கண்ணும் பகரத்துள் அகரம் பிரித்து அஃதென்பது கெடுத்து ஆன் கொடுக்க. (உஎ)

'யாது' 'அஃது' என்னுங் குற்றுகர ஈறுகட்கு அன்சாரியை

உ00. யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் அன்னெடு சிவணும்
ஆய்தங் கெடுதல் ஆவயி னான.

இஃது எண்ணுப் பெயரல்லாத குற்றுகர ஈற்றுட் சிலவற்றிற்கு முடிபு கூறுகின்றது.

இ - ன்: யாது என் இறுதியும் — யாதென வருங் குற்றுகர ஈறும், சுட்டு முதலாகிய ஆய்த இறுதியும் — சுட்டெழுத்தினை முதலாகவுடைய ஆய்தத்தொடர்மொழிக் குற்றுகர ஈறும், அன்னெடு சிவணும் — அன்சாரியையோடு பொருந்தும், ஆவயின் ஆன ஆய்தங் கெடுதல் — அவ்விடத்து வந்த ஆய்தங் கெடும்; எ - று.

யாதனை யாதனெடு எனவும், அதனை அதனெடு, இதனை இதனெடு, உதனை உதனெடு எனவும் வரும். (உஅ)

1 ஒன்பான் என்று நிறுத்தி ஒன்பஃது என்னும் சொல்லும் பத்தூர் கிளவியே. இதன் விளக்கத்தை சசடு-ம் நூற்பா அடிக் குறிப்பிற் காண்க.

குற்றுகர ஈற்றுத் திசைப்பெயர் ஏழனுருபிற் சாரியை பெருமதலும் வருதல்

உ0க. ஏழ னுருபிற்குத் திசைப்பெயர் முன்னர்ச்
சாரியைக் கிளவி இயற்கையு மாகும்
ஆவயி னிறுதி மெய்யொடுங் கெடுமே.

இதுவுங் குற்றுகர ஈற்றுட் சிலவற்றிற்கு ஏழனுருபோடு முடிபு கூறுகின்றது.

இ - ள்: திசைப் பெயர் முன்னர் ஏழனுருபிற்கு — திசைப் பெயர்களின் முன்னர் வந்த கண்ணென்னும் உருபிற்கு முடிபு கூறுங்கால், சாரியைக்கிளவி இயற்கையு மாகும் — முன்கூறிய இன்சாரியையாகிய சொல் நின்று முடிதலேயன்றி நில்லாது இயல்பாயும் முடியும், ஆவயின் இறுதி மெய்யொடுங் கெடும் — அங்ஙனம் இயல்பாயவழித் திசைப்பெயரிறுதிக் குற்றுகரந் தன்னொன் ஊரப்பட்ட மெய்யொடுங் கெடும்; எ - று.

எ - டு: வடக்கின்கண் கிழக்கின்கண் தெற்கின்கண் மேற்கின்கண் எனவும், வடக்கண் கிழக்கண் தெற்கண் மேற்கண் எனவும் வரும். இன்பெறு வழி உகரங் கெடாதென்று உணர்க.

ஆவயினென்றதனாற் கீழ்சார் கீழ்புடை, மேல்சார் மேல்புடை, தென்சார் தென்புடை, வடசார் வடபுடை எனச் சாரியை யின்றிப் பல விகாரப்பட்டு நிற்பனவுங் கொள்க. இன்னும் இதனானே கீழைக்குளம் மேலைக்குளம், கீழைச்சேரி மேலைச்சேரி என ஐகாரம் பெறுதலுங் கொள்க. (உக)

ச. புறனடை

இவ்வியலின் புறனடை

உ0உ. புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும்
சொல்லிய அல்ல ஏனைய வெல்லாம்
தேருங் காலை உருபொடு சிவணிச்
சாரியை நிலையுங் கடப்பா டிலவே.

இஃது இவ்வோத்தினுள் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்றவற்றிற் கெல்லாம் இதுவே ஒத்தாயதோர் புறனடை கூறுகின்றது.

இ - ள்: சொல்லிய அல்ல புள்ளி யிறுதியும் உயிரிறு கிளவியும் — முற்கூறிய புள்ளியீறும் உயிரீறும் அல்லாத புள்ளியீற்றுச் சொல்லும் உயிரீற்றுச் சொல்லும், ஏனையவு மெல்லாம் — முற்கூறிய ஈறுகள் தம்முளொழிந்து நின்றனவு மெல்லாம், தேருங் காலை உருபொடு சிவணிச் சாரியை நிலையுங் கடப்பாடு இல — ஆராயுங் காலத்து உருபுகளோடு பொருந்திச் சாரியை நின்று முடியும் முறைமையை உடைய வல்ல, நின்றும் நில்லாதும் முடியும்; எ - று.

வினையவு மென உம்மை விரிக்க. கூறுத புள்ளியீறுகள் ஐந்து. அவை ணகர யகர ரகர லகர ளகரங்களாம். மண்ணினை மண்ணை, வேயினை வேயை, நாரினை நாரை, கல்லினை கல்லை, முள்ளினை முள்ளை என வரும். உயிரீற் றுள் ஒழிந்தது இகரம் ஒன்றுமே யாதலின், அதனைப் பிற்கூறினார். கிளியினை கிளியை என வரும்.

இனித் தான் யான் அழன் புழன் என்னும் னகர ஈற்றினும் எழென்னும் ழகர ஈற்றினும் ஒழிந்தன பொன்னினை பொன்னை தாழினை தாழை என்றாற் போல வருவன பிறவுமாம். இனி, ஈகார ஈற்றுள் ஒழிந்தன நீயினை நீயை ஈயினை ஈயை, வீயினை வீயை என்றாற் போல்வன பிறவுமாம். ஐகார ஈற்றுள் ஒழிந்தன தினையினை தினையை, கழையினை கழையை என்றாற் போல்வன பிறவுமாம். எனை ஈறுகளினும் வருவன உணர்ந்துகொள்க.

மேலே பெயரீற்றுச் செய்கையெல்லாந் தத்தம் ஈற்றின்கண் முடிப்பா ராதலின் அவை ஈண்டுக் கூறல் வேண்டா.

இனித் தேருங்காலை என்றதனானே உருபுகள் நிலைமொழியாக நின்று தம் பொருளோடு புணரும்வழி வேறுபடும் உருபீற்றுச் செய்கை யெல்லாம் ஈண்டு முடித்துக்கொள்க.

ஏ - டு : நம்பியைக் கொணர்ந்தான் மண்ணினைக் கொணர்ந்தான் கொற் றனைக் கொணர்ந்தான் என மூவகைப் பொருளோடுங்[1] கூடி நின்ற உருபிற்கு ஒற்றுக்கொடுக்க. மலையொடு பொருதது, மத்திகையாற் புடைத்தான், சாத் தற்குக் கொடுத்தான், ஊர்க்குச் சென்றான், காக்கையிற் கரிது, காக்கையது பலி, மடியுட் பழுக்காய், தடாவினுட் கொண்டான் என்னுந் தொடக்கத்தன உருபு காரணமாகப் பொருளோடு புணரும் வழி[2] இயல்பாயும் ஈறுதிரிந்தும் ஒற்றுமிக்கும் வந்தன கொள்க.

இனிக் கண் கால் புறம் முதலியன பெயராயும் உருபாயும் நிற்குமாதலின் அவை உருபாகக் கொள்ளும்வழி வேறுபடுஞ் செய்கைகளெல்லாம் இவ்விலே சான் முடிக்க. இஃது உருபியலாதலின் உருபொடு சிவணி என வேண்டா, அம் மிகையானே உருபு புணர்ச்சிக்கட் சென்ற சாரியைகளெல்லாம் ஈற்றுப்[3] பொருண்முடிபு உள்வழிப்[4] பொருட் புணர்ச்சிக்குங்[5] கொள்க. விளவின் கோடு கிளியின் கால் என எல்லா ஈற்றினுங் கொள்க. நம்பியை கொற்றனை என உயிரீறும் புள்ளியீறுஞ் சாரியை பெறுது இயல்பாய் முடிவனவும் ஈண்டே கொள்க. (கூ0)

உருபியல் முற்றிற்று

---

1 மூவகைப பொருளோடும் — உயர்திணைப் பெயர் அஃறிணைப பெயர் விரவுப் பெயர் என்ற மூவகைப் பெயரோடும்.

2 உருபு காரணமாகப் பொருளோடு புணரும் வழி — உருபோடு பொருள் தொடர் புள்ள சொற்களுடன் புணரு மிடத்து.

3 ஈற்று - பெயர்களின் ஈற்றில்.

4 பொருண்முடிபு உள்வழி — பொருளுள்ள சொற்களோடு சேர்ந்து முடியு மிடத்து.

5 பொருட்புணர்ச்சி - உருபொடு புணராது சொல்லொடு புணரும் புணர்ச்சி.

எ. உயிர்மயங்கியல்

[உயிரீறுகளின் புணர்ச்சி யிலக்கணம் உணர்த்துவது.]

க. அகர ஈறு

அல்வழியில் அகர ஈற்றுப் பெயர் புணருமாறு

உ0ங. அகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றின்
தத்தம் ஒத்த ஒற்றிடை மிகுமே.

என்பது சூத்திரம். உயிரீறு நின்று வன்கணத்தோடுஞ் சிறுபான்மை ஏனைக் கணங்களோடும் மயங்கிப் புணரும் இயல்பு உணர்த்தினமையின் இவ்வோத்து உயிர்மயங்கிய லென்னும் பெயர்த்தாயிற்று. மேற் பெயரோடு உருபு புணருமாறு கூறிப் பெயர்வருவழி உருபு தொக்குநின்ற பொருட்புணர்ச்சி கூறுகின்றமையின் உருபியலோடு இயைபுடைத்தாயிற்று.

இச் சூத்திரம் அகர ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் வன்கணத்தோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: அகர இறுதிப் பெயர்நிலை முன்னர் — அகரமாகிய இறுதியையுடைய பெயர்ச்சொன் முன்னர், வேற்றுமை யல்வழிக் கசதபத் தோன்றின் — வேற்றுமை யல்லாத விடத்துக் கசதப முதன் மொழிகள் வருமொழியாய்த் தோன்றுமாயின், தத்தம் ஒத்த ஒற்று இடைமிகும் — தத்தமக்குப் பொருந்திய அக் கசதபக்களாகிய ஒற்று இடைக்கண் மிகும்; எ - று.

எ - டு: விளக்குறிது நுணக்குறிது அதக்குறிது சிறிது தீது பெரிது என ஒட்டுக. இவை அஃறிணை இயற்பெயராகிய[1] எழுவாய் வினைக் குறிப்புப் பண்பாகிய பயனிலையோடு[2] முடிந்தன.

ஒத்த வென்றமையாது தத்தமொத்த என்றதனான் அகர ஈற்று உரிச் சொல் வல்லெழுத்து மிக்கும் மெல்லெழுத்து மிக்கும் முடியும் முடிபும் அகரந் தன்னை உணர நின்றவழி வன்கணத்தோடு மிக்கு முடியும் முடிபுங் கொள்க. தடக்கை தவக்கொண்டான் வயக்களிறு வயப்புலி குழக்கன்று எனவும், தடஞ் செவி கமஞ்சூல் எனவும், அக்குறிது சிறிது தீது பெரிது எனவும் வரும். இனி, இடைச்சொல் வல்லொற்றுப் பெற்று வருவன உளவேல் அவற்றையும் இவ்வியலிலுணர்ந்து முடித்துக் கொள்க. (க)

அகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும்

உ0ச. வினையெஞ்சு கிளவியும் உவமக் கிளவியும்[3]
எனவென் எச்சமும் சுட்டின் இறுதியும்
ஆங்க என்னும் உரையசைக் கிளவியும்
ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகுமே.

---

1 இயற்பெயர் - இயல்பாக இடப்பட்ட பெயர்.

2 வினைக்குறிப்புப் பண்பாகிய பயனிலை - பண்படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று.

3 போல என்னும உவமக்கிளவியும் குறிப்புவினையெச்சமாய் வினையெஞ்சு கிளவியுள் அடங்குமேனும், உவமைப்பொருள் தருதலபற்றித் தனித்துக் கூறப்பட்டது.

இஃது அகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: வினையெஞ்சு கிளவியும் — வினையை ஒழிபாகவுடைய அகர ஈற்று வினைச்சொல்லும், உவமக் கிளவியும் — உவமவுருபாய் நின்ற அகர ஈற்று இடைச் சொல்லும், எனவென் எச்சமும் — என வென்னும் வாய்பாட்டால் நின்ற அகர ஈற்று இடைச் சொல்லும், சுட்டின் இறுதியும் — சுட்டாகிய அகர ஈற்று இடைச் சொல்லும், ஆங்க என்னும் உரையசைக் கிளவியும் — ஆங்க வென்னும் அகர ஈற்று உரையசை யிடைச் சொல்லும், ஞாங்கர்க் கிளந்த வல்லெழுத்து மிகும் — முன்னர்க் கூறிய வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: உண தாவ சாவ என நிறுத்திக் கொண்டான் சென்றான் தந்தான் போயினன் என வல்லெழுத்துக் கொடுத்து முடிக்க. இவ் வினையெச்சம் ஒழிந்தன எல்லாம் இடைச்சொல் லென்று உணர்க. புலி போலக் கொன்றான் சென்றான் தந்தான் போயினன் எனவும், கொள்ளெனக் கொண்டான் சென்றான் தந்தான் போயினன் எனவும், அக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும், ஆங்கக் கொண்டான் சென்றான் தந்தான் போயினன் 'ஆங்கக் குயிலு மயிலுங் காட்டிக் கேசவனை விடுத்துப் போகியோளே' எனவும் வரும். உவமம் வினையெச்ச வினைக்குறிப்பேனும் ஒன்றனோடு பொருவப் படுதல் நோக்கி உவமவியலின்கண் ஆசிரியர் வேறுபடுத்திக் கூறினர். எனவென்னும் எச்சமும் இருசொல்லையும்[1] இயைவிக்கின்ற நிலைமையான் இடைச் சொல்லோத்தினுள் வேறோதினர். ஆங்க என்பது ஏழனுருபின் பொருள்பட வந்ததல்லாமை 'ஆங்க வென்னு முரையசை' என்றதனானும் 'ஆங்கவுரையசை' என்னும் இடையியற் சூத்திரத்தானும் உணர்க. இவை இயல்பு கணத்துக்கண் முடியும் முடிபு 'ஞநமயவ' (எழு - கசச) என்புழிக் கூறியதேயாம். அவை தாவ புலிபோல கொள்ளென ஆங்க என நிறுத்தி ஞநமயவ முதலிய மொழி ஏற்பன கொணர்ந்து புணர்த்தி இயல்பாமாறு ஒட்டிக் கொள்க. சுட்டு மேற் கூறுப. (உ)

சுட்டின் முன் ஞநம மெய்

உ0ரு. சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்
ஒட்டிய ஒற்றிடை மிகுதல் வேண்டும்.

இது 'ஞநமயவ' (எழு - கசச) என்னுஞ் சூத்திரத்தான் மென்கணம் இயல்பாகும் என முற்கூறியதனை விலக்கி மிக்கு முடிக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள்: சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின் — அகரச் சுட்டின் முன்னர் ஞநமக்கள் முதலாகிய மொழிவரின், ஒட்டிய ஒற்று இடை மிகுதல் வேண்டும் — தத்தமக்குப் பொருந்தின ஒற்று இடை மிகுதலே விரும்பும் ஆசிரியன்; எ - று.

1 இருசொல் - எச்சப்பகுதியும் முற்றும, அல்லது முன்னும் பின்னும் வருஞ் சொற்கள், எ - டு: தொள்ளெனக் கொண்டான், காற்றெனச் சென்றான்.

அஞ்ஞாண் அந்நூல் அம்மணி என வரும்.

ஒட்டிய வென்றதனுன் அஞ்ஞெளிந்தது அந்நன்று அம்மாண்டது என அகரந் தன்னே யுணர நின்றவழியும் மிகுதல் கொள்க. (கூ)

சுட்டின் முன் ய வ மெய்

உ0கூ. யவமுன் வரினே வகரம் ஒற்றும்.

இதுவும் அது.

இ - ள்: யவ முன்வரின் — யகர வகர முதன்மொழி அகரச் சுட்டின் முன்னே வரின், வகரம் ஒற்றும் — இடைக்கண் வகரம் ஒற்றும்; எ - று.

எ - டு: அவ்யாழ் அவ்வீணை என வரும்.

வருமொழி முற்கூறியவதனுல் அகரந் தன்னே யுணர நின்றவழியும் வகரம் மிகுதல் கொள்க. அவ்வீளந்தது என வரும். (சு)

சுட்டின் முன் உயிர்

உ0எ. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.

இதுவும் அது.

இ - ள்: உயிர் முன் வரினும் ஆயியல் திரியாது — உயிர்கள் அகரச்சுட்டின்முன் வரினும் முற்கூறிய வகரம் மிக்கு வரும் இயல்பிற் றிரியாது; எ - று.

அ என நின்ற சுட்டின் முன்னர் அடை என வருவித்து வகரம் ஒற்றித் தன்னுருவு இரட்டி உயிரேற்றி அவ்வடை அவ்வாடை அவ்வீலை அவ்வீயம் அவ்வுரல் அவ்வூர்தி அவ்வெழு அவ்வேணி அவ்வையம் அவ்வொழுக்கம் அவ்வோடை அவ்வெளவியம் என ஒட்டுக.

'நெடியதன் முன்னர்' (எழு - கசுo) என்பதனுள் 'நெறியியல்' என்ற தனுன் இரட்டுதல் கூறினமையின், அது நிலைமொழித் தொழிலென்பது பெறப்பட்டது. வருமொழி முற்கூறியவதனுன் அகரந் தன்னே உணரநின்ற வழியும் வகரம் மிகுதல் கொள்க. அவ்வழகிது என வரும். திரியா தென்ற தனுன் மேற் சுட்டு நீண்டவழி வகரக்கேடு கொள்க. (டு)

செய்யுளில் சுட்டு நீளுதல்

உ0அ. நீட வருதல் செய்யுளுள் ளுரித்தே.

இஃது எய்தியது விலக்கிச் செய்யுட்கு ஆவதோர் விதி கூறுகின்றது.

இ - ள்: நீட வருதல் செய்யுளுள் உரித்து — அகரச் சுட்டு நீட வருதல் செய்யுளிடத்து உரித்து; எ - று.

எ - டு: 'ஆயிருதிணையி[1] னிசைக்குமன சொல்லே' (சொல் - க) 'ஆயிருபாற்சொல்' (சொல் - ஈ) என வரும். இது வருமொழி வரையாது

1 ஆயிரு — இலக்கணப் போலி.

கூறலின் வன்கணம் ஒழிந்தகணம் எல்லாவற்றோடுஞ் சென்றது. அவற்றிற்கு உதாரணம் வந்தவழிக் காண்க. இந்நீட்சி இருமொழிப் புணர்ச்சிக்கண் வருதலின் 'நீட்டும்வழி நீட்டல்' ஆகாமை உணர்க. (சு)

'சாவ' என்னுஞ் சொல்

உ0கூ. சாவ என்னுஞ் செயவென் எச்சத்
கிறுதி வகரங் கெடுதலும் உரித்தே.

இது மேல் வினையெஞ்சு கிளவி என்ற எச்சத்திற்கு எய்தாத தெய்து வித்தது.

இ - ள்: சாவ என்னுஞ் செயவென் எச்சத்து இறுதிவகரம்— சாவ வென்று சொல்லப்படுஞ் செயவெ னெச்சத்து இறுதிக்கண் நின்ற அகரமும் அதனைற் பற்றப்பட்ட வகரமும், கெடுதலும் உரித்து — கெட்டு நிற்றலுங் கெடாது நிற்றலும் உரித்து; எ-று.

எ - டு: கோட்டிடைச் சாக்குத்தினுன் என வரும். சீறினுன் தகர்த்தான் புடைத்தான் என ஒட்டுக. கெடாதது முன்னர் முடித்தாம்.

இதனை 'வினையெஞ்சு கிளவி' (எழு - உ0ச) என்றதன்பின் வையாத தனுன் இயல்புகணத்தும் இந் நிலைமொழிக்கேடு கொள்க. சாஞான்றுன் நீண்டான் மாண்டான் யாத்தான் வீழ்த்தான் அடைந்தான் என ஒட்டுக. (எ)

இயல்பாகும் அகர ஈற்றுச் சொற்கள்

உக0. அன்ன வென்னும் உவமக் கிளவியும்
அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியுஞ்
செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியுஞ்
செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியுஞ்
செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும்
அம்ம என்னும் உரைப்பொருட் கிளவியும்
பலவற் றிறுதிப் பெயர்க்கொடை உளப்பட
அன்றி அனைத்தும் இயல்பென மொழிப.

இஃது அகர ஈற்றுள் ஒருசார் பெயர்க்கும் வினைக்கும் இடைக்கும் முன்னெய்தியது விலக்கியும் எய்தாத தெய்துவித்தும் இலக்கணங் கூறுகின்றது.

இ - ள்: அன்ன என்னும் உவமக் கிளவியும் — அன்ன என்று சொல்லப்படும் உவமவுருபாகிய அகர ஈற்று இடைச்சொல்லும், அண்மை சுட்டிய விளிநிலைக் கிளவியும் — அணியாரைக் கருதின விளியாகிய நிலைமையினையுடைய அகர ஈற்று உயர்திணைப் பெயர்ச்சொல்லும், செய்ம்மன என்னுந் தொழிலிறு சொல்லும்— செய்ம்மன என்று சொல்லப்படுந் தொழிற்சொற் பொருள் தருங்

கால் உம் ஈற்றுன் இறுஞ் சொல்லும், ஏவல் கண்ணிய வியங் கோட் கிளவியும் — ஒருவரான் ஏவற்றொழின்மை கருதிக் கூறப் பட்ட ஏவற் பொருண்மையை முற்ற முடித்தலே உணர்த்தும் அகர ஈற்று வினைச்சொல்லும், செய்த என்னும் பெயரெஞ்சு கிளவியும் — செய்த என்று சொல்லப்படும் பெயரெச்சமாகிய அகர ஈற்று வினைச்சொல்லும், செய்யிய என்னும் வினையெஞ்சு கிளவியும் — செய்யிய என்று சொல்லப்படுகின்ற வினையெச்சமாகிய அகர ஈற்று வினைச்சொல்லும், அம்ம என்னும் உரைப்பொருட் கிளவி யும் — அம்ம என்று சொல்லப்படும் எதிர்முக மாக்கிய அகர ஈற்று இடைச் சொல்லும், பலவற்று இறுதிப் பெயர்க்கொடை உளப்பட — பன்மைப் பொருளை உணர்த்தும் அகர ஈற்றுப் பெயர்கள் ஐந்தினையும் முற் கூறியவற்றோடு கூட்டிக் கொடுத்தல் உள்ளிட்டு, அன்றி அனைத்தும் இயல்பென மொழிப — அவ் வெட் டுச் சொல்லும் இயல்பாய் முடியு மென்று கூறுவர் ஆசிரியர் ; எ-று.

எ - டு : பொன்னன்ன குதிரை செங்காய் தகர் பன்றி என இது 'வினை யெஞ்சு கிளவி' (எழு - உ0ச) என்பதனுள் மிக்குமுடிதலே விலக்கிற்று. ஊர கேள் செல் தா போ என 'உயிர்முகிய வுயர்திணை' என்னுஞ் சூத்திரத் தான் இயல்பாய் முடிவது ஈண்டு னகரங் கெட்டு அகர ஈறுமே விளி யேற்று முடிந்தமையின் எய்தாத தெய்துவித்தது. உண்மனகுதிரை செங்காய் தகர் பன்றி என்பனவற்றிற்கு உண்ணுமென விரித்தும் யாணுண்மன நீயுண்மன அவணுண்மன என நிறுத்திக் கூழ் சோறு தேன் பால் என வருவித்தும் முடிக்க. இவற்றிற்கும் அவ்வாறே விரித்துக் கொள்க. இங்ஙனஞ் செய்யு மென்பதன் பொருட்டாகிய மனவெ னிறுதிச்சொல் அக்காலம் வழங்கிய தாத லின் ஆசிரியர் அதனையும் வேறுக எடுத்தோதினர். யானும் நின்னோடுடன் வருக அவன் செல்க அவள் செல்க அவர் செல்க என நிறுத்திக் காட்டின்கண் செறுவின்கண் தானைக்கண் போரின்கண் என வருவித்து முடிக்க. இவை ஏவற்பொருண்மையை முற்ற முடித்தன. ஏவல் கண்ணிய எனவே ஏவல் கண்ணுதனவும் உளவாயின. அவை நீ செல்க அது செல்க அவை செல்க என நிறுத்தி முற்கூறிய காடு முதலியவற்றை வருவித்து முடிக்க. இவை ஏவற் பொருண்மையை முற்ற முடியாதன.[1] அஃறிணை ஏவற் பொருண் மையை முற்ற முடியாமை வினையிலுள் வியங்கோட்கண்ணே பொருளியலுஞ் செய்யுளியலும்பற்றிக் கூறுதும். மனவும் வியங்கோளும் எய்தாததெய்து வித்தது. உண்ட குதிரை செங்காய் தகர் பன்றி இதுவும் அது. இதற்கு உரிய உண்ணுதகுதிரை யென்னும் எதிர்மறையும் நல்லகுதிரை யென்னுங் குறிப்புங் கொள்க. உண்ணிய கொண்டான் சென்றான் தந்தான் போயினான் இது முன்னர் வினையெச்சம் வல்லெழுத்துப் பெறுக என்றலின் எய்தியது விலக்கிற்று. அம்ம கொற்று சாத்தா தேவா பூதா என்பது இடைச்சொல்லா தலின் எய்தாத தெய்துவித்தது. இது கேளாய் கொற்றனே என எதிர்முக மாக்கியவாறு காண்க. பல்ல குதிரை பல குதிரை சில்ல குதிரை சில குதிரை

1 அஃறிணை யுயிர்கள் ஒருவனுடைய ஏவலை யுணராது செயய மாட்டாமையின் அவற்றை நோகாகி இடும ஏவலகளை ஏவல் கண்ணுதன எனமூர.

உள்ள குதிரை இல்ல குதிரை செங்காய் தகர் பன்றி என ஒட்டுக. இக்காலத்துப் பல்ல சில்ல என்பன வழங்கா. இதுவும் விளக்குறித்து என்ருற்போலப் பலக் குதிரை யென வல்லெழுத் தெய்தியதனே விலக்கிற்று. விளிநிலைக் கிளவியாகிய பெயர் முற்கூருததனுனே செய்யு மென்பதன் மறையாகிய செய்யாத வென்பதற்கும் இவ்வியல்பு முடிபு கொள்க. அது வாராத கொற்ற னென வரும். இவ்வியல்பு முடிபிற்குச் செய்ம்மன சிறத்தலின் வியங் கோட்கு முன் வைத்தார். எவல் கண்ணிய என்பதனுன் எவல் கண்ணுததும் உளதென்று கூறி 'மன்னிய பெருமநீ' (புறம் - கக) என உதாரணங் காட்டுக வெனின், அது பொருந்தாது ; கூறுகின்ருன் அவன் நிலேபெற்றிருத்தல் வேண்டுமென்றே கருதிக் கூறுதலின் அதுவும் எவல்கண்ணிற்றேயாம். எல்லாவற்றினுஞ் சிறந்த பலவற்றினுதி முற்கூறுக வெனின், அது வழக்கிற் குஞ் செய்யுட்கும் வேறுவேறு முடிபுடைத் தென்றற்குஞ் செய்யுண் முடிபு இவ்வியல்புபோற் சிறப்பின்றென்றற்கும் அகர ஈற்றுள் முடிபு கூறுது நின்ற முற்றுவினேயும் வினேக்குறிப்பும் இவ்வியல்பு முடிபு பெறு மென்றற்கும் பின் வைத்தார். உண்டன குதிரை இது முற்றுவினே. காியன குதிரை இது முற்றுவினேக் குறிப்பு. இஃது இயல்புகணத்து முடிபு 'ஞநமயவ' (எழு - கசச) என்புழிப் பொருந்துவன வெல்லாங் கொள்க. (அ)

'வாழிய' என்னுஞ் சொல்

உகக. வாழிய என்னுஞ் செயவென் கிளவி
இறுதி அகரங் கெடுதலும் உரித்தே.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

இ - ள்: வாழிய என்னுஞ் செய என் கிளவி — வாழுங்காலம் நெடுங்காலமாகுக என்னும் பொருளேத் தரும் வாழிய வென்று சொல்லப்படுஞ் செயவெனெச்சக் கிளவி, இறுதி யகரங் கெடுதலும் உரித்து — இறுதிக்கண் அகரமும் அதனுற் பற்றப்பட்ட யகர வொற்றுங் கெட்டு முடிதலும் உரித்து ; எ - று.

கெடுதலு மெனவே, கெடாது முடிதலே பெரும்பான்மை யென்றவாறு. வாழிகொற்ரு சாத்தா தேவா பூதா என வரும். வாழிய என்பதே பெரும்பான்மை. வாழிய யான் நீ அவன் அவள் அவர் அது அவை என இது மூன்றிடத்துஞ் சேறலின் 'உயிரீருகிய முன்னிலேக் கிளவியும்' (எழு - கடுக) என்புழி முன்னிலேயியல்பாம் என்றதன்கண் அடங்கா தாயிற்று. இது குறிப்புவியங்கோள்.

ஒன்றென முடித்தலான் இஃது இயல்புகணத்துங் கொள்க. வாழி ஞள்ளா என வரும். இவை வாழ்த்தப்படும் பொருள் வாழவேண்டு மென்னுங் கருத்தினுலுகக் கூறுதலின் எவல்கண்ணிற்றேயாம். அல்லாக்கால் 'வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே' (செய்யுளியல் - கo) என்பதற்கும் வாழ்த்தியலாகச் சான்ருேர் கூறிய செய்யுட்களுக்கும் பயனின்ரு மென்று உணர்க. (கூ)

'அம்ம' என்னுஞ் சொல்லுக்கு மேலும் ஒரு விதி

உகஉ. உரைப்பொருட் கிளவி நீட்டமும் வரையார்.

இஃது அம்ம வென்பதற்கு எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: உரைப்பொருட். கிளவி — எதிர்முக மாக்கும் பொருளையுடைய அம்மவென்னுஞ் சொல், நீட்டமும் வரையார் — அகரமாகி நிற்றலேயன்றி ஆகாரமாய் நீண்டு முடிதலையும் நீக்கார்; **எ - று.**

அம்மா கொற்ரு சாத்தா தேவா பூதா என வரும். உம்மையால் நீளாமையே பெரும்பான்மையாம். வரையாது கூறினமையின் நீட்சி இயல்பு கணத்துங் கொள்க. அம்மா ஞெள்ளா நாகா மாடா வடுகா ஆதா என ஓட்டுக.

'பல' என்னுஞ் சொல்

உகஙு. பலவற் றிறுதி நீடுமொழி உளவே
செய்யுள் கண்ணிய தொடர்மொழி யான.

இது முற்கூறிய பலவற்றிறுதிக்கண் சிலவற்றிற்குச் செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ - ள்: பலவற்று இறுதி நீடும் மொழி உள — பலவற்றை உணர்த்தும் ஐவகைச் சொல்லின் இறுதி அகரம் நீண்டு முடியும் மொழிகளுஞ் சில உள, செய்யுள் கண்ணிய தொடர்மொழி ஆன — யாண்டுள வெனிற் செய்யுளாதலைக் கருதிய ஒன்ரு டொன்று தொடர்ச்சிப்படுஞ் செய்யுண் முடிபுடைய மொழிகளின்கண்; **எ - று.**

உடைத்தென்னுது உள என்ற பன்மையான் வருமொழிக்கண் சில என்பது வந்து நீடு மென்று கொள்க. செய்யுளான என்னுது செய்யுள் கண்ணிய தொடர்மொழியான என்றதனால், பல என்பதன் இறுதி அகரம் நீண்டுழி நிலை மொழி அகரப்பேறும் வருமொழி ஞகரமாகிய மெல்லெழுத்துப் பேறும், வரு மொழியிறுதி நீண்டவழி அகரப்பேறும் மகரமாகிய மெல்லெழுத்துப்பேறுங் கொள்க.

எ - டு: 'பலாஅஞ் சிலாஅ மென்மனூர் புலவர்', இதன் சொன்னிலை பல சில என்னுஞ் செவ்வெண்.[1] (கக)

'பல' 'சில' என்னுஞ் சொற்கள்

உகச. தொடரல் இறுதி தம்முன் தாம்வரின்
லகரம் றகரவொற் ருகலு முரித்தே.

இது பல சில என்பனவற்றிற்கு இயல்பேயன்றித் திரிபும் உண்டென எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: தொடர் அல் இறுதி — தொடர்மொழி யல்லாத ஈரெழுத் தொருமொழியாகிய பல சில என்னும் அகர ஈற்றுச்

1 செவ்வெண் - எண்ணுமை தொக்கு வருவது.

சொல், தம்முன் தாம் வரின் — தம் முன்னே தாம் வருமாயின், லகரம் றகரவொற்று ஆகலும் உரித்து — தம் ஈற்றில் நின்ற லகர வொற்று றகரவொற்றுகத் திரிந்து முடிதலும் உரித்து; எ - று.

உம்மையாற் றிரியாமையும் உரித்தென்றார்.

எ - டு: பற்பல கொண்டார் சிற்சில வித்தி என வரும். அகர ஈற்றுச் சுட்டல்லாத குற்றெழுத்து ஒரெழுத் தொருமொழி யாகுவன இன்மையின் தொடரலிறுதி யெனவே ஈரெழுத் தொருமொழியே உணர்த்திற்று. தன்மு னென்னுது தம்முனென்ற பன்மையாற் பல சில என நின்ற இரண்டுந் தழு வப்பட்டன.

தம்முன்வரி னென்னுது தாமென்றதனாற் பலவின்முன் பல வருதலுஞ் சிலவின்முன் சில வருதலுங் கொள்க. லகரம் றகரவொற்று மென ஒற்றிற் குத் திரிபு கூறி அகரங்கெடுதல் கூறிற்றில ரெனின், அது வாராததனால் வந் தது முடித்த லென்னும் உத்தி[1] பெறவைத்த தென்று உணர்க. இதனை ஞாபக மென்பாரும் உளர். அருத்தாபத்தியால்[2] தம்முன் தாம் வரி னெனவே தம்முன் பிற வரின் லகரம் றகர வொற்றுகாது அகரங் கெடு மென்று கொள்ளப்படும்.

எ - டு: பல்கடல் சேனை தானை பறை எனவும், பல்யானை பல்வேள்வி எனவும், சில்காடு சேனை தானை பறை எனவும், சில்யானை சில்வேள்வி என வும் வரும். உரித்தென்றது அகர ஈற் றெருமை பற்றி. (கஉ)

அவற்றிற்கு, மேலும் ஒரு முடிபு

உகடு. வல்லெழுத் தியற்கை உறழத் தோன்றும்.

இது முற்கூறிய இரண்டற்கும் உள்ளதோர் முடிபு வேற்றுமை கூறு கின்றது.

இ - ள்: வல்லெழுத்து இயற்கை — முற்கூறிய பல சில வென் னும இரண்டற்கும் அகர ஈற்றுப் பொது விதியிற் கூறிய வல் லெழுத்து மிகும் இயல்பு உறழத் தோன்றும் — மிகுதலும் மிகா மையுமாய் உறழ்ந்துவரத் தோன்றும்; எ - று.

எ - டு: பலப்பல பலபல சிலச்சில சிலசில என வரும். ஈண்டுந் தம் முன் தாம் வருதல் கொள்க. இயற்கை யென்றதனான் அகரங் கெட லகரந் திரிந்துந் திரியாதும் உறழ்ந்தும் முடிதலுங் கொள்க. பற்பல பல்பல சிற்சில சில்சில என வரும். தோன்று மென்றதனான் அகரங் கெட லகரம் மெல் லெழுத்தும் ஆய்தமுமாகத் திரிந்து முடிதலுங் கொள்க. பன்மீன் வேட்டத்து பன்மலர் பஃறூலி பஃறுழிசை சின்னூல் சிஃறுழிசை என வரும். இது முன் னர்த் தோன்று மென்று எடுத்தோதிய சிறப்பு விதியால் அகரங் கெட நின்ற லகரவொற்றின் முடிபாகலின் தகரம் வருவழி ஆய்த மென்பதனான் முடியாது.

வேற்றுமையில் அகர ஈறு

உகஙூ. வேற்றுமைக் கண்ணும் அதனே ரற்றே.

---

1 வாராததனால வந்ததுமுடித்தல்-ஒரு பொருண்மைக்கு வேண்டும இலக்கணம் நிரம்ப வாராததோர் நூறபாவானே அப்பொருண்மைக்கு வேண்டும முடிபுகொள்ளச் செயதல.

2 அருத்தாபத்தி - ஒருபொருளுக்கு ஓர் இயலபு கூறின், அதன மறுதலையான பொருளுக்கு அவவியலபிலலை யென்று கொள்ளும முறைமை.

இஃது அகர ஈற்றிற்கு அல்வழிமுடிபு கூறி வன்கணத்தோடு வேற்றுமை தொக்கு நின்ற முடிபு கூறுகின்றது.

இ - ள்: வேற்றுமைக் கண்ணும் அதனோரற்று — அகர ஈற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும் முற்கூறிய அல்வழியோடு ஒரு தன்மைத்தாய்க் க ச த ப முதன் மொழி வந் துழித் தத்தம் ஒத்த வொற்று இடைமிக்கு முடியும்; எ - று.

எ - டு: இருவிளக் கொற்றன் சாத்தன் தேவன் பூதன் என வரும். இருவிளக் குறுமை சிறுமை தீமை பெருமை எனக் குணவேற்றுமைக்கண் ணுங் கொள்க. இருவிள வென்பது ஓலை; வேணாட்டகத்து ஓரூர்; கருவூரி னகத்து ஒரு சேரியு மென்ப. இருவிளவிற் கொற்றன் என விரிக்க. (கச)

மரப் பெயர்க்குப் பிறிது விதி

உகஎ. மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகுமே.

இஃது அகர ஈற்று மரப்பெயர்க்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ - ள்: மரப்பெயர்க் கிளவி மெல்லெழுத்து மிகும் — அகர ஈற்று மரப்பெயராய சொல் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண் மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: அதங்கோடு விளங்கோடு செதிள் தோல் பூ என வரும். இது 'கசதப முதலிய' (எழு - கசஙட) என்பதனுள் முடியும். (கஞ)

மக என்னும் பெயர்

உகஅ. மகப்பெயர்க் கிளவிக் கின்னே சாரியை.

இஃது அகர ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ - ள்: மகப்பெயர்க் கிளவிக்கு இன்னே சாரியை — அகர ஈற்று மக என்னும் பெயர்ச்சொல்லிற்கு வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் வருஞ் சாரியை இன்சாரியை; எ - று.

எ - டு: மகவின்கை செவி தலை புறம் என வரும். சாரியைப் பேறு வரையாது கூறியவழி நான்கு கணத்துக்கண்ணுஞ் செல்லு மென்பது ஆசி ரியர்க்குக் கருத்தாகலின் மகவின்ஞாண் நூல் மணி யாழ் வட்டு அடை என ஒட்டுக.

மேல் அவண் என்றதனுள் இன்சாரியை பெற்றுழி இயைபு வல் லெழுத்து வீழ்க்க. (கசு)

உகக. அத்தவண் வரினும் வரைநிலை இன்றே.

இஃது ஈற்று வல்லெழுத்தும் அத்தும் வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ - ள்: அவண் — மூற்கூறிய மகவிடத்து, அத்து வரினும், வரைநிலை இன்று — இன்னேயன்றி அத்துச் சாரியையும் ஈற்று வல்லெழுத்தும் வந்து முடியினும் நீக்கும் நிலைமையின்று; எ - று.

எ - டு: மகத்துக் கை செவி தலை புறம் என வரும்.

அவண் என்றதனால் மகப்பால்யாடு என வல்லெழுத்துப் பேறும், மக வின் கை என மேல் இன்சாரியை பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்வும், விளவின்கோடு என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்வுங் கொள்க. நிலை யென்றதனால் மகம் பால்யாடு என மெல்லெழுத்துப் பேறுங் கொள்க. (கஎ)

அகர ஈற்றுப் பன்மைச் சொற்கள்

உஉ0. பலவற் றிறுதி உருபியல் நிலையும்.

இஃது ஈற்று வல்லெழுத்தும் வற்றும் வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: பலவற்றிறுதி — பல்ல பல சில உள்ள இல்ல என்னும் பலவற்றை யுணர்த்தும் அகர ஈற்றுச் சொற்களின் இறுதி, உருபியல் நிலையும் — உருபியற்கண் வற்றுப்பெற்றுப் புணர்ந் தாற்போல உருபினது பொருட் புணர்ச்சிக் கண்ணும் வற்றுப் பெற்றுப் புணரும்; எ - று.

ஈற்று வல்லெழுத்து அதிகாரத்தாற் கொள்க.

எ - டு: பல்லவற்றுக்கோடு பலவற்றுக்கோடு சிலவற்றுக்கோடு உள்ள வற்றுக்கோடு இல்லவற்றுக்கோடு, செதிள் தோல் பூ என ஒட்டுக. உருபு விரித்துழி நிற்குமாறுபோ லன்றி அவ்வுருபு தொக்கு அதன் பொருள் நின்று புணருங்கால் வேறுபாடு உடைமையின் அவ் வேறுபாடுகள் ஈண்டு ஓதினார் இத்துணையு மென்று உணர்க. (கஅ)

உ. ஆகார ஈறு

அல்வழியில் ஆகார ஈற்றுப் பெயர்

உஉக. ஆகார இறுதி அகர இயற்றே.

இஃது ஆகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: ஆகார இறுதி அகர இயற்று — ஆகார ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் அகர ஈற்று அல்வழியது இயல்பிற்றாய் வல் லெழுத்து வந்துழித் தத்தம் ஒத்த ஒற்று இடைமிகும்; எ - று.

எ - டு: மூங்காக்கடிது தாராக்கடிது சிறிது நீது பெரிது என ஒட்டுக.

ஆகார ஈற்று வினை

உஉஉ. செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும்
அவ்வியல் திரியா தென்மனார் புலவர்.

இஃது ஆகார ஈற்று வினைச்சொன் முடிபு கூறுகின்றது.

இ - ள் : செய்யா என்னும் வினையெஞ்சு கிளவியும் — செய்யா வென்னும் வினை யெச்சமாகிய சொல்லும் உம்மையாற் பெய ரெச்ச மறையாகிய சொல்லும், அவ்வியல் திரியாது என்மனார் புலவர் — வல்லெழுத்து மிக்கு முடியும் அவ்வியல்பிற் றிரியா தென்று சொல்லுவார் புலவர் ; எ - று.

எ - டு : உண்ணுக் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வும், உண்ணுச் சொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும் வரும். (உ0)

உம்மைத் தொகை முடிபு

உஉக. உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகைமொழி
மெய்ம்மை யாக அகரம் மிகுமே.

இஃது ஆகார ஈற்று அல்வழிக்கண் உம்மைத் தொகை முடிபு கூறு கின்றது.

இ - ள் : உம்மை எஞ்சிய இருபெயர்த் தொகை மொழி — உம்மை தொக்கு நின்ற இரு பெயராகிய தொகைச் சொற்கள், மெய்ம்மையாக அகரம் மிகும் — மெய்யாக நிலைமொழி யீற்று அகரம் மிக்கு முடியும் ; எ - று.

எ - டு : உவாஅப்பதினான்கு இராஅப்பகல் என வரும். மெய்ம்மை யாக என்பதனான் வல்லெழுத்துக் கொடுக்க. இஃது எழுவாயும் பயனிலையு மன்றி உம்மைத் தொகைபாதலின் மாட்டேற்றான் வல்லெழுத்துப் பெறுதா யிற்று.[1]

உம்மை தொக்க என்றது எஞ்சிய என்ற வாய்பாட்டு வேற்றுமையான் அராஅப்பாம்பு எனப் பண்புத் தொகைக்கும் இராஅக்கொடிது என எழுவாய் முடிபிற்கும் இராஅக்காக்கை எனப் பெயரெச்ச மறைக்கும் அகரப் பேறு கொள்க. வருமொழி வரையாது கூறினமையின் இயல்பு கணத்துக் கண் ணும் அகரப்பேறு கொள்க. இறுஅவழுதுணங்காய் என வரும். இஃது உம்மைத் தொகை. அராஅக்குட்டி என்பது பண்புத் தொகையும்[2] வேற்று மைத் தொகையுமாம். உவாஅப்பட்டினி என்பது வேற்றுமைத் தொகை.

இயல்பாகும் ஆகார ஈற்றுச் சொற்கள்

உஉச. ஆவும் மாவும் விளிப்பெயர்க் கிளவியும்
யாவென் வினவும் பலவற் றிறுதியும்
ஏவல் குறித்த உரையசை மியாவுந்

1 மாட்டேறருள வலலெழுதது்ப பெருதாயிறறு — விளகருறிது என்று அகரவீறு புணர்வது போல மூங்காக கடிது என ஆகார ஈறு புணாதலின், 'ஆகார வீறுதி அகர வியறபேற 'எனறு மாட்டேறறிக கூறினார் ஆசிரியர். ஆனால, உவாஅப் பதி னைகு என்னும் உம்மைத தொகை மூஙகாககடிது எனபதைபபோல எழுவாயும் பயனிலையும் அனமையின, மாடடேறறுள லலலெழுதது்ப் பெருது வேறுவகையில வலலெழுத்துப பெற்றது்எனபது கருதது்.

2 அராஅகுட்டி எனபது அராவாகிய குட்டி எனறு பொருள்படின இருபெயரொட் டுப பணபுத தொகையாம.

தன்தொழில் உரைக்கும் வினுவின் கிளவியோ
டன்றி அகனத்தும் இயல்பென மொழிப.

இஃது எய்தியது விலக்கலும் எய்தாத தெய்துவித்தலும் உணர்த்து கின்றது.

இ - ள்: ஆவும் — ஆவென்னும் பெயரும், மாவும் — மாவென் னும் பெயரும், விளிப்பெயர்க் கிளவியும் — விளித்தலே யுடைய பெயராகிய உயர்திணைச் சொல்லும், யாவென் வினுவும் — யாவென்னும் வினுப்பெயரும், பலவற்று இறுதியும் — பன்மைப் பொருளே உணர்த்தும் ஆகார ஈற்றுப் பெயரெச்ச மறையாகிய முற்றுவினைச்சொல்லும், ஏவல் குறித்த உரையசை மியாவும் — முன்னிலே யேவல் வினையைக் கருதிவரும் எதிர்முகமாக்குஞ் சொல் லினைச் சேர்ந்த மியாவென்னும் ஆகார ஈற்று இடைச்சொல்லும், தன் தொழில் உரைக்கும் வினுவின் கிளவியொடு — தனது தொழி லினைச் சொல்லும் ஆகார ஈற்றுத் தன்மையாகிய வினைச் சொல் லோடு கூட, அன்றி யகனத்தும் — அவ் வெழு வகையாகிய சொல் லும், இயல்பென மொழிப — இயல்பாய் முடியுமென்று சொல் லுவர் புலவர்; எ - று.

எ - டு: ஆகுறிது மாகுறிது சிறிது நீது பெரிது குறிய சிறிய நீய பெரிய என ஒட்டுக. இஃது ஆகார ஈற்றுப் பெயராகலின் மிக்கு முடிவன மிகாவென எய்தியது விலக்கிற்று. ஊராகேள் செல் தா போ என இஃது இயல்பாமென்ற உயர்திணைப் படர்க்கைப் பெயர் திரிந்து முன்னிலையாய் விளி யேற்றலின் எய்தாத தெய்துவித்தது. யா குறிய சிறிய நீய பெரிய என இதுவும் பெயராகலின் எய்திய இயைபு வல்லெழுத்து விலக்கியதாம். உண்ணு குதிரைகள் செங்காய்கள் தகர்கள் பன்றிகள் என இஃது எய்தியது விலக்கிற்று, செய்யா வென்னுஞ் சூத்திரத்து உம்மையாற் பெற்ற வல்லெழுத்தினை விலக் கலின். கேண்மியா கொற்ற சாத்தா தேவா பூதா எனவும், உண்கா கொற்ற சாத்தா தேவா பூதா எனவும் இவ்விடைச் சொற்கள் முடியாமையின் எய்தாத தெய்துவித்ததுமாம். உண்கா என்பது யானுண்பேனே என்னும்பொரு ட்டு. இயல்பு கணத்துக் கண்ணுயின் 'ஞ ந ம ய வ' (எழு - கசச) என்பத னுன் முடிபெய்தும். (உஉ)

வேற்றுமையில் ஆகார ஈறு

உஉடு. வேற்றுமைக் கண்ணும் அதனே ரற்றே.

இஃது ஆகார ஈறு வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: வேற்றுமைக் கண்ணும் — ஆகார ஈற்றுப் பெயர் அல்வழிக்கண்ணே யன்றி வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக் கண் ணும், அதனேரற்று — அகர ஈற்று அல்வழியோடு ஒரு தன்

மைத்தாய் வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடியும்; எ - று.

எ - டு: தாரா மூங்கா வங்கா என நிறுத்திக் கால் செவி தலை புறம் என வருவித்து வல்லெழுத்துக் கொடுத்து ஒட்டுக. (உசு)

குறிற்கீழ் ஆகாரமும் தனி ஆகாரமும்

உஉசு. குறியதன் முன்னரும் ஒரெழுத்து மொழிக்கும்
அறியத் தோன்றும் அகரக் கிளவி.

இஃது அவ் வீற்றிற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது, அகரமும் வல்லெழுத்தும் பெறுதலின்.

இ - ள்: குறியதன் முன்னரும் — குற்றெழுத்தின் முன்னின்ற ஆகார ஈற்றிற்கும், ஒரெழுத்து மொழிக்கும் — ஒரெழுத் தொரு மொழியாகிய ஆகார ஈற்றிற்கும், அகரக்கிளவி அறியத் தோன்றும் — நிலைமொழிக்கண் அகரமாகிய எழுத்து விளங்கத் தோன்றும்; எ - று.

எ - டு: பலாஅக்கோடு செதிள் தோல் பூ எனவும், காஅக்குறை செய்கை தலை புறம் எனவும் வரும். ஒரெழுத் தொருமொழி அகரம் பெறுதல் சிறுபான்மை யென்றற்கு அதனைப் பிற்கூறினார். இது நிலைமொழிச் செய்கையாதலிற் பலாஅவிலை பலாஅநார் என இயல்பு கணத்துங் கொள்க. அறிய என்றதனான் அவ் வகரம் ஈரிடத்தும் பொருந்தினவழிக் கொள்க.

இன்னும் இதனானே அண்ணஅத்தேரி திட்டாஅத்துக்குளம் என அத்துக் கொடுத்தும், உவாஅத்து ஞான்று கொண்டான் என அத்தும் ஞான்றுங் கொடுத்தும், உவாஅத்தாற் கொண்டான் என அத்தும் ஆனுங் கொடுத்தும் இடாவினுட் கொண்டான் என இன்னும் எழனுருபுங் கொடுத்துஞ் செய்கை செய்து முடிக்க.

இன்னும் இதனானே மூங்காவின்கால் மூங்காவின்றலை என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி இயைபு வல்லெழுத்துக் கேடுங் கொள்க. (உச)

'இரா' என்னுஞ் சொல்

உஉஎ. இராவென் கிளவிக் ககரம் இல்லை.

இஃது ஆகார ஈற்றுப் பெயர்க்கு ஒருவழி எய்தியது விலக்குகின்றது.

இ - ள்: இராவென் கிளவிக்கு — இராவென்னும் ஆகார ஈற்றுச் சொல்லிற்கு, அகரம் இல்லை — முற்கூறிய அகரம் பெறுதலின்றி வல்லெழுத்துப்பெற்று முடியும்; எ - று.

எ - டு: இராக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வரும். இராஅக்காக்கை இராஅக்கூத்து எனப் பெயரெச்சமறைப்பொருள் தராது இராவிடத்துக் காக்கை இராவிடத்துக் கூத்து என வேற்றுமை கருதியவழி இராக்காக்கை இராக்கூத்து என அகரம் பெறுதென்று உணர்க.[1] (உரி)

1 இரா என்னும் சொல இராத என்று பொருள்பட்டு, வினையைக் குறிப்பின அகரம் பெறும்; இராவில் என்று பொருள்பட்டுக காலத்தைக் குறிபபின அகரம் பெறாது.

'நிலா' என்னுஞ் சொல்

உஉஅ. நிலாவென் கிளவி அத்தொடு சிவணும்.

இஃது அகரம் விலக்கி அதிகார வல்லெழுத்திலோடு அத்து வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: நிலா வென் கிளவி அத்தொடு சிவணும் — நிலா வென்னுஞ் சொல் அத்துச்சாரியையோடு பொருந்தி முடியும்; **எ - று.**

எ - டு: நிலாஅத்துக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வரும். நிலைமொழித் தொழில் நிலைமொழித் தொழிலை விலக்குமாதலின் அத்து வகுப்ப அகரம் வீழ்ந்தது[1]. இதற்கு ஏழனுருபு விரிக்க, நிலாஅக்கதிர் என்பது 'வேற்றுமைக் கண்ணும்' (எழு - உஉடு) என்பதனான் ஈற்று வல் லெழுத்துப் பெற்றது. நிலாஅ முற்ற மென்பது 'ஒட்டுதற்கொழுகிய வழக்கு' அன்மையின் அத்துப் பெறுதாயிற்று. ஈண்டு வருமொழி வரையாது கூறினமையின் நிலாஅத்து ஞான்றான் என இயல்பு கணத்துக் கண்ணும் ஏற்பன கொள்க. (உசு)

சில மரப்பெயர்கள்

உஉக. யாமரக் கிளவியும் பிடாவுந் தளாவும்
ஆமுப் பெயரும் மெல்லெழுத்து மிகுமே.

இது வருமொழி வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள்: யாமரக் கிளவியும் — யாவென்னும் மரத்தை உணர நின்ற சொல்லும், பிடாவும் — பிடாவென்னுஞ் சொல்லும், தளாவும் — தளாவென்னுஞ் சொல்லும், ஆம் முப்பெயரும் மெல் லெழுத்து மிகும் — ஆகிய மூன்று பெயரும் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்துமிக்கு முடியும்; **எ - று.**

எ - டு: யாஅங்கோடு பிடாஅங்கோடு தளாஅங்கோடு செதிள் தோல் பூ என வரும். வருமொழித் தொழிலாகிய மெல்லெழுத்து வகுப்பவே வல் லெழுத்து விலக்கிற்றும், இதற்கு விலக்காமையின் அகரம் பெற்றது. (உஎ)

அவற்றிற்கு மேலும் ஒரு முடிபு

உங.ஏ. வல்லெழுத்து மிகினும் மான மில்லை.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்தது, அகரத்தோடு மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்தும் பெறு மென்றலின்.

இ - ள்: வல்லெழுத்து மிகினும் மானம் இல்லை — முற் கூறிய மூன்று பெயர்க்கும் மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடியினுங் குற்றமில்லை; **எ - று.**

---

1 நிலைமொழித் தொழில் அத்துப பேறு. நிலை மொழித் தொழிலை விலக்கல். உச-ம் நூற்பாவில் விதித்த அகரத்தை விலக்கல.

எ - டு: யாஅக்கோடு பிடாஅக்கோடு தளாஅக்கோடு செதிள் தோல் பூ என வரும். மானமில்லை என்றதனால் இம் மூன்றற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. யாவின்கோடு பிடாவின்கோடு தளாவின்கோடு என வரும். சாரியை பெறவே அகரம் வீழ்ந்தது.

இன்னும் இதனானே யாஅத்துக்கோடு பிடாஅத்துக்கோடு தளாஅத் துக்கோடு என அத்துப் பெறுதலும் கொள்க, அகரமும் வல்லெழுத்தும் பெறுதலின்[1].

யாமரக் கிளவி யென்பதனைக் 'குறியதன் முன்னர்' (எழு - உஉசு) என் பதன்பின் வையாதவதனால் இராவிற் கொண்டான் நிலாவிற்கொண்டான் என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி இயைபு வல் லெழுத்து வீழ்க்க. (உஅ)

'மா' என்னும் மரப் பெயரும் 'ஆ' 'மா' என்னும் விலங்கின் பெயர்களும்

உஙக. மாமரக் கிளவியும் ஆவும் மாவும்
ஆமுப் பெயரும் அவற்றோ ரன்ன
அகரம் வல்லெழுத் தவையவண் நிலையா
னகரம் ஒற்றும் ஆவும் மாவும்.

இஃது எய்தியது விலக்கி எய்தாத தெய்துவித்தது. இம்மூன்றும் வல் லெழுத்துப் பெறு என்றலின் எய்தியது விலக்கிற்று. மாமரத்துக்கு அகரமும் நஞநம ஒற்றும் ஏனையவற்றிற்கு னகர ஒற்றும் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: மாமரக் கிளவியும் ஆவும் மாவும் ஆம் முப் பெயரும் அவற்றோரன்ன — மாமரமாகிய சொல்லும் ஆவென்னுஞ் சொல் லும் மாவென்னுஞ் சொல்லுமாகிய மூன்று பெயரும் யாமரம் முதலிய மூன்றோடும் ஒரு தன்மையவாய் மெல்லெழுத்துப் பெற்று முடியும், ஆவும் மாவும் அகரம் அவண் நிலையா னகரம் ஒற்றும் — அவற்றுள் ஆவும் மாவும் புணர்ச்சியிடத்து அகரம் நிலை பெறு வாய் னகர ஒற்றுப் பெற்று முடியும், எனவே அருத்தாபத்தியான் மாமரத்திற்கு அகரம் நிலைபெற்று நஞநம ஒற்றும் பெறுமாயிற்று; அவை வல்லெழுத்து அவண் நிலையா — அம் மூன்று பெயரும் முற்கூறிய வல்லெழுத்துப் புணர்ச்சியிடத்து நிலைபெறுவாய்வரும்; எ - று.

அவணிலையா என்றதனை இரண்டிடத்துங் கூட்டுக.

எ - டு: மாஅங்கோடு செதிள் தோல் பூ ஆன்கோடு மான்கோடு செவி தலை புறம் என வரும்.

---

1 அகரமும் வலலெழுத்தும் பெறுதலின — அத்துப் பேற்றில உஎ-ம் நூற்பாவிற்கேற்ப அகரமும் உஅ-ம் நூறபாவிற கேறப வல்லெழுத்தும இருத்தலின். அகரம் அத்தின் முதலெழுத்து. வலலெழுத்துப்பேறு அத்திறகும் வருமொழிக்கும் இடைப் பட்டது.

ஆவும் மாவும் அவற்றேரன்ன என்று ஞாபகமாகக்[1] கூறியவதனால் மாங்கோ டென அகர மின்றியும் வரும்.

இனி, அவண் என்றதனாற் காயாங்கோடு நுணுங்கோடு ஆஞ்கோடு என்றாற் போலப் பிறவும் மெல்லெழுத்துப் பெறுதலும், அங்காக் கொண்டான் இங்காக் கொண்டான் உங்காக் கொண்டான் எங்காக் கொண்டான் என இவற்றுள் ஏழாம் வேற்றுமை யிடப்பொருள் உணர நின்ற இடைச் சொற்கள் வல்லெழுத்துப் பெறுதலும், ஆவின் கோடு மாவின் கோடு எனச் சிறுபான்மை இன் பெறுதலும், பெற்றுழி வல்லெழுத்து வீழ்வுங் கொள்க.

மாட்டேற்றான் மூன்று பெயரும் வல்லெழுத்துப் பெறாது மெல்லெழுத்துப் பெற்றவாறும் மாமரம் அகரம் பெற்றவாறும் இச் சூத்திரத்தின் கண்ணழிவான்[2] உணர்க. (உக)

'ஆன்' என்னுஞ் சொல்

உஙஉ. ஆனெற் றகரமொடு நிலையிடன் உடைத்தே.

இஃது அவற்றுள் ஆனென்றதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: ஆனெற்று — ஆவென்னுஞ் சொன் முன்னர்ப் பெற்று நின்ற னகரவொற்று, அகரமொடும் நிலையிடன் உடைத்து — அகரத்தோடு கூடி நிற்கும் இடனும் உடைத்து; எ - று.

இடனுடைத் தென்ற வதனால் வன்கண மொழிந்த கணத்து இம் முடிபெனக் கொள்க.

எ - டு: 'ஆனெய் தெளித்து நான நீவி' 'ஆனமணிகறங்குங் கானத் தாங்கண்' என வரும். அகரமொடும் என்ற உம்மையால் அகரமின்றி வருதலே பெரும்பான்மை. ஆனெய் தெளித்து ஆன்மணி ஆன்வால் என வரும். (ஙo)

உஙங. ஆன்முன் வருஉம் ஈகார பகரந்
தான்மிகத் தோன்றிக் குறுகலும் உரித்தே.

இஃது ஆனென்பதற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி கூறுகின்றது.

இ - ள்: ஆன்முன் வருஉம் ஈகார பகரம் — ஆனென்னுஞ் சொன் முன்னர் வருமொழியாய் வருகின்ற ஈகாரத்தோடு கூடிய பகரமாகிய மொழி. தான் மிகத் தோன்றி — அப் பகரமாகிய தான் மிக்கு நிற்ப நிலைமொழி னகரத்திற்குக் கேடு தோன்றி, குறுகலும் உரித்து — ஈகாரம் இகரமாகக் குறுகி நிற்றலும் உரித்து; எ - று.

எ - டு: ஆப்பி என வரும்.
உம்மை எதிர்மறை யாகலான் ஆன்பீ என்றுமாம். (ஙக)

---

1 ஞாபகம் — ஞாபகங் கூறல என்னும் உத்தி. இதன் விளககத்தைப் புணரியல் உ-ம் நூறபா அடிககுறிப்பிற காணக. இங்கு ஞாபகமாகக் கூறிய தெனறது, மா ஆ மா என்னும முப்பெயரும யா பிடா தளா எனனும மூபபெயர் போலப புணரா விடினும புணாவதுபோல 'அவறறேரனன' என மாட்டெறிநததை.

2 கண்ணழிவு — புணாச்சி பிரித்துச் சொற்பொருள் கூறல.

சிலவற்றிற்கு உகரப் பேறு

உகசு. குறியதன் இறுதிச் சினைகெட உகரம்
அறிய வருதல் செய்யுளுள் உரித்தே.

இஃது ஆகார ஈற்றுட் சிலவற்றிற்குச் செய்யுண் முடிபு கூறுகின்றது.

இ - ள்: குறியதன் இறுதிச் சினைகெட — குற்றெழுத்தின் இறுதிக்கண் நின்ற ஆகாரத்தினது இரண்டு மாத்திரையில் ஒரு மாத்திரை கெட்டு அஃது அகரமாய் நிற்ப, உகரம் அறிய வருதல் செய்யுளுள் உரித்து — ஆண்டு உகரம் புலப்பட வருதல் செய்யுளிடத்து உரித்து; எ - று.

எ - டு:

'இறவுப்புறத் தன்ன பிணர்படு தடவுமுதற்
சுறவுக்கோட் டன்ன மூன்னிலைத் தாழை' (நற் - ககூ)

'புறவுப்புறத் தன்ன புன்காயுகாய்' (குறு - உஎச)

என வரும். உகரம் வகுப்பவே நிலைமொழி அகரங் கெட்டது. அதிகார வல்லெழுத்து விலக்காமையின் நின்று முடிந்தது. இனி நிலைமொழித் தொழில் வரையாது கூறினமையின் இயல்பு கணத்திற்கும் இவ்விதி எய்திற் ருகலின், ஆண்டு வரும் உகரம் புலப்பட வாராமையும் உணர்க. சுறவுயர்கொடி அரவுயர் கொடி முழவுமுழக்கோள் என இவை குறியதனிறுதிச் சினை கெட்டு வருமொழி உயிர் முதன் மொழியாய் வருதலின் வகர உடம்படுமெய் பெற்று உகரம் பெறாது முடிந்தன. இவற்றிற்கு இரண்டா முருபு விரிக்க[1]; மூன்றுவதுமாம்.[2]

ஙகர ஈறு

வேற்றுமையில் இகர ஈற்றுப் பெயர்

உகடு. இகர இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.

இஃது இகர ஈற்றுப் பெயர்க்கு அல்வழி முடிபு தொகைமரபிற் கூறி ஈண்டு வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இ - ள்: இகர இறுதிப் பெயர்நிலை முன்னர் — இகர ஈற்றுப் பெயர்ச்சொன் முன்னர் அதிகாரத்தாற் கசதப முதன் மொழி வந்துழி, வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகும் — வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: கிளிக்கால் சிறகு தலை புறம் என வரும். புலி நரி என்றாற் போல்வனவும் அவை.

---

1 சுறவை உயர்த்திய கொடி-இரண்டாம் வேற்றுமை.
2 சுறவால உயர்த்தப்பட்ட அல்லது சுறவுடன் உயர்ந்த கொடி - மூன்றும் வேற்றுமை.

இனிக் கிளி குறுமை கிளிக் குறுமை எனக் குணம்பற்றி வந்த உறழ்ச்சி முடிபு மேல் 'வல்லெழுத்து மிகினும்' (எழு - உசசு) என்னுஞ் சூத்திரத்து 'ஒல்வழி யறிதல்' என்பதனுற் கொள்க. (நஙு)

இகர ஈற்று வினைச்சொல்லும் இடைச்சொல்லும்

உஙசு. இனிஅணி என்னுங் காலையும் இடனும்
வினையெஞ்சு கிளவியுஞ் சுட்டு மன்ன.

இஃது எய்தாத தெய்துவித்தது, இவ் வீற்று இடைச் சொற்கும் வினைச் சொற்கும் முடிபு கூறுதலின்.

இ - ள்: இனி அணி என்னுங் காலையும் இடனும் — இனி யென்றும் அணி யென்றுஞ் சொல்லப்படுகின்ற காலத்தையும் இடத்தையும் உணரநின்ற இடைச்சொல்லும், வினையெஞ்சு கிளவியும் — இவ்வீற்று வினையெச்சமாகிய சொல்லும், சுட்டும் — இவ் வீற்றுச் சுட்டாகிய இடைச்சொல்லும், அன்ன — முற் கூறியவாறே வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: இனிக் கொண்டான் அணிக் கொண்டான் தேடிக் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், இக் கொற்றன் சாத்தன் தேவன் பூதன் எனவும் வரும். இவ் விடைச்சொல் மூன்றும் இப்பொழுது கொண் டான் அணிய இடத்தே கொண்டான் இவ்விடத்துக் கொற்றன் என உருபின் பொருள்பட வந்த வேற்றுமையாதலின் வேறோதி முடித்தார். (நச)

'இன்றி' என்னுஞ் சொல்

உஙஎ. இன்றி என்னும் வினையெஞ்சு கிறுதி
நின்ற இகரம் உகர மாதல்
தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்தே.[1]

இஃது இவ்வீற்று வினை யெச்சத்துள் ஒன்றற்குச் செய்யுண் முடிபு கூறு கின்றது.

இ - ள்: இன்றி என்னும் வினையெஞ்சு இறுதி நின்ற இகரம் உகரம் ஆதல் — இன்றி யென்று சொல்லப்படும் வினை யெச்சக் குறிப்பின் இறுதிக்கண் நின்ற இகரம் உகரமாகத் திரிந்து முடி தல், தொன்றியல் மருங்கின் செய்யுளுள் உரித்து — பழக நடந்த கூற்றையுடைய செய்யுளுள் உரித்து; எ - று.

1 இன்று என்னும் சொல் இன்றி எனபதன் திரிபாகாமலே குறிப்பு வினையெச்சமா யிருக்க முடியும். சொலலாது (சொலலாமல) என்னும் தெரிநிலை வினையெச்சத்தை யொத்தி இல்லாது (இலலாமல) எனனும் குறிபபு வினையெச்சமே இன்று எனக் குறுகி வழங்குகின்றதென்று கொள்ளலாம். இல+ஆது = இல்லாது. இல்+அது = இல்லது. இல்+து = இனறு. ஆது—அது—து. அனறு எனனும எச்சமும் இங் ஙனமே. அல்+து = அன்று. அறிஞர இதை ஆராய்க. இன்று என்னும் எச்சம் இன்றி எனபதன் திரிபாயின், இல்லாது என்னும எச்சமும் ஓர இகர வீற்றுச் சொலலின் திரிபா யிருக்க வேணடும். அங்ஙன மின்மை நோக்குக.

எ - டு: 'உப்பின்று புற்கை யுண்கமா கொற்கையோனே.'

நின்ற என்றதனால் வினையெச்சத்திற்கு முன் எய்திய வல்லெழுத்து வீழ்க்க.

தொன்றியன் மருங்கின் என்றதனான் அன்றி யென்பதனுஞ் செய்யுளில் இம் முடிபு எய்துதல் கொள்க. 'இடனன்று துறத்தல் வல்லியோரே' 'வாளன்று பிடியா வன்கணுடையர்' 'நாளன்று போகி' (புறம் - கூஉச) என வரும். முற்றியலிகரந் திரிந்து குற்றியலுகரமாய் நின்றது.[1] (நூடு)

சுட்டுப் பெயர்

உஙஅ. சுட்டி னியற்கை முற்கிளந் தற்றே.

இஃது இகர ஈற்றுச் சுட்டுப்பெயர் இயல்பு கணத்தோடு முடியுமாறு கூறுதலின் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: சுட்டின் இயற்கை — இகர ஈற்றுச் சுட்டின் இயல்பு, முன் கிளந்தற்று — முன் அகர ஈற்றுச் சுட்டிற்குக் கூறிய தன்மைத்தாம்; எ - று.

என்றது 'சுட்டின் முன்னர் ஞநமத் தோன்றின்' (எழு - உ0டு) என்பது முதலிய நான்கு சூத்திரத்தானுங் கூறிய இலக்கணங்களை; அவை மென் கணத்து மெல்லெழுத்து மிகுதலும் இடைக்கணத்தும் உயிர்க்கணத்தும் வகரம் பெறுதலுஞ் செய்யுட்கண் வகரங் கெட்டுச் சுட்டு நீடலுமாம்.

இஞ்ஞாண் நூல் மணி எனவும், இவ்யாழ் இவ்வட்டு எனவும், இவ்வடை இவ்வாடை இவ்வீலை இவ்வீயம் இவ்வுரல் இவ்வூர்தி இவ்வெழு இவ்வேணி இவ்வையம் இவ்வொடு இவ்வோக்கம் இவ்வெளவியம் எனவும், ஈவயினை எனவும் வரும்.

'ஈ[2]காண் டோன்றுமெஞ் சிறுநல் லூரே'

என்றதும்,

'கள்வனே வல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே யீதொன்று'
(சிலப் - ஊர்சூழ்வரி - எ)

என்றதும் இது வென்னுஞ் சுட்டு முதல் உகர ஈறுதலின் அது செய்யுளகத்துப் புறனடையான் முடிபு மென உணர்க. (நூசு)

'தூணி' முன் 'பதக்கு'

உஙக. பதக்குமுன் வரினே தூணிக் கிளவி
முதற்கிளந் தெடுத்த வேற்றுமை யியற்றே.

இஃது இவ்வீற்று அல்வழிகளுள் அளவுப்பெயருள் ஒன்றற்குத் தொகை மரபினுள் எய்திய வெயின் சாரியை விலக்கி வேறு முடிபு கூறுகின்றது.

---

1 அன்றி என்பதன இகரம் முற்றியலிகரம்; அன்று எனபதன் உகரம் குற்றியலுகரம்.

2 ஈ — இதோ, ஈ என்பதே அண்மைச் சுட்டின முதல் வடிவம். இத்தகைய முதல் வடிவங்கள் சில, செய்யுளில் அருமையாயப போறறபபட்டுள.

இ - ள்: *தூணிக் கிளவிமுன் பதக்கு வரின் — தூணியாகிய அளவுப்பெயரின் முன்னர்ப் பதக்கு என்னும் அளவுப்பெயர் வருமாயின், முதற் கிளந்து எடுத்த வேற்றுமை இயற்று — முன்பு விதந்தெடுத்த வேற்றுமை முடிபின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.*

எ - டு: *தூணிப்பதக்கு என வரும். இஃது உம்மைத் தொகை.*

வருமொழி முற்கூறிய வதனுன் அடையொடு வந்துழியும் இவ் விதி கொள்க. இரு தூணிப் பதக்கு முத்தூணிப் பதக்கு என ஒட்டுக. கிளந்தெடுத்த வென்றதனால் தூணிக்கொள் சாமை தோரை பாளிதம் எனப் பொருட் பெயர் முன் வந்துழியும், இரு தூணிக்கொள் என அதுதான் அடையடுத்துழியுந், தூணித்தூணி தொடித்தொடி காணிக்காணி பூணிப்பூணி எனத் தன் முன்னர்த் தான் வந்துழியும் இவ் விதி கொள்க.

இன்னும் இதனுனே தன் முன்னர்த் தான் வந்துழியும் அதுதான் அடையடுத்து வந்துழியும் இக்குச்சாரியை பெறுதலுங் கொள்க. தூணிக்குத் தூணி இரு தூணிக்குத் தூணி என வரும். இவற்றுட் பண்புத் தொகையும் உள. ()

'நாழி' முன் 'உரி'

உசo. உரிவரு காலை நாழிக் கிளவி
இறுதி இகரம் மெய்யொடுங் கெடுமே
டகர மொற்றும் ஆவயி னானை.[1]

இதுவும் அது.

இ - ள்: *உரிவரு காலை — நாழி முன்னர் உரி வருமொழியாய் வருங்காலத்து, நாழிக் கிளவி — அந்நாழி யென்னுஞ் சொல், இறுதி இகரம் மெய்யொடுங் கெடும் — தன் இறுதியினின்ற இகரந் தானேறிய மெய்யொடுங் கெடும், ஆவயின் ஆன டகரம் ஒற்றும் — அவ்விடத்து டகரம் ஒற்றாய் வரும்; எ - று.*

எ - டு: *நாடுரி என வரும் இதனுன் யகாரமும் விலக்குண்டது.*

வருமொழி முற்கூறிய வதனுன் இரு நாடுரி முந் நாடுரி எனவும் ஒட்டுக.

இறுதி யிகர மென னுன்னும் ஓர் இகரம் உள்ளது போலக் கூறியவதனுன் ஈண்டை நிலைமொழியும் வருமொழியும் நிலைமொழியாய் நின்று பெயரோடு வல்லெழுத்து மிக்கு முடிதலுங் கொள்க. நாழிக்காயம் உரிக்காயம் சுக்கு தோரை பாளிதம் என வரும். (நஅ)

'பனி' என்னுங் காலச்சொல்

உசக. பனியென வரூஉங் கால வேற்றுமைக்
கத்தும் இன்னுஞ் சாரியை யாகும்.

இஃது இகர ஈற்று வேற்றுமையுள் ஒன்றற்கு வல்லெழுத்தினோடு சாரியை பெறுமென எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

---

1. நாழி + உரி = நாழுரி — நாடுரி (மருஉ அலலது போலி) என்று கொள்ளவும் இடமுண்டு.

இ - ள்: பனியென வருஉங் கால வேற்றுமைக்கு — பனி யென்று சொல்ல வருகின்ற நோயன்றிக் காலத்தை உணர நின்ற வேற்றுமை முடிபுடைய பெயர்க்கு, அத்தும் இன்னுஞ் சாரியை ஆகும் — அத்தும் இன்னுஞ் சாரியையாக வரும்; எ - று.

எ - டு: பனியத்துக் கொண்டான் பனியிற் கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வரும்.

வேற்றுமை யென்றதனான் இன்பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க.

'வளி' என்னும் பூதச்சொல்

உசஉ. வளியென வருஉம் பூதக் கிளவியும்
அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப.

இதுவும் அது.

இ - ள்: வளியென வருஉம் பூதக் கிளவியும் — வளியென்று சொல்ல வருகின்ற இடக்கரல்லாத ஐம்பெரும் பூதங்களில் ஒன்றை உணரநின்ற சொல்லும்,[1] அவ்வியல் நிலையல் செவ்வி தென்ப — முன்னைக் கூறிய அத்தும் இன்னும் பெறும் அவ்வியல் பின்கண் நிற்றல் செவ்விதென்று கூறுவர் புலவர்; எ - று.

எ - டு: வளியத்துக்கொண்டான் வளியிற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வரும்.

செவ்விதென்றதனான் இன்பெற்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. (சo)

'உதி' என்னும் மரப்பெயர்

உசஙு. உதிமரக் கிளவி மெல்லெழுத்து மிகுமே.

இது மரப்பெயரில் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதிக்கின்றது.

இ - ள்: உதிமரக் கிளவி — உதித்த லென்னுந் தொழிலன்றி உதியென்னும் மரத்தினை உணர நின்ற சொல், மெல்லெழுத்து மிகும் — வல்லெழுத்து பிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: உதிங்கோடு செதிள் தோல் பூ என வரும்.

அம்மூச்சாரியை விதிக்கின்ற புளிமரத்தினை இதன்பின் வைத்தமையான் உதியங்கோடு என இதற்கும் அம்முப்பெறுதல் கொள்க. இஃது இக்காலத்து ஒதியென மருவிற்று. (சக)

'புளி' என்னும் மரப்பெயர்.

உசச. புளிமரக் கிளவிக்கு அம்மே சாரியை.

---

1 இடகரலலாத சொலலும என று இயையும. இடகர என றது மலவாயக காறற்ை.

இது வல்லெழுத்து விலக்கி அம்மு வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள்: புளிமரக் இளவிக்கு அம்மே சாரியை — சுவை யன்றிப் புளி யென்னும் மரத்தினை உணர நின்ற சொல்லிற்கு அம் மென்னுஞ் சாரியை வரும்; எ - று.

எ - டு: புளியங்கோடு செதிள் தோல் பூ என வரும்.

சாரியைப் பேற்றிடை முன்னர்ச் சூத்திரத்து எழுத்துப்பேறு[1] கூறிய வதனால் அம்முப்பெற்றுழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. (சஉ)

'புளி' என்னும் சுவைப்பெயர்

உசடு. ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுமே.

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள்: ஏனைப் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகும் — அம் மரப் பெயரன்றிச் சுவைப்புளி உணர நின்ற பெயர் வல்லெழுத்து மிகாது மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: புளிங்கூழ் சாறு தயிர் பாளிதம் என வரும். பாளிதம் - பாற் சோறு. இவற்றிற்கு இரண்டாமுருபு விரிக்க. (சஙூ)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

உசசு. வல்லெழுத்து மிகினும் மான மில்லை
ஒல்வழி யறிதல் வழக்கத் தான.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: வல்லெழுத்து மிகினும் மானமில்லை — சுவைப்புளி மெல்லெழுத்தே யன்றி வல்லெழுத்து மிக்கு முடியினும் குற்ற மில்லை, ஒல்வழி அறிதல் வழக்கத்து ஆன — பொருந்தும் இடம் அறிக வழக்கிடத்து; எ - று.

எ - டு: புளிக்கூழ் சாறு தயிர் பாளிதம் என வரும்.

ஒல்வழி என்றதனாற் புளிச்சாறு போல ஏனைய வழக்குப் பயிற்சி இலவென்று கொள்க.

வழக்கத்தான என்றதனால் இவ் வீற்றுக்கண் எடுத்தோத்தும் இலேசு மின்றி வருவன எல்லாவற்றிற்கும் ஏற்குமாறு செய்கையறிந்து முடித்துக் கொள்க. அவை இன்னினிக் கொண்டான் அண்ணணிக் கொண்டான் என்பன அடையடுத்தலின் 'இனியணி' (எழு - உஙசு) என்றவழி முடியாவாய் வல்லெழுத்துப் பெற்றன. கப்பிதந்தை சென்னிதந்தை என்பன 'அஃறிணை விரவுப்பெயர்' (எழு - கஙிஙி) என்பதனுள் இடல்பெய்தாது ஈண்டு வருமொழித் தகர அகரங் கெட்டுக் கப்பிந்தை சென்னிந்தை என முடிந்தது.

---

1 எழுத்துப்பேறு--இவ்வியல சo-ம நூற்பாவில 'மெலலெழுத்து மிகுமே' என்றது.

கூதாளி கணவிரி என்பனவற்றிற்கு அம்முக் கொடுத்து இகரங் கெடித் துக் கூதாளங்கோடு கணவிரங்கோடு செதிள் தோல் பூ என முடிக்க. 'கூதள நறும்பூ' எனக் குறைத்தும் வரும். இனி இவை மகர ஈறுயும் வழங்கும். அது 'வெண்கூதாளத்துத் தண்பூங்கோதையர்' (பட்டி - அடி) என அத்துப் பெற்று மகரங்கெட்டுங் 'கணவிரமாலை யிடூஉக்கழிந்தன்ன' (அகம் - டக) என மகரங்கெட்டுங் கணவிரங்கோடு என மெல்லெழுத்துப் பெற்றும் நிற்கும்.

கட்டி என நிறுத்தி இடி அகல் எனத் தந்து டகரத்தில் இகரங்கெடுத்துக் கட்டிடி கட்டகல் என முடிக்க. பருத்திக்குச் சென்றனென ஈற்று வல் லெழுத்தும் இக்குங் கொடுத்து முடிக்க. துளியத்துக் கொண்டான் துளியிற் கொண்டான் என அத்தும் இன்னுங் கொடுத்து முடிக்க. புளிங்காய் வேட் கைத்தன்று எனவும் புளிம்பழம் எனவும் அம்முப்பெறாது மெல்லெழுத்துப் பெற்று முடிதலுங் கொள்க. இன்னும் இதனானே உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபு வல்லெழுத்துக் கெடுத்துக் கிளியின் கால் புளியின்கோடு உதியின்கோடு என முடிக்க. (சக)

நாட் பெயர்

உசஎ. நாள்முன் தோன்றுந் தொழில்நிலைக் கிளவிக்கு
ஆன்இடை வருதல் ஐய மின்றே.

இஃது ஈற்று வல்லெழுத்து விலக்கி ஆன் சாரியை விதிக்கின்றது.

இ - ள்: நாள் முன் தோன்றுந் தொழில் நிலைக் கிளவிக்கு — இகர ஈற்று நாட்பெயர்களின் முன்னர்த் தோன்றுந் தொழிற் சொற்கு, ஆன் இடை வருதல் ஐயமின்று — ஆன் சாரியை இடை வந்து முடிதல் ஐயமின்று; எ - று.

எ - டு: பரணியாற் கொண்டான் சோதியாற் கொண்டான்[1] சென்றான் தந்தான் போயினான் என வரும். ஐயமின்றென்றதனால் இயைபு வல்லெழுத்து வீழ்க்க. இதற்குக் கண்ணென் உருபு விரிக்க. (சஙி)

திங்கட் பெயர்

உசஅ. திங்கள் முன்வரின் இக்கே சாரியை.

இஃது இயைபு வல்லெழுத்திற்கு இக்கு வருத்தலின் எய்தியதன் மேற் சிறப்பு விதி வருத்தது.

இ - ள்: திங்கள்முன் வரின் இக்கே சாரியை — திங்களை உணர்கின்ற இகர ஈற்றுப் பெயர்களின் முன்னர்த் தொழினிலைக் கிளவி வரின் வருஞ் சாரியை இக்குச் சாரியையாம்; எ - று.

எ - டு: ஆடிக்குக்கொண்டான்,[2] சென்றான், தந்தான், போயினான் என இயைபு வல்லெழுத்துக் கொடுத்து முடிக்க. இதற்குங் கண்ணென் உருபு விரிக்க. (சஙு)

1 நச்சினார்க்கினியர் காட்டியுள்ள சோதி முதலிய பெயர்கள் நாட்பெயர்களாயத தொல்காப்பியர் காலத்திலிருந்தனவா எனபது ஆராயத்தக்கது.
2 நாட்பெயர்க்குக கூறியதை இதற்குங கொள்க.

ச. ஈகார ஈறு

அல்வழியில் ஈகார ஈற்றுப் பெயர்

உசகூ. ஈகார இறுதி ஆகார இயற்றே.

இஃது ஈகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: ஈகார இறுதி ஆகார இயற்று — ஈகார ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் ஆகார ஈற்று அல்வழியின் இயல்பிற்ருய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும் எ - று.

எ - டு: ஈக்கடிது நீக்கடிது சிறிது நீது பெரிது என வரும். (சஎ)

'நீ' 'மீ' முதலிய சொற்கள்

உரூ0. நீஎன் பெயரும் இடக்கர்ப் பெயரும்
மீஎன மரீஇய இடம்வரை கிளவியும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது எய்தியது விலக்கலும் எய்தாத தெய்துவித்தலுங் கூறுகின்றது.

இ - ள்: நீ என் பெயரும் இடக்கர்ப் பெயரும் — நீ யென்னும் பெயரும் இடக்கர்ப் பெயராகிய ஈகார ஈற்றுப் பெயரும், மீயென மரீஇய இடம் வரை கிளவியும் — மீயென்று சொல்ல மருவாய் வழங்கின ஓரிடத்தை வரைந்து உணர்த்துஞ் சொல்லும், ஆவயின் வல்லெழுத்து இயற்கை யாகும் — புணருமிடத்து முற்கூறிய வல்லெழுத்துப் பெருது இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: நீகுறியை சிறியை நீயை பெரியை எனவும், மீகுறிது சிறிது நீது பெரிது எனவும் இவையிற்றுக்குப் பொதுவான் எய்திய வல்லெழுத்து விலக்குண்டன. மீகண் செவி தலை புறம் இஃது இலக்கணத்தோடு பொருந்திய மருவாதலின் எய்தாத தெய்துவித்தது.

நீயென்பது அஃறிணை விரவுப்பெயருள் அடங்காதோ வெனின் மேல் கின்கை யெனத் திரிந்து முடிதலின் அடங்காதாயிற்று. மீகண் என்பது மேலிடத்துக் கண்ணென வேற்றுமை யெனினும் இயல்புபற்றி உடன் கூறினர். (சஅ)

'மீ' என்னுஞ் சொல்லுக்கு மேலும் ஒரு முடிபு

உருக. இடம்வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம்
உடனிலை மொழியும் உளவென மொழிப.

இது வல்லெழுத்து மிகுக என்றலின் எய்திய திகந்துபடாமற் காத்தது.

இ - ள்: இடம் வரை கிளவிமுன் வல்லெழுத்து மிகூஉம் — இடத்தை வரைந்து உணர்த்தும் மீயென்னுஞ் சொல்லின் முன்னர் இயல்பாய் முடிதலே யன்றி வல்லெழுத்து மிக்கும் முடியும், உடனிலை மொழியும் உள என மொழிப — தம்மில் ஓசை

யியைந்து நிற்றலே யுடைய மொழிகளும் உளவென்று கூறுவர் ஆசிரியர்; எ - று.

எ - டு: மீக்கோள் மீப்பல் என வரும்.

உடனிலையென்றதனான் மீங்குழி மீந்தோல் என மெல்லெழுத்துப் பெற்று முடிவனவுங் கொள்க. (சக)

வேற்றுமையில் ஈகார ஈற்றுப் பெயர்

உருஉ. வேற்றுமைக் கண்ணும் அதனே ரற்றே.

இஃது ஈகார ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: வேற்றுமைக்கண்ணும் அதனேரற்று — ஈகார ஈற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும் ஆகார ஈற்று அல்வழிபோல வல்லெழுத்து வந்துழி அவ் வல் லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: ஈக்கால் சிறகு தலை புறம், தீக்கடுமை சிறுமை தீமை பெருமை என வரும். (இ0)

'நீ' என்னும் பெயர்

உருங. நீயென் ஒருபெயர் உருபியல் நிலையும்
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, வல்லெழுத்து விலக்கி னகரவொற்றே பெறுக என்றலின்.

இ - ள்: நீயென் ஒரு பெயர் உருபியல் நிலையும — நீயென்னும் ஓரெழுத்தொருமொழி உருபு புணர்ச்சிக்கண் நெடுமுதல் குறுகி னகரம் ஒற்றி நின்றுற்போல ஈண்டுப் பொருட்புணர்ச்சிக் கண் ணும் முடியும், ஆவயின் வல்லெழுத்து இயற்கையாகும் — அவ் வாறு முடிபுழி இயைபு வல்லெழுத்து மிகா; எ - று.

எ - டு: நின்கை செவி தலை புறம் என வரும்.

இஃது ஈகார ஈறு இகர ஈறுபோ இகர ஈறு னகர ஈறுபோ நின்றுழியும் 'நீயெனொருபெயர்' என்றலிற் றிரிந்ததன் றிரிபதுவே[1]யாயிற்று. இயற்கை யாகுமெனவே நிலைமொழித்தொழில் அதிகார வல்லெழுத்தை விலக்கா தாயிற்று. (இக)

ரு. உகர ஈறு

அல்வழியில் உகர ஈற்றுப் பெயர்

உருச. உகர இறுதி அகர இயற்றே.

இஃது உகர ஈற்றுப்பெயர் அல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

---

1 திரிந்ததின் திரிபதுவே - நீ எனபது நி என்றும் நி எனபது நின எனறும் திரிநத விடதது அது நீ எனனும பெயரே என்பது; திரிநதது நி; திரிந்ததன் திரிபு நின. அது நீ. இனி, இங்ஙனமனறி நீன எனனும பெயரே நின எனக குறுகியது என்பது மிகப் பொருநதும. நின (நீ) எனபது இனறும தொனனூட்டில வழககி லுள்ளது.

இ - ள்: உகர இறுதி அகர இயற்று—உகர ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் அகர ஈற்று இயல்பிற்ருய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: கடுக்குறிது சிறிது நீது பெரிது என வரும். (நிஉ)

உகரச் சுட்டு

உருடு. சுட்டின் முன்னரும் அத்தொழிற் ருகும்.

இஃது உகர ஈற்றுச் சுட்டு வன்கணத்தோடு முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: சுட்டின் முன்னரும் அத்தொழிற்று ஆகும் — உகர ஈற்றுச் சுட்டின் முன்னும் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: உக்கொற்றன் சாத்தன் தேவன் பூதன் என வரும். (நிஊ)

சுட்டின்முன் மென்கணம் முதலியன

உருசு. ஏனவை வரினே மேல்நிலை இயல.

இஃது உகர ஈற்றுச் சுட்டு ஒழிந்த கணங்களோடு முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: ஏனவை வரின் — உகர ஈற்றுச் சுட்டின் முன் வல்லெழுத் தல்லாத மென்கணம் முதலிய மூன்றும் வரின், மேல்நிலை இயல — அகர ஈற்றுச் சுட்டு முடிந்தாற்போல ஞநமத் தோன்றின் ஒற்று மிக்கும் யவ்வரினும் உயிர் வரினும் வகரம் ஒற்றியுஞ் செய்யுளில் நீண்டு முடியும்; எ - று.

எ - டு: உஞ்ஞாண் தூல் மணி எனவும், உய்யாழ் உவ்வட்டு எனவும், உவ்வடை உவ்வாடை எனவும், ஊவயினை எனவும் வரும். (நிச)

சுட்டின் முன் வலி இயல்பாதல்

உருஎ. சுட்டுமுதல் இறுதி இயல்பா கும்மே.

இஃது இவ் வீற்றுட் சிலவற்றிற்கு வல்லெழுத்து விலக்கி இயல்பு கூறுகின்றது.

இ - ள்: சுட்டு முதல் இறுதி — சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுப் பெயர், இயல்பாகும் — முற்கூறிய வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: அதுகுறிது இதுகுறிது உதுகுறிது சிறிது நீது பெரிது என வரும்.

முற்கூறியவை சுட்டுமாத்திரை, இவை சுட்டுப்பெயராக உணர்க. (நிடு)

செய்யுளிற் சுட்டுப்பெயர்

உருஅ. அன்றுவரு காலை ஆவா குதலும்
ஐவரு காலை மெய்வரைந்து கெடுதலும்
செய்யுள் மருங்கின் உரித்தென மொழிப.

இஃது இவ் வீற்றுச் சுட்டுமுதற் பெயர்க்கு ஓர் செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ - ள்: அன்று வருகாலை ஆஆகுதலும் — அதிகாரத்தால் நின்ற சுட்டு முதல் உகர ஈற்றின் முன்னர் அன்றென்னும் விகினக் குறிப்புச்சொல் வருங்காலத்து அத் தகரவொன்றின்மேல் ஏறி நின்ற உகரம் ஆகாரமாய்த் திரிந்து முடிதலும், ஐ வருகாலை மெய் வரைந்து கெடுதலும் — அதன் முன்னர் ஐயென்னுஞ் சாரியை வருங்காலத்து அத் தகரவொற்று நிற்க அதன்மேல் ஏறிய உகரங் கெடுதலும், செய்யுண் மருங்கின் உரித்தென மொழிப — செய்யுட் கண் உரித்தென்று சொல்லுவர் ஆசிரியர்; எ - று.

எ - டு: அதாஅன்றம்ம இதாஅன்றம்ம உதாஅன்றம்ம 'அதாஅன் றென்ப வெண்பா யாப்பே' எனவும், அதைமற்றம்ம இதைமற்றம்ம உதைமற் றம்ம எனவும் வரும்.

மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் முடியாததனை முட்டின்றி முடித்த லென்பதனால் அதன்று இதன்று உதன்று என உகரங்கெட்டுத் தகர வொற்று நிற்றல் கொள்க. (நிசு)

வேற்றுமையில் உகர ஈற்றுப் பெயர்

உருகு. வேற்றுமைக் கண்ணும் அதனே ரற்றே.

இஃது இவ் வீற்றுப் பெயர் வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: வேற்றுமைக் கண்ணும் — உகர ஈற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக் கண்ணும், அதனேரற்று — அகர ஈற்று அல்வழியோடு ஒருதன்மைத்தாய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: கடுக்காய் செதிள் தோல் பூ எனவும், கடுக்கடுமை எனவும் வரும். (நிஎ)

'எரு' 'செரு' என்னுஞ் சொற்கள்

உகூ. எருவும் செருவும் அம்மொடு சிவணித்
திரிபிட னுடைய தெரியுங் காலை
அம்மின் மகரம் செருவயின் கெடுமே
தம்மொற்று மிகூஉம் வல்லெழுத் தியற்கை.

இஃது அவ் வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியையிதியும் ஒன்றற்கு வல்லெழுத்திஞெடு சாரியையிதியுஞ் சாரியை பெறுதவழி வல் லெழுத்து மெல்லெழுத்துப் பேறுங் கூறுகின்றது.

இ - ள்: எருவும் செருவும் அம்மொடு சிவணி — எருவென் னுஞ் சொல்லும் செருவென்னுஞ் சொல்லும் அம்முச் சாரியை

யோடு பொருந்தி, திரிபு இடனுடைய தெரியுங் காலை — அதிகார வல்லெழுத்துப் பெருமல் திரியும் இடனுடைய ஆராயுங் காலத்து, அம்மின் மகரஞ் செருவயிற் கெடும் — ஆண்டு அம்முச் சாரியையினது ஈற்றின் மகரஞ் செருவென்னுஞ் சொல்லிடத்துக் கெட்டு முடியும், வல்லெழுத்து மிகூஉம் — ஆண்டுச் செருவின்கண் வல்லெழுத்து மிக்கு முடியும், இயற்கைத் தம் ஒற்று மிகூஉம் — அம்முப் பெறுதவழி இரண்டிற்குந் தமக்கு இனமாகிய வல்லொற்றும் மெல்லொற்றும் மிக்கு முடியும்; எ - று.

எ - டு: எருவென நிறுத்திக் குழி சேறு தாது பூழி எனத் தந்து அம்முக்கொடுத்து 'அம்மினிறுதி கசதக்காலே' (எழு - கஉசு) என்பதனுல் எருவங் குழி சேறு தாது பூழி யென முடிக்க. செருவென நிறுத்திக் களம் சேனை தானை பறை எனத் தந்து இடை அம்முக்கொடுத்து மகரங் கெடுத்து வல்லெழுத்துக் கொடுத்துச் செருவக்களம் சேனை தானை பறை யென முடிக்க. இனி அம்முப் பெறுதவழி எருக்குழி எருங்குழி என வல்லெழுத்தும் மெல்லெழுத்துங் கொடுத்து முடிக்க. இனிச் செருவிற்கு ஏற்புழிக்கோட லென்ப தனுற் செருக்களமென வல்லெழுத்தே கொடுத்து முடிக்க.

தெரியுங்காலை என்றதனுன் எருவின்குறுமை செருவின்கடுமை என உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி வல்லெழுத்து வீழ்தலும் எருவஞாற்சி செருவஞாற்சி என இயல்பு கணத்துக்கண் அம்முப்பெறுதலுங் கொள்க. மகரம் 'மென்மையு மிடைமையும்' (எழு - கஉய) என்பதனுற் கெடுக்க.

தம்மொற்றுமிகூஉம் என உடம்பொடு புணர்த்துச் சூத்திரஞ் செய்தலின் உகரம் நீடவருதலுங் கொள்க. வரூஉம் தரூஉம் படூஉம் என வரும். (நிஅ)

முகர வுகர ஈறு

உசுக. முகர உகரம் நீடிடன் உடைத்தே
உகரம் வருதல் ஆவயி னான.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது, வல்லெழுத்திலேது உகரம் பெறுதலின்.

இ - ள்: முகர உகரம் நீடிடன் உடைத்து — உகர ஈற்றுச் சொற்களுள் முகரத்தோடு கூடிய உகர ஈற்றுச்சொல் நீண்டு முடியும் இடனுடைத்து, ஆவயின் ஆன உகரம் வருதல் — அவ்விடத்து உகரம் வந்து முடியும்; எ - று.

எ - டு: எழுஉக்கதவு சிறை தானை படை என வரும்.

நீடிடனுடைத்து என்றதனுன் நீளாதும் உகரம் பெறுதும் வருமாயிற்று. குழுத்தோற்றம் என வரும்.

இன்னும் இதனுற் பழுக்காய் என அல்வழிக்கண்ணும் இவ் விதியன்றி வருதல் கொள்க.

---

1 முகர வுகரம நீடும என்றது செயயுள வழுகுபபறறி.

ஆவயினான என்றதனாற் பெரும்பான்மை செய்யுட்கண் நீண்டு உகரம் பெற்று

'எழுஉத்தாங்கிய கதவுமலைத்தவர்
குழுஉக்களிற்றுக் குறும்புடைத்தலின்' (புறம் - கூள)

எனவும்,

'பழுஉப்பல்லன்ன பருவுகிர்ப்பாவடி' (குறுந் - கஅ0)

எனவும் வருதல் கொள்க. (நிகூ)

'ஒடு' என்னும் மரப்பெயர்

உகூஉ. ஒடுமரக் கிளவி உதிமர இயற்றே.

இஃது அவ் வீற்று மரப்பெயருள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல் லெழுத்து விதித்தது.

இ - ள்: ஒடு மரக் கிளவி — ஒடுவென்னும் மரத்தினை உணர நின்ற சொல், உதிமர இயற்று — உதியென்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்துப் பெற்று முடியும்; எ - று.

எ - டு: ஒடுங்கோடு செதிள் தோல் பூ என வரும். மர மென்றார் ஒடு வென்னும் நோயை நீக்குதற்கு.

முன்னர் உதிமரத்தின் பின்னர் அம்மூப் பெறுகின்ற புளிமரம் வைத்த இடையான் இதற்கு அம்மூப்பேறுங் கொள்க. ஒடுவங கோடு என வரும். (கூ0)

சுட்டுப் பெயர்க்குச் சாரியை

உகூங. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்
ஒற்றிடை மிகாஅ வல்லெழுத் தியற்கை.

இது சுட்டுப் பெயர்க்கு வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தது.

இ - ள்: சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும் — சுட்டெழுத்தினை முதலாகவுடைய உகர ஈற்றுச் சொற்கள் பொருட்புணர்ச்சிக்கண்ணும் உருபுபுணர்ச்சியிற் கூறிய இயல்பிலே நின்று அன் சாரியை பெற்று உகரங்கெட்டு முடியும், வல்லெழுத்து இயற்கை ஒற்று இடைமிகாஅ — வல்லெழுத்து இயற்கையாகிய ஒற்று இடைக்கண் மிகா; எ - று.

எ - டு: அதன் கோடு இதன் கோடு உதன் கோடு செதிள் தோல் பூ என வரும். ஒற்றிடை மிகா எனவே சாரியை வகுப்ப வல்லெழுத்து வீழா வென்பது பெற்றாம்.

வல்லெழுத் தியற்கை யென்றதனான் உகர ஈற்றுள் எருவுஞ் செருவும் ஒழித்து ஏனையவற்றிற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றழி இடையுவு வல்லெழுத்து வீழ்க்க. கடிவின்குறை ஒடுவின்குறை எழுவின் புறம் கொழுவின்கூர்மை என வரும். இன்னும் இதனானே உதுக்காண் என்ற வழி வல்லெழுத்து மிகுதலும் கொள்க. (கூக)

சூ. ஊகார ஈறு

அல்வழியில் ஊகார ஈற்றுப் பெயர்

உசுச. ஊகார இறுதி ஆகார இயற்றே.

இது நிறுத்த முறையானே ஊகார ஈறு அல்வழிக்கண் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: ஊகார இறுதி ஆகார இயற்று — ஊகார ஈற்றுப் பெயர் அல்வழிக்கண் ஆகார ஈற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: கழூஉக் கடிது[1] கொண்மூக் கடிது சிறிது தீது பெரிது என வரும். (சுஉ)

ஊகார ஈற்று வினைச்சொல்

உசுடு. வினையெஞ்சு கிளவிக்கும் முன்னிலை மொழிக்கும்
நினையுங் காலை அவ்வகை வரையார்.

இஃது இவ் வீற்று வினையெச்சத்திற்கு மிக்கு முடியும் என்றலின், எய்தாத தெய்துவித்ததூஉம் முன்னிலை வினைக்கு இயல்பும் உறழ்பும் மாற்றுதலின் எய்தியது விலக்கியதூஉம் நுதலிற்று.

இ - ள்: வினையெஞ்சு கிளவிக்கும் — ஊகார ஈற்று வினையெச்சமாகிய சொற்கும், முன்னிலை மொழிக்கும் — முன்னிலை வினைச்சொற்கும், நினையுங் காலை அவ்வகை வரையார் — ஆராயுங் காலத்து அவ் வல்லெழுத்து மிக்கு முடியுங் கூற்றினை மீக்கார்; எ - று.

எ - டு: உண்ணூக் கொண்டான் சென்றூன் தந்தான் போயினூன் எனவும், கைதூக்கொற்று சாத்தா தேவா பூதா எனவும் வரும்.

நினையுங்காலை என்றதனான் இவ் வீற்று உயர்திணைப் பெயர்க்கும் அல்வழிக்கண் வல்லெழுத்துக் கொடுத்து முடிக்க. ஆடூஉக்குறியன் மகடூஉக்குறியள் என வரும். உயர்திணைப்பெயர் எடுத்தோதி முடிப்பா ராதலின் அம் முடிபு பெருமை ஈற்றுப் பொதுவிதியான்[2] முடியாது இலேசான் முடித்தாம்.

வேற்றுமையில் ஊகார ஈறு

உசுசு. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே.

இஃது ஊகார ஈறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: வேற்றுமைக்கண்ணும் அதனோ ரற்று — ஊகார ஈறு வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண்ணும் ஆகார ஈற்று அல்வழிபோல வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

---

1 கழூஉக் கடிது என்பது "முகர வுகரம மீடிட னுடைத்தே" எனலும் நூற்பாவிற் கேற்றுரையுந் தெரிகின்றது.

2 ஈற்றுப் பொதுவிதி — 'ஊகார விறுதி ஆகார வியற்றே' என்பது.

எ - டு: கழுஉக் கடுமை சிறுமை நீமை பெருமை, கொண்மூக் குழாம் செலவு தோற்றம் மறைவு என வரும். (சுச)

குறிற்கீழ் ஊகாரமும் தனிமொழி ஊகாரமும்

உசுஎ. குற்றெழுத் திம்பரும் ஒரெழுத்து மொழிக்கும்
நிற்றல் வேண்டும் உகரக் கிளவி.

இஃது இயைபு வல்லெழுத்திலேடு உகரம் வருத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: குற்றெழுத்து இம்பரும் — குற்றெழுத்தின்பின் வந்த ஊகார ஈற்று மொழிக்கும், ஒரெழுத்து மொழிக்கும் — ஒரெழுத் தொருமொழியாகிய ஊகார ஈற்று மொழிக்கும், உகரக் கிளவி நிற்றல் வேண்டும் — உகரமாகிய எழுத்து நிற்றலே விரும் பும் ஆசிரியன்; எ - று.

எ - டு: உடூஉக் குறை செய்கை தலை புறம் எனவும், தூஉக்குறை செய்கை தலை புறம் எனவும் வரும்.

நிற்றல் என்றதனான் உயர்திணைப் பெயர்க்கும் வல்லெழுத்தும் உகரமுங் கொடுக்க. ஆடூஉக்கை மகடூஉக்கை செவி தலை புறம் என வரும். இவை தொகைமரபினுள் இயல்பாதல் எய்தியவற்றை[1] ஈண்டு இருவழிக் கண்ணும் முடித்தார், ஈற்றுப் பொது ஒப்புமை கண்டு. (சுடு)

'பூ' என்னும் பெயர்

உசுஅ. பூஎன் ஒருபெயர் ஆயியல் பின்றே
ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே.

இஃது ஊகார ஈற்றுள் ஒன்றற்கு உகரமும் இயைபு வல்லெழுத்தும் விலக்கிப் பெரும்பான்மை மெல்லெழுத்துஞ் சிறுபான்மை வல்லெழுத்தும் பெறு மென எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள்: பூவென் ஒருபெயர் அ இயல்பு இன்று — பூவென் னும் ஊகார ஈற்றையுடைய ஒருபெயர் மேற்கூறிய உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் அவ் வியல்பின்மையை உடைத்து, ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்து — அவ்விடத்து மெல் லெழுத்து மிக்கு முடிதலேயன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உரித்து; எ - று.

எ - டு: பூங்கொடி சோலை தாமம் பத்து எனவும், பூக்கொடி செய்கை தாமம் பத்து எனவும் வரும்.

பூ வென்பது பொலிவென்னும் வினைக் குறிப்பை உணர்த்தாது நிற் றற்கு ஒருபெய ரென்றார். (சுசு)

1 இயல்பாதல எய்தியவற்றை — தொகைமரபினுள் கக-ம் நூறபாவில 'எலலா வழியும் இயலபுன மொழிப' என்ற விதியால இயலபானவற்றை.

'ஊ' என்னும் பெயர்

உசுக. ஊஎன் ஒருபெயர் ஆவொடு சிவணும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது, உகரமும் வல்லெழுத்தும் விலக்கி னகரம் விதித்தலின்.

இ - ள்: ஊவென் ஒருபெயர் — ஊவெனத் தசையை உணர்த்தி நின்ற ஓரெழுத்தொருமொழி, ஆவொடு சிவணும் — ஆகார ஈற்றில் ஆவென்னுஞ்சொல் வல்லெழுத்துப் பெறாது னகர ஒற்றுப் பெற்று முடிந்தாற்போல னகர ஒற்றுப் பெற்று முடியும்; எ - று.

எ - டு: ஊ வென நிறுத்தி னகர ஒற்றுக் கொடுத்து ஊன் குறை செய்கை தலை புறம் என முடிக்க. ஊ வென்பது தசையை உணர்த்திநின்ற வழக்கு ஆசிரியர் நூல் செய்த காலத்து வழக்கு. அன்றித் தேய வழக்கேனும் உணர்க. (சுஎ)

இதுவும் அது

உஎo. அக்கென் சாரியை பெறுதலும் உரித்தே
தக்கவழி அறிதல் வழக்கத் தான.

இஃது எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ - ள்: அக்கென் சாரியை பெறுதலும் உரித்து — அதிகாரத்தான் நின்ற ஊவென்னும் பெயர் முற்கூறிய னகரத்தோடு அக்கென்னுஞ் சாரியை பெற்று முடிதலும் உரித்து, வழக்கத்தான தக்கவழி அறிதல் — அம்முடிபு வழக்கிடத்துத் தக்க இடம் அறிக; எ - று.

தக்க வழி யறிதல் என்றதனாற் சாரியை பெற்றுழி னகரம் விலக்குண்ணாது நிற்றலும் முன் மாட்டேற்றல் விலக்குண்ட வல்லெழுத்துக் கெடாது நிற்றலுங் கொள்க.

எ - டு: ஊனக்குறை செய்கை தலை புறம் எனவரும்.

வழக்கத்தான என்றதனான் ஊகார ஈற்றுச் சொல்லிற்கு உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி இயைபுவல்லெழுத்துக் கெடுக்க. கொண்மூவின்குழாம் உடூஉவின்றலை ஊவின்குறை என வரும். (சுஅ)

'ஆடூஉ' 'மகடூஉ' என்னும் பெயர்கள்

உஎக. ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்
இன்இடை வரினும் மான[1] மில்லை.

1. மானம் - அளவு, வரை. வரைதல் - நீக்குதல். 'உருவு கொளல வரையார்' (எழு-கசo) எனறும் 'அவ்வகை வரையார்' (எழு - உசுடு) என்றும ஆசிரியர் கூறுதல் காண்க. மானமிலலை - வரைவில்லை, விலகலில்லை,

இது 'குற்றெழுத்திம்பரும்' (எழு - உசுஎ) என்பதனுள் நிற்றலென்ற இலேசான் எய்திய வல்லெழுத்தேயன்றிச் சாரியையும் வருத்தலின் எய்திய தன்மேற் சிறப்புவிதி உணர்த்தியது.

இ - ள்: ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும் — ஆடூஉ மகடூஉ வாகிய உயர்திணைப்பெயர் இரண்டிற்கும், இன் இடைவரினும் மானம் இல்லை — முன்னெய்திய வல்லெழுத்தே யன்றி இன் சாரியை இடையே வரினுங் குற்றமில்லை; எ - று.

எ - டு: ஆடூஉவின்கை மகடூஉவின்கை செவி தலை புறம் எனவரும்.
மானமில்லை என்றதனான் இன் பெற்றுழி மேல் எய்திய வல்லெழுத்து வீழ்க்க. (சுஈ)

எ. எர ஒர ஈறு

அல்வழியில் எர ஒர ஈறுகள்

உளஉ. எர ஒரம் பெயர்க்கீ ருகா
முன்னிலை மொழிய என்மனார் புலவர்
தேற்றமும் சிறப்பும் அல்வழி யான.

இஃது எர ஒரம் ஈறும் இடம் உணர்த்துகின்றது.

இ - ள்: தேற்றமுஞ் சிறப்பும் அல்வழி ஆன — தெளிவு பொருளுஞ் சிறப்புப பொருளும் அல்லாத வேற்றுமைப் பொருண்மையிடத்து அளபெடுத்துக் கூறுதலின் உளவாகிய, எர ஒரம் பெயர்க்கு ஈறுகா — எர ஒர ங்கள் பெயர்க்கு ஈறுய் வாரா வினைக்கு ஈறுய் வரும், முன்னிலை மொழிய என்மனார் புலவர் — அவைதாந் தன்மையினும் படர்க்கையினும் வாரா, முன்னிலைச்சொல்லிடத்தனவாமென்று கூறுவர் புலவர்; எ - று.

எனவே, தெளிவுபொருளினுஞ் சிறப்புப்பொருளினும் வந்து பெயர்க்கு ஈறும் இடைச்சொல்லாகிய எர ஒரம் மூன்றிடத்திற்கும் உரியவாமென்று பொருளாயிற்று. என இங்ஙனம் அருத்தாபத்தியாற் கொண்டதற்கு இலக்கணம் மேலைச் சூத்திரத்தாற் கூறுப.

எ - டு: எஎ[1]க்கொற்ற ஒஒ[2]க்கொற்ற சாத்தா தேவா பூதா எனவரும்.
இவை எனக்கு ஒரு கருமம்பணி எனவும், இங்ஙனஞ் செய்கின்றதனை ஒழி யெனவும் முன்னிலையேவற் பொருட்டாய் வந்தன. இதற்கு வல்லெழுத்துப் பெறுமாறு மேலே கூறுப. (எ0)

எர ஒர இடைச்சொற்கள்

உளஊ. தேற்ற எரமும் சிறப்பின் ஒவ்வும்
மேற்கூ றியற்கை வல்லெழுத்து மிகா.

இஃது எய்தியது இகந்துபடாமற் காத்து எய்தாத தெய்துவித்தது.

1. எ - எவ். 2. ஒ - நோக்கு.

இ - ள்: தேற்ற எகரமுஞ் சிறப்பின் ஒவ்வும் மேற் கூறு இயற்கை — முன்னர் அருத்தாபத்தியாற் [1]பெயர்க்கண் வருமென்ற தேற்றப்பொருண்மையில் எகரமுஞ் சிறப்புப்பொருண்மையில் ஒகரமும் மூன்றிடத்தும் வருமென்ற இலக்கணத்தனவாம், வல்லெழுத்து மிகா — வல்லெழுத்து மிக்கு முடியா, எனவே முன்னிலைக்கண் வருமென்ற எகர ஒகரங்கள் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: யானேஎகொண்டேன் நீயேஎகொண்டாய் அவனேஎகொண்டான் எனவும், யாழ்ஒகொடியன் நீயோஒகொடியை அவழ்ஒகொடியன்[2] எனவும் பெயர்க்கண் ஈறுய் இயல்பாய் வந்தவாறு காண்க. இது முன்னர் எய்திய இலக்கணம் இகவாமற் காத்தார். முன் நின்ற சூத்திரத்தின் முன்னிலைக்கும் வல்லெழுத்து மிகுத்து எய்தாத தெய்துவித்தார். இச் சூத்திரத்திற்கு அளபெடுத்தல் 'தெளிவினேயும்' (சொல் - உசுக) என்னுஞ் சூத்திரத்தாற் கொள்க. எனவே, முடிவபெற்றுழி இங்ஙனம் இடைச்சொல்லும் எடுத்தோதிப் புணர்ப்பரென்பதூஉம் பெற்றும். (எக)

அ. ஏகார ஈறு

அல்வழியில் ஏகார ஈற்றுப் பெயர்

உஎச. ஏகார இறுதி ஊகார இயற்றே.

இது நிறுத்தமுறையானே ஏகார ஈறு அல்வழிக்கண் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: ஏகார இறுதி — ஏகார ஈற்றுப்பெயர் அல்வழிக்கண், ஊகார இயற்று — ஊகார ஈற்று அல்வழியின் இயல்பிற்ருய் வல்லெழுத்துவந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: எக்கடிது சேக்கடிது சிறிது கீது பெரிது என வரும். (எஉ)

ஏகார இடைச்சொற்கள்

உஎடு. மாறுகோள் எச்சமும் வினவும் எண்ணும்
கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும்.

இஃது இடைச்சொற்கள் இயல்பாய்ப் புணர்கவென எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: மாறுகோள் எச்சமும் — மாறுகோடலை யுடைய எச்சப்பொருண்மைக்கண் வரும் ஏகார ஈற்று இடைச்சொல்லும்,

---

1 அருத்தாபத்தி - இருவகைப பொருளகளில ஒருவகைகக விதநது கூறியதை இன்னொருவகைகக இலகலியெனறு கொள்ளுதல. முநதின நூறபாவில, தெளிவு பொருளினும சிறபபுப பொருளினும வராது விடினகு ஈறுகும எகர ஒகரம முனனிலைக குரியவாம எனவே தெளிவு பொருளினும சிறப்புப பொருளினும வருது பெயாககு ஈரும இடைசசொலலாகிய எகர ஒகரம மூனறிடதகிறகும உரியவாமி என்று கொண்டது அருத்தாபததி.
இவ வெடுத்துக்காட்டுகள் செயயுள் வழககு.

வினவும் — வினப்பொருண்மைக்கண் வரும் ஏகார ஈற்று இடைச் சொல்லும், எண்ணும் — எண்ணுப் பொருண்மைக்கண் வரும் ஏகார ஈற்று இடைச்சொல்லும், கூறிய வல்லெழுத்து இயற்கை யாகும் — முற்கூறிய வல்லெழுத்துப் பெறுது இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: யானேகொண்டேன் சென்றேன் தந்தேன் போயினேன் என் புழி யான்கொண்டிலேனென மாறுகொண்ட ஒழிபுபட நின்றது. நீயேகொண் டாய் சென்றாய் தந்தாய் போயினாய் எனவும், நிலனே நீரே தீயே வளியே கொற்றனே சாத்தனே எனவும் வரும்.

கூறிய என்றதனுற் பிரிநிலை ஏகாரமும் ஈற்றசை ஏகாரமும் இயல்பாய் முடிதல் கொள்க. அவருள் இவனே கொண்டான் எனவும், 'கழியே, சிறு குருனைத்தலொடு பாடோவாதே - கடலே, பாடெழுந்தொலிக்கும்' எனவும் வரும். (எக)

வேற்றுமையில் ஏகார ஈறு

உஎகூ. வேற்றுமைக் கண்ணும் அதனே ரற்றே.

இஃது இவ் வீற்று வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இ - ள்: வேற்றுமைக்கண்ணும் — ஏகார ஈற்று வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணும், அதனேரற்று — ஊகார ஈறு அல்வழிபோல வல்லெழுத்து வந்துழி அவ்வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: எக்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும், வேக்குடம் சாடி தூதை பானை எனவும் வரும்.

வேக்குடம் வேதலையுடைய குடமென விரியும். (எச)

அதற்கு மேலும் ஒரு முடிபு

உஎஎ. ஏயென் இறுதிக்கு எகரம் வருமே.

இது வல்லெழுத்தினோடு எகரம் விதித்தலின் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ - ள்: ஏயென் இறுதிக்கு எகரம் வரும் — அவ் வேற் றுமைக்கண் ஏயென்னும் இறுதிக்கு எகரம் வரும்; எ - று.

எ - டு: ஏஎக்கொட்டில் சாலே தூளே புழை என வரும்.

வருமொழி வரையாது கூறினமையின் இயல்புகணத்துக்கண்ணும் வரு மெனக் கொள்க. ஏஎஞெகிழ்ச்சி நேர்மை என வரும். உரையிற் கோடலால் எகாரம் ஏற்புழிக் கொள்க. (எடி)

'சே' என்னும் மரப்பெயர்

உஎஅ. சேஎன் மரப்பெயர் ஒடுமர இயற்றே.

இஃது அவ் வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தது.

இ - ள்: சே என் மரப்பெயர் — பெற்றமன்றிச் சேவென்னும் மரத்தினை உணர்ந்நின்ற பெயர், ஒடுமர இயற்று — ஒடுமரம் போல மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: சேங்கோடு செதிள் தோல் பூ என வரும். (எசு)

'சே' என்னும் விலங்கின் பெயர்

உஎகூ. பெற்றம் ஆயின் முற்றஇன் வேண்டும்.

இஃது இயைபு வல்லெழுத்து விலக்கி இன் வருத்தது.

இ - ள்: பெற்றம் ஆயின் — முற்கூறிய சேவென்பது பெற்றத்தினை உணர்த்திய பொழுதாயின், முற்ற இன் வேண்டும் — முடிய இன்சாரியை பெற்று முடியவேண்டும்; எ - று.

எ - டு: சேவின்கோடு செவி தலை புறம் என வரும்.

முற்ற என்றதனானே முற்கூறிய சேவென்னும் மரப் பெயர்க்கும் ஏவென்பதற்கும் உருபிற்கு எய்திய சாரியை பொருட்கட் சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்தல் கொள்க. சேவின்கோடு செதிள் தோல் பூ எனவும், ஏவின்கடுமை சிறுமை தீமை பெருமை எனவும் வரும்.

சாரியைப்பேறு வருமொழி வரையாது கூறினமையின் இயல்புகணத்தும் இன்பெறுதல் கொள்க. சேவினலம் மணி வால் சேவினிமில் சேவினடை சேவிலுட்டம் என வரும்.

இன்னும் இதனானே இயல்புகணத்துக்கண் இன் பெறாது வருதலுங் கொள்க. செய்யுட்கண் 'தென்றற்கு வீணைக்குச் சேமணிக்குக் கோகிலத்திற்—கன்றிற்கு' என வரும். (எஎ)

கூ. ஐகார ஈறு

வேற்றுமையில் ஐயிற்றுப் பெயர்

உஅ0 ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
வேற்றுமை யாயின் வல்லெழுத்து மிகுமே.

இஃது ஐகார ஈறு வேற்றுமைக்கண் முடியுமாறு கூறுகின்றது. தொகை மரபினுள் 'வேற்றுமையல்வழி இஐயென்னும்' (எழு - கூஅ) என்பதன்கண் அல்வழி முடித்தார்.

இ - ள்: ஐகார இறுதிப் பெயர்நிலை முன்னர் — ஐகார ஈற்றுப் பெயர்ச்சொன் முன்னர் அதிகாரத்தாற் நசதப முதன்மொழி வந்துழி, வேற்றுமையாயின் வல்லெழுத்து மிகும் — வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயின் தமக்குப் பொருந்தின வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: யானைக்கோடு செவி தலை புறம் என வரும்.

வேற்றுமையாயின் என்றதனான் உருபு புணர்ச்சிக்கண்ணும் யானையைக் கொணர்ந்தானென வல்லெழுத்து மிகுதல் கொள்க. (எஅ)

சுட்டுப் பெயர்

உஅக. சுட்டுமுதல் இறுதி உருபியல் நிலையும்.

இது வல்லெழுத்தினோடு வற்று வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ - ள்: சுட்டுமுதல் இறுதி — சுட்டெழுத்தினை முதலாக வுடைய ஐகார ஈற்றுப்பெயர், உருபியல் நிலையும் — உருபு புணர்ச்சியிற் கூறிய இயல்புபோலப் பொருட் புணர்ச்சிக்கண் வற்றுப்பெற்று முடியும்; எ - று.

எ - டு: அவையற்றுக்கோடு இவையற்றுக்கோடு உவையற்றுக்கோடு செவிதலை புறம் என வரும். இதனை 'வஃகான்மெய்கெட' (எழு - கஉஉ) என்பதனுன் முடிக்க. (எக)

'விசை' 'ஞெமை' 'நமை' என்னும் மரப்பெயர்கள்

உஅஉ. விசைமரக் கிளவியும் ஞெமையும் நமையும்
ஆமுப் பெயரும் சேமர இயல.

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: விசைமரக் கிளவியும் — விசைத்தற்றொழிலன்றி விசையென்னும் மரத்தை உணர்கின்ற சொல்லும், ஞெமையும் — ஞெமை யென்னும் மரத்தினை உணர்கின்ற சொல்லும், நமையும் — நமை யென்னும் மரத்தினை உணர்கின்ற சொல்லும், ஆ முப்பெயரும — ஆகிய அம்மூன்று பெயரும், சேமர இயல — வல்லெழுத்து மிகாது சேமரம்போல மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: விசைஞகோடு ஞெமைஞகோடு நமைஞ்கோடு செதிள் தோல் பூ என வரும். இவை கசதப முதலிய மொழிமேல் தோன்றும் மெல்லெழுத்து[1] என்று உணர்க. (அ0)

'பனை' 'அரை' 'ஆவிரை' என்னும் மரப்பெயர்கள்

உஅங. பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும்
நினையுங் காலை அம்மொடு சிவணும்
ஐயென் இறுதி அரைவரைந்து கெடுமே
மெய்அவண் ஒழிய என்மனார் புலவர்.

இஃது இயைபுவல்லெழுத்து விலக்கி அம்மு வகுத்தது.

இ - ள்: பனையும் அரையும் ஆவிரைக் கிளவியும் — பனை யென்னும் பெயரும் அரையென்னும் பெயரும் ஆவிரையென்னும் பெயரும், நினையுங் காலை அம்மொடு சிவணும் — ஆராயுங்காலத்து

1 'கசதப முதலிய மொழிமேல் தோன்றும் மெல்லெழுத்து' எனபது தொகைமரபு க-ம நூற்பாவின் முற்பகுதி.

வல்லெழுத்து மிகாது அம்முச்சாரியையொடு பொருந்தி முடியும், ஐயென் இறுதி அரை வரைந்து கெடும் — அவ்விடத்து ஐ யென்னும் ஈறு அரையென்னுஞ் சொல்லை நீக்கி ஏனை இரண்டிற்குங் கெடும், மெய் அவண் ஒழிய என்மனார் புலவர் — தன்னுன் ஊரப்பட்ட மெய்கெடாது அச்சொல்லிடத்தே நிற்க என்று கூறுவர் புலவர்; எ - று.

எ - டு: பனை ஆவிரை என நிறுத்தி அம்மு வருவித்து ஐகாரங் கெடுத்து ஒற்றின்மேலே அகரமேற்றிப் பனங்காய் ஆவிரங்கோடு செதிள் தோல் பூ என வரும். அரையென நிறுத்தி அம்முக் கொடுத்து ஐகாரங் கெடாது அரையங் கோடு செதிள் தோல் பூ என முடிக்க. வல்லெழுத்துக்கேடு மேலே 'கடிநிலையின்று' (எழு - உஅடு) என்றதனுற் கூறுதும்.

நீனையுங்காலை யென்றதனுல் தூதுணை வழுதுணை தில்லை ஓலை தாழை என நிறுத்தி அம்முக்கொடுத்து ஐகாரங்கெடுத்துத் தூதுணங்காய் வழுதுணங்காய் தில்லங்காய் ஓலம்போழ் தாழங்காய் என முடிக்க. (அக)

'பனை' முன் 'அட்டு'

உஅச. பனையின் முன்னர் அட்டுவரு காலை
நிலையின் ருகும் ஐயென் உயிரே
ஆகாரம் வருதல் ஆவயி னை.

இது நிலைமொழிச் செய்கை நோக்கி எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: பனையின் முன்னர் அட்டு வருகாலை — முற்கூறிய வாற்றிப் பனையென்னுஞ் சொன்முன்னர் அட்டென்னுஞ்சொல் வருமொழியாய் வருங்காலத்து, நிலையின்று ஆகும் ஐயென் உயிர் — நிற்றலில்லையாகும் ஐயென்னும் உயிர், ஆவயின் ஆன ஆகாரம் வருதல் — அவ்விடத்து ஆகாரம் வந்து அமமெய்ம் மேலேறி முடிக; எ - று.

எ - டு: பனஅட்டு என வரும். இதற்கு மூன்றுவதும் ஆறுவதும் விரியும்.

ஆவயினை என்றதனுல் ஓராநயம் விச்சாவாதி என்னும் வேற்றுமை முடிபுங் கேட்டாமூலம் பாருங்கல் என்னும் அல்வழிமுடிபுங் கொள்க. இவற் றுள் வடமொழிகளோ[1] மறுத்தலும் ஒன்று. (அஉ)

'பனை' முன் 'கொடி'

உஅஞ. கொடிமுன் வரினை ஐயவண் நிற்பக்
கடிநிலை யின்றே வல்லெழுத்து மிகுதி.

இது மேல் ஐகாரங் கெடுத்து அம்முப்பெறுக என்றார், ஈண்டு அது கெடாதுநிற்க என்றலின் எய்தியது இகந்து படாமற் காத்தது. அம்மு விலக்கி வல்லெழுத்து விதித்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தமாம்.

1 வடமொழிகள் விச்சாவாதி கேட்டாமூலம் எனபன.

இ - ள்: முன் கொடி வரின் — பனையென்னுஞ் சொன்முன்னர்க் கொடியென்னுஞ் சொல் வரின், ஐ அவண் நிற்ப — கேடு ஓகிய ஐகாரம் ஆண்டுக் கெடாது நிற்ப, வல்லெழுத்து மிகுதி கடிநிலையின்று — வல்லெழுத்து மிக்கு முடிதல் நீக்கு நிலைமையின்று; எ - று.

எ - டு: பனைக்கொடி என வரும். இதற்கு இரண்டாவதும் மூன்றுவதும் விரியும்.

கடிநிலையின்று என்றதனுன் ஐகார ஈற்றுப்பெயர்களெல்லாம் எடுத்தோத்தானும் இலேசானும் அம்முச்சாரியையும் பிறசாரியையும் பெற்றுழி அதிகார வல்லெழுத்துக் கெடுத்துக் கொள்க.

இன்னும் இதனுனே உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. பனையின்குறை அரையின்கோடு ஆவிரையின்கோடு விசையின்கோடு ஞெமையின்கோடு ஈமையின்கோடு எனவும், தூதுணையின்காய் வழுதுணையின்காய உழையின்கோடு வழையின்கோடு எனவும் வரும்.

பனைத்திரள் பனைந்திரள் என்னும் உறழ்ச்சிமுடிபு தொகை மரபினுட் புறனடையாற் கொள்க; அல்வழியு மாதலின். அன்றி ஈண்டு அவணென்றதனுற் கொள்வாரும் உளர். (அஉ)

திங்கட்பெயரும் நாட்பெயரும்

உஅசு. திங்களும் நாளும் முந்துகிளந் தன்ன.

இஃது இயைபு வல்லெழுத்திஞெடு இக்குச் சாரியையும் வல்லெழுத்து விலக்கி ஆன்சாரியையும் வகுத்தலின் எய்தியதன்மேற் சிறப்புவிதியும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதியுங் கூறுகின்றது

இ - ள்: திங்களும் நாளும் — ஐகார ஈற்றுத் திங்களோ உணரநின்ற பெயரும் நாளோ உணரநின்ற பெயரும், முந்து கிளந்தன்ன — இகர ஈற்றுத் திங்களும் நாளும்போல இக்கும் ஆனும் பெற்று முடியும்; எ - று.

எ - டு: சித்திரைக்குக்கொண்டான் கேட்டையாற்கொண்டான் சென்றான் தந்தான் போயினன் என வரும். சித்திரை நாளாயின் ஆன்சாரியை கொடுக்க. வல்லெழுத்துக்கேடு முன்னர்க் 'கடிநிலையின்று' (எழு - உஅரு) என்றதனுற் கொள்க.

திங்கள் முற்கூறிய முறையன்றிக் கூற்றினுல் உழைங்கோடு அமைங்கோடு உடைங்கோடு என மெல்லெழுத்துக் கொடுத்துங் கலைங்கோடு கலைக்கோடு என உறழ்ச்சி எய்துவித்துங் காரியவற்றுக்கோடு குறியவற்றுக்கோடு செடியவற்றுக்கோடு என ஐகார ஈற்றுப் பண்புப்பெயர்க்கு வற்றுக்கொடுத்து ஐகாரங்கெடுத்து வற்றுமிசை யொற்றென்று ஒற்றுக்கெடுத்தும் அவையத்துக் கொண்டான் அவையிற்கொண்டான் என அத்தும் இன்னுங் கொடுத்தும் பனையின் மாண்பு கேட்டையினுட்டிஞனென இயல்புகணத்துக்கண் இன்சாரியை கொடுத்தும் முடிக்க. ஐகார ஈறு இன்சாரியை பெறுதல் தொகை மரபினுட் கூறுமையின் ஈண்டுக்கொண்டாம். (அச(

'மழை' என்னுஞ் சொல்

உஅஎ. மழையென் கிளவி வளியியல் நிலையும்

இது வல்லெழுத்திற்கேடு அத்து வருத்தலின் எய்தியதன்மேற் சிறப்பு விதியும் இயைபுவல்லெழுத்து விலக்கி இன் வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதியுங் கூறுகின்றது.

இ - ள்: மழையென் கிளவி — மழையென்னும் ஐகார ஈற்றுச்சொல், வளியியல் நிலையும் — வளியென்னுஞ் சொல் அத்தும் இன்னும் பெற்றுமுடிந்த இயல்பின்கண்ணே நின்று முடியும்; எ - று.

எ - டு: மழையத்துக் கொண்டான் மழையிற் கொண்டான் சென்றான் தந்தான் போயினன் என வரும்.

ஈண்டு இன்பெற்றுழி வல்லெழுத்துக்கேடு 'கடிநிலை யின்று' (எழு - உஅஅ) என்றதனாற் கொள்க. சாரியைப் பேறு வருமொழி வரையாது கூறினமையின் இயல்புகணத்துக்கண்ணுங் கொள்க. மழையத்து ஞான்றான் மழையின் ஞான்றான் நிறுத்தினன் மாட்டினன் வந்தான் அடைந்தான் என ஒட்டுக. (அடு)

'வேட்கை' முன் 'அவா'

உஅஅ. செய்யுள் மருங்கின் வேட்கை என்னும்
ஐயென் இறுதி அவாமுன் வரினே
மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர்
டகாரம் ணகார மாதல் வேண்டும்.[1]

இது வேற்றுமைக்கண் செய்யுண் முடிபு கூறுகின்றது.

இ - ள்: செய்யுள் மருங்கின் வேட்கை என்னும ஐயென் இறுதி — செய்யுளிடத்து வேட்கையென்னும் ஐகார ஈற்றுச் சொல், அவா முன் வரின் — அவாவென்னுஞ் சொற்கு முன்னர் வரின், மெய்யொடுங் கெடுதல் என்மனார் புலவர் — அவ்வைகாரம் தான் ஊர்ந்த மெய்யோடுங் கூடக் கெடுமென்று கூறுவர் புலவர், டகாரம் ணகாரம் ஆதல் வேண்டும் — அவ்விடத்து நின்ற டகார ஒற்று ணகார ஒற்றாய்த் திரிதல்வேண்டும்; எ - று.

எ - டு: 'வேணவாவலிய வெய்யவுயிரா' என வரும்.

வேட்கையாவது பொருள்கள்மேல் தோன்றும் பற்றுள்ளம். அவாவாவது அப் பொருள்களைப் பெறவேண்டு மென்று மேன்மேல் நிகழும் ஆசை. எனவே, வேட்கையா லுண்டாகிய அவாவென மூன்றனுருபு விரிந்தது. இதனை வேட்கையும் அவாவு மென அல்வழி யென்பாரும் உளர். இங்ஙனங் கூறுவார் பாறங்கல் என்பதனை அம்முக் கொடுத்து ஈண்டு முடிப்பர். (அசு)

---

1 இந நூற்பாவினபடி, வேட்கை + அவா = வேணவா எனறு முடிகாமல வேண + அவா = வேணவா எனறே முடிகையும் கூடும். வேள்—வேண, ஒ. நோ; பெள் - பெண.

க0. ஓகார ஈறு

அல்வழியில் ஓகார ஈற்றுப் பெயர்

உஅக. ஓகார இறுதி ஏகார இயற்றே.

இஃது ஓகார ஈற்று அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள்: ஓகார இறுதி ஏகார இயற்று — ஓகார ஈற்றுப் பெயர்ச்சொல் ஏகார ஈற்று அல்வழியின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ – று.

எ - டு: ஓக்கடிது சோக்கடிது சிறிது தீது பெரிது என வரும். (அஎ)

ஓகார இடைச் சொல்

உகக0. மாறுகொள் எச்சமும் வினவும் ஐயமும்
கூறிய வல்லெழுத் தியற்கை யாகும்.

இஃது இடைச்சொல்முடிபு கூறலின் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: மாறுகொள் எச்சமும் — மாறுபாட்டினைக்கொண்ட எச்சப்பொருண்மையை ஒழிபாகவுடைய ஓகாரமும், வினவும் — வினாப்பொருண்மையை யுடைய ஓகாரமும், ஐயமும் — ஐயப் பொருண்மையையுடைய ஓகாரமும், கூறிய வல்லெழுத்து இயற்கையாகும் — முற்கூறிய வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: யானே கொண்டேன் எனவும், நீயோ கொண்டாய் எனவும், பத்தோ பதினென்றே புற்றே புதலோ எனவும் வரும்.

கூறிய என்றதனான் 'யானே தேறே னவர்பொய் வழங்கலரே' (குறு - உக) எனப் பிரிநிலையும் ஈன்றே தீதோ கண்டது எனத் தெரிநிலையும் ஓஒ கொண்டான் எனச் சிறப்புங் 'குன்றுறழ்ந்த களிறென்கோ கொய்யுளைய மாவென்கோ' (புறம் - நஅஎ) என எண்ணுநிலையும் வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடிதல் கொள்க. இதனானே ஈற்றசை, வருமேனும் உணர்க. (அஅ)

இதுவும் அது

உகக. ஒழிந்ததன் நிலையும் மொழிந்தவற் றியற்றே.

இதுவும் அது.

இ - ள்: ஒழிந்ததன் நிலையும் மொழிந்தவற்று இயற்று — ஒழியிசை ஓகாரத்தினது நிலையும் முற்கூறிய ஓகாரங்களின் இயல்பிற்றாய் இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: கொளலோ கொண்டான்[1] செலலோ சென்றான் தரலோ தந்தான் போதலோ போயினன் என ஓசை வேற்றுமையான் ஒருசொல் தோன்றப் பொருள் தந்து நிற்கும். (அக)

---

1 கொளலோ கொண்டான — கொண்டிலன். இங்ஙனமே பிறவும.

வேற்றுமையில் ஓகார ஈற்றுப் பெயர்

உகூஉ. வேற்றுமைக் கண்ணும் அதனோ ரற்றே
ஓகரம் வருதல் ஆவயி னான.

இஃது ஓகார ஈற்று வேற்றுமைமுடிபுகூறுகின்றது.

இ - ள்: வேற்றுமைக்கண்ணும் அதனோரற்று — ஓகார ஈறு வேற்றுமைக்கண்ணும் அவ் வோகார ஈற்று அல்வழியோடு ஒத்து வல்லெழுத்து மிக்குமுடியும். ஆவயினான ஓகரம் வருதல் — அவ்விடத்து ஓகரம் வருக; எ - று.

எ - டு: ஓஒக்கடுமை கோஒக்கடுமை சிறுமை நீமை பெருமை என வரும். (கூய)

'கோ' முன் 'இல்'

உகூங. இல்லொடு கிளப்பின் இயற்கை யாகும்.

இஃது எய்தியது விலக்கிற்று. என்னை? முன்னர் வன்கணம் வந்துழி ஓகரம் பெறுகவென வரைந்து கூறுதும் நிலைமொழித்தொழில் வரையாதுங் கூறலின் நான்கு கணத்துக்கண்ணுஞ் சேறலின்.

இ - ள்: இல்லொடு கிளப்பின் இயற்கையாகும் — ஓகார ஈற்றுக் கோவென்னும் மொழியினை இல்லென்னும் வருமொழி யோடு சொல்லின் ஓகரம் மிகாது இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: கோவில் என வரும். கோவென்றது உயர்திணைப் பெயரன்றே வெனின், கோவந்ததென்று அஃறிணையாய் முடிதலின் அஃறிணைப்பாற் பட்டதென்க[1]. (கூக)

சில ஈறுகட்குச் சாரியை

உகூச. உருபியல் நிலையும் மொழியுமா ருளவே
ஆவயின் வல்லெழுத் தியற்கை யாகும்.

இது வல்லெழுத்து விலக்கிச் சாரியை வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: உருபியல் நிலையும் மொழியுமாருள — ஓகார ஈற்றுச் சில பொருட்புணர்ச்சிக்கண் உருபுபுணர்ச்சியது இயல்பிலே நின்று ஒன்சாரியை பெற்று முடியும் மொழிகளும் உள, ஆவயின் வல்லெழுத்து இயற்கையாகும் — அவ்விடத்து வல்லெழுத்தின்றி இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: கோவன்கை செவி தலை புறம் என வரும்.

சாரியைப்பேறு வருமொழி வல்லெழுத்தை விலக்காமை இதனானும் பெற்றாம். (கூஎ)

---

1 அஃறிணைபபாற படுதலாவது சொலலால அஃறிணையாயும் பொருளால உயாதிணை யாயு மிருத்தல்.

கக. ஔகார ஈறு

இரு வழியிலும் ஔகார ஈற்றுப்பெயர்

உகரு. ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர்
அல்வழி யானும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத்து மிகுதல் வரைநிலை யின்றே
அவ்விரு ஈற்றும் உகரம் வருதல்
செவ்வி தென்ப சிறந்திசி னோரே.

இஃது ஔகார ஈறு இருவழியும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள் : ஔகார இறுதிப் பெயர்நிலை முன்னர் — ஔகாரம் இறுதியாகிய பெயர்ச்சொன் முன்னர் வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வரின், அல்வழியானும் வேற்றுமைக்கண்ணும் — அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும், வல்லெழுத்து மிகுதல் வரைநிலையின்று — வல்லெழுத்து மிக்கு முடிதல் நீக்கு நிலைமை யின்று, அவ்விரு ஈற்றும் உகரம் வருதல் செவ்விதென்ப சிறந்திசி னோர் — அவ்விருகூற்று முடிபின்கண்ணும் நிலைமொழிக்கண் உகரம்வந்து முடிதல் செவ்விதென்று சொல்லுவர் சிறந்தோர்; எ - று.

எ - டு : கௌவுக்கடிது சிறிது நீது பெரிது எனவும், கடுமை சிறுமை நீமை பெருமை எனவும் வரும்.

செவ்விதென்றதனுன் மென்கணத்தும் இடைக்கணத்தும் உகரம் பெறுதல் கொள்க. கௌவுஞமிர்ந்தது ஞமிர்ச்சி எனவும், வௌவு வலிது வலிமை எனவும் வரும்.

நிலைமொழி யென்றதனுற் கௌவின்கடுமை என உருபிற்குச்சென்ற சாரியை பொருட்கட்சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்வுங கொள்க.

இன்னும் இதனுனே ஐகாரமும் இகரமும் வேற்றுமைக்கண் உருபு தொகையாயுழி இயல்பாதல் கொள்க. (கூடு)

உயிர்மயங்கியல் முற்றிற்று.

அ. புள்ளிமயங்கியல்

[மெய்யீறுகளின் புணர்ச்சி யிலக்கணம் உணர்த்துவது]

க. மெல்லொற்று ஈறுகள்

இருவழியிலும் ஞகார ஈற்றுத் தொழிற்பெயர்

உகூ. **ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்**
அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே
உகரம் வருதல் ஆவயி னான.

என்பது சூத்திரம்.

நிறுத்த முறையானே உயிரீறு புணர்த்துப் புள்ளியீறு வன்கணத்தோடுஞ் சிறுபான்மை ஏனைக்கணத்தோடும் புணருமாறு கூறலின் இவ்வோத்துப் புள்ளி மயங்கியலென்னும் பெயர்த்தாயிற்று.

இச் சூத்திரம் ஞகார ஈறு வன்கணத்தோடு இருவழியும் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: *ஞகாரை ஒற்றிய தொழிற்பெயர் முன்னர்—ஞகாரம் ஈற்றின்கண் ஒற்றுகின்ற தொழிற்பெயரின் முன்னர், அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும் — அல்வழியைச் சொல்லுமிடத்தும் வேற்றுமையைச் சொல்லுமிடத்தும், வல்லெழுத்து இயையின் அவ்வெழுத்து மிகும் — வல்லெழுத்து முதன் மொழி வருமொழியாய் வரின் அவ்வல்லெழுத்து வருமொழிக்கண் மிக்கு முடியும், ஆவயின் ஆன உகரம் வருதல் — அவ்விடத்து உகரம் வருக; எ - று.*

எ - டு: *உரிஞுக்கடிது சிறிது நீது பெரிது எனவும், உரிஞுக்கடுமை சிறுமை நீமை பெருமை எனவும் வரும்.* (க)

அதற்கு மேலும் ஒரு முடிபு

உகூ. **ஞநமவ இயையினும் உகரம் நிலையும்.**

இஃது அவ் வீறு மென்கணத்தோடும் இடைக்கணத்து வகரத்தோடும் முடியுமென எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: *ஞநமவ இயையினும் உகரம் நிலையும் — அஞ்ஞகர ஈறு வன்கணமன்றி ஞநமவ முதன்மொழி வருமொழியாய் வரினும் நிலைமொழிக்கண் உகரம் நிலைபெற்று முடியும்; எ - று.*

எ - டு: *உரிஞுஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும்.*

யகரத்தோடும் உயிரோடும் புணருமாறு தொகைமரபினுள் 'உகரமொடு புணரும்' (எழு - கசுஉ) என்பதனுற் கூறினர். (உ)

அல்வழியில் நகர ஈறு

உகூஅ. நகர இறுதியும் அதனே ரற்றே.

இது நகர ஈறு முற்கூறிய கணங்களோடு அல்வழிக்கண் முடியுமாறு கூறி எய்தாத தெய்துவிக்கின்றது.

இ - ள்: நகர இறுதியும் — நகரவீற்றுப் பெயரும் முற்கூறிய கணங்களோடு புணரும்வழி, அதனேரற்று — அஞ் ஞகரவீற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ் லெழுத்து மிக்கு உகரம் பெற்றும் ஞநமவ வந்துழி உகரம்பெற்றும் முடியும்; எ - று.

எ - டு: பொருதுக்கடிது வெரிதுக்கடிது சிறிது தீது பெரிது எனவும் ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும் வரும். முடிபு ஒப்புமை நோக்கி நகர ஈறு ஈண்டுப் புணர்த்தார். ஈண்டு வேற்றுமை யொழித்து மாட்டேறு[1] சென்றதென்று உணர்க. (ந)

வேற்றுமையில் நகர ஈறு

உகூக. வேற்றுமைக்கு உக்கெட அகரம் நிலையும்.

இது நிலைமொழி உகரம் விலக்கி அகரம் வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள்: வேற்றுமைக்கு — அந்நகர ஈறு வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கு, உக்கெட அகரம் நிலையும் — மேலெய்திய உகரங் கெட அகரத்தோடு நிலைபெற்றுப் புணரும்; எ - று.

எ - டு: பொருநக்கடுமை வெரிநக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை என வரும். அகரநிலையுமென்னுது உகரங் கெட என்றதனான் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி இயைபுவல்லெழுத்து வீழ்வுஞ் சிறுபான்மை உகரப்பேறுங் கொள்க. வெரிநின்குறை பொருநின்குறை உரிஞின்குறை எனவும், 'உயவல் யானை வெரிநச் சென்றனன்' (அகம் - சுடு) எனவும் வரும். யானையினது முதுகின்மேற் சென்றனன் என விரிக்க.

பொருந் என்பது ஒரு சாதிப்பெயரும் பொருந்துத லென்னும் வினைப் பெயருமாம். (ச)

'வெரிந்' என்னுஞ் சொல்

ஈ00. வெரிந்என் இறுதி முழுதுங் கெடுவழி
வருமிடன் உடைத்தே மெல்லெழுத் தியற்கை.

இஃது அந்நகர ஈற்றுள் ஒருமொழிக்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

1 வேற்றுமை யொழித்து மாட்டேறு சென்றது - முன்னை நூறபாக்களில் ஞகர விறுதிக்கு இருவழியும் கூறபபட்டன. ஆகையால, அதனேரற்றே என்னும் மாட்டேறு நகர விறுதிக்கும் இருவழியும் கொள்ளவைத்தல வேணடும. ஆனல பிந்தின நூறபாவில வேறறுமை வழியை விதந்து கூறியிருப்பதால, அமமாட்டேறு வேறறுமை வழியை விலகுகிறதென்பது.

இ - ள்: வெரிந் என் இறுதி — வெரிநென்று சொல்லப்படும் நகர ஈற்றுமொழி, முழுதுங் கெடுவழி — தன் ஈற்று நகரம் முன் பெற்ற உகரத்தோடு எஞ்சாமைக் கெட்ட இடத்து, மெல் லெழுத்து இயற்கை வரும் இடன் உடைத்து — மெல்லெழுத்துப் பெறும் இயலபு வந்து முடியும் இடனுடைத்து; எ - று.

எ - டு: வெரிங்குறை செய்கை தலை புறம் என வரும். மெல்லெழுத்து வருமொழி நோக்கி வந்தது. 'வெயில்வெரி நிறுத்த பயிலிதழ்ப் பசுங்குடை' (அகம் - நஎ) என்பதில் நகர இகரமே இட்டெழுதுப.[1] (கூ)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

நஂ0க. ஆவயின் வல்லெழுத்து மிகுதலும் உரித்தே.

இஃது அதற்கு எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: ஆவயின் — அவ்வெரிந என்னுஞ் சொல் அவ்வாறு ஈறு கெட்டு நின்ற இடத்து, வல்லெழுத்து மிகுதலும் உரித்து — மெல்லெழுத்தேயன்றி வல்லெழுத்து மிக்கு முடிதலும் உரித்து; எ - று.

எ - டு: வெரிக்குறை செய்கை தலை புறம் என வரும். (சு)

வேற்றுமையில் ணகர ஈறு

நஂ0உ. ணகார இறுதி வல்லெழுத் தியையின்
டகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இது நிறுத்த முறையானே ணகார ஈறு வேற்றுமைப் பொருட்கண் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: ணகார இறுதி — ணகார ஈற்றுப் பெயர், வல்லெழுத்து இயையின் — வல்லெழுத்து முதன்மொழி வந்து இயையின், டகாரமாகும் வேற்றுமைப் பொருட்கு — டகாரமாகத் திரிந்து முடியும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்; எ - று.

எ - டு: மட்குடம் சாடி தூதை பானை என வரும். மண்கை புண்கை என்பன இரண்டாவதன் திரிபின்[2] முடிந்தன.
கவண்கால் பரண்கால் என்பன மேல் முடித்தும். (எ)

'ஆண்' 'பெண்' என்னுஞ் சொற்கள்

நஂ0ங. ஆணும் பெண்ணும் அஃறிணை இயற்கை.

இஃது இவ் வீற்று விரவுப்பெயருள் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

---

1 "வெயில வெரி நிறுத்த...இட்டெழுதுப." என்பது ந ன ண என்னும் மூன்று இன வெழுத்துகளுள் முதலதே முந்தினது எனபதை உணர்த்தும்.
2 இரண்டாவதன் திரிபு — தொகை மரபு கரு-ம் நூறபாவிற கூறிய உ - ம் வேற்றுமைத் திரிபு.

இ - ள்: ஆணும் பெண்ணும் — ஆணென்னும் விரவுப்பெயரும் பெண்ணென்னும் விரவுப் பெயரும், அஃறிணை இயற்கை — தொகை மரபினுள் 'மொழி முதலாகும்' (எழு - கசஎ) என்பதன்கண் அஃறிணைப்பெயர் முடிந்த இயல்புபோலத் தாமும் வேற்றுமைக்கண் இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: ஆண்கை பெண்கை செவி தலை புறம் என வரும்.

இது தொகைமரபினுள் 'அஃறிணை விரவுப்பெயர்' (எழு - கடுடு) என்பதனுள் முடிந்த இயல்பன்றேவெனின், இவை ஆண்டு முடிந்தனபோலத் தத்தம் மரபின் வினையாற் பாலறியப்படுவன அன்றி இருதிணைக்கண்ணும் அஃறிணையாய் முடிதலின்,[1] அஃறிணைப் பெயரது இயல்போடு மாட்டெறிந்து முடித்தா றென்க. ஆண்கடிது பெண்கடிது என்னும் அல்வழிமுடிபு 'மொழி முதலாகும்' (எழு - கசஎ) என்பதன்கண் வருமொழி முற்கூறியவதனான் முடிக்க. (அ)

'ஆண்' என்னும் மரப்பெயர்

நூ0ச. ஆண்மரக் கிளவி அரைமர இயற்றே.

இது திரிபுவிலக்கிச் சாரியை வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ - ள்: ஆண்மரக் கிளவி — ஆண்பாலை உணர்த்தாது ஆணென்னும் மரத்தினை உணரநின்ற சொல், அரை மர இயற்று — அரையென்னும் மரம் அம்முப்பெற்ற இயலபிற்ருய்த் தானும் அம்முப்பெற்று முடியும்; எ - று.

எ - டு: ஆணங்கோடு செதிள் தோல் பூ என வரும்.

ஒன்றென முடித்தலான் இயல்புகணத்துங் கொள்க. ஆணாரை இலை என வரும்.

விரவுப்பெய[2] ரன்றென்றற்கு மரமென்றூர். (கூ)

'விண்' என்னுஞ் சொல்

நூ0டு. விண்ணென வரூஉங் காயப் பெயர்வயின்
உண்மையு முரித்தே அத்தென் சாரியை
செய்யுள் மருங்கின் தொழில்வரு காலை.

இது செய்யுளுள் திரிபு விலக்கிச் சாரியை வகுத்தது.

இ - ள்: விண் என வரூஉங் காயப் பெயர்வயின் — விண்ணென்று சொல்லவருகிற ஆகாயத்தை உணரநின்ற பெயர்க்கண், அத்து என் சாரியை மிகுதலும் உரித்து — அத்தென்னுஞ் சாரியை உண்டாதலும் உரித்து இல்லையாதலும் உரித்து, செய்யுள் மருங்

1 இருதிணைக் கண்ணும அஃறிணையாய முடிதல — ஆண வந்தது என முடிதல.
2 விரவுப்பெயா — ஆண் என்னும் திணைபபொதுப் பெயா.

கில் தொழில் வருகாலை — செய்யுளிடத்துத் தொழிற்சொல் வருங் காலத்து; எ - று.

எ - டு: 'விண்ணத்துக்கொட்கும் **வண்ணத்தமரர்**' 'விண்ணத்துக் கொட்கும் விரைசெலலூர்தியோய்' எனவும், 'விண்குத்து நீள்வரைவெற்ப கூளபவோ' (நாலடி - உஉசு) எனவும் வரும். விண்ணென்னுங் குறிப்பினை நீக்குதற்குக் காயமென்றார்.

விண்வத்துக்கொட்கும் என உடம்படுமெய் புணர்ந்து நிற்றலுங் கொள்க. அதிகார வல்லெழுத்தன்மையிற் சாரியை வல்லெழுத்துக் கொடுக்க.[1] (கo)

ணகர ஈற்றுத் தொழிற்பெயர்

நடoசூ. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது இவ் வீற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி உகரமும் வல்லெழுத் தும் விதிக்கின்றது.

இ - ள்: தொழிற்பெயர் எல்லாம் தொழிற்பெயர் இயல — அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஞகார ஈற்றுத் தொழிற்பெயரது இயல்பிற்றாய் வன்கணம் வந்துழி வல்லெழுத்தும் உகரமும் பெற்றும் மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரம் பெற்றும் முடியும்; எ - று.

எ - டு: மண்ணுக்கடிது[2] பண்ணுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், மண்ணுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும்.

எல்லாமென்றதனால் தொழிற்பெயரல்லனவும் உகரமும் வல்லெழுத்தும் பெற்றும் இன்சாரியை பெற்றும் புணர்வன கொள்க. வெண்ணுக்கரை[3] 'தாழ் பெயல் கனைகுரல் கடுப்பப் பண்ணுப்பெயர்த்து' (மதுரை நிசுo) எண்ணுப் பாறு[4] வெண்ணின் கரை என வரும். (கக)

ணகர ஈற்றுக் கிளப்பெயர்

நடoள. கிளப்பெய ரெல்லாங் கொளத்திரி பிலவே.

இஃது இவற்றுட் சிலவற்றிற்குத் திரிபு விலக்கி இயல்பு கூறுதலின், எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ - ள்: கிளப்பெயரெல்லாம் — ணகார ஈற்றுள் ஓரினத்தை உணரநின்ற பெயரெல்லாம், கொளத் திரிபு இல — திரிபுடைய வென்று கருதும்படியாகத் திரிதலின்றாய் இயல்பாய் முடியும்; எ - று.

---

1 அதிகார...கொடுக்க' — முந்தின நூற்பாக்களில் இயல்பும மெலிமிகலுமே விதிக் கப்பட்டிருப்பதால, வலலெழுதுபபேறு அதிகாரபபடவிலலை. அதனால, சாரி யைக்குரிய வலலெழுத்துக் கொடுகக.

2 மண் ணுதல — நீராடுதல், கழுவுதல், அலங்கரித்தல், வெட்டுதல், மண் பண் என்பன முதனிலைத் தொழிறபெயர்.

3 வெண் — வெணணுறு (சோழநாட்டில ஓர் ஆறு).

4 எண்ணுப்பாறு — எள்ளேற்றிய மரககலம். எண — எள், பாறு — தோணி.

எ - டு: உமண் என நிறுத்திக் குடி சேரி தோட்டம் பாடி எனத் தந்து முடிக்க.

இனி, எல்லாமென்றதனாற் பிற சாரியையெற்று முடிவனவும் இயல்பாய் முடிவனவுங் கொள்க. மண்ணைப்பத்தம்[1] எண்ணைநோலே[2] எனவும், கவண்கால் பரண்கால் எனவுங் கொள்க.

கொள என்றதனால் ஏழாம்வேற்றுமையைப் பொருண்மை உணரநின்ற இடைச்சொற்கள் திரிந்து முடிவனவுங் கொள்க. அங்கட்கொண்டான் இங்கட் கொண்டான் உங்கட்கொண்டான் எங்கட்கொண்டான் எனவும், ஆங்கட் கொண்டான் ஈங்கட்கொண்டான் ஊங்கட்கொண்டான் யாங்கட்கொண்டான் எனவும், அவட்கொண்டான் இவட்கொண்டான் உவட்கொண்டான் எவட் கொண்டான் எனவும் ஒட்டுக. (கஉ)

அல்வழியில் 'எண்' என்னும் உணவுப்பெயர்

நூ ০அ. வேற்றுமை யல்வழி எண்ணென் உணவுப்பெயர்
வேற்றுமை யியற்கை நிலையலு முரித்தே.

இஃது அவ் வீற்றுள் ஒன்று அல்வழியுள் வேற்றுமை முடிபுபோலத் திரிந்து முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: வேற்றுமை அல்வழி — வேற்றுமையல்லாத இடத்து, எண்ணென் உணவுப்பெயர் — வரையறைப் பொருண்மை உணர்த் தாது எண்ணென்று சொல்லப்படும உணவினை உணர்த்தும் பெயர், வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்து — வேற்றுமையது திரிந்து முடியும் இயல்பு நிற்றலும் உரித்து; எ - று.

எ - டு: எட்கடிது சிறிது நீது பெரிது என வரும். உம்மையால் தொகைமரபினுள் 'மொழிமுதலாகும்' (எழு - கசள) என்றதனாற் கூறிய இயல்பு பெரும்பான்மை யாயிற்று.

அஃது எண்கடிது என வரும். (கங)

இருவழியிலும் 'முரண்' என்னுந் தொழிற்பெயர்

நூ ০கூ. முரணென் தொழிற்பெயர் முதலியல் நிலையும்.

இஃது இவ் வீற்றுள் தொழிற்பெயருள் ஒன்றற்குத் தொழிற்பெயர்க்கு எய்திய உகரமும் வல்லெழுத்தும் விலக்கி இவ் வீற்று அல்வழி முடிபும் வேற் றுமை முடிபும் எய்துவித்தது.

இ - ள்: முரண் என் தொழிற்பெயர் — மாறுபாடு உணர்த் தும் முரணென்னுந் தொழிற்பெயர், முதலியல் நிலையும் — தொகை மரபிற் கூறிய அல்வழிக்கண் திரியாது முடிந்த இயல்பின்கண் ணும்[3] ஈண்டு வேற்றுமைக்கண் திரிந்து முடிந்த இயல்பின்கண் ணும்[4] நிலைபெற்று முடியும்; எ - று.

1 மண்ணப்பத்தம் - மண்ணுருண்டை.
2 எண்ண நோலை - எள்ளுருண்டை. நோலை என்பதே எள்ளுருண்டையைக் குறிக்கு மாதலால், எண்ணநோலை எனபது காண்கயிறு என்றாறபோல ஒரளவுமிகைபடக் கூறலாம்.
3 தொகைமரபில் அலவழிக்கண் இயலபு கூறியது ৩ - ம் நூற்பா.
4 இவவியலில் வேற்றுமைக்கண் திரிபு கூறியது எ - ம் நூறபா.

எ - டு: முரண்சடிது சிறிது நீது பெரிது ஞெகிழ்ந்தது நீண்டது மாண்டது வலிது எனவும், முரட்கடுமை சேனை தானை பறை எனவும், முரண் ஞெகிழ்ச்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும். இதனைத் 'தொழிற் பெயரெல்லாம்' (எழு - நடஅசு) என்றதன்பின் வையாத முறை யன்றிக் கூற்றினான் முரண்கடுமை முரட்கடுமை, அரண்கடுமை அரட்கடுமை என்னும் உறழ்ச்சியுங் கொள்க. (கச)

வேற்றுமையில் மகர ஈறு

நகஅ. மகர இறுதி வேற்றுமை யாயின்
துவரக் கெட்டு வல்லெழுத்து மிகுமே.

இது முறையானே மகர ஈற்றுப்பெயர் வேற்றுமைக்கட் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: மகர இறுதி வேற்றுமை ஆயின் — மகர ஈற்றுப் பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண்ணுயின், துவரக் கெட்டு வல்லெழுத்து மிகும் — அந் நிலைமொழி மகரம் முற்றக் கெட்டு வருமொழி வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: மரக்கோடு செதிள் தோல் பூ என வரும். மூண்டகக்கோதை எனவும் வரும்.

துவர என்றதனான் இயல்புகணத்துக்கண்ணும்[1] உயர்திணைப் பெயர்க் கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும்[2] மகரக்கேடு கொள்க. மரஞான் மரநூல் இவற்றிற்கு நான்கனுருபு விரிக்க. மரமணி யாழ் வட்டு அடை ஆடை என ஓட்டுக. நுங்கை எங்கை செவி தலை புறம் எனவும், தங்கை செவி தலை புறம் எனவும் வரும். ஈண்டு மகரக்கேடே கொள்க; முடிபு மேற் கூறுப (எழு - நஉய). (கடு)

அதற்கு, மேலும் இரு முடிபுகள்

நகக. அகர ஆகாரம் வருஉங் காலை
ஈற்றுமிசை அகரம் நீடலு முரித்தே.

இஃது அல் வீற்று முடிபு வேற்றுமையுடையன கூறுகின்றது.

இ - ள்: அகர ஆகாரம் வருஉங் காலை — அகர முதன் மொழியும் ஆகாரமுதன்மொழியும் வருமொழியாய் வருங்காலத்து, ஈற்றுமிசை அகரம் நீடலும் உரித்து — மகர ஒற்றின்மேல் நின்ற அகரம் நீண்டு முடிதலும் உரித்து நீடாமையும் உரித்து; எ - று.

எ - டு: மரம் குளம் என நிறுத்தி மகரங்கொடுத்து அடி ஆம்பல் எனத் தந்து ரகர ளகரங்களில் நின்ற அகரம் ஆகாரமாக்கி மராஅடி குளாஅம்பல் என முடிக்க.

மேற் 'செல்வழி யறிதல் வழக்கத் தான' (எழு - நகஉ) என்பதனாற் குளாஅம்பல் என்புழி ஆகாரத்தை அகர மாக்குக.

---

1 இயல்புகணம — மெனகணம், இடைகணம், உயிர்கணம் என்பன.
2 விரவுப்பெயர் - இருதிணைப் பொதுபெயர். இங்கு நும் என்பது விரவுப் பெயர்.

உம்மையான் மரவடி குளவாம்பல் என நீடாமையுங் கொள்க.

வருமொழி முற்கூறியவதனுன் இவ் வீற்றுப் பிறவும் வேறுபட முடிவன கொள்க. கோணுகோணம் கோணுவட்டம் என வரும். இவற்றிற்கு உள் ளென்னும் உருபு விரிக்க.

கோணுகோணத்திற்கு வல்லெழுத்துக்கேடு மேலைச் சூத்திரத்து இலே சாற் கொள்க. (கசு)

நகஉ. மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே
செல்வழி அறிதல் வழக்கத் தான.

இது மகரங்கெட்டு வல்லெழுத்து மிகுதலோடு மெல்லெழுத்தும் உறழ்க என்றலின், எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: மெல்லெழுத்து உறழும் மொழியுமாறுள — மகர ஈற் றுள் வல்லெழுத்தினேடு மெல்லெழுதத்துப் பெற்று உறழ்ந்து முடி யும் மொழிகளும் உள, வழக்கத்து ஆனை செல்வழி அறிதல் — வழக்கத்தின் கண்ணும் வழங்கும் இடம் அறிக; எ - று.

எ - டு: குளங்கரை குளக்கரை சேறு தாது பூழி என வரும். இவற்றுட் குளங்கரை குளக்கரைபோல அல்லன ஒத்த உறழ்ச்சியாய் வழங்கா வென்றற் குச் செல்வழி யறிதலென்றார்.

.. வழக்கத்தான என்றதனுன் குளத்துக்கொண்டான் ஈழத்துச்சென்றான் குடத்துவாய் பிலத்துவாய் என்றாற் போல்வன மகரங்கெட்டு அத்துப்பெற் றன. இவை 'அத்தேவற்றே' (எழு - கஉஉ) என்பதனுன் ஒற்றுக் கெடா தாயிற்று, அஃது அல்வழிக்குக் கூறுதலின். மழகளிறு என்பது 'மழவுங் குழவு மிளமைப் பொருள' என்ற உரிச்சொல். அது மகர ஈறன்று. சண்பகங் கோடு என்பது வழக்கிடத்துச் செல்லாது.

இன்னும் இதனுனே மகரங் கெடாது நிற்பனவுங் கொள்க. 'புலம்புக் கனனே' (புறம் - உரி.அ) 'கலம்பெறு கண்ணுள ரொக்கற் றலைவ' (மலைபடு - கிஎ) என வரும். (கஎ)

'இல்லம்' என்னும் மரப்பெயர்

நகஙஉ. இல்ல மரப்பெயர் விசைமர இயற்றே.

இஃது இவ் வீற்றுள் ஒன்றற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தது.

இ - ள்: இல்ல மரப் பெயர் — புக்கு உறையும் இல்லன்றி இல்லமென்னும் மரத்தினை உணர்நின்ற சொல், விசை மர இய ற்று — விசையென்னும் மரத்தின் இயல்பிற்றாய் மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: இல்லங்கோடு செதிள் தோல் பூ என வரும்.

மேலைச் சூத்திரத்து 'வழக்கத்தான' (எழு - கஉஉ) என்றதனுன் மகரக் கேடு கொள்க. (கஅ)

அல்வழியில் மகர ஈறு

நகசு. அல்வழி யெல்லாம் மெல்லெழுக் காகும்.

இது மகரம் அல்வழிக்கண் திரிக என முற்கூறுமையின் எய்தாத தெய்து வித்தது.

இ - ள்: அல்வழி யெல்லாம் மெல்லெழுத்தாகும் — மகர ஈறு அல்வழிக்கணெல்லாம் மெல்லெழுத்தாய்த் திரிந்து முடியும்; எ - று.

எ - டு: மரங்குறிது சிறிது நீது பெரிது என வரும். மகரம் பெரிது என்புழித் திரிபின்றென்பது **ஆணை கூறு**மென்னும் உத்தி.[1]

இனி எல்லா மென்றதனால் அல்வழிக்கண் மகர ஈறு பிறவாற்றான் முடிவனவெல்லாம் முடிக்க. வட்டத்தடுக்கு, சதுரப்பலகை, ஆய்தப் புள்ளி, வேழக்கரும்பு; கலக்கொள் சுக்கு தோரை பயறு; நீலக்கண் என்னும் பண்புப் பெயர்கள் மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கு முடிந்தன. ஆய்த வுலக்கை அகரமுதல இவை இயல்புகணத்துக்கண் மகரங்கெட்டு முடிந்தன. எல்லாருங் கூறியர் நாங்குறியேம் இவை உயர்திணைப்பெயர் மகரந் திரிந்து மெல்லெழுத்தாய் முடிந்தன. கொல்லுங்கொற்றன் உண்ணுஞ்சாத்தன் கவளமாந்து மலைகெழுநாடன் பொருமாரன் தாவுபரி பறங்குன்றை ஓடுநாகம் ஆடுபோர் வருகாளம் கொல்லுமியானை பாடும்பாணன் என இவை மகரந் திரிந்துங் கெட்டும் நிலைபெற்றும் வந்த பெயரெச்சம்.

இன்னும் இதனானே இயல்பு கணத்துக்கண்ணும் மகரங் கெடுதலுங் கெடாமையுங் கொள்க. மரஞான்றது நீண்டது மாண்டது எனவும், மரம் யாது வலிது அடைந்தது எனவும் வரும். இன்னும் இதனானே பவளவாயென் னுவமத்தும் நிலநீரென எண்ணிடத்தும் கோடு கொள்க. (ககூ)

'அகம்' முன் 'கை'

ஙகஎ. அகமென் கிளவிக்குக் கைமுன் வரினே
முதனிலை யொழிய முன்னவை கெடுதலும்
வரைநிலை யின்றே ஆசிரி யர்க்க
மெல்லெழுத்து மிகுத லாவயி னான.

இது மகர ஈற்று அல்வழிக்கண் இம்மொழி இம்முடிபு எய்துக என்றலின் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: அகம் என் கிளவிக்குக் கை முன்வரின் — அகமென்னுஞ் சொல்லிற்குக் கையென்னுஞ் சொல் முன்னே வருமாயின், முதனிலை ஒழிய முன்னவை கெடுதலும் — முன்னின்ற அகரங் கெடாது நிற்ப அதன் முன்னின்ற ககரமும் மகர வொற்றுங் கெட்டு முடிதலுங் கெடாதுநின்று முடிதலும், வரை நிலை இன்றே யாசிரியர்க்க — நீக்கு நிலைமையின்று ஆசிரியர்க்கு, ஆவயின் ஆன மெல்லெழுத்து மிகுதல் — அவை கெட்டவழி மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: அங்கை எனவரும். அகங்கை எனக் கெடாது முடிந்தவழி 'அல்வழியெல்லாம்' (எழு - ஙகச) என்றதனான் மகரந் திரிந்து முடிதல்

1 ஆணை கூறல் — இவ்வாசிரியனது கருத்து இது வெனக கொள்ள வைத்தல. மகரம் புகரத்திறகு இன மெலலெழுத்தாதலின அதன்முன திரியாது எனபது கருத்து.

கொள்க. இது பண்புத்தொகை. அதிகாரத்தானும் பொருணேக்கானும் வேற்றுமைத் தொகையன்மை உணர்க. (உ0)

'இலம்' முன் 'படு'

நகசு. இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலு முரித்தே செய்யு ளான.

இஃது இலமென்பது முற்றுவினைச் சொல்லாகாது குறிப்பாகிய உரிச் சொல்லாய் நிற்குங்கால் அல்வழிக்கண் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: இலம் என். கிளவிக்கு — இல்லாமை யென்னுங் குறிப்பாகிய உரிச்சொற்கு, படு வரு காலை — உண்டாதலென்னும் வினைக்குறிப்புப்பெயர்[1] வருமொழியாய் வருங்காலத்து, செய்யுளான நிலையலும் உரித்து — செய்யுளிடத்து மகரக்கேடுந் திரிபுமின்றி நிற்றலும் உரித்து; எ - று.

எனவே, உம்மையாற் பிறசொல் வருங்காலத்துக்குக் கேடுந் திரிபும் பெற்று நிற்றலும் உரித்தெனக் கொள்க.

எ - டு: 'இலம்படு புலவ ரேற்றகை நிறைய' (மலைபடு - நிஎசு) இதற்கு இல்லாமை உண்டாகின்ற புலவரெனப் பொருள் கூறுக. 'இலம்பாடு நாணுத் தரும்' என்கின்றதோவெனின், இல்லாமை உண்டாதல் நாணுத் தருமென்று பொருள் கூறுக. இதனை யெற்பாடு பெரிதென்றுற்போலக் கொள்க. இது பொருளிலமென முற்றுவினைச் சொல்லாமாறும் உணர்க. இலகின்றதெனக் கெட்டவாறும், இலங்கெடவியக்தான் இலஞ்சிறிதாக இலக்கீதென்று எனக் கசதக்கள் வரும்வழித் திரிந்தவாறுங் காண்க.

'எல்லா' (எழு நகக) மென்றதனுன் இலம்வருவது போலும் இலம் யாரிடத்து எனவகர யகரங்களின் முன்னர்க் கெடாதுநிற்றல் கொள்க.

இதனை இலத்தாற் பற்றப்பட்ட புலவரென வேற்றுமையென்றுரால் உரையாசிரியரெனின், பற்றப்பட்ட புலவரென்பது பெயரெச்சமாதலிற் பற்றவென்னுந் தொழில் தோற்றுவிக்கின்ற முதனிலைச் சொல்லைச் சூத்திரத்து ஆசிரியர் எடுத்தோதிற்றிலராதலானும் படுவென்பதுதானும் புலவரென்னும் பெயரோடு முடியுங்கால் இரண்டுகாலமுங் காட்டும் ஈறுகள் தொக்க முதனிலைச் சொல்லாய் நிற்றலின், அதனை யெடுத்தோதுவராதலானும் ஆசிரியர்க்கு அங்ஙனங் கூறுதல் கருத்தன்மை உணர்க.

அன்றியும் பற்றப்பட்ட என்புழி இரண்டு முதனிலை கூடி ஒன்றாய் நின்று பற்றுதலைச் செய்யப்பட்ட எனப் பொருள் தாராமையானும் அல்வழி யதிகாரமாதலானும் அது பொருளன்மை உணர்க. (உக)

'ஆயிரம்' என்னும் எண்ணுப்பெயர்

நகஎ. அத்தொடு சிவணும் ஆயிரத் திறுதி
ஒந்த எண்ணு முன்வரு காலை.

---

1 படு என்பது தெரிநிலை வினைபாகுநியே யன்றி வினைகுறிப்பு பெயரனறு. படுதல் - உண்டாதல். படு எனறும் பகுதி நீண்டு பாடு என முதனிலை திரிந்த தொழிற பெயராகுமைபோல இலமபடு எனறும் பகுதியும் இலமபாடு எனறுரும் "இலமபாடொறுகம ஆயிரணடும வறுமை." (தொல். 843) எனறார் ஆசிரியரும். இலமபடு எனபது எழுவாயதெதாடா. இலமபடு புலவர் எனபது வினைத்தொகை.

இஃது இவ் வீற்றுள் எண்ணுப்பெயருள் ஒன்றற்குத் தொகைமரபினுள் 'உயிரும் புள்ளியு மிறுதி யாகி' (எழு - கசுச) என்பதனுன் எய்திய ஏயென் சாரியை விலக்கி அத்து வருக்கின்றது.

இ - ள்: ஆயிரத்து இறுதி — ஆயிரமென்னும் எண்ணுப் பெயரின் மகரம், ஒத்த எண் முன்வருகாலை — தனக்கு அகப்படும் மொழியாய்ப் பொருந்தின எண்ணுப்பெயர் தன்முன் வருங் காலத்து, அத்தொடு சிவணும் — தொகைமரபிற்கூறிய ஏயென் சாரியை ஒழித்து அத்துச்சாரியையோடு பொருந்தி முடியும்; எ - று.

எ - டு: ஆயிரத்தொன்று ஆயிரத்தொன்பது என ஒன்றுமுதல் ஒன்ப தின்காறும் ஒட்டுக. மகரத்தை அத்தின்மிசை யொற்றென்று கெடுத்து 'அத்தி னகர மகரமூனே யில்லே' (எழு - கஉடு) என்று முடிக்க. ஆயிரத் தொருபது என்றுற்போல்வனவற்றிற்கும் ஒட்டுக.

நிலமொழி முற்கூறுதலனுன் ஆயிரத்துக்குறை கூறு முதல் என்பனவுங் கொள்க. இன்னும் இதனுனே ஆயிரப்பத்தென்புழி மகரங்கெடுத்து வல் லொற்று மிகுத்து முடிக்க. (உஉ)

அடையடுத்த ஆயிரம்

நகஅ. அடையொடு தோன்றினும் அதனே ரற்றே.

இஃது 'அடையொடு தோன்றினும் புணர்நிலைக் குரிய' (எழு - ககல) என்றமையின் அவ்வெண்ணுப் பெயரை அடையடுத்து முடிக்கின்றது.

இ - ள்: அடையொடு தோன்றினும் — அவ்வாயிர மென்னும் எண்ணுப்பெயர் அடையடுத்த மொழியோடு வரினும்; அதனே ரற்று — முற்கூறியதனேடு ஒருதன்மைத்தாய் அத்துப்பெற்று முடியும்; எ - று.

எ - டு: பதினுயிரத்தொன்று இரண்டு இருபதினுயிரத்தொன்று ஆறுயிரத்தொன்று நூறுயிரத்தொன்று முன்நூறுயிரத்தொன்று ஐந்நூறு யிரத்தொன்று என ஒட்டுக. முன்னர் இலேசினுன் முடிந்தவற்றையும் அடை யடுத்து ஒட்டுக. பதினுயிரத்துக்குறை புறம் கூறு முதல் எனவும், நூறுயிரப் பத்து எனவும் வரும். (உந)

அதன்முன் அளவுப்பெயரும் நிறைப்பெயரும்

நகந. அளவும் நிறையும் வேற்றுமை யியல.

இஃது அவ்வெண்ணின் முன்னர் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வந்தால் முடியுமாறு கூறுதலின் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: அளவும் நிறையும் — அதிகாரத்தால் ஆயிரந் தானே நின்றுழியும் அடையடுத்து நின்றுழியும் அளவுப்பெயரும் நிறைப் பெயரும் வந்தால், வேற்றுமை இயல — மகர ஈற்று வேற்றுமை

யோடு ஒத்து வல்லெழுத்து வந்துழி மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கும் இயல்புகணம் வந்துழித் 'துவர' (எழு - ஙகய) என்னும் இலேசான் எய்திய மகரங் கெட்டும் புணரும்; எ - று.

எ - டு: ஆயிரம் பதினாயிரம் நூறாயிரம் என நிறுத்திக் கலம் சாடி தூதை பாளை நாழி மண்டை வட்டில் அகல் உழக்கு எனவும், கஃசு கழஞ்சு தொடி துலாம் பலம் எனவுந் தந்து ஒட்டுக.

வேற்றுமையியல எனவே தாம் வேற்றுமையல்ல வாயின. (உச)

வேற்றுமையில் உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும்

ஙஉ0. படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும்
தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும்
வேற்றுமை யாயின் உருபியல் நிலையும்
மெல்லெழுத்து மிகுத லாவயி னான.

இஃது உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் உருபியலுள் முடிந்த வாறே ஈண்டுப் பொருட்புணர்ச்சிக்கண்ணும் முடிகவென எய்தாத தெய்து வித்தது.

இ - ள்: படர்க்கைப் பெயரும் முன்னிலைப் பெயரும் — எல்லாருமென்னும் படர்க்கைப்பெயரும் எல்லீருமென்னும் முன்னிலைப் பெயரும், தொடக்கங் குறுகும் பெயர்நிலைக் கிளவியும் — கிளைத் தொடர்ச்சிப் பொருளவாய் நெடுமுதல் குறுகிமுடியுந் தாம் நாம் யாமென்னும் பெயராகிய நிலைமையையுடைய சொல்லும், வேற்றுமையாயின் உருபியல் நிலையும் - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணுயின் உருபுபுணர்ச்சிக்குக் கூறிய இயல்பின்கண்ணே நின்று முடியும், ஆவயின் ஆன மெல்லெழுத்து மிகுதல் — மேல் நெடுமுதல் குறுகும் மொழிக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எல்லாருமென்பதனை மகரஒற்றும் உகரமுங் கெடுத்து ரகரப்புள்ளியை நிறுத்திக் கை செவி தலை புறம் எனத் தந்து இடையிலே தம்முச்சாரியையும் இறுதியிலே உம்முச்சாரியையுங் கொடுத்து எல்லார்தங்கையும் செவியும் தலையும் புறமும் என முடிக்க. இதற்கு 'அம்மினிறுதி' (எழு - கஉங) என்னுஞ் சூத்திரத்துள் 'தன்மெய்' என்றதனாற் பிறசாரியைக்கண் மகர ஒற்றுத் திரிந்து 'ஙஞநவாகும்' எனச் செய்கைசெய்து முடிக்க. எல்லீரு மென்பதற்கு இடையிலே நும்முச்சாரியையும் இறுதியிலே உம்முச்சாரியையுங் கொடுத்து முற்கூறிய செய்கைகளெல்லாஞ் செய்து எல்லீர்நுங்கையும் செவியும் தலையும் புறமும் என முடிக்க, தாம் நாம் என்பனவற்றை 'னவோயிரண்டு நெடு முதல்குறுகும்: (எழு - கஅஅ) எனக் குறுக்கி 'மகரவிறுதி' (எழு - ஙகய) என்பதனான் மகரங் கெடுத்துத் தங்கை நங்கை செவி தலை புறம் என முடிக்க. யாம் என்பதனை ஆகாரத்தை எகரமாக்கி யகர ஒற்றைக்கெடுத்து 'மகர விறுதி' (எழு - ஙகய) என்றதனால் மகரங்கெடுத்து எங்கை செவி தலை

புறம் என முடிக்க. தொடக்கங் குறுகுவனவற்றிற்கு இச் சூத்திரத்தான் மெல்லெழுத்து மிகுக்க.

உறுபியல் நிலையும் என்பதனுன் வேற்றுமையாதல் பெருநிற்கவும் பின்னும் வேற்றுமையாயினென்ற மிகையானே படர்க்கைப்பெயரும் முன்னிலைப்பெயரும் இயல்புகணத்து ஞகாரமும் நகாரமும் வந்துழித் தம்மூச் சாரியையும் நும்மூச் சாரியையும் பெறுதலும் மகரங்கெட்டு உம்முப்பெறுதலும் ஆவயினை என்றதனுன் ஒற்று இரட்டுதலுங் கொள்க. எல்லார்தஞ் ஞாணும் எல்லீர்நுஞ் ஞாணும் நூலும் என வரும்.

இனித் தொடக்கங் குறுகுவனவற்றிற்கும் அவ்விரண்டு இலேசானும்[1] மகரங்கெடுதலும் ஒற்று இரட்டுதலுங் கொள்க. தஞ்ஞாண் நஞ்ஞாண் எஞ்ஞாண் நூல் என வரும்.

இன்னும் ஆவயினை என்றதனுனே எல்லார்தம் எல்லீர்நும் என நின்ற வற்றின் முன்னர் ஏனை மணி யாழ் வட்டு அடை என்பன வந்துழி மகரங் கெடாமையும் உம்முப்பெறுதலுங் கொள்க.

இன்னும் இதனுனே தொடக்கங் குறுகுவனவற்றிற்குந் தம்மணி யாழ் வட்டு அடை என மகரங் கெடாமையுங் கொள்க.

இன்னும் இதனுனே தமகாணம் நமகாணம் எமகாணம் நுமகாணம் என உருபீற்றுச் செய்கைகளுங் கொள்க.

இன்னும் இதனுனே நும் என்பதற்கு மகரத்தை மெல்லொற்றுருக்கி நுங்கை செவி தலை புறம் என வருதலும், நுஞ்ஞாண் என ஒற்றிரட்டுதலும், நும்வலி என மகரங் கெடாது நிற்றலுங் கொள்க.

இன்னும் இதனுனே எல்லார்கையும் எல்லீர்கையும் எனத் தம்மும் நும்மும் பெருது நிற்றலுங் கொள்க. (உடு)

அல்வழியில் அவை

நஉக. அல்லது கிளப்பின் இயற்கை யாகும்.

இது முற்கூறிய மூன்றுபெயர்க்கும் அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள்: அல்லது கிளப்பின் இயற்கையாகும் — அம்மூன்று பெயரும் அல்வழியைச் சொல்லுமிடத்து இயல்பாய் முடியும்; எ - று.

ஈண்டு இயற்கையென்றது சாரியை பெருமை நோக்கி. இவற்றின் ஈறுதிரிதல் 'அல்வழியெல்லாம்' (எழு - நகச) என்பதனுள் எல்லாமென்றதனுற் கொள்க.

எ - டு: எல்லாருங்குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், எல்லீருங் குறியீர் சிறியீர் தீயீர் பெரியீர் எனவும், தாங்குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், தாங்குறிய சிறிய தீய பெரிய எனவும், நாங்குறியம் சிறியம் தீயம் பெரியம் எனவும், யாங்குறியேம் சிறியேம் தீயேம் பெரியேம் எனவும் வரும்.

இன்னும் எல்லா மென்றதனுனே இவற்றின் முன்னர் ஞகார நகாரம் வந்தால் அவை அவ்வொற்றுய்த் திரிதல் கொள்க. எல்லாருஞ் ஞான்றூர் நீண்டார், எல்லீருஞ் ஞான்றீர் நீண்டீர் எனவும், தாஞ் ஞான்றூர் நீண்டார்

1 இரண்டு இலேசு (1) வேற்றுமையாயின, (2) ஆவயினை எனபன,

எனவும், நாஞ் ஞான்ஞும் நீண்டாம் எனவும், யாஞ் ஞான்றேம் நீண்டேம் எனவும் வரும்.

இனி எல்லாரும்வந்தார் யாத்தார் அடைந்தார், எல்லீரும்வந்தீர் யாத்தீர் அடைந்தீர் எனவும், தாம்வந்தார் யாத்தார் அடைந்தார் எனவும், நாம்வருதும் யாத்தும் அடைதும், யாம்வருவேம் யாப்பேம் அடைவேம் எனவும் ஏனைக் கணங்களின் முன்னர் மகரந் திரியாது நிற்றலும் 'உயிரீருகிய உயர்திணைப் பெயரும்' (எழு கஞிங) என்பதனுன் முடியும். (உசு)

'எல்லாம்' என்னும் விரவுப் பெயர்

நஉஉ. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா மெனும்பெயர் உருபியல் நிலையும்
வேற்றுமை யல்வழிச் சாரியை நிலையாது.

இஃது இவ் வீற்றுள் விரவுப்பெயருள் ஒன்றற்கு அல்வழிக் கண்ணும் வேற்றுமைக் கண்ணும் உருபியலோடு மாட்டெறிந்து எய்தாத தெய்து வித்தது.

இ - ள்: அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும் — அல்வழிக்கட் சொல்லினும் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கட் சொல்லினும், எல்லா மெனும் பெயர் உருபியல் நிலையும் — எல்லா மென்னும் விரவுப் பெயர்[1] உருபு புணர்ச்சியின் இயல்பிலே நின்று முடியும், வேற்றுமை யல்வழிச் சாரியை நிலையாது — அப்பெயர் வேற்றுமைப் பொருட் புணர்ச்சியலலாத இடத்து வற்றுச் சாரியை நில்லாதாய் முடியும்; எ - று.

உருபியல் நிலையும் என்ற மாட்டேறு அல்வழிக்கண் உம்மைப் பெற்று நிற்றலும் பொருட் புணர்ச்சிக்கண் வற்றும் உம்மும் பெற்று நிற்றலும் உணர்த்திற்று.

உம்மைச்சாரியை ஒன்றுமே பெற்று முடிகின்ற வேற்றுமையோடு உடனெதி அதுவும் வற்றுப் பெறுமாறுபோல மாட் டெறிந்த மிகையானே வன்கணத்து அல்வழிக்கண் நிலைமொழி மகரக்கேடும் வருமொழி வல்லெழுத்துப் பேறும் மென் கணத்து மகரங் கெட்டு உம்மைப் பெற்றும் பெறுதும் வருதலும் ஏனைக் கணத்து மகரங் கெட்டு உம்மைப் பெற்றும் மகரங் கெடாது உம்மைப் பெறுதும் வருதலுங் கொள்க.

எ - டு: எல்லாக்குறியவும் சிறியவும் நீயவும் பெரியவும் எனவும், எல்லாஞாணும் நூலும் மணியும் எனவும், எல்லாஞான்றன நீண்டன மாண்டன எனவும், எல்லாயாழும் வட்டும் அடையும் எனவும், எல்லாம்வாடின ஆடின எனவும் வரும். இனி வேற்றுமைக்கண் எல்லாவற்றுக்கோடும் செவியும் தலையும் புறமும் என இவை வற்றும் உம்மும் பெற்றன. இவற்றிற்கு மகரம் வற்றின் மிசை யொற்றென்று கெடுக்க. இனி மென்கணத்துக்கண் எல்லா

---

1 எலலாம என்பது, எலலா மாநதரும எலலா மரமும், மாநத ரெலலாம மர மெலலாம, என நிலைமொழியாயும வருமொழியாயும இரு திணையினும செலலுதலின விரவுப் பெயராயிறறு. எலலாம எனனும தனமைப பனமைப பெயரும எலலாம எனனும விரவுப பெயரும வெவவேறு.

வற்று ஞாணும் நூலும் மணியும் எனவும், ஏனைக் கணத்துக்கண் எல்லாவற்றி யாப்பும் வலியும் அடையும் எனவும் வரும். ஏனைக் கணமும் வற்றும் உம்மும் பெற்றன. (உஎ)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

நஉஙக. மெல்லெழுத்து மிகினும் மான மில்லை.

இஃது ஒரு சார் வல்லெழுத்தை விலக்கி மெல்லெழுத்து விதித்தலின் எய்தியதன் மேற் சிறப்பு விதி கூறுகின்றது.

இ - ள்: மெல்லெழுத்து மிகினும் மான மில்லை — அவ் வெல்லா மென்பது அல்வழிக்கண் மேல் இலேசினுற் கூறிய வல் லெழுத்தே யன்றி மெல்லெழுத்து மிக்கு முடியினுங் குற்ற மில்லை; எ - று.

எனவே, வல்லெழுத்து மிகுதலே பெரும்பான்மை யாயிற்று. முற் கூறிய செய்கை மேலே இது கூறினமையின் மகரக் கேடும் உம்மும் பேறுங் கொள்க.

எல்லாங்குறியவும் சிறியவும் தீயவும் பெரியவும் என வரும்.

மானமில்லை என்றதனுன் உயர்திணைக்கண் வன்கணத்து மகரங் கெட்டு வல்லெழுத்து மிக்கு இறுதி உம்மும் பெற்று முடிதலும் இயல்பு கணத்துக் கண் மகரங் கெட்டு உம்மும் பெற்று முடிதலுங் கொள்க. எல்லாக்கொல்ல ரும் சான்றாரும் தச்சரும் பார்ப்பாரும் குறியரும் சிறியரும் தீயரும் பெரியரும் எனவும், எல்லாஞான்றாரும் காய்கரும் மணியகாரரும் வணிகரும் அரசரும் எனவும் வரும்.

இன்னும் இதனுனே உயர்திணைக்கண் எல்லாங்குறியரும் சிறியரும் தீயரும் பெரியரும் என மகரங் கெட்டு மெல்லெழுத்து மிக்கு உம்மும் பெறு தலும் எல்லாங் குறியர் சிறியர் தீயர் பெரியர் எனவும், குறியீர் குறியம்[1] என வும், உம்மும் பெறுது வருதலுங் கொள்க.

இன்னும் இதனுனே இடைக்கணத்தும் உயிர்க்கணத்தும் மகரங் கெடாது உம்மின்றி வருதலுங் கொள்க. எல்லாம் வந்தேம் அடைந்தேம் என வரும். (உஅ)

அதற்கு, உயர்திணை முடிபு

நஉசா. உயர்திணை யாயின் உருபியல் நிலையும்.

இஃது எல்லா மென்பதற்கு உயர்திணைமுடிபு கூறுகின்றது.

இ - ள்: உயர்திணையாயின் உருபியல் நிலையும் — எல்லா மென்பது உயர்திணையாய் நிற்குமாயின் உருபு புணர்ச்சியின் இயல்பிற்றாய் இடைக்கண் நம்மும் இறுதிக்கண் உம்மும்பெற்று முடியும்; எ - று.

உருபியலுள் 'எல்லா மென்னு மிறுதி முன்னர் — வற்றென்சாரியை' (எழு - கஅசு) வகுத்ததனுன் வற்றின் மிசை யொற்றென்று மகரங்கெடுத்த அதிகாரத்தான் 'உயர்திணை யாயி னம்மிடை வரும்' (எழு - ககூ0) என

1 எலலாங் குறியீர் எலலாங் குறியம என ஓட்டுக. குறியீர் முன்னிலை; குறியம் தன்மை.

நம்மின் முன்னும் மகரங்கெடுத்தார், அதனோடு ஈண்டு மாட்டெறிதலின் அது கொண்டு ஈண்டும் மகரங் கெடுக்க. 'அம்மினிறுதி' (எழு - கஉக) என்புழித் 'தன்மெய்' என்றதனான் நம்முச்சாரியையினது மகரந்திரிதல் கொள்க.

எல்லாநங்கையும் செவியும் தலையும் புறமும் என ஒட்டுக.

வருமொழி வரையாது கூறலின் எல்லாஞ்ஞாற்சியும் நீட்சியும் என ஏற்பனவற்றோடு முடிபு அறிந்து ஒட்டுக. (உக)

வேற்றுமையில் 'நும்' என்னும் பெயர்

நஉடு. நும்மெ னொருபெயர்[1] மெல்லெழுத்து மிகுமே.

இது மகர ஈற்றிற்கு வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்து விதித்தது.

இ - ள்: நும்மென் ஒருபெயர் மெல்லெழுத்து மிகும் — நும்மென்று சொல்லப்படுகின்ற விரவுப்பெயர் பொருட்புணர்ச்சிக்கண் மெல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

நுங்கை செவி தலை புறம் என வரும். 'மகரவிறுதி' (எழு - நகஅ) என்பதனான் மகரங்கெடுக்க.

ஒன்றென முடித்த லென்பதனான் உங்கை என வருவனவுங் கொள்க. 'துவர' (எழு - நகஅ) என்றதனான் ஞகர நகரங்கள் வந்துழி மகரங்கெடுதலும் ஒருபெயர் என்றதனான் ஒற்று மிகுதலுங் கொள்க. நுஞ்ஞாண் நூல் என வரும். இன்னும் ஒருபெயர் என்றதனான் நும்மணி யாழ் வட்டு அடை என மகரங் கெடாமையும் கொள்க. (நஅ)

அல்வழியில் 'நும்' என்னும் பெயர்

நஉசு. **அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை**
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இஇடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே
அப்பான் மொழிவயின் இயற்கை யாகும்.[1]

இது நும்மென்பதற்கு அல்வழி முடிபு கூறுகின்றது.

இ - ள்: அல்லதன் மருங்கிற் சொல்லுங்காலை — நும்மென்பதனை அல்வழிக்கண் கூறுமிடத்து, உ கெட நின்ற மெய்வயின் ஈவர — நகரத்துள் உகரங்கெட்டுப் போக ஒழிந்து நின்ற நகரவொற்றிடத்தே ஈகாரம் வந்து நிற்ப, இ இடைநிலைஇ ஈறுகெட — ஓர் இகரம் இடையிலே வந்து நிலைபெற்று மகரமாகிய ஈறு

---

1 நும எனபது நூம எனனும் வழகதறற பழம்பெயரின வேறறுமைக குறுக்கம். எம் தம என்னும் பிறவிடக குறுகலகங்கள் போன்றே நும எனபதும உருபு பெறறும பெருதும ஆறும வேறறுமைப் பொருள்தரும்.

1 நும என்னும் வேறறுமைத நிரிபுபபெயர எழுவாய வேற்றுமையில நீயிர் என்றுமெ என இந்நூறபாவிற கூறியிருபபது தமிழியலபுகுமஉதறகும் பொருநதாது. 'நும்: வேறு, 'நீயிர்' வேறு. நீன எனனும முனனிலை யொருமைப பெயர ஈறுகெட்டு நீ என வழஙகுவதே இர ஈறு பெறறு நீயிர எனனும பனமைப பெயராகும்.

கெட்டுப்போக, புள்ளி ரகரம் நிற்றல் வேண்டும் — ஆண்டுப் புள்ளி பெற்று ஒரு ரகரம் வந்து நிற்றலே விரும்பும் ஆசிரியன், அப்பால் மொழிவயின் — அக்கூற்றினையுடைய நிலைமொழி யிடத்து, இயற்கையாகும் — வருஞ்சொல் இயல்பாய் முடியும் ; எ - று.

எ - டு : நீயிர்குறியீர் சிறியீர் தீயீர் பெரியீர் என வரும்.

சொல்லுங்காலே யென்றதனானே நீயிர் ஞான்றீர் நீண்டீர் மாண்டீர் யாத்தீர் வாடினீர் அடைந்தீர் என ஏனைக்கணத்திலும் ஒட்டுக. (நக)

மகர ஈற்றுத் தொழிற்பெயர்

நஉஎ. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல

இது வேற்றுமைக்கண் மகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கும் அல்வழிக் கண் மெல்லெழுத்தாய்த் திரிந்தும் வருமென எய்தியதனை விலக்கி ஞகர ஈற் றுத் தொழிற்பெயர் போல நிற்குமெனப் பிறிது விதி வகுத்தது.

இ - ள்: தொழிற்பெயரெல்லாம் — மகர ஈற்றுத் தொழிற் பெயரெல்லாம், தொழிற்பெயர் இயல — ஞகார ஈற்றுத் தொழிற் பெயர் போல அல்வழியினும் வேற்றுமையினும் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் இயல்புகணத்து உகரமும் பெற்று முடியும் ; எ - று.

எ - டு : செம்மூக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண் டது வலிது எனவும், செம்மூக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும். 'தும்மூச் செறுப்ப' (குறள் - கநகஅ) என்பதும் அது. இவை 'குறியதன் முன்னர்த் தன்னுரு விரட்டல்' (எழு - கசு0).

எல்லா மென்றதனான் உகரம்பெறாது காட்டங்கடிது ஆட்டங்கடிது என மெல்லெழுத்தாய் அல்வழிக்கண் திரிதலும் காட்டக்கடுமை ஆட்டக்கடுமை என வேற்றுமைக்கண் வல்லெழுத்து மிகுதலுங் கொள்க. (நஉ)

'ஈம்' 'கம்' 'உரும்' என்னும் பெயர்கள்

நஉஅ. ஈமுங் கம்மும் உருமென் கிளவியும்
ஆமுப் பெயரு மவற்றோ ரன்ன.

இது பொருட்பெயருட் சில தொழிற்பெயரோடு ஒத்துமுடிக என எய்தி யது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: ஈமுங் கம்மும் உருமென் கிளவியும் ஆ முப்பெய ரும் — ஈமென்னுஞ் சொல்லுங் கம்மென்னுஞ் சொல்லும் உரு மென்னுஞ் சொல்லுமாகிய அம்மூன்று பெயரும், அவற்றோ ரன்ன — முற்கூறிய தொழிற்பெயரோடு ஒருதன்மையவாய் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும் இயல்புகணத்து உகரமும் பெற்று முடியும் ; எ – று.

ஈம் என்பது சுடுகாடு ; கம்—தொழில்.

எ - டு : ஈமுக்கடிது கம்முக்கடிது உருமுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், ஈமுக்கடுமை கம்முக்கடுமை உருமுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் ஒட்டுக.

கிளவியென்றதனுன் வேற்றுமைக்கண்ணும் அல்வழிக்கண்ணும் உயிர் வருவழி உகரம்பெறுது ஈமடைவு ஈமடைந்தது என நிற்றலுங் கொள்க.

தன்னினமுடித்த லென்பதனுன் அம்மு தம்மு நம்மு எனச் சாரியைக் கண்ணும் உகரம் வருதல் கொள்க. (நகூ)

'ஈம்' 'கம்' என்னும் இருபெயர்க்கும் சாரியை

நஉக. வேற்றுமை யாயின் ஏனை யிரண்டும்
தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை.

இது மேல் முடிபுகூறிய மூன்றனுள் இரண்டிற்கு வேற்றுமைக்கண் வேறோர் முடிபு கூறுகின்றது.

இ - ள் : வேற்றுமையாயின் — வேற்றுமைப் பொருட்புணர்ச்சியாயின், ஏனை இரண்டும் தோற்றம் வேண்டும் அக்கென் சாரியை — இறுதியில் உருமொழிந்த இரண்டும் அக்கென்னுஞ் சாரியை தோன்றி முடிதலே வேண்டும் ஆசிரியன் ; எ - று.

எ - டு : ஈமக்குடம் கம்மக்குடம் சாடி தூதை பானை எனவும், ஞாற்சி நெருப்பு மாட்சி விறகு எனவும் ஒட்டுக.

அக்கு வகுப்பவே நிலைமொழித் தொழிலாகிய உகரங்கெட்டு முற்கூறிய வல்லெழுத்து விலக்கப்படாமையின் நின்று முடிந்தது.

வன்கணத்திற்கு முன்னின்ற சூத்திரத்திற் கூறியது குணவேற்றுமைக் கென்றும் ஈண்டுக் கூறியது பொருட்புணர்ச்சிக் கென்றுங் கொள்க. (நச)

மகரம் குறுகுமிடம்

நஉந. வகார மிசையும் மகாரங் குறுகும்.

இது முன்னர் 'அரையளவு குறுகல்' (எழு - கந) எனவும், 'னகாரை முன்னர்' (எழு - டுஉ) எனவுங் கூறிய மகரம் இருமொழிக்கண்ணும் குறுகு மென அதன் ஈற்றகத்து எய்தாத தெய்துவிக்கின்றது.

இ - ள்: வகாரமிசையும் மகாரங் குறுகும் — மகாரம் ஒரு மொழிக்கண்ணேயன்றி வகாரத்தின்மேலுங் குறுகும் ; எ - று.

எ - டு : நிலம்வலிது வரும்வண்ணக்கன் என வரும். (நடு)

மகர ஈற்று நாட்பெயர்

நஉக. நாட்பெயர்க் கிளவி மேற்கிளந் தன்ன
அத்தும் ஆன்மிசை வரைநிலை யின்றே
ஒற்றுமெய் கெடுதல் என்மனுர் புலவர்.

இஃது இவ்வீற்று நாட்பெயர்க்கு வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இ - ள்: நாட் பெயர்க் கிளவி மேற் கிளந்தன்ன — மகர ஈற்று நாட்பெயர் இகர ஈற்று நாட்பெயர் போல ஆன் சாரியை பெற்று முடியும், அத்தும் ஆன்மிசை வரைநிலை இன்று — அத்துச் சாரியை ஆன்சாரியை மேலும் பிறசாரியை மேலும் வருதல் நீக்கு நிலைமையின்று, ஒற்று மெய்கெடுதல் என்மனார் புலவர் — ஆண்டு நிலைமொழி மகர ஒற்றுக் கெடுக என்று கூறுவர் புலவர்; எ - று.

உம்மையை ஆன்மிசையுமென மாறுக.

எ - டு: மகத்தாற்கொண்டான் ஒணத்தாற்கொண்டான் சென்ரூன் தந்தான் போயினனென்க. ஏனைநாட்களோடும் ஒட்டுக. மகர ஒற்றுக் கெடுத்து 'அத்தினகர மகர மூனையில்லை' (எழு - கஉடு) என அகரங் கெடுத்துக் 'குற்றியலுகரமுமற்றென' (எழு - கடு) என ஆனேற்றி 'ஆனினகரமும்' (எழு - கஉச) என்றதனுன் றகரமாக்கி முடிக்க. மகத்துஞான்று கொண்டான் சென்ரூன் தந்தான் போயினனென ஞான்றென்னுஞ் சாரியைமேல் அத்து வந்தது.

வரையாது கூறினமையின் இம்முடிபு நான்கு கணத்துங் கொள்க. மகத்தான்ஞாற்றினன் நிறுத்தினன் மாய்ந்தான் வந்தான் அடைந்தான் என வரும். (நூசு)

வேற்றுமையில் னகர ஈறு

நூநூஉ. னகார இறுதி வல்லெழுத் தியையின்
றகார மாகும் வேற்றுமைப் பொருட்கே.

இது நிறுத்த முறையானே னகர இறுதி வேற்றுமைக்கண் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: னகார இறுதி வல்லெழுத்து இயையின் றகார மாகும் — னகார ஈற்றுப்பெயர் வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வந்து இயையின் றகாரமாகும், வேற்றுமைப் பொருட்கு — வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்; எ - று.

எ - டு: பொற்குடம் சாடி தூதை பானை எனவரும். (நூஎ)

சில னகர ஈற்றுச் சொற்கள்

நூநூந. மன்னுஞ் சின்னும் ஆனும் ஈனும்
பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்.

இஃது அவ்வீற்று அசைநிலை இடைச்சொற்களும் ஏழாம்வேற்றுமை இடப்பொருள் உணரநின்ற இடைச்சொற்களும் வினையெச்சமும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: மன்னுஞ் சின்னும் ஆனும் ஈனும் பின்னும் முன்னும் வினையெஞ்சு கிளவியும் — மன்னென்னுஞ் சொல்லுஞ் சின்னென்னுஞ் சொல்லும் ஆனென்னுஞ் சொல்லும் ஈனென்னுஞ் சொல்

லும் பின்னென்னுஞ் சொல்லும் முன்னென்னுஞ் சொல்லும் வினையெச்சமாகிய சொல்லும், அன்ன இயல என்மனார் புலவர் — முற்கூறிய இயல்பினையுடையவாய் னகரம் றகரமாய் முடியுமென்று சொல்லுவர் புலவர்; எ - று.

எ - டு: 'அதுமற்கொண்கன் றேரே' 'காப்பும் பூண்டிசிற் கடையும் போகலே' (அகம் - எ) எனவும், ஆற்கொண்டான் ஈற்கொண்டான் பிற்கொண்டான் முற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவும், வரிற் கொள்ளும் செல்லும் தரும் போம் எனவும் வரும்.

பெயராந்தன்மையவாகிய ஆன்[1] ஈன்[2] என்பனவற்றை முற்கூறுதலான் ஆன்கொண்டான் ஈன்கொண்டான் எனத் திரியாமையுங் கொள்க.

பின் முன் என்பன பெயரும் உருபும் வினையெச்சமுமாய் நிற்றலின் பெயர் ஈண்டுக் கூறினார். ஏனைய உருபியலுள்ளும் வினையெஞ்சு கிளவியென்பதன்கண்ணும் முடியும். அப்பெயரை முற்கூறுதலாற் பின்கொண்டான் முன்கொண்டான் எனத் திரியாமையுங் கொள்க.

இயலவென்றதனான் ஊன்[3] என்னுஞ் சுட்டு ஊன் கொண்டானென இயல்பாய் முடிதல் கொள்க. (நஅ)

'வயின்' என்னுஞ் சொல்

நஙச. சுட்டுமுதல் வயினும் எகரமுதல் வயினும்
அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப.

இஃது இவ் வீற்றுள் ஏழாம்வேற்றுமை இடப்பொருள் உணர்த்தும் இடைச்சொற்கு முடிபு கூறுகின்றது.

இ - ள்: சுட்டு முதல் வயினும் — சுட்டெழுத்தினை முதலாகவுடைய வயினென்னுஞ் சொல்லும், எகர முதல் வயினும் — எகரமாகிய முதல் வினவினையுடைய வயினென்னுஞ் சொல்லும், அப்பண்பு நிலையும் இயற்கைய என்ப — மேல் னகரம் றகரமாமென்ற தின்மை நிலைபெற்று முடியும் இயல்பையுடையவென்று கூறுவார் ஆசிரியர்; எ - று.

எ - டு: அவ்வயிற்கொண்டான் இவ்வயிற்கொண்டான் உவ்வயிற்கொண்டான் எவ்வயிற்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் எனவரும்.

இயற்கை என்றதனால் திரியாது இயல்பாய் முடிவனவுங் கொள்க. (நக)

'குயின்' என்னுஞ் சொல்

நஙசு. குயினென் கிளவி இயற்கை யாகும்.

இது னகாரந் திரியாது இயல்பாக என்றலின் எய்தியதுவிலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ - ள்:—குயினென் கிளவி இயற்கை யாகும் — குயினென்னுஞ் சொல் திரியாது இயல்பாய் முடியும்; எ - று.

---

1 ஆன் - அங்கு. 2 ஈன் - இங்கு. 3 ஊன - உங்கு, உவ்விடம.

ள - டு : குயின்குழாம் செலவு தோற்றம் பறைவு என வரும். குயி னென்பது மேகம். அஃது அஃறிணைப் பெயர்.

தொகைமரபினுள் உயர்திணைப்பெயரும் விரவுப்பெயரும் இயல்பாக வென்றார்.

குயின் வினையுமாம்[1].

இயற்கை என்றதனாற் கான்கோழி கோன்குணம் வான்கரை என வரு வனவுங் கொள்க. (சஎ)

'எகின்' என்னும் மரப் பெயர்

நஙசு. எகின்மர மாயின் ஆண்மர இயற்றே.

இது திரிபு விலக்கி அம்மு வகுத்தலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ - ள் : எகின் மரமாயின் — எகினென்பது புள்ளன்றி மரப்பெயராயின், ஆண்மர இயற்று — ஆண்மரத்தின் இயல்பிற் றாய் அம்முப்பெற்று முடியும் ; எ - று.

எகினங்கோடு செதிள் தோல் பூ என வரும். (சக)

'எகின்' என்னும் பிற உயிரி (பிராணி)யின் பெயர்

நஙஎ. ஏனை எகினை யகரம் வருமே
வல்லெழுத் தியற்கை மிகுதல் வேண்டும்.

இதுவும் அது, திரிபு விலக்கி அகரம் விதித்தலின்.

இ - ள் : ஏனை எகினை அகரம் வரும் — மரமல்லாத எகின் நிலைமொழிக்கண் அகரம்பெற்று முடியும், வல்லெழுத்தியற்கை மிகுதல் வேண்டும் — ஆண்டு வருமொழி வல்லெழுத்தியல்பு மிக்கு முடிதலே வேண்டும் ஆசிரியன் ; எ - று.

ள - டு : எகினக்கால் செவி தலை புறம் என வரும்.

மேலைச் சூத்திரத்தோடு இதனை ஒன்றாக ஓதாததனான் இயல்பு கணத் தும் அகரப்பேறு கொள்க. எகினஞாற்சி நீட்சி மாட்சி வலிமை யாப்பு அடைவு என வரும்.

இயற்கை யென்றதனான் அகரத்தோடு மெல்லெழுத்துப் பேறுங் கொள்க. எகினங்கால் செவி தலை புறம் என வரும்.

இனிச் சிறுபான்மை எகின் சேவல் எகினச் சேவல் பெடை என்பன ஆறனுருபு விரிவுழி ஈண்டை இலேசான் முடிக்க. பண்பு கருதிய வழி[2] இவ் வோத்தின் புறனடையான் முடிக்க. (சஉ)

கிளைப் பெயர்

நஙஅ. கிளைப்பெய ரெல்லாங் கிளைப்பெய ரியல.

---

1 குயினுதல் - துளைத்தல்.

2 எகினுகிய சேவல், எகினமாகிய சேவல் என விரிப்பின் இரு பெயரொட்டுப் பண்புத் தொகையாம்.

இது னகரந் திரிதலே விலக்கி இயல்பாக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ - ள்: கிளைப்பெயரெல்லாம் — னகர ஈற்றுக் கிளைப்பெய ரெல்லாம், கிளைப்பெயர் இயல — ணகர ஈற்றுக் கிளைப்பெயர் போலத் திரியாது இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: எயின்குடி சேரி தோட்டம் பாடி என வரும். எயின் வந்தது என்று அஃறிணைக்கும் எய்துதலின் தொகை மரபினுள் முடியாதாயிற்று, ஆண்டு உயர்திணைக்கே கூறுதலின்.

இனி எல்லா மென்றதனானே எயினக்கன்னி பிள்ளை என அக்கும் வல் லெழுத்தும் பெறுதலும், எயின வாழ்வு என வல்லெழுத்துப் பெறுமையுங் கொள்க.

இன்னும் இதனானே பார்ப்பனக்கன்னி குமரி சேரி பிள்ளை என ஆகாரங் குறுகி அக்கும் வல்லெழுத்துங் கொடுத்தும், பார்ப்பன வாழ்க்கை என வல் லெழுத்துக் கொடாதும் முடிக்க.

இன்னும் இதனானே நான்கு கணத்துக் கண்ணும் வெள்ளாள னென நின்றதனை அன்கெடுத்துப் பிரித்து னகார வொற்றினை ணகார வொற்றுக்கி வெள்ளாண்குமரி பிள்ளை மாந்தர் வாழ்க்கை ஒழுக்கம் என முடிக்க.

இன்னும் இதனானே முதலெழுத்தை நீட்டி ளகார வொற்றினைக் கெடுத்து வேளாணென முடிக்க.

இதனானே பொருந வாழ்க்கையும் முடிக்க.

வேட்டுவக் குமரி யென்பது மரூஉ வழக்கு.[1] (சஉ)

'மீன்' என்னுஞ் சொல்

ஙஙக. மீனென் கிளவி வல்லெழுத் துறழ்வே.

இதுவும் அது, தன் திரிபு வல்லெழுத்தினோடு உறழ்க என்றலின்.

இ - ள்: மீனென்கிளவி வல்லெழுத்து உறழ்வு — மீனென் னுஞ் சொல் திரிபு வல்லெழுத்தினோடு உறழ்ந்து முடியும்; எ - று.

எ - டு: மீன்கண் மீற்கண், மீன்சினை மீற்சினை, மீன்றலை மீற் றலை, மீன்புறம் மீற்புறம் என வரும். (சச)

'தேன்' என்னுஞ் சொல்

ஙசஂ. தேனென் கிளவி வல்லெழுத் தியையின்
மேனிலை ஒத்தலும் வல்லெழுத்து மிகுதலும்
ஆமுறை யிரண்டும் உரிமையு முடைத்தே
வல்லெழுத்து மிகுவழி இறுதி யில்லை.

இதுவும் அது, மேலதனோடு மாட்டெறிதலின்.

இ - ள்: தேன் என் கிளவி வல்லெழுத்து இயையின் — தேனென்னுஞ்சொல் வல்லெழுத்து முதன்மொழி வருமொழி

1 வேடக்குமரி என்பது வேட்டுவக் குமரி என மருவிற்று.

யாய்வரின், மேல் நிலை ஒத்தலும் — மீனென்பதற்குக் கூறிய திரிபுறழ்ச்சி நிலை ஒத்து முடிதலும், வல்லெழுத்து மிகுதலும் — வருமொழி வல்லெழுத்து மிக்கு முடிதலுமாகிய, ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்து — அம்முறைமையினையுடைய இரண்டினையும் உரித்தாதலையும் உடைத்து, வல்லெழுத்து மிகுவழி இறுதியில்லை — வல்லெழுத்து மிக்கு வருமிடத்து இறுதியில் நின்ற னகரங் கெடும்; எ - று.

உரிமையுமென்னும் உம்மை 'மெல்லெழுத்து மிகினும்' (எழு - நசக) என மேல் வருகின்றதனை நோக்கிற்று.

எ - டு: தேன்குடம் தேற்குடம் சாடி தூதை பானை என மேனிலை ஒத்தன. தேக்குடம் சாடி தூதை பானை என னகரங்கெட்டு வல்லெழுத்து மிக்கன. (சடு)

அதற்கு, மேலும் முடிபுகள்

நசக. மெல்லெழுத்து மிகினும் மான மில்லை.

இதுவும் அது, உறழ்ச்சியும் வல்லெழுத்தும் விலக்கி மெல்லெழுத்து விதித்தலின்.

இ - ள்: மெல்லெழுத்து மிகினும் மானமில்லை—முற்கூறிய தேனென்கிளவி வல்லெழுத்துவந்தால் அவ்வல்லெழுத்து மிகுதலேயன்றி மெல்லெழுத்து மிகினுங் குற்றமில்லை; எ - று.

னகரக்கேடு அதிகாரத்தாற் கொள்க.

எ - டு: தேங்குடம் சாடி தூதை பானை எனவரும். (சசு)

நசஉ. மெல்லெழுத் தியையின் இறுதியொ டுறழும்.

இது தொகைமரபினுள் 'வேற்றுமைக் கண்ணும் வல்லெழுத் தல்வழி' (எழு - கசஅ) என்பதனுற் கூறிய இயல்பை விலக்கி உறழுமென்றலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள்: மெல்லெழுத்து இயையின் — அத் தேனென் கிளவி மெல்லெழுத்து முதன்மொழி வந்து இயையின், இறுதியொடு உறழும் — நிலைமொழியிறுதியின் னகர வொற்றுக் கெடுதலுங் கெடாமையுமாகிய உறழ்ச்சியாய் முடியும்; எ - று.

எ - டு: தேன்ஞெரி தேஞெரி தேனுனி தேநுனி தேன்மொழி தேமொழி என வரும்.

மேல் 'ஆமுறை' (எழு - நசo) என்றதனால் தேஞெரி தேஞ்ஞெரி தேநுனி தேந்நுனி தேமொழி தேம்மொழி என னகரங் கெட்டுத் தத்தம் மெல்லெழுத்து மிக்கும் மிகாதும் முடிந்தனவுங் கொள்க.

இனி மேல் 'மானமில்லை' (எழு - நசக) என்றதனான் ஈறு கெட்டு மெல்லெழுத்து மிகாது இயல்பாய் முடிவனவுங் கொண்டு தேஞெரி தேந்நுனி தேமொழி என்பன காட்டின் அவை முற்கூறியவற்றுள் அடங்குமென்க. (சஎ)

'தேன்' முன் 'இருல்'

நசஙக. இருஅல் தோற்றம் இயற்கை யாகும்.

இஃது அத் தேனென்பதற்கு உயிர்க்கணத்து ஒரு மொழிமுடிபு வேற்றுமை கூறுகின்றது.

இ - ள்: இருஅல் தோற்றம் — தேனென்னுஞ் சொல் இருலென்னும் வருமொழியது தோற்றத்துக்கண், இயற்கையாகும் — நிலைமொழியின் னகரங் கெடாதே நின்று இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: தேனிருல் என வரும். (சஅ)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

நசஙச. ஒற்றுமிகு தகரமொடு நிற்றலு முரித்தே.

இதுவும் அதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: ஒற்றுமிகு தகரமொடு நிற்றலும் உரித்து — அத் தேனென்பது இருலொடு புணருமிடத்துப் பிறிதுமோர் தகரத்தோடு நின்று முடிதலும உரித்து; எ - று.

'வல்லெழுத்து மிகுவழி யிறுதி யில்லை' (எழு - நசo) என்றதனான் நிலைமொழி ஈறு கெடுக்க. தகரம் மிகுமென்னாது ஒற்றுமிகு தகரமென்றதனான் ஈரொற் றாக்குக.

எ - டு: தேத்திருல் என வரும்.

மேலைச்சூத்திரத்தோடு இதனை யொன்றாக ஓதாததனாற் பிற வரு மொழிக்கண்ணும் இம்முடிபு கொள்க. தேத்தடை தேத்தீ என வரும்.

தோற்ற மென்றதனால் தேனடை தேனீ என்னும் இயல்பும் கொள்க.

'மின்' 'பின்' 'பன்' 'கன்' என்னும் சொற்கள்

நசஞ. மின்னும் பின்னும் பன்னும் கன்னும்
அந்நாற் சொல்லுந் தொழிற்பெய ரியல.

இஃது அல்வழிக்கண் இயல்பாயும் வேற்றுமைக்கண் திரிந்தும் வருக என எய்துவித்த முடிபை விலக்கித் தொழிற்பெய ரியல்பாமெனப் பிறிது விதி வகுத்தது.

இ - ள்: மின்னும் பின்னும் பன்னுங் கன்னும் அந்நாற்சொல்லும் — மின்னென்னுஞ் சொல்லும் பின்னென்னுஞ் சொல்லும் பன்னென்னுஞ் சொல்லுங் கன்னென்னுஞ் சொல்லுமாகிய அந்நான்கு சொல்லும், தொழிற்பெயர் இயல — அல்வழியினும் வேற்றுமையினும் ஞகாரஈற்றுத் தொழிற்பெயர்போல வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்றுமுடியும்; எ - று.

'மின்னுச்செய் விளக்கத்துப் பின்னுப்பிணி யவிழ்ந்த' (புறம் - இ) எனவும், பன்னுக்கடிது கன்னுக்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், மின்னுக்கடுமை பின்னுக்கடுமை பன்னுக்கடுமை கன்னுக்கடுமை சிறுமை நீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனவும் வரும்.

தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல என்று ஓதாது கிளந்தோதி ஞர் இவை தொழினிலைக்கண்ணன்றி வேறு தம்பொரு ளுணராதின்றவழியும் இம்முடிபு எய்து மென்றற்கு.

மின்னென்பது மின்னுதற் றொழிலும் 'மின்னுநிமிர்ந் தன்ன' என மின் னெனப்படுவதோர் பொருளும் உணர்த்தும். எனையவும் அன்ன. (நிஅ)

'கன்' என்னும் சொல்லுக்கு, மேலும் ஒரு முடிபு

நசஎ. வேற்றுமை யாயின் ஏனை யெகினெடு
தோற்ற மொக்குங் கன்னென் கிளவி.

இது நிலைமொழிக்கண் உகரம் விலக்கி அகரம் வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள்: வேற்றுமையாயின் ஏனை எகினெடு தோற்றம் ஒக்கும் — வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயின் ஒழிந்த மரமல் லாத எகினெடு தோற்றம் ஒத்து அகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும்; கன் என் கிளவி — கன்னென்னுஞ்சொல்; எ - று.

உ - ம்: கன்னக்[1]குடம் சாடி தூதை பானை ஞாற்சி நீட்சி மாட்சி வலிமை என வரும். கன்னக்கடுமை எனக் குணவேற்றுமையுஞ் சிறு பான்மை கொள்க.

தோற்ற மென்றதனால் அல்வழிக்கண் வன்கணத்து அகரமும் மெல் லெழுத்தும் ஏனைக்கணத்து அகரமுங் கொள்க. கன்னங்கடிது சிறிது நீது பெரிது எனவும், கன்னஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும் வரும். கன்னங்கடுமை எனக் குணவேற்றுமைக்கண்ணும் இவ்விதி கொள்க.

'பொன்னகர் வரைப்பிற் கன்னந்[2] தூக்கி' (ஐங்குறு - உசஎ) என் பதோ வெனின், அது மகர ஈற்றுப் பொருட்பெயர். (நிக)

இயற்பெயர் முன் 'தந்தை' என்னும் சொல்

நசஎ. இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்
முதற்கண் மெய்கெட அகரம் நிலையும்
மெய்யொழித் தன்கெடும் அவ்வியற் பெயரே.

இஃது 'அஃறிணை விரவுப்பெய ரியல்புமா ருளவே' (எழு - கநிடி) என்றதற்கு ஈண்டுத் திரிபுகூறலின் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின் — இவ் வீற்று விரவுப்பெயருள் இயற்பெயரின் முன்னர்த் தந்தையென்

1 கன்னம் - கன்னரைத்தொழில்.
2 கன்னம் - நோய் தணியும்பொருட்டுக் கோயிற்கு நேர்த்திக்கடனைச் செய்து தொடுக்கும் சிறு படிமம்.

னும் முறைப்பெயர் வருமொழியாய் வருமாயின், முதற்கண் மெய் கெட அகரம் நிலையும் — அத்தந்தை யென்பதன் முதற்கணின்ற தகரவொற்றுக்கெட அதன்மே லேறிநின்ற அகரங் கெடாது நிற்கும், அவ்வியற்பெயர் மெய்யொழித்து அன் கெடும் — அந் நிலைமொழியாகிய இயற்பெயர் அன்னென்னுஞ் சொல்லில் அகரம் ஏறிநின்ற மெய்யை ஒழித்து அவ்வன் தான் கெட்டு முடியும்; எ - று.

எ - டு: சாத்தந்தை கொற்றந்தை என வரும்.

முதற்கண் மெய்யென்றதனால் சாத்தன் றந்தை .கொற்றன் றந்தை என்னும் இயல்பு முடிபுங் கொள்க. (நிஉ)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

நூசஅ. ஆதனும் பூதனும் கூறிய இயல்பொடு
பெயரொற் றகரம் துவரக் கெடுமே.

இது மேலதற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: ஆதனும் பூதனும் — முற்கூறிய இயற்பெயருள் ஆதனும் பூதனும் என்னும் இயற்பெயர்கள் தந்தை யென்னும் முறைப்பெயரோடு முடியுங்கால், கூறிய இயல்பொடு — முற் கூறிய நிலைமொழி அன் கெடுதலும் வருமொழித் தகரவொற்றுக் கெடுதலுமாகிய செய்கைகளுடனே, பெயரொற்று அகரந் துவரக் கெடும் — நிலைமொழிப்பெயரில் அன்கெட் நின்ற தகரவொற்றும் வருமொழியில் தகரவொற்றுக்கெட நின்ற அகரமும் முற்றக் கெட்டு முடியும்; எ - று.

எ - டு: ஆந்தை பூந்தை என வரும்.

இயல்பென்றதனாற் பெயரொற்றும் அகரமும் கெடாதே நிற்றலுங் கொள்க. ஆதந்தை பூதந்தை என வரும்.

இனித் துவர வென்றதனான் அழான் புழான் என நிறுத்தித் தந்தை என வருவித்து நிலைமொழி னகரமும் வருமொழித் தகரமும் அகரமுங் கெடுத்து அழாந்தை புழாந்தை என முடிக்க. (நிக)

அதற்கு, வேறொரு முடிபு

நூசகூ. சிறப்பொடு வருவழி யியற்கை யாகும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: சிறப்பொடு வருவழி — அவ்வியற் பெயர் பண்பு அடுத்து வரும்வழி, இயற்கையாகும் — முற்கூறிய இருவகைச் செய்கையுந் தவிர்ந்து இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: பெருஞ்சாத்தன்றந்தை பெருங்கொற்றன்றந்தை எனவரும். கொற்றங்கொற்றன்றந்தை சாத்தங்கொற்றன்றந்தை என்றாற்போல்வன பண்பன்றி அடை அடுத்தனவாதலின் புறனடையான் முடிக்க. (நிச)

இயற்பெயர்முன் 'மகன்' முதலிய பிறபெயர்கள்

கூடு. அப்பெயர் மெய்யொழித் தன்கெடு வழியும்
நிற்றலு முரித்தே அம்மென் சாரியை
மக்கள் முறைதொகூஉம் மருங்கி னான.

இது மேலதற்கு வேறோர் வருமொழிக்கண் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: அப்பெயர் மக்கள் ஆன முறை தொகூஉம் மருங்கினும் — அவ்வியற்பெயர் முன்னர்த் தந்தை யன்றி மகனாகிய முறைப்பெயர் வந்து தொகுமிடத்தினும், மெய்யொழித்து அன் கெடுவழி அம்மென் சாரியை நிற்றலும் உரித்து — அவ்வியற்பெயரில் தான்ஏறிய மெய்நிற்க அன்கெட்டு அம்முச்சாரியை வந்து நிற்றலும் உரித்து; எ - று.

ஆன என்பதனை மக்களோடும், உம்மையை மருங்கினோடுங் கூட்டுக. முறைதொகூஉ மருங்கினென்றது இன்னற்கு மகனென்னும் முறைப்பெயராய்ச் சேரும்மிடத் தென்றவாறு.

எ டு: கொற்றங்கொற்றன், சாத்தங்கொற்றன் என நிலைமொழி அன்கெட்டுழி அம்மு வந்தது. இவற்றிற்கு அதுவெனுருபு விரியாது அதன் உடைமைப்பொருள் விரிக்க. இது முறைப்பெயர்.

இனி உம்மையாற் கொற்றங்குடி சாத்தங்குடி எனப் பிறபெயர் தொக்கனவுங் கொள்க.

மெய்யொழித் தென்றதனானே கொற்றமங்கலம் சாத்தமங்கலம் என்பனவற்றின்கண் அம்மின் மகரங்கெடுதலும் வேட்டமங்கலம்[1] வேட்டங்குடி என்பனவற்றின் நிலைமொழியொற்று இரட்டுதலுங் கொள்க. (நிரு)

'தான்' 'பேன்' 'கோன்' என்னும் இயற்பெயர்கள்

கூடுக. தானும் பேனுங் கோனு மென்னும்
ஆமுறை யியற்பெயர் திரிபிட னிலவே.

இது மேலதற்கு ஒருவழி எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: தானும் பேனுங் கோனும் என்னும் ஆ முறை இயற்பெயர் — அவ்வியற்பெயருள் தானும் பேனுங் கோனு மென்னும் அம்முறையினையுடைய இயற்பெயர்கள் தந்தையொடும் மக்கள் முறைமையொடும் புணருமவழி, திரிபிடனில — முற் கூறிய திரிபுகளின்றி இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: தான்றந்தை பேன்றந்தை கோன்றந்தை எனவும், தான்கொற்றன் பேன்கொற்றன் கோன்கொற்றன் எனவும் வரும். பேன் கோன் என்பன முற்காலத்து வழக்கு. இவை தொகைமரபினுள் 'அஃறிணை விரவுப் பெயர்' (எழு - கருடு) என்புழி இயல்பாயினவேனும் ஈண்டு இவ்வீற்றிற்குத் திரிபு கூறுதலின் அதனையும் விலக்கி இயல்பாமென்பதூஉங் கூறினார். (நிசு)

1 வேட்டமங்கலம் - வேடமங்கலம் எனபது நிலைமொழியொற்று இரட்டிதது.

'தான்' 'யான்' என்னும் சொற்கள்

நூ.உ. தான்யா னெனும்பெயர் உருபியல் நிலையும்.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, தொகை மரபினுள் 'அஃறிணைவிரவுப்பெயர்' (எழு - கடுஉ) என்பதனானே இயல்பாய நின்ற தான் என்பதனையும் 'உயிர்முதிய' (எழு - கடுஙூ) என்பதனால் இயல்பாய் நின்ற யானென்பதனையும் அவ்வியல்புவிலக்கி உருபியலோடு மாட்டெறி தலின்.

இ - ள்: தான் யான் எனும் பெயர் — தானென்னும் விரவுப் பெயரும் யானென்னும் உயர்திணைப்பெயரும், உருபியல் நிலையும் — உருபியலிற் கூறிய இயல்பிலே நிலைபெற்றுத் தானென்பது நெடு முதல் குறுகித் தன்னென்றும் யானென்பது ஆகாரம் எகரமாய் யகரங்கெட்டு என்னென்றும் முடியும்; எ - று.

எ - டு: தன்கை என்கை செவி தலை புறம் என வரும்.

வருமொழி வரையாது கூறினமையின் இயல்புகணத்துக்கண்ணும் தன் ஞாண் என்ஞாண் தூல் மணி யாழ் வட்டு அடை ஆடை என வரும். (நிஎ)

அல்வழியில் அச்சொற்கள்

நூ.ஙூ. வேற்றுமை யல்வழிக் குறுகலுந் திரிதலுந்
தோற்ற மில்லை யென்மனார் புலவர்.

இஃது அல்வழிக்கண் இயல்பாக என்றலின் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: வேற்றுமை அல் வழி — முற்கூறிய தான் யானென் பன வேற்றுமைப் புணர்ச்சியல்லாதவிடத்து, குறுகலுந் திரிதலுந் தோற்றமில்லை என்மனார் புலவர் — தானென்பது நெடுமுதல் குறுகுதலும் யானென்பது அவ்வாறு திரிதலுந் தோற்றமின்றி இயல்பாய் முடியுமென்று கூறுவர் புலவர்; எ - று.

எ - டு: தான்குறியன் சிறியன் தீயன் பெரியன் ஞான்முன் நீண்டான் மாண்டான் வலியன் எனவும், யான் குறியேன் சிறியேன் தீயேன் பெரியேன் ஞான்றேன் நீண்டேன் மாண்டேன் வலியேன் எனவும் வரும்.

தோற்ற மென்றதனால் வேற்றுமைக்கண் அவ்வாறன்றி னகரந்திரிதலுங் கொள்க. தற்புகழ் தற்பாடி, எற்புகழ் எற்பாடி என் வரும். (நிஅ)

'அழன்' என்னுஞ்சொல்

நூ.ச. அழன்என் இறுதிகெட வல்லெழுத்து மிகுமே.

இது வேற்றுமைக்கண் அகரந் திரியாது கெடுக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்:—அழன் என் இறுதி கெட — அழனென்னுஞ் சொல் தன் ஈற்று னகரங் கெட, வல்லெழுத்து மிகும் — வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: அழக்குடம் சாடி தூதை பானை என வரும். அழக்குட மென்பது பிணக்குடத்தை. (நிகூ)

'முன்' என்பதற்கு முன் 'இல்'

நூ.நு. முன்னென் கிளவி முன்னர்த் தோன்றும்
இல்லென் கிளவிமிசை றகர மொற்றல்
தொல்லியல் மருங்கின் மரீஇய மரபே.

இது 'மருவின்றொகுதி' (எழு - ககக) என்பதனைக் கூறிய இலக்கண மரூஉக்களில் ஒன்றற்கு முடிபு கூறுகின்றது.

இ - ள்: முன் என் கிளவி முன்னர்த் தோன்றும் இல் என் கிளவிமிசை — முன்னென்னுஞ் சொல்லின்முன்னே வரும் இல் லென்னுஞ் சொல்லின்மேலே, றகரம் ஒற்றல் — ஒரு றகரவொற்று வந்துநின்று முடிதல், தொல்லியல் மருங்கின் மரீஇய மரபு — பழையதாகிய இயல்பினையுடைய வழக்கிடத்து மருவிவந்த இலக்கண முடிபு; எ - று.

எ - டு: முன்றில் என வரும். இன்முன் என நிற்கற்பாலது முன்றி லென்று தலைதடுமாறுதலின் மரூஉவாயிற்று. முன்னென்பதற்கு ஒற்றிரட்டுதல் இலக்கணமேனும் அதுவன்றித் தனக்கு இனமாயதோர் றகரவொற்றுப் பெறுதலின் வேறு முடிபாயிற்று. (சுo)

'பொன்' என்னுஞ் சொல்

நூ.நூ. பொன்னென் கிளவி யீறுகெட முறையின்
முன்னர்த் தோன்றும் லகார மகாரம்
செய்யுள் மருங்கில் தொடரிய லான.[1]

இஃது அவ் வீற்றுப்பெய ரொன்றற்குச் செய்யுள்முடிபு கூறுதலின் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: பொன் என் கிளவி ஈறு கெட — பொன்னென்னுஞ் சொல் தன்னீறுகிய னகரங்கெடாநிற்க, முன்னர் லகார மகாரம் முறையிற் றோன்றும் — அதன் முன்னர் லகரமும் மகரவொற்றும் முறையானே வந்து நிற்கும், செய்யுள் மருங்கில் தொடரியலான — அங்ஙனம் நிற்பது செய்யுளிடத்துச் சொற்கள் தம்முள் தொடர்ச்சிப்படும் இயல்பின்கண்; எ - று.

முறையினென்றதனால் மகரம் ஒற்றுதல் கொள்க.

எ - டு: 'பொலம்படப் பொலிந்த கொய்சுவற்புரவி' (மலைபடு - நிஎச) என வரும்.

---

1 பொல - பொன = அழகு. அழகிய உலோகம், எனறுமாம். பொல + அம = பொலம். பொல + பு = பொற்பு = அழகு. பொலுதல் = பொருந்துதல், அழகாயிருத்தல். ஓ, நோ; ஒபித்தல் = பொருந்தச் செய்தல், அலங்கரித்தல். பொலலாத - பொலலா = பொருந்தாத, அழகிலலாத. "பொலலாக கருங்காகை" எனறு காரிகையாசிரியரும் கூறுதல் காண்க.

தொடரியலான என்றதனானே வன்கணத்துக்கண்ணும் லகரம் நிற்க மகரம் வல்லெழுத்நிற்கேற்ற மெல்லெழுத்தாகத் திரிதல் கொள்க. 'பொலங் கலஞ்சுமக்க பூண்டாங்கிளமூலே' (அகம் - கக) 'பொலஞ்சுட ராழி பூண்ட தேரே' 'பொலந்தேர்க்குட்டுவன்' என வரும்.

இன்னும் இதனானே 'பொலனறுந்தெரியல்' (புறம் - உக) 'பொலமல ராவிரை' (கலி - கஉ அ) என்றாற்போல மகரங்கெட்டுப் பிறகணத்து முடிதலுங் கொள்க. (சுக)

உ. இடையொற்று சாருகள்

வேற்றுமையில் யகர ஈறு

கூருஎ. யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின்
வல்லெழுத் தியையின் அவ்வெழுத்து மிகுமே.

இது முறையானே யகர ஈற்றிற்கு வேற்றுமைமுடிபு கூறுகின்றது.

இ - ள்: யகர இறுதி வேற்றுமைப் பொருள்வயின் — யகர ஈற்றுப்பெயர் வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண், வல்லெழுத்து மிகும் — வல்லெழுத்து முதன்மொழி வந்து இயையின் அவ் வல்லெழுத்து மிக்குமுடியும்; எ - று.

எ - டு: நாய்க்கால் செவி தலை புறம் என வரும். (சுஉ)

'தாய்' என்னும் சொல்

கூருஅ. தாயென் கிளவி யியற்கை யாகும்.

இது விரவுப்பெயருள் ஒன்றற்கு எய்திய வல்லெழுத்து விலக்கிப் பிறிது விதி வகுத்தது.

இ - ள்: தாயென் கிளவி இயற்கையாகும் — தாயென்னுஞ் சொல் வல்லெழுத்து மிகாது இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: தாய்கை செவி தலை புறம் என வரும்.

மேலைச் சூத்திரத்தான் மிகுதியுங் கூறுதலின் அஃறிணை விரவுப் பெயருள் அடங்காதாயிற்று. (சுங)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

கூருக. மகன்விளை கிளப்பின் முதனிலை யியற்றே.

இஃது எய்தாத தெய்துவித்தது, தாயென்பது அடையடுத்துழி வல்லெழுத்து மிகுக என்றலின்.

இ - ள்: மகன் விளை கிளப்பின் — தாயென்னுஞ் சொல் தனக்கு அடையாய் முன்வந்த மகனது விளையைப் பின்னை ஒருவன் கூறுமிடத்து, முதல் நிலை இயற்று — இவ் வீற்றுள் முதற்கட் கூறிய நிலைமையின் இயல்பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு : மகன்முய்க்கலாம் செரு துறத்தல் பகைத்தல் என வரும். மகன் தாயோடு கலாய்த்த கலாம் என விரியும். ஏனையவற்றிற்கும் ஏற்கும் உருபு விரிக்க. வினை ஈண்டுப் பகைமேற்று. (சுசு)

யகர ஈற்றிற்கு வேறு முடிபு

நூசூ0. மெல்லெழுத் துறழும் மொழியுமா ருளவே.

இஃது எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: மெல்லெழுத்து உறழும் மொழியுமாருள — யகர ஈற்றுள் அதிகார வல்லெழுத்தினோடு மெல்லெழுத்து மிக்கு உறழ்ந்து முடிவனவும் உள ; எ - று.

எ - டு : வேய்க்குறை வேய்ங்குறை செய்கை தலை புறம் என வரும். (சுஞ)

அல்வழியில் யகர ஈறு

நூசூக. அல்வழி யெல்லாம் இயல்பென மொழிப.

இஃது அவ் வீற்று அல்வழிக்கு எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: அல்வழி எல்லாம் இயல்பென மொழிப — யகர ஈற்று அல்வழியெல்லாம் இயல்பாய் முடியும் என்று கூறுவர் புலவர் ; எ - று.

எ - டு : நாய்கடிது சிறிது தீது பெரிது என வரும்.

எல்லாமென்றதனால் அவ்வாய்க்கொண்டான் இவ்வாய்க்கொண்டான் உவ்வாய்க்கொண்டான் எவ்வாய்க்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என உருபின் பொருள்பட முடிவனவும், தாய்க்கொண்டான் தாய்ப்பெய்தான் என்றாற்போலும் வினையெச்சமும், பொய்ச்சொல் மெய்ச்சொல் எய்ப்பன்றி என்றாற்போலும் பண்புத்தொகையும், வேய்கடிது வேய்க்கடிது என்னும் அல்வழி யுறழ்ச்சிமுடிவுங் கொள்க. (சுசு)

வேற்றுமையில் ரகார ஈறு

நூசூஉ. ரகார இறுதி யகார இயற்றே.

இது நிறுத்தமுறையானே ரகார ஈற்று வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இ - ள்: ரகார இறுதி — ரகார ஈற்றுப்பெயர் வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண், யகார இயற்று — யகார ஈற்று இயல் பிற்றாய் வல்லெழுத்து வந்துழி அவ் வல்லெழுத்து மிக்கு முடியும் ; எ - று.

எ- டு : தேர்க்கால் செலவு தலை புறம் என வரும்.

இம் மாட்டேற்றினை யகர ஈற்று வேற்றுமை அல்வழி யென்னும் இரண்டையுங் கருதி மாட்டெறிந்தாரென்பார் அல்வழிமுடிபும் ஈண்டுக் காட்டுவர். யாம் இவ்வோத்தின் புறனடையாற் காட்டுதும்.

இது ழகர ஈற்றிற்கும் ஒக்கும்.

மாட்டேற்றுன் உறழ்ச்சியுங் கொள்க. வேர்ங்குறை வேர்க்குறை என வரும். (சுஎ)

'ஆர்' 'வெதிர்' 'சார்' 'பீர்' என்னுஞ் சொற்கள்

நசூங. ஆரும் வெதிருஞ் சாரும் பீரும்
மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும்.

இஃது இவ் வீற்றிற்கு எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: ஆரும் வெதிருஞ் சாரும் பீரும் — ஆரென்னுஞ் சொல்லும் வெதிரென்னுஞ் சொல்லுஞ் சாரென்னுஞ் சொல்லும் பீரென்னுஞ் சொல்லும், மெல்லெழுத்து மிகுதல் மெய்பெறத் தோன்றும் — மெல்லெழுத்து மிக்குமுடிதல் மெய்ம்மைபெறத் தோன்றும்; எ - று.

எ - டு: ஆர்ங்கோடு வெதிர்ங்கோடு சார்ங்கோடு பீர்ங்கொடி செதிள் தோல் பூ என வரும்.

பீர் மரமென்பார் பீர்ங்கோடென்பர். 'பீர்வாய்ப் பிரித்த நீர் நிறை முறைசெய்து' என்றுற்போலச் சான்றோர் பலருஞ் செய்யுள் செய்தவாறு காண்க.

மெய்பெற என்றதனுன் 'ஆரங்கண்ணியடுபோர்ச் சோழர்' (அகம் - கூந) என ஆர் அம்முப்பெறுதலும் 'மாரிப்பீரத்தலர் சிலர்கொண்டே' (குறு - கூஅ) எனப் பீர் அத்துப்பெறுதலுங் கொள்க. இதனை அதிகாரப் புறனடையான் முடிப்பாரும் உளர்.

இன்னும் இதனுனே கூர்ங்கதிர்வேல் ஈர்ங்கோதை என்றுற்போலவுங் குதிர்ங்கோடு விலர்ங்கோடு அயிர்ங்கோடு துவர்ங்கோடு சிலிர்ங்கோடு என்றுற் போலவும் மெல்லெழுத்து மிகுவன கொள்க.

இன்னும் இதனுனே துவரங்கோடு என அம்முப் பெறுதலுங் கொள்க. (சுஅ)

'சார்' முன் 'காழ்'

நசூச. சாரென் கிளவி காழ்வயின் வலிக்கும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

இ - ள்: சார் என் கிளவி காழ்வயின் வலிக்கும் — சாரென்பது காழென்பதனோடு புணருமிடத்து வல்லெழுத்து மிக்குப் புணரும்; எ - று.

எ - டு: சார்க்காழ் என வரும். சாரினது வித்தென்பதே பொருள். இதனை வயிரமெனிற் கிளர்ந்தோதுவா ரென்று உணர்க. (சுக)

'பீர்' என்னுஞ் சொற்கு மேலும் ஒரு முடிபு

நசூடு. பீரென் கிளவி அம்மொடுஞ் சிவணும்.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி வகுத்தது.

இ - ள்: பீர் என் கிளவி அம்மொடுஞ் சிவணும் — பீரென் னுஞ்சொல் மெல்லெழுத்தேயன்றி அம்மூப்பெற்றும் முடியும்; எ - று.

எ - டு: பீரங்கொடி செதிள் தோல் பூ எனவும், 'பொன்போற் பீர மொடு பூத்த புதன்மலர்' (நெடுநல்வாடை - கச) எனவும் வரும். உம்மை இறந்தது தழீஇயிற்று. (எ0)

வேற்றுமையில் லகார ஈறு

நூசூசூ. லகார இறுதி னகார இயற்றே.

இது முறையானே லகார ஈற்றை வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் புணர்க்கின்றது.

இ - ள்: லகார இறுதி னகார இயற்று — லகார ஈற்றுப் பெயர் வன்கணம் வந்துழி னகார ஈற்று இயல்பிற்றாய் லகரம் றகரமாய்த் திரிந்துமுடியும்; எ - று.

எ - டு: கற்குறை சிறை தலை புறம், நெற்கதிர் சோறு தலை புறம் என வரும். (எக)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

நூசூஎ. மெல்லெழுத் தியையின் னகார மாகும்.

இது னகாரமாமென்றலின் அவற்றிற்கு எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: மெல்லெழுத்து இயையின் னகார மாகும் — அவ் வீறு மென்கணம் வந்து இயையின் னகாரமாகத் திரிந்து முடியும்; எ - று.

எ - டு: கன்ஞெரி கூனி முரி என வரும்.

இச் சூத்திரத்தினை வேற்றுமை யியலதிகண் அல்வழியது எடுத்துக் கோடற்கட் சிங்கநோக்காக வைத்தமையான் அல்வழிக்கும் இம்முடிபு கொள்க. கன்ஞெரிந்தது நீண்டது மாண்டது என வரும். (எஉ)

அல்வழியில் லகார ஈறு

நூசூஅ. அல்வழி யெல்லாம் உறழென மொழிப.

இஃது அவ் வீற்று அல்வழி முடிபு கூறுகின்றது.

இ - ள்: அல்வழியெல்லாம் உறழென மொழிப — இவ் வீற்று அல்வழிகளெல்லாந் தந்திரிபு வல்லெழுத்தினோடு உறழ்ந்து முடியுமென்று கூறுவர் புலவர்; எ - று.

எ - டு: கல்குறிது கற்குறிது சிறிது நீது பெரிது என வரும்.

எல்லா மென்றதனாற் கல்குறுமை கற்குறுமை சிறுமை நீமை பெருமை எனக் குணம்பற்றி வந்த வேற்றுமைக்கும் உறழ்ச்சி கொள்க.

இன்னும் இதனானே வினைச்சொல்லீறு திரிந்தனவும் உருபுதிரிந்தனவுங் கொள்க. வந்தானாற் கொற்றன் பொருவானாற் போகான் எனவும், அத்தாற்

கொண்டான் இத்தாற் கொண்டான் உத்தாற் கொண்டான்[1] எத்தாற் கொண்டான் எனவும் வரும்.

அக்காற் கொண்டான் என்றுற்போலப் பிறவும் முடிபு உள்ளன வெல்லாம் இதனுன் முடித்துக் கொள்க. (எக)

லகார மெய் ஆய்த மாதல்

நகூகக. தகரம் வருவழி ஆய்தம் நிலையலும்
புகரின் றென்மனுர் புலமை யோரே.

இது லகரம் றகரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாகத் திரியுமென்றலின் எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: தகரம் வருவழி ஆய்தம் நிலையலும் — தகரம் முதலாகிய மொழி வந்தால் லகரம் றகரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாகத் திரிந்துநிற்றலும், புகர் இன்று என்மனுர் புலமையோர் — குற்றமின்றென்று சொல்லுவார் ஆசிரியர்; எ - று.

எ - டு: கஃறீது கற்றீது என வரும்.

புகரின் றென்றதனுல் 'நெடியதனிறுதி' (எழு - நஎ0) என்பதனுள் வேறீது வேற்றீது என்னும் உறழ்ச்சி முடிபுங் கொள்க. (எச)

லகார ஈற்றிற்கு வேறு முடிபு

நகஎ. நெடியதன் இறுதி இயல்புமா ருளவே.

இஃது 'அல்வழியெல்லாமுறழ்' (எழு - நகூஅ) என்றதனை விலக்கி இயல்பாக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: நெடியதன் இறுதி இயல்புமாருள — நெட்டெழுத்தின் ஈற்று லகார ஈறு குறியதன் இறுதிக்கண் நின்ற லகாரம் போலத் திரிந்து உறழ்தலேயன்றி இயல்பாய் முடிவனவும் உள; எ - று.

எ - டு: பால்கடிது சிறிது தீது பெரிது என வரும். இயல்பாகாது திரிந்தன வேற்கடிது என்றுற்போல்வன. (எடு)

'நெல்' முதலிய சொற்கள்

நகஎக. நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும்
அல்லது கிளப்பினும் வேற்றுமை யியல.

இஃது அல்வழிக்கண் உறழ்ந்துமுடிக என்றதனை வேற்றுமை முடிபென்றலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: நெல்லுஞ் செல்லுங் கொல்லுஞ் சொல்லும் — நெல்லென்னுஞ் சொல்லுஞ் செல்லென்னுஞ் சொல்லுங் கொல்லென்னுஞ் சொல்லுஞ் சொல்லென்னுஞ் சொல்லுமாகிய இந்நான்கு

1 அத்தால் இத்தால் உத்தால் என்பன முறையே அஃது இஃது உஃது என்பனவற்றின் திரிபான அத்து இத்து உத்து என்பனவறறின் மூன்றும் வேறுமுடி.

சொல்லும், அல்லது கிளப்பினும் வேற்றுமை இயல — அல்வழி யைச் சொல்லுமிடத்துந் தாம் வேற்றுமைமுடிபின் இயல்பிற்ருய் லகரம் றகரமாய்த் திரிந்து முடியும்; எ - று.

உம்மை சிறப்பு.

எ - டு: நெற்காய்த்தது செற்கடிது கொற்கடிது சொற்கடிது சிறிது நீது பெரிது என வரும். (எசு)

'இல்' என்னும் இன்மைச் சொல்

நூஎஉ. இல்லென் கிளவி இன்மை செப்பின்
வல்லெழுத்து மிகுதலும் ஐயிடை வருதலும்
இயற்கை யாதலும் ஆகாரம் வருதலும்
கொளத்தகு மரபின் ஆகிட னுடைத்தே.

இஃது இவ் வீற்று வினைக்குறிப்புச் சொல்லுள் ஒன்றற்கு எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: இல்லென் கிளவி இன்மை செப்பின் — இல்லென் னுஞ்சொல் இருப்பிடமாகிய இல்லே உணர்த்தாது ஒரு பொருளி ன்து இல்லாமையை உணர்த்தும் இடத்து, வல்லெழுத்து மிகுத லும் — வல்லெழுத்து முதன்மொழி வந்துழி அவ்வல்லெழுத்து மிக்குமுடிதலும், ஐ இடை வருதலும் — ஐகாரம் இடையே வருத லும், இயற்கையாதலும் — இரண்டும் வாராது இயல்பாய் முடித லும், ஆகாரம் வருதலும் — ஆகாரம்வந்து முடிதலுமாகிய இந் நான்கு முடிபும், கொளத்தகு மரபின் — சொற்குமுடிபாகக் கொளத்தகும் முறையானே, ஆகிடனுடைத்து — தன் முடிபாம் இடன் உடைத்து; எ - று.

கொளத்தகு மரபினென்றதனுன் வல்லெழுத்து முதன்மொழி வந்துழி ஐகாரம் வருதலும், ஐகாரம் வந்துழி வல்லெழுத்து மிகுதலும் மிகாமையும், ஆகாரம் வந்துழி வல்லெழுத்து மிக்குமுடிதலுங் கொள்க.

எ - டு: இல்லெனநிறுத்திக் கொற்றன் சாத்தன் தெளிவு பொருள் எனத் தந்து வல்லெழுத்தும் ஐகாரமுங் கொடுத்து இல்லைக் கொற்றனென ஏனையவற்றேடும் ஒட்டுக.

இன்னும் அவ்வாறே நிறுத்தி ஐகாரமே கொடுத்து இல்லே கொற்றன் சாத்தன் தெளிவு பொருள் என வல்லெழுத்து மிகாது முடிக்க.

இன்னுங் கொளத்தகு மரபினென்றதனுன் ஏனைக்கணத்தின் முன்னும் ஐகாரமே கொடுத்து இல்லுஞாண் நூல் மணி வானம் ஆடை என ஒட்டுக.

இஃது இல்லென்பதோர் முதனிலே நின்று வருமொழியோடு இங்ஙனம் புணர்ந்ததென்பது உணர்தற்கு இல்லென்கிளவியென்றும் இயற்கையாதலு மென்றுங் கூறினர். இம்முடிபு வினையியலுள் விரவுவினைக்கண் 'இன்மை செப்பல்' என்புழி 'இல்லே இல்' (எழு - உஉஉ) என்று உரை கூறியவதனு னும், அவனில்லே என்றுற்போல்வன உதாரணமாக எல்லா ஆசிரியருந் தாட் டியவாற்றுலும் உணர்க.

இதனானே இங்ஙனம் புணர்த்தசொல்லன்றி இல்லை என ஐகார ஈறாய் நிற்பதோர் சொல் இன்மையும் உணர்க. ஆயின், இன்மை முதலியவற்றையும் இவ்வாறே புணர்க்க எனின் அவை வருமொழியின்றி ஒரு சொல்லாய் நிற்றலின் புணர்க்காராயினர்.

இனி இயல்பு வருமாறு :—எண்ணில் குணம் செய்கை துடி பொருள் எனவும், பொய்யில் ஞானம் மையில் வாண்முகம் எனவும் வரும்.

இனி ஆகாரம் வருமாறு:—இல்லாக்கொற்றன் சாத்தன் தேவன் பொருள் என ஆகாரம் வல்லெழுத்துப்பெற்றன.

பிற்கூறிய இரண்டும் இல்லென்னும் வினைக்குறிப்பு முதனிலையடியாகத் தோன்றிய பெயரெச்சமறை தொக்கும் விரிந்தும் நின்றன.[1]

இயல்பு முற் கூறுதலனல் இம்முடிபிற்கு வேண்டுஞ் செய்கை செய்க. தாவினீட்சி என்றுற்போல வேறுபட வருவனவற்றிற்கும் வேண்டுஞ் செய்கை செய்து முடிக்க. (எஎ)

'வல்' என்னும் சொல்

நூஎந. வல்லென் கிளவி தொழிற்பெய ரியற்றே.

இஃது இருவழியுந் திரிந்தும் உறழ்ந்தும் வருமென எய்தியதனை விலக்கித் தொழிற்பெய்ரோடு மாட்டெறிதலின் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: வல் என் கிளவி — வல்லென்னுஞ் சொல் அல்வழிக் கண்ணும் வேற்றுமைக்கணனும், தொழிற்பெயர் இயற்று — ஞகார ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வன்கணத்து உகமும் வல்லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்து வகாரத்தும் உகரமும் பெற்று முடியும்; எ - று.

எ - டு: வல்லுக்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், வல்லுக்கடுமை சிறுமை நீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும். (எஅ)

அதற்கு, வேறொரு முடிபு

நூஎச. நாயும் பலகையும் வருஉங் காலை
ஆவயின் உகரங் கெடுதலு முரித்தே
உகரங் கெடுவழி அகரம் நிலையும்.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: நாயும் பலகையும் வருஉங் காலை — வல்லென்புதன் முன் நாயென்னுஞ்சொல்லும் பலகையென்னுஞ் சொல்லும் வரு மொழியாய் வருங்காலத்து, ஆவயின் உகரங் கெடுதலும் உரித்து — அவ்விடத்து உகரங் கெடாது நிற்றலேயன்றிக், கெட்டு முடிய

1 பிற்கூறிய இரண்டும் எனறது இலகுணம் இலலாககொற்றன என்பவறறின் நிலை மொழிகளை. இவையிரண்டும இல என்னும குறிப்புவினைப்பகுதியடியாயப் பிறந்தவை. இலலாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் இலகுணம் என்பதில் தொக்கும் இலலாக்கொறறன என்பதில ஓளவு விரிந்தும நின்றது.

வும் பெறும், உகரங் கெடுவழி அகரம் நிலையும் — அவ்வுகரங் கெடுமிடத்து அகரம் நிலைபெற்று முடியும்; எ - று.

எ - டு: வல்லாய் வல்லப்பலகை என வரும்.

உம்மை எதிர்மறையாகலான் உகரங் கெடாதேநின்று வல்லுகாய் வல்லுப் பலகை என வருதலுங் கொள்க.

அகரம் நிலையுமென்னுது உகரங்கெடு மென்றதனாற் பிற வருமொழிக் கண்ணும் இவ்வகரப்பேறு கொள்க. வல்லக்கடுமை சிறுமை நீமை பெருமை என வரும். (எக)

'பூல்' 'வேல்' 'ஆல்'

நூஎடு, பூல்வே லென்ரு ஆலென் கிளவியொடு
ஆமுப் பெயர்க்கும் அம்இடை வருமே.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: பூல் வேல் என்ரு ஆலென்கிளவியொடு ஆமுப் பெயர்க்கும் — பூலென்னுஞ் சொல்லும் வேலென்னுஞ் சொல்லும் ஆலென்னுஞ் சொல்லுமாகிய அம்மூன்று பெயர்க்கும், அம் இடை வரும் — வேற்றுமைக்கண் நிரிபின்றி அம்முச்சாரியை இடை வந்து முடியும்; எ - று.

எ - டு: பூலங்கோடு வேலங்கோடு ஆலங்கோடு செதிள் தோல் பூ என வரும்.

வருமொழி வரையாது கூறினமையின் இயல்புகணத்தும் ஒட்டுக. பூல ஞெரி வேலஞெரி ஆலஞெரி நீழல் விறகு என வரும். என்ரு என எண்ணிடை யிட்டமையாற் பூலாங்கோடு பூலாங்கழி என ஆகாரம் பூலுக்குந் கொள்க. (அ0)

லகர ஈற்றுத் தொழிற்பெயர்

நூஎசு. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது இவ் வீற்றுத் தொழிற்பெயர்க்கு அல்வழிக்கண்ணும் வேற்றுமைக் கண்ணுந் திரிபும் உறழ்ச்சியும் விலக்கித் தொழிற்பெயரோடு மாட்டெறிதலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: தொழிற்பெயரெல்லாம் — லகார ஈற்றுத் தொழிற் பெயரெல்லாம், தொழிற்பெயர் இயல — ஞகார ஈற்றுத் தொழிற் பெயரின் இயல்பினவாய் இருவழியும் வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்று முடியும்; எ - று.

எ - டு: புல்லுக்கடிது கல்லுக்கடிது வல்லுக்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், வல்லுக்கடுமை சிறுமை நீமை பெருமை ஞாற்சி = நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும். இவற்றிற் குப் புல்லுதல் கல்லுதல் வல்லுதல் எனப் பொருளுரைக்க.

இனி எல்லாமென்றதனாற் றொழிற்பெயர்விதி எய்தாது பிற விதி எய்துவனவுங் கொள்க. கன்னல்கடிது பின்னல்கடிது கன்னற்கடுமை பின்னற்கடுமை எனவும் வரும். இதனானே மென்கணம் வந்துழிப் பின்னன் ஞான்றது நீண்டது மாண்டது, பின்னன் ஞாற்சி நீட்சி மாட்சி என ஓட்டுக.

இனி ஆடல் பாடல் கூடல் நீடல் முதலியனவும் அல்வழிக்கண் இயல் பாயும் வேற்றுமைக்கண் திரிந்தும் முடிதல் இதனாற் கொள்க. (அக)

'வெயில்' என்னுஞ் சொல்

நூ எ. வெயிலென் கிளவி மழையியல் நிலையும்.

இது திரிபுவிலக்கி அத்தும் இன்னும் வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள்: வெயில் என் கிளவி மழையியல் நிலையும் — வெயிலென்னுஞ் சொல் மழையென்னுஞ் சொற்போல அத்தும் இன்னும் பெற்றுமுடியும்; எ - று.

மழையென்பதனை 'வளியென வருஉம்' (எழு - உசஉ) என்பதனுடனும் வளியென்பதனைப் 'பனியென வருஉம்' (எழு - உசக) என்பதனுடனும் மாட்டெறிந்தவாறு காண்க.

எ - டு: வெயிலத்துக் கொண்டான் வெயிலிற் கொண்டான் சென்றான் தந்தான் போயினன் என வரும். இஃது அத்துமிசை யொற்றுக் கெடாது நின்ற இடம். இஃது 'அவற்றுமுன் வருஉம் வல்லெழுத்து' (எழு - கஙஙு) மிக்கது அதிகார வல்லெழுத்தின்மையின்.[1] இயல்புகணத்துங் கொள்க. சாரியை, வருமொழி வரையாது கூறினமையின்.[2] (அஉ)

வேற்றுமையில் வகர ஈறு

நூ எ அ. கூட்டுமுதலாகிய வகர இறுதி
முற்படக் கிளந்த உருபியல் நிலையும்.

இது முறையானே வகர ஈறு வேற்றுமைக்கண் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: கூட்டு முதலாகிய வகர இறுதி — வகர ஈற்றுப் பெயர் நான்கனுள் கூட்டெழுத்தினை முதலாகவுடைய வகர ஈற்றுப்பெயர் மூன்றும், முற்படக் கிளந்த உருபியல் நிலையும் — முற்படக்கூறிய உருபு புணர்ச்சியின் இயல்பிற்றாய் வற்றுப் பெற்று முடியும்; எ - று.

எ - டு: அவற்றுக்கோடு இவற்றுக்கோடு உவற்றுக்கோடு செவி தலை புறம் என வரும்.

---

1 அதிகாரபபட்ட வலலெழுத்தின்மையால், வெயிலத்துகொண்டான என்பது கஙஙும் நூறபாவில் 'அவற்றுமுன் வருஉம் வலலெழுதது மிகுமே என்று கூறிய விதிபபடி வலலெழுத்து மிகாதது.

2 வருமொழி வரையாது கூறினமையின சாரியை இயல்புகணத்துங் கொள்க என மாறிக கூட்டுக.

முற்படக்கிளந்த என்றதனானே வற்றினோடு இன்னும் பெறுதல் கொள்க. அவற்றின்கோடு இவற்றின்கோடு உவற்றின்கோடு செவி தலை புறம் என ஒட்டுக. இஃது ஏனைக் கணத்தோடும் ஒட்டுக. (அசு)

அதற்கு, அல்வழி முடிபு

நூஎகூ. வேற்றுமை யல்வழி ஆய்த மாகும்.

இது மேலனவற்றிற்கு அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள்: வேற்றுமையல்வழி ஆய்தமாகும் — அச்சுட்டுமுதல் வகரம் வன்கணத்துக்கண் வேற்றுமையல்லாத இடத்து ஆய்தமாய்த் திரிந்து முடியும்; எ - று.

எ - டு: அஃகடிய இஃகடிய உஃகடிய சிறிய தீய பெரிய என வரும். இவ்வழக்கு இக்காலத்து அரிது. (அசு)

அதற்கு, வேறு முடிபுகள்

நூஅo. மெல்லெழுத் தியையின் அவ்வெழுத் தாகும்.

இஃது எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: மெல்லெழுத்து இயையின் அவ்வெழுத்தாகும் — அவ்வகர ஈறு மென்கணம்வந்து இயையுமாயின் அவ் வகரவொற்று அவ்வம் மெல்லெழுத்தாய்த் திரிந்துமுடியும்; எ - று.

எ - டு: அஞ்ஞாண் இஞ்ஞாண் உஞ்ஞாண் நூல் மணி என வரும் (அடு)

நூஅகூ. ஏனவை புணரின் இயல்பென மொழிப.

இதுவும் அது, அவ் வீறு ஏனைக் கணங்களோடு புணருமாறு கூறுதலின்.

இ - ள்: ஏனவை புணரின் — அச்சுட்டுமுதல் வகர ஈற்றோடு இடைக்கணமும் உயிர்க்கணமும் வந்து புணருமாயின், இயல்பென மொழிப — அவ்வகரந் திரியாது இயல்பாய்முடியுமென்று கூறுவர் புலவர்; எ - று.

எ - டு: அவ்யாழ் இவ்யாழ் உவ்யாழ் வட்டு அடை ஆடை என ஒட்டுக.

ஈண்டுக் கூறியது நிலைமொழிக்கென்றும் ஆண்டு 'நின்றசொன்முனியல் பாகும்' (எழு - கசச) என்றது வருமொழிக்கென்றும் உணர்க. (அசு)

வகர ஈற்று உரிச்சொல்

நூஅஙூ. ஏனை வகரந் தொழிற்பெய ரியற்றே.

இஃது எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: ஏனை வகரம் — 'வகரக்கிளவி நான் மொழி யிற்றது' (எழு-அக) என்றதனுள் ஒழிந்துநின்ற உரிச்சொல்லாகிய வகரம் இருவழியும், தொழிற்பெயர் இயற்று — ஞகர ஈற்றுத் தொழிற்பெயர் இயல்பிற்றாய் வன்கணத்து உகரமும் வல்லெழுத்

தும் மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்று முடியும் ; எ - று.

எ - டு : தெவ்வுக்கடிது சிறிது தீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், தெவ்வுக்கடுமை சிறுமை தீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும்.

உரையிற் கோடலென்பதனால் தெம்முனை என வகரவொற்று மகரவொற்றாகத் திரிதல் கொள்க. (அஎ)

வேற்றுமையில் ழகார ஈறு

நூ.அங. ழகார இறுதி ரகார இயற்றே.

இது நிறுத்த முறையானே ழகார ஈற்று வேற்றுமை முடிபு கூறுகின்றது.

இ - ள் : ழகார இறுதி ரகார இயற்று — ழகார ஈற்றுப் பெயர் வன்கணம் வந்தால் வேற்றுமைக்கண் ரகார ஈற்றின் இயல்பிற்றாய் வல்லெழுத்து மிக்கு முடியும் ; எ - று.

எ - டு : பூழ்க்கால் சிறகு தலை புறம் என வரும். (அஅ)

'தாழ்' என்னுஞ் சொல்

நூ.அச. தாழென் கிளவி கோலொடு புணரின்
அக்கிடை வருதல் உரித்து மாகும்.

இஃது இவ் வீற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது, வல்லெழுத்திலோடு அக்கு வருத்தலின்.

இ - ள் : தாழ் என் கிளவி கோலொடு புணரின் — தாழென்னுஞ்சொல் கோலென்னுஞ் சொல்லோடு புணரும் இடத்து, அக்கு இடை வருதலும் உரித்தாகும் — வல்லெழுத்து மிகுதலேயன்றி அக்குச்சாரியை இடையே வந்து நிற்றலும் உரித்து ; எ - று.

எனவே, அக்குப்பெறாது வல்லெழுத்து மிகுதல் வலியுடைத்தாயிற்று.

எ - டு : தாழக்கோல் தாழ்க்கோல் என வரும்.
இது தாழைத் திறக்குங் கோல் என விரியும். (அக)

'தமிழ்' என்னுஞ் சொல்

நூ.அடு. தமிழென் கிளவியும் அதனோ ரற்றே.

இதுவும் அது.

இ - ள் : தமிழ் என் கிளவியும் — தமிழென்னுஞ் சொல்லும், அதனோ ரற்று — வல்லெழுத்து மிக்கு முடிதலேயன்றி அக்குச் சாரியையும் பெற்று முடியும் ; எ - று.

அதனோரற்றே என்றதனால் இதற்குத் தமிழ்க்கூத்தென வல்லெழுத்து மிகுதலே வலியுடைத்து.

எ - டு: தமிழக்கூத்து சேரி தோட்டம் பள்ளி என வரும். தமிழை புடைய கூத்து என விரிக்க. தமிழவரையர் என்றுற்போல வல்லெழுத்துப் பெறுது அக்குப் பெற்றன, 'உணரக்கூறிய' (எழு - சஂடு) என்னும் புற னடையாற் கொள்க. தமிழாடு தமிழ்நாடு என வினைக்கணத்து முடிபு 'ஈப்பெயர் முன்னரும்' (எழு - கஉஅ) என்பதனுள் 'முற்ற' என்றதனான் முடித்தாம். (கூ0)

'குமிழ்' என்னும் மரப்பெயர்

நூஅசூ. குமிழென் கிளவி மரப்பெய ராயின்
பீரென் கிளவியொ டோரியற் றாகும்.

இது வல்லெழுத்து விலக்கி மெல்லெழுத்தும் அம்மும் வருத்தலின் எய் தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ - ன்: குமிழ் என் கிளவி மரப்பெயர் ஆயின் — குமிழென் னுஞ் சொல் குமிழ்த்தலென்னுந் தொழிலன்றி மரப்பெயராயின், பீர் என் கிளவியொடு ஓர் இயற்று ஆகும் — பீரென்னும் சொல் லோடு ஒரியல்பிற்றாய் ஒருவழி மெல்லெழுத்தும் ஒருவழி அம்மும் பெற்று முடியும்; எ - று.

எ - டு: குமிழ்ங்கோடு குமிழங்கோடு செதிள் தோல் பூ என வரும்.

ஒரியற்றென்றதனாற் பிறவற்றிற்கும் இம்முடிபு கொள்க. மகிழ்ங்கோடு மகிழங்கோடு என ஒட்டுக. (கூக)

'பாழ்' என்னுஞ் சொல்

நூஅஎ. பாழென் கிளவி மெல்லெழுத் துறழ்வே.

இது வல்லெழுத்திற்கு மெல்லெழுத்துப் பெறுக என்றலின் எய்திய தன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ன்: பாழ் என் கிளவி மெல்லெழுத்து உறழ்வு — பாழென் னுஞ் சொல்லீறு வல்லெழுத்திற்கு மெல்லெழுத்துப் பெற்று உறழ்ந்து முடியும்; எ - று.

எ - டு: பாழ்க்கிணறு பாழ்ங்கிணறு சேரி தோட்டம் பாடி என ஒட்டுக. இது பாழுட்கிணறு என விரியும், பாழ்த்தகிணறு என வினைத்தொகை முடி யாமையின். (கூஉ)

'ஏழ்' என்னும் எண்ணுப்பெயர்

நூஅஅ. ஏழென் கிளவி உருபியல் நிலையும்.

இஃது எண்ணுப்பெயர் இவ்வாறு முடிக என்றலின் எய்தாத தெய்து வித்தது.

இ - ன்: ஏழ் என் கிளவி — ஏழென்னும் எண்ணுப்பெயர் இறுதி, உருபியல் நிலையும் — உருபு புணர்ச்சிக்கண் கூறிய இயல் பின்கண்ணே நிலைபெற்று அன்பெற்று முடியும்; எ - று.

நகூஉ. நூறூர்ந்து வருஉம் ஆயிரக் கிளவிக்குக்
கூறிய நெடுமுதல் குறுக்க மின்றே.

இஃது எய்தியது முழுவதூஉம் விலக்கிற்று, உகரங்கெட்டு அதன் மேலே நெடுமுதல் குறுகாது என்றலின்.

இ - ள்: நூறு ஊர்ந்து வருஉம் ஆயிரக் கிளவிக்கு — அவ் வேமென்பது நூறென்னுஞ் சொன்மேல் வரும் ஆயிரமென்னுஞ் சொல்லிற்கு, கூறிய நெடுமுதல் குறுக்க மின்று — முற்கூறிய நெடுமுதல் குறுகி உகரம் பெறுதலின்று; எ - று.

எ - டு: எழ்நூருயிரம் என வரும்.

கூறிய என்றதனால் நெடுமுதல்குறுகி உகரம்பெற்று எழுநூருயிர மெனவும் வரும்.

இதனானே எழாயிரமென மேல் முதனிலை குறுகாமையுங் கொள்க.

இதனானே எழுஞாயிறு எழுஞாள் எழுவகை என இயல்புணர்த்து நெடு முதல் குறுகி உகரம்பெறுதலுங் கொள்க. (கூஎ)

நகூஉ. ஐஅம் பல்லென வருஉ மிறுதி
அல்பெய ரெண்ணினும் ஆயியல் நிலையும்.

இதுவும் அது.

இ - ள்: ஐ அம் பல் என வருஉம் இறுதி — அவ் வேமன் முன்னர் ஐயென்றும் அம்மென்றும் பல்லென்றும் வருகின்ற இறுதிகளையுடைய, அல்பெயர் எண்ணினும் — பொருட்பெயரல் லாத எண்ணுப்பெயராகிய தாமரை வெள்ளம் ஆம்பல் என்பன வந்தாலும், ஆ இயல் நிலையும் — நெடுமுதல் குறுகி உகரம்பெறாது அவ்வியல்பின்கண்ணே நின்று முடியும்; எ - று.

எ - டு: எழ்தாமரை எழ்வெள்ளம் எழாம்பல் என வரும். (கூஅ)

நகூசு. உயிர்முன் வரினும் ஆயியல் திரியாது.

இதுவும் அது.

இ - ள்: உயிர்முன் வரினும் — அவ்வேமென்பதன் முன்னர் அளவுப்பெயரும் எண்ணுப்பெயருமாகிய உயிர்முதன்மொழி வரினும், ஆ இயல் திரியாது — நெடுமுதல் குறுகி உகரம்பெறாது முடியும் இயல்பிற் றிரியாது முடியும்; எ - று.

எ - டு: எழகல் எழுழக்கு எழொன்று எழிரண்டு என வரும். (கூக)

'கேழ்' என்னுஞ் சொல்

நகூடு. கீழென் கிளவி உறழுத் தோன்றும்.

இஃது இவ் வீற்றுள் ஒன்றற்கு வேற்றுமைக்கண் உறழ்ச்சி கூறுகின் றது.

இ - ள்: கீழ் என் கிளவி உறழத் தோன்றும் — கீழென்னுஞ் சொல் உறழ்ச்சியாய்த் தோன்றி முடியும்; எ - று.

தோன்றுமென்றதனுன் மெடுமுதல் குறுகாது வல்லெழுத்துப் பெற்றும் பெறுதும் வருமென்ற இரண்டும் உறழ்ச்சியாய் வருமென்று கொள்க. இயைபு வல்லெழுத்து அதிகாரத்தாற் கொள்க.

எ - டு: கீழ்க்குளம் கீழ்குளம் சேரி தோட்டம் பாடி என வரும். (உ00)

வேற்றுமையில் ளகர ஈறு

நகூசு. ளகார இறுதி ணகார இயற்றே.

இது நிறுத்தமுறையானே ளகார ஈற்றுச்சொல் வேற்றுமைக்கண் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: ளகார இறுதி ணகார இயற்று — ளகார ஈற்றுப் பெயர் ணகார ஈற்றின் இயல்பிற்றாய் வன்கணம் வந்துழி டகார மாய்த் திரிந்துமுடியும்; எ - று.

எ - டு: முட்குறை சிறை தலை புறம் என வரும். (உக)

அதற்கு, வேறு முடிபு

நகூஎ. மெல்லெழுத் தியையின் ணகார மாகும்.

இது மேலதற்கு மென்கணத்துமுடிபு கூறுகின்றது.

இ - ள்: மெல்லெழுத்து இயையின் ணகாரமாகும் — ளகார ஈறு மெல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வந்து இயையின் ணகாரமாய்த் திரிந்து முடியும்; எ - று.

எ - டு: முண்ஞெரி நுனி மரம் என வரும்.

இதனை வேற்றுமையிறுதிக்கண் அல்வழியது எடுத்துக் கோடற்கண் சிங்கநோக்காக [1] வைத்தலின் அல்வழிக்கும் இம்முடிபு கொள்க. முண் ஞெரிந்தது நீண்டது மாண்டது என வரும். (உஉ)

அல்வழியில் ளகர ஈறு

நகூஅ. அல்வழி யெல்லாம் உறழென மொழிப.

இது மேலதற்கு அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள்: அல்வழி யெல்லாம் — ளகார ஈறு அல்வழிக்கணெல்லாம், உறழென மொழிப — திரியாதும் டகரமாய்த் திரிந்தும் உறழ்ந்துமுடியுமென்று சொல்லுவர் புலவர்; எ - று.

எ - டு: முள்கடிது முட்கடிது சிறிது தீது பெரிது என வரும்.

எல்லாமென்றதனுல் குண வேற்றுமைக்கண்ணும் இவ் வுறழ்ச்சி கொள்க. முள்குறுமை முட்குறுமை சிறுமை தீமை பெருமை எனவும், கோள்கடுமை கோட்கடுமை வாள்கடுமை வாட்கடுமை எனவும் ஓட்டுக.

---

1 சிங்கநோக்கு — சிங்கம் முனனும் பினனும் பாராதாறபோல முனனும் பின்னும் நோக்கும நூறபாயிரம்.

இதனானே அதோட்கொண்டான் இதோட்கொண்டான் உதோட்கொண் டான் எதோட்கொண்டான் [2] சென்றான் தந்தான் போயினனென உருபு வாராது உருபின் பொருள்பட வந்தனவுங் கொள்க. (கஅங)

அதற்கு, வேறு முடிபு

நகக. ஆய்த நிலையலும் வரைநிலை யின்றே
தகரம் வருஉங் காலை யான.

இது மேலதற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, தகரம் வரு வழி உறழ்ச்சியேயன்றி ஆய்தமாகத் திரிந்து உறழ்க என்றலின்.

இ - ள்: தகரம் வருஉங் காலையான — தகர முதன்மொழி வருமொழியாய் வருங்காலத்து, ஆய்தம் நிலையலும் வரை நிலை யின்று — ளகாரம் டகாரமாய்த் திரிதலேயன்றி ஆய்தமாகத் திரிந்து நிற்றலும் நீக்கும் நிலைமையின்று; எ - று.

எ - டு: முஃடீது முட்டீது என வரும். (கஅச)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

சஅஅ. நெடியதன் இறுதி இயல்பா குநவும்
வேற்றுமை யல்வழி வேற்றுமை நிலையலும்
போற்றல் வேண்டும் மொழியுமா ருளவே.

இது மேலதற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: நெடியதன் இறுதி இயல்பு ஆகுநவும் — அவ் வீற்று நெடியதன் இறுதி திரியாது இயல்பாய் முடிவனவற்றையும், வேற்றுமை அல்வழி வேற்றுமை நிலையலும் — வேற்றுமையல் லாத பிடத்து வேற்றுமையின் இயல்பை யுடையவாய்த் திரிந்து முடிதலையும், போற்றல் வேண்டும் மொழியுமாருள — போற்று தல் வேண்டுஞ் சொற்களும் உள; எ - று.

எ - டு: கோள்கடிது வாள்கடிது சிறிது நீது பெரிது எனவும், 'புட் டேம்பப் புயன்மாறி' (பட்டினப்பாலை-ச) எனவும் வரும்.

போற்றல்வேண்டும் என்றதனால் உதளங்காய் செதிள் பூ தோல் என அம்மூப் பெறுதலுங் கொள்க. உதளென்பது யாட்டினை உணர்த்துங்கால் மூற்கூறிய முடிபுகள் இருவழிக்கும் ஏற்றவாறே முடிக்க. உதட்கோடு உதள் கடிது உதணன்று என ஒட்டுக. 'மோத்தையுந் தகரு முதளு மப்பரும்' (மரபியல்-சஎ) என்றார் மரபியலில். (கஅடு)

ஈகார ஈற்றுத் தொழிற் பெயர்

சஅக. தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல.

இஃது இவ் வீற்றுத் தொழிற்பெயர்க்கு இருவழியும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

---

2 அதோள் இதோள் முதலியன அவவிடத்து இவவிடத்து எனச் சுட்டு விஞவிடப் பொருள்படுவன.

இ - ள்: தொழிற்பெயரெல்லாம் — ளகார ஈற்றுத் தொழிற் பெயரெல்லாம் இருவழியும், தொழிற் பெயர் இயல — ஞகார ஈற்றுத் தொழிற் பெயர்போல வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்று முடியும்; எ - று.

எ - டு: துள்ளுக்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், துள்ளுக்கடுமை சிறுமை நீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும்.

எல்லா மென்றதனானே இருவழியுந் தொழிற்பெயர்கள் உகரமும் வல்லெழுத்தும் பெறாது நிரிந்துந் திரியாதும் முடிவனவுங் கொள்க. கோள் கடிது கோட்கடிது, கோள்கடுமை கோட்கடுமை என்பன போல்வன பிறவும் வரும்.

இனி வாள்கடிது வாட்கடிது சிறிது நீது பெரிது எனவும் வாள்கடுமை வாட்கடுமை எனவுங் காட்டுக. வாள்—கொல்லுதல். (கoசு)

'இருள்' என்னுஞ் சொல்

சூoஉ. இருளென் கிளவி வெயிலியல் நிலையும்.

இது திரிபுவிலக்கி அத்தும் இன்னும் வருத்தலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது.

இ - ள்: இருள் என் கிளவி — இருளென்னுஞ் சொல் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண், வெயிலியல் நிலையும் — வெயிலென்னுஞ் சொற்போல அத்தும் இன்னும் பெற்று முடியும்; எ - று.

எ - டு: இருளத்துக்கொண்டான் இருளிற்கொண்டான் சென்றான் தந்தான் போயினன் என வரும்.

சாரியை வரையாது கூறினமையின் இயல்புகணத்தும் ஒட்டுக. இருளத்துஞான்றான் நீண்டான் மாண்டான் இருளின்ஞான்றான் நீண்டான் மாண்டான் என வரும். (கoஎ)

'புள்' 'வள்' என்னுஞ் சொற்கள்

சூoஊ. புள்ளும் வள்ளுந் தொழிற்பெய ரியல.

இதுவும் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வருத்தது, திரிபும் இயல்பும் விலக்கித் தொழிற்பெயர்விதி வருத்தலின்.

இ - ள்: புள்ளும் வள்ளும் — புள்ளென்னுஞ் சொல்லும் வள்ளென்னுஞ் சொல்லும் இருவழிக் கண்ணும், தொழிற் பெயர் இயல — ஞகார ஈற்றுத் தொழிற் பெயர் போல வன்கணத்து உகரமும் வல்லெழுத்தும், மென்கணத்தும் இடைக்கணத்து வகரத்தும் உகரமும் பெற்று முடியும்; எ - று.

எ - டு: புள்ளுக்கடிது வள்ளுக்கடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது வலிது எனவும், புள்ளுக்கடுமை வள்ளுக்கடுமை சிறுமை நீமை பெருமை ஞாற்சி நீட்சி மாட்சி வன்மை எனவும் வரும்.

இதனைத் 'தொழிற் பெயரெல்லாம்' (எழு - சஅக) என்பதன்பின் வையாததனால் இருவழியும் வேற்றுமைத்திரிபு எய்தி முடிவனவுங் கொள்க. புட்கடிது வட்கடிது சிறிது நீது பெரிது எனவும், புட்கடுமை வட்கடுமை சிறுமை நீமை பெருமை எனவும், புண்ஞான்றது நீண்டது மாண்டது என வும், புண்ஞாற்சி நீட்சி மாட்சி எனவும் வரும். புள்ளு வலிது புள்வலிது புள்ளுவன்மை புள்வன்மை என வகரத்தின் முன்னர் உகரம் பெற்றும் பெறுதும் வருதலின் 'நின்றசொன்மு னியல்பாகும்' (எழு - கசச) என்ற தனுன் முடியாமை உணர்க. இது வள்ளிற்கும் ஒக்கும். (கஅஅ)

'மக்கள்' என்னுஞ் சொல்

சஉச. மக்க ளென்னும் பெயர்ச்சொ லிறுதி
தக்கவழி அறிந்து வலித்தலு முரித்தே

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது, 'உயிரீருகிய உயர் திணைப்பெயர்' (எழு - கடுங) என்பதனுட் கூறிய இயல்பு விலக்கித் திரிபு வகுத்தலின்.

இ - ள்: மக்கள் என்னும் பெயர்ச் சொல் இறுதி — மக்க ளென்னும் பெயர்ச் சொல்லிறுதி இயல்பேயன்றி, தக்கவழி அறிந்து வலித்தலும் உரித்து — தக்க இடம் அறிந்து வல்லொற்று கத் திரிந்து முடி தலும் உரித்து; எ - று.

தக்கவழியென்றார் பெரும்பான்மை மக்கள்உடம்பு உயிர்நீங்கிக் கிடந்த காலத்தின் அஃது இம்முடிபுபெறும் என்றற்கு.

எ - டு: மக்கட்கை செவி தலை புறம். 'இக்கிடந்தது மக்கட்டலை' என்பதனுன் அவ்வாறுதல் கொள்க. மக்கள் கை செவி தலை புறம் எனத் திரியாது நின்றது உயிருண்மை பெற்று.

இனிச் சிறுபான்மை மக்கட் பண்பு மக்கட்சுட்டு எனவும் வரும். (கஅக)

கூ. புறனடை

இவ்வியலின் புறனடை

சஅடு. உணரக் கூறிய புணரியல் மருங்கிற்
கண்டுசெயற் குரியவை கண்ணினர் கொளலே.

இஃது இவ்வோத்தின்கண் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாது நின்றவற்றிற்கெல்லாம் இதுவே ஒத்தாகக் கொண்டு சாரியை பெறுவனவற் றிற்குச் சாரியையும் எழுத்துப் பெறுவனவற்றிற்கு எழுத்துங் கொடுத்து முடித்துக்கொள்க என்கின்றது.

இ - ள்: உணரக் கூறிய புணரியன் மருங்கின் — உணரக் கூறப்பட்ட புள்ளியீறு வருமொழியோடு புணரும் இயல்பிடத்து, கண்டு செயற்கு உரியவை — மேல் முடித்த முடிபன்றி வழக்கி னுட் கண்டு முடித்தற்கு உரியவை தோன்றியவழி, கண்ணினர் கொளல — அவற்றையுங் கருதிக்கொண்டு ஏற்றவாறே முடிக்க; எ - று.

எ - டு: மண்ணப்பத்தம் என அல்வழிக்கண் ணகர ஈறு அக்குப் பெற் றது. மண்ணகட்டி என அம்முப்பெற்றது. பொன்னப்பத்தம் என னகர

ஈறு அக்குப் பெற்றது. பொன்னங்கட்டி என அம்முப் பெற்றது. கானங் கோழி என வேற்றுமைக்கண் அம்முப்பெற்றது. மண்ணங்கட்டி காளங் கோழி என்பன மரூஉ. வேயின்றலை என யகர ஈற்று உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றுழி வல்லெழுத்துக் கெடுக்க. நீர்குறிது என ரகர ஈறு அல்வழிக்கண் இயல்பாயிற்று. வேர்குறிது வேர்க்குறிது இது நகர ஈறு அல்வழி உறழ்ச்சி. வடசார்க்கூரை மேல்சார்க்கூரை இவை வல்லெழுத்து மிக்க மரூஉ முடிபு. அம்பர்க்கொண்டான் இம்பர்க்கொண் டான் உம்பர்க்கொண்டான் எம்பர்க்கொண்டான் என இவ் வீறு ஏழனுருபின் பொருள்பட வந்தன வல்லொற்றுப்பெற்றன. தகர்க்குட்டி புகர்ப்பிபாத்து என்பன பண்புத்தொகை கருதிற்றேல் ஈண்டு முடிக்க. வேற்றுமையாயின் மூன்னர் முடியும். விழலென்னும் லகர ஈறு வேற்றுமைக்கண் றகரமாகாது னகரமாய் முடிதல் கொள்க. விழன்காடு செறு தாள் புறம் என வரும். கல்லம்பாறை உசிலங்கோடு எலியாலங்காய் புடோலங்காய் என அவ் வீறு அம்முப்பெற்றது. கல்லாம்பாறை என்பது மரூஉ. அழலத்துக் கொண்டான் என அவ் வீறு அத்துப்பெற்றது. அழுக்கற்போர் புழுக்கற்சோறு என்பன அவ் வீற்று அல்வழித்திரிபு. யாழ்குறிது என்பது ழகர ஈற்று அல்வழி யியல்பு. வீழ்குறிது வீழ்க்குறிது என்பன அவ் வீற்று அல்வழியுறழ்ச்சி. தாழப்பாவை என்பது அவ் வீற்று அல்வழி அக்குப்பெற்றது. யாழின்கோடு செய்கை தலை புறம் என அவ் வீற்று உருபிற்குச் சென்றசாரியை பொருட் கட் சென்றுழி வல்லெழுத்து வீழ்க்க. முன்னுளை வாழ்வு முன்னுளைப்பரிசு ஒருநாளைக்குழவி ஒரு திங்ளைக்குழவி என்றாற் போல்வன ளகார ஈறு ஐகார மும் அதனோடு வல்லெழுத்தும் பெறுதல் கொள்க. பிறவும் இவ்வோத்தின் வேறுபட வருவன வெல்லாங் கொணர்ந்து இதனுன் முடிக்க. குளத்தின் புறம் மரத்தின்புறம் என உருபிற்கு எய்திய அத்தோடு இன்பெறுதலுங் கொள்க.

இனிக் 'கடிசொல்லில்லை' (சொல் - சஙூ) என்பதனுன் வழக்கின்கண் ணுஞ் செய்யுட்கண்ணும் வந்து திரிந்து முடியுஞ் சொற்களும் உள. அவற் றைக் கண்ணினர் கொளலே என்பதனுன் மண்ணுக்குப்போனுன் பொன் னுக்குவிற்றான் பொருளுக்குப்போனுன் நெல்லுக்குவிற்றான் கொள்ளுக்குக் கொண்டான் பதினேழு என்றாற்போல வழக்கின்கண் உகரம் பெறுவனவும், 'விண்ணுக்குமேல்' 'மண்ணுக்கு நாப்பண்'

> "பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்
> சொல்லுக்குத் தோற்றின்னுந் தோற்றனவால்—நெல்லுக்கு
> நூறேஒ நூறென்பாள் நுடங்கிடைக்கும் வன்முலைக்கு
> மாறோமா லன்றளந்த மண்."

என்றாற்போலச் செய்யுட்கண் உகரம்பெறுவனவும், பிறவும் முடிக்க.

பற்கு நெற்கு என்பன முதலியவுங் கொள்க. இவை உருபின் பொருள் பட வாராது உருபின்கண் வந்தனவேனும் ஈண்டுக் காட்டினும், ஆண்டுப் 'புள் ளியிறுதியும்' (எழு - உஙூ) என்னும் உருபியற்சூத்திரத்து இலேசு கோடற்கு இடனின்றென்று கருதி. இனி அச்சூத்திரத்துத் 'தேருங்காலை' என்றத னுன் முடித்தலும் ஒன்று. (கஙஙூ)

புள்ளிமயங்கியல் முற்றிற்று.

கூ. குற்றியலுகரப்புணரியல்

[குற்றியலுகர ஈறுகட்குரிய புணர்ச்சி யிலக்கணம் உணர்த்துவது.]

க. குற்றியலுகரத்தின் இயல்பு

குற்றியலுகரத்தின் பெயர், நிறை, தொகை

சஅகூ. ஈரெழுத் தொருமொழி உயிர்த்தொட ரிடைத்தொடர்
ஆய்தத் தொடர்மொழி வன்ரொடர் மென்ரொடர்
ஆயிரு மூன்றே உகரங் குறுகிடன்.

என்பது சூத்திரம். இவ்வோத்துக் குற்றியலுகர மென்று கூறப்பட்ட எழுத்துப் பொருட்பெயரோடும் எண்ணுப்பெயர் முதலியவற்றோடும் புணரும் முறைமை உணர்த்தினமையிற் குற்றியலுகரப் புணரியலென்னும் பெயர்த்தா யிற்று. இது 'மெய்யேயுயிரென்ரூரீரியல' (எழு - கஅக) என்றவற்றுள் உயி ரினது விகாரமாய்நின்ற குற்றுகரத்தை இருமொழிக் கண்ணும் புணர்க்கின்ற மையின் மேலை ஒத்திலேடு இயைபுடைத்தாயிற்று. இத்தலைச்சூத்திரம் மொழிமரபினகத்து இருவழிய என்ற குற்றுகரம் இதனகத்து இனைத்து மொழியிறுதி வருமென்று அவற்றிற்குப் பெயரும் முறையுந் தொகையும் உணர்த்துகின்றது. அப்பெயர் பெயர், அம்முறை முறை, அத்தொகை தொகை 'தொடர்மொழியீற்று' (எழு - நசு) வருமென்று ஆண்டுக் கூறியவதனை ஈண்டு ஐந்துவகைப்படுத்தி அதனோடு 'செட்டெழுத்திம்பரும்' (எழு - நசு) என்றது ஒன்றே யாதலின் அதனையுங் கூட்டி அறுவகைத்தென்றார்.

இ - ள்: ஈரெழுத் தொருமொழி — இரண்டெழுத் தானுகிய ஒருமொழியும், உயிர்த் தொடர் — உயிர்மேல்வரும் மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், இடைத் தொடர் — இடை யொற்று மேல்வரும் மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், ஆய்தத் தொடர்மொழி — ஆய்தமாகிய எழுத்து மேல்வரும் மெய் யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், வன்ரொடர் — வல்லொற்று மேல்வரும மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், மென் ரொடர் — மெல்லொற்று மேல்வரும் மெய்யைத் தொடர்ந்து நின்ற சொல்லும், ஆயிரு மூன்றே — ஆகிய அவ்வாறு சொல் லுமே, உகரங் குறுகு இடன் — குற்றியலுகரங் குறுகிவரும் இடன்; எ - று.

எ - டு: நாகு, வரகு, தெள்கு, எஃகு, கொக்கு, குரங்கு என வரும்.

இதனை எழென்று [1] கொள்வார்க்குப் பிண்ணுக்கு சுண்ணும்பு ஆமணக்கு முதலியன முடியாமை உணர்க. (க)

---

1 எழுவகை இடமாவன :—1 நெடிறகீழும, 2 நெடிலொறறின கீழும், 3 குறிலிணைக கீழும, 4 குறிலிணை யொறறினகீழும், 5 குறினெடிற கீழும, 6 குறினெடிலொற றின கீழும, 7 குறுமெறறின கீழு மன இலவை : இவறறுக்கு எடுத்துகாட்டு : முறையே. 1 நாகு, 2 நாககு, 3 வரகு, 4 அரககு, 5 பலாசு, 6 பனட்டு, 7 கரசு, எனபன. இவறறுக்கு நூறபா.

"நெடிலே குறிலிணை குறினெடி லென்றிவை
யொறறெருடு வருதலொடு குற்றெருற் றிறுதியென்
றேழ்குற் றுகரக் கிடனென மொழிப"

என்பது.

அவற்றுள், ஈரொற்றுத் தொடர்கள்

சூ0எ. அவற்றுள்,
ஈரொற்றுத் தொடர்மொழி இடைத்தொட ராகா.

இஃது அவ்வாறனுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: அவற்றுள் — அவ்வாறனுள், ஈரொற்றுத் தொடர் மொழி — இரண்டொற்று இடைக்கண் தொடர்ந்து நிற்குஞ் சொல்லிற்கு இடையின ஒற்று முதல் நின்றால், இடைத் தொட ராகா — மேல் இடையினந் தொடர்ந்து நில்லா, வல்லினமும் மெல்லினமுந் தொடர்ந்து நிற்கும்; எ - று.

எ - டு: ஆர்க்கு, ஈர்க்கு, நொய்ம்பு, மொய்ம்பு என வரும். (உ)

இருவழியினும் குற்றுகரம் வருமாறு

சூ0அ. அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகர நிலையும்.*

இஃது 'இடைப்படிற்குறுகு மிடனுமாருண்டே' (எழு - கூஎ) என்றதனுற் புணர்மொழிக்கண் அரைமாத்திரையினுங் குறுகுமென எய்தியதனை விலக்கி 'அவ்வியல் நிலையு மேனை மூன்றே' (எழு - கஉ) என்ற விதியே பெறுமென்கின்றது.

இ - ள்: அல்லது கிளப்பினும் — அல்வழியைச் சொல்லுமிடத்தும், வேற்றுமைக் கண்ணும் — வேற்றுமைப் புணர்ச்சிக் கண்ணும், எல்லா இறுதியும் உகரம் நிலையும — ஆறு ஈற்றின் கண்ணும் உகரந் தன் அரை மாத்திரையைப் பெற்று நிற்கும்; எ - று.

வருமொழியானல்லது அல்வழியும் வேற்றுமையும் விளங்காமையின் 'அல்லது கிளப்பினும் வேற்றுமைக்கண்ணும்' எனவே இருமொழிப் புணர்ச்சி என்பது பெற்றும். இவ்விருமொழிக்கட் பழைய அரைமாத்திரை பெற்றே நிற்குமென்றார். அன்றி இருமொழிப் புணர்ச்சிக்கண் ஒரு மாத்திரை பெறுமென்றார்க்குப் பன்மொழிப் புணர்ச்சியாகிய செய்யுளிலக்கணங் குற்றுகரத் தான் நேர்பசை நிரைபசை கோடலும் அவற்றான் அறுபது வஞ்சிச்சீர்கோடலும் பத்தொன்பதினாயிரத் திருநூற்றுத் தொண்ணூற்றிரண்டு தொடை கோடலும் இன்றாய், முற்றியலுகரமாகவே கொள்ள வேண்டுதலின் மாறு கொளக் கூறலென்னுங் குற்றந் தங்குமென்று உணர்க.

எ - டு: நாகுகடிது வாகுகடிது நாகுகடுமை வாகுகடுமை என வரும். இவை தம் அரைமாத்திரை பெற்றன. ஏனையவற்றோடும் ஒட்டுக.

---

* நிறையும எனவும் பாடம. இப்பாடத்தையே இளமபூரணரும் பேராசிரியரும் கொண்டனர். குறற்றியலுகரம மெயயெழுத்துபபோல அரைமாத்திரை யொலிப பினும் தனித்து நிறகுமபோது தனித்தொலிக்கும் உயிர்த்தன்மை நிரம்பியதே எனபது பேராசிரியர் கருத்து.

இனி இது 'மால்யாறுபோந்து கால்சுரந்துபாய்ந்து' எனத் தொடர் மொழிக்கண்ணும் அரைமாத்திரை பெற்றது என்னுக்ஃால் வஞ்சிச்சீ ரின்ரு மாறு உணர்க. (கூ)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

சஅகூ. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழித்
தொல்லீ இயற்கை நிலையலு முரித்தே.

இது முன்னின்ற சூத்திரத்தான் அரைமாத்திரை பெறும் என்றதனை விலக்கி 'இடைப்படிற் குறுகுமிடனும்' (எழு - கூஎ) என்றதனுன் அரை மாத்திரையினுங் குறுகுமென்று ஆண்டு விதித்தது ஈண்டு வல்லொற்றுத் தொடர்மொழிக்கண்ணே வருமென்கின்றது.

இ - ள்: வல்லொற்றுத் தொடர் மொழி — வல்லொற்றுத் தொடர் மொழிக் குற்றுகரம், வல்லெழுத்து வருவழி — வல் லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வருமிடத்து, தொல்லீ இயற்கை நிலையலும் உரித்து — 'இடைப்படிற் குறுகும்' (எழு - கூஎ) என்பதனுற் கூறிய அரை மாத்திரையினுங் குறுகி நிற்கும் என்ற இயல்பிலே நிற்றலும் உரித்து; எ - று.

உம்மை எதிர்மறை.

எ - டு: கொக்குக்கடிது கொக்குக்குடுமை என அரைமாத்திரையிற் குறைந்தவாறு குரங்குகடிதென்பது முதலியவற்றோடு படுத்துச் செவிகருவி யாக உணர்க.

முன்னின்ற சூத்திரத்து* உகரநிறையுமென்று பாடம் ஓதி அதற்கு உகரம் அரைமாத்திரையிற் சிறிது மிக்கு நிற்குமென்று பொருள் கூறி இச் சூத்திரத்திற்குப் பழைய அரைமாத்திரைபெற்று நிற்குமென்று கூறுவாரும் உளர். (ச)

உ. குற்றியலிகரம்

குற்றியலிகர வருமாறு

சஅகூ. யகரம் வருவழி இகரங் குறுகும்
உகரக் கிளவி துவரத் தோன்ருது.

இது குற்றியலிகரம் புணர்மொழியகத்து வருமாறு கூறுகின்றது.

இ - ள்: யகரம் வருவழி உகரக்கிளவி துவரத் தோன்ருது — யகர முதன்மொழி வருமொழியாய் வருமிடத்து நிலைமொழிக் குற்றுகர வெழுத்து முற்றத் தோன்ருது, இகரங் குறுகும் — ஆண்டு ஓர் இகரம் வந்து அரை மாத்திரைபெற்று நிற்கும்; எ - று.

எ - டு: நாகியாது வாகியாது தெள்கியாது எஃகியாது கொக்கியாது குரங்கியாது எனவரும். 'துவர' என்ருர், ஆறு ஈற்றின்கண்ணும் உகரங் கெடுமென்றற்கு. (டு)

* சோழிய கோடறகண இவவாசிரியரும் நிறையுமென்ருரு.

ங. குற்றுகரப் பொதுப் புணர்ச்சி

நெடிற்றொடர், உயிர்த்தொடர்

சகங. ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும்
வேற்றுமை யாயின் ஒற்றிடை இனமிகத்
தோற்றம் வேண்டும் வல்லெழுத்து மிகுதி.

இது முற்கூறிய ஆறனுள் முன்னர்நின்ற இரண்டற்கும் வேற்றுமைப் பொருட்புணர்ச்சி முடிபு கூறுகின்றது.

இ - ள்: ஈரெழுத்து மொழியும் உயிர்த்தொடர் மொழியும் — ஈரெழுத்தொருமொழிக் குற்றுகர ஈற்றிற்கும் உயிர்த்தொடர் மொழிக் குற்றுகர ஈற்றிற்கும். வேற்றுமையாயின் — வேற்றுமைப் பொருட் புணர்ச்சியாயின், இன ஒற்று இடை மிக — இனமாகிய ஒற்று இடையிலே மிக, வல்லெழுத்து மிகுதி தோற்றம் வேண்டும் — வல்லெழுத்து மிகுதி தோன்றி முடிதலே விரும்பும் ஆசிரியன்; எ - று.

எ - டு: யாட்டுக்கால் செவி தலை புறம் எனவும், முயிற்றுக்கால் சினை தலை புறம் எனவும் வரும். கயிற்றுப் புறம் வயிற்றுத்தீ என்பனவுமாம்.

தோற்றம் என்றதனுன் எனைக்கணத்தும் இம்முடிபு கொள்க. யாட்டு ஞாற்சி நிணம் மணி வால் அதள் எனவும், முயிற்றுஞாற்சி நிணம் முட்டை வலிமை அடை ஆட்டம் எனவும் வரும். (சு)

அதற்கு, வேறு முடிபு

சகஉ. ஒற்றிடை இனமிகா மொழியுமா ருளவே
அத்திறத் தில்லை வல்லெழுத்து மிகலே.

இஃது எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

இ - ள்: ஒற்று இடை இனம் மிகா மொழியுமாருள — முற்கூறிய இரண்டனுள் இனவொற்று இடைமிக்கு முடியாத மொழிகளும் உள, வல்லெழுத்து மிகல் அத்திறத்தில்லை — வல்லொற்று மிக்குமுடிதல் அக்கூற்றுளில்லை; எ - று.

எ - டு: நாகுகால் செவி தலை புறம் எனவும், வரகு கதிர் சினை தாள் பதர் எனவும் வரும்.

அத்திறமென்றதனுன் உருபிற்கு எய்திய சாரியை பொருட்கட் சென்ற வழி இயைபுவல்லெழுத்து வீழ்க்க. யாட்டின்கால் முயிற்றின்கால் நாகின்கால் வரகின்கதிர் என வரும்.

அத்திறமென்றதனுன் எனைக்கணத்தும் ஒற்றிடை மிகாமை கொள்க. நாகுஞாற்சி நீட்சி மாட்சி வலிமை எனை ஒட்டுக. (எ)

இடைத்தொடர் ஆய்தத்தொடர்

சகஙு. இடையொற்றுத் தொடரும் ஆய்தத் தொடரும்
நடையா இயல என்மனர் புலவர்.

இஃது இடைநின்ற இரண்டற்கும் முடிபு கூறுகின்றது.

இ - ள்: இடையொற்றுத் தொடரும் ஆய்தத்தொடரும் — இடையொற்றுத் தொடர்மொழிக் குற்றுகர ஈறும் ஆய்தத் தொடர்மொழிக் குற்றுகர ஈறும், நடை ஆ இயல என்மனார் புலவர் — நடைபெற நடக்குமிடத்து முற்கூறிய அவ்வியல்பு முடிபினையுடைய என்று கூறுவர் புலவர்; எ - று.

எ - டு: தெள்குகால் சிறை தலை புறம் எனவும், எஃகுகடுமை சிறுமை தீமை பெருமை எனவும் வரும். (அ)

வன்றொடர், மென்றொடர்

சகச. **வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும்**
வந்த வல்லெழுத் தொற்றிடை மிகுமே
மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற் றெல்லாம்
வல்லொற் றிறுதி கிளையொற் றாகும்.

இது பின்னின்ற இரண்டற்கும் முடிபு கூறுகின்றது.

இ - ள்: வன்றொடர் மொழியும் மென்றொடர் மொழியும் — வன்றொடர்மொழிக் குற்றுகர ஈறும் மென்றொடர் மொழிக் குற்றுகர ஈறும், வந்த வல்லெழுத்து ஒற்று இடை மிகும் — வரு மொழியாய் வந்த வல்லெழுத்தினது ஒற்று இடையிலே மிக்கு முடியும், மெல்லொற்றுத் தொடர்மொழி மெல்லொற்றெல்லாம்— அவ்விரண்டனுள் மெல்லொற்றுத் தொடர்மொழிக்கண் நின்ற மெல்லொற்றெல்லாம், இறுதி வல்லொற்று — இறுதிக்கணின்ற வல்லொற்றும், கிளை ஒற்று ஆகும் — கிளையாகிய வல்லொற்று மாய் முடியும்; எ - று.

இறுதி வல்லொற்று வருதலாவது குற்றுகரம் எறிகின்ற வல்லொற்றுத் தானே முன்னர்வந்து நிற்றலாம். கிளைவல்லொற்று வருதலாவது ணகாரத் திற்கு டகாரமும் னகாரத்திற்கு றகாரமும் புணர்ச்சியும் பிறப்பும் நோக்கிக் கிளையாமாதலின், அவை முன்னர் வந்து நிற்றலாம்.

எ - டு: கொக்குக்கால் சிறகு தலை புறம், குரங்குக்கால் செவி தலை புறம், குரக்குக்கால் செவி தலை புறம், எட்குக்குட்டி செவி தலை புறம், எற்புக்காடு சுரம் தலை புறம் என வரும்.[1] அற்புத்தளை என்பது அன்பினுற் செய்த தளை யென வேற்றுமையும் அன்பாகிய தளையென அல்வழியுமாம்.

வந்த என்றதனுன் இவ்விரண்டிற்கும் உருபிற்குச் சென்ற சாரியை பொருட்கட் சென்றவழி இயைபு வல்லெழுத்து வீழ்க்க. கொக்கின்கால் குரங் கின்கால் என வரும்.

எல்லாமென்றதனுற் பறம்பிற்பாரி குறும்பிற்சான்றூர் என மெல்லொற் றுத் திரியாமையுங் கொள்க.

---

1 கொக்குக்கால - வன்றொடாக குறறியலுகரம் வந்த வலலெழுதது மிகுமுடிநதது. குரங்குக்கால் - மெனறொடாக் குறறியலுகரம் வந்த வல்லெழுதது மிகுமுடிநதது. குரக்குக்கால் - மெனறொடரின இடையில நினற மெலலொறறு இறுதி வல் லொறறுயத் திரிந்தது. எட்குக்குட்டி - மென்றொடரின் இடையில் நினற மெல லொற்று இன வலலொற்றுயத திரிநதது.

ஒற்றென்ற மிகுதியான் இயல்புகணத்துக்கண்ணும் குரக்குஞாற்சி கிணம் முகம் விரல் உகிர் என மெல்லொற்றுத் திரிந்துவருமாறு கொள்க. சிலப்புஇ காரமென்பதும் அது.

வன்றொடர்மொழி இயல்புகணத்துக்கண் வருதல் 'ஞஈமயவ' (எழு - கசச) என்பதனான் முடியும். (கூ)

மரப்பெயர்

சகடு. மரப்பெயர்க் கிளவிக் கம்மே சாரியை.

இஃது எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது, அம்மு வகுத்தலின்.

இ - ள்: மரப்பெயர்க் கிளவிக்கு அம்மே சாரியை — குற்றியலுகர ஈற்று மரப்பெயர்க்கு வருஞ் சாரியை அம்முச்சாரியை; எ - று.

எ - டு: தேக்கங்கோடு செதிள் தோல் பூ என வரும்.

கமுகங்காய் தெங்கங்காய் சீழ்கம்புல் கம்பம்புல் பயற்றங்காய் என்றாற் போலும் புல்லினையும் மரமென அடக்கி மாறுகொளக் கூறலெனத் தழீஇக் கொண்ட சிதைவென்பதாம் இச் சூத்திரமென்று உணர்க. (ம)

அதற்கு, மேலும் ஒரு முடிபு

சகசு. மெல்லொற்று வலியா மரப்பெயரு முளவே.

இது மென்றொடர்மொழிக்கு எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

இ - ள்: மெல்லொற்று வலியா மரப்பெயரும் உள — மெல்லொற்று வல்லொற்றாகத் திரியாது மெல்லொற்றாய் முடியும் மரப்பெயரும் உள; எ - று.

எ - டு: புன்கங்கோடு செதிள் தோல் பூ எனவும், குருந்தங்கோடு செதிள் தோல் பூ எனவும் வரும்.

வலியா மரப்பெயருமுள எனவே வலிக்கும் மரப்பெயரும் உளவென்று கொள்க. வேப்பங்கோடு கடப்பங்காய் ஈச்சங்குலை என வரும். (கக)

நெடிற்றொடர், வன்றொடர்

சகஎ. ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும்
அம்மிடை வரற்கு முரியவை உளவே
அம்மர பொழுகும் மொழிவயி னான.

இஃது ஈரெழுத் தொருமொழிக்கும் வன்றொடர் மொழிக்கும் எய்தாத தெய்துவித்தது, முன்னர் எய்தியதனை விலக்கி அம்மு வகுத்தலின்.

இ - ள்: ஈரெழுத்து மொழியும் வல்லொற்றுத் தொடரும் — ஈரெழுத்தொருமொழிக் குற்றியலுகரமும் வன்றொடர்மொழிக் குற்றியலுகரமும், அம் இடை வரற்கும் உரியவை உள — முன் முடித்துப்போந்த முடிபுகளன்றி அம்முச்சாரியை இடையேவந்து முடிதற்கு உரியனவும் உள; யாண்டெனின், அம் மரபு ஒழுகும்

மொழிவயினான — அவ்விலக்கணம் நடக்கும் மொழியிடத்து ; எ - று.

எ - டு : ஏறங்கோள் சூதம்போர் வட்டம்போர் புற்றம்பழஞ்சோறு என வரும்.

உம்மை எதிர்மறையாகலின், அம்மூப்பெருதன நாகுகால் கொக்குக்கால் என முன்னர்க் காட்டினவேயாம்.

அம்மரபொழுகும் என்றதனால் அரசக்கன்னி முரசக் கடிப்பு என அக்கும் வல்லெழுத்துங் கொடுத்தும் அரசவாழ்க்கை முரசவாழ்க்கை என அக்குக் கொடுத்தும் முடிக்க.[1]

இன்னும் அதனானே இருட்டத்துக்கொண்டான் விளக்கத்துக்கொண்டான் என அத்தும் வல்லெழுத்துங் கொடுத்தும் மயிலாப்பிற்கொற்றன் பறம்பிற்பாரி என இன் கொடுத்துங் கரியதன்கோடு நெடியதன்கோடு என அன் கொடுத்தும் முடிக்க. (கஉ)

சில மென்றொடர் மொழிகள்

சகஅ. ஒற்றுநிலை திரியா தக்கொடு வரூஉம்
அக்கிளை மொழியு முளவென மொழிப.

இது மென்றொடர்மொழியுட் சிலவற்றிற்கு எய்தியது விலக்கிப் பிறிது விதி வகுக்கின்றது.

இ - ள் : ஒற்று நிலை திரியாது அக்கொடு வரூஉம் — ஒற்று முன்னின்ற நிலைதிரியாது அக்குச்சாரியையோடும் பிற சாரியையோடும் வரும், அக்கிளை மொழியும் உள என மொழிப — அக்கிளையான சொற்களும் உள என்று சொல்லுவர் ஆசிரியர் ; எ - று.

இதற்கு உம்மையை முன்னர் மாறுக.

எ - டு : குன்றக்கூகை மன்றப்பெண்ணை என வரும். உம்மையாற் கொங்கத்துழவு வங்கத்துவாணிகம் என அத்தும் பெற்றன.

நிலையென்றதனான் ஒற்று நிலைதிரியா அதிகாரத்துக்கண் வருஞ் சாரியைக்கு இயைபு வல்லெழுத்து வீழ்க்க. அக்கிளை யென்றார், இரண்டு சாரியை தொடர்ந்து முடிவனவும் உளவென்றற்கு. பார்ப்பனக்குழவி சேரி தோட்டம் பிள்ளை என அன்னும் அக்கும் வந்தன. இவற்றிற்கு உடைமை விரிக்க. பார்ப்பினுட்குழவி என்றுமாம். பார்ப்பானுகிய குழவி என்றால் ஈண்டு முடியாதென்று உணர்க.[1] பார்ப்பனமகன் பார்ப்பனவனிதை என்பனவும் பார்ப்பான் சாதி உணர்த்தின. (கங)

எண்ணுப் பெயர்

சகக. எண்ணுப்பெயர்க் கிளவி உருபியல் நிலையும்.

இது குற்றுகர ஈற்று எண்ணுப்பெயரோடு பொருட் பெயர் முடிக்கின்றது.

---

1 அரசக்கன்னி அரசவாழ்க்கை முதலிய தொடர்களின் இடையில் வருதுள்ளது அக்குச் சாரியை என்பதைவிட அகரச் சாரியை என்பதே பொருத்தமாம்.

1 இவ்வியல குற்றியலுகரப் புணரியலாதலால, பார்ப்பு என்னுஞ் சொலலன்றிப் பார்ப்பான் என்னுஞ்சொல இங்கு நிலைமொழியாகாது என்பது கருத்து.

இ - ள்: எண்ணுப்பெயர்க் கிளவி — எண்ணுப்பெயராகிய சொற்கள் பொருட்பெயரோடு புணருமிடத்து, உருபியல் நிலையும் — உருபுபுணர்ச்சியின் இயல்பின்கண்ணே நின்று அன்பெற்றுப் புணரும்; எ - று.

எ - டு: ஒன்றன்காயம் இரண்டன்காயம் சுக்கு தோரை பயறு எனவோட்டுக. ஒன்றனுற்கொண்ட காயமென விரியும். வருமொழி வரையாது கூறினமையின், இயல்பு கணத்துக்கண்ணுங் கொள்க. ஒன்றன் ஞாண் நூல் மணி யாழ் வட்டு அடை என வரும். மேலைச் சூத்திரத்து 'நிலை' (எழு - சகஅ) என்றதனுன் இயைபு வல்லெழுத்து வீழ்க்க. (கச)

ச. குற்றுகரச் சிறப்புப் புணர்ச்சி

'வண்டு' 'பெண்டு' என்னுஞ் சொற்கள்

சூஉ0. வண்டும் பெண்டும் இன்னெடு சிவணும்.

இது மென்றொடர் மொழியுட் சிலவற்றிற்குப் பிற முடிபு கூறுகின்றது.

இ - ள்: வண்டும் பெண்டும் இன்னெடு சிவணும் — வண்டென்னுஞ் சொல்லும் பெண்டென்னுஞ் சொல்லும் இன்சாரியையோடு பொருந்தி முடியும்; எ - று.

எ - டு: வண்டின்கால் பெண்டின்கால் என வரும். இதற்கு முற்கூறிய இலேசினுன் வல்லெழுத்து வீழ்க்க. (கடி)

'பெண்டு' என்னுஞ் சொல்லுக்கு மேலும் ஒரு முடிபு

சூஉக. பெண்டென் கிளவிக் கன்னும் வரையார்.

இது மேற்கூறியவற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: பெண்டு என் கிளவிக்கு அன்னும் வரையார் — பெண்டென்னுஞ்சொற்கு இன்னேயன்றி அன்சாரியை வருதலையும் நீக்கார் ஆசிரியர்; எ - று.

எ - டு: பெண்டன்கை செவி தலை புறம் என வரும். (கசு)

விரும்பெயர், சுட்டுப்பெயர்

சூஉஉ. யாதென் இறுதியுஞ் சுட்டுமுத லாகிய
ஆய்த இறுதியும் உருபியல் நிலையும்.

இஃது ஈரெழுத்தொருமொழிக் குற்றியலுகரத்துள் ஒன்றற்குஞ் சுட்டுமுதலாகிய ஆய்தத் தொடர்மொழிக் குற்றியலுகரத்திற்கும் வேறு முடிபு கூறுகின்றது.

இ - ள்: யாது என் இறுதியுஞ் சுட்டு முதலாகிய ஆய்த இறுதியும் — யாதென்னும் ஈறுஞ் சுட்டெழுத்து முதலாகிய

ஆய்தத்தொடர்மொழிக் குற்றியலுகர ஈறும், உருபியல் நிலையும் — உருபு புணர்ச்சியின் இயல்பின்கண்ணே நின்று அன்பெற்றுச் சுட்டுமுதலிறுதி ஆய்தங்கெட்டு முடியும்; எ - று.

எ - டு: யாதன்கோடு அதன்கோடு இதன்கோடு உதன்கோடு செவிதலை புறம் என வரும். ஆய்தங்கெடாமுன்னே அன்னின் அகரத்தைக் குற்றுகரத்தின் மேல் ஏற்றுக, ஆய்தங்கெட்டால் அது முற்றுகரமாய் நிற்றலின். (கஎ)

அல்வழியிற் சுட்டுப் பெயர்

சூஉங. முன்உயிர் வருமிடத் தாய்தப் புள்ளி
மன்னல் வேண்டும் அல்வழி யான.

இது முற்கூறியவற்றுட் சுட்டுமுதலுகரத்திற்கு ஒருவழி அல்வழிமுடிபு கூறுகின்றது.

இ - ள்: முன்னுயிர் வருமிடத்து — சுட்டுமுதலாகிய ஆய்தத் தொடர்மொழிக் குற்றுகர ஈற்றின்முன்னே உயிர்முதன் மொழி வருமிடத்து, ஆய்தப்புள்ளி மன்னல் வேண்டும் — ஆய்தவொற்று முன்போலக் கெடாது நிலைபெற்று முடிதலை விரும்பும் ஆசிரியன், அல்வழியான — அல்வழிக்கண்; எ - று.

எ - டு: அஃது இஃது உஃது என நிறுத்தி அடை ஆடை இலை ஈயம் உரல் ஊர்தி எழு எணி ஐயம் ஒடுக்கம் ஒக்கம் ஒளவியம் என ஒட்டுக.

முன்னென்றதனான் வேற்றுமைக்கண்ணும் இவ் விதி கொள்க. அஃதடைவு அஃதொட்டம்[1] என ஒட்டுக. இவற்றிற்கு இரண்டாமுருபு விரிக்க. இன்னும் இதனானே ஏனை இலக்கணம் முடியுமாறு அறிந்து முடிக்க. (கஅ)

அல்வழியில் அதற்கு மேலும் ஒரு முடிபு

சூஉச. ஏனமுன் வரினே தானிலை இன்றே.

இது மேலவற்றிற்குப் பிறகணத்தோடு அல்வழி முடிபு கூறுகின்றது.

இ - ள்: ஏனை முன் வரின் — முற்கூறிய ஈறுகளின் முன்னர் உயிர்க்கணமல்லன வருமாயின், தான் நிலையின்று — அவ்வாய்தங் கெட்டு முடியும்; எ - று.

எ - டு: அதுகடிது இதுகடிது உதுகடிது சிறிது நீது பெரிது ஞான்றது நீண்டது மாண்டது யாது வலிது என ஒட்டுக. (கக)

பொதுவாக அல்வழியிற் குற்றிகர ஈறுகள்

சூஉரு. அல்லது கிளப்பின் எல்லா மொழியுஞ்
சொல்லிய பண்பின் இயற்கை யாகும்.

இஃது ஆறு ஈற்றுக் குற்றுகரத்திற்கும் அல்வழி முடிபு கூறுகின்றது.

---

1 அஃதொட்டம் - அதனை யொட்டுதல.

இ - ள்: அல்லது கிளப்பின் — அல்வழியைச் சொல்லுமிடத்து, எல்லாமொழியும் — ஆறு ஈற்றுக் குற்றுகரமும், சொல்லிய பண்பின் இயற்கையாகும் — மேல் ஆசிரியன் கூறிய குணத்தையுடைய இயல்பாய் முடியும்; எ - று.

எ - டு: நாகுகடிது வரகுகடிது தெள்ளுகடிது எஃகுகடிது குரங்குகடிது சிறிது நீது பெரிது என வரும். ஏனைக் கணத்துக்கண் "நின்றசொன்முனியல்பாகும்" (எழு - கசஉ) என்றதனாற் கொள்க.

எல்லாமொழியும் என்றதனால் வினைச்சொல்லும் வினைக்குறிப்புச் சொல்லும் இயல்பாய்முடிதல் கொள்க. கிடந்ததுகுதிரை காிதுகுதிரை என வரும்.

சொல்லிய என்றதனான் இருபெயரொட்டுப்பண்புத்தொகை வன்கணத்துக்கண் இனவொற்றுமிக்கு வல்லெழுத்துப்பெற்று முடிதலும் இயல்புகணத்துக்கண் இனவொற்றுமிக்கு முடிதலுங் கொள்க. கரட்டுக்காணம் குருட்டுக் கோழி திருட்டுப்புலையன் களிற்றுப்பன்றி வெளிற்றுப்பனை எயிற்றுப்பல் எனவும், வரட்டாடு குருட்டெருது எனவும் வரும்.

பண்பினென்றதனால் மெல்லொற்று வல்லொற்றாய் ஐகாரம் பெற்று முடிவனவும், மெல்லொற்று வல்லொற்றாய் ஐகாரமும் வல்லெழுத்தும் பெற்று முடிவனவும், மெல்லொற்று வல்லொற்றாகாது ஐகாரமும் வல்லெழுத்தும பெற்றுமுடிவனவுங் கொள்க. ஓர்யாட்டையானை ஐயாட்டையெருது எனவும், அற்றைக்கூத்தர் இற்றைக்கூத்தர் எனவும், மன்றைத்தூகை மன்றைப்பானை பண்டைச்சான்றூர் எனவும் வரும். (உ0)

வல்லெடர்

சூஉகூ. வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே.

இஃது அவ் வாறு ஈற்றுள் ஒன்றற்கு எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ - ள்: வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகும் — வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகர ஈறு வல்லெழுத்து வருவழி வல்லெழுத்து மிக்கு முடியும்; எ - று.

எ - டு: கொக்குக்கடிது பாக்குக்கடிது பட்டுக்கடிது சிறிது நீது பெரிது என வரும். (உக)

'ஆங்கு' 'யாங்கு' முதலிய மென்ரெடர் மொழிகள்

சூஉஎ. சுட்டுச்சினை நீடிய மென்ரெடர் மொழியும்
யாவினு முதலிய மென்ரெடர் மொழியும்
ஆயியல் திரியா வல்லெழுத் தியற்கை.

இதுவும் அவ் ஆறு ஈற்றுள் ஒன்றன்கண் ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உணரநின்ற இடைசசொற்கு முடிபுகூறுகின்றது.

இ - ள்: சுட்டுச் சினை நீடிய மென்ரெடர் மொழியும் — சுட்டாகிய சினையெழுத்து நீண்ட மென்ரெடர்க் குற்றுகர ஈறும்,

யாவினு முதலிய மென்றொடர் மொழியும் — யாவென்னும் வினு முதலாகிய மென்றொடர்மொழிக் குற்றுகர ஈறும், வல்லெழுத் தியற்கை ஆ இயல் திரியா — வல்லெழுத்துப்பெற்று முடியுந் தன்மையாகிய அவ் வியல்பிற் றிரியாது முடியும் ; எ - று.

எ - டு : ஆங்குக்கொண்டான் ஈங்குக்கொண்டான் ஊங்குக்கொண்டான் யாங்குக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வரும்.

இயற்கையென்றதனான் மென்றொடர்மொழிக் குற்றியலுகர ஈற்று வினையெச்சம் இயல்பாயும் வன்றொடர்மொழிக் குற்றியலுகர ஈற்று வினையெச்சம் மிக்கும் முடிவன கொள்க. இருந்து கொண்டான் ஆண்டு சென்றான் தந்து தீர்ந்தான் வந்து போயினான் எனவும், செத்துக்கிடந்தான் செற்றுச்செய்தான் உய்த்துக்கொண்டான் நட்டுப்போனான் எனவும் வரும். (உஉ)

யாங்கு என்பதற்கு மேலும் ஒரு முடிபு

சூ உஅ. யாவினு மொழியே இயல்பு மாகும்.

இது மேலனவற்றுள் ஒன்றற்கு எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது. வல்லெழுத்துவிலக்கி இயல்பா மென்றலின்.

இ - ள் : யாவினு மொழியே இயல்புமாகும் — அவற்றுள் யாவென்னும் வினைவையுடைய சொல் முற்கூறியவாறன்றி இயல்பாயும் முடியும் ; எ - று.

எ - டு : யாங்குகொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வரும். இஃது எப்படியென்னும் வினாப்பொருளை உணர்த்திற்று. உண்மையான் மிக்குமுடிதலே வலியுடைத்து. ஏகாரம் பிரிநிலை. (உங)

அவற்றிற்கு நிலைமொழிச் செய்கை

சூ உக. அந்நான் மொழியுந் தந்நிலை திரியா.

இது மேலனவற்றிற்கு நிலைமொழிச் செய்கை கூறுகின்றது.

இ - ள் : அந்நான்மொழியும் — சுட்டு முதன் மூன்றும் யாமுதன் மொழியுமாகிய அந்நான்கு மொழியும், தம் நிலை திரியா — தம் மெல்லொற்றுய தன்மை திரிந்து வல்லொற்றுகாது முடியும் ; எ - று.

எ - டு : முற்காட்டியவே. தந்நிலை யென்றதனான் மெல்லொற்றுத் திரியாது வல்லெழுத்து மிக்குமுடிவன பிறவுங் கொள்க. அங்குக்கொண்டான் இங்குக்கொண்டான் உங்குக்கொண்டான் எங்குக்கொண்டான் சென்றான் தந்தான் போயினான் என வரும்.

இனி முன்னர் யா மொழியென்னாது வினவென்றதனான் ஏழாவதன் இடப்பொருட்டாகிய பிறவும் இயல்பாய் முடிவனவுங் கொள்க. முந்து கொண்டான் பண்டுகொண்டான் இன்றுகொண்டான் அன்றுகொண்டான் என்றுகொண்டான் என வரும். (உச)

'உண்டு' என்னுஞ் சொல்

சூத்.o. உண்டென் கிளவி உண்மை செப்பின்
முந்தை இறுதி மெய்யொடுங் கெடுதலும்
மேனிலை யொற்றே ளகார மாதலும்
ஆமுறை யிரண்டும் உரிமையு முடைத்தே
வல்லெழுத்து வருஉங் காலை யான.

இது மென்றொடர் மொழியுள் வினைக்குறிப்பாய் நின்றதோர் சொற் பண்பை உணர்த்துங்கால் வேறுமுடிபு பெறுதல் கூறுகின்றது.

இ - ள்: உண்டென்கிளவி உண்மை செப்பின் — உண்டென்னுஞ் சொல் வினைக்குறிப்பை யுணர்த்தாது ஒரு பொருள் தோன்றுங்கால் தோன்றி அது கெடுந்துணையும் உண்டாய்நிற்கின்ற தன்மையாகிய பண்பை உணர்த்திநிற்குமாயின், முந்தை இறுதி மெய்யொடுங் கெடுதலும் — முன்னர் நின்ற குற்றுகரம்தான் ஏறி நின்ற மெய்யொடுங் கெடுதலும், மேனிலை ஒற்றே ளகாரமாதலும் — அதற்கு மேல் நின்ற ணகார ஒற்று ளகார ஒற்றுதலுமாகிய, ஆமுறை இரண்டும் உரிமையும் உடைத்து — அம்முறையினையுடைய இரண்டு நிலையும் உரித்து அஃது உரித்தன்றி முன்னர் நின்ற நிலையிலே கேடுந் திரிபும் இன்றி நிற்றலும் உடைத்து, வல்லெழுத்து வருஉங் காலை யான — வல்லெழுத்து முதன்மொழியாய் வருங்காலத்து; எ - று.

வல்லெழுத்து அதிகாரத்தால் வாராநிற்ப வல்லெழுத்து வருஉங்காலை என்றதனால் அவ்விருமுடிபும் உளதாய பண்பை யுணர்த்தும் பகுதி வரும் மொழிக்கண்ணே யென்பதூஉம் ஏனைக் கசதங்களிலும் இயல்புணர்த்தினும் உண்டென நின்று வினைக்குறிப்பாயுஞ் சிறுபான்மை பண்பாயும் நிற்கு மென்பதூஉங் கொள்க.

எ - டு: உள்பொருள் உண்டுபொருள் என வரும். இது பொருண்மை சுட்டாது உண்மைத் தன்மைப் பண்பை யுண்டு உணர்த்திற்று. இனி உண்டு காணம் உண்டுசாக்காடு உண்டுதாமரை உண்டுஞானம் நூல் மணி யாழ் வட்டு அடை ஆடை என வருவனவெல்லாங் கேடுந் திரிபுமின்றி வினைக்குறிப்பாயுஞ் சிறுபான்மை பண்பாயும் நின்றன. இவற்றின் வேறுபாடு வினையியலுள் வினைக்குறிப்பு ஓதும் வழி உணர்க.

உள்பொருளென்பது பண்புத்தொகை முடிபன்றே வெனின், அஃது ஓசை ஒற்றுமைபடச் சொல்லும் வழியது போலும். இஃது ஓசை இடையறவுபடச் சொல்லும் வழிய தென்க. (உடு)

திசைப்பெயர்

சூத்.க. இருதிசை புணரின் ஏயிடை வருமே.

இது குற்றுகர ஈற்றுத் திசைப்பெயர்க்கு அல்வழி முடிபு கூறுகின்றது.

இ - ள்: இரு திசை புணரின் — இரண்டு பெருந்திசையுந் தம்மிற் புணரின், ஏ இடை வரும் — ஏயென்னுஞ் சாரியை இடை நின்று புணரும்; எ - று.

எ - டு: தெற்கேவடக்கு கிழக்கேமேற்கு இவை உம்மைத் தொகை. (உசு)

திசைப்பெயர் முன் திசைப்பெயர்

சஙஉ. திரிபுவேறு கிளப்பின் ஒற்று முகரமுங்
கெடுதல் வேண்டும் என்மனார் புலவர்
ஒற்றுமெய் திரிந்து னகார மாகும்
தெற்கொடு புணருங் காலை யான.

இது பெருந்திசைகளோடு கோணத்திசைகள் புணர்த்தலின் எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: திரிபுவேறு கிளப்பின் — அப்பெருந் திசைகளோடு கோணத் திசைகளை வேறுபட புணர்க்கு மிடத்து, ஒற்றும் உகரமுங் கெடுதல் வேண்டும் என்மனார் புலவர் — அவ்வுகரம் ஏறி நின்ற ஒற்றும் அவ் வீற்று உகரமுங் கெட்டுமுடிதல் வேண்டுமென்று சொல்லுவர் புலவர், தெற்கொடு புணருங் காலை — அது தெற்கென்னுந் திசையொடு புணருங் காலத்து, ஆன ஒற்று மெய் திரிந்து னகாரமாகும் — அத்திசைக்குப் பொருந்திநின்ற றகார ஒற்றுத் தன் வடிவு திரிந்து னகர ஒற்றாய் நிற்கும்; எ - று.

திரிக்தென்றதனால் வடக்கென்பதன்கண் நின்ற ககர ஒற்றுக்கெடுத்து முடித்துக் கொள்க.

எ - டு: வடகிழக்கு வடமேற்கு தென்கிழக்கு தென்மேற்கு எனவரும்.

வேறென்றதனால் திசைப்பெயரோடு பொருட்பெயர் வரினும் இம்முடிபு கொள்க. வடகடல் வடசுரம் வடவேங்கடம் தென்குமரி தென்சுரம் தென்னிலங்கை என வரும்.

மெய்யென்றதனால் உயிர் கெட்டுந் திரிந்தும் மெய் கெட்டும் முடிவனவும் உள, திசைப்பெயர்முன்னர்ப் பொருட்பெயர் வந்துழி யென்று உணர்க. கிழக்கு என்பது கரை கூரை என்பவற்றோடு புணருமிடத்துக் கீழ்கரை கீழ்கூரை என நிலைமொழியிறுதி உகரம் மெய்யொடுங் கெட்டு அதன்மேல்நின்ற ககர ஒற்றும் ழகரத்தில் அகரமுங் கெட்டு முதலெழுத்து நீண்டு முடிந்தன. மேற்கு, கரை கூரை, மீகரை மீகூரை என நிலைமொழி ஈற்று உகரம் மெய்யொடுங்கெட்டு அதன்மேல்நின்ற றகர ஒற்றுங் கெட்டு எகாரம் ஈகாரமாகி முடிந்தன. இன்னும் இதனானே மேன்மாடு மேல்பால் மேலச்சேரி என்றாற் போல்வனவுஞ் செய்கையறிந்து முடிக்க. (உஎ)

ரு. குற்றுகர வெண்ணுப் புணர்ச்சி

பத்தொடு எண்ணுப்பெயர்

சஙங. ஒன்றுமுதலாக எட்டனிறுதி
எல்லா வெண்ணும் பத்தன் முன்வரிற்

குற்றிய லுகரம் மெய்யொடுங் கெடுமே
முற்றஇன் வருஉம் இரண்டலங் கடையே.

நிறுத்தமுறையானே ஆறு ஈற்றுக் குற்றுகரமும் புணருமாறு உணர்த்தி இனி அவ் வீற்று எண்ணுப்பெயர் முடிக்கின்றார்; இஃது அவற்றுட் பத்தென்னும் எண்ணுப்பெயரோடு எண்ணுப்பெயர்வந்து புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: ஒன்று முதலாக எட்டன் இறுதி எல்லா எண்ணும் — ஒன்றென்னும் எண் முதலாக எட்டென்னும் எண்ணீறுபுள்ள எல்லா எண்ணுப் பெயர்களும், பத்தன் முன் வரின் — பத்தென்னும் எண்ணுப் பெயரின் முன் வரின், குற்றியலுகரம் மெய்யொடுங் கெடும் — அப்பத்தென்னுஞ் சொல்லிற் குற்றுகரந் தான் ஏறி நின்ற மெய்யோடுங் கெடும், இரண்டலங்கடை முற்ற இன் வருஉம் — ஆண்டு இரண்டல்லாத எண்ணுப் பெயர்களிடத்து முடிய இன்சாரியை இடைவந்து புணரும்; எ - று.

எ - டு: பதினொன்று பதின்மூன்று பதினான்கு பதினைந்து பதினாறு பதினேழு பதினெட்டு என வரும்.

நிலைமொழி முற்கூறுதலுற் பிறவெண்ணின் முன்னர்ப் பிறபெயர் வந்தழியும் இன்பெறுதல் கொள்க. ஒன்பதின்கூறு ஒன்பதின்பால் என வரும். முற்றவென்றதனாற் பதினென்கென்புழி வந்த இன்னின் னகரம் வருமொழிக்கட் கருவிசெய்து கெடுத்து முடிக்க. (உஅ)

பத்தின் முன் இரண்டு

சஙச. பத்தனொற் றுக்கெட னகாரம் இரட்டல்
ஒத்த தென்ப இரண்டுவரு காலே.

இது மேல் இன்பெறுதென்று விலக்கிய இரண்டற்குப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ - ள்: பத்தன் ஒற்றுக் கெட னகாரம் இரட்டல் — பத்தென்னுஞ் சொல்லின் நின்ற தகர ஒற்றுக் கெட னகர ஒற்று இரட்டித்து வருதல், இரண்டு வருகாலே ஒத்ததென்ப — இரண்டென்னுமெண் வருங்காலத்திற் பொருந்திற் றென்பர் ஆசிரியர்; எ - று.

எ - டு: பன்னிரண்டு என வரும்.

'குற்றியலுக மெய்யொடுங்கெடும்' (எழு - சஙக) என்ற விதி இதற்கும் மேலனவற்றிற்குங் கொள்க. (உக

பத்தின் முன் ஆயிரம்

சஙடு. ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது.

இஃது ஆயிரமென்னும் எண்ணுப்பெயர்வரின் வரும் முடிபு கூறுகின்றது.

இ - ள்: ஆயிரம் வரினும் ஆயியல் திரியாது — முற்கூறிய பத்தன் முன்னர் ஒன்று முதலியனவேயன்றி ஆயிரமென்னுமெண் வந்தாலும் ஈறுகெட்டு இன்பெற்று முடியும் இயல்பில் திரியாது; எ - று.

எ - டு: பதினாயிரம் என வரும்.
உம்மை இறந்தது தழீஇயிற்று. (கூ)

பத்தின் முன் நிறை அளவுப் பெயர்கள்

சஙசசு. நிறையு மளவும் வரூஉங் காலையுங்
குறையா தாகும் இன்னென் சாரியை.

இஃது எண்ணுப்பெயரோடு நிறைப்பெயரும் அளவுப்பெயரும் புணர்கின்ற புணர்ச்சி கூறுகின்றது.

இ - ள்: நிறையும் அளவும் வரூஉங் காலையும் — முற்கூறிய பத்தென்பதன் முன்னர் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் வருங் காலத்தும், இன்னென் சாரியை குறையாதாகும் — அவ்வின்னென்னுஞ் சாரியை குறையாது வந்து முடியும்; எ - று.

எ - டு: பதின்கழஞ்சு தொடி பலம் எனவும், பதின்கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி எனவும், பதிற்றாயல் பதிற்றுழக்கு எனவும் வரும்.

குறையாதாகு மென்றதனாற் பொருட்பெயரும் எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் வந்துழியும் இன் கொடுத்து வேண்டுஞ்செய்கை செய்து முடிக்க. பதிற்று[1]வேலி யாண்டு அடுக்கு முழம் எனவும், பதின்றிங்கள் எனவும், பதிற்றுத்தொடி எனவும் வரும். பதிற்றொன்று என்பதுபோல இரண்டுமுதற் பத்தளவும் ஒட்டுக.

இவ் வீற்றின் னகரம் றகரமாதல் 'அளவாகுமொழிமுதல்' (எழு - கஉக) என்பதனுள் 'நிலையிய' என்றதனுள் முடிக்க. இவற்றிற்கு ஒற்றிரட்டுதலும் உகரம்வருதலும் வல்லெழுத்துப்பெறுதலும் 'ஒன்றுமுதலாக' (எழு-சஙஙு) என்பதனுள் 'முற்ற' என்றதனாற் கொள்க. (கக)

எண்ணுப் பெயரோடு பத்து

சஙஎ. ஒன்றுமுத லொன்பான் [2]இறுதி முன்னர்
நின்ற பத்த னெற்றுக்கெட ஆய்தம்
வந்திடை நிலையும் இயற்கைத் தென்ப
கூறிய இயற்கை குற்றிய லுகரம்
ஆற னிறுதி அல்வழி யான.

இஃது எண்ணுப்பெயரோடு பத்தென்னும் எண்ணுப் பெயர்க்கு முடிபு கூறுகின்றது.

---

1 பதிற்றறு என்பதில் இற்று சாரியை எனபர் பவணந்தியார்.
2 ஒன்பான என்பது ஒன்பது என்பதன மறுவடிவம். இஃது இனறு குறிகும் 9 எனனும் எணணுக்கு முதலாவது வழங்கின பெயர் தொணடு என்பது.

இ - ள்: ஒன்றுமுதல் ஒன்பான் இறுதிமுன்னர் — ஒன்று முதல் ஒன்பது ஈருகக் கூறுகின்ற எண்ணுப் பெயர்களின் முன்னர், நின்ற பத்தன் ஒற்றுக்கெட — வருமொழியாக வந்து நின்ற பத்தென்னுஞ் சொல்லினது தகர ஒற்றுக் கெட, ஆய்தம் வந்து இடை நிலையும் இயற்கைத் தென்ப — ஆய்தமானது வந்து இடையே நிலைபெறும் இயல்பை யுடைத்தென்று கூறுவர் ஆசிரியர், ஆறன் இறுதி அல்வழியான — அவற்றுள் ஆறென்னும் ஈறல்லாத விடத்து, குற்றியலுகரங் கூறிய இயற்கை — குற்றியலுகரம் முற்கூறிய இயற்கையாய் மெய்யொடுங்கெட்டு முடியும்; எ - று.

இங்ஙனம் வருமாறு மேற்சூத்திரங்களுட் காட்டுதும்.

வன்தென்றதனால் ஆய்தமாகத் திரியாது தகர ஒற்றுக்கெட்டு ஒருபது என்று நிற்றலுங்கொள்க. (கஉ)

அதன்கண், 'ஒன்று' இரண்டு என்னுஞ் சொற்கள்

சூகஅ. முதலீ ரெண்ணினெற்று ரகர மாகும்
உகரம் வருத லாவயி னான.

இது மேற்கூறியவற்றிற் சிலவற்றிற்கு நிலைமொழிச்செய்கை கூறுகின்றது.

இ - ள்: முதலீ ரெண்ணி னெற்று ரகரம் ஆகும் — அவற்றின் முதற்கண் நின்ற இரண்டெண்ணினுடைய னகர ஒற்றும் ணகர ஒற்றும் ரகர ஒற்றாகத் திரிந்து நிற்கும், ஆவயினான உகரம் வருதல் — அவ்விடத்து உகரம் வருக; எ - று.

எ - டு: ஒருபஃது என வரும். ஒன்றென்பதன் ஈற்றுக் குற்றுகரம் மெய்யொடுங் கெடுத்து னகர ஒற்றினை ரகர ஒற்றாக்கி உகர மேற்றி ஒரு வென நிறுத்தி நின்ற பத்தென்பதன் தகர ஒற்றுக் கெடுத்து ஆய்தமாக்கிப் பஃதென வருவித்து ஒருபஃது என முடிக்க. மேல் வருவனவற்றிற்குஞ் சூத்திரங்களாற் கூறுஞ் சிறப்புவிதி ஒழிந்தவற்றிற்கு இதுவே முடிபாகக் கொள்க. (கங)

'இரண்டு' என்பதற்கும் மேலும் ஒரு முடிபு

சூகக. இடைநிலை ரகரம் இரண்டென் எண்ணிற்கு
நடைமருங் கின்றே பொருள்வயி னான.

இதுவும் அது.

இ - ள்: இரண்டெ னெண்ணிற்கு இடைநிலை ரகரம் — இரண்டென்னு மெண்ணிற்கு இடைநின்ற ரகரம், பொருள்வயினான — அம்மொழி பொருள் பெறும் இடத்து, நடைமருங்கின்று — நடக்கும் இடமின்றிக் கெடும்; எ - று.

எ - டு: இருபஃது என வரும். இதற்கு ரகரவுயிர்மெய் இதனைத் கெடுத்து ஏனைய கூறியவாறே கூட்டிமுடிக்க.

பொருளெனவே எண்ணல்லாப் பெயருங் கொள்க. இருகடல் இரு வினை இருபிறப்பு என வரும். (உச)

'மூன்று' 'ஆறு'

சசo. மூன்று மாறும் நெடுமுதல் குறுகும்.

இதுவும் அது.

இ - ள்: மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகும் — மூன்றென்னு மெண்ணும் ஆறென்னு மெண்ணும் நெடுமுதல் குறுகி முடியும்; எ - று.

அறு எனக் குறுக்கிப் பஃது என வருவித்து அறுபஃது என முடிக்க. (உஇ)

'மூன்று என்பதற்கு மேலும் ஒரு முடிபு

சசக. மூன்ற னெற்றே பகார மாகும்.

இதுவும் அது.

இ - ள்: மூன்றன் ஒற்றே பகாரமாகும் — மூன்றென்னும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்றுப் பகர ஒற்றாய் முடியும்; எ - று.

எ - டு: முப்பஃது என வரும். (உசு)

'நான்கு' என்னுஞ் சொல்

சசஉ. நான்க னெற்றே றகார மாகும்.

இதுவும் அது.

இ - ள்: நான்கன் ஒற்றே றகாரமாகும் — நான்கென்னும் எண்ணின்கண் நின்ற னகர ஒற்று றகர ஒற்றாய் முடியும்; எ - று.

எ - டு: நாற்பஃது என வரும். (உஎ)

'ஐந்து' என்னுஞ் சொல்

சசஙு. ஐந்த னெற்றே மகார மாகும்.

இதுவும் அது.

இ - ள்: ஐந்தனெற்றே மகாரமாகும் — ஐந்தென்னு மெண் ணின்கண் நின்ற நகர ஒற்று மகர ஒற்றாய் முடியும்; எ - று.

எ - டு: ஐம்பஃது என வரும்.

எழு குற்றியலுகர ஈறன்மை உருபியலுட் காண்க. (உஅ)

'எட்டு' என்னுஞ் சொல்

சசச. எட்ட னெற்றே ணகார மாகும்.

இதுவும் அது.

இ - ள்: எட்ட னெற்றே ணகாரமாகும் — எட்டென்னு மெண்ணின்கண் நின்ற டகர ஒற்று ணகர ஒற்றாய் முடியும்; எ - று.

எ - டு: எண்பஃது என வரும். (உக)

'ஒன்பது' என்னுஞ் சொல்

சசடு. ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும்
முந்தை யொற்றே ணகாரம் இரட்டும்
பஃதென் கிளவி ஆய்தபக ரங்கெட
நிற்றல் வேண்டும் ஊகாரக் கிளவி
ஒற்றிய தகரம் றகர மாகும்.

இஃது எய்தாத தெய்துவித்தது.

இ - ள்: ஒன்பான் ஒகரமிசைத் தகரம் ஒற்றும் — ஒன்பது என நிறுத்திப் பஃது என வருவித்து முடிக்குங்கால், நிலைமொழி யாகிய ஒன்பதென்னும் எண்ணினது ஒகரத்திற்கு முன்னர ஒரு தகர ஒற்றுத் தோன்றி நிற்கும், முந்தை ஒற்றே ணகாரம் இரட்

1 இந்நூறபா ஒனபது+பஃது=தொணணூறு என முடிக்கினறது. இம்முடிபு எவ வகையிலும் பெரருநதாத தொனறும. ஒனபது எனனும எண ணுக்கு பறமை பெயர் தொண்டு எனபது. 'தொண்டு தலையிட்ட' (தொல, 1358) எனறு ஆசிரியரும 'தொண்டுபடு திவவு' (மலைபடு, 21) என்று பெருங்குனறூர்ப பெருங் கௌசிக னுரும் கூறுதல காண்க. தொண்டு எனனுஞ் சொல தொலகாபபியர் காலத்தி லேயே வழகறறுப் போய்விட்டது. அவர காலதது முன, தொண்டு தொண் பது தொணணூறு தொள்ளாயிரம் எனபன முறையே 9, 90, 900, 9000 என னும் 'எணகளோக குறிகும் பெயர்களாயிருந்தன. 'தொண்டு' எனனும் ஒன்று மிடப்பெயர் வழகறவே, தொண்பது என்னும பதது மிடபபெயர் ஒனறு மிடத்திற்கும், தொணணூறு எனனும நூறு மிடப்பெயர பதது மிடத்திறகும, தொள்ளாயிரம் என்னும ஆயிரதது மிடப்பெயர நூறு மிடத்திற்குமாக வழங் கத தலைபபட்டன. தொணபது எனனும் பெயர முறையே தொனபது ஒனபது என மருவிறறு. ஆயிரதது மிடப்பெயர நூறுமிடதது றகு வழங்கவே, 9000 எனனும எணணோக குறிகக ஒனபது எனனும பெயருடன ஆயிரம என்னும் பெய ரைச சேர்கக வேண்டியதாயிறறு. முதற பதது எணணுப் பெயர்களில ஒன்பது என்பதைத் தவிர மறறவையெலலாம் ஒரு சொல்லா யிருப்பதையும், ஒன்பது என்பது இரு சொலலாயப பது (பதது) எனறு முடிவதையும் தொணணூறு என்பது நூறு எனறும தொள்ளாயிரம என்பது ஆயிரம என்றும் முடிவதையும நோகுக. தொண்பது எனபதின் திரிபான ஒனபது எனனும் சொல்லுக்குப் பொருநதப் புகலும் முறைபறறி, ஒன்று குறைந்த பதது என்று பொருள்கூறுவா சிலர். அதுவே அதன் பொருளாயின் தொண்ணூறு தொள்ளாயிரம் எனபவற் றிறகும் அபபொருள் ஏறகவேண்டும். அங்ஙனம ஏலாமையின் அது போலி யுரையென மறுக்க. ஆகவே, தொண்டு+பதது=தொண்பது, தொண்டு+நூறு =தொண்ணூறு, தொண்டு+ஆயிரம்=தொள்ளாயிரம என்று புணர்ப்பதே முறையென்றும், தொண்டு என்னும் எண ணுப்பெயர் வழக்கறறதினால அதன் மேலிடப் பெயர்கள் மூன்றும ஒவவோரிடமாயத் தாழ்ந்துவந்து வழங்கள என்றும் அறிந்துகொள்க.

டும் — முன் சொன்ன ஓகரத்திற்கு முன்னர் நின்ற னகர ஒற்று ணகர ஒற்றாய் இரட்டித்து நிற்கும், பஃதென் கிளவி ஆய்த பகரங்கெட — வருமொழியாகிய பஃதென்னுஞ் சொல் தன்கண் ஆய்தமும் பகரமுங் கெட்டுப்போக, ஊகாரக் கிளவி நிற்றல் வேண்டும் — நிலைமொழியில் இரட்டிய ணகரத்தின் பின்னர் ஊகாரமாகிய எழுத்துவந்து நிற்றலே ஆசிரியன் விரும்பும், ஒற்றிய தகரம் றகரமாகும் — வருமொழியாகிய பத்தென்பதன் ஈற்றின்மேலேறிய உகரங் கெடாது பிரிந்துநிற்ப ஒற்றாய் நின்ற தகரம் றகர ஒற்றாய் நிற்கும்; எ - று.

எ - டு: தொண்ணூறு என வரும். இதனை ஒற்றாய் வந்துநின்ற தகர ஒற்றின்மேல் நிலைமொழி ஒகரத்தை ஏற்றித் தொவ்வாக்கி ணகர ஒற்று இரட்டி அதன்மேல் வருமொழிக்கட் பகரமும் ஆய்தமுங்கெட வந்த ஊகார மேற்றித் தொண்ணூவாக்கிப் பகரவாய்தமென்னுத முறையன்றிக் கூற்றினான் நிலைமொழிக்கட் பகரமும் ஆய்தமுங் கெடுத்துக் குற்றியலுகரம் மெய்யொடுங் கெடுத்து வருமொழி இறுதித் தகர ஒற்றுத் திரிந்துநின்ற றகர ஒற்றின்மேலே நின்ற உகரமேற்றித் தொண்ணூறென முடிக்க. (கய)

அவ்வெண்ணுப் பெயர்கள் முன் அளவு நிறைப்பெயர்கள்

சசசூ. அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியுங்
கிளந்த இயல தோன்றுங் காலை.

இது மேற்கூறிய ஒன்றுமுதல் ஒன்பானெண்களோடு அளவுப்பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: அளந்தறி கிளவியும் நிறையின் கிளவியுந் தோன்றுங் காலை — முற்கூறிய ஒன்றுமுதல் ஒன்பான்களின் முன்னர் அளந்தறியப்படும் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வந்து தோன்றுங்காலத்து, கிளந்த இயல — ஆறன் ஈறு அல்வழிக் குற்றுகரம் மெய்யொடுங்கெட்டு முதலீரெண்ணினொற்று ரகரமாய் உகரம் வந்து இடைநிலை ரகரங்கெட்டு மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகி நான்கனொற்று வன்கணத்து றகரமாய் எட்டனொற்று ணகரமாய் முடியும்; எ - று.

எ - டு: ஒருகலம் இருகலம் சாடி தூதை பானை நாழி மண்டைவட்டி எனவும், ஒருகழஞ்சு இருகழஞ்சு கஃசு தொடி பலம் எனவும் வரும். அகல் உழக்கு என்பன முன்னர் முடித்தும். இவை முதலீரெண்ணின் செய்கை.

தோன்றுங்காலையென்றதனான் இவ்வெண்ணின் முன்னர் எடுத்தோத்தானும் இலேசானும் முடியாதுநின்ற எண்ணுப்பெயர்களெல்லாம் இவ்விதியும் பிறவிதியும் எய்துவித்து முடித்துக்கொள்க. ஒருமூன்று ஒருநான்கு இருமூன்று இருநான்கு ஒருகால் இருகால் ஒருமுந்திரிகை இருமுந்திரிகை ஒருமுக்கால் இருமுக்கால் என்பன பிறவுங் கொணர்ந்து ஒட்டுக. இனிப் பிறவிதி எய்துவன ஒரொன்று ஓரிரண்டு ஓரைந்து ஓராறு ஓரேழு ஓரெட்டு ஒரொன்பது எனவும்,

ஈரொன்று ஈரிரண்டு ஈரைந்து ஈராறு ஈரேழு ஈரெட்டு ஈரொன்பது எனவும், மூவொன்று மூவிரண்டு மூவைந்து மூவாறு மூவேழு மூவெட்டு மூவொன்பது எனவும், 'முதலீரெண்ணின் முனையிர்' (எழு - சஞிஞ) என்னுஞ் சூத்திரத்தான் உயிர்ச்சு எய்திய பிறவிதியும் 'மூன்றன் முதனிலை நீடலுமுரித்து' (எழு - சஞிஎ) என்ற பிறவிதியும் பெற்றுப் பிறசெய்கைகளும் பெற்று முடிந்தன. நாலொன்று நாலிரண்டு நாலைந்து நாலாறு நாலேழு நாலெட்டு நாலொன்பது என்பன 'நான்கனெற்றே னகாரமாகும்' (எழு - சஞிக) என்ற விதி பெற்று முடிந்தன. பிறவும் இவ்வாறேயன்றி அளவும் நிறையுமன்றி வருவன வெல்லாம் இவ்விலேசான் முடிக்க. (சக)

அதன்கண் 'மூன்று' என்னுஞ் சொல்

சசஎ. மூன்ற னெற்றே வந்த தொக்கும்.

இது மேல் மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறு முடிபு கூறுகின்றது.

இ - ள்: மூன்றனெற்றே வந்ததொக்கும் — மூன்றுமெண்ணின்கணின்ற னகர ஒற்று வருமொழியாய் வந்த அளவுப்பெயர் நிறைப்பெயர்களின் முன்னர் வந்த வல்லொற்றோடு ஒத்த ஒற்றுப்த் திரிந்து முடியும்; எ - று.

எ - டு: முக்கலம் சாடி தூதை பானை எனவும், முக்கழஞ்சு கஃசு தொடி பலம் எனவும் வரும்.

'நான்கனெற்றே றகாரமாகும்' (எழு - சசஉ) என்ற முன்னை மாட்டேறு நிற்றலின் நாற்கலம் சாடி தூதை பானை எனவும், நாற்கழஞ்சு தொடி பலம் எனவும் வரும். (சஉ)

'ஐந்து' என்னுஞ் சொல்

சசஅ. ஐந்த னெற்றே மெல்லெழுத் தாகும்.

இதுவும் அது.

இ - ள்: ஐந்தனெற்றே மெல்லெழுத்தாகும் — ஐந்தாவதன்கண் நின்ற நகர ஒற்று வருமொழி வல்லெழுத்துக்கு ஏற்ற மெல்லெழுத்தாகத் திரிந்து முடியும்; எ - று.

எ - டு: ஐங்கலம் சாடி தூதை பானை எனவும், ஐங்கழஞ்சு தொடி பலம் எனவும் வரும். எகாரம் ஈற்றசை. (சங)

அவ்விரண்டின் மேன் முடிபுகட்கு வரையறை

சசக. கசதப முதன்மொழி வரூஉங் காலே.

இது முற்கூறிய மூன்றற்கும் ஐந்தற்கும் வருமொழி வரையறுக்கின்றது

இ - ள்: கசதப முதன்மொழி வரூஉங் காலே — மூன்றனெற்று வந்ததொப்பதூஉம் ஐந்தனெற்று மெல்லெழுத்தாவதூஉம் அவ்வளவுப்பெயர் ஒன்பதினும் வன்கணமாகிய கசதபக்கள் முதன்மொழியாய் வந்த இடத்து; எ - று.

அது முன்னர்க் காட்டினும். ஆறு 'நெடுமுதல் குறுகும்' (எழு - சசஅ) என்ற மாட்டேற்றானே ஆறு நெடுமுதல் குறுகுகின்றது.

எ - டு: அறுகலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி எனவும், அறுகழஞ்சு தொடி பலம் எனவும் வரும். அகல் உழக்கு என்பன மேற்காட்டினும். எழு குற்றுகர ஈறன்மையின் மாட்டேறு எலாதாயிற்று. (சச)

'எட்டு' என்னுஞ் சொல்

சநo. நமவ என்னும் மூன்றெடு சிவணி
யகரம் வரினும் எட்டன்மு னியல்பே.

இது வேண்டாதுகூறி [1]வேண்டியது முடிக்கின்றது, [2]'ஞநமயவ' (எழு-கசச) என்னுஞ் சூத்திரத்துட் கூறியவற்றைக் கூறுதலின்.

இ - ள்: எட்டன்முன் — எட்டென்பதன் முன்னர், நமவ என்னும் மூன்றெடு சிவணி அகரம் வரினும் — அளவுப்பெயர்களின் முன்னர் மென்கணத்து இரண்டும் இடைக்கணத்து ஒன்றுமாகிய நமவ என்னும் மூன்றனெடு பொருந்தி உயிர்க்கணத்து அகரம் வரினும், உம்மையான் உயிர்க்கணத்து உகரம் வரினுங் கூறுத வல்லெழுத்துக்கள் வரினும், இயல்பு — முற்கூறியவாறே டகாரம் ணகாரமாய் வேறோர் விகாரமின்றி இயல்பாய் முடியும்; எ - று.

நமவவென்னும் மூன்றும் வந்தாற்போல அகரம்வரினு மென்பது பொருள்.

எ - டு: எண்ணாழி மண்டை வட்டி எனவும் எண்ணகல் எண்ணுழக்கு எனவும், எண்கலம் சாடி தூதை பானை எனவும் வரும்.

ஒன்றென முடித்தலான் வன்கணத்து நிறைப்பெயருங் கொள்க. எண்கழஞ்சு தொடி பலம் என வரும்.

இவ் வேண்டா கூறலான் எண்ணகலெனக் குற்றுகர ஈறுய்க் கேடுந் திரிவும் பெற்று உயிர்வருமொழியான தொடர்மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்க. (சநி)

'ஐந்து' 'மூன்று' என்னும் இரண்டு சொற்களுக்கும் ஒத்த முடிபு

சநக. ஐந்தும் மூன்றும் நமவரு காலை
வந்த தொக்கும் ஒற்றியல் நிலையே.

இதுவும் மேல் மாட்டேற்றாடு ஒவ்வாமுடிபு கூறுகின்றது.

இ - ள்: ஐந்தும் மூன்றும் நம வருகாலை — ஐந்தென்னு மெண்ணும் மூன்றென்னுமெண்ணும் நகர முதன்மொழியும் மகர முதன்மொழியும் வருமொழியாய் வருங்காலத்து, ஒற்றியல் நிலை

1 வேண்டாது கூறல் - ஞநமயவ (எழு - கசச) என்னும் நூற்பாவிற கூறியதைக் கூறல.

2 வேண்டியது முடித்தல - உயிர்முதன்மொழி வருமிடத்து நிலைமொழியீற்று மெய் இரட்டுதலைக கொள்ளுதல.

— நிலைமொழிக்கண் நின்ற ஒற்று நடக்கும் நிலைமைகூறின், வந்தது ஒக்கும் — மேற் கூறியவாறே மகரமும் பகரமுமாகாது வரு மொழி முதல் வந்த ஒற்றோடு ஒத்த ஒற்றாய் முடியும்; எ - று.

எ - டு: ஐங்காழி ஐம்மண்டை மூங்காழி மும்மண்டை என வரும்.

மூன்றும் ஐந்தும் என்னுத முறையன்றிக் கூற்றினால் காழி நான் மண்டை என்புழி நிலைமொழி னகரம் றகரமாகாது நின்றவாறே நின்று முடிதலும் வருமொழி முதனின்ற நகரம் னகரமாகத் திரிய நிலைமொழி நகரங் கெடுதலுங் கொள்க. (சசு)

'மூன்று' 'நான்கு' 'ஐந்து' முன் வகாமுதன் மொழி

சநுஉ. மூன்ற னெற்றே வகரம் வருவழித்
தோன்றிய வகரத் துருவா கும்மே.

இதுவும் அது.

இ - ள்: மூன்றனெற்று — மூன்றுமெண்ணின்கணின்ற னகர ஒற்று, வகரம் வருவழி — வகரமுதன்மொழி வருமிடத்து, தோன்றிய வகரத்து உருவாகும் — அவ்வருமொழியாய்த் தோன்றிய வகரத்தின் வடிவாய் முடியும்; எ - று.

எ - டு: மூவ்வட்டி என வரும்.

தோன்றிய என்றதனானே முதல் நீண்டு வகர ஒற்றின்றி மூவட்டி என்றுமாம். (சஎ)

சநுங. நான்க னெற்றே லகார மாகும்.

இதுவும் அது.

இ - ள்: நான்கனெற்று — நான்காமெண்ணின்கணின்ற னகர ஒற்று, லகாரமாகும் — வகரமுதன்மொழி வந்தால் லகர ஒற்றாகத் திரிந்து முடியும்; எ - று.

எ - டு: நால்வட்டி என வரும். (சஅ)

சநுச. ஐந்த னெற்றே முந்தையது கெடுமே.

இதுவும் அது.

இ - ள்: ஐந்தனெற்று — ஐந்தாமெண்ணின்கணின்ற நகர ஒற்று, முந்தையது கெடும் — வகரமுதன்மொழி வந்தால் முன்னின்ற வடிவு கெட்டு முடியும்; எ - று.

எ - டு: ஐவட்டி என வரும்.

முந்தை யென்றதனால் நகர ஒற்றுக் கெடாது வகர ஒற்றாகத் திரிந்து ஐவ்வட்டியெனச் சிறுபான்மை வரும். (சகூ)

'ஒரு' 'இரு' முன் உயிர்முதன் மொழி

சூடுடு. முதலீ ரெண்ணின்முன் உயிர்வரு காலைத்
தவலென மொழிப உகரக் கிளவி
முதனிலை நீட லாவயி னான.

இது மாட்டேற்றான்[1] எய்திய உகரத்திற்குக் கேடுகூறி முதனீள்க என்ற லின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி கூறுகின்றது.

இ - ள்: முதலீரெண்ணின் முன் உயிர் வருகாலை — ஒரு இரு என முடிந்துநின்ற இரண்டெண்ணின் முன்னர் உயிர் முதன் மொழி வருமொழியாய் வருங்காலத்து, உகரக்கிளவி தவலென மொழிப — நிலைமொழி யுகரமாகிய எழுத்துக் கெடுதலாமென்று சொல்லுவர் புலவர், ஆவயினான முதனிலை நீடல் — அவ்விரண் டெண்ணின்கணின்ற முதலெழுத்துக்கள் நீண்டு முடியும்; எ-று.

எ - டு: ஓரகல் ஈரகல் ஒருழக்கு ஈருழக்கு எனவரும். (நிக)

''மூன்று' 'நான்கு' 'ஐந்து' முன் உயிர்முதன் மொழி

சூடுசு. மூன்றும் நான்கும் ஐந்தென் கிளவியுந்
தோன்றிய வகரத் தியற்கை யாகும்.

இதுவும் அது.

இ - ள்: மூன்றும் நான்கும ஐந்தென் கிளவியும் — மூன்றென்னுமெண்ணும் நான்கென்னுமெண்ணும் ஐந்தென்னுமெண்ணும், தோன்றிய வகரத்து இயற்கையாகும் — முன்னர்த்தோன்றி நின்ற வகரம் வருமொழிக்குக் கூறிய இயல்பாக மூன்றின்கண் வகர ஒற்றும், நான்கின்கண் லகர ஒற்றும், ஐந்தின்கண் ஒற்றுக்கெட்டும் முடியும்; எ - று.

எ - டு: மூவ்வகல் மூவ்வுழக்கு என இதற்குத் தோன்றிய என்றதனால் ஒற்றிரட்டுதல் கொள்க. நாலகல் நாலுழக்கு ஐயகல் ஐயுழக்கு எனவரும்.

தோன்றிய என்றதனால் மேல் மூன்றென்பது முதல் நீண்ட இடத்து நிலைமொழி னகரவொற்றுக் கெடுத்துக்கொள்க. இயற்கை யென்றதனால் தொடர்மொழிக்கண் ஒற்றிரட்டுதல் கொள்க. 'மூன்றனைற்றே' முதலிய மூன்று சூத்திரமுங் கொணர்ந்து முடிக்க. (நிக)

அவற்றுள் 'மூன்று' என்பதற்கு, மேலும் ஒரு முடிபு

சூடுஎ. மூன்றன் முதனிலை நீடலு முரித்தே
உழக்கென் கிளவி வழக்கத் தான.

இது முன்னர்க் குறுகுமென்றதனை நீண்டுமுடிக என்றலின் எய்தியது விலக்கிற்று.

இ - ள்: மூன்றன் முதனிலை நீடலும் உரித்து — மூன்றென்னு மெண்ணின் முதனின்ற எழுத்து நீண்டுமுடிதலும் உரித்து, அஃதி

[1] மாட்டேறு 'அளந்தறிகிளவியும்' (சக) என்னும நூற்பாவிற் கூறியது.

யாண்டெனின், உழக்கு என் இளவி வழக்கத்தான — உழக்கென்னுஞ் சொல் முடியும் வழக்கிடத்து ; எ - று.

எ - டு : மூவுழக்கு என வரும்.

வழக்கத்தான என்பதனுன் அகலென்கிளவிக்கு முதனிலை நீடலுங் கொள்க. மூவகல் என வரும். இன்னும் அதனுனே நிலைமொழி னகர ஒற்றுக் கெடுக்க.

மூழக்கு மூழாக்கென்னும் மருமுடிபு இவ்வோத்தின் புறனடையான் முடிக்க. (நிஉ)

'ஆறு' என்பதற்கும் அம் முடிபு

சூநுஅ. ஆறென் கிளவி முதல்நீ டும்மே.

இதுவும் அது.

இ - ள் : ஆறென் கிளவி — ஆறென்னு மெண்ணுப்பெயர் அகல் உழக்கு என்பன வரின், முதல் நீடும் — முன்னர்க் குறுகி நின்ற முதலெழுத்து நீண்டு முடியும் ; எ - று.

அறுவென்னுது ஆறென்றார், திரிந்ததன்றிரிபது என்னும் நயத்தால்.

எ - டு : ஆறகல் ஆறுழக்கு என வரும். (நிந)

'ஒன்பது' என்னுஞ் சொல்

சூநுக. ஒன்பா னிறுதி உருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மொழியே.

இது குற்றுகரம் மெய்யொடுங் கெடாது நின்று இன் பெறுக என்றலின் எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது.

இ - ள் : ஒன்பான் இறுதி உருபுநிலை திரியாது — அளவும் நிறையும் வருவழி ஒன்பதென்னுமை எண்ணின் இறுதிக் குற்றுகரந் தன்வடிவு நிலைதிரியாது நின்று, சாரியைமொழி இன்பெறல்வேண்டும் — சாரியைச்சொல்லாகிய இன் பெற்று முடிதலை விரும்பும் ஆசிரியன் ; எ - று.

எ - டு : ஒன்பதின்கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு எனவும், கழஞ்சு தொடி பலம் எனவும் வரும்.

சாரியைமொழி யென்றதனுன் இன்னோடு உகரமும் வல்லெழுத்துங் கொடுத்துச் செய்கைசெய்து முடிக்க. ஒன்பதிற்றுக்கலம் சாடி என எல்லாவற்றோடும் ஒட்டுக.

உருபென்பதனுன் ஒன்பதிற்றென ஒற்றிரட்டுதல் எல்லாவற்றிற்குங் கொள்க.

இன்னும் இதனுனே ஒன்பதி னுழியென்புழி வந்த இன்னின் னகரக் கேடுங் கொள்க. 'அளவாகுமொழி முதல்' (எழு - கூக) என்பதனுனும் 'நிலையிய' என்னும் இலேசானும் இன்னின் னகரம் நகரமாதல் கொள்க. ()

ஒன்று முதல் ஒன்பது எண்முன் நூறு

சசுo. நூறுமுன் வரினுங் கூறிய இயல்பே.

இஃது ஒன்றுமுதல் ஒன்பான்களோடு நூறென்பதனைப் புணர்க்கின்றது.

இ - ள் : முன்—ஒன்றுமுதல் ஒன்பான்களின் முன்னர், நூறு வரினும் — நூறென்னு மெண்ணுப்பெயர் வந்தாலும், கூறிய இயல்பு - மேற் பத்தென்பதனோடு புணரும்வழிக்கூறிய இயல்பு எய்தி முடியும் ; எ - று.

அது குற்றுகரம் மெய்யொடுங்கெட்டு மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுகி முதலீரெண்ணி னொற்று ரகரமாய் உகரம் பெற்று இடைநிலை ரகரம் இரண்டன்கட் கெட்டு முடிதலாம்.

எ - டு : ஒருநூறு இருநூறு அறுநூறு எண்ணூறு என வரும். இவை மாட்டேற்றான் முடிந்தன. மாட்டேறு ஒவ்வாதன மேற்கூறி முடிப்ப. (டுடு)

அதன்கண் 'மூன்று' என்னுஞ் சொல்

சசுக. மூன்ற னொற்றே நகார மாகும்.

இது மாட்டேற்றோடு ஒவ்வாததற்கு வேறுமுடிபு கூறுகின்றது.

இ - ள் : மூன்றனொற்றே நகாரமாகும் — மூன்றுமென்னின் கணின்ற னகரவொற்று நகரவொற்றாகும் ; எ - று.

எ - டு : மூந்நூறு என வரும். (டுசு)

அதன்கண் 'நான்கு' 'ஐந்து'

சசுஉ. நான்கும் ஐந்தும் ஒற்றுமெய் திரியா.

இதுவும் அது.

இ - ள் : நான்கும் ஐந்தும் ஒற்று மெய் திரியா — நான்கென்னு மெண்ணும் ஐந்தென்னுமெண்ணுந் தம்மொற்றுக்கள் நிலைதிரியாது முடியும் ; எ - று.

எ - டு : நானூறு ஐந்நூறு என வரும்.

மெய்யென்றதனான் நானூறென்புழி வருமொழி நகரத்துள் ஊகாரம் பிரித்து 'லனவென வருஉம்' (எழு - கசக) என்பதனான் னகரவொற்றாக்கி ஊகாரமேற்றி நிலைமொழி னகரங் கெடுத்துக் கொள்க. (டுஎ)

அதன்கண், 'ஒன்பது' என்னுஞ் சொல்

சசுங. ஒன்பான் முதனிலை முந்துகிளந் தற்றே
முந்தை யொற்றே ளகாரம் இரட்டும்
நூறென் கிளவி நகார மெய்கெட
ஊஆ வாகும் இயற்கைத் தென்ப

ஆயிடை வருதல் இகர ரகாரம்
ஈறுமெய் கெடுத்து மகர மொற்றும்.[1]

இதுவும் அது.

இ - ள்: ஒன்பான் முதனிலை முந்து கிளந்தற்று — ஒன்ப தென்னுமெண்ணின் முதனின்ற ஒகரம் மேற் பத்தென்பதனோடு புணரும்வழிக் கூறியவாறு போல ஒரு தகரம் ஒற்றி அதன்மேல் ஏறிமுடியும், முந்தை ஒற்றே ளகாரம் இரட்டும் — அவ்வொக ரத்தின் முன்னின்ற னகர ஒற்று ளகர ஒற்றுய் இரட்டித்து ஈற் கும், நூறென்கிளவி நகார மெய்கெட ஊ ஆவாகும் இயற்கைத் தென்ப — வருமொழியாகிய நூறென்னுமெண்ணுப்பெயர் நகர மாகிய மெய்கெட அதன்மேல் ஏறிய ஊகாரம் ஆகாரமாம் இயல்பையுடைத்தென்பர் புலவர், ஆயிடை இகர ரகரம் வருதல் —அம்மொழியிடை ஓர் இகரமும் ரகாரமும் வருக, ஈறு மெய் கெடுத்து மகரம் ஒற்றும் — ஈறாகிய குற்றுகரத்தினையும் அஃது ஏறிநின்ற றகர ஒற்றினையும் கெடுத்து ஓர் மகர ஒற்று வந்து முடியும்; எ - று.

மெய்யென்பதனுன் நிலைமொழிக்கட் பகரங் கெடுக்க.

எ - டு: தொள்ளாயிரம் என வரும்.

இதனை ஒன்பதென்னும் ஒகரத்தின்முன்னர் வந்த தகர ஒற்றின் மேலே ஒகரத்தையேற்றிப் பகரங் கெடுத்துக் குற்றியலுகரம் மெய்யொடுங் கெடுத்து நின்ற னகர ஒற்றினை இரண்டு ளகர ஒற்றாக்கி நூறென்பதன் நகரங்கெடுத்து ஊகாரம் ஆகாரமாக்கி ளகரத்தின் மேலேற்றி இகரமும் ரகரமும் வருவித்து விகாரப்பட்ட உயிராகிய ஆகாரத்தின்முன் உடம்படுமெய் யகரம் வருவித்து றகர உகரங் கெடுத்து மகர ஒற்று வருவித்து முடிக்க. (நிஅ)

ஒன்று 'இரண்டு' முன் ஆயிரம்

சசுசு. **ஆயிரக் கிளவி வரூஉங் காலை**
முதலீ ரெண்ணின் உகரங் கெடுமே.

இஃது அவ்வொன்றுமுதல் ஒன்பான்களோடு ஆயிரம் முடியுமாறு கூறு கின்றது.

இ - ள்: ஆயிரக்கிளவி வரூஉங் காலை — ஆயிரமென்னுஞ் சொல் ஒன்றுமுதல் ஒன்பான்கள் முன் வருங்காலத்து, முதல் ஈரெண்ணின் உகரம் கெடும் — ஒரு இரு என்னும் இரண்டெண் ணின்கட் பெற்று நின்ற உகரங் கெட்டு முடியும்; எ - று.

உகரங்கெடுமெனவே ஏனையன முன்னர்க்கூறியவாறே நிற்றல் பெற்றும்.

எ - டு: ஓராயிரம் இராயிரம் என வரும். (நிகூ)

---

1 இருநூறபா, ஒனபது+நூறு=தொள்ளாயிரம் எனப் புணராகின்றது. 'ஒன்பா னெகரமிசை' (எழு - சசடு) எனனும் நூற்பாவிற்குக் கூறிய அடிகளுறிபபை இதறகுங் கொள்க.

அவற்றிற்கு, மேலும் ஒரு முடிபு

சசுரு. முதனிலை நீடினும் மான மில்லை.

இஃது எய்தியதன்மேற் சிறப்புவிதி கூறுகின்றது.

இ - ள்: முதனிலை நீடினும் மானமில்லை — அம்முதலீரெண்ணின் முதற்கணின்ற ஒகர இகாரங்கள் நீண்டுமுடியினுங் குற்றமில்லை; எ - று.

எ - டு: ஓராயிரம் ஈராயிரம் என வரும். (சுo)

'மூன்று' முன் ஆயிரம்

சசுசுசு. மூன்ற னெற்றே வகார மாகும்.

இது மூன்றென்னுமெண் ஆயிரத்தோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: மூன்றனெற்றே வகாரமாகும் — மூன்றென்னுமெண்ணின்கணின்ற னகர ஒற்று வகர ஒற்றுருகத் திரிந்து முடியும்; எ - று.

எ - டு: மூவ்வாயிரம் என வரும்.

மூன்னிற் சூத்திரத்து நிலை என்றதனான் இதனை முதனிலை நீட்டி வகர ஒற்றுக் கெடுத்து மூவாயிரம் என முடிக்க. (சுக)

'நான்கு' முன் ஆயிரம்

சசுஎ. நான்க னெற்றே லகார மாகும்.

இது நான்கென்னுமெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: நான்கனெற்றே லகாரமாகும் — நான்கென்னுமெண்ணின்கணின்ற னகர ஒற்று லகர ஒற்றுருகத் திரிந்து முடியும்; எ - று.

எ - டு: நாலாயிரம் என வரும். (சுஉ)

'ஐந்து' முன் ஆயிரம்

சசுஅ. ஐந்த னெற்றே யகார மாகும்.

இஃது ஐந்தென்னுமெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: ஐந்தனெற்றே யகாரமாகும் — ஐந்தென்னு மெண்ணின்க ணின்ற நகர ஒற்று யகர ஒற்றுருகத் திரிந்து முடியும்; எ - று.

ஐயாயிரம் என வரும். (சுஙு)

'ஆறு' முன் ஆயிரம்

சசுக. ஆறன் மருங்கிற் குற்றிய லுகரம்
ஈறுமெய் ஒழியக் கெடுதல் வேண்டும்.

இஃது ஆறென்னு மெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: ஆறன் மருங்கிற் குற்றியலுகரம் — ஆறென்னு மெண்ணின்க ணின்ற குற்றியலுகரம் நெடுமுதல் குறுகி அறு வென முற்றுகரமாய் நிற்றலின், மெய் ஒழிய ஈறு கெடுதல் வேண் டும் — அது தானேறிய மெய்யாகிய றகர ஒற்றுக் கெடாது நிற்ப முற்றுகரமாகிய ஈறு தான் கெட்டுப் புணர்தலே விரும்பும் ஆசிரி யன்; எ - று.

எ - டு: அறுயிரம் என வரும்.

முன்னர் 'நெடுமுதல் குறுகும்' (எழு-சசo) என்ற வழி அறுவென நின்ற முற்றுகரத்திற்கே ஈண்டுக் கேடு கூறினரென்பது பெற்றாம். என்னை? குற்றியலுகரமாயின் ஏறிமுடிதலின். இது குற்றுகரந் திரிந்து முற்றுகர மாய் நிற்றலின் ஈண்டு முடிபுகூறினர். முற்றியலுகரம் ஈறுமெய்யொழியக் கெடுமெனவே குற்றுகரங் கெடாது ஏறிமுடியு மென்பது அருத்தாபத்தியாற் பெறுதும். ஆறுயிரம் என வரும்.

மருங்கென்றதனாற் பிறபொருட் பெயர்க்கண்ணும் நெடுமுதல் குறுகாது நின்று முடிதல் கொள்க. ஆறுகுவதே என வரும். (சுச)

'ஒன்பது' முன் 'ஆயிரம்'

சளஅ. ஒன்பா னிறுதி உருபுநிலை திரியா
தின்பெறல் வேண்டுஞ் சாரியை மரபே.

இஃது ஒன்பதென்னுமெண் அதனோடு புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: ஒன்பான் இறுதி — ஒன்பதென்னு மெண்ணின் இறுதிக் குற்றுகரம், உருவுநிலை திரியாது — தன் வடிவுநிலை நிரிந்து கெடாது, சாரியை மரபு இன் பெறல் வேண்டும் — சாரி யையாகிய மரபினையுடைய இன் பெற்று முடிதலே விரும்பும் ஆசிரியன்; எ - று.

எ - டு: ஒன்பதினாயிரம் என வரும்.

உருவென்றும் நிலையென்றுஞ் சாரியை மரபென்றுங்கூறிய மிகையால் ஆயிரமல்லாத பிறவெண்ணின்கண்ணும் பொருட் பெயரிடத்தும் இன்னும் உகரமும் வல்லெழுத்தும் பெற்று முடியும் முடிபு கொள்க. ஒன்பதிற்றுக் கோடி[1] ஒன்பதிற்றிரென்பது ஒன்பதிற்றுத்தடக்கை ஒன்பதிற்றெழுத்து என வரும்.

இன்னும் இவ்விலேசானே வேறொரு முடிபின்மையிற் கூறுதொழிந்த எண்ணுயிர மென்றவழி ஒற்றிரட்டுதலும் ஈண்டுக் கூறியவற்றிற்கு ஒற்றி ரட்டுதலுங் கொள்க. 'அளவாகு மொழிமுதல்' (எழு - கஉக) என்பதனுள் 'நிலைஇய' என்றதனுன் னகரம் றகரமாதல்[2] கொள்க. (சுடு)

---

1 இலகக்ம கோடியெனனும எண்ணுப் பெயாகள் இவவியலிற கூறபபடாமையால பழந தமிழர்கு 99999 வரைதான எணணத தெரிநதிருநதது எனறு சிலா கொள்வா. இலகக்ம் கோடி எனபன குறறியலுகர சொறகளலல வெனறும, குறறுகர சொறகளே இவவியலிற புணாததுக காடடபபடுவன வெனறும், இலககதனை மறு பெயரான நூறுயிரம எனனும சொலலும பதது நூறுயிரம வரை புணாததறகிடமும அடுத்த (எழு-சளக) நூற்பாவிற கூறபபட்டுளவென் றும, இலக்கம கோடி எனனும பெயாகள் முறையே பெரிய இலகக்ம கடைசி யெண எனறு பொருள்படும தனித தமிழச சொறகளே எனறும அறிந்து கொள்க.

2 னகரம் றகரமாதல ஒனபதிறறுககோடி ஒனபதிறறொன்பது முதலியவறறில.

ஒன்று முதல் ஒன்பது எண் முன் 'நூறுயிரம்'

சஎக. நூறு யிரமுன் வருஉங் காலை
நூற னியற்கை முதனிலைக் கிளவி.

இஃது ஒன்றுமுதல் ஒன்பான்களோடு நூறென்னுமெண் அடையடுத்த ஆயிரம் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: நூறுயிரம் முன் வருஉங் காலை — நூறுயிரமென்னும் அடையடுத்தமொழி ஒன்றுமுதல் ஒன்பான்கள் முன் வருமொழியாய் வருங்காலத்து, முதனிலைக் கிளவி நூறன் இயற்கை — ஒன்றென்னும் முதனிலைக் கிளவி ஒன்று முன் நூறென்னுமெண்ணோடு முடிந்தாற்போல விகாரமெய்தி முடியும். எனவே வழிநிலைக் கிளவியாகிய இரண்டு முதலிய எண்கள் விகாரமெய்தியும் எய்தாது இயல்பாயும் முடியும்; எ - று.

எ - டு: ஒரு நூறுயிரம் என வரும். ஏனைய இருநூறுயிரம் இரண்டு நூறுயிரம், முந்நூறுயிரம் மூன்று நூறுயிரம், நானூறுயிரம் நான்குநூறுயிரம், ஐந்நூறுயிரம் ஐந்து நூறுயிரம், அறுநூறுயிரம் ஆறு நூறுயிரம், எண்ணூறுயிரம் எட்டுநூறுயிரம், ஒன்பதுநூறுயிரம் எனவரும். இவ்விகாரப்பட்டனவற்றிற்குக் குற்றுகரம் மெய்யொடுங் கெடுத்து முதலீரெண்ணிலொற்று ரகரமாக்கி உகரம் வருவித்து மூன்றும் ஆறும் நெடுமுதல் குறுக்கி மூன்றிலொற்று நகாரமாக்கி நான்கும் ஐந்தும் ஒற்றுமெய்திரியா வாக்கி எட்டிலொற்று ணகாரமாக்கி இலேசுகளாற்கொண்ட செய்கைகளில் வேண்டுவனவுங் கொணர்ந்து முடிக்க.

ஏற்புழிக்கோட லென்பதனால் தொள்ளாயிரமென்ற முடிபிலேடு மாட்டேறு சென்றதேனும் அவ்வாறு முடியாதென்று கொள்க. முன்னென்பதனின் இன் சாரியை பெற்று ஒன்பதினூறுயிரம் என்றுமாம். நிலையென்றதனின் மூன்றும் ஆறும் இயல்பாக முடிவுழி நெடுமுதல் குறுகாமை கொள்க. (சுசு)

நூறு முன் ஒன்று முதல் ஒன்பது எண்கள்

சஎஉ. நூறென் கிளவி ஒன்றுமுத லொன்பாற்
கீறுசினை யொழிய இனவொற்று மிகுமே.

இது நூறென்பதனோடு ஒன்றுமுதல் ஒன்பான்களைப் புணர்க்கின்றது.

இ - ள்: நூறு என் கிளவி — நூறென்னு மெண்ணுப்பெயர், ஒன்று முதல் ஒன்பாற்கு — ஒன்றுமுதல் ஒன்பான்களோடு புணருமிடத்து, ஈறு சினையொழிய — ஈறாகிய குற்றுகரந் தன்னைப் பற்றப்பட்ட மெய்யொடுங் கெடாதுநிற்ப, இன ஒற்று மிகும் — அச்சினைக்கு இனமாகிய றகர ஒற்று மிக்கு முடியும்; எ - று.

எ - டு: நூற்றொன்று என வரும். இரண்டு முதல் ஒன்பது அளவுஞ் செய்கை யறிந்து ஒட்டுக.

ஈறுசினை என்று ஓதிய மிகையான் நூறென்பதனோடு பிற எண்ணும் பிறபொருட் பெயரும் இவ்விதியும் பிறவிதியும் எய்திமுடிதல் கொள்க. நூற்றுப்பத்து நூற்றுக்கோடி நூற்றுத்தொண்ணூறு எனவும், நூற்றுக்குறை நூற்றிதழ்த்தாமரை நூற்றுக்காணம் நூற்றுக்கான்மண்டபம் எனவும் இன ஒற்று மிக்கன கொள்க. இன்னும் இதனானே இருநூற்றொன்று இரண்டு நூற்றொன்று என நூறு அடையடுத்தவழியுங் கொள்க. (சுஎ)

நூறு முன் 'ஒருபஃது' முதலியன

சஎசு. அவையூர் பத்தினும் அத்தொழிற் றாகும்.

இஃது அந்நூறென்பதனோடு ஒன்றுமுதல் ஒன்பான்கள் அடையடுத்த வழிப் புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: அவை ஊர்பத்தினும் — அந்நூறென்பது நின்று முற்கூறிய ஒன்றுமுதல் ஒன்பான்களை ஊர்ந்து வந்த பத்தென் பதனோடு புணருமிடத்தும், அத்தொழிற்றாகும் — ஈறு சினை யொழிய இன ஒற்று மிக்கு முடியும்; எ - று.

எ - டு: நூற்றொருபஃது இருபஃது முப்பஃது நாற்பஃது ஐம்பஃது அறுபஃது எழுபஃது எண்பஃது என வரும். மற்று நூற்றொன்பது அவை ஊரப்பட்டு வந்தது அன்மை உணர்க.

ஆகுமென்றதனான் ஒருநூற்றொருபஃது இருநூற்றொருபஃது என நிலைமொழி அடையடுத்து முடியும் முடிபுங் கொள்க. (சுஅ)

நூறு முன், அளவுப்பெயர் நிறைப்பெயர்

சஎசஅ. அளவும் நிறையும் ஆயியல் திரியாது
குற்றிய லுகரமும் வல்லெழுத் தியற்கையும்
முற்கிளந் தன்ன என்மனார் புலவர்.

இது நூறென்பதனோடு அளவுப்பெயரும் நிறைப்பெயரும் முடியுமாறு கூறுகின்றது.

இ - ள்: அளவும் நிறையும் ஆயியல் திரியாது — நூறென்பத னோடு அளவுப்பெயரும் நிறைப்பெயரும் புணருமிடத்து முற்கூறிய இயல்பிற் றிரியாது இன ஒற்று மிக்குமுடியும், குற்றியலுகரமும் வல்லெழுத்தியற்கையும் — அவ்விடத்துக் குற்றியலுகரங் கெடா மையும் இன ஒற்று மிக்கு வன்றொடர்மொழியாய் நிற்றலின் வரு மொழி வல்லெழுத்து மிகும் இயல்பும், முற்கிளந்தன்ன என்மனார் புலவர் — 'வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து மிகுமே' (எழு - சஉசு) என வன்றொடர்மொழிக்குக் கூறிய தன்மையவாய் முடியுமென்று கூறுவர் புலவர்; எ - று.

எ - டு: நூற்றுக்கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு எனவும், கழஞ்சு தொடி பலம் எனவும் வரும்.

திரியாதென்றதனால் நூறென்பது அடையடுத்த வழியும் இவ்விதி கொள்க. அஃது ஒருநூற்றுக்கலம் இருநூற்றுக்கலம் என வரும். (சுக)

'ஒருபஃது' முதலியவற்றின் முன் ஒன்று முதல் ஒன்பது எண்கள்

சூஎடு. ஒன்றுமுத லாகிய பத்தூர் கிளவி
ஒன்றுமுத லொன்பாற் கொற்றிடை மிகுமே
நின்ற ஆய்தங் கெடுதல் வேண்டும்.

இஃது ஒன்றுமுதல் எட்டு ஈறுகிய எண்கள் அடையடுத்த பத்தனேடும் ஒன்றுமுதல் ஒன்பான்களோப் புணர்க்கின்றது.

இ - ள்: ஒன்று முதலாகிய பத்து ஊர் கிளவி — ஒன்றுமுதல் எட்டு ஈறுகப் பத்தென்னும் எண் ஏறி ஒருசொல்லாகி நின்ற ஒரு பஃது முதலிய எண்கள், ஒன்றுமுதல் ஒன்பாற்கு — ஒன்றுமுதல் ஒன்பான்கள் வருமொழியாய் வந்து புணரும் இடத்து, நின்ற ஆய்தங் கெடுதல் வேண்டும் — பஃதென்பதன்கண் நின்ற ஆய்தங் கெட்டு முடிதலே விரும்பும் ஆசிரியன், ஒற்று இடைமிகும் — ஆண்டு இன ஒற்றுகிய ஒரு தகர ஒற்று இடைமிக்கு முடியும்; எ - று.

எ - டு: ஒருபத்தொன்று இருபத்தொன்று ஒருபத்திரண்டு இருபத்திரண்டு என எல்லாவற்றோடும் ஒட்டுக. இவற்றுள் ஒருபத்தொன்று ஒருபத்திரண்டு என்னும் எண்கள் அதிகாரத்தால் நின்ற நூறென்பதனோடு அடுத்து வருமென்று[1] உணர்க. (எஅ)

அவற்றின் முன் 'ஆயிரம்'

சூஎசு. ஆயிரம் வரினே இன்னென் சாரியை
ஆவயி னெற்றிடை மிகுத லில்லே.

இஃது ஒருபஃது முதலியவற்றோடு ஆயிரத்தைப் புணர்க்கின்றது.

இ - ள்: ஆயிரம வரின் இன்னென் சாரியை — அவ்வொன்று முதலாகிய பத்து ஊர் கிளவி ஆயிரத்தோடு புணரும் இடத்து இன்சாரியை பெறும், ஆவயின் ஒற்று இடை மிகுதல் இல்லே — அவ்விடத்துத் தகர ஒற்று இடைவந்து மிகாது; எ - று.

எ - டு: ஒருபதினாயிரம் இருபதினாயிரம் என எண்பதின்காறும் ஒட்டுக. இவை நூற்றொருபதினாயிரம் எனவும் வரும்.

ஆவயின் என்றதனால் நூறாயிரத்தொருபத்தீராயிரம் என்றாற்போல அத்துப் பெறுதலும் பிறவும் கொள்க. (எக)

அவற்றின் முன் அளவுப் பெயர் நிறைப் பெயர்

சூஎஎ. அளவும் நிறையும் ஆயியல் திரியா.

1 நூறென்பதனோடு அடுத்துவருதல் - நூற்றொருபத்தொன்று நூற்றொருபதிரண்டு என வருதல்.

இஃது ஒன்று முதலாகிய பத்து ஊர் கிளவி முன்னர் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் புணர்க்கின்றது.

இ - ள் : அளவும் நிறையும் ஆயியல் திரியா — ஒருபஃது முதலிய எண்களின் முன்னர் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வந்தால் ஒற்று இடைமிகாது இன்சாரியை பெற்று முடியும்; எ - று.

எ - டு : ஒருபதின்கலம் சாடி தூதை பானை நாழி மண்டை வட்டி அகல் உழக்கு எனவும், ஒருபதின்கழஞ்சு தொடி பலம் எனவும் வரும். இவற்றிற்கு நூறு அடையடுத்து ஓட்டுக.

திரியா என்றதனால் ஒருபதிற்றுக்கலம் இருபதிற்றுக்கலம் என்னுந் தொடக்கத்தனவற்றின்கண் இன்னின் அகரம் றகரமாகத் திரிந்து இரட்டுதலும் உகரமும் வல்லெழுத்தும் பெறுதலுங் கொள்க. இன்னும் இதனாலே ஒருபதினாழி என்றவழி வருமொழி நகரந் திரிந்துழி னிலைமொழி னகரக்கேடுங் கொள்க.

அளவு நிறையு மதனோ ரன்ன என்று பாடம் ஓதுவார் முன்னர்ச் சூத்திரத்து 'ஆவயின்' என்றதனாலும் அதன் முன்னர்ச் சூத்திரத்து 'நின்ற' என்றதனாலும் இவற்றை முடிப்பார். (எஉ)

ஒன்று முதல் எண்முன் பொருட் பெயர்

சஎஅ. முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும்
ஞநமத் தோன்றினும் யவவந் நியையினும்
முதனிலை யியற்கை என்மனார் புலவர்.

இஃது ஒன்றுமுதல் ஒன்பான்களோடு பொருட்பெயரைப் புணர்க்கின்றது.

இ - ள் : முதனிலை எண்ணின்முன் வல்லெழுத்து வரினும் — ஒன்றென்னும் எண்ணின்முன் வல்லெழுத்து முதன் மொழி வரினும், ஞநம தோன்றினும் — ஞநமக்களாகிய மெல்லெழுத்து முதன்மொழி வரினும்; யவவந்து இயையினும் — யவக்களாகிய இடையெழுத்து முதன் மொழி வரினும், முதனிலை இயற்கை என்மனார் புலவர் — அவ்வொன்றுமுதல் ஒன்பான்கள் முன்னெய்திய முடிபு நிலைமை எய்தி முடியுமென்று கூறுவர் புலவர்; எ - று.

எனவே வழிநிலையெண்ணாகிய இரண்டு முதலாகிய எண்கள் அம்மூன்று கணமும் முதன்மொழியாய் வரின் முதனிலை முடிபாகி விகாரம் எய்தியும் எய்தாது இயல்பாயும் முடியும்.

எ - டு : ஒருகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவும், இருகல் இரண்டுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு எனவும் ஒட்டுக. இவ்வெண்களிற் குற்றியலுகரம் மெய்யொடுங் கெட்டு முதலீரெண்ணின் ஒற்று ரகாரமாய் உகரம் வந்தது. இருகல் முதலியவற்றிற்கு இடைநிலை ரகாரங் கெடுக்க. மூக்கல் மூன்றுகல் சுனை துடி பறை ஞாண் நூல்

மணி யாழ் வட்டு என ஒட்டுக. இதற்கு நெடுமுதல் குறுக்கி 'மூன்றனெற்றே வந்த தொக்கும்' (எழு - சசள) என்பதனுன் முடிக்க. முன்னர் எண்ணுப் பெயரும் அளவுப்பெயரும் நிறைப்பெயரும் வருவழிக் கூறிய விகாரங்களிற் பொருட்பெயர்க்கும் ஏற்பன கொணர்ந்து முடித்து எல்லாவற்றிற்கும் நிலை யென்றதனுன் ஒற்றுத் திரிந்து முடிக்க. அவை மூன்றற்கும் ஐந்தற்கும் ஞகரம் வருவழி ஞகர ஒற்றுதலும் மூன்றற்கு யகரம் வருவழி வகர ஒற்றுதலுமாம். நாற்கல் நான்குகல் சுனை துடி பறை, நான்ஞாண் நான்குஞாண் நூல் மணி யாழ் வட்டு; ஐங்கல் ஐந்துகல் சுனை துடி பறை, ஐஞ்ஞாண் ஐந்து ஞாண் நூல் மணி, ஐயாழ் ஐந்துயாழ் ஐவட்டு ஐந்துவட்டு; அறுகல் ஆறுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு; எண்கல் எட்டுக்கல் சுனை துடி பறை, எண்ஞாண் எட்டுஞாண் நூல் மணி யாழ் வட்டு; ஒன்பதுகல் சுனை துடி பறை ஞாண் நூல் மணி யாழ் வட்டு என ஒட்டுக. ஒன்பதின்கல் எனச் சென்றதேனும் வழக்கின்மையின் ஒழிக்க. இன்னும் மாட்டேறின்றி வருவனவற்றிற்கெல்லாம் முடிபுநிலை யென்றதனுன் முடிக்க. (எக)

அவற்றுடன் உயிர் முதல் மொழியும் யகரமும்

சளகூ. அதனிலை உயிர்க்கும் யாவரு காலை
முதனிலை ஒகரம் ஓவா குமே
ரகரத் துகரந் துவரக் கெடுமே.

இஃது ஒன்றுமுதல் ஒன்பான்களோடு பொருட்பெயருள் உயிர்முதன் மொழி முடியுமாறும் மேற்கூறிய யகாரம் வேறுபட முடியுமாறுங் கூறுகின்றது.

இ - ள்: முதனிலைக்கு — ஒன்றென்னும் எண்ணின் திரிபாகிய ஒரு என்னும் எண்ணிற்கு, உயிரும் யாவும் வருகாலை — உயிர் முதன்மொழியும் யாமுதன்மொழியும் வருமொழியாய் வருங் காலத்து, அதன் நிலை — அம்முதனிலையின் தன்மை இவ்வாறும், ஒகரம் ஓவாகும் — ஒகரம் ஓகாரமாய் நீளும், ரகரத்து உகரந் துவரக் கெடும் — ரகரத்து மேனின்ற உகரம் முற்றக்கெட்டு முடியும்; எ - று.

நான்காவதனை முதனிலையோடு கூட்டி அதன்கண் நின்ற உம்மையை உயிரோடும் யாவோடுங் கூட்டுக. எனவே வழிநிலை யெண்கள் உயிர் முதன் மொழி வந்த இடத்து முற்கூறியவாறே இருவாற்றானும் முடியும்.

ஏ - டு: ஓரடை ஓராகம் ஓரிலை ஓரீட்டம் ஒருலை ஒருசல் ஒருழை ஒரேடு ஓரையம் ஓரொழுங்கு ஓரோலை ஓரௌவியம் என வரும். குற்றியலுகரம் மெய்யொடுங் கெடுத்து முதலெண்ணினெற்று ரகரமாக்குக. ஓர் யாழ் ஓர் யானை என வரும். துவர என்றதனுன் இரண்டென்னும் எண்ணின் இக ரத்தை நீட்டி ரகரத்துள் உகரத்தைக் கெடுத்து ஈரசை ஈர்யானை எனவும், மூன்றென்னும் எண்ணின் னகரவொற்றுக் கெடுத்து மூவசை மூயானை என வும் முடிக்க. இவை செய்யுண் முடிபு. இன்னும் இதனுனே இங்ஙனம் வரு வன பிறவும் அறிந்து முடித்துக் கொள்க. (எச)

இரண்டு முதல் ஒன்பது எண்முன் 'மா' என்னுஞ் சொல்

சூசுயி. இரண்டுமுத லொன்பான் இறுதி முன்னர்
வழங்கியல் மாவென் கிளவி தோன்றின்
மகர அளவொடு நிகரனு முரித்தே.

இஃது இரண்டுமுதல் ஒன்பான்களின் முன்னர் அளவு முதலிய மூன்றற்கும் உரிய மாவென்பது புணருமாறு கூறுகின்றது.

இ - ள்: இரண்டுமுதல் ஒன்பான் இறுதி முன்னர் — இரண்டென்னுமெண் முதலாக ஒன்பதென்னுமெண் ஈறாக நின்ற எண்ணுப்பெயர்களின் முன்னர், வழங்கு இயல் மா என் கிளவி தோன்றின் — வழக்கின் கண்ணே நடந்த அளவு முதலியவற்றிற்கு உரிய மா வென்னுஞ் சொல் வருமொழியாய் வரின், மகர அளவொடு நிகரலும் உரித்து — அவ்வெண்ணுப் பெயர்களின் முன்னர்த் தந்து புணர்க்கப்படும் மண்டையென்னும் அளவுப் பெயரோடு ஒத்து விகாரப்பட்டு முடிதலும் உரித்து; உம்மையான் விகாரப்படாது இயல்பாய் முடிதலும் உரித்து; எ - று.

வழக்கியல் வழங்கியலென விகாரம். மகர அளவு மகரமுதன் மொழியாகிய அளவுப்பெயரெனப் பண்புத்தொகை. அஃது 'அளந்தறி கிளவியும்' (எழு - சசசு) என்பதனுள் ஒரு மண்டை என முடித்ததாம்.

எ - டு: இருமா மும்மா நான்மா ஐம்மா அறுமா எண்மா ஒன்பதின்மா என முன்னர்க்கூறிய சூத்திரங்களான் விகாரப்படுத்தி முடிக்க. இனி உம்மையான் விகாரப்படுத்தாது இரண்டுமா மூன்றுமா நான்குமா ஐந்துமா ஆறுமா எட்டுமா ஒன்பதுமா என முடிக்க. புள்ளிமயங்கியலுள் 'அளவுநிறையும்' (எழு - நஅசு) என்னுஞ் சூத்திரத்தான் நெடுமுதல் குறுகி உகரம் வந்து புணருமாறு கூறினார். அதனான் ஈண்டு எழுமா என முடிக்க. ஏழ்மாவென முடிதல் வழக்கின்று.

இரண்டுமுதல் ஒன்பானென்று எடுத்தோதினமையின், ஒன்றற்கு ஒருமாவென்னும் முடிபேயன்றி ஒன்றுமா வென்னும் முடிபு இல்லையாயிற்று. வழங்கியன்மா என்றார் விலங்குமாவை நீக்குதற்கு. (எடு)

சுரு. அதிகாரப் புறனடை

புள்ளி மயங்கியலுள் ஒழிந்துநின்ற மெய்யீறுகளின் செய்யுள் முடிபு

சூசுக. லனவென வருஉம் புள்ளி யிறுதிமுன்
உம்முங் கெழுவும் உளப்படப் பிறவும்
அன்ன மரபின் மொழியிடைத் தோன்றிச்
செய்யுட் டொடர்வயின் மெய்பெற நிலையும்
வேற்றுமை குறித்த பொருள்வயி னான.

இது புள்ளிமயங்கியலுள் ஒழிந்துநின்ற செய்யுண்முடிபு கூறுகின்றது.

இ - ள்: லன என வருஉம் புள்ளி இறுதி முன் — லகார னகாரமென்று கூற வருகின்ற புள்ளியீற்றுச் சொற்களின்

முன்னர், உம்முங் கெழுவும் உளப்பட — உம்மென்னுஞ் சாரியையுங் கெழுவென்னுஞ் சாரியையும் உட்பட, பிறவும் அன்ன மரபின் மொழியிடைத்தோன்றி — பிறசாரியையும் அப்பெற்றிப்பட்ட மரபினையுடைய மொழியிடத்தே தோன்றி, செய்யுள் தொடர்வயின் மெய்பெற நிலையும் — செய்யுட்சொற்களைத் தொடர்பு படுத்திக் கூறுமிடத்துப் பொருள்பட நிற்கும், வேற்றுமை குறித்த பொருள்வயினை — வேற்றுமையைக் குறித்த பொருட் புணர்ச்சிக்கண் ; எ - று.

எ - டு: 'வானவரி வில்லுந் திங்களும் போலும்' இதற்கு உம்மென்னுஞ் சாரியையின் மகரத்தை 'அம்மினிறுதி' (எழு - கஉ) என்னுஞ் சூத்திரத்துள் 'தன்மெய்' என்றதனாற் பிறசாரியையுந் திரியுமென ஈகர ஒற்முக்கி நிலைமொழி லகர ஒற்றின்மேல் உயிரேற்றி முடிக்க. வில்லுந்திங்களும் போலுமென்பதற்கு வில்லிடைத்திங்கள் போலுமென எழனுருபு விரித்துப் பொருளுரைக்க. 'கல்கெழு கானவர் நல்குறு மகளே' (குறுந் - எக) இதற்குக் கல்லைக் கெழீஇயின என உரைக்க. 'மாரித்திங்கிழவனும் போன்ம்' (அகம்- சுசு) இதற்குக் கிழவனைப்போன்மென உரைக்க. இவ் வும்மை சிறப்பன்று. 'கான்கெழுநாடு' (அகம் - கூ.அ) இதற்குக் காணைக்கெழீஇய என உரைக்க.

இனி அன்னமரபின் மொழியிடை என்றதனாற் கெழுவென்றது பிற சொல்லிடத்தே 'பணைகெழு பெருந்திறற் பல்வேன்மன்னர்' 'துறைகெழு மாந்தை' (நற்றிணை - நூறு) என இயல்பாக வருவனவும், 'வளங்கெழு திருநகர்' (அகம் - கள) 'பயங்கெழு மாமழை' (புறம் - உசுசு) என நிலைமொழி யீற்றெழுத்துத் திரிய வருவனவுங் கொள்க.

இன்னும் இதனானே இச்சாரியையது உகரக்கேடும் எகர நீட்சியுங் கொள்க. 'பூக்கேழ் தொடலை நடங்க வெழுந்து ; (அகம் - உஅ) 'துறைகேழூரன் கொடுமை நாணி' (ஐங்குறு - கக) இவற்றிற்கு இரண்டாவதும் ஏற்புழி மூன்றுவதும் விரிக்க. 'செங்கேழ் மென்கொடி' (அகம் - அ0) என்புழிக் கெழுவென்னும் உரிச்சொல் 'எழுத்துப் பிரிந்திசைத்தல்' (சொல் - நகஙி) என்பதனான் நீண்டதென்று உணர்க. மெய் யென்றதனாற் பூக்கேழென்புழி வல்லொற்று மிகுதல் கொள்க.

இன்னுஞ் சான்றோர் செய்யுட்கட் பிறசாரியை பெற்று விகாரங்கள் எய்தி முடிவனவற்றிற்கெல்லாம் இச்சூத்திரமே விதியாக முடித்துக் கொள்க. (எசு)

எழுத்ததிகாரத்திற் புணர்க்கப்படாத சொற்கள்

சஅஉ. **உயிரும் புள்ளியும் இறுதி யாகிக்**
குறிப்பினும் பண்பினும் இசையினுந் தோன்றி
நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும்
உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின்
ஐம்பா லறியும் பண்புதொகு மொழியுஞ்
செய்யுஞ் செய்த என்னுங் கிளவியின்
மெய்யொருங் கியலுந் தொழில்தொகு மொழியும்

தம்மியல் கிளப்பின் தம்முன் தாம்வரூஉம்
எண்ணின் தொகுதி உளப்படப் பிறவும்
அன்னவை யெல்லாம் மருவின் பாத்திய
புணரியல் நிலையிடை உணரத் தோன்றும்.

இஃது இவ்வதிகாரத்திற் புணர்க்கப்படாத சொற்கள் இவையென அவற்றை எடுத்து உணர்த்துகின்றது.

இ - ள்: உயிரும் புள்ளியும் இறுதியாகி — கூறுங்கால் உயிரும் புள்ளியும் ஈறுக நிற்பதோர் சொல்லாகி, குறிப்பினும் பண்பினும் இசையினுந் தோன்றி — குறிப்பினுலும் பண்பினுலும் இசையினுலும் பிறந்து, நெறிப்பட வாராக் குறைச்சொற் கிளவியும் — ஒருவழிப்பட வாராத சொற்றன்மை குறைந்த சொற்களாகிய உரிச்சொற்களும், உயர்திணை அஃறிணை ஆயிரு மருங்கின் — உயர்திணை அஃறிணை யென்னும் அவ்விரண்டிடத்தும் உளவாகிய, ஐம்பாலறியும் பண்புதொகு மொழியும் — ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐந்துபாலினையும் அறிதற்குக் காரணமாகிய பண்புகொள்பெயர் தொகுந் தொகைச்சொல்லும், செய்யுஞ் செய்த என்னுங் கிளவியின் — செய்யுஞ் செய்த என்னும் பெயரெச்சச் சொற்களினுடைய, மெய் ஒருங்கு இயலுந் தொழில் தொகுமொழியும் — காலங்காட்டும் உம்மும் அகரமும் ஒருசொற் கண்ணே சேர நடக்கும் புடைபெயர்ச்சி தொக்கு நிற்குஞ் சொற்களும், தம்இயல் கிளப்பின் — தமது தன்மை கூறுமிடத்து, தம்முன் தாம் வரூஉம் எண்ணின்தொகுதி உளப்பட — நிறுத்தசொல்லுங் குறித்துவரு கிளவியுமாய் வாராது தம்முன்னர் தாமே வந்து நிற்கும் எண்ணுப்பெயரினது தொகுதியும் உளப்பட, அன்ன பிறவும் எல்லாம் — அத்தன்மையாகிய பிறவுமெல்லாம், மருவின் பாத்திய — உலகத்து மருவி நடந்த வழக்கினது பகுதியைத் தம் இலக்கணமாகவுடைய, புணரியல் நிலை இடை யுணரத்தோன்றும் — ஒன்றனோடொன்று புணருதல் நடந்த தன்மை இடம் விளங்கத் தோன்றும்; எ - று.

எ - டு: கண் விண்ணவிணைத்தது விண்விணைத்தது இவை குறிப்புரிச்சொல்; ஆடை வெள்ள விளர்த்தது வெள்விளர்த்தது இவை பண்புரிச்சொல்; கடல் ஒல்ல வொலித்தது ஒல்லொலித்தது இவை இசை யுரிச்சொல். 'ஒல்லொலிநீர் பாய்வதே போலுந் துறைவன்' என்றார் செய்யுட்கண்ணும். இவை உயிரீறும் புள்ளியீறும் நிற்றலின் ஒன்றன்கண் அடக்கலாகாமையின் நெறிப்படவாரா என்றார். விண்ணவிணைத்தது தெறிப்புத்தோன்றத் தெறித்த தென்றும் விண்விணைத்தது தெறிப்புத் தெறித்த தென்றும் ஆம். ஏனையவற்றிற்கும் இவ்வாறே உணர்க. இங்ஙனம் நிற்றலிற் றன்மை குறைந்த சொல்லாயிற்று. 'வினையே குறிப்பே' (சொல் - உரிஅ) என்னுஞ் சூத்திரத்திற்

கூறிய என என்பதனே இவற்றொடு கூட்டியவழி இடைச்சொல்லாதலின் விண்ணெனவினேத்தது எனப் புணர்க்கப்படுமாறு உணர்க.

இனிக் கரும்பார்ப்பான் கரும்பார்ப்பனி கரும்பார்ப்பார் கருங்குதிரை கருங்குதிரைகள் என வரும் இவற்றுட் கரியனுகிய பார்ப்பான் கரியளாகிய பார்ப்பனி கரியராகிய பார்ப்பார் கரியதாகிய குதிரை கரியனவாகிய குதிரைகள் என ஐம்பாலினேயும் உணர்த்தும் பண்புகொள்பெயர் தொக்கவாறு காண்க. இவற்றுட் கருமை என்னும் பண்புப்பெயர் தொக்கதேற் கருமையாகிய பார்ப்பா னென விரித்தல் வேண்டும்; அங்ஙனம் விரியாமையிற் பண்புகொள் பெயர் தொக்கதென்று உணர்க.

வெற்றிலே வெற்றுப்பிலி வெற்றடி வெற்றெனத்தொடுத்தல் என்ருற் போல்வனவற்றுள் வெறுவிதாகிய இலேயென்பது டாக்குங் கோட்டு நூறுங் கூடாததாய பண்புணர்த்தி ஈறு தொகுதலின் மருவின் பாத்தியவாய் நின்று ஒற்றடுத்தது. வெறுவிதாகிய உப்பிலியென்றது சிறிதும் உப்பிலியென நின்றது. ஏனையவும் அன்ன. இங்ஙனம் ஐம்பாலுந் தொகுத்தற்கு உரிய முதனிலேயாதலிற் புணர்த்தலாகாமை கூறினர்.

இனி ஆடரங்கு செய்குன்று புணர்பொழுது அரிவாள் கொல்யானே செல்செலவு என நிலம் முதலாகிய பெயரெச்சந்தொக்க வினேத்தொகைகளே விரிக்குங்கால், ஆடினவரங்கு எனச் செய்த என்னும் பெயரெச்சத்து ஈறு விரிந்த அகர ஈறு இறப்பு உணர்த்தியும், ஆடாநின்றவரங்கு ஆடுமரங்கு எனச் செய்யுமென்னும் பெயரெச்சத்து ஈறு விரிந்த உம்மீறு நிகழ்வும் எதிர்வும் உணர்த்தியும், அவற்றுனேய புடைபெயர்ச்சியைத் தோற்றுவித்து இரண்டு பெயரெச்சமும் ஒருசொற்கண் ஒருங்கு தொக்கு நிற்றலின் அதனே ஒரு பெய ரெச்சத்தின்கண் அடக்கிப் புணர்க்கலாகாமையிற் புணர்க்கலாகாதென்ருர். உம்மிறுதி நிகழ்வும் எதிர்வும் உணர்த்துமாறு 'வினேயின்தொகுதி' (சொல் - சகரு) என்னும் எச்சவியற் சூத்திரத்துட் கூறுதும். இவ்வும் ஈறு இரண்டு காலமும் ஒருங்குணர்த்துதற் சிறப்பு நோக்கிச் செய்த என்பதனே ஆசிரியர் முற்கூறுராயினர்.

இனிப் பத்து என நிறுத்திப் பத்தெனத் தந்து புணர்க்கப்படாது பப்பத் தெனவும் பஃபத்தெனவும் வழங்குமாறு உணர்க. ஒரோவொன்றென்பதும் அது. அதுதானே ஒரொன்றேரொன்றுகக் கொடு என்ருற் புணர்க்கப்படும்.

இனி அன்னபிறவும் என்றதனுனே உண்டானென்புழி உண்ணென்னும் முதனிலேயுங் காலங்காட்டும் ட்கரமும் இடனும்பாலும் உணர்த்தும் ஆனும் ஒன்றனேடொன்று புணர்க்கப்படா, அவை நிறுத்தசொல்லுங் குறித்துவரு கிளவியும் அன்மையின். கரியனென்புழிக் கருவென நிறுத்தி அன்னனைத் தந்து புணர்க்கப்படா, அது இன்னனென்னும் பொருள் தருதலின். வினேவினேச் சொற்களும் இவ்வாறே பிரித்துப் புணர்க்கலாகாமை உணர்க. இன்னும் அதனுனே கொள்ளெனக்கொண்டான் என்புழிக் கொள்ளென்பதனே என என்பதனேடு புணர்க்கப்படாமையும் ஊரன் வெற்பன் முதலிய வினேப்பெயர் களும்[1] பிறவும் புணர்க்கப்படாமையுங் கொள்க. இவ்வாசிரியர் புணர்க்கப் படாத இச்சொற்களேயும் வடநூற்கண்முடித்த அனகன் அனபாயன் அகளங் கன் முதலிய வடசொற்களேயும் பின்னுள்ளோர்[2] முடித்தல் முதனூலோடு மாறுகொளக் கூறலாமென்று உணர்க. (எஎ)

1 ஊரன் வெற்பன் என்னும் திணைததகிலவர் பெயர்களே வினேப்பெயர்களென்று இங் குக் கூறியிருப்பது பொருந்தாது.

2 பின்னுள்ளோர் - நன்னூலார் சின்னூலார் வீரசோழியகாரர் முதலியோர்.

எழுத்ததிகாரத்திற்குப் புறனடை

சூ அசு. கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கி னுணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத் தென்மனார் புலவர்.

இஃது இவ் வதிகாரத்து எடுத்தோத்தாலும் இலேசாலும் முடியாது நின்றவற்றை யெல்லாம் இதனுளே முடிக்க என அதிகாரப்புறனடை கூறுகின்றது.

இ - ள்: கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும் — முன்னர் எடுத்தோதப்பட்டன அல்லாத சொற்கள் செய்யுளிடத்துத் திரிந்து முடிவனவும், வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும் — நால்வகை வழக்கும் நடக்குமிடத்து மருவுதலோடு திரிந்து முடிவனவும், விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின் — முன்னர்க் கூறிய இலக்கண முறைமையினின்றும் வேறுபடத் தோன்றுமாயின் அவற்றை, நன்மதி நாட்டத்து — நல்ல அறிவினது ஆராய்ச்சியாலே, வழங்கியன் மருங்கின் — வழக்கு முடிந்து நடக்குமிடத்தே, உணர்ந்தனர் ஒழுக்கல் என்மனார் புலவர் — முடிபு வேறுபாடுகளை அறிந்து நடாத்துக என்று கூறுவர் புலவர்; எ - று.

உ - ரை: 'தடவுத்திரை' என உகரமும் வல்லெழுத்தும் பெற்றுந் 'தடவுநிலை' (புறம் - கசo) என உகரம் பெற்றும் அகர ஈற்று உரிச்சொல் வந்தது. அதவத்தங் கனி என வேற்றுமைக்கண் அகர ஈறு அத்துப் பெற்றது. கசதபத் தோன்றின் என அகர ஈற்றின்முன்னர்த் தகரங் கொடுக்க.

'நறவங் கண்ணி நற்போர்ச் செம்பியன்
குரவ நீடிய கொன்றையங் கானல்'

என ஆகார இறுதி குறியதனிறுதிச் சினைகெட்டு இருவழியும் அம்முப் பெற்றன.

'முளவுமா தொலைச்சிய பைந்நிணப் பிளவைப்
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விசைஇ' (மலைபடு - களசு)

என அவ்வீறு அல்வழிக்கண் அம்முப் பெருத முடிபுபெற்றன. 'திண் வளி விசித்த முழவொ டாகுளி' (மலைபடு - நடு) 'சுறவெறிமீன்' 'இரவழங்கு சிறுநெறி' (அகம் - நகஅ) இவை உகரம் பெருமல் வந்தன. 'கள்ளியங் காட்ட புள்ளியம் பொறிக்கலை' (அகம் - கூஎ) என இகர ஈறு வேற்றுமைக்கண் அம்முப் பெற்றன. 'தீயினன்ன வொண்செங் காந்தள்' (மலைபடு - கசஙி) என ஈகார ஈறு வேற்றுமைக்கண் இன்பெற்றது. 'நல்லொழுக்கங் காக்குந் திருவுத்தவர்' (நாலடி - ஙிஎ) என உகர ஈறு வேற்றுமைக்கண் அத்துப்பெற்றது. 'ஏப் பெற்ற மான்பிணை போல' (சிந்தா - உகூசுஙி) என ஏகார ஈறு வேற்றுமைக்கண் ஏகரம் பெருது வந்தது. 'கைத்துண்டாம் போழ்தே' (நாலடி - கஙூ)

'கைத்தில்லர் நல்லர்' (நான்மணிக்கடிகை - சுகூ) எனவும், 'புன்னையங்கானல்' (அகம் - அ0) 'முல்லையுந்தொடையல்' எனவும் ஐகார ஈறு வேற்றுமைக்கண் அத்தும் அம்மும் பெற்றன. 'அண்ணல்கோயில் வண்ணமே' (சிந்தா - நாம கள் - சுஉசு) என ஓகார ஈறு யகர உடம்படுமெய் பெற்றது.

இனி 'அஞ்செவி[1]நிறையவாலின' (முல்லைப் - அசு) என அல்வழிக்கட் சகரமும் அகரமுங் கெட்டன. 'மரவம் பாவை வயிரூரப் பருகி' 'மரவகாகம் வணங்கி மாற்கனம்' என இருவழியும் மகரம் விகாரப்பட்டு அம்மும் பெற்றன. 'காரெதிர் கானம் பாடினே மாக' (புறம் - கசச) 'பொன்னந்திகிரி முன் சமத் தருட்டி' 'பொன்னங் குவட்டிற் பொலிவெய்தி' என னகர ஈறு இருவழியும் அம்மும்பெற்றன. 'வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நாலிசை'(நற்றி - சுஉ) என ரகர ஈறு வேற்றுமைக்கண் அத்துப் பெற்றது. 'நாவலந் தண்பொழில்' (பெரும்பாண் - சசுஙி) 'கானலம் பெருந்துறை' (ஐங்குறு - கஙிஅ) என் லகர ஈறு வேற்றுமைக்கண் அம்மும் பெற்றன. 'செய்தலஞ் சிறு பறை' இஃது அல்வழிக்கண் அம்மும் பெற்றது. 'ஆயிடையிருபே ராண்மை செய்த பூசல்' (குறுந் - சாங) என்புழி ஆயிடையென்பது உருபாதலின் 'நீட வருதல்' (எழு - உ0அ) என்பதனான் முடியாது நீண்டு வகர ஒற்று வேறுபட முடிந்தது. தெம்முனை எனத் தெவ்வென்புழி வகரங்கெட்டு மகர ஒற்றுப் பெற்று முடிந்தது. அ என்னுஞ் சுட்டு 'அன்றியனைத்தும்' எனத் திரிந்தது. 'முதிர்கோங்கின் முகை' (குறிஞ்சிக்கலி - உ0) எனவுங் 'காய்மாண்ட தெங் கின் பழம்' (சிந்தா - ஙக) எனவுங் குற்றுகர ஈறு இன்பெறுதலுங் கொள்க. 'தொண்டுதலையிட்ட பத்துக்குறை' என ணகரம் இரட்டாது தகர ஒற்று டகர ஒற்றுய்க் குற்றியலுகரம் ஏறி முடிந்தது.[2]

இங்ஙனஞ் செய்யுளுட் பிறவுந் திரிவன உளவேனும் இப் புறனடையான் முடிக்க. அருமருந்தானென்பது ரகரவுகரங் கெட்டு அருமந்தானென முடிந் தது. சோழனுடு சோணாடு என அன் கெட்டு முடிந்தது. பாண்டிநாடும் அது. தொண்டைமானுடு தொண்டை நாடென ஈற்றெழுத்துச் சில கெட்டு முடிந் தது. மலையமானுடு மலாடு என முதலெழுத்தொழிந்தன பலவுங் கெட்டு முடிந்தது. பொதுவி லென்பது பொதியிலென உகரந் திரிந்து இகரமாய் யகர உடம்படுமெய் பெற்று முடிந்தது. பிறவும் இவ்வாறே திரிந்து மருவி வழங்குவன எல்லாம் இப் புறனடையான் அமைத்துக்கொள்க. (எஅ)

குற்றியலுகரப் புணரியல் முற்றிற்று.

எழுத்ததிகாரம் முற்றிற்று.

நூலின் மரபு மொழிமரபு நுண்பிறப்பு
மேலைப் புணர்ச்சி தொகைமரபு—பாலாம்
உருபியலின் பின்னுயிர் புள்ளி மயக்கந்
தெரிவரிய குற்றுகரஞ் செப்பு.

எழுத்ததி காரத்துச் சூத்திரங்க ளெல்லாம்
ஒழுக்கிய ஒன்பதோத் துள்ளும்—வழுக்கின்றி
நாலூற் றிருநாற்பான் மூன்றென்று காவலர்கள்
மேலூற்று வைத்தார் விரித்து.

---

1. அகம்+செவி=அஞ்செவி
2. ஒனபது என்னுஞ் சொல தொணடு எனத் திரிந்தது என்பது நச்சினார்க்கினியர் கருத்து. இதன தவறு முன்னர்க் காட்டப்பட்டது.

தொல்காப்பியம்

எழுத்ததிகாரம்

நூற்பா முதற் குறிப்பு

அகர வரிசை

அஆஉஊ	ககச	அல்வழி...உறழென	உ0ச,உகநி
அஆஎன்னும்	ககஅ	அல்வழி...மெல்லெழுத்	களக
அஇஉஅம்	நுச	அவ்வழிப்பன்னீருயிரும்	சுக
அஃறிணைவிரவுப்பெயர்	க00	அவ்வாறெழுத்தும்	கங
அக்கென்சாரியை	கசு0	அவ்வியல்நிலையும்	உஅ
அகமென்கிளவிக்கு	கஅ0	அவற்றுவழிமருங்கிற்	எக
அகரஆகாரம்	களஅ	அவற்றுள்,	
அகரஇகரம்	சஅ	அஆஆயிரண்	சுக
அகரஇறுதி	கஉக	அஇஉஎ	உ0
அகரஉகரம்	சஅ	இகரஇறுபெயர்	ககக
அகரத்திம்பர்	சஅ	இன்னின்இகரம்	அ0
அடையொடுதோன்றினும்	கஅஉ	ஈறொற்றுத்தொடர்	உஉக
அண்ணம்சேர்ந்த	சுநி	காரமும் கானும்	அஅ
அண்ணம்நண்ணிய	சுங	ணனஃகான்	நஉ
அணரிநுனிநா	சுச	நிறுத்த சொல்லின்	எக
அத்தவண்வரினும்	கஙஎ	மெய்யீறெல்லாம்	சுக
அத்திடைவருஉங்	ஙக0	மெல்லெழுத்தியற்கை	கச
அத்தின்அகரம்	அங	ரகாரழகாரங்	சஅ
அத்தேவற்றே	அஎ	லளஃகான்முன்னர்	நக
அத்தொடுசிவணும்	கஅக	அவைதாம்,	
அதனிலுயிர்க்கும்	உநிஉ	இயற்கையவாகும்	கஉநி
அந்நான்மொழியுங்	உங0	இன்னேவற்றே	எக
அப்பெயர்மெய்யொழித்	ககஅ	குற்றிய லிகரம்	கக
அம்மின்இறுதி	அச	முன்னப்பொருள	கங
அம்மூவாறும்	உக	மெய்பிறிதாதல்	எஉ
அரையளவுகுறுகல்	உசு	அவையூர்பத்தினும்	உசக
அரையெனவருஉம்	க0க	அழனென்இறுதிகெட	ககக
அல்லதன்மருங்கிற்	கஅள	அழனேபழனே	சஉங
அல்லதுகிளப்பின்இயற்கை	கஅச	அளந்தறிகிளவியும்	உங்அ
அல்லதுகிளப்பின்எல்லா	உஉஅ	அளபிறந்துயிர்த்தலும்	நஙநி
அல்லதுகிளப்பினும்...இறுதியு	உஉக	அளவாகும்மொழி	அக
அல்லதுகிளப்பினும்...மெனும்	கஅநி	அளவிற்கும்நிறையிற்கும்	கசக
அல்வழி...இயல்பென	உ0உ	அளவும்...ஆயியல்திரியா	உநி0

அளவும்...ஆயியல்திரியாது உசகூ
அளவும்...எண்ணும் உகந
அளவும்...வேற்றுமை கஅஉ
அன்றுவருகாலை கடுச
அன்னவென்னும் கந உ
அன்னென்சாரியை கஉந
ஆஈஊஎ உக
ஆஎஒ நுஉ
ஆஎஒஅம் நஉச
ஆகாரஇறுதி கந அ
ஆடூஉமகடூஉ கசுO
ஆண்மரக்கிளவி கஎடு
ஆணும்பெண்ணும் களச
ஆதனும்பூதனும் ககஎ
ஆய்தஈலையலும் உகசு
ஆயிரக்கிளவி உசடு
ஆயிரம்வரினும் உநந
ஆயிரம்வரினே உடுO
ஆயிரம்வருவழி உகந
ஆரும்வெதிரும் உOந
ஆவயின்வல்லெழுத்து களச
ஆவும்மாவும் கந கூ
ஆவோடல்லது நுஉ
ஆறன்உருபின் எள
ஆறன்உருபினும் கOள
ஆறன்மருங்கிற் உசசு
ஆறென்கிளவி உசந
ஆன்முன்வருஉம் கசச
ஆனின்னகாரமும் அஉ
ஆனெற்றகரமொடு கசச
இஈஎஏ சுக
இக்கின்இகரம் அந
இகரஇறுதி கசடு
இகரயகரம் சூ
இடம்வரைகிளவிமுன் கடுஉ
இடைலகரகரம் உந
இடைப்படிற்குறுகும் நஅ
இடையெழுத் தென்ப உகூ
இடையொற்றுத் தொடரும் உஉந
இதழியைந்து சுடு
இயற்பெயர்முன்னர் ககசு
இரண்டுமுதலொன்பான் உடுந
இராவென்கிளவி கசக
இருதிசைபுணரின் உந
இருளென்கிளவி உகள
இல்லமரப்பெயர் களகூ
இல்லென்கிளவி உOசு
இல்லொடுகிளப்பின் கஎO
இலமென்கிளவிக்கு கஅக
இரு அல்தோற்றம் ககூடு
இன்றிஎன்னும் கசசு
இன்னிடைவரூஉம் கககூ
இன்னெனவரூஉம் அடு
இனிஅணிஎன்னும் கசசு
ஈகாரஇறுதி கடுஉ
ஈமுன்கம்மும் கஅஅ
ஈரெழுத்து...உயிர்த்தொடர் உஉந
ஈரெழுத்து...வல்லொற்று உஉடு
ஈரெழுத்தொருமொழி உஉO
ஈறியல்மருங்கின் ககஉ
ஈறியல்மருங்கினும் நுஅ
உஊ...என்னும் டுக
உ ஊ...ஔஎன சுஉ
உஊகாரம் டுடு
உகரஇறுதிஅகர கடுந
உகரமொடுபுணரும் கOஅ
உச்சகாரம் டுடு
உச்சகாரமொடு டுஅ
உட்பெறுபுள்ளி உசு
உண்டென்கிளவி உநக
உணரக்கூறிய உகஅ
உதிமரக்கிளவி கசுக
உந்திமுதலா சுO
உப்பகாரம் டுசு
உப்பகாரமொடு டுஅ
உம்மைஎஞ்சிய கநக
உயர்திணைப்பெயரே எஅ
உயர்திணையாயின்உருபியல் கஅசு
உயர்திணையாயின்நம்மிடை கஉக
உயிர்ஒளஎஞ்சிய டுந
உயிர்முன்வரினும் கந க,உகச
உயிர்மெய்ஈறும் எO
உயிர்மெய்அல்லன டுO
உயிரிறுசொல்முன் எO
உயிரீருகியஉயர்திணை கூஅ
உயிரீருகியமுன்னிலை கூஎ
உயிரும்...அளவும் கOஅ
உயிரும்...குறிப்பினும் உடுச

உரிவருகாலே	கசஅ	ஐயின்முன்னரும்	அகூ
உருபியல்நிலையும்	கஎ0	ஒடுமெரக்கிளவி	கறிஎ
உருவினும்இசையினும்	ஙக	ஒவ்வும்அற்றே	றிச
உரைப்பொருட்கிளவி	கஙச	ஒழித்ததன்நிலையும்	ககக
ஊஎன்ஒருபெயர்	ககூ0	ஒற்றிடைஇனமிகா	உஉங
ஊகாரஇறுதி	கறிஅ	ஒற்றுநிலைதிரியா	உஉசூ
எனவருமுயிர்	றிச	ஒற்றுமிகுதகரமொடு	ககூறி
எகரஒகரத்	உஎ	ஒன்பான்ஒகரமிசை	உஙஎ
எகரஒகரம்	ஙகூக	ஒன்பான்முதனிலை	உசச
எகின்மரமாயின்	ககஉ	ஒன்பானிறுதி	உசஙூ, உசஎ
எஞ்சியவெல்லாம்	றிசு	ஒன்றுமுதலாக	உஙஉ
எட்டனெற்றே	உஙஎ	ஒன்றுமுதலாகப்	ககூறி
எண்ணின்இறுதி	கஉறி	ஒன்றுமுதலாகிய	உறி0
எண்ணுப்பெயர்க்கிளவி	உஉசு	ஒன்றுமுதலொன்பான்	உஙச
எப்பெயர்முன்னரும்	.அச	ஓகாரஇறுதிஏகார	கசூக
எருவும்செருவும்	கறுறி	ஓகாரஇறுதிக்கொன்னே	ககஎ
எல்லாஎழுத்தும்	சுஎ	ஓரளபாகும்	சக
எல்லாமென்னும்	கஉக	ஓரெழுத்தொரு மொழி	சத
எல்லாமொழிக்கும்	கூ0	ஔகாரஇறுதி	கஎக
எல்லாருமென்னும்	கஉஉ	ஔகாரஇறுவாய்	உச
எழுத்தெனப்படுப	கஙூ	ஔவெனவரூஉம்	கூஅ
எழுத்தோரன்ன	கூக	ககாரஙகாரம்	சூஉ
ஏஓஎனும்	றிறி	கசதப முதலிய	கூஉ
ஏகாரஇறுதி	ககூச	கசதப முதன்மொழி	உஙக
ஏயென்இறுதிக்கு	ககூங	கண்ணிமை நொடி	உங
ஏழனுருபிற்கு	கஉஎ	கதந பம எனும்	றி0
ஏழென்கிளவி	உகஉ	கவவோடியையின்	றிச
ஏனவைபுணரின்	உக0	காரமுங் காரமும்	அஅ
ஏனவைவரினே	கறிச	கிளந்த அல்ல	உறிஎ
ஏனஎகினே	ககஉ	கிளப்பெய...கிளப்	ககஉ
ஏனப்புளிப்பெயர்	கறி0	கிளப்பெய ..கொளத்	கஎகூ
ஏனமுன்வரினே	உஉஅ	கீழென் கிளவி	உகச
ஏனவகரந்	உக0	குமிழென் கிளவி	உகஉ
ஏனவகரம்	ककक	குயினென் கிளவி	ककக
ஐஅம்பல்லென	உகச	குற்றியலிகரம்	ஙசு
ஐஒடுகுஇன்	எசூ	குற்றியலுகரக்	கக0
ஐஔஎன்னும்	ச0	குற்றியலுகரத்	கஉச
ஐகாரஇறுதி	ஙசுச	குற்றியலுகரம்	றிஙட
ஐகாரஔகாரம்	அக	குற்றியலுகரமும்	சுக
ஐந்த...மகார	உஙசு	குற்றெழுத்திம்பரும்	கறிக
ஐந்த...முந்தையது	உசக	குற்றெழுத்தைந்தும்	சத
ஐந்த...மெல்லெழுத்	உஙக	குறியதன் இறுதி	கசறி
ஐந்த...யகார	உசசு	குறியதன் முன்னர்	ஙஅ
ஐந்தும்மூன்றும்	உச0	குறியதன் முன்னரும்	கசக

குறுமையும் நெடுமையும் சடு
குறையென் கிளவி கஅக
குன்றிசை மொழிவயின் சஅ
கொடிமுன்வரினே கசுசு
ஙஞண நமன நக
சகரக் கிளவியும் டுஅ
சகார ஞகாரம் சுந
சார்ந்து வரி னல்லது சுசு
சாரென் கிளவி உஅந
சாவ என்னும் கநஉ
சிறப்பொடு வருவழி ககஎ
சுட்டின் முன்னர் கந
சுட்டின் முன்னரும் கடுச
சுட்டி னியற்கை கசஎ
சுட்டுச்சினை நீடிய உஉக
சுட்டுமுதல்...இயல்பா கடுச
சுட்டுமுதல்...நிலையும் கசுடு
சுட்டுமுதல்...நிலையும் ஒற்றிடை கடுஎ
சுட்டுமுதல் வகரம் ககஅ
சுட்டுமுதல் வயினும் ககக
சுட்டுமுதலாகிய இகர கஅடு
சுட்டுமுதலாகிய ஐயென் கசசு
சுட்டு முதலாகிய வகர உஅக
சுட்டு முதலுகரம் ககடு
செய்யா என்னும் கநஅ
செய்யுள் இறுதிப் சசு
செய்யுள் மருங்கின் கசுஅ
சே என் மரப்பெயர் கசுந
ஞகாரை ஒற்றிய கஎஉ
ஞணநம டுஅ
ஞநமன் புள்ளி ககஅ
ஞநம யவ்வெனும் கூந
ஞநமவ இயையினும் கஎஉ
ஞநமவ என்னும் நஉ
டகார ணகாரம் சுந
டறலள என்னும் நஅ
ணகார இறுதி கஎச
ணளவென் புள்ளி கூஎ
ணனவென் புள்ளி கூடு
தகரம் வருவழி உஅடு
தத்தம் திரிபே சுஉ
தம்மியல் கிளப்பின் சநந
தமிழென் கிளவி உகக
தாம் நாம் என்னும் சஉஅ
தாயென் கிளவி உஅக
தாழென் கிளவி உகக
தான் யான் என்னும் கஉந
தான்யா னெனும் பெயர் ககக
தானும் பேனும் ககஅ
திங்கள் முன்வரின் கடுக
திங்களும் நாளும் கசுஎ
திரிபு வேறு கிளப்பின் உந்உ
தேற்ற எகரமும் கசுக
தேனென் கிளவி ககந
தொடரல் இறுதி கநடு
தொழிற் பெயரெல்லாம் கஎசு, கஅஅ, உஅஅ, உகசு.
நகர இறுதியும் கஎந
நமவ என்னும் உசஅ
நாட்பெயர்க் கிளவி கஅக
நாயும் பலகையும் உஅஎ
நாவிளிம்பு வீங்கி சுச
நாள்முன் தோன்றும் கடுக
நான்கனெற்றே லகர உசக, உசசு.
நான்கனெற்றே றகார உந்சு
நான்கும் ஐந்தும் உசச
நிலாவென் கிளவி கசஉ
நிறுத்த சொல்லுங் எந
நிறையு மளவும் உந்ச
நீ என் ஒரு பெயர் கடுந
நீ என் பெயரும் கடுஉ
நீட்டம் வேண்டின் உஉ
நீட வருதல் கநக
நீயென் ஒரு பெயர் ககஎ
நும்மென் இறுதி ககக
நும்மென் இறுதியும் கஅஎ
நும்மெ னெருபெயர் கஅஎ
நுனிநா அணரி சுச
நூறுயிரமுன் உசஅ
நூறுமுன் வரினும் உசச
நூறூர்ந்து வரூஉம் உகச
நூறென் கிளவி உசஅ
நெட்டெழுத்திம்பர் கஉச
நெட்டெழுத்திம்பரும் நஉ
நெட்டெழுத் தேழே சக
நெடியதன் இறுதி உஅடு
நெடியதன் முன்னர் கஅசு
நெடியத னிறுதி உகசு

செல்லுஞ் செல்லுங்	௨0டு	மாறுகோள் எச்சமும்	ககூ0.
படர்க்கைப் பெயரும்	கஅந	மின்னும் பின்னும்	ககடு
பத்த ஞெற்றுக் கெட	உநந	மீனென் கிளவி	ககந
பத்தென் கிளவி	உகக	முதலா வன	டுஉ
பதக்குமுன் வரினே	கசள	முதலீரெண்ணின்	உசஉ
பல்லவை நுதலிய	கக டு	முதலீ ரெண்ணி ஞெற்று	உந டு
பல்லிதழ் இயைய	சுடு	முதனிலை எண்ணின்	உடுக
பலரறி சொன்முன்	ககந	முதனிலை நீடினும்	உசசு
பலவற் றிறுதி உருபியல்	கந அ	முரணென் தொழிற் பெயர்	கஎள
பலவற் றிறுதி நீடுமொழி	கந டு	மூற்றிய லுகரமொடு	டுந
பன்னீ ருயிரும்	சக	முன் உயிர் வருமிடத்	உஉஅ
பனியென வருஉங்	கசஅ	முன்னென் இறுதி	உ00
பனையின் மூன்னர்	கசுசு	மூவள பிசைத்தல்	உக
பனையும் அரையும்	கசுடு	மூன்றன் முதனிலை	உசஉ
பனையென் அளவும்	ககக	மூன்ற ஞெற்றே நகார	உசச
பாழென் கிளவி	உகஉ	மூன்ற ஞெற்றே பகார	உநசு
பீரென் கிளவி	உ0ந	மூன்ற ஞெற்றே வகரம்	உசக
புணரியல் நிலையிடை	நஎ	மூன்ற ஞெற்றே வகார	உசசு
புள்ளியில்லா	உள	மூன்ற ஞெற்றே வல்ல	உநக
புள்ளியிறுதியும்...சொல்லிய	கஉள	மூன்று தலையிட்ட	சுஅ
புள்ளி யிறுதியும...வல்லெழுத்து	கo க	மூன்றும் நான்கும்	உசஉ
புள்ளி ஈற்று முன்	அக	மூன்று மாறும்	உநசு
புள்ளும் வள்ளும்	உகள	மென்மையும் இடைமையும்	அடு
புளிமரக் கிளவிக்கு	கசக	மெய் உயிர் நீங்கின்	கo
பூ என் ஒரு பெயர்	கடுக	மெய்ந்நிலை சுட்டி	நந
பூல்வே லென்ரு	உ0அ	மெய்யின் அளவே	உடு
பெண்டென் கிளவி	உஉள	மெய்யின் இயக்கம்	சந
பெயருந் தொழிலும்	அடு	மெய்யின் இயற்கை	உசு
பெற்றம் ஆயின்	கசுச	மெய்யின் வழிய	உஅ
பொன்னென் கிளவி	உ00	மெய்யோ டியையினும்	உடு
மஃகான்...அத்தே	ககக	மெல்லெழுத்தாறும்	சுசு
மஃகான்...வவ்வுந்	நஉ	மெல்லெழுத்தியையின் அவ்வெ	உகo
மக்களென்னும்	உகஅ	மெல்லெழுத் தியையின் இறுதி	ககச
மகப்பெயர்க் கிளவி	கநள	மெல்லெழுத்தியையின்னகார	உகடு
மகர இறுதி	களஅ	மெல்லெழுத் தியையின் னகார	உ0ச
மகரத் தொடர் மொழி	டுக	மெல்லெழுத்துமியினும்	கஅசு, ககச.
மகன் வினை கிளப்பின்	உ0க	மெல்லெழுத்து மிகுவழி	கடஉ
மரப்பெயர்க் கிளவிக்கம்மே	உஉடு	மெல்லெழுத்துறழும் . ருளவே	உ0உ
மரப்பெயர்க்கிளவிமெல்லெ	கநள	மெல்லெழுத்துறழும்...ருளவே செல்வழி	களக
மருவின் தொகுதி	எச	மெல்லெழுத்தென்ப	உக
மழையென் கிளவி	ககசஅ	மெல்லொற்று வலியா	உஉடு
மன்னுஞ் சின்னும்	ககo	மொழிப்படுத் திசைப்பினும்	சள
மாமரக் கிளவியும்	கசந	மொழிமுத லாகும்	கூடு
மாறுகொள் எச்சமும்	கசுக		

யகர இறுதி ௨0க
யகரம் வருவழி ௨௨௨
யாழ என்னும் புள்ளி ஙஙங

க. அருஞ்சொற் பொருள் விளக்கம்

அகத்தோத்து - ஓர் இலக்கணத் தைத் தனிப்படக் கூறும் நூற்பா ககஉ

அகப்பாட்டெல்லை - நாட்டிற்கு உட் பட்ட எல்லை; புறப்பாட்டெல் லைக்கு எதிர் அ

அகல் - ஒரு முகத்தளவு ககக

அகளங்கன் - களங்கமற்றவன்· உருசு

அண்ணாணி - மிக அண்மையில் கருO

அண்ணாஅத்தேரி -·ஓர் ஊர் சுசக

அதங்கோடு - திருவிதாங்கூர் சஙள

அதோளி - அங்கு கஏருி

அந்தை - ஒரு நிறை $\frac{1}{10762200}$ ககக

அமை - கல் மூங்கில் கசுள

அம்பர் - அங்கு, அவ்விடம் உகசு

அரை - ஒரு மரம் கசுருி

அலகு - அசைக்குரிய எழுத் தெண்ணிக்கை உஉ

அழன் - பிணம் சஉங

அழான் - ஓர் இயற்பெயர் ககள

அழுக்கல் - வருந்துதல் உகக

அனகன் - குற்றமற்றவன் உருசு

அனபாயன் - அபாயத்தைத் தவிர்ப்பவன் உருசு

ஆசீவகப்பள்ளி - சமணத் துறவி களின் மடம் கூக

ஆம்பல் - ஒரு பேரெண் உசச

ஆர் - ஆத்திமரம் உOங

ஆவிரை - ஒரு செடி சசுருி

இங்கு - பெருங்காயம் நஎ

இடக்கர் - உயர்ந்தோர் சொல்லத் தகாத இழிபொருட் சொல். சசக

இடா - இறைகூடை, ஓலைப் பட்டை சுசக

இடா - ஓரளவு ககஉ

இடைக்கணம் - இடையினம கூஅ

இதழ் - உதடு ருிங

இதோளி - இங்கு கஏருி

இமில் - திமில் சசுச

இம்பர் - இங்கு, இவ்விடம் உகசு

இம்மி - ஒரு நிறை ககஉ

இயல்பு கணம் - வலி மிக்கு முடியாதவை எசு

இயைபு வல்லெழுத்து - இசைந்த வல்லினமெய் சசகசு

இலதை - ஓர் ஒலி, சிலர் குலவை என்பர் அ

இலம்படுதல் - வறுமை யடை தல் கஅக

இலம்பாடு - வறுமை கஅக

இலேசு - நூற்பாவில் மிகை யாக வேனும் வேருக வேனும் வந்துள்ள எழுத்தும் சொல் லும் சொன்முறையும் அக

இரு அல் - தேன்கூடு சகூரு

இரு அ வழுதுணங்காய் - இரு ட்டும் கத்தரிக்காயும் கநகூ

இறுவாய் - இறுதி, எழுவாய்க்கு எதிர் கச

இன்னினி - இப்பொழுதே கருO

ஈழம் - இலங்கை கூக

உடனிலை மயக்கம் - உயிர்மெய் உயிர்மெய்யோடும் தனிமெய் யோடும் கூடி நிற்றல் (நச். கருத்து). சஉ

உடுஉ - விண்மீன் கசுO

உதோளி - உங்கு கஏருி

உத்தி - பொருத்து முறை, நூலிலும் உரையிலும் கடைப் பிடிக்கும் தெறி முறை உச

உந்தி - கொப்பூழ் சுள

உம்பர் - உங்கு, மேலிடம் உகசு

உயிர்க்கணம் - உயிரினம கூஅ

உரி - அரை நாழி கக்O

உரிஞ் - உராய்தல் நஉ

உருபு புணர்ச்சி - பெயர்கள் வேற்றுமை யுருபுகளோடு புணரும் புணர்ச்சி அO

உருமு - இடி கஅசு

உரையசைச் கிளவி - உரைக் கும்போது ஒருவனை எதிர் முகமாக்கும் சொல் நசு

உவாஅத்து - அமாவாசையின் கசக
உவாஅப் பட்டினி - அமாவாசைப் பட்டினி நோன்பு கஉக
உழக்கு - 2 ஆழாக்கு ($\frac{1}{4}$ படி) ககக
உழை - மான், ஒரு மாமுமாம் கசுள
உளு - புழு நிசு
உறழ்ச்சி பெறுதல் - ஒரு புணர்மொழியே இயல்பாயும் திரிபாயும் (விகாரமாயும்) வருதல் கூநி
உறழ்வு - உறழ்ச்சி கூஅ
ஊ - ஊன் கசு0
எஃகிய - எஃகு கருவியால் எற்றி நொய்தாக்கப்பட்ட கசு
எடுத்தல் - உயர்த்தி யொலித்தல் கூக
எதோளி - எங்கு க0நி
எயின் - எய்ஞர், வேடர் ககஙந
எரு - காய்ந்த சாணம் கநிநி
எழு - கோட்டை வாயிலிற் குறுக்காகப் போடப்படும் மரம் கநிள
ஏ - அம்பு கசுஉ
ஏது - காரணம் நுள
ஏறு - காளை உஉசு
ஒட்டுப் பெயர் - தொடர்ச்சொற் பெயர் எஉ
ஒருஞார் - ஓர் அளவு கக்உ
ஒருதுவலி - ஓர் அளவு கக்உ
ஒருபுடைச் சேறல் - ஒரு மருங்கு தழுவுதல் எ0
ஒழிபு - நூலில் அல்லது நூற் பகுதியிற் சொல்லப்படாத ஒழிந்த செய்திகள். சு0
ஒற்ற - பொருந்த சுசு
ஒற்றளபெடை - மெய்யெழுத்து நீண்டொலித்தல் உஉ
ஒற்று - மெய் க0சு
ஒன்றியற் கிழமைப்பட்டு நிற்றல் - உடையவனிடத்தினின்று பிரிக்கப்படாத உடைமையாயிருத்தல். நுள
ஓ - மதகு நீர் தாங்கும் பலகை கசுகூ
ஓணம் - ஒரு நாள் கக0
ஒத்து - இலக்கண நூலின் சிறு பிரிவு கஉ
ஒத்து - வீதி எநி
ஓரடை - ஓரளவு கக்உ
ஓரா - ஒரு வகை மீன் கசுசு
ஓலம் போழ் - வார்ந்த அல்லது கிழித்த ஓலை. கசுசு
கஃசு - $\frac{1}{4}$ பலம் க0கூ
கடா - விளை க0
கடி சூத்திரம் - தாலி அசு
கடிசொல் - விலக்கப்படுஞ் சொல் நிக
கணவிரி - ஒரு மரம் கநிக
கப்பி - ஒருவனது இயற் பெயர் கநி0
கருவி - புணர்ச்சிக்கு ஏதுவான இலக்கணம் கநி
கலம் - 12 மரக்கால் கக்க
கலாம் - சண்டை உ0உ
கலை - ஆண் மான் கசுள
கழஞ்சு - 20 மஞ்சாடி ($\frac{1}{5}$ அவுன்சு) க0கூ, கக்க
கழல் - கழற்சிக்காய் நூ
கன் - கன்னர்தொழில் கக்நி
கன்னல் - தோண்டல், நாழிகை வட்டில் உ0கூ
கா - 100 பலம் கக்க
காணி - ஓர் எண் ($\frac{1}{80}$), 100 குழிநிலம், ஒரு மஞ்சாடி கசஅ
காண்டிகை - சுருக்கவுரை கஉ
காந்தருவம் - இன்னிசை கூ
காழ் - விதை, வயிரம் உ0ஙூ
கிளவி - சொல் எக
குண்டிகை - குடுக்கை நூ
குமரி - கன்னி, இளைஞ கக்ஙூ
குமிழ் - ஒரு மரம் உக்உ
குரீஇ - குருவி உ
குறிச்சி - மலைநாட்டூர் உ
குறியிட்டாளுதல் - பெயரிட்டு வழங்குதல் கக்கூ
கூதாளி - ஒரு மரம் கநிக
கூறை - ஆடை, சேலை கக்க
கேட்டா மூலம் - கேட்டையும் மூலமும் கசுசு

கொண்மூ - மேகம் கஙிஅ, கஙிக
கொழு-கலப்பைக்காறு, கொழுப்பு உ
கொள் - காணம், ஒரு நிறை கoக
கோடு - தனித்தெழுதப்படும் கொம்பு உஅ
கோட்டுநூறு - சங்குச் சுண்ணாம்பு உங
கோட்பட்டான் - பிடிக்கப்பட்டான், கொல்லப்பட்டான் கoக
கோலிக்கருவி - கோலிகர் என்னும் நெசவாளரின் கருவி சுக
சந்தம் - வண்ணம் கூ
சாடி - ஒரு முகத்தலளவு ககக
சார் - ஒரு மரம் உoங
சிங்கநோக்கு - சிங்கம் முன்னும் பின்னும் நோக்கிச் செல்லுதல் போல, ஒரு நூற்பா முன்னும் பின்னும் உள்ள நூற்பாக்களைத் தழுவுதல் உoச
சினை - சொல்லுக்குறுப்பாகிய எழுத்து ஙசு
சீரகம் - ஒரு நிறை ககக
சூத்திரம் - நூற்பா கூச
சூர் - அச்சம் கoக
செதிள் - மரப்பட்டை கஙிக
செப்பலோசை - வெண்பாவிற் குரிய ஓசை உங
செம்மை - தூர்த்தல், புடமிடும் மருந்தைப் பொதிதல், வயிற்றுப் பொருமல், பைங்கிறைத்து மூட்டுதல் கஅஅ
செய்கை - புணர்ச்சி கஙி
செரு - போர் கஙிஙி
செவிடு - $\frac{1}{5}$ ஆழாக்கு கoக
செற்று - சினந்து, தடித்து, அழித்து உஙo
சென்னி - சோழன், ஒருவனது இயற் பெயருமாம் கஙிo
சே - மரம், காளை கசுஉ
சோ - ஒருவகை அரண் கசுக
சோதி - ஒரு நாள் கஙிக
ஞாயிறு - கதிரவன் உ
ஞெகிழி - கொள்ளிக்கட்டை நங
ஞெமை - ஒரு மரம் கசுள

தகர் - ஆட்டுக்கடா உகக
தசை - சதை கசo
தரங்கம் - அலை ககங
தளா - ஒரு மரம் கசாங
தாது - நீறு, பூந்தாது கஙிசு
தாமம் - மாலை கஙிக
தாமரை - ஒரு பேரெண் உகச
தாய் - தாவி உoஉ
திங்கள் - நிலா உ
திங்கள் - மாதம் அங, கoசு
திட்டாஅத்துக்குளம் - ஓர் ஊர் கசாக
திரும் - திரும்புதல் நஉ
தில்லை - ஒரு செடி கசுசு
தீர்த்தம் - திருநீர் நிலை அ
துலாம் - ஒரு நிறை (100 அல்லது 200 பலம்) கஅங
துவராபதி - துவாரகை கo
துன்னூசி - கலப்பைக்குத்தி, தையலூசி உ
தூக்கு - பாக்களைத் தணித்து நிறுக்குஞ் செய்யுளுறுப்பு கள
தூணி - 4 மரக்கால் கசஅ
தூதுளை - ஒரு செடி கசுசு
தூதை - ஒரு முகத்தலளவு ககக
தூதை - ஒருவகைக் கலம் களச
தூய் - தூவி உoய
தெவ் - பகை நய
தெள்ளு - தெள்ளுப்பூச்சி உஉஉ
தென்புலத்தார் - இறந்த முன்னோர் எ
தேற்றம் - உறுதி, நிச்சயம் கசுஉ
தொடி - ஒரு பலம் கoக, ககக
தோரை - ஒருவகை மலை நெல், மூங்கிலரிசி கஅo
நமை - ஒரு மரம் கசுள
நலிதல் - இடைத்தரமா யொலித்தல் கூக
நாழி - படி ககக
நாள் - உடு, விண்மீன் அஉ
நானம் - வாசனைப் பண்டம், கத்தூரி, புனுகு கசாச
நிக்கந்தக் கோட்டம் - அருகன் கோயில் கூக

நிரைபசை - நிரையசையும் உகர வீறுங்கொண்ட ஈரசைச் சீர் ஐ0
நிலங்கடந்த நெடுமுடியண்ணல் - கண்ணபிரான். க0
நிறை - 100 பலம் ககக
நீட்டும்வழி நீட்டல் - நீட்டல் விகாரம் கஙஉ
நேர்பசை - நேரசையும் உகர வீறுங்கொண்ட ஈரசைச் சீர் ஐ0
படுத்தல் - தாழ்த்தி யொலித்தல் கக
பணி - கட்டளையிடு ககக
பணை - முள்ளில்லா மூங்கில், பருமை கஙஙி
பதக்கு - பத்துப்படி கசஅ
பரசு - கோடரி ஙஎ
பரணி - ஒரு நாள் கஙிக
பலம் - ஒருநிறை ககக
பறைவு - தேய்வு, அழிவு, ஒலிப்பு ககஉ
பற்றுக்கோடு - சார்பு ஙசு
பனை - ஒரு பேரளவு ககக
பன் - பன்னுதல் (கொய்தல் பஞ் செஃகுதல்). ககஙி
பாடு - ஓசை கசுஙி
பாளை - ஒரு முகத்தலளவை, 4 செம்பு (எண்ணெயளவு) ககக
பிடா - ஒரு மரம் கசஙி
பின் - பின்னுதல் ககஙி
பீர் - பீர்க்கு ஐ0ஙி
புகர் - கபிலமாடு, புள்ளிமான் உகக
புழன் கஉங
புழான் - ஓர் இயற் பெயர் ககஎ
புழுக்கல் - புழுங்கலரிசி உகக
புள் - பறவை, பறவையால் அறியும் நிமித்தம் உகள
புறனடை - நூலில் அல்லது நூற்பகுதியில் கூறப்படா தவற்றிற்குக் கூறும் முடிபு ஐ0ஙி
புற்கை - கஞ்சி, கரைத்தகூழ் கசள
புன்கு - புனமுருங்கை உஉஙி
பூணி - ஓர் அளவு கசஅ
பூல் - ஒரு மரம் ஐ0அ
பூழி - புழுதி கஙிசு
பெற்றம் - மாடு, காளை, எருமை கஙச
பெற்றி - தன்மை உஙி
பெயர்ப் பெயர் - தனிச் சொற் பெயர் எஉ
பொருட் புணர்ச்சி - தனித்துவரும் சொற்கள் ஒன்றோடொன்று பொருட் பொருத்தமுறப் புண ரும் புணர்ச்சி. அ0
பொருந் - பொருந்துதல் ஙஉ
பொருந் - பொருந்துதல், பொருநர் குலம். களஙி
போத்து - மாடு, மரை, புலி, புல்வாய் இவற்றின் ஆண் உகக
போழ் - நறுக்கு, துண்டு, கிழிப்பு கசுசு
மகம் - ஒரு நாள் கக0
மண்டை - ஒரு முகத்தலளவை ககக
மா - ஒரு நிறை, 100 குழிநிலம் ககக
மாட்டெறிதல் - ஒன்றன் இலக்க ணத்தை இன்னொன்று தழுவு மாறு மாட்டிக் கூறுதல் கசு
மாட்டேற்றல் - ஒன்றன் இலக்க ணத்தை இன்னொன்றும் தழுவு மாறு மாட்டிக் கூறுதல் உள
மிகை - மிகைபடக் கூறிய பகுதி கக
மிசை - முன்னெழுத்து கஙஉ
மிடறு - தொண்டை உக
முந்திரிகை - $\frac{1}{320}$ உஙக
மூற்கு - குமுறல் (கர்ச்சனை), பல்லி செய்வதுபோல் நாவாற் கொட்டும் ஒலியுமாம். அ
மூங்கா - கீரி கசக
மூலம் - ஒரு நாள் கசுசு
மூலாதாரம் - ஆறாதாரங்களுள் குய்யத்துக்கும் குதத்துக்கும் இடையில் நாலிதழ்த்தாமரை போலுள்ள நரம்புப் பின்னல் சுஎ
மெய்ம்மயக்கம் - மெய் தன்மெய் யோடும் பிற மெய்யோடும் கூடி நிற்றல். உஅ
மென்கணம் - மெல்லினம் கூஅ
மொழி மாற்று - செய்யுளின் ஓரடி யிலுள்ள சொற்கள் முறைமாறி நிற்றல் எஙி
யா - ஒரு மரம் கசஙி

வங்கா - வளைந்த தாரை அல்லது ஊது கொம்பு கசக
வட்டி - 1 படி ககக
வரட்டாடு - வறட்டாடு (பால் கற வாத ஆடு) உஉக
வருட - தடவ சுச
வரை - ஆட்காட்டி விரற் கணு விடை ககக
வரைநிலை - விலக்கும்நிலை அங
வல் - ஒரு வகைத் தாய விளையாட்டு, சூதாடு கருவி உ.0எ
வழை - சுரபுன்னை கசுஎ
வளி - காற்று கசஉ
வளி - காற்று, மூச்சு உக
வள் - வார், கூர்மை உகஎ
வன்கணம் - வல்லினம் கூஅ
விகற்பித்தல் - உறழ்தல், பெருக்கல் எஙூ
விசும்பு - வெளி அ
விச்சாவாதி - வித்தையால் திறமையாக வாதிப்பவன் கசுக
விரவுப் பெயர் - இருதிணைப் பொதுப் பெயர் கூக
விலங்கு - எழுத்தோடு சேர்த் தெழுதப்படும் வளைவு உஅ
வீழ் - சீழ்க்கை அ
வெதிர் - மூங்கில் க0
வெரிந் - முதுகு களங, களச
வெள்ளம் - ஒரு பேரெண் உகச
வேட்கை - விருப்பம் கசுஅ

பின்னிணைப்பு

உ. குற்றியலுகரம் உயிரீறே

(புலவர் ஞா. தேவநேயனார் B.O.L.)

"எழுத்தெனப்படுப,
அகரமுதல் னகர இறுவாய்
முப்பஃதென்ப;
சார்த்துவரல் மரபின் மூன்றலங் கடையே." (தொல. 1)

"அவைதாம்
குற்றியலிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற் புள்ளியும் எழுத்தோரன்ன." (தொல். 2)

என்றார் தொல்காப்பியர்.

இரண்டாம் நூற்பாவில், குற்றியலிகரமும் குற்றியலுகரமும் ஆய்தம் என்ற முப்பாற்புள்ளியும் எனப் பிரித்துக் கூறுது "குற்றியலிகரம் குற்றிய லுகரம் ஆய்தம் என்ற முப்பாற்புள்ளியும்" என்று 'முப்பாற் புள்ளி' என்பது மூவெழுத்தையும் பொதுப்படத் தழுவுமாறு உம்மைத் தொகையாய்ச் சேர்த்துக் கூறியிருத்தலின், குற்றியலிகர குற்றியலுகரங்களும் ஆய்தம்போலப் பண்டைக்காலத்திற் புள்ளிபெற்றன என்பதுணரப்படும்.

நூற்பாவில் 'முப்பாற்புள்ளி' யென்பது, புள்ளிபெற்ற மூவெழுத்துக் களையும் முப்புள்ளி வடிவான ஆய்தத்தையும் ஒருங்கே குறிப்பது "ஆமா கோனவ் வணையவும் பெறுமே" என்னும் நன்னூல் நூற்பாவின் 'ஆமா' என்பது போன்ற இரட்டுறலாகும்.

தொல்காப்பிய மரபியல் நூற்பா ககo-ல், 'வாராததனுன் வந்தது முடித்தல்' என்னும் உத்தியுரையில்,

"குற்றிய லிகரத்தைப் புள்ளி யென்றலும் ஆட்சியுங் குறியீடும் ஒருங்கு நிகழ்ந்தனவாகலின் அவையும் இனி வாராமையான் வந்துழி வந்துழி அவ்வாறு ஆண்டானென்பது. இனிப் புள்ளியென மேல் ஆள வாராததனைப் புள்ளி யென்று ஆள்வனவற்றோடு மயக்கங் கூறுதலென்பது, 'அவைதாங் குற்றிய லிகரங் குற்றிய லுகர - மாய்தமென்ற - மூற்பாற் புள்ளியு மெழுத்தோரன்ன (தொல் - எழுத் - நூன் 2) என்புழிக் குற்றியலிகரம் புள்ளியென்று யாண்டும் ஆள வாராமையானும் அதுதான் அவ்வழி வரவேண்டுதலானும் அங்ஙனம் **புள்ளியென்று ஆளவருங் குற்றுகரத்தோடும் ஆய்தத்தோடும் உடன் கூறுத** லாயிற்று; இங்ஙனம் உடன் கூறுக்காற் புள்ளியுங் குற்றிகரமுமெனச் சூத் திரம் பெறுதல் வேண்டுவதாவான் செல்லுமென்பது." என்றுரைத்தார் பேரா சிரியர்.

சிவஞான முனிவர் தம் **தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தியில்,**

"ஒரு மொழியைச் சார்ந்துவரு மியல்பன்றித் தனித்தியங்கு மியல்பு தமக் **கிலவென்றலின்,** அவை தம்மையே யெடுத்தோதிக் காட்டலாகாமையின், வருஞ் சூத்திரத்தான் அவற்றிற்கு வேறுவேறு பெயரிட்டு 'அவைதாங் - குற்றிய லிகரங் குற்றியலுகர - மாய்தம்' என்றும், **அம் மூன்றும் புள்ளி பெறு தல் பற்றிப் பொதுப்பெயராக** 'முப்பாற்புள்ளியும்' என்றும், அவை தனித்

தெழுதப்படாவாயினும் மொழியொடு சார்த்தி யெழுதப்படுதலின் எழுத்தென்னுங் குறியீட்டிற்குரிய வென்பார் 'எழுத்தோரன்ன' என்றும் ஓதினார்." என்றார்.

நச்சினார்க்கினியரும், "அவைதாம்.....எழுத்தோரன்ன" என்னும் சார் பெழுத்து நூற்பாவுரையின் இடையில்,

"ஆய்தமென்ற ஓசைதான் அடுப்புக்கூட்டுப்போல மூன்றுபுள்ளி வடிவிற் றென்பது உணர்த்தற்கு ஆய்தமென்ற முப்பாற்புள்ளியுமென்றார். அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டெழுதுப. இதற்கு வடிவுகூறினார், எனை யொற்றுக்கள்போல உயிரேறாது ஓசை விகாரமாய் நிற்பதொன்றுகலின். எழுத்தியல் தழா ஓசைகள்போலக்கொள்ளினுங் கொள்ளற்க என்றற்கு எழுத்தோரன்ன மென்றார். இதனைப் புள்ளிவடிவிற்றெனவே எனை யெழுத்துக்களெல்லாம் வரிவடிவினவாதல் பெற்றும்." என்று கூறினாரேனும், தொடக்கத்தில்,

"அவைதாம் - மேற்சார்ந்து வருமெனப்பட்டவைதாம், குற்றியலிகரங் குற்றியலுகரம் ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் - குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஆய்தமுமென்று சொல்லப்பட்ட மூன்று கூற்றதாகிய புள்ளி வடிவுமாம்; எழுத்தோரன்ன - அவையும் முற்கூறிய முப்பதெழுத்தோடு ஒருதன்மையாய் வழங்கும் என்றவாறு." என்று மூவெழுத்தும் புள்ளி பெறுமென ஒருதன்மைப்படவே உரைத்தார்.

மயிலைநாதர், "தொல்லெவடிவின" என்னும் நன்னூல் நூற்பாவுரையில்,

"ஆண்டு' என்ற மிகையானே, தாது, எது என்றற்றொடக்கத்து ஆரிய மொழிகளும், எட்டு, கொட்டு என்றற்றொடக்கத்துப் பொது மொழிகளும், குன்றியாது, நாடியாது, எட்டியாண்டுளது என்றற்றொடக்கத்துப் புணர்மொழிப் பொருள்வேறுபாடுகளும், அறிதற்பொருட்டுக் குற்றுகரக் குற்றிகரங்களுக்கு மேற் புள்ளிகொடுப்பாரும் உளரெனக் கொள்க." என்று உரைத்தனர்.

"குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் புள்ளி பெற்று நிற்கும்; என்னை?

'குற்றிய லிகரமுங் குற்றிய லுகரமு
மற்றவை தாமே புள்ளி பெறுமே'

என்பது சங்கயாப்பாகலின்," என்பது யாப்பருங் கலவிருத்தி (பக்கம். 27).

மேற்கூறியவற்றுள், குற்றியலிகர குற்றியலுகரங்கள் பண்டைக்காலத்தில் புள்ளியிட்டெழுதப்பட்டன வென்றும், அங்ஙனம் எழுதினது அவற்றின் ஒலிக்குறுக்கத்தையும் 'நாடியாது' 'எட்டியாண்டு' முதலிய புணர்மொழிப் பொருள் வேறுபாட்டையும் காட்டற்கு என்றும் அறியப்படும்.

'நாடியாது' 'எட்டியாண்டு' என்பன, நாடி யாது, எட்டி ஆண்டு, என்றும் பொருள்படுமாதலின், அவை நாடு + யாது, எட்டு + யாண்டு என்னும் புணர்மொழிகள் என்று காட்டற்குக் குற்றியலிகரத்தின் மேற் புள்ளியிடப் பட்டதென்க.

குற்றுகரத்தை மேற் சுன்னமிட்டுக் காட்டுவது இன்றும் மலையாள (சேர) நாட்டு வழக்கம். குற்றிகர குற்றுகரங்கள் புள்ளி பெறுமென்று நன்னூலில் கூறப்படாமையால், 12-ம் நூற்றாண்டிற்கு முன்பே இவ்வழக்கு சோழபாண்டிய

நாடுகளில் ஒழிந்தது என்பதை அறியலாம். எகர ஏகாரங்கட்கும் ஒகர ஓகாரங் கட்கும் அவை சேர்ந்துள்ள உயிர்மெய்கட்கும் வரிவேறுபாடு தொல்காப்பியத்தி லேயே கூறப்பட்டிருப்பினும், 17-ம் நூற்றாண்டில் அவ்வெழுத்துக்கள் குறில் நெடில் வேறுபாடின்றி எழுதப்பட்டாற்போல குற்றியலுகரமும் வேறுபா டின்றி யெழுதப்பட்டதென்க.

ஒரு பொருள் குறுகின் அப்பொருளேயன்றி வேறு பொருளாகாது; அதன் குறுக்கம் அளவு வேறுபாடேயன்றிப் பொருள் வேறுபாடன்று. அது போல், குற்றியலுகரமும் முற்றியலுகரம் போல உயிரேயன்றி மெய்யாகாது. இதனாலேயே,

"இகர உகரங் குறுகினின்றன, விகாரவகையாற் புணர்ச்சி வேறுபடு தலின், இவற்றை இங்ஙனங் குறியிட்டாளுதல் எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது. சந்தனக்கோல் குறுகினும் பிரப்பங்கோலாகாது. அதுபோல உயிரது குறுக்க மும் உயிரேயாம். இவற்றைப் புணர்ச்சி வேற்றுமையும் பொருள் வேற்று மையும் பற்றி வேரோர் எழுத்தாக வேண்டினார்." என்றார் நச்சினார்க்கினியரும். பொருள் வேற்றுமை யென்றது, பண்டைக்காலத்தில் கட்டு கொட்டு முதலிய சொற்கள் எவல் வினையாம்போது முற்றுகர வீறும் முதனிலைத் தொழிற் பெயராம்போது குற்றுகரவீறும் ஒலிக்கப்பட்டமை நோக்கி. "தருக்கு அணுக்கு என்பன வினைக்கண் வந்த முற்றுகரம்." (தொல். 36, உரை). "காது கட்டு கத்து முருக்கு தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமு மாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற்போல" (தொல். 68, உரை) என்று நச்சினார்க்கினியர் கூறுதல் காண்க. தொல்காப்பியர், தம் காலத்தில் குற்றுகர மும் மெய்போலப் புள்ளி பெற்றதினாலேயே, புணரியலில்,

"மெய்யீ றெல்லாம் புள்ளியொடு நிலையல்," (தொல். 104)

"குற்றிய லுகரமும் அற்றென மொழிப." (தொல். 105)

என்று மாட்டேற்றிக் கூறினார்.

இம்மாட்டேற்றைக் கவனியாது, "குற்றிய.....மொழிப," என்னும் நூற் பாவிற்கு "ஈற்றிற் குற்றிய லுகரமும் (புள்ளியீறுபோல உயிரேற இடம் கொடுக்கும்) அத்தன்மைத்து என்று சொல்லுவர்." என்று இளம் பூரண ரும், "ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளியீறுபோல உயிரேற இடங்கொடுக்கு மென்று கூறுவர் புலவர்." என்று நச்சினார்க்கினியரும் உரைகூறுவது பொருந்தாது. 'அற்றென மொழிப' என்னும் மாட்டேறு "புள்ளியொடு நிலையல்" என்பதையே தழுவுமாதலின் இவ்விருவரும் இங்ஙனம் உரைத் தற்கு, இவர் காலத்திற்குமுன்பே குற்றியலுகரம் புள்ளிபெறும் வழக்கு வீழ்ந்த மையே காரணமாகும். இவர் கூறிய உரை இங்குப் பொருந்துமாயின், தொல்காப்பியர் நூன்மரபில்,

"மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்" (தொல். 15)

"எகர ஒகரத் தியற்கையும் அற்றே" (தொல். 16)

என்று கூறியவிடத்தும் பொருந்தவேண்டும்.

எகர ஒகரம் புள்ளியீறு போல உயிரேற இடங்கொடுத்த லின்மையானும், "எகர.....அற்றே" என்னும் நூற்பாவிற்கு, "எகர ஒகரங்களது இயல்பும்

அவ்வாறு புள்ளி பெறும் இயல்பிற்று," என்று இளம்பூரணரும், "எகர ஒகரங்களினது நிலையும் மெய்போலப் புள்ளி பெறும் இயல்பிற்று," என்று நச்சினார்க்கினியரும் உரை கூறுவதானும், "குற்றிய ..... மொழிப" என்னும் நூற்பாவிற்கும் குற்றுகரமும் மெய்போலப் புள்ளி பெறும் என்பதே உரையாகக் கோடல் பொருத்தமாம்.

இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும், ஈற்றுக் குற்றியலுகரமும் புள்ளி யீறுபோல உயிரேற இடங்கொடுக்கு மென்று உரைத்தவிடத்தும், மாத்திரைக் குறுக்கத்தால் அங்ஙனம் இடங்கொடுக்குமென்னும் கருத்தினரே யன்றி மெய் யீறு யிருத்தலால் இடங்கொடுக்கும் என்னுங் கருத்தினரல்லர். "குற்றுகரத் திற்கு முன்னர் வந்த உயிரேறி முடிய அரை மாத்திரையாய் நிற்றலும், முற் றுகரத்திற்கு முன்னர் வந்த உயிரேறி முடியாமையுந் தம்முள் வேற்றுமை," (தொல். 36, உரை) என்று நச்சினார்க்கினியர் கூறுதல் காண்க.

இனி, தொல்காப்பியர் கருத்தை நோக்கின், அவர் குற்றியலுகரத்தை மெய்யீறென்று கொண்டார் என்று கொள்ளுதற்கு எள்ளளவும் இடமில்லை. அவர்,

"குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கின்
முற்றிய நகரமிசை நகரமொடு முதலும்.

(தொல். 67.)

எனக் குற்றியலுகரம் மொழிமுதல் வருமென்றும் கூறினர். நுந்தை என்னும் சொல்லின் முதலில் (தொல்காப்பியர் கருத்தின்படி) உள்ள குற்றியலுகரம் மெய்யீறாயின், அச்சொல் நுந்தை என்று எழுதப்படல் வேண்டும். அங்ஙன மெழுதப்படாமையும், குற்றியலுகரத்தைத் தொல்காப்பியர் மெய்யென்று கொண்டிருப்பாராயின், அது,

"பன்னீ ருயிரும் மொழிமுத லாகும்."

(தொல். 59)

"உயிர்மெய் அல்லன மொழிமுத லாகா."

(தொல். 60)

என்று அவர் கூறியவற்றோடு முரணுதலும் நோக்குக.

மேலும், ஒரே யுகரம் ஓரிடத்துக் குற்றுகரமாகவும் ஓரிடத்து முற்றுகர மாகவும் ஒலிக்கப்படும். அங்ஙனம் ஒலிக்கப்படுவதற்குள், சிலவற்றிற்குக் குற்றுகர முற்றுகரப் பொருள் வேறுபாடுண்டு, சிலவற்றிற்கில்லை.

"முற்றிய லுகரமொடு பொருள்வேறு படாஅ
தப்பெயர் மருங்கின் நிலையிய லான"

(தொல். 68)

என்னும் நூற்பாவையும், அதன் உரையில்,

"காது கட்டுகத்து முருக்கு தெருட்டு என்பன முற்றுகரமும் குற்றுகரமு மாய்ப் பொருள் வேறுபட்டு நின்றாற்போல, நுந்தை யென்று இதழ் குவித்து முற்றுக் கூறியவிடத்தும் இதழ் குவியாமற் குறையக் கூறியவிடத்தும் ஒரு பொருளே தந்தவாறு காண்க. நுந்தா யென்பதோ வெனின், அஃது இதழ் குவித்தே கூறவேண்டுதலிற் குற்றுகரமன்று. இயலென்றதனுள் இடமும்

பற்றுக்கோடும் இரண்டிற்கும் வேறுபாடின்றென்று கொள்க." என்று நச்சினார்க்கினியர் உரைத்திருப்பதையும் நோக்குக. இதனால், குற்றியலுகரம் மெய்யீறாயின் முற்றியலுகரமும் மெய்யீறாய் உகரம் என்னும் உயிரே தமிழுக் கில்லை யென்று பெறப்படுதலும் அங்ஙனமின்மையும் அறிக.

செய்யுளியலில், இருவகை யுகரமு மொன்றாகக் கொண்டே,

"இருவகை யுகரமோ டியைந்தவை வரினே
நேர்பு நிரைபு மாகு மென்ப."

(தொல். செய். 4)

என்றார் தொல்காப்பியர்.

இதன் உரையில், "இருவகை யுகர மென்பன, குற்றுகர முற்றுகரங் கள். அவற்றோடு மேற்கூறிய நேரசையும் நிரையசையும் ஒருசொல்விழுக் காடுபட இயைந்துவரின் நிறுத்த முறையானே நேரசையோ டொன்றிவந்த குற்றுகரமும் அதனோடு ஒன்றிவந்த முற்றுகரமும் நேர்பசை யெனப்படும்; நிரைபசையோ டொன்றிவந்த குற்றுகரமும் அதனோடொன்றிவந்த முற்றுக ரமும் நிரைபசை எனப்படும் என்றவாறு.....

"முன்னர் நேரசை நான்கும் நிரையசை நான்குமென எண் வகையான் அசைகூறி அவற்றுப்பின் இருவகை யுகரமும் வருமெனவே, அவை குற்று கரத்தோடு எட்டும் முற்றுகரத்தோடு எட்டுமாகப் பதினாறு உதாரணப் பகுதிய வாய்ச் சென்றதேனும், அவற்றுட் குற்றெழுத்துப் பின் வரும்உகரம் நேர்பசை யாகா தென்பது 'குறிலிணை யுகர மல்வழி யான' (தொல். செய். 5) என் புழிச் சொல்லுதும்; ஒழிந்தன குற்றுகர நேர்பசை மூன்றும் நிரைபசை நான்கு மாயின. உதாரணம்: வண்டு, நாகு, காம்பு; வரகு, குரங்கு, மலாடு மலாட்டு; இவை குற்றுகரம் அடுத்து நேர்பும் நிரைபும் வந்தவாறு" என்று உரைத்தார் பேராசிரியர். இதனால், குற்றுகரமும் முற்றுகரம்போல அலகு பெறுமென்றும் அசைக் குறுப்பாமென்றும் அறியப்படும்.

சொற்கள் இலக்கண முறையிலும் இலக்கிய முறையிலும் பலவகையாகத் திரிந்து, முன்பு முற்றுகரவீறு யிருந்தவை அல்லது உகரமல்லாத ஈறு யிருந் தவை பின்பு குற்றுகரவீறுகின்றன. அவ்வகைகளாவன :—

க **தொழிற்பெயர்** : - முதனிலைதிரிந்த தொழிற் பெயர் :—எ - டு : படு - பாடு, சுடு - சூடு.

விகுதிபெற்ற தொழிற் பெயர் :— எ - டு : படி + பு = படிப்பு, முடி + சு = முடிச்சு.

உ **வேற்றுமைப் பெயர்** :—எ - டு : யான் + கு = எனக்கு, அவர் + கு = அவர்க்கு.

ஊ **குறிப்புவினை முற்று**:—எ - டு : தாள் + து = தாட்டு, கண் + து = கட்டு, பால் + து = பாற்று, அன் + து = அற்று.

ச **பிறவினை** :—எ - டு : படு + து = படுத்து, நட + து = நடத்து, வாழ் + து = வாழ்த்து, பாய் + சு = பாய்ச்சு.

ஞ **போலி** :—எ - டு : அடைவு - அடவு - அடகு.

சொல் விளக்கம் :— எ - டு : திரும் - திரும்பு, பொருந் - பொருந்து, உரிஞ் - உரிஞ்சு, உடன் (உடல்) - உடம் - உடம்பு, பண் - பாண் - பாடு, குள் - கொள் - கோள் - கோண் - கோடு, ஒளி - ஒளிர் - ஒளிறு, போ - போது.

மேற்காட்டிய பாடு படிப்பு எனக்கு தாட்டு படித்து முதலிய சொற்கள், குற்றுகர வீற்றை மெய்யீறாகக் கொள்ளின், முறையே பாட் படிப்ப் எனக்க் தாட்ட் படித்த் என்ற முதல் வடிவங்களினின்று தோன்றின வாகவன்றே கொள்ளல் வேண்டும்! இது எத்துணைப் பேதைமை யாகும்! மேலும், ஆட்டு பாட்டு கலக்கு விளக்கு முதலிய பிறவினைகளும் தொழிற் பெயர்களும் முதனிலையீற்று வலியிரட்டியும் முதனிலை யிடைமெலி வலித்தும் முறையே ஆடி பாடி கலங்கு விளங்கு என்னுஞ் சொற்களினின்று திரிந்திருக்கவும், அவற்றை ஆட்ட் பாட்ட் கலக்க் விளக்க் என்னும் வடிவங் களினின்று பிறந்தனவாகக் கொள்ளல் இளஞ்சிறாரும் எள்ளிநகையாடத் தக்க தொன்றன்றே? ஒரு சில ஒலியடிச் சொற்களொழிந்த எல்லாச் சொற்களும் ஓரசையான வேர்ச் சொற்களினின்றே பிறந்தன வாதலின், குற்றிய லுக ரத்தை மெய்யீறாகக் கொள்வாரெல்லாம் சொற்பிறப்பியலை எட்டுணையும் தாமறியாதிருத்தலை முற்றுறக் காட்டுபவரே யாவர்.

குற்றுகரவீறு மெய்யீறுயின், அறுவகைக் குற்றியலுகரத் தொடர்களும் வல்லின மெய்யீற்றனவாதல் வேண்டும்.

"ஞணநம னயரல வழள என்னும்
அப்பதி னெஞ்றே புள்ளி யிறுதி." (தொல். 78)

என்று தொல்காப்பியர் பிரிநிலையேகாரங் கொடுத்துக் கூறினமையாலும், குற் றுகரவீறு தமிழ்ச்சொல்லில் ஓரிடத்தும் மெய்யீறாக எழுதப்படாமையாலும், அஃ துண்மையன்மை வெள்ளிடை மலை.

கண் + யாது = கண்ணியாது என்பது போன்றே சுக்கு + யாது = சுக்கி யாது என்று குற்றுகரமும் புணர்வதால், குற்றியலுகரத்தை மெய்யீறாகக் கொள்ளலாமே யெனின், கதவு + யாது = கதவியாது என்று முற்றுகரமும் அங்ஙனம் புணர்வதால் அதுவும் மெய்யீறாகக் கொள்ளப்பட்டு உகரவுயிரே தமிழுக்கில்லையென்றாகும் என்று கூறிவிடுக்க. தொல்காப்பியர் மொழிமரபில்,

"உச்ச காரம் இருமொழிக் குரித்தே."
"உப்பகாரம் ஒன்றென மொழிப." (தொல். 75, 76.)

என்று வரையறுத்தது உசு முசு தபு என்னும் மூன்று முற்றுகரவீற்றுச் சொற் களேயே யன்றிக் குற்றுகரவீற்றுச் சொற்களையன்று. சு, பு, என்னும் இரு முற் றுகர ஈறுகளைக்கொண்ட சொற்கள் எத்தனையென்று வரையறுப்பதே மேற்கூறிய நூற்பாக்களின் நோக்கம். கு, டு, து, று என்னும் நான்கு முற் றுகரவீற்றுச் சொற்களும் அறுவகைக் குற்றுகர வீற்றுச் சொற்களும் அளவிறந்தன வாதலின், அவற்றை வரையறுத்திலர் தொல்காப்பி யர். இகு உகு செகு தகு தொகு நகு நெகு பகு புகு மிகு வகு விகு எனக் குகரவீறும், அடு இடு உடு எடு ஒடு கடு கெடு கொடு சுடு தடு தொடு நடு நெடு நொடு படு பிடு மடு வடு விடு என டுகரவீறும் கொண்ட முற்றுகர வீற் றுச் சொற்கள் பெருந்தொகையினவாயும் எண் வரம்பு படாதனவாயு மிருத் தல் காண்க. பிற முற்றுகர வீற்றுச் சொற்களும் இங்ஙனமே. குற்றுகர

வீற்றுச் சொற்களோ வெனின், அகராதிகளாலும் வரையறுக்கப்படாத பல் லாயிரக் கணக்கின.

மேற்கூறிய நூற்பாக்களின் உரையில்,

"உகாரத்தோடு கூடிய சகாரம் இரண்டுமொழிக்கே ஈறும் என்றவாறு,"

"எ - டு: உசு, இஃது உளுவின் பெயர். முசு, இது குரங்கினுள் ஒரு சாதி. பசு என்பதோவெனின், அஃது ஆரியச் சிதைவு. கச்சு குச்சு என்றுற் போல்வன குற்றுகரம். உகரம் ஏறிய சகரம் இருமொழிக்கு ஈறுமெனவே ஏனை உயிர்கள் ஏறிய சகரம் பன்மொழிக்கு ஈறுமாயிற்று." (தொல். 75, உரை) என்றும்,

"உகரத்தோடு கூடிய பகரம் ஒருமொழிக்கல்லது பன்மொழிக்கு ஈறுகா தென்று கூறுவர் புலவர்."

"எ. டு: தபு எனவரும்.....உப்பு கப்பு என்றுற் போல்வன குற்றுகரம், உகரத்தோடுகூடிய பகரம் ஒன்றெனவே ஏனையுயிர்களோடுகூடிய பகரம் பன் மொழிக்கு ஈறுப்ப் பல பொருள் தருமென்றாயிற்று." (தொல். 76, உரை) என்றும் நச்சினார்க்கினியர் கூறியிருத்தலே நோக்குக.

இதுகாறுங் கூறியவற்றால், குற்றியலுகரம் உயிரீறே யென்றும், தொல் காப்பியர் ஓரிடத்தும் குற்றியலுகரத்தை மெய்யீறாகக் கொண்டிலரென் றும், இயற்கையும் எளிமையும் தனிமையும் தாய்மையும் சான்ற தமிழியல்பை யறியாத ஆரியவழியலாரே தம் மொழியைப் போன்றே தமிழும் ஆரிய வழித் தென்று மயங்கி, தமிழை வடமொழி வழித்தாகக் காட்டக் கருதி அதற்கு முதற்படியாகக் குற்றுகரவீற்றை மெய்யீறாகக் கூறி யிடர்ப்பட்டுப் பின்பு அவ் விடர்ப்பாட்டினின்று நீங்கப் பண்டைத் தமிழ்ச்சொற்கள் வல்லின மெய்யி லும் இற்றன வென்றும், வலியிரட்டல் என ஒரு திரிவு முறையும் அரவு என ஒரு தொழிற்பெயர் விகுதியும் இல்லையென்றும், சொல்லியல் நூலுக்கும் மொழி நூலுக்கும் முற்றும் மாறுகத் தத்தம் உளந்திரிந்தவாறே உரைப்ப தென்றும் தெற்றெனத் தெரிந்துகொள்க.

நச்சினார்க்கினியர் இளம்பூரணரோடு மாறுபடும் இடங்கள்.

---

1. சிறப்புப்பாயிரம்

வட வேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்.

இளம்பூரணர் :

(இ - ள்.) வட வேங்கடம் தென்குமரி அ இடைத் தமிழ் கூறும் நல் உலகத்து வழக்கும் செய்யுளும் அ இரு முதலின் - வடக்கின்கண் ணுளதாகிய வேங்கடமும தெற்கின்கண் ணுள தாகிய குமரியுமாகிய அவற்றை எல்லையாக வுடைய நிலந்து வழங்கும் தமிழ்மொழியினைக் கூறும் நன்மக்களான் வழங்கும் வழக்கும செய்யுளுமாகிய இரு காரணத்தானும்.

நச்சினார்க்கினியர் :

வட வேங்கடந் தென்குமரி ஆயிடை - வடக்கின்கண் வேங் கடமுந் தெற்கின்கட் குமரியுமாகிய அவ்விரண்டெல்லைக்குள் ளிருந்து, தமிழ்கூறும் நல உலகத்து வழக்குஞ் செய்யுளும் ஆ இரு முதலின் - தமிழைச் சொல்லும் நல்லாசிரியரது வழக்குஞ் செய் யுளுமாகிய அவ்விரண்டையும் அடியாகக் கொள்ளுகையினாலே.

2. நூற்பா ௨௨

அம்மூ வாறும் வழங்கியன் மருங்கின்
மெய்ம்மயக் குடனிலை தெரியுங் காலை.

இளம் :

இது, தனிமெய் மயக்கத்திற்குப் பெயரும் முறையும் தொகை யும் உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) அ மூ ஆறும் - மேற் சொல்லப்பட்ட (மூவாறு) பதினெட்டு மெய்யும், வழங்கு இயல் மருங்கின் - தம்மை மொழிப் படுத்தி வழங்கும் இயல்பு உளதாமிடத்து, மெய் மயக்கு - மெய் மயக்கம் என்றும், உடன் நிலை - உடனிலை மயக்கம் என்றும் இரு வகைய, தெரியும் காலை - (அவை மயங்கு முறைமை) ஆராயும் காலத்து.

நச்:

இது தனிமெய் பிறமெய்யோடுந் தன் மெய்யோடும் மயங்கும் மயக்கமும் உயிர்மெய் உயிர்மெய்யோடுந் தனிமெய்யோடும் மயங்கும் மயக்கமும் கூறுகின்றது.

(இ - ள்.) அம்மூவாறும் - அங்ஙனம் மூன்று கூறுகப் பகுத்த பதினெட்டு மெய்யும், வழங்கியல் மருங்கின் - வழக்கிடத்துஞ் செய்யுளிடத்தும் எழுத்துக்களைக் கூட்டி மொழிபபடுத்த வழங்குதல் உளதாமிடத்து, மெய் மயங்கும் நிலை - தனிமெய் தன் முன்னர் நின்ற பிறமெய்யோடுந் தன்மெய்யோடும் மயங்கும் நிலையும், உடன் மயங்கும் நிலை - அப்பதினெட்டுமெ உயிருடனே நின்று தன்முன்னர் நின்ற உயிர்மெய்யோடுந் தனிமெய்யோடும் மயங்கும் நிலையுமென இரண்டாம், தெரியுங்காலை - அவை மயங்கும் மொழியாந் தன்மை ஆராயுங்காலத்து எ - று.

3. உ

ஞநமவ வென்னும் புள்ளி முன்னர்
யஃகா னிற்றன் மெய்பெற் றன்றே.

இளம்:

இது, மெய்மயக்கம் ஆமாறு உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) ஞநமவ என்னும் புள்ளி முன்னர் - ஞநமவ என்று சொல்லப்படுகின்ற புள்ளிகளின் முன்னர், யஃகான் நிற்றல் மெய் பெற்றன்று - யகரம் மயங்கி நிற்றல் பொருண்மை பெற்றது ஏகாரம் ஈற்றசை.

எ - டு: உரிஞ்யாது, பொருந்யாது, திரும்யாது, தெவ்யாது எனவரும்.

நச்: (பக். ஙஉ)

இங்ஙனம் ஆசிரியர் சூத்திரஞ் செய்தலின் அக்காலத்து ஒரு மொழியாக வழங்கிய சொற்கள் உளவென்பது பெற்றும். அவை இக்காலத்து இறந்தன.

இனி உரையாசிரியர் உரிஞ்யாது பொருந்யாது திரும்யாது தெவ்யாது என இருமொழிக்கண் வருவன உதாரணமாகக் காட்டினாரா லெனின், ஆசிரியர் ஒரு மொழியாமாறு ஈண்டுக் கூறி, இரு மொழி புணர்த்தற்குப் புணரியலென்று வேறோர் இயலுங்கூறி, அதன்கண் 'மெய்யிறு சொன்முன் மெய் வரு வழியும்' என்று கூறினார். கூறியவழிப் பின்னும் 'உகரமொடு புணரும் புள்ளியிறுதி' என்றும் பிறண்டும் ஈறுகடோறும் எடுத்தோதிப் புணர்ப்பர். ஆதலின் ஈண்டு இருமொழிப் புணர்ச்சி காட்டிற் கூறியது கூற லென்னுங் குற்றமாம். அதனால் ஈவை காட்டுதல் பொருந்தாமை உணர்க.

4. ந.சே

குற்றிய லிகர நிற்றல் வேண்டும்
யாவென் சினைமிசை யுரையசைக் கிளவிக்
காவயின் வருஉ மகர மூர்ந்தே.

இளம்:

(இ - ள்.) குற்றியலிகரம் - ஒரு மொழிக் குற்றியலிகரம், உரையசைக் கிளவிக்கு - உரையசைச் சொல்லாகிய மியா என் முதற்கு, ஆவயின் வருஉம் - (சினையாக) அச்சொற்றன்னிடத்து வருகின்ற, யாஎன் சினைமிசை - யா என் சினைமிசை, மகரம் ஊர்ந்து நிற்றல் வேண்டும் - மகர ஒற்றினை ஊர்ந்து நிற்றலை வேண்டும் (ஆசிரியன்.)

எ - டு: கேண்மியா எனவரும். மியா என்னும் சொல்இடம். மகரம் பற்றுக்கோடு. யாஎன்னும் சினையும் மகரம்போலக் குறுகுதற்கு ஒரு சார்பு.

நச்:

(இ - ள்.) உரையசைக் கிளவிக்கு வருஉம் - தான் கூறும் பொருளைக் கோடற்கு ஒருவனை எதிர்முகமாக்கும் சொல்லிற்குப் பொருந்தவரும், ஆவயின் - அம் மியாவென்னும் இடைச்சொல்லைச் சொல்லுமிடத்து, யாவென் சினைமிசை மகரம் ஊர்ந்து - யாவென்னும உறுப்பின் மேலதாய் முதலாய் நின்ற மகரவொற்றினை யேறி, குற்றியலிகரம் நிற்றல் வேண்டும் - குற்றியலிகரம் நிற்றலை விரும்பும் ஆசிரியன் எ-று.

எ - டு: கேண்மியா சென்மியா எனவரும். கேளென்றது உரையசைக் கிளவி; அதனைச் சார்ந்து தனக்கு இயல்பின்றி நின்றது மியா வென்னும் இடைச்சொல். அவ்விடைச்சொல் முதலும் அதனிற் பிரியும் யா அதற்கு உறுப்பு மாமென்று கருதி யாவென் சினை என்றார். மியா இடம்; மகரம் பற்றுக்கோடு. யாவும் இகரம் அரைமாத்திரை யாதற்குச் சார்பு.

5. சா

உருவினு மிசையினு மருகித் தோன்று
மொழிக்குறிப் பெல்லா மெழுத்தி னியலா
ஆய்த மஃகாக் காலை யான.

இளம்:

(இ - ள்.) உருவினும் - ஒரு பொருளினது உருவத்தின்கண்ணும், இசையினும் - ஓசையின் கண்ணும், அருகித் தோன்றும் - சிறுபான்மையாய்த் தோன்றும், குறிப்பு மொழி யெல்லாம் - குறிப்பு மொழிகளெல்லாம், எழுத்தின் இயலா - ஆய்த எழுத்தானிட்டு எழுதப்பட்டு நடவா. (அஃது எக்காலத்துமோ வெனின், அன்று.) ஆய்தம் அஃகா காலையான - அவ்வாய்தம் தன் அரை

மாத்திரை அளபாய்ச் சுருங்கி நில்லாது (அவ்வுருவும் இசையது மிகுதியும் உணர்த்துதற்கு) நீண்ட காலத்து அங்நீட்சிக்கு.

எ - டு: 'கஃறென்றது' என்பது உருவு. 'சுஃறென்றது' என்பது இசை.

நச்:

(இ - ள்.) உருவினும் இசையினும் அருகித் தோன்றும் குறிப்பு மொழியும் - நிறத்தின்கண்ணும் ஓசையின்கண்ணும் சிறுபான்மை ஆய்தந்தோன்றும் பொருள் குறித்தலையுடைய சொல்லும், எல்லா மொழியும் - அவை யொழிந்த எல்லா மொழிகளும், எழுத்தினியலா - ஒற்றெழுத்துக்கள் போல அரை மாத்திரையின் கண்ணும் சிறுபான்மை மிக்கும் நடந்து, ஆய்தம் அஃகாக் காலையான - ஆய்தஞ் சுருங்காத இடத்தான சொற்களாம் எ - று.

எனவே,.....பெற்றும்.
எழுத்தினென்ற.....வினையெச்சம்.

இவ்வாறன்றி இக்குறிப்புச் சொற்கள் ஆய்தம் இரண்டிடட்டு எழுதப்படாவென்று பொருள்கூறிற் செய்யுளியலோடு மாறுபட்டு மாறுகொளக் கூறலென்னுங் குற்றந்தங்குமென்று உணர்க.

6. சூ

ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி
இரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட
மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே.

இளம்:

எ - டு: ஆ - ஓரெழுத் தொருமொழி
மணி - ஈரெழுத் ,,
வரகு, கொற்றன் - மூவெழுத் ,,

நச்:

எ - டு: ஆ, கா, நா – ஓரெழுத் தொருமொழி
மணி, வரகு, கொற்றன் - ஈரெழுத் தொருமொழி
குரவு, அரவு - மூவெழுத் ,,
கணவிரி - நாலெழுத் ,,
அகத்தியனூர் - ஐந்தெழுத் ,,
திருச்சிற்றம்பலம் - ஆறெழுத் ,,
பெரும்பற்றப்புலியூர் - ஏழெழுத் ,,

குறிப்பு: நச்சினார்க்கினியர் ஒற்றையும் குற்றுகரத்தையும் எண்ணவில்லை.

7. சூ

தம்மியல் கிளப்பி னெல்லா வெழுத்து
மெய்ந்நிலை மயக்க மான மில்லை.

இளம் :

இது, மெய்ம் மயக்கத்திற்கு ஓர் புறனடை உணர்த்துதல் நுதலிற்று.

(இ - ள்.) எல்லா எழுத்தும் தம் இயல் கிளப்பின் - எல்லா மெய்யெழுத்தும் மொழியிடை யின்றித் தம் வடிவின் இயல்பைச் சொல்லுமிடத்து, மெய்மயக்க நிலை மானம் இல்லை - மெய்ம் மயக்க நிலையின் மயங்கி வருதல் குற்றம் இல்லை.

எ - டு : "வல்லெழுத்தியையின் டகாரமாகும்" எனவரும்.

இதனை அம்மெய்ம்மயக்கத்து வைக்க வென்ன, இது வழு வமைதி நோக்கி மொழிமரபின்கண்ணதாயிற்று.

நச் :

இது முன்னர் மெய்க்கண் உயிர் நின்றவாறு கூறி அவ்வுயிர் மெய்க்கண் ஏறி உயிர்மெய்யாய் நின்றகாலத்து அம்மெய்யாற் பெயர் பெறுமாறு கூறுகின்றது.

(இ - ள்.) எல்லா எழுத்தும் - பன்னீருயிரும், மெய்நிலை தம் இயல் மயக்கங் கிளப்பின் - மெய்யின் தன்மையிலே தம்முடைய தன்மை மயங்கிற்றுகப் பெயர் கூறின், மானமில்லை - குற்றமில்லை எ - று.

மெய்யின் தன்மையாவது.....கூறினார்.

இஃதன்றிப் பதினெட்டு மெய்யின் தன்மை கூறுமிடத்து மெய்ம்மயக்கம் கூறிய வகையானன்றி வேண்டியவாறு மயங்கு மென்று கூறி, 'அவற்றுள் ளஃகான் முன்னர்' என்பதனைக் காட்டில் அஃது இருமொழிக் கண்ணதென மறுக்க.

8. சூத்திரம்

யரழ வென்னு மூன்றுமுன் னெற்றக்
கசதப ஙஞநம வீரொற் றுகும்.

இளம் :

(இ - ள்.) யரழ என்னும் மூன்று - யரழ என்று சொல்லப் படுகின்ற மூன்றனுள் ஒன்று, முன்ஒற்ற - (குறிற்கீழும் நெடிற் கீழும்) முன்னே ஒற்றாய் நிற்ப (அவற்றின் பின்னே), கசதப ஙஞநம ஈர் ஒற்றாகும் - கசதப க்களிலொன்றாதல் ஙஞநம க்களிலொன்றாதல் ஒற்றாய்வர அவை ஈரொற்றுடனிலையாம்.

எ - டு : வேய்க்குறை, வேய்ங்குறை, வேர்க்குறை, வேர்ங் குறை, வீழ்க்குறை வீழ்ங்குறை, சிறை, தலை, புறம் என ஓட்டுக.

இவ்விதி மேல் ஈற்றகத்து உணர்ந்துகொள்ளப் படுமா லெனின், இது 'ஈர்க்கு' 'பீர்க்கு' எனஒருமொழியுள் வருதலா னும், இரண்டு மொழிக்கண் வருதல் விகாரமாதலானும் ஈண்டுக் கூறப்பட்டது. அஃதேல், இதனை நூன்மரபினகத்து மெய்ம்மயக்

கத்துக்கண் கூறுகவெனின், ஆண்டு வேற்றுமை நயம் கொண்ட தாகலின் மூவொற்று உடனிலையாதல் நோக்கி ஒற்றுமை நயம் பற்றி ஈண்டுக் கூறப்பட்டது.

நச்:

எ - டு: வேய்க்க வாய்ச்சி பாய்த்தல் வாய்ப்பு எனவும், பீர்க்கு நேர்ச்சி வார்த்தல் ஆர்ப்பு எனவும், வாழ்க்கை தாழ்ச்சி தாழ்த்தல் தாழ்ப்பு எனவும், காய்ங்கனி தேய்ஞ்சது காய்ந்தனம் காய்ம்புறம் எனவும், நேர்ங்கல் நேர்ஞ்சிலை நேர்ந்திலை நேர்ம்புறம் எனவும் வரும். முகாரத்திற்கு வாழ்ந்தனம் என இக்காலத்து நகர வொற்று வரும். ஏனைய மூன்றும் இக்காலத்து வழங்குமெனின் உணர்க.

இனித் தாழ்ங்குலை தாழ்ஞ்சினை தாழ்ந்திரள் வீழ்ம்படை என அக்காலத்து வழங்குமென்று இத்தொகைச் சொற்கள் காட்டலும் ஒன்று. உரையாசிரியரும் இருமொழிக்கட் காட்டியவற்றிற்கு அவ்வீறுகடோறும் கூறுகின்ற சூத்திரங்கள் பின்னர் வேண்டாமை உணர்க. இஃது ஈரொற்றுடனிலை யாதலின் ஈண்டு வைத்தார்.

9. நூ

குறுமையு நெடுமையு மளவிற் கோடலிற்
றொடர்மொழி யெல்லா நெட்டெழுத் தியல

இளம்:

(இ - ள்.) குறுமையும் நெடுமையும அளவின் கோடலின் - உயிரெழுத்திற்குக் குறுமையும் நெடுமையும் அளவிற் கொள்ளப் படுதலில், தொடர்மொழி எல்லாம் நெட்டெழுத்து இயல - தொடர்மொழிக்கீழ் நின்ற ரகார முகாரங்களெல்லாம் நெடிற் கீழ் நின்ற ரகார முகாரங்களின் இயல்பையுடைய (என்று கொள்ளப்படும்).

எ - டு: அகர், புகர், அகம், புகம் எனக் கொள்க.

'புலவர்' என்றாற்போல இரண்டு மாத்திரையை இறந்த தன் பின்னும் வருமாலெனின், அவையும் "தன்னின முடித்தல்" என்பதனால் 'நெடிற்கீழ் ஒற்று' எனப்படும். எல்லாம் என்றதனான், ரகார முகாரங்களேயன்றி, பிற ஒற்றுக்களும் 'நெடிற்கீழ் ஒற்று' எனப்படும். இதனானே, விரல் நீது என்புழி லகரம் 'நெடிற்கீழ் ஒற்று' என்று கெடுக்கப்படும்.

நச்:

(இ - ள்.) குறுமையும் நெடுமையும் - எழுத்துக்களது குறிய தன்மையும் நெடிய தன்மையும், அளவிற் கோடலின் - மாத்திரை யென்னும் உறுப்பினைச் செவி கருவியாக அளக்கின்ற அளவு தொழிலாலே செய்யுட்குக் கொள்ளப்படுதலின், தொடர்மொழி

யெல்லாம் - அம் மாத்திரை தம்மூள் தொடர்ந்துநிற்கின்ற சொற்க ளெல்லாம், நெட்டெழுத்தியல - நெட்டெழுத்து மாத்திரை மிக்கு நடக்கும்படியாகத் தொடர்ந்த சொல்லாம் எ - று.

எ - டு : 'வருவர்கொல் வயங்கிழாஅய்' எனவும் 'கடியவே கனங்குழாஅய்' எனவுங் குற்றெழுத்துக்களெல்லாம் நெட்டெழுத்தினை மாத்திரை மிகுத்தற்குக் கூடியவாறு உணர்க. ஏனைச் செய்யுட்களையும் இவ்வாறே காண்க. எனவே, மாத்திரை அளக்குங்கால் நெட்டெழுத்தே மாத்திரைபெற்று மிக்கு நிற்கும் என்றமையான், எகரது போற்றலென்னும் உத்திபற்றிச் செய்யுளியலை நோக்கிக் கூறியதாயிற்று. ஈண்டுக் கூறினர், நெட்டெழுத்து இரண்டு மாத்திரையின் இகந்து வருமென்பதறிவித்தற்கு.

.....இனி உரையாசிரியர் புகர் புகழ் எனக் குறிலிணைக் கீழ் ரகார ழகாரங்கள் வந்த தொடர்மொழிக ளெல்லாம் தார் தாழ் என்றாற்போல ஒசையொத்து நெட்டெழுத்தின் தன்மையவாம் என்றாராலெனின், புகர், புகழ் என்பனவற்றை நெட்டெழுத்தென்றே எவ்விடத்தும் ஆளாமையானும் நெட்டெழுத்தாகக் கூறிய இலக்கணத்தால் ஒரு பயன் கொள்ளாமையானுஞ் செய்யுளியலுள் இவற்றைக் குறிலிணை ஒற்றடுத்த நிரையசையாகவும் தார் தாழ் என்பனவற்றை நெட்டெழுத்து ஒற்றடுத்த நேரசையாகவுங் கோடலானும் அது பொருளன்மை உணர்க.

10. நூ.

மொழிப்படுத் திசைப்பினும் தெரிந்துவேறிசைப்பினும்
எழுத்தியல் திரியா வென்மனார் புலவர்.

இளம் :

இது, எழுத்துக்கட்கு மொழிக்கண் மாத்திரை காரணமாகப் பிறப்பதோர் ஐயம் தீர்த்தல் நுதலிற்று.

(இ - ள்.) மொழிப்படுத்து இசைப்பினும் - மொழிக்கண் படுத்துச் சொல்லினும், தெரிந்து வேறு இசைப்பினும் - தெரிந்து கொண்டு வேறே சொல்லினும், எழுத்து இயல் திரியா என்மனார் புலவர் - உயிரும் மெய்யுமாகிய எழுத்துக்கள் (பெருக்கம் சுருக்கம் உடையனபோன்று இசைப்பினும்) தத்தம் மாத்திரை இயல்பில் திரியா என்று சொல்லுவர் புலவர்.

எ - டு : அஃகல், அ எனவும்; ஆல், ஆ எனவும்; கடல், க எனவும்; கால், கா எனவும் கண்டுகொள்க.

வேறு என்றதனான் எடுத்தல் படுத்தல் முதலிய ஓசை வேற்றுமைக் கண்ணும் எழுத்தியல் திரியாவென்பது கொள்க.

நச் :

(இ - ள்.) தெரிந்து-ஒற்றுங் குற்றுகரமும் பொருள் தரு நிலைமையை ஆராய்ந்து, மொழிப்படுத்து இசைப்பினும் - சொல்லாகச்

சேர்த்துச் சொல்லினும், வேறு இசைப்பினும் - செய்யுளியலுள் ஒற்றுங் குற்றுகரமும் பொருள் தருமேனும் மாத்திரை குறைந்து நிற்கும் நிலையை நோக்கி எழுத்தெண்ணப்படா வென்று ஆண்டைக்கு வேறுகக் கூறினும், எழுத்தியல் நிரியா என்மனார் புலவர் - அவ்விரண்டிடத்தும் அரை மாத்திரை பெற்று நிற்கும குற்றுகரமும் முற்கூறிய எழுத்தாந் தன்மை நிரியாவென்று கூறுவர் புலவர் எ - று.

எ - டு: அல் இல் உண் எண் ஒல் எனவும், கல் வில் முள் செவ் எனவும், ஆல் ஈர் ஊர் ஏர் ஓர் எனவும், கால் சீர் சூல் தேன் கோன் என்வும் உயிரும் உயிர்மெய்யுமாகிய குற்றெழுத்தையும் நெட்டெழுத்தையும் ஒற்றெழுத்துக்கள் அடுத்து நின்று பொருள் தந்துவாறு காண்க. கடம் கடாம் உடையான் திருவாரூர் அகத்தியனார் என ஈரெழுத்தையும் மூவெழுத்தையும் நாலெழுத்தையும் ஐயெழுத்தையும் இறுதியிலும் இடையிலும் ஒற்றடுத்து நின்று பொருள் தந்தவாறு காண்க. எஃகு தெள்கு கொக்கு குரங்கு என்பனவும் எழுத்தெண்ணவும் அலகிடவும் பெறுத குற்றுகரம் அடுத்து நின்று பொருள் தந்தவாறு காண்க.

இனி இச் சூத்திரத்திற்கு எழுத்துக்களைச் சொல்லாக்கிக் கூறினும் பிறிதாகக் கூறினும் மாத்திரை நிரியாதென்று பொருள் கூறி, அகரம் என்புழியும் அ என்புழியும் ஆலம் என்புழியும் ஆ என்புழியும் ககரம் என்புழியும் க என்புழியும் காலம் என்புழியும் கா என்புழியும் ஓசை ஒத்து நிற்குமென்றல், அது முன்னர்க் கூறிய இலக்கணங்களாற் பெறப்படுதலிற் பயனில் கூற்றுமென்க.

11. அஃ.

எல்லா வெழுத்துஞ் சொல்லுங்காலைப்

இளம்:

(இ - ள்.) எல்லா எழுத்தும் நெறிப்பட நாடி சொல்லுங்காலை - தமிழெழுத்துக்களெல்லாம் ஒருவன் முறைப்பட ஆராய்ந்து தம்மைச் சொல்லுங்காலத்து.

நச்:

(இ - ள்.) எல்லா எழுத்தும் பிறப்பின் ஆக்கம் சொல்லுங்காலை - தமிழெழுத்து எல்லாவற்றிற்கும் ஆசிரியன் கூறிய பிறப்பினது தோற்றரவை யாங் கூறுமிடத்து.

12. ககக.

மிருவின் மிருகுதி மயங்கியன் மொழியும்
உரியவை யுளவே புணர்நிலைச் சுட்டே.

ககஉ. இளம் :

(இ - ள்.) மருவின் தொகுதி மயங்கு இயல் மொழியும் - (இலக்கண வழக்கேயன்றி) மரூஉத்திரளாகிய தலை தடுமாறுக மயங்கின இயல்பையுடைய இலக்கணத்தோடு பொருந்தின மரூஉ வழக்கும், உரியவை உள புணர்நிலைச் சுட்டு - உரியன உள புணரும் நிலைமைக்கண்.

ககக. நச் :

(இ - ள்.) மருமொழியும் - இருவகையாகி மருவிய சொற்களும், இன்றொகுதி மயங்கியன் மொழியும் - செவிக்கினிதாகச் சொற்றிரளிடத்து நிறுத்த சொல்லுங் குறித்துவரு கிளவியுமாய் ஓட்டினுற்போல நின்று பொருளுணர்த்தாது பிரிந்து பின்னர்ச் சென்று ஓட்டிப் பொருளுணர்த்த மயங்குதல் இயனற சொற்களும், புணர்நிலைச் சுட்டு உரியவை உள - புணரும் நிலைமைக் கருத்தின்கண் உரியன உள எ - று.

13. உகo.

....
செய்ம்மன வென்னுந் தொழிலிறு சொல்லும்
ஏவல் கண்ணிய வியங்கோட் கிளவியும்
....

இளம் :

'உரையிற் கோடல்' என்பதனுல், வியங்கோள்முன் வைக்கற்பாலதனை முன்வையாது செய்ம்மன என்பதனை முன் வைத்தனுன், இவ் வியல்பு முடிபின்கண் செய்ம்மன என்பது சிறப்புடைத்தெனப் பெறப்பட்டது. அதனுல் ஏவல் கண்ணுத வியங்கோளும் இவ் வியல்பு முடிபு உடைத்தெனக் கொள்க. அது, "மன்னிய பெருமஃ" என வரும்.

நச் :

எ - டு :.....ஏவல் கண்ணிய என்பதனுன் ஏவல் கண்ணுததும் உளதென்று கூறி 'மன்னிய பெருமஃ' என உதாரணங் காட்டுகவெனின், அது பொருந்காது; கூறுகின்றுன் அவன் நிலைபெற்றிருத்தல் வேண்டுமென்றே கருதிக் கூறுதலின் அதுவும் ஏவல் கண்ணிற்றேயாம்.....

14. உஙங.

ஆன்முன் வரூஉ மீகார பகரம்
தான்பிகத் தோன்றிக் குறுகலு மூரித்தே.

இளம் :

(இ - ள்.) ஆன்முன் வரும் ஈகார பகரம் ஆன் என்னும் சொல்முன்னர் வருமொழியாய் வருகின்ற ஈகாரத்தொடு கூடிய

பகரமாகிய மொழி, தான் மிகத் தோன்றி குறுகலும் உரித்து - அப் பகரமாகிய தான் மிகத்தோன்றி அவ் வீகாரம் இகரமாகக் குறுகி முடிதலையும் உடைத்து.

'தோன்றி' என்றதனால், நிலைமொழிப்பேறாகிய னகரவொற்றின் கேடு கொள்க.

நச் :

(இ - ள்.) ஆன் முன் வரூஉம் ஈகார பகரம் - ஆனென்னுஞ் சொன்முன்னர் வருமொழியாய் வருகின்ற ஈகாரத்தோடு கூடிய பகரமாகிய மொழி, தான் மிகத் தோன்றி - அப்பகரமாகிய தான் மிக்கு நிற்ப நிலைமொழி னகரத்திற்குக் கேடு தோன்றி, குறுகலும் உரித்து - ஈகாரம் இகரமாகக் குறுகி நிற்றலும் உரித்து எ-று.

15. நகக.

இலமென் கிளவிக்குப் படுவரு காலை
நிலையலு முரித்தே செய்யு ளான.

நகக. இளம் :

(இ - ள்.) இலம் என் கிளவிக்கு படு வரு காலை - இலம் என்னும் சொல்லிற்குப் படு என்னுஞ் சொல் வருமொழியாய் வருங் காலத்து, நிலையலும் உரித்து செய்யுளான் - முன் 'மகரவிறுதி' என்பதனைக் கெட்ட ஈறு கெடாது நின்று முடிதலும் உரித்துச் செய்யுட்கண்.

எ - டு : "இலம்படு புலவ ரேற்றகை நிறைய" என வரும்.

உரிச்சொல்லாகலான் உருபு விரியாதெனினும் இலத்தாற் பற்றப்படும் புலவரென்னும் பொருள் உணர நிற்றலின், வேற்றுமை முடிபாயிற்று. உடமை மகரவீறு என்னும் சாதியொருமை பற்றி வந்த எதிர்மறை.

நகக. நச் :

இதனை இலத்தாற் பற்றப்பட்ட புலவரென வேற்றுமையென்றாரால் உரையாசிரியரெனின், பற்றப்பட்ட புலவரென்பது பெயரெச்சமாதலிற் பற்றவென்னுந் தொழில் தோற்றுவிக்கின்ற முதனிலைச் சொல்லைச் சூத்திரத்து ஆசிரியர் எடுத்தோதிற்றிலராதல்லாலும் படுவென்பது தானும் புலவரென்னும் பெயரோடு முடியுங்காலை இரண்டு காலமும் காட்டும் ஈறுகள் தொக்க முதனிலைச் சொல்லாய் நிற்றலின், அதனை எடுத்தோதினாராதலானும் ஆசிரியர்க்கு அங்ஙனங் கூறுதல் கருத்தன்மை உணர்க.

அன்றியும் பற்றப்பட்ட என்புழி இரண்டு முதனிலை கூடி ஒன்றாய் நின்று பற்றுதலைச் செய்யப்பட்ட எனப் பொருள் தாராமையானும் அல்வழி யதிகாரமாதலானும் அது பொருளன்மை உணர்க.

16. சூ०கூ. இளம் :

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா விறுதியு முகர நிறையும்.

இஃது எய்தியது ஒருமருங்கு மறுத்தல் நுதலிற்று.

(இ - ள்.) அல்லது கிளப்பினும் - அல்வழியைச் சொல்லும் இடத்தும், வேற்றுமைக்கண்ணும - வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண்ணும், எல்லா இறுதி உகரமும நிறையும் - ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் நிறைந்தே நிற்கும்.

எ - டு : நாகு கடிது, நாகு கடுமை ; வரகு கடிது, வரகு கடுமை என வரும்.

சூ०அ. நச் :

அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
எல்லா இறுதியும் உகர நிலையும்.

இஃது 'இடைப்படிற் குறுகு மிடனு மாறுண்டே' என்றதனாற் புணர்மொழிக்கண் அரைமாத்திரையினுங் குறுகுமென எய்தியதனை விலக்கி 'அவ்விய னிலையு மேனை மூன்றே' என்ற விதியே பெறுமென்கின்றது.

(இ - ள்.) அல்லது கிளப்பினும் - அல்வழியைச் சொல்லு மிடத்தும், வேற்றுமைக் கண்ணும - வேற்றுமைப் புணர்ச்சிக் கண்ணும், எல்லா இறுதியும் உகரம் நிலையும் - ஆறு ஈற்றின்கண் ணும் உகரம் தன் அரைமாத்திரையைப் பெற்று நிற்கும் எ - று.

17. சூ०கூ.

வல்லொற்றுத் தொடர்மொழி வல்லெழுத்து வருவழி
தொல்லை யியற்கை நிலையலு மூரித்தே.

சூ०ஈ. இளம் :

இஃது எய்தியது ஒருமருங்கு மறுக்கின்றது.

(இ - ள்.) வல்லொற்றுத் தொடர்மொழி - (அவவீற்றுள் ளும்) வல்லொற்றுத் தொடர்மொழி, வல்லெழுத்து வருவழி - வல் லெழுத்து முதல்மொழி (வருமொழியாய்) வரும் இடத்து, தொல்லை இயற்கை நிலையலும் உரித்து - முன் (கூறிய) இயற்கை நிற்றலும் உரித்து.

எ - டு : கொக்குக் கடிது, கொக்குக் கடுமை என வரும்.

சூ०கூ. நச் :

இது முன்னின்ற சூத்திரத்தான் அரை மாத்திரை பெறும் என்றதனை விலக்கி 'இடைப்படிற் குறுகு மிடனும்' என்றதனான் அரைமாத்திரையினும் குறுகுமென்று ஆண்டு விதித்தது ஈண்டு வல்லொற்றுத் தொடர்மொழிக்கண்ணே வருமென்கின்றது.

(இ - ள்.) வல்லொற்றுத் தொடர்மொழி - வல்லொற்றுத் தொடர்மொழிக் குற்றுகரம், வல்லெழுத்து வருவழி - வல்லெழுத்து முதன்மொழி வருமொழியாய் வருமிடத்து, தொல்லை இயற்கை நிலையலும் உரித்து - 'இடைப்படிற் குறுகும்' என்பதனுற் கூறிய அரை மாத்திரையினும் குறுகி நிற்கும் என்ற இயல்பிலே நிற்றலும் உரித்து எ - று.

உ - டு: கொக்குக் கடிது கொக்குக் கடுமை என அரைமாத்திரையிற் குறைந்தவாறு குரங்கு கடிதென்பது முதலியவற்றோடு படுத்துச் செவிகருவியாக உணர்க.

முன்னின்ற சூத்திரத்து உகர நிறையுமென்று பாடம் ஓதி அதற்கு உகரம் அரை மாத்திரையிற் சிறிது மிக்கு நிற்குமென்று பொருள் கூறி இச் சூத்திரத்திற்குப் பழைய அரை மாத்திரை பெற்று நிற்குமென்று கூறுவாரும் உளர்.